संक्षेप धर्म शास्त्रम्

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரம்

ஸ்ரீ சந்திரமௌளீச்வர ப்ரஸாதம்

முதற் பதிப்பு : குரோதன, வைகாசி : May, 1985.

விலை 50 காசு.

Printed at:

Ramani Brothers Printers,
4, C. P. Ramaswamy Iyer Street,
Madras, 600 018.

அன்பும் ஆசியும்
வே. பாலசுப்ரமணியன் 27/10/88

௭

संक्षेप धर्म शास्त्रम्

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரம்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரியஸ்வாமிகளின் ஆக்ஞையின்படி,

அத்வைத ஸபா பண்டிதர், வேதாந்த வித்வான் மஞ்சக்குடி ப்ரம்மஸ்ரீ K. வெங்கடராம சாஸ்திரிகள்
ஆசுகவி, ஸாஹித்ய சிரோமணி ப்ரம்மஸ்ரீ E. S. ராமமூர்த்தி சாஸ்திரிகள் இருவராலும் இணைந்து எழுதப் பெற்று,

வேதலக்ஷணஞர், வேதபாஷ்யமணி, வேதாந்த சிரோமணி விசிஷ்ட கிருஹ்யஞர் ஹாஸ்பெட் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ண சர்மா அவர்களால் ப்ரமாண ஸ்லோகங்கள் மூலத்திலிருந்து ஸரி பார்க்கப்பட்டு,

புதுக்கோட்டை ஸ்ரீ G. வேங்கடேசஐயர் குமாரனும், சாஸ்திர ரத்னகர திருவாலங்காடு ஸ்ரீ ராமசேஷ சாஸ்திரிகளின் தௌஹித்திரனுமான வே. பாலஸுப்ரமணியனால் அச்சிடப்பட்டு. ஸ்ரீ பரமாச்சாரியாள் திவ்ய சரணாரவிந்தங்களில் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

[illegible] ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

[illegible] உ.ஸ்ரீநிவாஸ [illegible]

[illegible]

[illegible]

[illegible]

anc : Kamakoti Peetathipathi Sri Jagadguru Sri Sankarachar
Sri Jayendra Saraswathi Swamigal

His Holiness Jagadguru Sri Sankara Vijayendra Saraswathi Swamigal of Kanchi Kamakoti Peetam

பின்னணியும், ஸமர்ப்பணமும்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளை 20-2-81 அன்று ஸதாராவில் தரிசனம் செய்து கொள்ளும் பாக்கியம் கிட்டியது. அப்பொழுது ஸ்ரீ பெரியவாள், ப்ரமாண ஸ்லோகங்களுடனும், தமிழில் சுருக்கமான அர்த்தத்துடனும் வெகு வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்ட தர்ம சாஸ்திர புஸ்தகங்கள் தற்சமயம் கிடைக்காதிருக்கும் நிலையையும் அதனால் நம் தர்ம சாஸ்திரக் கோட்பாடுகளை தெரிந்து நடக்க விரும்பும் பலருக்கு ஏற்பட்டு வரும் வருத்தத்தையும் குறிப்பிட்டார்கள். உடன், 'நீ உங்க அப்பா ஞாபகமா ஒரு காரியம் பண்ணு. அப்படியே உங்க தாத்தாவையும், (மாதா மஹர், சாஸ்திர ரத்னாகர ஸ்ரீ T. V. ராம சேஷ சாஸ்திரிகளை) ஞாபகப்படுத்திகோ இன்னம் 10, 15 நாளிலே உனக்கு ஒரு புஸ்தகம் கொடுத்தனுப்பறேன். அதை 1000 பிரதி அச்சுப் போட்டுக் கொடு' என்று கனிவுடன் ஆக்ஞாபித்தார்கள்.

15 தினங்களுக்குள் ஒரு அன்பர் மூலம் ஒரு புஸ்தகமும் கொடுத்தனுப்பி, அதை எப்பொழுது அச்சுப் போடுவது என்று பிறகு தெரிவிப்பதாகவும் சொல்லி அனுப்பியிருந்தார்கள்.

18-11-81 அன்று ஸ்ரீ பெரியவாளை பண்டரிபூரில் வந்தனம் செய்து கொண்டேன். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள், முன்பு எழுதப்பட்டுள்ள புஸ்தகங்கள் காப்பி ரைட் பதிவு செய்யப் பட்டுள்ளன. அவற்றில் ஒன்றை நாம் அச்சுப்போடுவது தார் மீகம் இல்லை. ஆகவே எவ்வளவு தலைமுறைகளுக்குப் பின்னர் வேண்டுமாயினும் லோகோபகாரமாய், யார் வேண்டுமானாலும் ஒருவர் பர்மிஷனையும் யாசிக்காமல் அச்சுப்போடும் விதத்தில், இரண்டு பண்டிதர்களைக் கொண்டு புதிதாக ஒரு புத்தகம் எழுது வித்து அதை வேறு ஒரு பண்டிதரைக் கொண்டு ப்ரமாண ஸ்லோகங்களை மூலத்திலிருந்து ஸரிபார்த்து பின்னர் அச்சுப் போட வேண்டும் என்று பணித்தார்கள். அந்த மூன்று பண்டிதர் களின் பெயர்களையும் குறிப்பிட்டார்கள். புறப்படுமுன், வந்தனம் செய்து கொண்டு உத்திரவு வேண்டிய பொழுது, இந்தப் பணிக்கு அவஸரப் படவேண்டாம், நான் சொன்ன பிறகு ஆரம்பிக்கலாம் என்று சொல்லி அனுப்பினார்கள்

ஸ்ரீ பெரியவாள் தரிசன பாக்யம் 6-5-82 அன்று கால்கி என்னும் ஊரிலே கிடைத்தது. ஸ்ரீ பெரியவாள் புஸ்தக விஷயத்தைக் குறித்து ஏதும் சொல்லவில்லை. நான் தயக்கத்துடன் பிரஸ்தாபித்தும் ஏதுமே உத்திரம் அளிக்கவில்லை. மிகுந்த ஏமாற்றத் துடன் திரும்பினேன்.

20-11-82 அன்று மகாகாவில் ஸ்ரீ பெரியவாளை வந்தனம் செய்து கொண்டேன். அப்பொழுது ஸ்ரீ பெரியவாள், 'தர்ம சாஸ்திர புஸ்தகம் எழுத ஆரம்பிக்கிறதை இன்னம் தாமஸிக்க அவசியமில்லை. கும்பகோணத்திலிருக்கும் மஞ்சக்குடி வேங்கடராம சாஸ்திரிகளையும், E. S. ராமமூர்த்தி சாஸ்திரிகளையும் இன்ன மாதிரி இணைந்து எழுதச் சொல்லியிருக்கேன்னு சொல்லு. கைப் பிரதியை ஹாஸ்பெட் வித்யாரண்ய வித்யா பீடத்தில் இருக்கும் ஸ்ரீ கிருஷ்ண சர்மாவை ஸரிபார்க்கச் சொல்லு. சொல்லியிருக்கிற ப்ரமாண ஸ்லோகங்களை மூலத்தோடு ஸரிபார்க்கணும்னு சொல்லு. . அப்புறமா மதராஸிலே V. T. ராஜன் பிரஸிலே அச்சுப் போடு.' என்று கருணையுடன், கனிவுடன் விபரமாக விளக்கிச் சொல்லி உத்தரவு கொடுத்தார்கள்.

கும்பகோணம் சென்று சிரோமணி ஸ்ரீ E. S. ராமமூர்த்தி சாஸ்திரிகளையும், வேதாந்த வித்வான் மஞ்சக்குடி ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகளையும் சந்தித்து, ஸ்ரீ பெரியவாள் திருஉள்ளத்தைத் தெரிவித்ததும், இரு பண்டிதர்களும் இப்பணி தங்களுக்குக் கிடைத்துள்ள பெரிய பாக்கியம் என்று மகிழ்ந்து, நெகிழ்ந்து ஸ்ரீ பெரியவாளை மானஸீகமாக வந்தனம் செய்து கொண்டு மிக உத்ஸாகத்துடன் பணியைத் துவக்கினார்கள்.

இது முழுக்க முழுக்க ஸ்ரீ பெரியவாள் புஸ்தகம் என்று பண்டரிபூரிலேயே மனதில் திடமான எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அதனால் ஒருவித பயமும் ஏற்படலாயிற்று. சில தினங்களுக்குப் பின் மீண்டும் கும்பகோணம் சென்று, இரு பண்டிதர்களையும் சந்தித்து, எழுதியுள்ளவரை ஸ்ரீ பெரியவாளிடம் காண்பித்து, ஸ்ரீ பெரியவாள் மனதில் விஷயங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்துள்ளார்களோ, அப்படியே அமைந்து வருகின்றனவா என்று தெரிந்து கொண்டுவிடுவது உசிதமல்லவா என்று சொன்னேன். பண்டிதர்களும் அதுவே ஸரி என்று ஆமோதித்தனர்.

மஞ்சக்குடி ஸ்ரீ வேங்கடராம சாஸ்திகளுடன் 18-2-83 அன்று ஷஹாபாதிலே ஸ்ரீ பெரியவாளை காலை வந்தனம் செய்து கொண்டேன். தரிசனத்திற்கு வந்திருந்த பக்தர்கள் கூட்டம் சற்றுக் குறைந்த பின், மாலையில் எங்களை அருகில் அழைத்து, ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகளை எழுதியுள்ளவரை படித்துக் காட்டச் சொன்னார்கள். ஆங்காங்கே சில விஷயங்களை பக்குவமாக மாற்றி எழுதிக்கொள்ளச் சொல்லி, எல்லாம் நேர்த்தியாகவே அமைந்து வருவதாகவும் திருப்தி தெரிவித்தார்கள். எங்களைத் திரும்பும் காலில் ஹாஸ்பெட் சென்று ஸ்ரீ கிருஷ்ண சர்மா அவர்களிடம் கொடுத்துவிட்டு, ஸரிபார்த்து பின் தபாலில் திரும்ப கும்பகோணம் அனுப்பிவைக்குமாறு சொல்லும்படி பணித்தார்கள. 'இது பெரியவா புஸ்தகம். அதனாலே பெரியவாளே இதுக்கு பெயர் வைக்கணும்' என்று நான் விண்ணப்பித்தவுடன், குளிர்ந்த சிரிப்புடன் 'ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரம்'னு பெயர் வெச்சுடு என்று அனுகிரகித்தார்கள்.

இப் புத்தகம் ஆரம்பம் முதல் அச்சாகி முடியும் வரை, ஒவ்வொரு கட்டத்திலும் ஸ்ரீ பெரியவாளின் அன்புக் கட்டளையின் படியே வடிவம் எடுத்து வந்துள்ளது. பண்டரிபூரில் எழுந்த 'இது ஸ்ரீ பெரிவாள் புஸ்தகம்' என்ற என் எண்ணம் சிறிதும் தவறில்லை என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் ஊர்ஜிதப் படுத்திக் கொண்டேன். இந்த திட எண்ணமேதான் இப் புஸ்தகம் வழக்கமான ஸ்ரீமுகம் இல்லாது வெளி வருவதற்குக் காரணம். அதுபோல் எவ்வித முகவுரையோ, அணிந்துரையோ இடம் பெற வில்லை.

இப் புஸ்தகத்தை எழுதிக்கொடுத்துள்ள, ஸரி பார்த்த பண்டிதர்கள் மூவரும், அச்சுப்போடுவித்த அடியேனும், ஸ்ரீ பெரியவாள் எப்படிப்பட்ட லோகோபகாரமாகிய ஓர் ஸத்காரியத்தில் எங்களையும் சிறு கருவிகளாக ஈடுபடச் செய்து அருள்பாலித்துள்ளார்கள் என்று நெகிழ்ந்து ஸ்ரீ பெரியவாளின் திருத்தாள்களில் அநந்தகோடி வந்தனங்களை ஸமர்ப்பித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ பெரியவாள் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு இம் மூன்று பண்டிதர்களுக்கும் வித்வத் என்ற அருமையான தகுதி உள்ளது. எனக்கோ? என்னையும் இப்படி ஒரு நற்பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று ஸ்ரீ பெரியவாள் திருவுள்ளம் கொண்டதற்கு, நான் கண்டுகொள்ளும் ஒரே தகுதி, புதுக்கோட்டை G. வேங்கடேச ஐயர் அவர்களுக்கு குமாரனாகப் பிறந்த மா பாக்கியமே. முதலிலே குறிப்பிட்டபடி என் தந்தையாரின் நினைவாகவே இப் பணியையும் செய்யும்படி பணித்தது. ஸ்ரீ பெரியவாளிடம் என் தந்தையாருக்கு இருந்த பக்திக்காக மட்டும் அல்ல. என் தந்தையார் தன் வாழ்நாள் முழுதும் லோகோபகாரியாகவே இருந்து, தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ. வே சாமிநாத ஐயர்வாளிடம் தான் கற்றறிந்த தமிழை எவ்விதப் பொருள் ஸம்மானமும் பெற்றுக்கொள்ளாது, விரும்பி வருக்கும் உவகையோடு அள்ளிக்கொடுத்தது. அத்துடன் தெய்வ பக்தியையும், நற்பண்புகளையும், நல்லொழுக்கத்தையும் கேட்போர் மனதிலே நிலைக்கும்படி சொல்லி, தன் வாழ்நாள் முழுதும் அங்ஙனமே தானும் எவ்வளவோ சோதனைகளுக்கு நடுவிலும் வாழ்ந்த பெருந்தகை என் தந்தையார். ஸ்ரீ பெரியவாள் என் தந்தையாரை அறிவார்கள்.

ஸ்ரீ பெரியவாள் என் மாதாமஹர் திருவாலங்காடு ராமசேஷ சாஸ்திரிகளையும் நினைத்து கொண்டு இப்பணியைச் செய் என்று ஆக்ஞாபித்த பொழுது சொன்னார்கள். 'உன் தாத்தா மஹா பண்டிதர்' என்று. தாத்தா நினைவவாகவும் இட்ட இக் கட்டளை இன்று நிறைவேறுகிறது.

ஸ்ரீ பெரியவாளின் திருவுள்ளப்படி இப்புத்தகத்தை நேர்த்தியாக எழுதி, ஸரி பார்த்துக் கொடுத்த பண்டிதர்கள் மூவருக்கும் ச்ரமபலிதமாக ஸந்மானம் அளித்து அவர்கள் கௌரவிக்கப் படுகிறார்கள்.

அன்பர் ஒருவர் மிக உத்ஸாகத்துடன் ப்ரூப் பார்த்துக் கொடுக்க இசைந்து அப்பணியை மிக நேர்த்தியாகச் செய்து கொடுத்துள்ளார்கள்.

ஸ்ரீ V. T. ராஜன் மிகுந்த ச்ரத்தையுடன் நேர்த்தியாக அச்சிட்டுக் கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கும் எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியவில்லை. இப் பணியிலே பங்கு கொண்ட அனைவரின் ச்ரேயஸ்ஸிற்கும் ஸ்ரீ பெரியவாளின் அனுக்கிரகத்தை விழைகிறேன்.

முன் குறிப்பிட்டபடி இப்புத்தகத்திற்கு எவ்வித காப்பி ரைட்டும் கிடையாது. ஆகவே எவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்னும், எவ்வளவு தலைமுறைகளுக்குப் பின்னும் நம் பெரியவாளின் ஆக்ஞையின்படியோ, அல்லது அனுமதியுடனோ யார் வேண்டுமானாலும் இப் புத்தகத்தை அப்படியே மீண்டும் அச்சுப் போடலாம். இது லோக க்ஷேமத்திற்காக ஸ்ரீ பெரியவாள் அளிக்கும் அருட் பிரஸாதம். அப்படி மீண்டும் அச்சுப் போடும் பாக்கியம் கிடைக்கும் நல்லோர்கள் மூன்று பண்டிதர்களையும் அவர்கள் ஆயுட்பரியந்தம் புத்தகம் வெளியிடுமுன் கௌரவிக்க முடிந்தால் போற்றக் கூடியதாக இருக்கும். இது என் ஸொந்த அபிப்ராயம்.

ஸ்ரீ பெரிவாள் ஆக்ஞையின்படி இப் புத்தகம் 50 காசுகள் என்று விலையிடப்பட்டுள்ளது.

இப் புத்தகத்தை என் பூஜ்ய தந்தையாரையும், மாதாமஹரையும் நினைந்து வணங்கி, ஸ்ரீ பெரியவாள் திவ்ய சரணாரவிந்தங்களில் பவ்யமாக ஸமர்ப்பிக்கிறேன்.

வே. பாலசுப்ரமணியன்

14-5-85
சென்னை

॥ श्रीहरिः ॥

|| ஸ்ரீ ஹரி: ||

॥ संक्षेप धर्म शास्त्रम् ॥

|| ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரம் ||

		பக்கம்
1.	वर्णाश्रम धर्म प्रकरणम् வர்ணாச்ரம தர்ம ப்ரகரணம்	1
2.	आह्निक धर्म प्रकरणम् ஆஹ்னிக தர்ம ப்ரகரணம்	82
3.	आशौच धर्म प्रकरणम् ஆசௌச தர்ம ப்ரகரணம்	230
4.	श्राद्ध धर्म प्रकरणम् ச்ராத்த தர்ம ப்ரகரணம்	272
5.	तितिनिर्णय धर्म प्रकरणम् திதி நிர்ணய தர்ம ப்ரகரணம்	350
6.	प्रायश्चित्त धर्म प्रकरणम् ப்ராயச்சித்த தர்ம ப்ரகரணம்	378

॥ श्रीहरिः ॥

संक्षेप धर्मशास्त्रे विषयानुक्रमणिका

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரத்தில் விஷயஸூசிகை.

I. वर्णाश्रम धर्म प्रकरणे— வர்ணாச்ரம தர்ம ப்ரகரணத்தில்

			பக்கம்
1.	धर्मः	தர்மம்	1
2.	धर्म प्रमाणानि	தர்ம ப்ரமாணங்கள்	2
3.	धर्मशास्त्रकर्तारः	தர்ம சாஸ்திர கர்த்தாக்கள்	4
4.	वासार्हा देशाः	வஸிக்கத்தகுந்த இடங்கள்	
5.	युगधर्माः	யுக தர்மங்கள்	6
6.	सृष्टि प्रकारः	ஸ்ருஷ்டி ப்ரகாரம்	9
7.	ब्राह्मण धर्माः	ப்ராம்மண தர்மங்கள்	12
8.	दानम्	தானம்	15
9.	क्षत्रिय धर्माः	க்ஷத்திரிய தர்மங்கள்	19
10.	वैश्य धर्माः	வைச்ய தர்மங்கள்	22
11.	वर्ण साधारण धर्माः	வர்ணங்களுடைய பொதுவான தர்மங்கள்	23
12.	चत्वारिंशत्संस्काराः	நாற்பது ஸம்ஸ்காரங்கள்	25
13.	गर्भा धानम्	கர்பா தானம்	27
14.	पुंसवनम्	பும்ஸவனம்	29
15.	सीमन्तोन्नयनम्	ஸீமந்தோன்னயனம்	29
16.	जातकर्म	ஜாதகர்ம	30
17.	नामकरणम्	நாமகரணம்	31

18.	अन्नप्राशनम्	அன்னப்ராசனம்	32
19.	चूडाकरणम्	சூடாகரணம்	33
20.	स्त्रीणां जातकर्मादि	ஸ்திரீகளுக்கு ஜாதகர்மா முதலியது	33
21.	अनुपनीत धर्माः	உபநயனமாகாத குழந்தைகளுடைய தர்மங்கள்	34
22.	उपनयनम्	உபநயனம்	35
23.	यज्ञोपवीतम्	யக்ஞோபவீதம்	37
24.	दण्ड धारणम्	தண்ட தாரணம்	39
25.	वस्त्राजिन धारणम्	வஸ்திராஜின தாரணம்	40
26.	ब्रह्मचारि धर्माः	ப்ரம்மசாரி தர்மங்கள்	42
27.	उपनयनकर्तृ धर्माः	உபநயனகர்த்ரு தர்மங்கள்	50
28.	उपाकर्मा.	உபாகர்மா	51
29.	विवाहः	விவாஹம்	55
30.	अगतिक ऋतुमती विवाह प्रायश्चित्तम्	வேறு வழியில்லாமல் செய்யும்படியாக நேர்ந்த ருதுமதி விவாஹ ப்ராயச்சித்தம்	62
31.	विवाहे साधारण धर्माः	விவாஹத்தில் சில பொதுவான தர்மங்கள்	64
32.	स्त्री धर्माः	ஸ்திரீ தர்மங்கள்	67
33.	गृहस्थ धर्माः	க்ருஹஸ்த தர்மங்கள்	73
34.	सन्यास धर्माः	ஸன்யாஸ தர்மங்கள்.	75

II. आह्निक धर्म प्रकरणे– ஆஹ்னிக தர்ம ப்ரகரணத்தில்

1.	प्रबोध समयः	விழித்துக்கொள்ளும் காலம்	82
2.	ब्राह्ममुहूर्ते जप्यानि	ப்ராம்ம முகூர்த்தத்தில் ஜபிக்க வேண்டியவைகள்	83
3.	शौच विधिः	சௌசம் செய்யும் முறை	85

4.	गण्डूष विधिः	வாய்கொப்புளிக்கும் முறை	91
5.	आचमन विधिः	ஆசமனம் செய்யும் முறை	92
6.	दन्तधावन विधिः	பல் துலக்கும் முறை	98
7.	स्नान विधिः	ஸ்னானம் செய்யும் முறை	100
8.	स्नान भेदाः	அனேகவிதமான ஸ்னானங்கள்	107
9.	स्नानार्ह जलानि	ஸ்னானத்திற்குகந்த ஜலங்கள்	110
10.	समुद्रस्नानम्	ஸமுத்ர ஸ்னானம்	112
11.	नैमित्तिक स्नानम्	நைமித்திக ஸ்னானம்	113
12.	संक्रमणम्	ஸங்கிராந்தி	117
13.	रजस्वला स्नानम्	ரஜஸ்வலா ஸ்னானம்	119
14.	काम्य स्नानानि	காம்ய ஸ்னானங்கள்	121
15.	मलापकर्षण स्नानम्	மலாபகர்ஷண ஸ்னானம்	123
16.	नरकचतुर्दशी स्नानम्	நரக சதுர்தசி ஸ்னானம்	125
17.	नदीनां रजस्वलादोषः	நதிகளுக்கு ரஜஸ்வலா தோஷம்	127
18.	वस्त्र परीधानम्	வஸ்திரம் தரித்துக் கொள்வது	128
19.	पुण्ड्र धारण विधिः	நெற்றியிட்டுக் கொள்ளும் முறை	131
20.	सन्ध्यावन्दन विधिः	ஸந்தியாவந்தனம் செய்யும் முறை	137
21.	काम्य जप्यानि	காம்ய ஜபங்கள்	147
22.	दर्भप्रशंसा	தர்ப்பங்களுடை புகழ்	150
23.	होम विधानम्	ஹோமம் செய்யும் முறை	152

24.	होम कालः	ஹோம காலம்	156
25.	होमार्हाः समिधः	ஹோமார்ஹமான ஸமித்துக்கள்	158
26.	होम द्रव्याणि	ஹோம த்ரவ்யங்கள்	160
27.	ब्रह्मयज्ञ विधिः	ப்ரம்மயக்ஞம் செய்யும் முறை	168
28.	द्वितीय भागकृत्यानि	இரண்டாவது பாகத்தில் செய்ய வேண்டிய கார்யங்கள்	171
29.	तृतीयचतुर्थभागयोः कृत्यानि	மூன்ருவது நான்காவது பாகங்ளில் செய்ய வேண்டிய கார்யங்கள்	172
30.	देवपूजा	தேவபூஜை	176
31.	विष्णुपूजा	விஷ்ணு பூஜை	177
32.	शिवपूजा	சிவ பூஜை	182
33.	वैश्वदेव होमः	வைச்வதேவ ஹோமம்	186
34.	आदित्यम्	ஆதித்யம்	193
35.	भोजन नियमाः	போஜன நியமங்கள்	198
36.	भोजन पात्राणि	போஜன பாத்திரங்கள்	201
37.	भोजनकरणविधानम्	போஜனம் செய்யும் முறை	202
38.	भक्ष्याभक्ष्यविवेकः	புஜிக்கத் தகுந்தது புஜிக்கத்தகாதது பற்றிய பரிசீலனை	214
39.	भोजनोत्तर कार्याणि	போஜனத்திற்குபிறகு செய்ய வேண்டிய கார்யங்கள்	222
40.	रात्रौ कर्तव्यानि	இரவில் செய்ய வேண்டியவைகள்	225

III. आशौच धर्म प्रकरणे— ஆசௌச தர்ம ப்ரகரணத்தில்

1.	अशौच शब्दार्थः	ஆசௌச சப்தத்தினுடைய பொருள்	230
2.	आशौचे सन्ध्योपासनविधिः	ஆசௌச காலத்தில் ஸந்தியா வந்தனத்தின் முறை	231
3.	आशौचे त्याज्य कर्माणि	ஆசௌசத்தில் விட வேண்டிய கார்யங்கள்	232
4.	सद्यश्शौचम्	ஸத்ய: சௌசம்	235
5.	दुर्मृतानां संस्कारः	கெட்ட வழிகளில் மரணம் அடைந்தவர்களுக்கு ஸம்ஸ்காரம்	240
6.	गर्भस्रावादि निमित्ताशौचम्	கர்பஸ்ராவம் முதலிய நிமித்தத்தால் ஆசௌசம்	242
7.	शिशुमरणे अघविचारः	சிசுமரணத்தில் தீட்டு விசாரம்	246
8.	खननादि संस्काराः	புதைப்பது முதலிய ஸம்ஸ்காரங்கள்	249
9.	कन्यामरणा शौचम्	கன்யா மரணத்தில் ஆசௌசம்	251
10.	उपनीता शौचम्	உபநீதா சௌசம்	252
11.	दत्तपुत्रा शौचम्	ஸ்வீக்ருத புத்ர விஷயத்தில் ஆசௌசம்	254
12.	त्रिरात्रा शौचम्	மூன்று நாள் ஆசௌசம்	256
13.	पक्षिण्या शौचम्	பக்ஷிணீ ஆசௌசம்	258
14.	एक दिना शौचम्	ஒருநாள் தீட்டு	260
15.	अनेकांशौच संनिपाते आशौच क्रमः	அனேக ஆசௌசம் நேர்ந்தால் ஆசௌசக்ரமம்	261
16.	अतिक्रान्ता शौचम्	காலம் கடந்த ஆசௌசம்	265
17.	जननमरण संभवे दिन निर्णयः	ஜனனமரணத்தில் நாள் நிர்ணயம்	267
18.	ஆசௌச ஸங்க்ரஹம்		269

IV. श्राद्ध धर्म प्रकरणे — ச்ராத்த தர்ம ப்ரகரணத்தில்

1.	मुमूर्षु प्रायश्चित्तविधिः	மரணத்தை அடையப் போகிறவன் ப்ராயச் சித்தம் செய்யும் முறை	272
2.	मुमूर्षोः दानविधिः	மரணகாலத்தில் தானம் செய்யும் முறை	276
3.	पर्युषित प्रायश्चित्तम्	பர்யுஷித ப்ராயச்சித்தம்	278
4.	कर्तृ क्रमः	கர்த்தாக்களுடைய வரிசை	280
5.	अग्नि निर्णयः	அக்னி நிர்ணயம்	285
6.	उपवीतादि नियमाः	உபவீதமாக இருக்க வேண்டியது முதலிய நியமங்கள்	287
7.	प्रेतनिर्हरण प्रकारः	ப்ரேதத்தை எடுத்து செல்லும் முறை	288
8.	दहन प्रकारः	தஹனம் செய்யும் முறை	290
9.	वपनविधिः	க்ஷௌரம் செய்து கொள்ளும் முறை	292
10.	दशमदिनपर्यन्त कर्तव्यानि	பத்தாவதுநாள் முடிய செய்ய வேண்டிய கார்யங்கள்	295
11.	कर्तृविषये नियमाः	கர்த்தாவின் விஷயத்தில் சில நியமங்கள்	300
12.	दम्पत्योस्सहमृतौ क्रमः	தம்பதிகள் சேர்ந்து மரணமடைந்தால் தஹனம் செய்ய வேண்டிய க்ரமம்	304
13.	गर्भिणी संस्कारः	கர்பிணியின் ஸம்ஸ்காரம்	306
14.	एकादशाहे वृषोत्सर्गः	பதினொருவதுநாளில் வ்ருஷப உத்ஸர்ஜனம்	306
15.	षोडश श्राद्धानि	16 ச்ராத்தங்கள்	308
16.	सपिण्डीकरणम्	ஸபிண்டீகரணம்	311

17.	सापिण्ड्ये अधिकारिण:	ஸபிண்டீகரணத்தில் அதிகாரிகள்	313
18.	सापिण्ड्य प्रकार:	ஸாபிண்ட்யம் செய்யும் முறை	314
19.	पिण्डसंयोजन विधि:	பிண்டத்தை சேர்ப்பதின் முறை	316
20.	सोदकुम्भ श्राद्धविधि:	ஸோதகும்ப ச்ராத்தம் செய்யும் முறை	322
21.	आद्विक श्राद्धम्	ஆப்திக ச்ராத்தம்	324
22.	सौरमासे तिथिद्वय संभवे	ஸௌரமாஸத்தில் இரண்டு திதி ஸம்பவித்தால்	326
23.	श्राद्धे तिथिकालादि निरूपणम्	ச்ராத்தத்திற்கு தகுந்த திதி காலம் முதலியவைகளின் நிரூபணம்	328
24.	आद्विकादीनां विभक्तैः पृथगनुष्ठानम्	ஆப்திகம் முதலிய ச்ராத்தங்களை பிரிந்த ஸஹோதர்கள் தனித் தனியாக செய்யவும்	330
25.	मलमास निरूपणम्	மலமாஸ நிரூபணம்	332
26.	दर्श श्राद्धम्	தர்ச ச்ராத்தம்	333
27.	अर्धोदयमहोदयपुण्यकाल निरूपणम्	அர்தோதய மஹோதய புண்ய காலத்தின் நிரூபணம்	335
28.	अष्टका श्राद्ध निरूपणम्	அஷ்டகா ச்ராத்த நிரூபணம்	336
29.	महालय श्राद्ध निरूपणम्	மஹாலய ச்ராத்த நிரூபணம்	336
30.	वृद्धि श्राद्ध निरूपणम्	வ்ருத்தி ச்ராத்த நிரூபணம்	339
31.	श्राद्धे देशकालादि निरूपणम्	ச்ராத்தத்தில் தேச காலங்கள் முதலியவைகளுடைய நிரூபணம்	340
32.	श्राद्ध प्रशंसा	ச்ராத்தத்தை புகழ்வது	348

V. तिथिनिर्णय धर्म प्रकरणे — திதி நிர்ணய தர்ம ப்ரகரணத்தில்

1.	कालनिरूपणम्	கால நிருபணம்	350
2.	निमेषादि लक्षणम्	நிமேஷங்களுடைய லக்ஷணம்	350
3.	तिथिस्वरूपम्	திதியினுடைய ஸ்வரூபம்	351
4.	खण्डतिथि स्वरूपम्	கண்ட திதி ஸ்வரூபம்	352
5.	तिथीनां वेधविचार:	திதிகளுடைய வேத விசாரம்	352
6.	प्रथमा तिथि निर्णय:	ப்ரதமை நிர்ணயம்	353
7.	एक भक्त निर्णय:	ஏக பக்த நிர்ணயம்	356
8.	नक्तव्रत निर्णय:	நக்த வ்ரத நிர்ணயம்	358
9.	द्वितीया निर्णय:	த்விதீயா நிர்ணயம்	360
10.	तृतीया निर्णय:	த்ருதீயா நிர்ணயம்	361
11.	चतुर्थी निर्णय:	சதுர்த்தி நிர்ணயம்	361
12.	पंचमी निर्णय:	பஞ்சமீ நிர்ணயம்	361
13.	षष्ठी निर्णय:	ஷஷ்டீ நிர்ணயம்	362
14.	सप्तमी निर्णय:	ஸப்தமீ நிர்ணயம்	362
15.	अष्टमी निर्णय:	அஷ்டமீ நிர்ணயம்	362
16.	श्री कृष्ण जन्माष्टमी निर्णय:	ஸ்ரீ க்ருஷ்ண ஜன்மாஷ்டமீ நிர்ணயம்	363
17.	श्री रामनवमी निर्णय:	ஸ்ரீராமநவமீ நிர்ணயம்	366
18.	दशावतार काला:	தசாவதார காலங்கள்	367
19.	दशमी निर्णय:	தசமீ நிர்ணயம்	368
20.	एकादशी निर्णय:	ஏகாதசீ நிர்ணயம்	368
21.	द्वादशी निर्णय:	த்வாதசீ நிர்ணயம்	372
22.	त्रयोदशी निर्णय:	த்ரயோதசீ நிர்ணயம்	374
23.	चतुर्दशी निर्णय:	சதுர்தசீ நிர்ணயம்	374
24.	शिवरात्रि निर्णय:	சிவராத்ரி நிர்ணயம்	374
25.	पंचदशी निर्णय:	பஞ்சதசீ நிர்ணயம்	377

VI. प्रायश्चित्त धर्म प्रकरणे — ப்ராயச்சித்த தர்ம ப்ரகரணத்தில்

1.	प्रायश्चित्त शब्दार्थः	ப்ராயச்சித்த சப் தார்த்தம்	378
2.	प्रायश्चित्ताकरणे दोषाः	ப்ராயசித்தம் செய்யா விடில் ஏற்படும் தோஷ ங்கள்	379
3.	नवविधानि पापानि	ஒம்பதுவித பாபங்கள்	385
4.	महापातकानि	மஹாபாதகங்கள்	385
5.	अतिपातकानि	அதிபாதகங்கள்	386
6.	समपातकानि	ஸமபாதகங்கள்	386
7.	उपपातकानि	உபபாதகங்கள்	387
8.	संकरीकरणम्	ஸங்கரீ கரணம்	389
9.	मलिनीकरणम्	மலினீ கரணம்	389
10.	अपात्रीकरणम्	அபாத்ரீ கரணம்	390
11.	जातिभ्रंशकरणम्	ஜாதி ப்ரம்ச கரணம்	390
12.	ज्ञानाज्ञानकृतपापविचारः	தெரிந்து தெரியாமல் செய்த பாபங்கள் பற்றிய விசாரம்	390
13.	पातकं द्विविधम्	பாபம் இரண்டு விதம்	393
14.	प्राजापत्यकृच्छ्र लक्षणम्	ப்ராஜாபத்ய க்ருச்ர லக்ஷணம்	394
15.	पाद कृच्छ्रः	பாத க்ருச்ரம்	394
16.	अर्ध कृच्छ्रः	அர்த்த க்ருச்ரம்	394
17.	अति कृच्छ्रः	அதி க்ருச்ரம்	395
18.	कृच्छ्राति कृच्छ्रः	க்ருச்ராதி க்ருச்ரம்	395
19.	चान्द्रायणम्	சாந்திராயணம்	396
20.	केषांचित्पापानां प्रायश्चित्तम्	சில பாபங்களுக்கு ப்ராயச் சித்தம்	398
21.	रहस्य पाप प्रायश्चित्तम्	ரஹஸ்ய பாப ப்ராயச் சித்தம்	403
22.	कृच्छ्र प्रतिनिधयः	க்ருச்ர ப்ரதிநிதிகள்	406

—o—

॥ श्रीहरिः ॥

संक्षेपधर्मशास्त्रम्

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

गजाननाय महसे प्रत्यूहतिमिरच्छिदे ।
अपारकरुणापूरतरङ्गितदृशे नमः ॥ १ ॥
सरस्वतीं ब्रह्मजायां वेदाशास्त्रस्वरूपिणीम् ।
नमामि श्वेतपद्मस्थां वीणापुस्तकधारिणीम् ॥ २ ॥
भवकोदण्डदलनं भवबन्धविमोचनम् ।
दशकण्ठरिपुं वन्दे रामं दशरथात्मजम् ॥ ३ ॥

1. वर्णाश्रमधर्मप्रकरणम्—வர்ணாச்ரம தர்மபிரகரணம்

1. धर्मः - தர்மம்

वेदे—" धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा "

வேதத்தில் தர்மம் ஸகல உலகத்திற்கும் ஆதார மானது என்று கூறப்படுகிறது.

मनुः— विद्वद्भिस्सेवितस्सद्भिः नित्यमद्वेषरागिभिः ।
हृदयेनाभ्यनुज्ञातो यस्तं धर्मं व्यवस्यत ॥

மனு :— வேதசாஸ்திரந்தெரிந்தவர்களாயும் ராகத்வேஷம் முதலிய கெட்ட குணங்கள் இல்லாதவர்களாயும் இருக்கிற ஸாதுக்களால் எது அனுஷ்டிக்கப்பட்டதோ, தாத்பர்யம் உள்ள மனதால் எது அங்கீகரிக்கப்பட்டதோ, அதுதான் தர்மம் என்று நிச்சயம் செய்து கொள்ளவும்.

आपस्तम्बः—न धर्माधर्मौ चरतः आवां स्वः इति, न देवाः, न गन्धर्वाः, न पितरः, इत्याचक्षतेऽयं धर्मोऽयमधर्म इति, यस्त्वार्याः क्रियमाणं प्रशंसन्ति स धर्मः, यद्गर्हन्ते सोऽधर्म इति.

ஆபஸ்தம்பர் :— தர்மம் அதர்மம் இவ்விரண்டும், நான் தர்மம் நான் அதர்மம் என்று கூறிக்கொண்டு ஸஞ்சரிப்பது இல்லை. தேவர்கள், கந்தர்வர்கள், பித்ருக்கள் இவர்களுக்கும் இது தர்மம், இது அதர்மம் என்று நேரில் ஸ்வரூபத்தைத் காண்பித்து சொல்ல முடியாது. ஏனென்றால் தர்மம் அமூர்த்தம்நிரவயம். பெரியோர்கள் எந்த கார்யத்தை புகழ்கிறார்களோ அது தர்மம், எந்த கார்யத்தை நிந்திக்கிறார்களோ அது அதர்மம் என்பதாகும்.

2. धर्मप्रमाणानि - தர்மப்ரமாணங்கள்

मनुः — वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम् ।
आचारश्चैव साधूनां आत्मनस्तुष्टिरेव च ॥

மனு:—வேதங்கள் எல்லாம் தர்மத்தை தெரிவிக்கும் ப்ரமாணங்கள்; வேதம் தெரிந்த மஹர்ஷிகளுடைய ஸ்ம்ருதிகளும் நடத்தையும் ஸாதுக்களுடைய ஆசாரம் ஸம்ப்ரதாயமும் தர்மத்திற்கு ப்ரமாணங்கள். கார்யங்களில் பெரியோர்களுடைய மனஸ்த்ருப்தியும் தர்மப்ரமாணங்களாகும்.

आपस्तम्बः—" सर्ववर्णानां स्वधर्मानुष्ठाने परमपरिमितं सुखं, ततः परिवृत्तौ कर्मफलशेषेण जातिं रूपं वर्णं बलं मेधां प्रज्ञां द्रव्याणि धर्मानुष्ठानमिति प्रतिपद्यन्ते, तच्चक्रवदुभयोर्लोकयोस्सुख एव वर्तते", इति ।

ஆபஸ்தம்பர்:— வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டித்தால் உயர்ந்த, அளவு கடந்த ஸுகங்களை ஸ்வர்க்க லோகத்தில் அனுபவித்து, பிறகு பூலோகத்தில் அனுபவிக்க வேண்டிய புண்யத்துடன் பிறந்து நல்ல ஜாதி, அழகு, நிறம், பலம், மேதை, ப்ரக்ஞா (மேல்மேல் தோன்றுகிற சக்தி) பணங்கள், வீடு, தோட்டம், தங்கம் முதலியன, தர்மத்தில் ச்ரத்தை, இவைகளை அடைந்து ஸௌக்கியமாக இருப்பான். இந்த மாதிரி திரும்பத் திரும்ப இரு லோகங்களிலும் சக்ரம்போல் சுழன்று கொண்டு ஸுகமாக இருக்கிறான்.

पराशरः—"चतुर्णामपि वर्णानां आचारो धर्मपालकः ।
आचारभ्रष्टदेहानां भवेद्धर्मः पराङ्मुखः ॥

பராசரர்—நான்கு வர்ணங்களுக்கும் ஆசாரம் முக்கியமானது. அதாவது ஸ்நானம் - ஆசமனம்—ஆஹார நியமம், ப்ரம்மசர்யம் முதலிய நியமங்கள் ஆசாரமெனப்படும். அது எல்லா தர்மங்களுக்கும் அங்கம். ஆகையால் ஆசாரத்துடன் தர்மானுஷ்டானம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தர்மம் ரக்ஷிக்கப்பட்டதாக ஆகும். பலன் கிடைக்கும். ஆசாரத்துடன் தர்மம் செய்யவில்லையேயானல் தர்மம் பலத்தை கொடுப்பது இல்லை.

नारदः— वेदोवा हरिभक्तिर्वा भक्तिर्वापि महेश्वरे ।
स्वाचारात्पतितं मूढं न पुनाति द्विजोत्तमम् ॥
पुण्यक्षेत्राभिगमनं पुण्यतीर्थनिषेवणम् ।
यज्ञो वा विविधो ब्रह्मन् त्यक्ताचारं न रक्षति ॥

நாரதர் :—வேதம், ஹரிபக்தி, மஹேச்வர பக்தி, இவைகள் ஆசாரத்திலிருந்து நழுவினவனை பிராம்மணனாக இருந்தாலும் காப்பாற்ருது; புண்ய க்ஷேத்திரம் செல்வது, கங்காதி புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது, ஸோம யாகம் முதலிய யக்ஞங்கள் அனுஷ்டிப்பது இவைகளும் ஆசாரம் விட்டவனை ரக்ஷிக்காது.

आचारात्प्राप्यते स्वर्गः आचारात्प्राप्यते सुखम् ।
आचारात्प्राप्यते मोक्षः आचारात् किं न सिद्ध्यति ॥

ஆசாரானுஷ்டானத்தால் ஸ்வர்க்கம், ஸுகம், மோக்ஷம் எல்லாம் கிடைக்கும். ஆசாரமிருந்தால் எதுதான் அடைய முடியாதது.

3. धर्मशास्त्रकर्तारः—தர்மசாஸ்திரகர்த்தாக்கள்

मनुर्बृहस्पतिर्दक्षो गौतमोऽथ यमोऽङ्गिराः ।
योगीश्वरः प्रचेताश्च शातातपपराशरौ ॥
संवर्तोशनसौ शंखलिखितावत्रिरेव च ।
विष्ण्वापस्तम्बहारीता धर्मशास्त्रप्रवर्तकाः ॥
एते ह्यष्टादशप्रोक्ता मुनयो नियतव्रताः ॥

மனு, ப்ருஹஸ்பதி, தக்ஷன், கௌதமர், யமன், அங்கிரஸ், யாக்ஞவல்க்யர், ப்ரசேதஸ், சாதாதபர், பராசரர், ஸம்வர்த்தர், சுக்ரர், சங்கர், லிகிதர், அத்ரி, விஷ்ணு, ஆபஸ்தம்பர், ஹாரீதர் என்ற 18 மஹர்ஷிகள் ஸ்ம்ருதி கர்த்தாக்கள் ஆவார்கள்.

बोधायनं, आपस्तम्बं, सत्याषाढं, द्राह्यायणं, आगस्त्यं, शाकल्यं, आश्वलायनं, शाम्भवीयं, कात्यायनं, इति नवानि पूर्वसूत्राणि । वैखानसं, शौनकीयं, भारद्वाजं, आग्निवेश्यं, जैमिनीयं, माधून्यं, माध्यन्दिनं, कौण्डिन्यं, कौषीतकमिति नवानि अपरसूत्राणि ॥

போதாயனம், ஆபஸ்தம்பம், ஸத்யாஷாடம், த்ராஹ்யாயணம், ஆகஸ்த்யம், சாகல்யம், ஆச்வலாயனம், சாம்பவீயம், காத்யாயனம் என்று பூர்வஸூத்ரங்கள் ஒன்பது; வைகானஸம், சௌனகீயம், பாரத்வாஜம், ஆக்னிவேச்யம், ஜைமினீயம், மாதூன்யம், மாத்யந்தினம், கௌண்டின்யம், கௌஷீதகம் என்று அபரஸூத்ரங்கள் ஒன்பது; ஆக 18 ஸூத்ரகாரர்கள் ஆவார்கள்.

4. वासार्हा देशाः—வஸிக்க தகுந்த இடங்கள்

स्मृतिचन्द्रिकायां— कृष्णसारैर्यवैर्दर्भैश्चातुर्वर्ण्याश्रमैस्तथा ।
समृद्धो धर्मदेशस्स्यादाश्रयेरन्विपश्चितः ॥

எந்த இடத்தில் க்ருஷ்ணஸாரம் என்ற மான் சஞ்சரிக்கிறதோ, தர்பங்கள், யவதான்யம், வ்ரீஹிதான்யம், நான்கு வர்ணங்களும் சௌகர்யமாக இருக்கிறதோ அந்த இடம் தர்மதேசம். அந்த தேசத்தில் வஸிக்கச் செல்ல வேண்டும் ஆஸ்திகர்கள்.

विष्णुः— नम्लेच्छविषये श्राद्धं कुर्यात् न गच्छेत् म्लेच्छविषयम् ॥

விஷ்ணு:—ம்லேச்சதேசத்தில் பித்ருச்ராத்தம் முதலியது செய்யக் கூடாது. ம்லேச்சதேசத்துக்குப் போகக் கூடாது. ம்லேச்சதேசம் என்பது வர்ணாச்ரமதர்மமில்லாத இடமாகும். பாரத தேசம் கர்மபூமியாகும். வடக்கில் ப்ரம்மாவர்த்தம், ரிஷிதேசம் - மத்யதேசம், ஆர்யாவர்த்தம் - என்பது ச்லாக்ய மானதேசம் என்று சொல்லப்படுகிறது.

कावेरी तुंगभद्रा च कृष्णवेणी च गौतमी ।
भागीरथी च विख्याताः पंच गंगाः प्रकीर्तिताः ॥

பாரதத்தில் தக்ஷிணபாகத்தில் காவேரி, துங்கபத்ரா, க்ருஷ்ணவேணி, கோதாவரி இவைகளும், வடபாகத்தில் கங்கை ஆக ஐந்து நதிகளும் பஞ்ச கங்கைகள் என்று சொல்லப்படுகிறது, ஆகையால், இந்த தீரங்களும் வஸிக்கக் கூடிய தேசங்களாகும்.

5. युगधर्माः—யுகதர்மங்கள்

पराशरः-- कृतं त्रेता द्वापरश्च कलिश्चेति चतुर्युगम् ।
दिव्यैर्वर्षसहस्रैस्तु तद्द्वादशभिरुच्यते ॥

பராசரர்:—யுகங்கள் நான்கு; க்ருதம், த்ரேதா, த்வாபரம், கலி என்று. இதற்கு தேவமான ரீதியில் 12 ஆயிர வருஷங்கள். இந்த நான்கு யுகமும் ஒரு தேவயுகம் என்பார்கள். தேவமான வருஷம் என்பதாவது, மனுஷ்யர்களுடைய வருஷம் தேவர்களுக்கு 1 நாள். உத்ராயணம் பகல் - தக்ஷிணாயணம் இரவு - இந்தமாதிரி க்ருதயுகத்திற்கு நாலாயிர வருஷமும் நானூறு பூர்வஸந்தியும் நானூறு உத்ர ஸந்தியும் காலமாகும். த்ரேதாயுகத்திற்கு மூவாயிரவருஷமும், முன்னூறு பூர்வஸந்தி, முன்னூறு உத்ர ஸந்தி; த்வாபரத்திற்கு இரண்டாயிர வருஷமும், இருநூறு பூர்வஸந்தி, இருநூறு உத்ரஸந்தி; கலிக்கு ஆயிர வருஷமும், நூறு பூர்வஸந்தி, நூறு உத்ரஸந்தி; இந்தமாதிரி நான்கு யுகங்களுக்கும் பன்னிரெண்டாயிர வருஷங்கள் தேவமான ரீதியில் கணக்காகும்.

तपः परं कृतयुगे त्रेतायां ज्ञानमुच्यते ।
द्वापरे यज्ञमेवाहुः दानमेव कलौ युगे ॥

தபஸ் க்ருதயுகத்தில் விசேஷ தர்மமாகும், த்ரேதா யுகத்தில் ஞானம், த்வாபரயுகத்தில் யக்ஞம், கலியுகத்தில் தானம் இவைகள் விசேஷ தர்மங்களாகும். எல்லா யுகத்திலும் எல்லா நான்கு தர்மங்களும் உண்டு. இருந்தாலும் சொல்லப்பட்ட தர்மத்திற்கு யுகத்தை அனுசரித்து பலன் அதிகம்.

कृतेत्वस्थिगताः प्राणाः त्रेतायां मांसमाश्रिताः ।
द्वापरे रुधिरं चैव कलौ त्वन्नादिषु स्थिताः ॥

க்ருதயுகத்தில் எலும்பையும் த்ரேதாயுகத்தில் மாம்ஸத்தையும் த்வாபரத்தில் ரத்தத்தையும் கலியில் அன்னத்தையும் ஆச்ரயித்து பலன் இருக்கிறது.

कृते संभाषणादेव त्रेतायां स्पर्शनेन च ।
द्वापरे त्वन्नमादाय कलौ पतति कर्मणा ॥

க்ருதயுகத்தில் பதிதனிடம் பேசுவதாலும், த்ரேதா யுகத்தில் பதிதனைத் தொடுவதாலும், த்வாபரயுகத்தில் பதிதனுடைய அன்னம் சாப்பிடுவதாலும் பதிதன் ஆவான் கலியுகத்தில் பாதித்யமான தப்பான கார்யம் செய்தவன்தான் பதிதன் ஆவான். இருந்தாலும் கூடியவரையில் பதிதனுடைய பழக்க வழக்கங்களை குறைக்க வேண்டியது க்ஷேமகரமாகும்.

विष्णुपुराणे— सर्वे ब्रह्मवदिष्यन्ति संप्राप्ते तु कलौ युगे ।
नानुतिष्ठन्ति मैत्रेय शिश्नोदरपरायणाः ॥

விஷ்ணு புராணம்:—கலியில் எல்லோரும் வேதத்தைப் பற்றியும் ப்ரம்மத்தைப் பற்றியும் பேசுவார்கள்; ஆனால் அனுஷ்டானம் செய்கை சரியாக வேதத்தை அனுசரித்து இருது. வயிற்றைநிரப்புவதற்கும் காமத்தை உத்தேசித்தும் விசேஷமாக ஈடுபடுவார்கள்.

यदा यदा सतां हानिः वेदमार्गानुसारिणाम् ।
तदा तदा कलेर्वृद्धिः अनुमेया विचक्षणैः ॥

எந்த எந்த சமயத்தில் வேதம் சொன்ன வழியில் அனுஷ்டானம் செய்யும் ஸாதுக்களுக்கு சிரமம் நாலாவிதத்திலும் வருகிறதோ அப்பொழுது கலி ரொம்ப விருத்தி அடைந்ததாக ஊஹிக்கலாம். ஊஹித்து அதைத் தடுக்க பரிஹாரம் தேட வேண்டும் என்பது கருத்து.

व्यासः— यत्कृते दशभिर्वर्षैः त्रेतायां हायनेन तु ।
द्वापरे तच्च मासेन ह्यहोरात्रेण तत्कलौ ॥

வ்யாஸர்:—க்ருதயுகத்தில் எந்த தர்மம் பத்து வருஷத்தில் அனுஷ்டிக்கப்படுகிறதோ அதை த்ரேதையில் ஒரு வருஷத்திலும், த்வாபரத்தில் ஒரு மாதத்திலும், கலியில் ஒரு நாளிலும் செய்யலாம். அதாவது பலன் சமானம், அனுஷ்டான செளகரியம்.

ध्यायन् कृते यजन् यज्ञैः त्रेतायां द्वापरेऽर्चयन् ।
यदाप्नोति तदाप्नोति कलौ संकीर्त्य केशवम् ॥

க்ருதயுகத்தில் பகவானை தியானம் செய்வதினாலும், த்ரேதாயுகத்தில் அவரை யாகங்களினால் ஆராதனை செய்வதாலும், த்வாபரத்தில் முறைப்படி பூஜிப்பதாலும் என்ன புண்யம் ஏற்படுகிறதோ அது கலியில் பகவான் கேசவனை நாமஸங்கீர்த்தனம் செய்தாலேயே கிடைக்கும்.

नारदीये— हरे केशवगोविन्द वासुदेव जनार्दन ।
इती रयन्ति ये नित्यं नहितान् बाधते कलिः ॥

எந்த பக்தர்கள் ஹரே, கேசவ, கோவிந்த, வாஸுதேவ, ஜனார்தன என்ற நாமாக்களை நாள்தோறும் ஸங்கீர்த்தனம் செய்கிறார்களோ அவர்களை கலிபுருஷன் கெடுப்பது இல்லை.

शिव शंकररुद्रेश नीलकण्ठ त्रिलोचन ।
इतिरयन्ति ये नित्यं नहितान् बाधते कलिः ॥

எந்த பக்தர்கள் சிவ, சங்கர, ருத்ர, ஈச, நீலகண்ட, த்ரிலோசன என்ற நாமாக்களை நாள்தோறும் ஸங்கீர்த்தனம் செய்கிறார்களோ அவர்களை கலிபுருஷன் கெடுப்பது இல்லை.

கலியில் தள்ளத்தகுந்த சில கார்யங்கள்.

வானப்ரஸ்தாச்ரமம் - பெண்ணுக்கு மருமணம் - ஸமுத்ரத்தில் யாத்ரை செய்வது - யாகத்தில் ஸுராக்ரஹம்

செய்வது - கோக்களை யாகத்தில் பசுவாக உபயோகிப்பது - நைஷ்டிகப்ரம்மசர்யம், நரமேதம், அச்வமேதம், யோக்யதை, அத்யயனம், நன்நடத்தை இவைகளை அனுசரித்து ஆசௌசத்தைக் குறைப்பது - குருகேட்ட தக்ஷிணையை சிஷ்யன் கொடுப்பது - ஸன்யாஸிகள் எல்லா வர்ணங்களிலும் பிக்ஷை செய்வது, பிராம்மணன் இதரர்களின் அன்னம் சாப்பிடுவது, மஹாபாதகிகளுடன் சேர்ந்தவன் மஹாபாதகி என்பது இவைகள் கலியில் தள்ள வேண்டிய கார்யங்கள் என்று மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள்.

6. सृष्टिप्रकारः - ஸ்ருஷ்டிப்ரகாரः

मनुः—योसावतीन्द्रियग्राह्यस्सूक्ष्मोऽव्यक्तस्सनातनः ।
सर्वभूतमयोऽचिन्त्यस्स एव स्वयमुद्बभौ ॥

மனு :— இந்த பிரபஞ்சங்கள் உண்டாவதற்கு முன் பகவான் ஏகாங்கியாகப் பிரகாசித்தார். அவர் இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். ஸூக்ஷ்மம் நிரம்பியவர், எக்காலத்திலும் இருப்பவர், ஸகல ப்ரபஞ்சமும் தன்னிடத்தில் அடக்கிக் கொண்டவர், ஜகத்துக்கெல்லாம் ஸாக்ஷிஸ்வரூப்மானவர்.

सोऽभिध्याय शरीरात् स्वात् सिसृक्षुः विविधाः प्रजाः ।
अप एव ससर्जादौ तासु बीजमवासृजत् ॥

அந்த பகவான் ஜகத்துக்களை தன்னிடமிருந்து உண்டு பண்ணுவதின் பொருட்டு ஸங்கல்ப்பம் செய்து ஸகல ப்ரபஞ்சங்களை ஸ்ருஷ்டிக்கும்விருப்பதுடன் முதலில் ஜலத்தை ஸ்ருஷ்டித்து, அதில் தன்வீர்யத்தை அனுப்ரவேசம் செய்வித்தார். இவ்விடத்தில் கூறப்பட்ட ஜலம் காரணோதகம் - ஸாதாரண ஜலம் அல்ல - ஸகலஸ்தாவர ஜங்கம ப்ரபஞ்சங்கள் ஸூக்ஷ்மரூபமாக இருப்பது - அது தன் கர்மாக்களை

அனுசரித்து ஆவிர்பவிக்க வேண்டும் - அது பகவத்ஸம் பந்தம் இல்லாவிடில் உண்டாகாது என்று ஜீவலக்ஷணமான ப்ரக்ருதி அனுப்ரவேசம் சொல்லப்படுகிறது.

आपो नारा इति प्रोक्ता आपो वै नरसूनवः ।
ता यदस्यायनं पूर्वं तेन नारायणः स्मृतः ॥

ஏற்கனவே சொன்ன ஜலம், நரனான பகவானால் உண்டாக்கப்பட்டதாகையால் நாரர் என்று சொல்லப்படுகிறது. இந்த ஜலமே முன்கல்பத்தில் பகவானுக்கு இருப்பிடமாக இருந்தது. அதாவது ஸ்ருஷ்டித்த ப்ரபஞ்சத்தில் பகவான் அந்தர்யாமியாகவும் ஸாக்ஷியாகவும் இருந்தார். பகவானுக்கு நாரம் என்ற ஜலம் இருப்பிடமாகையால் பகவானுக்கு நாராயணன் என்று பெயர். பிறகு அந்த ஜலத்தில் தங்கமயமான அண்டம் உண்டானது. அது ஆயிரவருஷத்திற்குப் பிறகு இரண்டாகப் பிளந்தது. அதில் விராட்ரூபியான ப்ரும்மா உண்டானார். அந்த அண்டத்தினுடைய (முட்டை) மேல்பாகம் ஸ்வர்க்கலோகாதிகள்— கீழ்பாகம் பூ பாகம்—மத்யம் அந்தரிக்ஷம். இது ஸ்தூலமானப்ரபஞ்ச ஸ்ருஷ்டி—விராட் என்பதாகும்.

उद्बबर्हात्मनश्चैव मनः सदसदात्मकम् ।
मनसश्चाप्यहंकारमभिमन्तारमीश्वरम् ॥

महान्तमेव चात्मानं सर्वाणि त्रिगुणानि च ।
विषयाणां ग्रहीतॄणि शनैः पंचेन्द्रियाणि च ॥

இவ்விடம் ஸ்தூலமான ப்ரபஞ்சஸ்ருஷ்டி சொன்ன பிறகு ஸூக்ஷ்ம ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி சொல்லப்படுகிறது. சதுர்முகப்ரும்மாவினால் பரமாத்மாவினுடைய ஸமீபத்திலிருந்து

மனஸ்தத்வம் எடுக்கப்பட்டது. அது அனேக விஷயங்கள் அடங்கிக்கிடக்கும் அவஸ்தை; அந்த அவஸ்தையில் அஸத் என்றும், ஸத்என்றும் விஷயங்கள் வெளிகிளம்பும்பொழுது ஸத் அஸதாத்மகம் என்று சொல்லப்படுகிறது. அதிலிருந்து அஹம்காரதத்துவம்—இது கார்யம் செய்யும் ஸாமர்த்யம் உள்ளது, நான் செய்தேன் ~~என்று~~ அபிமானத்துடன் கூடியது.—இதற்கும் முன்பு மஹத்தத்வம், இது பரமாத்மாவுனுடைய அவ்யாக்ருத சக்தி. இதையும்—ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற குணங்கள், சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்த என்ற விஷயங்கள், இவற்றை க்ரஹிக்கும் ஞானேந்திரியங்கள் (வாக் பாணி பாத பாயு உபஸ்தம்) இவைகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டன; இது பகவத்ஸ்ருஷ்டியாகும். ப்ரும்மா லோகங்களையும் மற்ற பௌதிகங்களையும்தான் ஸ்ருஷ்டிப்பார்—என்றுவேதம் கூறுகிறது.

सर्वेषां तु स नामानि कर्माणि च पृथक्पृथक् ।
वेदशब्देभ्य एवादौ पृथक्संस्थाश्च निर्ममे ॥

சதுர் முகப்ரம்மாவானவர் பகவானிடமிருந்து வேதங்களை அடைந்து அதைக்கொண்டு—ப்ரபஞ்சங்களில் உள்ள சராசர வஸ்துக்களுடைய பெய ்அவைகளுடைய காரியங்கள்—அவைகளுடைய பேதங்கள்—மரியாதைகள்—எல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்தார்—அதாவது காடு, மலைகள், நதிகள், பூப்ரதேசங்கள்—நான்கு வர்ணங்கள் (ப்ராம்மண க்ஷத்ரிய, வைச்ய சதுர்த்தர்கள்) ஆச்ரமங்கள் (ப்ரமசர்ய—கார்ஹஸ்த்ய—வானப்ரஸ்த—ஸன்யாஸங்கள்), தர்மங்கள் வர்ணாச்ரமதர்மங்கள்—இவைகளுடைய பலன்கள்—இவ்வளவும் வேதத்தை ப்ரமாணமாகக் கொண்டு முன் கல்பம் போல் ஸ்ருஷ்டித்தார். ஆகையால் ப்ரபஞ்சம் அனாதி—அனந்தமும் (இது ரொம்ப விஸ்தாரமுள்ள விஷயம், ஸங்கிரஹமாகச் சொல்லப்பட்டது).

7. ब्राह्मण धर्माः - ப்ராம்மண தர்மங்கள்

देवलः— ब्राह्मण्यां ब्राह्मणाज्जातस्संस्कृतो ब्राह्मणोभवेत् ।
एवं क्षत्रिय विट्शूद्राज्ञेयास्स्वेभ्यस्स्वयोनिजाः ॥

தேவலன்:—ப்ராம்மண ஸ்த்ரீயினிடத்தில் ப்ராம்மணனுக்குப்பிறந்து ஜாதகர்மாதி ஸம்ஸ்காரத்தை அடைந்தவன் ப்ராம்மணனாகவும், இந்த மாதிரி அந்த அந்த ஜாதி ஸ்த்ரீயினிடத்தில் அந்த அந்த ஜாதி புருஷர்களிடத்தில் முறைப்படி ஸம்ஸ்காரத்துடன் பிறந்தவன் க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் என்றும் அறியத்தகுந்தவர்கள் ஆவார்கள்.

मनुः— अध्यापनं चाध्ययनं यजनं याजनं तथा ।
दानं प्रतिग्रहश्चैव षट्कर्माण्यग्रजन्मनः ॥

மனு:—ப்ராமணனுக்கு வேதம் சொல்லி வைப்பது, வேதம்படிப்பது, யாகம் செய்வது, யாகம் செய்து வைப்பது, தானம் கொடுப்பது, தானம் வாங்குவது, ஆக ஆறு கர்மாக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

माधवीये— नास्तिक्यादथवालस्याद्योऽग्नीन्ना धातुमिच्छति ।
यजेतवा नयज्ञेन स याति नरकान् बहून् ॥
तस्मात्सर्वप्रयत्नेन ब्राह्मणो हि विशेषतः ।
आधायाग्नीन्विशुद्धात्मा यजेत परमेश्वरम् ॥

மாதவீயம்:—வேதாத்யனம் செய்த ப்ராம்மணன் நம்பிக்கைக்குறைவினாலோ அல்லது சோம்பலினாலோ ஆதானம் செய்து கொண்டு அக்னிஹோத்ரம் முதலான யக்ஞம் செய்யாமல் போனால் நரகானுபவம் ஏற்படும். ஆகையால் அதிகாரியாக உள்ள ப்ராம்மணன் ஆதானம் செய்து யாகங்களினால் பரமேச்வரனை ஆராதிக்க வேண்டும்.

गार्ग्यः— श्रौतं कर्मनचेच्छक्तः स्मार्तं कर्तुं समाचरेत् ।
तत्राप्यशक्तः करणे कुर्यादाचारमन्ततः ॥

கார்க்யர்:— ச்ரௌதகர்மா செய்ய தனக்கு யோக்யதை இல்லையேயானால் ஔபாஸனம், ஸ்த்ாலீபாகம் முதலிய ஸ்மார்த்தகர்மாக்களைச் செய்யவும்; அதுவும் செய்ய சௌகரியமில்லையேனால் ஸ்னானம், ஸந்தியாவந்தனம். பூஜை முதலியவைகளை ச்ரத்தையுடன் செய்து ஆசாரத்துடன் இருக்கவும்.

यमः— प्रतिग्रहाध्यापन याजनानां प्रतिग्रहं श्रेष्ठतमंवदन्ति ।
प्रतिग्रहंशुध्यति जप्यहोमै याज्यन्तुपापन्नपुनन्ति वेदाः ॥

எமன்:—அத்யயனம் செய்துவைப்பது, தானம் வாங்குவது, யாகம் செய்து வைப்பது, இவைகள் ப்ராம்மணனுக்கு நித்யகர்மாவாகாது. ஏனென்றால் இவைகள் ஜீவனத்தை உத்தேசித்துச் சொல்லப்பட்டவை. இவைகள் இல்லாமல் ஸ்வதஸ்ஸித்தமான தனம் இருந்தால் மேற்கொண்ட காரியங்கள் செய்ய அவசியம் கிடையாது. இந்த மூன்றுள் ப்ரதிக்ரஹம் தானம் வாங்கி ஜீவனம் செய்வது உயர்ந்தது. அதனால் ஏற்பட்ட பாபத்தை ஜபஹோமங்களால் போக்கடித்துக் கொள்ளலாம், யாஜனத்தினால் ஸம்பவித்த பாபத்தை வேதங்கள் கூட பரிசுத்தம் செய்யாது.

मनुः— तपोविशेषैर्विविधैः व्रतैश्च विधिचोदितैः ।
वेदःकृत्स्नोऽधिगन्तव्यस्सरहस्यो द्विजन्मना ॥

மனு:—அநேகவிதமான நியமத்துடன் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வ்ரதத்துடன் வேதம் பூர்ணமாக அத்யயனம் செய்யவேண்டும், உபநிஷத் பாகத்தையும் அத்யயனம் செய்யவேண்டும்.

यस्स्वशाखां परित्यज्य पारक्यमधिगच्छति ।
सशूद्रवद्बहिष्कार्यः सर्वस्मात् द्विजकर्मणः ॥

தன் பரம்பரையாக வந்த வேத சாகையை விட்டு மற்ற வருடைய (வேறு) வேத சாகையை அத்யயனம் செய்தால் அவன் பரம பாபியாகிறான். அவனுக்கு எந்த வைதிக கர்மாக்களிலும் அதிகாரம் கிடையாது.

मनुः— वेदमेव सदाऽभ्यस्येत् तपस्तप्स्यन्द्विजोत्तमः ।
वेदाभ्यासोहि विप्रस्य तपः परमिहोच्यते ॥

மனு:—தபஸ் செய்யவிருப்பமுள்ள ப்ராம்மணன் வேதத்தையே திரும்பத் திரும்ப சொல்லவும். அதுதான் பெரிய தபஸ் ஆகும்.

दक्षः— वेदस्स्वीकरणं पूर्वं विचारोऽभ्यसनं जपः ।
तद्दानं चैव शिष्येभ्यः वेदाभ्यासो हि पंचधा ॥

தக்ஷன்:—வேதத்தை குருமுகமாகக்ரஹிப்பது, அர்த்த விசாரம் செய்வது, திரும்பத் திரும்ப ஆவர்த்தி சொல்வது, நியமத்துடன் பாராயணம் செய்வது, சிஷ்யர்களுக்கு சொல்லிவைப்பது, என்ற ப்ரகாரம் வேதாப்யாஸம் ஐந்து விதமாகும்.

यमः— सततं प्रातरुत्थाय दन्तधावनपूर्वकम् ।
स्नात्वा हुत्वा च शिष्येभ्यः कुर्याद्ध्यापनं नरः ॥

எமன்:— தினமும் காலையில் எழுந்து பல் தேய்த்து முறைப்படி ஸ்னானம் செய்து ஸந்தியாவந்தனம் - அக்னி ஹோத்ரம் ஔபாஸநம் செய்து ஆசாரத்துடன் சிஷ்யர்களுக்கு வேதாத்யயனம் சொல்லி வைக்கவேண்டும். இது ஆசார்ய நியமம்.

मनुः— आचार्यपुत्रः शुश्रूषुः ज्ञानदो धार्मिकः शुचिः ।
आप्तः शक्तः अर्थदः साधुः स्वोऽध्याप्यादश धर्मतः ॥

மனு:—குருபுத்ரன், பணிவிடை செய்பவன், வேறு வித்தையை சொல்லிக்கொடுப்பவன், தர்மிஷ்டன், ஆசார சீலன், பந்து, புத்திசாலி, பணம் கொடுப்பவன், நல்லவன், க்ஞாதி, இந்தபத்து பேர்களும் சிஷ்யர்களுக்கு அர்ஹதை உள்ளவர்கள். ஆகையால் அத்யயனம் செய்து வைக்கலாம். ஆகையால் அனுசாரன், நாஸ்திகன், அஸூயை உள்ளவன் இவர்களுக்கு அத்யயனம் சொல்லி வைப்பது உசிதமல்ல என்பது சாஸ்திரத்தின் கருத்து.

8. दानम् - தானம்.

याज्ञवल्क्यः— दातव्यं प्रत्यहं पात्रे निमित्ते तु विशेषतः ।
याचितेनापि दातव्यं श्रद्धापूतं च शक्तितः ॥

யாக்ஞவல்கியர்:—தினமும் தானமாக ஏதாவது ஒரு பொருளை, அதை வாங்கி நல்லவழியில் உபயோகிக்கும் பாத்திரத்தில் கொடுக்க வேண்டும். க்ரஹணதி புண்ய காலங்களில் வேதாத்யயன ஸம்பத்து உள்ள பெரியோர் களிடம் தானம் செய்யவேண்டும். யாசித்தாலும் தன் சக்திக்குத் தகுந்தபடி ச்ரத்தையுடன் கொடுக்கவேண்டும்.

मनुः— वारिदः तृप्तिमाप्नोति सुखमक्षय्यमन्नदः ।
तिलप्रदः प्रजामिष्टां दीपदश्चक्षुरुत्तमम् ॥
भूमिदो भूमिमाप्नोति दीर्घमायुर्हिरण्यदः ।
गृहदोऽग्र्याणि वेश्मानि रूप्यदो रूपमुत्तमम् ॥
वासोदश्चन्द्रसालोक्यं अश्विसालोक्यमश्वदः ॥
अनडुहः श्रियं पुष्टां गोदो बध्नस्य विष्टपम् ॥
यानशय्याप्रदो भार्यामैश्वर्यमभयप्रदः ।
धान्यदश्शाश्वतं सौख्यं ब्रह्मदो ब्रह्मसार्ष्टिताम् ॥

மனு:— ஜலம் கொடுப்பவன் த்ருப்தியையும், அன்னம் கொடுப்பவன் குறைவில்லா சுகத்தையும், எள்ளுகொடுப்பவன் நல்ல ஸந்ததியையும், தீபம் கொடுப்பவன் நல்ல கண்ணேயும், பூமியைக் கொடுப்பவன் பூமியையும், தங்கம் கொடுப்பவன் தீர்க்கமான ஆயுஸ்ஸையும், வீடு கொடுப்பவன் உயர்ந்த வீடுகளேயும், வெள்ளி கொடுப்பவன் உயர்ந்த ரூபத்தையும், வேஷ்டி கொடுப்பவன் சந்திரலோகத்தையும், காளே மாடு கொடுப்பவன் அகண்ட ஐச்வர்யத்தையும், கோ கொடுப்பவன் ஸூர்யலோகத்தையும், வண்டி படுக்கை கொடுப்பவன் அழகான பத்னியையும், அபய தானம் கொடுப்பவன் தனத்தையும், தான்யம் கொடுப்பவன் சாச்வதமான சௌக்கியத்தையும், வேத தானம் (வேதம் சொல்லிக் கொடுப்பது) செய்கிறவன் ப்ரம்மலோகத்தையும் அடைவான். அந்த அந்த தானத்திற்கு தகுந்தபடி பலன் கூறப்பட்டது.

सर्वेषामेवदानानां ब्रह्मदानं विशिष्यते ।

எல்லாதானத்தைக் காட்டிலும் வேததானம் - வேதம் சொல்லி வைப்பது - உயர்ந்தது.

தானம் யாருக்கும் செய்யலாம்; ஆனுல் பாத்ரம் காலம் இவைகளே அனுசரித்து பலன் அதிகம். கலியில் தானத்திற்கு மகிமை அதிகம், ச்ரத்தையுடன் தானம் செய்ய வேண்டும்.

शाण्डिल्यः— अयाचितानि देयानि सर्वदानानि यत्नतः ।
अन्नं विद्या च कन्या च ह्यनर्थिभ्यो न दीयते ॥

சாண்டில்யர்:— எல்லா தானமும் யாசிக்காதவனுக்கு கொடுக்க வேண்டும். ஆனுல் வித்யா - அன்னம் - கன்யா இவைகள் யாசிக்கிற அதிகாரியை பார்த்துக் கொடுக்க வேண்டும்.

द्वाविमौ पुरुषौ लोके स्वर्गस्योपरि तिष्ठतः ।
अन्नप्रदाता दुर्भिक्षे सुभिक्षे हेमवस्त्रदः ॥

ஒருவிசேஷம் - இரண்டு புருஷர்கள் ஸ்வர்க்கலோகத்துக்கு மேல் பிரகாசிக்கிறார்கள்; துர்பிக்ஷ காலத்தில் (அன்னம் அகப்படாத காலத்தில்) அன்னம் கொடுப்பவனும், ஸுபிக்ஷ காலத்தில் (ஊர்கள் சௌகரியமாக இருக்கும் சமயத்தில்) தங்கம்-வஸ்திரம் கொடுப்பவனும் பிரகாசிக்கிறார்கள் என்று கூறுகிறது.

देवलः- नाल्पत्वं वा बहुत्वं वा दानस्याभ्युदयावहम् ।
श्रद्धा भक्तिश्च दानानां वृद्धिक्षयकरे हिते ॥

தேவலன் :— தானம் அல்பமாகவோ அதிகமாகவோ இருக்கலாம், அது விசேஷமல்ல. கொடுக்கிறவனின் பக்தி ச்ரத்தையை அனுசரித்து அதிகம் குறைவு என்பது - பலத்தில் தெரிகிறது.

इष्टं दत्तं अधीतं च प्रणश्यत्यनुकीर्तनात् ।
श्लाघानुशोचनाभ்யां न वृथा परिकीर्तयेत् ॥

(... யாகம் செய்தது, கொடுத்தது, வேதம் பாராயணம் செய்தது, இவைகளை சொல்லிக்கொள்ளுவதினால் புண்யம் அழிந்துவிடும். நாம் செய்த நல்ல காரியத்தை ச்லாகை செய்தாலும், தானம் கொடுத்து விட்டு அது பற்றி சோகப்பட்டாலும் நம் தேஜஸ் குறைந்து போகும். ஆகையால் புண்ணிய நல்ல காரியங்களைக் கூறாதே.

दक्षः— सममब्राह्मणेदानं द्विगुणं ब्राह्मणब्रुवे ।
प्राधीते शतसाहस्रं अनन्तं वेदपारगे ॥

தக்ஷன் :— பாத்ரத்தை அனுசரித்து பலன் ஏற்படுகிறது: அப்ராம்மணனுக்குக் கொடுத்த பொருளுக்கு சொல்லப்பட்ட பலன் உண்டு. அனுஷ்டானமில்லாத ப்ராமணனுக்குக் கொடுத்தது இரண்டு மடங்கு பலன் கொடுக்கும். வேதம் நன்றாக சொல்லுகிறவனுக்குக் கொடுப்பது லக்ஷ மடங்கு அதிகம், வேதம் அர்த்தத்துடன் அனுஷ்டானத்துடன் கரை கண்டவனுக்கு கொடுப்பது அளவில்லாத அளவு அதிகமாகப் பலன் கிடைக்கும்.

यमः— शीलं संवसता ज्ञेयं शौचं संव्यवहारतः ।
प्रज्ञा संकथनात् ज्ञेया त्रिभिः पात्रं परीक्ष्यते ॥

எமன் :— ஒருவருடைய ஸ்வபாவம் நல்லது கெட்டது என்பது கூட பழகுவதால் தெரியும். சௌசாசாரம் அவர்களுடைய நடவடிக்கைகளால் புரியும். பேசினால் படிப்பு யோக்யதை புரியும். இந்த மாதிரி பாத்ரம் தீர்மானிக்கப் பட வேண்டும்.

प्रजापतिः— यः स्वधर्मपरित्यागी पाषण्डीत्युच्यते बुधैः ।
तत्संगकृत्तत्समस्स्यात्तावुभावपिपापिनौ ॥
येतु सामान्यभावेन मन्यन्ते पुरुषोत्तमम् ।
ते वै पाषिण्डिनो ज्ञेयाः नरकार्हानराधमाः ॥

பிரஜாபதி :— எவன் ஸ்வதர்மமான ஸ்னான ஸந்தியாதிகளை விட்டானோ அவன் பாஷாண்டீ (அதாவது பாபீ) என்று சொல்லப்படுகிறது. அவனைச் சேர்ந்தவனும் பாபீ. எவன் வாஸுதேவனை ஸாமான்யன் என்று மட்டமாக நினைக்கிறானோ அவனும் பாஷாண்டீ, பாபீ. இவர்கள் நரகத்தை அடையப் போகிறார்கள். மட்டமான தறமற்ற மனுஷ்ய மிருகங்கள். ஆகையால் இவர்களுக்குப் பொருளைக் கொடுத்து உன்னைக் கெடுத்துக் கொள்ளாதே என்று பொருள்.

ப்ரதிக்ரஹம் பற்றி கொஞ்சம் தெரிவிக்கிறேன். நல்ல ச்ரோத்ரிய குடும்பங்களிலிருந்துதான் தானம் வாங்க வேண்டும். தன் குடும்ப நிலையை அனுசரித்துப் பார்த்து அனுஷ்டானக் குறைவு உள்ள ப்ராம்மணனிடமும் ப்ரதிக்ரஹம் செய்யலாம்.

मनुः— वृद्धौ च मातापितरौ साध्वी भार्या सुतः शिशुः ।
अप्यकार्यशतं कृत्वा भर्तव्यामनुरब्रवीत् ॥

மனு :— வயது முதிர்ந்த மாதாபிதாக்கள், பதிவ்ரதையான மனைவி, குழந்தையான புத்திரன் புத்ரிகள் இவர்களைக் காப்பாற்ற வேண்டியது முக்யம். ஆகையால் எப்படியாவது கூடியமட்டிலும் பார்த்து ப்ரதிக்ரஹம் செய்து காப்பாற்ற வேண்டும். அது முக்யம் என்று மனு சொல்லுகிருர் .

पराशरः— षट्कर्मनिरतो विप्रः कृषिकर्म च कारयेत् ।

-பராசரர் :— ஸ்னானம் ஸந்தியா-பூஜை-ஔபாஸனம்-ப்ரம்மயக்ஞம்-வைச்வதேவம் இவைகளை செய்கிற ப்ராம்மணன் பூமியில் உழுது பயிரிட்டுக் கார்யங்களைச் செய்யும்படிச் செய்து பண்ணை வைத்தும் பிழைக்கலாம். ஆபத் காலத்தில் வ்யாபாரம் செய்து, சிலபொருள்களை விற்றுப் பிழைக்கலாம்.

9. क्षत्रिय धर्माः - க்ஷத்திரிய தர்மங்கள்

विष्णुपुराणेः— दुष्टानां शासनाद्राजा शिष्टानां परिपालनात् ।
प्राप्नोत्यभीप्सितान् लोकान् वर्णसंस्थाकरो नृपः ॥

விஷ்ணு புராணம்:— ராஜாவானவன் துஷ்டர்களை தண்டிப்பதாலும் சிஷ்டர்களை நல்லவர்களை ரக்ஷிப்பதாலும் உயர்ந்த விரும்பப்பட்ட லோகங்களை அடைகிருன். ஏனென்றுல் வர்ணங்களுடையமரியாதையைக் காப்பாற்றுகிருன் அல்லவா ?

मनुः— इन्द्रस्यर्कस्य वा योश्च यमस्य वरुणस्य च ।
चन्द्रस्याग्नेः पृथिव्याश्च तेजोवृत्तं नृपश्चरेत् ॥

மனு:— ராஜாவானவர் திக்பாலர்களுடைய அம்சமாவான். அந்த திக்பாலர்களுடைய தேவர்களுடைய தேஜோயுக்தமான ஸ்வபாவத்தை அனுசரிக்க வேண்டும்.

वार्षिकांश्चतुरो मासान् यथेन्द्रोऽभिप्रवर्षति ।
तथाऽभिवर्षेत्स्वं राष्ट्रं कामैरिन्द्रव्रतं चरन् ।

எப்படி இந்திரன் வர்ஷா காலாமான நான்கு மாதங்களில் மழையை வர்ஷிப்பது போல், விரும்பிய வஸ்துக்களை வர்ஷிப்பதால், இந்திரனுடைய வ்ரதத்தை அனுசரிக்கிருன் அரசன் என்பது கருத்து.

अष्टौ मासान् यथाऽऽदित्यस्तोयं हरति रश्मिभिः ।
तथा हरेत्करं राष्ट्रान्नित्यमर्कव्रतं हि तत् ॥

ஸூர்யன் எட்டு மாஸங்களில் தன் ரச்மிகளால் ஜலத்தை க்ரகித்துக் கொள்கிறான். அதுமாதரி ராஜா எட்டு மாதங்களில் ஜனங்களிடமிருந்து உசிதமான கப்பங்களை (வரியை) சிரமப்படுத்தாமல் வாங்குகிறான். ஜனங்களுக்கு உபகாரம் செய்வதால் ஸூர்யனை அனுசரிக்கிறான்.

प्रविश्य सर्वभूतानि यथा चरति मारुतः ।
तथा चारैः प्रवेष्टव्यं व्रतमेतद्धि मारुतम् ॥

வாயுவானது எல்லா ப்ராணிகளிடமும் வெளியிலும் ஸஞ்சரித்து நல்லது செய்கிறதோ அதேமாதிரி ராஜா சாரர்கள் மூலமாக தன் ராஜ்யத்திலும் ப்ரதேசங்களிலும் உள்நுழைந்து நல்லது கெட்டது தெரிந்து நடவடிக்கை எடுக்கிறான். அது வாயு வ்ரதமாகும்.

यथा यमः प्रियद्वेष्यौ प्राप्तकाले नियच्छति ।
तथा राज्ञा नियन्तव्याः प्रजास्तद्धि यमव्रतम् ॥

யமதர்மராஜா எவ்வாறு வேண்டியவன் வேண்டாதவன் என்று பாராமல் தண்டனை கொடுக்கிறானோ அவ்வாறு அரசன் துஷ்டர்களை தப்பு செய்தவர்களை தண்டிக்கிறான். இது யமனுடைய வ்ரதமாகும்.

वरुणेन यथा पाशैः बद्ध एवाभिदृश्यते ।
तथापापान्निगृह्णीयाद्व्रतमेतद्धि वारुणम् ॥

வருணன் எவ்வாறு பாசாயுதங்களால் சத்துக்களைக் கட்டி அடக்குகிறானோ அவ்வாறு ராஜா பாபிகளை அவச்யம் அடக்கி தண்டிக்கிறான். இது வருண வ்ரதம்.

परिपूर्णं यथा चन्द्रं दृष्ट्वाहृष्यन्ति मानवाः ।
तथा प्रकृतयो यस्मिन् स चान्द्रव्रतिको नृपः ॥

எவ்வாறு பூர்ணிமா சந்திரனைப் பார்த்த ஜனங்கள் ரொம்ப ஸந்தோஷப்படுவார்களோ, அதேமாதிரி ராஜா வைக் கண்ட ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள். அது சந்திர வ்ரதம்.

प्रतापयुक्तो राजाहि नित्यं स्यात्पापकर्मसुः ।
दुष्ट सामन्तहिंस्रश्च तदाग्नेयं व्रतं स्मृतम् ॥

ப்ரதாபமுள்ள தேஜஸ்வியான ராஜாவானவன் குற்ற முள்ளவனிடம் அதிக கடுமையாகவும் சத்ரு ராஜாக்களை ஹிம்ஸிக்கிறவனாகவும் இருக்கிறான் என்பது அக்னி வ்ரத மாகும்.

यथा सर्वाणि भूतानि धरा धारयते समम् ।
तथा सर्वाणि भूतानि बिभ्रतः पार्थिवव्रतम् ॥

எவ்வாறு பூமியானது எல்லா ப்ராணிகளையும் கருணை யுடன் பொறுமையாக தரிக்கிறாளோ அந்தமாதிரி ராஜா ஸகல ப்ராணிகளையும் தரிக்கிறான் என்பது பூமி வ்ரதமாகும்.

एतैरुपायैरन्यैश्च युक्तो नित्यमतन्द्रितः ।
स्तेनान् राजानिगृह्णीयात् स्वराष्ट्रे पर एव ॥

இந்த மாதிரி உபாயங்களினாலும் வேறு உபாயங்களா லும் சோம்பல் இல்லாமல் திருடர்களையும் கொள்ளை அடிப்ப வர்களையும் அடக்க வேண்டும். பிற ராஜ்யங்களிலும் இந்த கார்யங்களுக்கு உதவவேண்டும். கொள்ளை அடிப்பவர்களை வளரவிட்டால் பொருளாதாரம் சீர்குலையும் என்பது கருத்து.

पाराशरः— क्षत्रियो हि प्रजारक्षन् शस्त्रपाणिः प्रदण्डवान् ।
निर्जित्य परसैन्यानिक्षितिं धर्मेण पालयेत् ॥

பராசரர்:— க்ஷத்திரியனுக்கு ப்ரஜாஸம்ரக்ஷணம் - துஷ்டசிக்ஷண கார்யத்தை உத்தேசித்து ஆயுததாரணம், தர்மமானயுத்தம் செய்வது, சத்ருஸைன்யத்தை ஜயித்து பூமியை ஆளுவது இவைகள் உயர்ந்த கார்யங்கள்.

ब्राह्मणाः सर्वथा पूज्याः परमं दैवतं हि तत् ।
यदधीते यद्यजते यद्दाति यदर्चति ॥
तस्य षड्.भाग भाग्रा जा सम्यग्भवतिरक्षणात् ॥

ப்ராம்மணர்களை விசேஷமாக பூஜிக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் பிரத்யக்ஷ தெய்வமாவார்கள். அவர்கள் நியமத்துடன் வேதத்தை அத்யயனம் செய்து, முறைப்படியாகம் செய்து, தேவ பூஜை செய்து லோகத்தை ரக்ஷிக்கிறார்கள். ராஜாவுக்கும் அவர்கள் செய்யும் புண்ய கார்யங்களில் ஆறுல் ஒரு பங்கு கிடைக்கிறது. இது அவர்களை ரக்ஷிப்பதால் ஏற்படும் பரிசு.

10. वैश्य धर्माः - வைச்ய தர்மங்கள்

मनुः— पशूनां रक्षणं दानं इज्याध्ययनमेव च ।
वणिक् पथं कुसीदं च वैश्यस्य कृषिमेव च ॥

மனு:— மூன்ருவது வர்ணமான வைச்யர்கள், பசுக்களை ரக்ஷிப்பது, தானம் செய்வது, யாகம் செய்வது, அத்யயனம் செய்வது, தான்யம் - ரத்னம் - தங்கம் - வெள்ளி முதலி வைகளை வ்யாபாரம் செய்வது, பணத்தை முறைப்படி வட்டிக்குக் கொடுப்பது, சாகுபடி செய்வது என்பதான இந்த தர்மங்களை முறைப்படி செய்யவேண்டும்.

நான்கு வர்ணங்களும் பகவானுல் ஸ்ருஷ்டிக்கப் பட்டது. ஆகையால் நான்காவது வர்ணத்தில் பிறந்தவர் களுக்கு தர்மங்கள் ஸுலபம். பகவானை பூஜிக்கலாம். இது எல்லோருக்கும் ஸமமானது. இது அவர் அவர்களுடைய க்ருஹத்தில் செய்யவேண்டிய விஷயம். வைதிக ப்ராமணர் களுக்கு பணிவிடை செய்வது முக்ய தர்மமாகும். ஜீவனத்தை உத்தேசித்து ஜனங்களுக்கு உபயோகமான வஸ்துக்கள் செய்து கொடுத்து ஜீவிக்கலாம். இது சில்ப கார்யங்கள் என்று சொல்வது.

11. वर्णसा धारण धर्माः - நான்கு வர்ணங்களுக்கும் பொதுவான தர்மங்கள்

विष्णुः— क्षमा सत्यं दमः शौचं दानमिन्द्रियसंयमः ।
अहिंसा गुरुशुश्रूषा तीर्थानुसरणं दया ।
आर्जवं लोभशून्यत्वं देवब्राह्मण पूजनम् ॥
अनभ्य सूया च तथा धर्मः सामान्य उच्यते ॥

விஷ்ணு:— பொறுமை, ப்ரியமாயும் ஹிதமாயும் இருக்கிற உண்மையை பேசுவது, மனதை அடக்குவது, சரீரத்தை மண்களினுல் சுத்தி செய்து கொள்வது, முடிந்த அளவில்பிறருக்கு உபகாரமான பொருளை கொடுப்பது, இந்திரயங்களை அடக்குவது, பிறரை ஹிம்சை செய்யாமல் இருப்பது, பெரியோர்களுக்குபணிவிடைசெய்வது, கங்காநதி முதலிய புண்ய தீர்த்தங்களுக்கு யாத்ரை செய்வது, தயை, கபடமில்லாமல் இருப்பது, பேராசை இல்லாமல் இருப்பது, தேவர்களையும் ப்ராம்மணர்களையும் பூஜிப்பது, அஸூயை இல்லாமல் இருப்பது, இவைகள் நான்கு வர்ணத்தாருக்கும் பொதுவான தர்மங்கள். இவைகள் எல்லோருக்கும் அவச்யம். ஸங்கர ஜாதிகள் என்று சிலர் இருக்கிறனர். இவர்கள் நம் காமக்ரோதங்களினுல் ஏற்பட்டவர்கள். அவர்களுக்கும் இந்த தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்மாக்கள் செய்ய சில பொது விதிகள்.

1. குறிப்பிட்ட காலத்தில் கர்மா செய்ய முடியாமல் போனுல் கௌண காலத்தில் செய்ய வேண்டும். அதாவது கர்மா செய்யும் காலத்திற்கு பின்வரும் காலத்திற்கு கௌண காலம் என்பது பெயர்.

2. அந்த கௌண காலத்தில் கர்மா செய்யும் பொழுது முக்ய காலத்தில் செய்ய முடியாததற்கு ப்ராயச்சித்தம் செய்து செய்ய வேண்டும்.

3. பகலில் செய்ய வேண்டிய கர்மாக்கள் செய்ய முடியாமல் போனால் ராத்திரியின் முன் யாமத்தில் (9 மணிக்குள்) செய்யலாம். ஆனால் ஸூர்ய நமஸ்காரம் - ப்ரம்மயக்ஞம் இந்த இரண்டைத் தவிர மற்றகர்மாக்களை செய்யலாம்.

4. முக்ய காலத்தில் செய்ய வேண்டிய கர்மாவுக்கு சொல்லப்பட்ட த்ரவ்யம் கிடைக்கவில்லையானால் கௌண காலத்தில் கிடைக்கும் என்றால் காலம்தான் முக்கியம். கௌண த்ரவ்யத்தை வைத்து கொண்டு முக்ய காலத்திலேயே கர்மா செய்ய வேண்டும்.

5. சில கர்மாக்கள் தன்னால் செய்ய முடியாவிட்டால் புத்திரன், புரோஹிதன், ஸஹோதரன், பத்னீ, பிதா, ஸ்னேகிதன், இவர்களைக் கொண்டு செய்யச் சொல்லாம்.

6. எதுவும் பொதுவாக வலது கையால் செய்ய வேண்டும்.

7. யக்ஞோபவீதம் இல்லாமல் கர்மாக்களை செய்யக் கூடாது.

8. பொதுவாக எந்த கர்மாக்களையும் உட்கார்ந்து கொண்டு செய்ய வேண்டும். விசேஷ விதி இருந்தால் நின்று கொண்டு செய்யலாம்.

9. எந்த கர்மாக்களுக்கும் கிழக்கு அல்லது வடக்கு (வடகிழக்கு) இவைகள் பார்த்துச் செய்ய வேண்டும்.

10. எந்த கர்மாவும் ஆசமனம் - சங்கல்பம் செய்து ஆரம்பிக்க வேண்டும்.

11. கர்மாவில் ப்ரதான கார்யம் மறந்தால் மறுபடியும் செய்ய வேண்டும். அங்ககார்யம் மறந்தால் ப்ராயச்சித்தம் செய்தால் போதும்.

12. எந்த கர்மாவும்-அவர் அவர்கள் ஸூத்ர ப்ரகாரம் செய்ய வேண்டும்.

13. முக்ய த்ரவ்யம் கிடைக்காவிடில் பிரதிநிதி த்ரவ்யத்தைக் கொண்டு கர்மாக்கள் செய்யலாம்.

14. ஸ்வ ஸூத்ரத்தில் சொல்லாததை பிற ஸூத்தி ரத்திலிருந்து எடுத்து அனுஷ்டானம் செய்யலாம், ஆனல் ஸ்வஸூத்ர விரோதமாக இருக்கக்கூடாது.

15. ஸ்வஸூத்ர ப்ரகாரம் கார்யம் செய்ய செளகரிய மில்லாமல் போனல் போதாயன ஸூத்ரப்ரகாரம் செய்ய லாம் என்று வ்ருத்தமனு சொல்லுகிறுர்.

16. சொல்லப்பட்ட காலம் வராமல் முன் காலத்தில் செய்வது செய்யாதது மாதிரி ஆகும். ஆகையால் காலம் வந்த பிறகு மறுபடியும் செய்ய வேண்டும்.

17. எந்த கர்மாவும் ஸாதாரணமாக சரியாக உட்கார்ந்து கொண்டு (ஸ்வதிகாஸனம்) செய்ய வேண்டும். சாஸ்திரவிதியை அனுசரித்து மாற்றிக் கொள்ளலாம்.

18. கழுத்தில் வஸ்திரம் சுற்றிக்கொண்டு கர்மாக்கள் செய்யலாகாது.

19. எந்த கர்மாவும் இரண்டு முழங்காலுக்குள் செய்ய வேண்டும்.

20. எந்த கார்யங்களுக்கும் க்ருஷ்ண ஸ்மரணம் ப்ராயச்சித்தம் ஆகும்.

12. चत्वारिंशत्संस्काराः - நாற்பது ஸமஸ்காரங்கள்

याज्ञवल्क्यः— निषेकाद्याः श्मशानान्ताः तेषां वै मन्त्रतः क्रियाः ।

யாஞ்யவல்யர்—நிஷேகம் என்பது கர்பாதானம், இது முதற்கொண்டு மூன்று வர்ணிக்கும் (ச்மசானுத்தா:) இறந்த பிறகும் கர்மாக்கள் சொல்லப் படுகின்றன.

गौतमः— "गर्भाधान पुंसवन सीमन्तोन्नयन जातकर्म-नामकरणान्नप्राशनचौलोपनयनं चत्वारि वेदव्रतानि स्नानं सह धर्म

चारिणी संयोगः पंचानां यज्ञानामनुष्ठानं देवपितृमनुष्य भूतब्रह्मणामेतेषां च अष्टकापार्वणः श्राद्धं श्रावण्याग्रहायणी चैत्याश्वयुजीति सप्तपाकयज्ञसंस्था अग्न्याधेयमग्निहोत्रं दर्शपूर्णमासावाग्रयणं चातुर्मास्यानि निरूढपशुबन्धस्सौत्रामणीति सप्तहविर्यज्ञसंस्था अग्निष्टोमोऽत्यग्निष्टोम उक्थ्यष्षोडशी वाजपेयोऽतिरात्रोऽप्तोर्यामि इति सप्तसोमसंस्था इत्येते चत्वारिंशत्संस्काराः अथाष्टावात्मगुणाः दया सर्वभूतेषु क्षान्तिरनसूयाशौचमनायासो मंगलकार्पण्यमस्पृहेति ॥

கௌதமர்:— கர்பாதானம் - பும்ஸவனம் - ஸீமந்தம் - ஜாதகர்மா - நாமகரணம் - அன்னப்ராசனம் - சௌளம் - உபநயனம் (8), நான்கு வேதவ்ரதங்கள், ஸ்னானம், விவாஹம், பஞ்சமஹாயக்ஞங்கள் (வேத-பித்ரு-மனுஷ்ய-பூத-ப்ரம்மயக்ஞங்கள்), அஷ்டகை-பார்வணம்-ச்ராத்தம்-ச்ராவணீ-அக்ரஹாயணீ - சைத்ரீ - ஆச்வயுஜீ - என்ற ஏழுபாகயக்ஞம்ஸம்ஸ்தா:, ஆதானம், அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸங்கள்-ஆக்ரயணம் - சாதுர்மாஸ்யங்கள், நிரூடபசுபந்தங்கள், ஸௌத்ராமணீ என்ற ஏழு உறவிர்யக்ஞங்கள், அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாம்ம் என்ற ஏழு ஸோமஸம்ஸ்தைகள் ஆக 40 ஸம்ஸ்காரங்கள். ஸகலப்ராணிகளிடமும் தயை, இரக்கம், பொறுமை, அஸூயை இல்லாமல் இருப்பது, சௌசம், அனாயாஸம், தன்னையும் பிறரையும் சிரமப்படுத்தாமல் கார்யம் செய்வது, மங்களம், காபண்யம், பெரும் மனதுடன் பிறருக்கு தனுதிகளால் உபகாரம் செய்வது; அஸ்ப்ருஹா-பிறர்பொருளில் ஆசை இல்லாமல் இருப்பது-இவைகள் எட்டு ஆத்ம குணங்கள் ஆகும்.

இந்த எட்டு ஆத்ம குணங்கள் மனுஷ்யனுக்கு முக்யமானவை. இவை இருந்தால் மேற்கொண்ட ஸம்ஸ்காரங்கள் சோபிக்கும் என்பது சாஸ்திரம்.

இதில் கர்பதானத்திலிருந்து உபநயனம் பர்யந்தம் அவச்யம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு பிறகு வைராக்ய மிருக்குமேயானுல் ஸந்யாஸம் செய்து கொள்ள லாம். வைராக்யமில்லாதபக்ஷத்தில் விவாஹாதிகள் செய்து கொள்ளலாம்.

13. गर्भाधानम् - கர்பாதானம்.

याज्ञवल्क्यः— षोडशर्तुनिशाः स्त्रीणां तस्मिन् युग्मासु संविशेत् ।
ब्रह्मचार्येव पर्वाण्याद्याश्चतस्रश्च वर्जयेत् ॥

யாஞ்யவல்க்யர்:— ரஜோதர்சன முதல் 16 நாட்கள் ருது எனப்படும். அவைகளுள் இரட்டைப் படையான ராத்ரிகள் ஸ்த்ரீகமனத்துக்கு யோக்யமான காலங்கள். அதில் பர்வாக்கள் ஸம்பவித்தால் ப்ரம்மசர்யமாக இருக்க வேண்டும். முன் நான்கு தினங்கள் கூடாது.

पराशरः— प्रथमेऽहनि चण्डाली द्वितीये ब्रह्मघातकी ।
तृतीये रजकी प्रोक्ता चतुर्थेऽहनि शुध्यति ॥

பராசரர்:— ரஜோதர்சன முதற்கொண்டு முதல் தினம் சண்டாளி யாவும், இரண்டாவது தினம் ப்ரம்மஹத்தி தோஷ முள்ளவளாயும், மூன்ருவது தினம் ரஜகீ என்றும் சொல்லப்படுகிறது. அதாவது அந்தமாதிரி உள்ளவர்களின் தோஷ ஸாம்யம் என்பது கருத்து. விலகச் செய்ய வேண்டும். நான்காவது நாள் ஸ்னனம் செய்த பிறகு வீட்டு கார்யங்கள் செய்யலாம். தெய்வீகமான கார்யத்திற்கு ஐந்தாவது தினம் சுத்தமாவாள்.

श्रुतौ— तिस्रो रात्री व्रतं चरेत् प्रजायै गोपीथाय ॥

மூன்று நாட்கள் நியமத்துடன் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் பிறக்கும் குழந்தைகள் க்ஷேமங்களுடன் இருக்கும். இது ப்ரஜாஸம்ரக்ஷனத்திற்கு ஏற்பட்ட வ்ரத

மாகும். அந்த காலங்களில் எண்ணெய் தேய்த்துக் கொள் வது, அலங்காரங்கள் செய்து கொள்வது பல்தேய்ப்பது இவைகளை வர்ஜிக்க வேண்டும்.

शाण्डिल्यः— नगच्छेद्गर्भिणीं भार्यां मलिनां सितमूर्धजाम् ।
रजस्वलां रोगवतीं ना योनौ न बुभुक्षितः ॥
सुवस्त्रवेषधरया स्नातया शुद्धचित्रया ।
अरोगया दयितया स्वयमेवंविधः स्वपेत् ।

சௌனகர்:—ருதுமதீ விவாகஹ விஷயத்தில் சௌனகர் பரிஹாரம் சொல்லுகிறார். கன்னிகைக்கு விவாஹம் செய்து கொடுக்கும் பிதா விவாஹம் செய்வதற்குள் எவ்வளவு ருது ஆகி இருக்கிறதோ அதை எண்ணிப்பார்த்து ஒரு ருதுவுக்கு ஒரு கோ (பசு) என்று ருதுஸங்கியையை அனுசரித்து பசுக்கள் தானம் செய்யவேண்டும்; வசதியில்லாவிடில் ஒரு பசுவாவது தானம் செய்யவேண்டும். அதற்கும் வசதி இல்லாவிடில் ருதுஸங்கியை அனுசரித்து தக்ஷிணை கொடுத்து ப்ராம் மணுளுக்கு போஜனம் செய்து வைக்கவேண்டும். இது கன்யா பிதா செய்யவேண்டிய காரியம். விவாஹம் செய்துகொள் ளும் கன்னிகை மூன்று நாள் உபவாஸம் இருந்து சிகப்பு ரத்னத்தை ஐந்து வயதுக்குள்பட்ட பெண்ணுக்கு தானம் செய்யவேண்டும். கல்யாணம் செய்து கொள்ளுகிற வரன் வ்ரதஸமாவர்த்தனம் செய்துகொண்டு கூச்மாண்ட ஹோமம் ஒரு தடவை செய்யவேண்டும். இப்படி மூன்று பேர்களுக்கும் பரிஹாரம் சொல்லப்பட்டிருக்கிறது.

संस्काररत्नमालायां— तामुद्वहन्नित्यनेन वरस्य कूश्माण्डहोमेन
तदुद्वाहयोग्यता प्रतिपाद्यते ॥

கூச்மாண்ட ஹோமம் விவாஹத்திற்கு முன்பு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கொள்ள யோக்யதை வருகிறது ; வ்ருஷலீ பதித்வ தோஷமும் ஏற்படாது. விவாஹம் ஆனபிறகு செய்தால் வ்ருஷலீ பதித்வ தோஷத்தை பரிஹரிக்க முடியாது.

31. विवाहे साधारण धर्माः விவாஹத்தில் சில பொது விதிகள்

गर्गः— एकमातृप्रसूतानां एकस्मिन् वत्सरेयदि विवाहो नैव कर्तव्योऽनिर्गते तु ऋतुत्रये। ग्रामान्तरेऽपि कर्तव्यः कर्तव्यो नैकवेश्मनि॥

கர்கர் :— ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களுக்கு ஒரு வருஷத்தில் விவாஹம் சொய்யக்கூடாது. ஆனல் 6 மாதம் சென்ற பிறகு செய்யலாம். அவசியம் ஏற்பட்டால் வேறு கிராமத்தில் செய்யலாம். ஒரே வீட்டில் செய்யக்கூடாது என்பது கருத்து. சில ரிஷிகள் வேறு மாதங்களில் செய்யலாம் என்று சொல்லுகிருர்கள். லக்ன பேதமிருந்தாலும் ஒரே நாளில் சுபகார்யங்கள் செய்யலாம் என்று சிலர் கூறுகிருர்கள்.

देशभेदात्कुलाचारादिमे धर्माः प्रकीर्तिताः ।

ஆகையால் தேசா சாரத்தையும் குலாசாரத்தையும் அனுசரித்து சுபகார்யங்கள் செய்யவும்.

अत्रिः— जन्मभे जन्मदिवसे जन्ममासे शुभंत्यजेत् ।
ज्येष्टमास्याद्यगर्भस्य शुभंवर्ज्यं स्त्रिया अपि ॥

அத்ரி :—ஜன்ம நக்ஷத்திரத்திலும் ஜன்ம மாஸத்திலும் ஜன்ம வாரத்திலும் சுபகார்யம் உபநயன விவாஹாதிகள் செய்யக்கூடாது. ஜ்யேஷ்ட மாஸத்தில் மூத்த பெண், மூத்த புத்ரன் இவர்களுக்கு சுபகாரியங்களை வர்ஜிக்கவேண்டும்.

व्यासः— विष्णोः प्रस्वापनोत्थान मध्ये नैवोपनायनम् ।
विवाहं नैव कुर्वीत नैव कुर्यान्महोत्सवम् ॥

வ்யாசர்:—பகவான் வாஸுதேவன் தூங்கும் காலமான ஆஷாடத்திலிருந்து கார்த்திகைபர்யந்தம் உபநயனம்-விவாஹம் செய்யக்கூடாது. வேறு உத்ஸவகார்யங்களும் செய்யக்கூடாது.

देवलः— देवोत्सवे प्रवृत्ते तु मनुष्योत्सवो मतः ।
तस्मिन् ग्रामे न कुर्वीत ॥

தேவலர்:—தேவர்களுக்கு உத்ஸவம் ஆரம்பித்தபிறகு மனுஷ்ய சுபகாரியங்கள் அந்த கிராமத்தில் செய்யக்கூடாது.

स्कन्दः— नामगोत्रे समुच्चार्य प्राङ्मुखो वारिपूर्वकं ।
उदङ्मुखाय वै दद्यात् कन्यां चैव यवीयसीम् ॥

ஸ்கந்தர்:—நாம கோத்ரங்களைச் சொல்லி கிழக்கு முகமாக இருந்துகொண்டு தீர்த்த பூர்வமாய் வடக்கு முக மாக இருக்கும் வரனுக்கு வயசில் சிறியவளான பெண்ணை தானம் செய்யவேண்டும்.

संग्रहे— पूर्वमौपासनारंभादग्निनाशो यदाभवेत् ।
पुनर्विवाहः कर्तव्यः परतस्तु न विद्यते ॥

கல்யாண காலத்தில் ஔபாஸனம் ஆரம்பிப்பதற்கு முன் அக்னி அணைந்தால் புணர் விவாஹம் செய்துகொள்ள வேண்டும். இது விவாஹ காலத்தில் சொன்னோம். பிறகு ஔபாஸனம் செய்யும் காலத்தில் அக்னி அணைந்தால் ப்ராயச்சித்தாஹுதி செய்தால் போதும். புனர் விவாஹம் என்றால் விவாஹ மந்திரங்களைப் படிப்பது என்பதாகும்.

ராத்ரியில் ஆக்னேய ஸ்தாலீ பாகம் செய்து ஔபாஸ னம் ஆரம்பிக்க வேண்டும். ஒன்பது நாழிகைக்குள் ஆரம்

பிக்கவேண்டும். கல்யாணம் நான்கு தினம் அனுஷ்டிக்க வேண்டும். அதாவது ப்ரவிச்ய ஹோமம் வரனுடைய க்ருஹத்தில் செய்யவேண்டும். அதிலிருந்து நான்கு நாள் சொல்லப்பட்டிருக்கிறது. நான்காவது நாள் பின் ராத்ரியில் சேஷஹோமம் செய்யவேண்டும். பிறகு அதே அக்னியில் ஸ்தாலீபாகம் செய்யவேண்டும்.

ऋतुमेकमतिक्रम्य स्थालीपाकं विनाकृतम् ।
अजस्रं लौकिकं विद्यादिति वेदविदोविदुः ॥

ஸ்தாலீபாகம் செய்யாமல் (2 மாதம்) ஒரு ருது ஆகி விட்டால் அக்னி லௌகிகமாகிவிடும். ஔபாஸனுக்னி என்று கூறமுடியாமல் போய்விடும் என்பது கருத்து. பூர்ணிமாஸ ஸ்தாலீபாகம் முதலில் செய்யவேண்டும். பிறகு தர்ச ஸ்தாலீபாகம். இரண்டையும் முக்ய காலத்தில், க்ருஷ்ண சுக்ல ப்ரதமைகளில் செய்யவேண்டும்.

गर्गः— सोदर्ये तिष्ठति ज्येष्ठे न कुर्याद्दारसंग्रहम् ।
आवसथ्यं तथाऽऽधानं पतितस्त्वन्यथा भवेत् ॥

கர்கர்:-மூத்த ஸகோதரன் இருக்கும்பொழுது அடுத்தவன் விவாஹம் செய்துகொள்ளக்கூடாது. அதேமாதிரி ஆதானமும் செய்யக்கூடாது.

याज्ञवल्क्यः— लोकानन्त्यं दिवः प्राप्तिः पुत्रपौत्रप्रपौत्रकैः ।
यस्मात्तस्मात् स्त्रियस्सेव्याः कर्तव्याश्च सुरक्षिताः ।

யாக்ஞ்யவல்கியர்:—விவாஹம் செய்து கொள்ளுவதால் புத்ர பௌத்ரன் முதலிய வம்ச வ்ருத்தி தர்மானுஷ்டானங்கள், பரத்திலும் உயர்ந்த புண்யலோகங்களை அடைவது முதலியது ஏற்படுகிறது. ஆகையால் ஸ்திரீகளை சாஸ்திரீய முறையில் கௌரவித்து ரக்ஷிக்க வேண்டும்.

32. स्त्री धर्माः ஸ்திரியின் தர்மங்கள்.

मनुः— पितारक्षति कौमारे भर्तारक्षति यौवने ।
पुत्रस्तु स्थाविरेभावे न स्त्री स्वातन्त्र्यमर्हति ॥

மனு :—தகப்பஞர் சிறு ப்ராயத்திலும், பர்த்தா (கணவன்) யௌவனத்திலும், வயதான காலத்தில் புத்ரனும் ஸ்திரீகளைக் காப்பாற்றவேண்டும். அவர்களை இஷ்டப்படி விட்டால் தனக்கே துக்கத்தை உண்டுபண்ணிக் கொள்வார்கள். காரணம் அபலை, பலமில்தாதவள். ஆகையால் ஸ்வதந்த்ரையாக இஷ்டப்படி இருக்கவிடக்கூடாது.

सूक्ष्मेभ्योपि प्रसंगेभ्यः स्त्रियोरक्ष्या विशेषतः ।
द्वयोर्हि कुलयोश्शोकमावहेयुररक्षिताः ।
इमं हि सर्ववर्णानां पश्यन्तो धर्ममुत्तमम् ॥

சின்னச் சின்ன காரியங்களிலும்கூட ஸ்திரீகள் கெட்டுப்போகாமல் இருக்கவேண்டுமே என்ற கவலையில் விசேஷமாககவனித்து ரக்ஷிக்கவேண்டும். தவறு ஏதாவது நடந்தால் தன் பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் சோக துக்கங்கள் உண்டுபண்ணினவர்களாக ஆவார்கள். இந்த ஸ்திரீ ரக்ஷணம் என்ற உத்தமமான தர்மம் எல்லா வர்ணத்தாருக்கும் உரியது.

पानं दुर्जनसंसर्गः पत्याचविरहोऽटनम् ।
स्वप्नोऽन्यगेहवासश्च नारी सन्दूषणानि षट् ॥

குடிப்பது, கெட்டவர்களுடன் துஷ்டர்களுடன் ஸ்னேஹம், பர்த்தாவை விட்டு பிரிந்து இருப்பது, ஊர்சுற்றுவது, அகாலத்தில் தூங்குவது, பிறர் க்ருஹத்திற்குப் போய் வஸிப்பது இந்த ஆறு கார்யங்களை ஸ்திரீகள் பரிஹரிக்க

வேண்டும். இவைகள் ஸ்திரீகளை பாதிவ்ரத்யத்திலிருந்து கெடுத்துவிடும்.

मनुः— नास्ति स्त्रीणां पृथग्यज्ञो न व्रतं नाप्युपोषणम् ।
पतिं शुश्रूषते यत्तु तेन स्वर्गे महीयते ।

மனு :—ஸ்திரீகளுக்கு வேறு தர்ம கார்யம் சாஸ்திரத்தில் குறிப்பிடவில்லை. பர்தாவுக்குப் பணிவிடைசெய்வது தான் உத்தம தர்மம். அதனுல் ஸ்வர்க்கலோக நிவாஸம் ஸித்திக்கும். வேறு வ்ரதானுஷ்டானம், பட்டினி இருப்பது இதெல்லாம் தர்மமாகாது.

अशीलः— कामवृत्तोवा गुणैर्वा परिवर्जितः ।
नस्त्रियः परिवर्ज्यस्स्यात् सततं दैववत्पतिः ॥

ஸ்வபாவம் மட்டமாக இருந்தாலும், குணங்கள் குறைவாக இருந்தாலும் கணவனை உதாஸீனம் செய்யக்கூடாது. பணிவிடை செய்யவேண்டும். ஸ்திரீகளுக்கு பர்த்தா ப்ரத்யக்ஷ தெய்வம் அல்லவா.

सदा प्रहृष्टया भाव्यं गृहकार्ये च दक्षया ।
सुसंस्कृतोपस्करया व्यये चामुक्तहस्तया ॥

எப்பொழுதும் ஸந்தோஷமுள்ளவளாயும் க்ருஹ கார்யங்களில் ஸமர்த்தையாயும், க்ருஹங்களில் உள்ள பண்டம் பாத்ரங்களை சுத்தமாக வைத்துக்கொள்ளுகிறவளாயும், நியாயமான செலவு காரியங்களில் தாராளமாக இருப்பவளாயும் இருக்கவேண்டும்.

अत्रिः— नव्रतेनोपवासेनधर्म्येण विधिना न च ।
नारी स्वर्गमवाप्नोति प्राप्नोति पतिपूजनात् ॥
जीवितेनाथ वित्तेन भर्तारं वंचयेत या ।
क्रिमियोनिशतं गत्वा पुल्कसी जायते ततः ।

जपस्तपस्तीर्थ सेवा प्रव्रज्या मन्त्रसाधनम् ।
देवताराधनं चैव स्त्रीजातेः पतनानि षट् ॥

அத்ரி :—ஸ்திரீகள் உபவாஸத்தாலோ அல்லது வ்ரத்த்தாலோ தர்மமான மற்ற காரியங்களாலோ நல்ல லோகத்தை அடைய முடியாது. கணவனை பூஜிப்பதால் மட்டும் தான் நல்ல லோகத்தை அடையமுடியும். எவள் பணத்தாலும் ஜீவனத்தாலும் வஞ்சிக்கிறுளோ அவள் நூறு ஜன்மாக்கள் புழுவாகப் பிறப்பாள், கடைசியில் மட்ட ஜாதியில் பிறந்து திண்டாடுவாள். ஜபம், தபம், தீர்த்தாடனம், ஸன்யாஸி மாதிரி இருப்பது, மந்திரங்களை அதிக ஆவர்த்தி செய்து ஸ்வாதீனம் செய்வது, தேவதைகளை உபாஸிப்பது, இவை பாதிவ்ரத்யத்தைக் கெடுக்கும் ஆறு வகையான காரியங்கள்.

व्यासः— हरिद्रां कुंकुमं चैव सिन्दूरं कज्जलं तथा ।
कूर्पासकं च ताम्बूलं मंगल्याभरणं शुभम् ॥
केशसंस्कारकबरी करकर्णादि भूषणम् ।
भर्तुरायुष्यमिच्छन्ती दूषयेन्नपतिव्रता ॥

வ்யாசர் :—மஞ்சள், குங்குமம், ஸிந்தூரம், மை, ரவிக்கை, தாம்பூலம், மங்களகரமான ஆபரணம், தலைமையிரை வாரிக்கொள்வது, கைவளை, காது தோடு இவைகளை ஸுமங்கலிகள் ச்ரத்தையுடன் இருந்து தரிக்க வேண்டும். இதனுல் கணவனுக்கு ஆயுரபிவ்ருத்தி ஏற்படும்.

प्रातः काले तु यानारी दद्यादर्घ्यं विवस्वते ।
सप्तजन्मानि वैधव्यं सा नारी नैवपश्यति ॥

தினம் காலையில் சூரியனை உத்தேசித்து ஜலத்தினுல் அர்க்யம் கொடுக்க வேண்டும். அப்படி செய்வதால் ஏழு ஜன்மாக்கள் விதவையாக மாட்டாள் என்பது கருத்து.

कृत्वामण्डलकं बाह्ये तूष्णी मेवाक्षतादिभिः ।
पूजयेत् सततं यातु तस्यास्तुष्यन्ति देवताः ।
यद्गृहं राजते नित्यं मंगलैरनुलेपनैः ।
तद्गृहेवसतेलक्ष्मीर्नित्यं पूर्णकलान्विता ॥

எந்த ஸ்திரீ தினமும் வீட்டுக்கு வெளியில் மண்டலம் போட்டு அக்ஷதை முதலியவைகளால் பூஜிக்கிருளோ அவர்களிடத்தில் தேவதைகள் சந்தோஷத்துடன் இருக்கிருர்கள். எந்தக் கிருஹம் நன்ருக மெழுகி கோலம் போட்டு ப்ரஹாசிக்கிறதோ அங்கு லக்ஷ்மி நித்யவாஸம் செய்கிருள்.

पतिव्रता तु या नारी भर्तृशुश्रूषणोत्सुका ।
न तस्या विद्यते पापं इहलोके परत्र च ।
पतिव्रताधर्मरता रुद्राण्येव न संशयः ।
तस्याः पराभवं कर्तुं शक्नोति न जनः क्वचित् ॥

கணவனுக்குப் பணிவிடை செய்து பதிவ்ரதையாக விளங்குகிற ஸ்திரீகளுக்கு இஹ லோகத்திலும், பரலோகத்திலும் பாபம் வராது. அவர்களை ஸாக்ஷாத் பார்வதியாக நினைக்க வேண்டும். அவர்களை யாரும் அவமானப்படுத்த நினைக்க மாட்டார்கள். அப்படி அவமானப்படுத்த நினைத்தால் தெய்வம் தகுந்த தண்டனை கொடுக்கும் என்பது கருத்து.

दक्ष— अदुष्टां विनतां भार्यां यौवने यः परित्यजेत् ।
सप्तजन्म भवेत्स्त्रीत्वं वैधव्यं च पुनः पुनः ॥

தக்ஷன் :—எவன் நல்ல குணமுள்ளவளாயும், அடக்கமுள்ளவளாயும் இருக்கும் பத்னியை யௌவன காலத்தில் அழவைத்து ஹிம்ஸிக்கிருனே, தள்ளி வைக்கிருனே, அவன் பாபியாவான். ஏழு ஜன்மாக்கள் ஸ்திரீ ஜாதியாகப் பிறந்து

வியாதிகளால் கஷ்டப்பட்டு, கணவனை இழந்து மறுபடியும் மறுபடியும் கஷ்டப்படுவான். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கணவன் மார்களுக்கு எச்சரிக்கை செய்கிறுர் என்று கருத்து. சாஸ்திரம் பொய்யாகாது. மஹர்ஷி வசனம். தாய்குலத்தை இழிவுபடுத்துகிறவன் க்ஷேமத்தை நினைப்பது ஸமுத்ரத்தில் கருங்கல் மிதக்குமானுல் நடக்கும்.

स्मृतिरत्ने— सन्ध्यायां नैवभोक्तव्यं गर्भिण्यातु प्रयत्नतः ।
नस्नातव्यं नगन्तव्यं वृक्षमूलेषु सर्वदा ॥

கர்பிணீ ஸ்திரீகள் ஸந்தியா காலத்தில் சாப்பிடக் கூடாது, ஸ்னனம் செய்யக்கூடாது, மரத்தடியில் எப்பொழுதுமே போகக்கூடாது.

नामांगल्यं वदेद्वाक्यं न च हास्यादि किंचन ।
कुर्याच्छ्वशुरयोर्नित्यं पूजां मंगलतत्परा ।
तिष्ठेत्प्रसन्नवदना भर्तृप्रियहितेरता ॥

கர்பிணீ ஸ்திரீகள் அமங்கலமான வார்த்தைகளைப் பேசக்கூடாது, அனுவசியமாக சிரிக்கக்கூடாது. மாமனுர், மாமியார்களுக்குப் பணிவிடை செய்யவேண்டும். தெளிவான முகத்துடன் பர்த்தாவினுடைய ஹித கார்யங்களில் ஆஸக்தி உள்ளவளாக இருக்கவேண்டும்.

याज्ञवल्क्यः— दौहृदस्याप्रदानेन गर्भोदोषमवाप्नुयात् ।
वैरूप्यं मरणं वापि तस्मात्कार्यं प्रियं स्त्रियाः ॥

யாஞ்யவல்கியர் :—ஸ்திரீகளுக்கு மசக்கையின் காரணமாக எது கேட்கிருளோ அதைக்கொடுத்து திருப்தி செய்து வைக்கவேண்டும்; அலக்ஷ்யம் செய்யக்கூடாது. அலக்ஷ்யம் செய்து கொடுக்காவிடில் கர்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஆபத்து நேரிடலாம். ஆகையால் பிரியத்தைச் செய்யவும்.

व्यासः— पत्यौ मृतेऽपि यो योषिद्वैधव्यं पालयेत् क्वचित् ।
सा पुनः प्राप्य भर्तारं स्वर्ग भोगान् समश्नुते ॥

வ்யாஸர்:— கணவன் மரணத்தை அடைந்தால் ஸ்திரீகளுக்கு வைதவ்யம் வருகிறது. அந்த வைதவ்ய தர்மத்தை அனுஷ்டித்தால் பரலோகத்தில் பர்த்தாவுடன் க்ஷேம லாபங்களை அடையலாம்.

विधवाकबरीबन्धः भर्तृबन्धाय चायते ।
शिरसो वपनं तस्मात् कार्यं विधवया तथा ।
एकाहारः सदाकार्यः न द्वितीयः कदाचन ॥

விதவா ஸ்திரீகள் கேசங்களை விஸர்ஜனம் செய்ய வேண்டும். விதவை கேசங்களை முடிந்துகொண்டு இருந்தால் பர்த்தாவுக்கு பரலோகத்தில் சிரமம் ஏற்படும். ஒருவேளை சாப்பிடவேண்டும்.

गन्धद्रव्यस्य संभोगोनैव कार्यस्तथा क्वचित् ।
तर्पणं प्रत्यहं कार्यं भर्तुः कुशतिलोदकैः ॥

வாஸனை த்ரவ்யங்கள் முதலியது உபயோகப்படுத்தக் கூடாது. தினமும் பர்த்தாவை உத்தேசித்து பர்த்தாவின் நாமகோத்ரங்களைச் சொல்லி எள்ளு ஜலத்தால் தர்பங்களுடன் தர்ப்பணம் செய்யலாம்.

विष्णोस्तु पूजनं कार्यं पतिबुध्या न चान्यथा ।
पतिमेव सदा ध्यायेद्विष्णुरूपधरं परम् ।
एवं धर्मपरा नित्यं विधवापि शुभामता ॥

தினமும் விஷ்ணு பூஜை செய்யவேண்டும். பதியை விஷ்ணுவாக பாவிக்க வேண்டும். இந்தமாதிரி தர்மானுஷ்டானம் செய்கிற விதவை க்ஷேமத்தை அடைவாள்.

आश्वलायनः— मृतेभर्तरि अपुत्राच बालपुत्रा च याङ्गना।
बन्धूनाश्रित्य सातिष्ठेत् संयता जनकादिकान् ॥

பர்த்தா மரித்த ஸ்திரீகள் புத்தரன் உள்ளவளோ இல்லாதவளோ யாராக இருந்தாலும் அப்பா முதலிய பந்துக்களை ஆச்ரயித்து அடக்கத்துடன் காலம் கடத்த வேண்டும்.

33. गृहस्थ धर्माः க்ருஹஸ்த தர்மங்கள்.

पराशरः— विवापेन पितॄनर्चन् यज्ञैर्देवांस्तथाऽतिथीन्।
अन्नैर्मुनींश्च स्वाध्यायैरपत्येन प्रजापतिम्।
बलिना चैव भूतानि वात्सल्येनाखिलंजगत् ॥

பராசரர் :— ச்ராத்தத்தால் பித்ருக்களையும், யக்ஞங்களால் தேவதைகளையும், அன்ன போஜனங்களால் அதிதிகளையும், வேதம் ஜபிப்பதால் மஹர்ஷிகளையும், க்ருஹ புத்தரனை அடைவதால் பிரஜாபதியையும், வைச்வதேவ பலியினால் சகலப்ராணிகளையும் ஸந்தோஷப் படுத்துகிற வர்கள் க்ருஹஸ்தர்கள் என்று கூறப்படுகிறது. வாத்ஸல்யங்களினால் மற்ற ஜகத்தில் உள்ளவர்களையும்,

प्राप्नोति पुरुषो लोकान् निजकर्मसमार्जितान् ॥

க்ருஹஸ்தர்கள் தங்கள் புண்ய கர்மாக்களால் ஸம்பாதிக்கப்பட்ட புண்ய லோகத்தை அடைகிறார்கள்.

भिक्षाभुजस्तु येकेचित् परिव्राड्ब्रह्मचारिणः।
तेप्यत्रैव प्रतिष्ठन्ते गार्हस्थ्यं तेनवै परम् ॥
यस्तु सम्यक् करोत्येवं गृहस्थः परमं विधिम्।
स्वकर्मबन्धमुक्तोऽसौ लोकानाप्नोत्यनुत्तमान् ॥

பிக்ஷை எடுத்து சாப்பிடுகிற ஸன்யாஸி, பிரம்மசாரிகள் கூட க்ரஹஸ்தனை ஆச்ரயித்து இருக்கிறார்கள். ஆகையால் எல்லோருக்கும் கிரஹஸ்தாச்ரமம் ஆச்ரயமாக இருப்பதால் அது உயர்ந்த ஆச்ரமம். அந்த ஆச்ரம கார்யங்களை சாஸ்திரங்களில் சொல்லப்பட்டவைகளை அனுஷ்டித்தால் கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைவார்கள்.

व्यासः— नित्यं स्वाध्याय शीलस्स्यात् नित्यं यज्ञोपवीतवान् ।
सत्यवादी जितक्रोधो ब्रह्मभूयाय कल्पते ॥

வ்யாஸர் :— தினம் வேதாப்யாஸம் செய்கிறவனும், யக்ஞோபவீதம் தரித்துக்கொண்டு இருப்பவனும், ஸத்யம் பேசுகிறவனும் க்ரோதங்களை ஜயித்தவனும் இருக்கிற க்ரஹஸ்தன் ப்ரம்மஸாயுஜ்யத்தை அடைகிறான்.

सन्ध्या स्नानरतो नित्यं ब्रह्मयज्ञपरायणः ।
अनसूयुः मृदुर्दान्तः गृहस्थः प्रेत्यवर्धते ॥

தினம் ஸந்தியா ஸ்னானத்தில் ஆஸக்தி உள்ளவனும் ப்ரம்மயக்ஞ அனுஷ்டான ச்ரத்தை உள்ளவனும் அஸூயை இல்லாதவனும் ம்ருதுவாயும், இந்திரியங்களை ஜயித்தவனும் இருக்கிற க்ருஹஸ்தன் மேல்லோகத்தில் க்ஷேமத்தை அடைகிறான்.

वीतरागभयक्रोधः लोभमोहविवर्जितः ।
सावित्री जप्यनिरतः श्राद्धकृन्मुच्यते गृही ॥

ராகம், பயம், க்ரோதம், பேராசை. மூடத்தனம், இவைகளை விட்டவனும். காயத்ரீ ஜபத்தில் விசேஷ ச்ரத்தை உள்ளவனும், சிராத்தம் செய்கிறவனும் இருக்கிற க்ருஹஸ்தன் ஸகல பாபத்திலிருந்தும் விடுபடுகிறான்.

मातापित्रोर्हिते युक्तो गोब्राह्मणहितेरतः ।
यज्वा च देव भक्तश्च ब्रह्मलोकेमहीयते ॥

மாதா, பிதாக்களை பூஜிப்பவனும், கோப்ராம்மணனைப் பூஜிப்பவனும், யாகம் செய்கிறவனும், தேவதைகளிடம் பக்தி உள்ளவனும் இருக்கிற க்ருஹஸ்தன் ப்ரம்மலோகம் அடைந்து ப்ரகாசிக்கிறான்.

मनुः— श्रुति स्मृत्युदितं धर्ममनुतिष्ठन् हि मानवः ।
इहकीर्तिमवाप्नोति प्रेत्यचानुत्तमां गतिम् ॥

வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட தர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு ஜீவனம் செய்கிறவன் இஹ லோகத்தில் யசஸ்ஸையும் பிறகு உயர்ந்த லோகங்களையும் அடைவான்.

வானப்ரஸ்தாச்ரமம் கலியில் மஹர்ஷிகளால் நிஷேதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய அவச்யம் கிடையாது.

34. सन्यास धर्माः ஸன்யாஸ தர்மங்கள்.

अंगिराः— यदा मनसि संजातं वैतृष्ण्यं सर्ववस्तुषु ।
तदा सन्यासमिच्छन्ति पतितस्स्यात् विपर्यये ॥

அங்கீரர் :— எப்பொழுது ஸகலவஸ்துக்களிலும் வைராக்யம் உண்டாகிறதோ அப்பொழுதுதான் ஸன்யாஸம் பெற்றுக்கொள்ளலாம். வைராக்யம் இல்லாமல் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டால் பதிதர்கள் ஆவார்கள்.

हारीतः— विरक्तः प्रव्रजेद्धीमान् संरक्तस्तु गृहेवसेत् ।
सरागो नरकं याति प्रव्रजन् हि द्विजाधमः ॥

ஹாரீதர் :— வைராக்யம் உள்ளவன் அவசியம் ஸன்யாஸம் பெற்றுக்கொள்ளலாம்; விஷயத்தில் பற்றுதல் உள்ளவன் க்ருஹஸ்தனாக இருந்து கர்மாக்கள் செய்வதுதான் உசிதம். தீமான் என்பது யோஜித்துச் செய்யவேண்டும்

என்பதைக் குறிக்கிறது, புத்திமான் என்று அாத்தம். பற்றுள்ளவன் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டால் நரகத்தை அடைவான்.

जाबालश्रुतौ— ब्रह्मचर्यं समाप्य गृहीभवेद् गृहीभूत्वा वनी भवेत्
वनी भूत्वा प्रव्रजेद्यदिवेतरथा ब्रह्मचर्यादेव प्रव्रजेद्
गृहाद्वावनाद्वा, इति ॥

ஜாபாலச்ருதியில் ஆச்ரம ஸமுச்சயம் சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது அந்த அந்த ஆச்ரமங்களில் இருக்கும்பொழுது வைராக்யம் வரவில்லையேயானால் மூன்று ஆச்ரமமும் ஸ்வீகரித்து பிறகு வைராக்யம் ஸம்பாதித்துக் கொண்டு ஸன்யாஸம் பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த ஆச்ரமத்தில் இருக்கும் பொழுது வைராக்யம் பலமாக வருகிறதோ அடுத்த ஆச்ரமம் செல்லாமல் ஸன்யாஸம் பெற்றுக்கொள்ளலாம். ஆகையால் வைராக்யத்தை அனு சரித்து ஆச்ரம ஸமுச்சயம் விகல்பம் என்று கூறப்படுகிறது.

यमः— ये च सन्तानजा दोषाः ये च स्युः कर्मसंभवाः ।
सन्न्यासस्तान् दहेत् सर्वांस्तुषाग्निरिव कांचनमिति ॥

எமன் :— வம்சங்களினால் உண்டான தோஷம், புண்ய பாப கர்மாக்களினால் ஏற்பட்ட தோஷம் இவைகளை ஸன்யா ஸம், உமி-நெருப்பு தங்கத்தைச் சுத்தம் செய்வதுபோல் ஜீவனுடைய சகல பாபங்களையும் தஹிக்கும், பஸ்பமாகச் செய்துவிடும்.

व्यासः— द्वेरूपे वासुदेवस्य चरं चारमेव च ।
चरं सन्न्यासिनां रूपं अचलं प्रतिमादिकम् ॥

வ்யாஸர் :— பகவான் வாஸுதேவனுக்கு ஒரு ரூபம் ஸன்யாஸி, மற்றொன்று ப்ரதிமா ரூபம் : ஸஞ்சரிப்பது ஸன்யாஸ ரூபம், ஸ்திரமாக இருப்பது பிரதிமா ரூபம், என்று இரண்டு ரூபங்கள்.

दक्षः— त्रिंशत्परांस्त्रिंशदपरान् त्रिंशच्चपरतः परान् ।
सद्यस्सन्यसनादेव नरकात्त्रायते पितॄन् ॥

தக்ஷன் :— ஸன்யாஸம் பெற்றுக்கொண்டவன் தனக்கு
முன்பு உள்ள 30 தலைமுறைகளில் உள்ள பித்ருக்கள், பின்பு
உள்ள 30 தலைமுறைகளில் உள்ள பித்ருக்கள், அதற்கு பின்பு
முன்பு உள்ள பித்ருக்கள் ஆக ஸகல பித்ருக்களையும் ஸன்யா
ஸம் வாங்கிக் கொண்டமாத்ரத்தாலே நரகத்திலிருந்து
காப்பாற்றுகிறான்.

आतुराणां च सन्यासे न विधिर्नैव च क्रिया ।
प्रैषमात्रं समुच्चार्य सन्यासं तत्र पूरयेत् ॥

ஆதுரனாக இருந்தால் மனதினால் வாக்கினால் ப்ரை
ஷோச்சாரணம் செய்து ஸன்யாஸம் பெற்றுக் கொள்ள
லாம். இது ஆபத்ஸன்யாஸம். அதாவது ஆதுரன் வ்யாதி
யினால் பீடிக்கப்பட்டவன், அங்கங்களான நாந்திச்ராத்தம்,
பூர்ணாஹுதி, ஸக்துப்ராசனம் முதலிய கார்யங்களை செய்ய
முடியாதவன் ஆபத் ஸன்யாஸத்துக்கு அதிகாரியாவான்.
க்ரம ஸன்யாஸம் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும்.

संवर्तः— चतुर्विधा भिक्षवस्तु कुटीचकबहूदकौ ।
हंसः परमहंसश्च यो यः पश्चात् स उत्तमः ।

ஸம்வர்த்தர் :— பிக்ஷுக்கள் ஸன்யாஸிகள், குடீசகர்,
பஹூதகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் என்று நான்கு பிரி
வினர்களாவார்கள். இவர்களில் பின் உள்ளவர்கள் உயர்ந்த
வர்கள்.

बोधायनः— कुटीचकस्तु सन्यस्य स्वीयवेश्मनि नित्यशः ।
भिक्षामादाय भुंजीत स्वबन्धूनां गृहेऽथवा ।
शिखायज्ञोपवीती स्यात् त्रिदण्डी सकमण्डलुः ॥
सावित्रीं सहस्रकृत्व आवर्तयेत् शतकृत्वोऽपरिमितकृत्वो वा ॥

போதாயனர் :—குடீசகர் என்ற ஸன்யாஸீ ஸன்யா ஸம் செய்துகொண்டு தன் வீட்டிலேயே அல்லது பந்துக்கள் வீட்டிலோ பிக்ஷை எடுத்துச் சாப்பிடவேண்டும். சிகை, யக்ஞோபவீதம் ஒன்று, மூன்று தண்டங்கள், தீர்த்த பாத்ரம் இவைகளை தரிக்கவேண்டும். காயத்ரீ ஜபம் அதிகமாகச் செய்யவேண்டும்.

जपध्यानेतिहासैश्च दिनशेषं नयेद्बुधः ।
हृत्पुण्डरीकनिलयं ध्यायेदात्मानं अव्ययम् ॥

அனுஷ்டான காலம் போக பாக்கி காலங்களில் ஜபம் த்யானம், பாகவதம் ராமாயணம் முதலிய க்ரந்த ச்ரவணுதிகள் செய்யவேண்டும். ஹ்ருதய கமலத்தில் பகவானை த்யானம் செய்யவேண்டும்.

बहूदकस्तु सन्न्यस्य बन्धुपुत्रादिवर्जितः ।
सप्तागारं चरेद्भैक्षं एकान्नं च परित्यजेत् ॥

பஹூதகர் என்ற ஸன்யாஸீ பந்து புத்ராதிகளை தியாகம் செய்து வேறு க்ருஹங்களில் பிக்ஷை எடுத்து புஜிக்க வேண்டும். ஏழு க்ருஹங்களுக்கு மேல் பிக்ஷை எடுக்கக் கூடாது, இரண்டு மூன்று க்ருஹங்களில் போதுமானது கிடைத்தால் மேல்கொண்டு எடுக்கக்கூடாது. பாக்கி விஷயங்களுக்கு குடீசகர் மாதிரிதான் அனுஷ்டானம் என்று அறியவும்.

विष्णुः— यज्ञोपवीतं दण्डं च वस्त्रं जन्तु निवारणम् ।
तावान् परिग्रहः प्रोक्तः नान्यो हंस परिग्रहः ॥

விஷ்ணு :—ஹம்ஸர் என்ற ஸன்யாஸீ ஏக தண்டம், கஷாய வஸ்திரம், அஹிம்ஸை உத்தேசித்து பூமியில் உள்ள ஜந்துக்களை நகர்த்த சௌகரியமுள்ள வஸ்திரம், இவ்வளவு தான் தரிக்கவேண்டிய ஸாமான்கள். ஹம்ஸனுக்கு சிகை கிடையாது என்று தோன்றுகிறது. பாக்கிவிஷயங்கள் முன்பு மாதிரியாக அறியவும்.

अत्रिः— कौपीनयुगलं कन्थादण्डएकः परिग्रहः । यतेः परमहंसस्य नाधिकन्तु विधीयते । परः परमहंसस्तु तुर्याख्यः श्रुति शासनात् । दान्तः शान्तः सत्वसमः प्रणवाभ्यास तत्परः ॥ श्रवणादिरतश्शुद्धः निदिध्यासनतत्परः ॥ ब्रह्मभावेन संपूर्य-ब्रह्माण्डमखिलं स्थितः । आत्मतृप्तश्चात्मरतिः स मलोष्टाश्म कांचनः ॥ तत्वं पदैक बोधाच्च विष्णु रूपः स्वयंसदा ॥ निवसेत्परमहंसस्तुयत्र क्वापि कथंचन ॥

அத்ரி :—பரமஹம்ஸ ஸன்யாஸியானவர் இரண்டு கௌபீனம், மேலே போர்த்திக் கொள்ள ஒரு கந்தை, ஒரு தண்டம் இவைகளைத் தரிக்கவேண்டும். தீர்த்தப் பாத்ரம் அவசியம் தரிக்கவேண்டும். மனது முதலிய இந்திரியங்களை அடக்கி ப்ரம்மத்யானம் செய்யவேண்டும். எப்பொழுதும் ப்ரவண ஜபம் செய்யவேண்டும். வேதாந்தச்ரவணம்-மனனம், நிதித்யாஸம் செய்யவேண்டும். ஆத்மா ஏக: என்ற எண்ணத்துடன் ஸ்வயம் விஷ்ணு ரூபமாக இருக்கவேண்டும். எங்கு வேண்டுமானாலும் சுத்தமான இடத்தில் வஸிக்கலாம்.

पराशरः— कामं क्रोधं तथा दर्पंलोभमोहादयश्च येतास्तु दोषान् परित्यज्य प्रव्राण्णिर्ममो भवेत् ॥

பராசரர் :—காமம், க்ரோதம், தர்ப்பம், பேராசை, மூட்த்தனம் இவைகளை விட்டு அஹங்கார மமகாரமில்லாதவராக இருக்கவேண்டும்.

भविष्यद्पुराणे— दण्डं तु वैणवं सौम्यं सत्वचं समपर्वकम् । पुण्य-स्थानसमुत्पन्नं नानाकल्माप शोभितम् ॥ अदग्ध महतं कीटैः पर्वग्रन्थि विराजितम् । स्वयं भूतंतु-मेदिन्यां शाखावर्जमृजुं शुभम् । नासादघ्न शिरो-घस्तुभ्रुवोर्वा बिभृयादिति ॥

தண்டம் மூங்கிலினுடையது; அழகாயும், தோல் உள்ளதும், இரட்டைப்படை கணு உள்ளதும், புண்ய ஸ்தலத்தில் உண்டானதும், அனேக கருப்புப் புள்ளி உள்ளதும், (இது முற்றியது என்பதற்கு அடையாளம்) கிளைகள் இல்லாததும், நேராக இருப்பதும். பூமியிலிருந்து மூளைத்திருப்பதும், மூக்கு வரையில், புருவம் வரையில் உள்ள உயரமுள்ளதுமான இப்படி லக்ஷணமுள்ள தண்டத்தை முறைப்படி தரிக்க வேண்டும்.

याज्ञवल्यः— अध्यात्मपुस्तकं विप्रैर्दत्तंगृह्णीत भिक्षुकः ॥

யாஞ்யவல்தியர் :— வேதாந்த புஸ்தகம் அபேக்ஷை இருந்தால் க்ருஹஸ்தர்களிடமிருந்து க்ரஹிக்கலாம்.

एकाकी निस्पृहस्तिष्ठन् न केनापि सहावसेत् ।
दद्यान्नारायणेत्येवं प्रति वाक्यं सदायतिः ॥

எப்பொழுதும் தனியாக இருக்கவேண்டும். கேட்டால் உசிதமான பதில் நாராயண சப்தத்துடன் இருக்கவேண்டும். அனுவசியப் பேச்சு கூடாது.

ध्यानं शौचं तथाभिक्षा नित्यमेकान्तं शीलता ।
भिक्षोश्चत्वारि कर्माणि पंचमं नोपपद्यते ॥

த்யானம், சௌசம், பிக்ஷை, எப்பொழுதும் தனிமையாக இருப்பது, இந்த நான்கு கார்யங்களை தவிர ஐந்தாவது காரியம் பரமஹம்ஸாளுக்கு கிடையாது என்பது கருத்து.

स्वयं पतित तुलसी पत्राद्यैः स्वयमाहृतैः ।
पूजयेन्मोक्षदं विष्णुं ज्ञानदं च महेश्वरम् ॥

பரமஹம்ஸாள் ஹரிஹர பூஜை செய்யவேண்டும், ஆனால் செடியிலிருந்து துளசி முதலியவைகளை கிள்ளி எடுக்கக்கூடாது. கீழே விழுந்த பத்ர புஷ்பங்களை கொண்டு பூஜிக்கவேண்டும். மோக்ஷம் விஷ்ணு கொடுப்பார், ஞானம் பரமேச்வரன் கொடுப்பார்.

कण्वः— एकरात्रं वसेत् ग्रामे नगरे पंचरात्रकम् ।
वर्षाभ्योऽन्यत्र वर्षासु मासांश्च चतुरो वसेत् ॥

கன்வர் :—ஒரு நாள் கிராமத்திலும், ஐந்து நாள் நகரத்திலும், வர்ஷா காலத்தில் நான்கு மாதம் சௌகர்ய மான ஒரே இடத்திலும் வஸிக்கவேண்டும்.

व्यासः— मोक्षाश्रमं यश्चरते यथोक्तं शुचिस्सुसंकल्पितबुद्धियुक्तः ।
अनिन्धनं ज्योतिरिव प्रशान्तं सब्रह्मभावं व्रजते द्विजातिः॥

வ்யாஸர் :—எந்த ப்ராம்மணர் முறைப்படி மோக்ஷாச் ரமமான ஸந்யாஸத்தை க்ரஹித்துக் கொண்டு த்ருட புத்தி யுடன் அனுஷ்டிக்கிருரோ, அவர் சாந்தமான அக்னிபோல் ப்ரம்ம ஸ்வரூபத்தை அடைகிருர்.

विष्णुः— वृद्धानामातुराणां च भिक्षूणां संगवर्जिनाम् ।
ग्रामेवाथ पुरे वापि वासो नैकत्र दुष्यति ॥

விஷ்ணு :—வயதானவர்கள், உடம்பு முடியாதவர்கள், இந்த ஸன்யாஸிகள் கால தேசத்தை அனுசரித்து நகரத் திலோ அல்லது சௌகரியமான கிராமத்திலோ ஒரே இடத் தில் வஸிக்கலாம். தோஷமில்லை என்று கருத்து. இவர்களை க்ருஹஸ்தர்கள் விசேஷமாக சுச்ருஷை செய்து பிக்ஷை முத லியவைகளினுல் ஆராதிக்கவேண்டும்.

तस्मादात्मज्ञं ह्यर्चये भूतिकामः ।

ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவர்கள், ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை உத்தேசித்து முயற்சிப்பவர்கள் பகவத் ஸ்ரூபமாவார்கள். ஆகையால் அவர்கள் ஸங்கல்பம் செய்வது நடக்கும். ஐச்வர்யம் விரும்பும் க்ருஹஸ்தர்கள் அவர்களுக்கு பணிவிடை செய்வதால் ஸகலவிதமான க்ஷேமலாபங்களையும் அடைவார்கள்.

॥ इति संक्षेपधर्मशास्त्रे वर्णाश्रमधर्म प्रकरणं समाप्तम् ॥

—*—

॥ श्रीहरिः ॥

संक्षेपधर्मशास्त्रे आह्निक प्रकरणम्

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரத்தில் ஆஹ்னிகப்ரகரணம்

வர்ணாச்ரம தர்மங்களைத் தெரிவித்த பிறகு ஆஹ்னிக தர்மங்களைத் தெரிவிக்கிறோம். ஆஹ்னிகம் என்றால், பகல் இரவு இந்த இரண்டு வேளைகளிலும் செய்யவேண்டிய தர்ம காரியங்கள் என்பது பொருள். அவைகள் மனு, யாக்ஞவல்க்யர் முதலிய மஹரிஷிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் அந்த தர்மங்கள் ஸம்க்ஷேபமாக தெரிவிக்கப்படுகிறது.

1. प्रबोधसमयः

விடியற்காலையில் விழித்துக்கொள்ளவேண்டிய காலம்.

मनुः— ब्राह्मे मुहूर्ते बुध्येत धर्मार्थावनुचिन्तयेत् ।
कायक्लेशांश्च तन्मूलान् वेदतत्वार्थमेवच ॥

மனு :—ப்ராம்ம முகூர்த்தத்தில் விழித்துக்கொண்டு எழுந்திருக்கவேண்டும். பிறகு, நேற்றைய தினம் என்ன தர்மங்கள் அனுஷ்டித்தோம், என்னபொருள் ந்யாயமாக ஸம்பாதித்தோம், இனி இன்றைய தினம் என்ன தர்மங்கள் செய்யவேண்டும், எப்படி தர்மமாக பொருள் ஸம்பாதிக்க வேண்டும், பொருள் ஸம்பாதிக்கும் முறையில் பிறருக்குக் கெடுதலும், தனக்கு பாபமும் ஸம்பவிக்காமல் இருக்க எப்படி நடந்து கொள்ளவேண்டும், தர்மார்த்தங்களை சேகரிக்கும்பொழுது ஏற்படக்கூடிய தேக சிரமங்களையும் சிந்தனை செய்யவேண்டும். அதனால் ச்ரமங்களை குறைத்து, தர்மங்களை அபிவிருத்தி செய்ய உபாயம் தெளிவாகப் புரியும். பிறகு வேத தத்வார்த்தமான ஸ்ரீபகவானை சிந்திக்கவேண்டும். இது முக்கியமானது.

स्मृति भास्करे— रात्रेस्तु पश्चिमे यामे मुहूर्तो ब्राह्म उच्यते ।

ராத்திரியினுடைய கடைசீ யாமத்தில் ஒரு முகூர்த்தம் ப்ராம்மம் என்பதாகும். அதாவது இரவு காலம் நான்கு யாமங்கள் கொண்டது. ஒரு யாமத்திற்கு 7½ நாழிகைகள். ஒரு யாமத்திற்கு 3¾ (மூன்றே முக்கால்) மூகூர்த்தங்கள். இந்த ரீதியில் கடைசி யாமத்தில் பின் இரண்டு முகூர்த் தங்கள், அதாவது ஸூர்யோர்தயத்திலிருந்து முன்பு இரண்டு முகூர்த்தங்கள். அதில் முதல் முகூர்த்தம் ப்ராம்மம் என் பது, இரண்டாவது முகூர்த்தம் ரௌத்ரம் என்பது. அதா வது மணிக்கணக்கில் 4½ மணிக்கு ப்ராம்ம முகூர்த்தம் என்று அறியவும்.

विष्णुः— उत्थायोत्थाय बोद्धव्यं किमद्य सुकृतं कृतम् ।
दत्तं वा दापितं वापि वाक्सत्यावापि भाषिता ॥
उत्थायोत्थाय बोद्धव्यं महद्भयमुपस्थितम् ।
मरणं व्याधिशोकानां किमद्य निपतिष्यति ॥

விஷ்ணு :—தினம்தோறும் விடியற்காலையில் எழுந்து நாம் சென்ற தினத்தில் என்ன நல்ல கார்யம் செய்தோம்; யாருக்காவது பொருள்தானம் செய்தோமா, நாம் கொடுக் காவிட்டாலும் பிறரைப் பொருள் கொடுக்கச் சொன் ஞேமா, நிஜம் என்ன பேசினேம், வயது தினம் போய்க் கொண்டிருக்கிறது, மரணம், வ்யாதி, சோக மோஹங்கள், வயது ஆக ஆக வந்துவிடுமே, அப்பொழுது நாம் என்ன செய்யப்போகிறேம் என்று நினைத்துப் பார்க்கவேண்டும்.

2. ब्राह्मे मुहूर्ते जप्यानि

ப்ராம்ம முகூர்த்தத்தில் ஜபிக்கவேண்டியவைகள்

ब्रह्मामुरारिस्त्रिपुरान्तकारिर्भानुश्शशी भूमिसुतो बुधश्च ।
गुरुश्चशुक्रश्शनि राहुकेतवः कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥
भृगुर्वसिष्ठः क्रतुरंगिराश्च मनुः पुलस्त्यः पुलहश्च गौतमः ।

रैभ्यो मरीचिश्च्यवनोऽथ दक्षः कुर्वन्तु सर्वे ममसुप्रभातम् ॥
सनत्कुमारश्च सनन्दनश्च सनातनोऽप्यासुरिसिंहलौ च ।
सप्तस्वरास्सप्तरसातलानि कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥
सप्तार्णवास्सप्तकुलाचलाश्च सप्तर्षयोद्वीपवनानिसप्त ।
भूरादिकूर्मो भुवनानि सप्त कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥
पृथ्वी सगन्धा सरसास्तथापः स्पर्शीवायुः ज्वलनं च तेजः ।
नभस्सशब्दं महता सहैव कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥
इत्थं प्रभाते परमं पवित्रं पठेत्स्मरेद्वा शृणुयाच्च तद्वत् ।
दुःस्वप्ननाशस्त्विह सुप्रभातम् भवेच्चसत्यं भगवत्प्रसादात् ॥
महाभारतमाख्यानं क्षितिं गांच सरस्वतीम् ।
ब्राह्मणान् केशवं चैव प्रातरुत्थाय कीर्तयेत् ॥
पुण्यश्लोको नलो राजा पुण्यश्लोको युधिष्ठिरः ।
पुण्यश्लोकाचवैदेही पुण्यश्लोको जनार्दनः ॥

இந்த ஸ்லோகங்களை படுக்கையை விட்டு எழுந்தவுடன் சொல்லவேண்டும். பாபங்கள்விலகும். புண்ணியம் விருத்தியடையும்.

शाण्डिल्यः— "उच्चैःस्वरेण यः प्रातः स्तोतुमिच्छेदनन्यधीः ।
वासुदेवादिनामानां नामसंकीर्तनं चरेत् ॥

சாண்டில்யர் :—விடியற்காலத்தில் உரத்த குரலில் பகவன் நாமாக்களைச் சொல்லவேண்டும். பகவானுடைய நாமாக்களை ஸங்கீர்த்தனம் செய்வதே பகவானை ஸ்தோத்ரம் செய்வதாகக் கருதப்படுகிறது.

श्रोत्रियं सुभगं गां च ह्यग्निमग्निचितं तथा ।
प्रातरुत्थाय यः पश्येदापद्भ्यस्सप्रमुच्यते ॥

காலையில் வேதாத்யயனம் செய்த ப்ராம்மணன், பாக்யசாலி, பசு, அக்னி, தீக்ஷிதர் இவர்களை தரிசனம் செய்கிறவன் ஸகல ஆபத்துகளிலிருந்தும் விடுபடுவான். ஆபத்துக்கள் வராது என்பது கருத்து.

3. शौचविधिः

சௌசம் செய்யும் முறை.

अंगिराः— उत्थायपश्चिमे यामे रात्रेराचम्यचोदकम् । अन्तर्धाय तृणैर्भूमिं शिरः प्रावृत्यवाससा । वाचं नियम्य यत्नेन ष्ठीवनोच्छ्वासवर्जितः । कुर्यान्मूत्रपुरुषेतु शुचौ देशे समाहितः ॥

அங்கீரர் :—படுக்கையைவிட்டு எழுந்தவுடன் வாயைக் கொப்பளித்து பிறகு ஆசமனம் செய்து வஸ்த்திரத்தினுல் சிரஸை மூடிக்கொண்டு பேசாமலும், காரித்துப்பாமலும் பெருமூச்சிவிடாமலும் இருந்து கொண்டு பூஜைக்கு உபயோகமில்லாத புல்களால் பூமியை மறைத்துக்கொண்டு மல மூத்திரங்களை விஸர்ஜனம் செய்யவேண்டும். மல மூத்திர விஸர்ஜனம் செய்யவேண்டிய அவசிய காலங்களில் முன்பு செய்யும் காரியத்தை நிமித்தமாக வைத்து ஆசமனம் செய்து பிறகுதான் மல மூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டும் என்பது கருத்து. தூங்கிய பிறகு ஆசமனம் விதிப்பதால் இது விளங்குகிறது.

याज्ञवल्क्यः— दिवा सन्ध्यासु कर्णस्थ ब्रह्मसूत्रउदङ्मुखः ।
कुर्यान्मूत्रपुरीषेतु रात्रौ चेद्दक्षिणामुखः ॥

யாகஞுவல்க்யர் :—பகல், ஸந்தியாகாலம் இவைகளில் வலது காதில் பூணூலை சுற்றிக்கொண்டு வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் மல மூத்திர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

उद्धृतोदकमादाय मृत्तिकां चैव वाग्यतः । उदङ्मुखोदिवा कुर्याद्रात्रौ चेद्दक्षिणामुखः ॥ त्यागान्मूत्रपुरीषस्य पूर्वं गृहीत मृत्तिकाम् । पश्चाद् गृह्णाति यो विप्रः सचेलो जलमाविशेत् ॥

முன்பு ஜலம், மண், இவைகளை எடுத்துக்கொண்டு வாக் நியமத்துடன் பகலில் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு

முகமாகவும், மல மூத்திர விஸர்ஜனம் செய்யவும். மல மூத்ர விஸர்ஜனத்திற்குப் பிறகு ஜலம், மண் எடுத்து சுத்தி செய்து கொண்டால் உடுத்திக்கொண்ட வஸ்த்திரத்துடன் உடனே ஸ்ஞானம் செய்வது ப்ராயச்சித்தமாகும்.

अंगिराः— कृत्वा मूत्रं पुरीषं वा यदा नैत्रोदकं भवेत् स्नात्वालब्धोदकः पश्चात् सचेलंतुविशुध्यति ॥ स्नानं कृत्वाऽऽर्द्रवासास्तु विण्मूत्रेकुरुते यदि। प्राणायामत्रयं कृत्वा पुनस्स्नानेन शुद्ध्यति ॥ तैलाभ्यंगे तथा वान्तौ क्षुरकर्मणि मैथुने। अनाचम्योच्चरन् विप्रस्त्रि-रात्रमशुचिर्भवेत् ॥

அங்கீரர் :— ஜலமில்லாத இடத்தில் மூத்திர புரீஷ விஸர்ஜனம் செய்ய நேர்ந்தால் பிறகு ஜலம் கிடைத்த இடத்தில் சௌசம் செய்து ஸ்ஞானம் செய்யவும். ஈர வஸ்த்திரத்துடன் மல மூத்ர விஸர்ஜனம் செய்தால் சுத்தி செய்துகொண்டு மூன்று தடவை ப்ராணாயாமம் செய்து மறுபடியும் ஸ்ஞானம் செய்யவும். எண்ணெய் தேய்த்துக் கொண்டும், வாந்தியிலும், க்ஷவரம் செய்துகொண்டும், மைதுன காரியத்திலும், அதற்கு ஏற்பட்ட சுத்தி செய்து கொள்ளாமல் மல மூத்ர விஸர்ஜனம் செய்தால் மூன்று நாள் அசுத்தனாகிறான். கர்மாக்களுக்கு மூன்று நாள் அனர்ஹன் என்று கருத்து.

मनुः— न मूत्रं पथिकुर्वीत न भस्मनि न गोव्रजे।
वाय्वग्निं विप्रमादित्यं अपः पश्यंस्तथैव गाम् ॥
नकदाचन कुर्वीत विण्मूत्रस्य विसर्जनम्।
नफालकृष्टे न जले न चित्यां न च पर्वते ॥
न जीर्णदेवायतने न वल्मीके कदाचन।
न ससत्वेषु गर्तेषु न गच्छन्नापि च स्थितः ॥
न नदीतीरमासाद्य न च पर्वतमस्तके।

प्रत्यग्निं प्रतिसूर्यं च प्रति सोमोदकद्विजान् ॥
प्रतिगां प्रतिवातं च प्रज्ञा नश्यति मेहतः ॥

மனு :—மார்க்கம், சாம்பல், மாட்டுக் கொட்டில், வாயு, அக்னி, ப்ராம்மணன், ஸூர்யன், ஜலம், பசு, இவைகளைப் பார்த்துக்கொண்டு மல மூத்திர விஸர்ஜனம் செய்யக் கூடாது.

உழுத பூமியில், ஜலத்தில், யக்ஞபூமியில், பழுது அடைந்த கோவிலில், கரையான் புற்றில், ப்ராணி உள்ள பொந்துகளில் மல மூத்திர விஸர்ஜனம் செய்யக்கூடாது. நின்று கொண்டும், நடந்துகொண்டும் நதி தீரங்களிலும், மலையின் உச்சியிலும், மல மூத்திர விஸர்ஜனம் செய்யக் கூடாது. அக்னி, ஸூர்யன், சந்திரன், ஜலம், ப்ராம்மணன், பசு, காற்று இவைகளுடைய எதிரில் மல மூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. இந்த மாதிரி தப்புக் காரியம் செய்தால் விவேக புத்தி நசித்துவிடும், பயித்தியம் ஏற்படும் என்பதாகும்.

न सोपानत्पादुकोवा छत्रीवा नान्तरिक्षके ।
तथैवाभिमुखः स्त्रीणां गुरुब्राह्मणयोर्गवाम् ॥

செருப்பு, பாதுகை, குடை, இவைகளை தரித்துக் கொண்டும் மல மூத்திர விஸர்ஜனம் செய்யக்கூடாது. ஆகாயத்தில், ஸ்திரீ, குரு, ப்ராம்மணன் இவர்கள் எதிரிலும் மல மூத்திர விஸர்ஜனம் செய்யக்கூடாது.

मलमूत्रं त्यजेद्यस्तु विस्मृत्यैवोपवीतकम् ।
तत्सूत्रं तु परित्यज्य दद्यादन्यत्पुनर्नवम् ॥

பூணூலை காதில் சுற்றிக்கொள்ள மறந்து (உபவீதமாகப் போட்டுக்கொண்டு) மல மூத்திர விஸர்ஜனம் செய்தால் வேறு புது பூணூல் தரித்துக்கொள்ளவேண்டும்.

देवलः— मूत्रोच्चारे कृते शौचं न स्यादन्तर्जलाशये ।
अन्यत्रोद्धृत्य तत्कुर्यात् सर्वदैवसमाहितः ॥

தேவலர்:—மல மூத்திர விஸர்ஜனம் செய்தபிறகு குளம், நதி, முதலிய தீர்த்தங்களில் இறங்கி சௌசம் செய்யக்கூடாது. ஜலத்தை பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வெளியில் சுத்திசெய்துகொள்ளவேண்டும்.

मरीचिः— यस्मिन् देशे तु यत्तोयं याच यत्रैवमृत्तिका ।
सैव तत्र प्रशस्ता स्यात् तया शौचं विधीयते ॥

மரீசி:—எந்த தேசத்தில், எந்த ஜலம், எந்த மண் கிடைக்கிறதோ, அது சௌசத்திற்கு உயர்ந்தது. அவை களால் சுத்திசெய்துகொள்ளவேண்டும்.

मनुः— एका लिंगे गुदे तिस्रः तथैकस्मिन् करेदश ।
उभयोस्सप्तदातव्या मृदश्शुद्धिमभीप्सता ॥
एतच्छौचं गृहस्थानां द्विगुणं ब्रह्मचारिणाम् ।
त्रिगुणं तु वनस्थानां यतीनां तु चतुर्गुणम् ॥

மனு:—மண்ணினால் சுத்தி செய்யும் முறை சொல்லப் படுகிறது. ஒரு தடவை சிச்னத்திலும், மூன்று தடவை அபானப்ரதேசத்திலும், ம்ருத் ஜலத்தினால் சுத்தி செய்து கொள்ளவேண்டும். பிறகு இடது கையில் பத்து தடவை யும், இரண்டு கைகளுக்கும் சேர்த்து ஏழு தடவையும் மண் ஜலத்தினால் சித்தி செய்துகொள்ளவேண்டும். இந்த ஸங் கியா முறை கிருஹஸ்தனுக்குச் சொல்லப்படுகிறது. பிரம் மச்சாரிகளுக்கு இந்த சௌச கிரமத்தை இரண்டு மடங்கா கவும், வானப்ரஸ்தர்களுக்கு மூன்று மடங்காகவும், ஸந்நி யாஸிகளுக்கு நான்கு மடங்காகவும் பெருக்கிக் கொள்ள வேண்டும். பாதங்களிலும் ஏழு தடவை மண் ஜலத்தினால் சுத்தி செய்துகொள்ளவேண்டும். மனு வசனத்தில் பாத

சுத்திச் சொல்லவில்லை என்று நினைக்கவேண்டாம். வேறு மஹரிஷிகள் பாத சௌசம் சொல்லியிருக்கிறார்கள். வாய் அகலமுள்ள பாத்திரத்தில் உள்ள ஜலத்தை வலது கையினால் அந்த அந்த பிரதேசத்தில் இறைத்து இடது கையினால் சுத்தம் செய்துகொண்டு பிறகு மண்ணை இடதுகையில் வலதுகையால் போட்டுக்கொண்டு வலது கையால் இறைக்கப்பட்ட ஜலத்தினால் மண்ணுடன் சுத்திசெய்துகொள்ள வேண்டும். ஸங்கியை மேற்கொண்டு தெரிவித்தது ஞாபகத்துடன் அனுஷ்டிக்கவேண்டும்.

व्यासः — विट्छौचं प्रथमं कुर्यात् मूत्रशौचमतः परम् ।
पादशौचं ततः कुर्यात् करशौचं अतः परम् ॥

வ்யாஸர் :—முதலில் மலத்தின் சௌசத்தையும், பிறகு மூத்திர சௌசத்தையும் பிறகு பாத சௌசத்தையும், பிறகு கைகளுக்கு சௌசத்தையும் செய்துகொள்ளவேண்டும்.

आपस्तम्बः — अह्निशौचं तु यत्प्रोक्तं निश्यर्धं तत उच्यते ।
पथि पादं तु विज्ञेयं आर्तः कुर्याद्यथाबलम् ॥

ஆபஸ்தம்பர் :—மேற்கொண்டு சொன்ன சௌசம் பகலில் அனுஷ்டிக்கவேண்டும். இரவில் பாதி அனுஷ்டிக்கவும், வழியில் கால்பாகம் அனுஷ்டிக்கவும், உடம்பு முடியாதவர்கள் முடிந்த அளவில் சௌசம் அனுஷ்டிக்கவேண்டும்.

न यावदुपनीयन्ते द्विजाश्शूद्रास्तथाङ्गनाः ।
गन्धलेपक्षयकरं शौचमेषां विधीयते ॥

உபநயனம் ஆகாத பையன்கள், அப்ராம்மணர்கள், ஸ்திரீகள், இவர்களும் ம்ருத் ஜலங்களால் சுத்திசெய்துகொள்ளவேண்டும், துர்நாற்றம் போகும் வரையில். ஸங்கியா நியமம் கிடையாது. ஆகையால் ம்ருத்இல்லாமல் சுத்தி செய்துக்கொள்ள கூடாது என்று அறியவும்.

देवलः— मानुषास्थि वसां विष्ठां आर्तवं मूत्ररेतसी ।
मज्जानं शोणितं वापिपरस्य यदि संस्पृशेत् ॥
स्नात्वाऽपमृज्य लेपादीनाचम्य सशुचिर्भवेत् ।
तान्येव स्वानि संस्पृश्य पूतस्स्यात परिमार्जनात् ॥

தேவலர் :— பிறருடைய மலம் ஸ்பரிசித்த விஷயத்தில் சுத்தி சொல்லுகிருர் தேவலர். மனிதனுடைய எலும்பு, வஸை, அமேத்யம், ரஜஸ், மூத்ரம், சுக்லம், மஜ்ஜை, ரத்தம் இவைகளைத் தொட்டால் ஸ்னனம் செய்து லேபங்களை நன்ருக சுத்தம் செய்து ஆசமனம் செய்யவேண்டும். பிறகு சுத்தனுகிருன். இவைகள் தன்னுடையதாக இருந்தால் அந்த இடத்தை அலம்பி சுத்தம் செய்து ஆசமனம் செய்யவும்.

गंगातोयेन कृत्स्नेन मृद्भारैश्च नगोपमैः ।
आमृत्योराचरन् शौचं भावदुष्टो न शुद्ध्यति ॥

சாஸ்த்திரங்களில் சொல்லப்பட்ட கார்யங்களைச் செய்கிறவர்களுக்கு நம்பிக்கையுடன் மனதில் ஒரு நிம்மதி ஏற்பட வேண்டும். அது இல்லாவிட்டால் எதையும் சரியாக நடத்த முடியாது என்று சொல்லப்படுகிறது. அதாவது ஸமஸ்த கங்கா ஜலத்தினுல் மலை அளவு மண்ணை எடுத்து மரண கால பர்யந்தம் ஒருவன் சௌசம் செய்து கொண்டாலும் மனதில் நம்பிக்கை இல்லாவிடில், திருப்தி ஏற்படவில்லை என்ருல், சௌசத்தினுடைய பலமான சுத்தியை அடைய முடியாது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் மனதில் சாஸ்திரீய கார்யங்களை அனுஷ்டிக்கிறவன் நல்ல எண்ணங்களை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும்.

बोधायनः—कालोऽग्निर्मनसश्शुद्धिरुदकाद्यनुलेपनम् ।
अविज्ञातं च भूतानां षड्विधं शौचमुच्यते ॥

போதாயனர் :— காலம் அசுத்தத்தை சுத்தம் செய்யும். அதே மாதிரி அக்னியும் சுத்தம் செய்கிறது. ஜலம், மண் இவைகளும் சுத்தம் செய்கிறது. செய்த காரியங்களில் மனதினுடைய ஸந்துஷ்டியும் சுத்தம் செய்கிறது. அசுத்திக்குக் காரணம் தெரியவில்லை என்றாலும் சுத்தம் ஏற்படுகிறது. — ஆக ஆறுவிதமான சௌசம் இருக்கின்றன என்று போதாயனர் சொல்லுகிறார்.

शौचे यत्नःसदाकार्यः शौचमूलोद्विजस्स्मृतः ।
शौचाचारविहीनस्य समस्तानिष्फलाः क्रियाः ॥

ஆகையால் எப்பொழுதும் சௌசத்தில் விசேஷ முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். சௌசத்தினால்தான் ப்ராம் மணனுக்குப் பெருமை. சௌசம், ஆசாரம், இவைகள் இல்லாதவனுடைய கார்யங்கள் எதிர்பார்த்தப் பலனைக் கொடுக்காது என்பது கருத்து.

4. गण्डूष विधिः

வாய்க் கொப்பளித்தலின் முறை.

पराशरः— कृत्वाऽथ शौचं प्रक्षाल्य पादौहस्तौ च मृज्जलैः ।
निबद्धशिखकच्छस्तु गण्डूषाचमनं चरेत् ॥

பராசரர் :— சௌசம் செய்தபிறகு, பாதங்கள் கைகள் இவைகளை சொன்ன ஸங்கியைக் கொண்டு மண், ஜலம், இவைகளால் அலம்பி சிகை, கச்சம் இவைகளைக் கட்டிக் கொண்டு பிறகு வாயை கொப்பளித்து ஆசமனம் செய்ய வேண்டும்.

व्यासः— विप्रस्यदक्षिणेभागे देवास्तिष्ठन्ति नित्यशः ।
आसीन एव गण्डूषान् वामभागे विसर्जयेत् ॥

வ்யாஸர் :— ப்ராம்மணனுடைய வலது பக்கத்தில் தேவதைகள் இருக்கிறார்கள். ஆகையால் உட்கார்ந்து கொண்டு இடது பக்கமாக வாய் கொப்பளிக்க வேண்டும்.

अपां द्वादशगण्डूषान् पुरीषोत्सर्जने द्विजः ।
मूत्रेतु चतुरःकुर्यात् भोजनान्ते तु षोडश ॥

மல விஸர்ஜன காலத்தில் 12 தடவை வாய்கொப்புளிக்கவேண்டும். மூத்திர விஸர்ஜனத்தில் 4 தடவையும், போஜனம் செய்த பிறகு 16 தடவையும் வாய் கொப்பளிக்க வேண்டும்.

5. आचमनविधिः

ஆசமனம் செய்யும் முறை.

व्यासः— प्रक्षाल्य पादौ हस्तौ च मुखमद्भिस्समाहितः ।
दक्षिणं बाहुमुद्धृत्य कृत्वा जान्वन्तरेकरौ ॥
आचम्य प्राङ्मुखः पश्चाद्दन्त धावनमारभेत् ॥

வ்யாஸர் :—கை கால்களை அலம்பிக்கொண்டு, முகத்தை அலம்பிக்கொண்டு, கவனத்துடன் உபவீதியாக இருந்து கொண்டு இரண்டு கைகளையும் முழங்கால் நடுவில் வைத்து ஆசமனம் செய்யவும். பிறகு தந்ததாவனம் (பல் துலக்குவதை) ஆரம்பிக்க வேண்டும்.

दक्षिणं तु करं कृत्वा गोकर्णाकृतिवत् पुनः ।
त्रिःपिबेद्दक्षिणेनांबु द्विरास्यं परिमार्जयेत् ॥

வலது கையை பசுவின் காதுபோல் செய்து அதனால் மூன்று தடவை ஜலம் சாப்பிடவும், பிறகு இரண்டு தரம் வாயை துடைத்துக்கொள்ளவும்.

संहतांगुलिना तोयं गृहीत्वा पाणिना द्विजः ।
मुक्त्वाऽङ्गुष्ठकनिष्ठेतु शेषेणाचमनं चरेत् ॥

எல்லா விரல்களையும் சேர்த்துக்கொண்டு கையினால் ஜலம் எடுத்துக்கொண்டு பிறகு சுண்டு விரலையும், கட்டை விரலையும் நீக்கி பாக்கி உள்ள ஜலத்தைச் சாப்பிடவும். இது ஆசமன முறை என்று சொல்லப்படுகிறது.

माषमज्जनमात्रास्तु संगृह्य त्रिः पिबेदपः ।

உளுந்து முழுகும் அளவுள்ள ஜலத்தை மூன்று தடவை சாப்பிடவும்.

मनुः— अनुष्णाभिः अफेनाभिरद्भिस्तीर्थेन धर्मवित् ।
शौचेप्सुः सर्वदाऽचामेदेकान्ते प्रागुदङ्मुखः ॥

மனு :— சுத்தியுடன் இருக்கவிரும்புகிறவன் உஷ்ண மில்லாததுமான ஜலத்திஞல் ப்ராம்ம தீர்த்தத்திஞல் தனிமையில் கிழக்கு அல்லது வடக்கு முகமாக ஆசமனம் செய்யவேண்டும்.

हृद्गाभिः पूयते विप्रः कण्ठगाभिस्तु भूमिपः ।
वैश्योऽद्भिः प्राशिताभिस्तु शूद्रस्स्पृष्टाभिरन्ततः ॥

மார்பை அடையும் ஜலத்தால் ப்ராம்மணனும், கழுத்தை அடைந்த ஜலத்தால் க்ஷத்ரியனும், முகத்வாரத்தில் சென்ற ஜலத்தால் வைச்யனும், வாயினுடைய அடி பாகத்தில் ஜலஸ்பர்சத்தால் அப்ராம்மணனும், ஸ்திரீகளும் சுத்தி அடைகிறார்கள்.

मरीचिः — नबहिर्जानुराचामेत् नासनस्थो नचोत्थितः ।
भुक्त्वाऽऽसनस्थोऽप्याचामेन्नान्यकाले कदाचन ॥
नान्तरीयैकदेशस्य कृत्वाचैवोत्तरीयकं ।
आच्छन्नदक्षिणांसस्तु नाचामेत्तु कदाचन ।
विनायज्ञोपवीतेन तथाऽधौतेन वाससा ॥
मुक्त्वा शिखां वाऽऽचान्तेन कृतस्यैव पुनः क्रिया ।
याम्यप्रत्यङ्मुखत्वेन कृतमाचमनं यदि ॥
प्रायश्चित्यै तदा कुर्यात् स्नानमाचमनं क्रमात् ॥

மரீசி :— முழங்கால்களுக்கு வெளியில் கைகளை வைத்துக்கொண்டும், ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டும்,

நின்றுகொண்டும் ஆசமனம் செய்யக்கூடாது. போஜனத்திற்குப் பிறகு ஆஸனத்தில் உட்கார்ந்து ஆசமனம் செய்யலாம். மற்ற சமயத்தில் செய்யக்கூடாது. இடுப்பு வஸ்திரத்தின் ஒரு பாகத்தால் உத்திரீயமாக தரித்துக்கொண்டும் தோளை வஸ்த்திரத்திஞல் மறைத்துக்கொண்டும், ஒரு ஸமயத்திலும் ஆசமனம் செய்யக் கூடாது. யக்ஞோபவீதம் இல்லாமலும் அசுத்த வஸ்த்திரம் தரித்துக்கொண்டும், தலைமயிரை விரித்துக்கொண்டும் ஆசமனம் செய்து, வேறு கர்மா செய்தால் செய்த காரியத்தை மறுபடியும் செய்ய வேண்டும். தெற்கு திக்கு மேற்கு திக்கு இவைகளைப் பார்த்து ஆசமனம் செய்தால் ஸ்ஞனம் செய்து ஆசமனம் செய்ய வேண்டும்.

यमः— तावन्नोपस्पृशे द्विद्वान् यावद्वामेन न स्पृशेत् ।
वामे हि द्वादशादित्याः वरुणाश्च जलेश्वरः ॥

எமன் :— இடதுகையிஞல் தீர்த்தத்தை தொட்டுக்கொண்டு ஆசமனம் செய்ய வேண்டும். இடது கையில் 12 ஆதித்யர்கள், ஜலத்துக்கு அதிபதியான வருணன், இவர்கள் இருக்கிருர்கள். ஆகையால் குளம், நதி, இந்தமாதிரி தீர்த்தக்கரையில் ஆசமனம் செய்யும் பொழுது இடது கையால் தீர்த்தத்தை தொட்டுக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும் என்று கருத்து.

कांस्यपात्रे च यत्तोयं यत्तोयं ताम्रभाजने ।
सौवर्णे राजते चैव नैवा शुद्धं तु कर्हिचित् ॥

வெண்கலப் பாத்திரம், தாமிரப் பாத்திரம், வெள்ளிப் பாத்திரங்கள் இவைகளில் உள்ள தீர்த்தம் எப்பொழுதும் சுத்தமானது. ஆகையால் உத்தரணியிஞல் இடது கையால் வலதுகையில் தீர்த்தம் எடுத்து ஆசமனம் செய்ய வேண்டும். மேற்படி சொன்ன பாத்திரங்களில் இருக்கும் ஜலத்தை இந்தமாதிரி எடுக்கவேண்டும். வெறும் இடதுகையால் எடுத்து ஆசமனம் செய்தால் அது ஸுராபானம் செய்ததாகும் என்பது கருத்து.

मनुः— ब्राह्मेण विप्रस्तीर्थेन नित्यकालमुपस्पृशेत् ।
कायत्रैदशिकाभ्यां वा न पित्र्येण कदाचन ॥

மனு :— ப்ராம்மணன் ப்ரம்ம தீர்த்தத்தால் எப்பொழுதும் ஆசமனம் செய்யவேண்டும். ரிஷிதீர்த்தத்தாலும் தைவதீர்த்தத்தாலும் ஆசமனம் செய்யலாம். ஆனால் பித்ரு தீர்த்தத்தால் ஒரு சமயமும் ஆசமனம் செய்யக்கூடாது.

अंगुष्ठमूलस्य तले ब्राह्मं तीर्थं प्रचक्षते ।
कायमङ्गुलिमूलेऽग्रे दैवं पित्र्यं तयोरधः ॥

அந்த அந்த தீர்த்தங்கள் உள்ளங்கையில் எங்கு இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. கட்டைவிரலுடைய அடிபாகத்தில் ப்ராம்ம தீர்த்தம், சுண்டு விரலுடைய அடிபாகத்தில் ரிஷி தீர்த்தம், நான்கு விரல்களுடைய நுனி பாகத்தில் தேவ தீர்த்தம், ஆள் காட்டிவிரல் கட்டை விரல் இவைகளுடைய நடுபாகத்தில் பித்ரு தீர்த்தம் என்று அறியவும்.

शौनकः— प्रक्षाल्य पादौ हस्तौ च त्रिः पिबेदंबुवीक्षितम् ।
माषमग्नं तु तद्वारि हृद्गतंतुविशुध्यति ॥

சௌனகர் :— கைகால்களை அலம்பி கண்ணால் பார்த்த ஜலத்தை மூன்று தடவை சாப்பிடவும். உளுந்து மூழ்கும் அளவு தீர்த்தம் மார்பு தேசம்வரையில் அடைந்தால் சுத்தனாகிறான்.

संवृत्यांगुष्ठमूलेन द्विः प्रमृज्यात्ततोष्ठकौ ।
संहताङ्गुलिभिस्सम्यक् अवाचीनः स्पृशेन्मुखम् ॥

உதடுகளை மூடிக்கொண்டு கட்டைவிரல் அடியால் இரண்டு தடவை துடைக்க வேண்டும். பிறகு எல்லா விரல்களையும் சேர்த்து ஒருதடவை வாயைத் தொட வேண்டும்.

अंगुष्ठानामिकाभ्यां तु चक्षुषी समुपस्पृशेत् ।
अंगुष्ठेन प्रदेशिन्याघ्राणं स्पृश्यादनन्तरम् ॥
कनिष्ठिया चाङ्गुष्ठेन श्रोत्रे सम्यगुपस्पृशेत् ।
अंगुष्ठमध्यमाभ्यां तु बाहू सम्यक् स्पृशेत्ततः ॥
अंगुष्ठाग्रेण नाभिंतु हृदयं तिसृभिस्ततः ।
सर्वाभिस्तु शिरः पश्चात् एवमाचमनं चरेत् ॥

இவ்வாறு ஆசமனம் செய்து விரல்களால் இந்திரியங்களைத் தொடவேண்டும் என்று சொல்லப்படுகிறது. நாம், அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம: என்று ஆசமனம் செய்து, கேசவாதி 12 நாமாக்களுடன் விரல்களால் இந்திரியங்களைத் தொடுகிறோம். இது நம் பெரியோர்களுடைய சிஷ்டாசாரமாகும். கட்டை விரல் பவித்ர விரல் இவைகளால் இரண்டு கண்களையும், கட்டை விரல் ஆள்காட்டிவிரல் இவைகளால் இரண்டு மூக்கையும், சுண்டுவிரல் கட்டைவிரல்களால் இரண்டு காதுகளையும், கட்டைவிரல் நடுவிரல்களால் இரண்டு பாஹுவையும், கட்டைவிரல் நுனியால் தொப்புளையும், மூன்று விரல்களால் மார்பையும், எல்லா விரல்களால் சிரஸ்ஸையும் தொடவும். இவைகளில் கொஞ்சம் வித்தியாசம் காணப்படலாம். அவர்களுடைய குலாசாரத்தின்படி அனுஷ்டிக்கவும்.

जानोरूर्ध्वं जले तिष्ठन्नाचान्तः शुचितामियात् ।
अधस्ताच्छतकृत्वोऽपि समा चान्तो न शुध्यति ॥

ஜலமத்யத்தில் நின்றுகொண்டு ஆசமனம் செய்யலாம். ஆனால் முழங்கால் அளவுக்கு குறைவாக உள்ள ஜலத்தில் நின்று கொண்டு ஆசமனம் செய்யக்கூடாது. தரையில் நின்றுகொண்டு ஒரு சமயமும் ஆசமனம் செய்யக்கூடாது.

संवर्तः— स्नात्वा पीत्वा तथा भुक्त्वा क्षुप्त्वा सुप्त्वा द्विजोत्तमः ।
अनेन विधिना सम्यगाचा त शुचितामियात् ॥

ஸம்வர்த்தர் :— ஸ்னானம் செய்த பிறகும், சாப்பிட்ட பிறகும், திரவப் பதார்த்தங்களைப் பருகின பிறகும், தும்மிய பிறகும், தூக்கத்திற்குப் பிறகும் முறைப்படி ஆசமனம் செய்ய வேண்டும்.

आचम्य प्रयतो नित्यं जपेदशुचिदर्शने ।

ஜப காலங்களில் அசுத்தத்தைப் பார்த்தால் ஆசமனம் செய்து பிறகு ஜபிக்கவும்.

पराशरः— प्रभासादीनि तीर्थानि गंगाद्यास्सरितस्तथा ।
विप्रस्य दक्षिणे कर्णे सन्तीति मनुरब्रवीत् ।
आदित्यो वरुणः सोमः वह्निर्वायुस्तथैव च
विप्रस्य दक्षिणे कर्णे नित्यं तिष्ठन्ति देवताः ॥

பராசரர் :— ப்ரபாஸாதி தீர்த்தங்கள் கங்காதிநதிகள், ஆதித்யன், வருணன், சந்திரன், அக்னி, வாயு, இவர்கள் ப்ராம்மணனுடைய வலது காதில் எப்பொழுதும் இருக்கிறார்கள் என்பது மனு, பராசரர் இவர்களுடைய அபிப்ராயம்.

सत्यामाचमनाशक्तौ अभावे सलिलस्यवा
पूर्वोक्तेषु निमित्तेषु दक्षिणं श्रवणं स्पृशेत् ॥

ஆசமனம் செய்ய முடியாவிட்டால், ஆசமன யோக்யமான ஜலம் கிடைக்காவிட்டாலும், முன்சொன்ன ஆசமன நிமித்தம் ஏற்பட்டால் வலதுகாதைத் தொடவும். அது ஆசமன ஸமானமாகும். போஜனம், ஹோமம், தானம், பக்ஷணம் தின்பது, தானம் வாங்குவது இந்த காரியங்களில் இரண்டு தடவை ஆசமனம் செய்யவும்.

मार्कण्डेयः— आम्रेक्षुखण्डताम्बूलचर्वणे सोमपानके ।
विष्ण्वंघ्रितोयपाने च नाद्यन्ता च मनं स्मृतम् ॥
विष्णुपातोद्भवं तीर्थं पीत्वा न क्षालयेत्करम् ॥

மார்கண்டேயர் :— மாம்பழம், கரும்புத்துண்டு, தாம்பூலம், ஸோம பானம், இவைகளை பக்ஷித்த பிறகு ஆசமனம் செய்யவேண்டாம். விஷ்ணு பாத தீர்த்தம் சாப்பிட்ட முன்பும், பின்பும் ஆசமனம் செய்யக்கூடாது. கையையும் அலம்பக்கூடாது.

6.- दन्तधावनविधिः—பல் துலக்கும் முறை.

अत्रिः— मुखे पर्युषिते नित्यं भवत्यप्रयतो नरः ।
तदार्द्रकाष्ठं शुष्कं वा भक्षये दन्तधावनम् ॥

அத்ரி :— பிரதி தினமும் முகம் (வாய்) பழையதாக ஆகிறது. ஆகையால் அசுத்தனாக ஆகிறான். விதிக்கப்பட்ட மரக்குச்சிகளைக் கொண்டு பல் துலக்க வேண்டும். பிறகு பல், வாய் சுத்தமாகிறது.

भरद्वाजः— प्रक्षाल्य चरणौ हस्तौ मुखं चाथ यथाविधि ।
आचम्य प्राङ्मुखः स्थित्वा दन्तधावनमाचरेत् ॥

பரத்வாஜர் :— கால்கள், கைகள், முகம், இவைகளை அலம்பிக்கொண்டு ஆசமனம் செய்து கிழக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு பல்துலக்க வேண்டும்.

आयुरित्यादिमन्त्रेण कुर्याच्छाखाभिमन्त्रणम् ।
विनाभिमन्त्रणं तूष्णीं वृथास्याद्दन्तधावनम् ॥

எந்த மரக்குச்சியினால் பல் துலக்கும் காரியம் செய்கிறோமோ அந்த மரக்குச்சியை "ஆயு:" என்ற மந்திரத்தினால் அபிமந்த்ரணம் செய்ய வேண்டும். மந்திரம் சொல்லாமல் செய்யும் தந்ததாவன காரியம் வீணாக ஆகிறது என்பது கருத்து.

ऋषिःप्रजापतिः—अनुष्टुप् छन्दः—बृहस्पतिर्देवता ॥
आयुर्बलं यशो वर्चः प्रजाःपशुवसूनि च ।
ब्रह्मप्रज्ञां च मेधां च त्वन्नो देहिवनस्पते ॥

ரிஷி சந்தஸ் தேவதையுடன் இந்த மந்திரம் சொல்லி பல் குச்சியினுல் பற்களைத் துலக்கவும்.

हारीतः— सर्वे कण्टकिनः पुण्याः क्षीरिणश्च यशस्कराः ।
अष्टाङ्गुलेन मानेन दन्तकाष्ठमिहोच्यते ॥
प्रादेशमात्रमथवा तेन दन्तान्विशोधयेत् ॥

ஹாரீதர் :— முள்ளுள்ள எல்லா மரங்களுடைய குச்சிகளும் பல் துலக்க தகுந்தவைகள், புண்யத்தைக் கொடுக்கக் கூடியவைகள். பால் உள்ளவை கீர்த்தியைக் கொடுக்கும். எட்டு அங்குல நீள முள்ளதாகவும், சுண்டு விரலின் நுனி அளவு பெருமன் உள்ளதாயும் இருக்கிற பச்சை குச்சியினுல் பல் துலக்கவேண்டும்.

खदिरश्च कदम्बश्च करंजः करजस्तथा । त्रासिनी वेणुः पृथ्वी च जम्बूर्निम्बस्तथैवच अपामार्गश्च बिल्वश्च अर्कश्चोदुम्बरस्तथा एते प्रशस्ताः कथिताः दन्तधावनकर्मणि ॥

கருங்காலி, கடம்பை, புன்கு, சாரடை, க்ளா, மூங்கில், வெண் மந்தாரை, நாவல், வேம்பு, நாயுருவி, பில்வம், எருக்கு, அத்தி, இந்த வ்ருக்ஷங்களுடைய குச்சிகள் பல் துலக்க ச்லாக்கியமானவை என்று அறியவும். அச்வத்தம், புரசு, சிம்சுபா, இந்த வ்ருக்ஷங்கள் பல் துலக்க வர்ஜிக்க வேண்டியவை. பில்வமும் பல்துலக்க உகந்தது இல்லை என்று சில மஹரிஷிகள் நிஷேதித்திருக்கிருர்கள்.

यमः— चतुर्दश्यष्टमीदर्शः पूर्णिमा संक्रमोरवेः ।
एषु स्त्री तैल मांसानि दन्तकाष्ठं च वर्जयेत् ॥

எமன் :— சதுர்தசீ, அஷ்டமீ, அமாவாஸ்யை, பூர்ணிமா, சங்கரமணம், இவைகளில் ஸ்த்ரீ ஸங்கமம், மாமிஸம், தந்த காஷ்டம் இவைகளை வர்ஜிக்கவேண்டும். மாமிஸம் க்ஷத்ரிய விஷயம் என்று அறியவும்.

श्राद्धोपवासदिवसे खादित्वा दन्तधावनम् ।
गायत्र्याश्शतसंपूतं अबु प्राश्य विनश्यति ॥

ச்ராத்தம், உபவாஸம் இந்த தினங்களில் குச்சியினுல் பல் துலக்குவது பாப காரியமாகும். தவறிச்செய்தால் 100 தடவை காயத்ரீ ஜபித்த தீர்த்தத்தைப் பருகவேண்டும். இது ப்ராயச்சித்தம் என்று அறியவும்.

तृणपर्णैः सदाकुर्यात् अमामेकादशीं विना ।
तयोरपि च कुर्वीत जम्बूप्लक्षाम्रपर्णकैः ॥
विधवा कन्यका ब्रह्मचारिणां नास्यशोधनम् ॥

புல், இலை இவைகளால் அமாவாஸ்யை, ஏகாதசீ திதிகள் தவிர எந்த நாளும் பல்துலக்கலாம். நாவல், இச்சி, மாவிலை, இவைகளுடைய இலைகளால் என்றைக்கும் பல் துலக்கலாம். இவைகளில் மாவிலை பல் துலக்க ச்லாக்கியமானது. விதவை, ப்ரம்மசாரி, கன்னிகை ஒரு நாளும் குச்சியினுல் பல் துலக்குவதுகூடாது.

अंगुल्या धावयेत् दन्तान् वर्जयेत्तु प्रदेशिनीम् ।
मध्यमानामिकाङ्गुष्ठैर्दन्तधावोभवत्यपि ॥

பல் துலக்கும் சூர்ணங்களைக் கொண்டு ஆள்காட்டி விரலைத் தவிர்த்து மற்ற நடுவிரல், பவித்ரவிரல் கட்டை விரல் இவைகளால் தந்ததாவனம் செய்யவும்.

7. स्नानविधिः—ஸ்னானம் செய்யும் முறை.

व्यासः— प्रातः काले तु संप्राप्ते कृत्वाचावश्यकं बुधः ।
स्नायान्नदीषु शुद्धासु शौचं कृत्वा यथाविधि ॥

வ்யாஸர் :— ப்ராத: காலம் வந்தவுடன் எழுந்து, அவசியம் செய்யவேண்டிய சரீரசுத்தி, தந்ததாவனம்,

இவைகளைச் செய்து கொண்டு மஹா நதிகளில் முறைப்படி ஸ்நானம் செய்ய வேண்டும்.

सत्यव्रतः— बल रूपं यशो धर्मं ज्ञानमायुस्सुखं धृतिम् ।
आरोग्यं परमाप्नोति सम्यक् स्नानेनमानवः ॥

ஸத்யவ்ரதர் :— மனிதன் ஸ்நானம் செய்வதால் பலம், அழகு, புகழ், தர்மம், ஞானம், சுகம், தைரியம், உயர்ந்த ஆரோக்கியம் இவைகளை அடைகிறான்.

अत्रिः— अस्नाताशी मलं भुंक्ते ह्यजपः पूयशोणितम् ।
अहुताशी क्रिमिं भुंक्ते ह्यदाताविषमश्नुते ॥

அத்ரி :— ஸ்நானம் செய்யாமலும், ஜபம் செய்யாமலும், ஹோமம் செய்யாமலும், தானம் கொடுக்காமலும், சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிட்டால் சாப்பிட்ட பதார்த்தம் மலத்திற்கும், சீ ரக்தத்திற்கும், புழுவுக்கும், விஷத்திற்கும் சமமாகும் என்பது கருத்து.

स्नानमूलाः क्रियाः सर्वाः श्रुतिस्मृत्युदितानृणाम् ।
अस्नातस्तु पुमान्नार्हः जपहोमादिकर्मसु ॥

வேத தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஸகல காரியங்களும் மனுஷ்யர்களுக்கு ஸ்நானம் செய்தபிறகு அனுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஸ்நானம் செய்யாதவன் ஜபம், ஹோமம் முதலிய எந்த கர்மாக்களுக்கும் தகுதியுள்ளவனாகமாட்டான் என்பது கருத்து.

प्रातर्मध्याह्नयोः स्नानं वानप्रस्थगृहस्थयोः ।
यतेस्त्रिषवणं स्नानं सकृच्च ब्रह्मचारिणाम् ॥

ப்ராதः காலத்திலும், மத்யான்ஹத்திலும் ஆக இரண்டு காலத்திலும் க்ருஹஸ்தன் வநஸ்தன் இரண்டு ஆச்ரமிகளும்

ஸ்னனம் செய்யவேண்டும். ஸந்நியாசிகள் ப்ராத: காலம், மத்யானிஹம், ஸாயங்காலம் ஆக மூன்று காலங்களிலும் ஸ்னனம் செய்யவேண்டும். ப்ரம்மசாரி காலையில் மட்டும் ஒருவேளை ஸ்னனம் செய்ய வேண்டும்.

सर्वेपिवा सकृत् कुर्युः अशक्तौ चोदकं विना ।
सामर्थ्येचाम्बु सद्भावे यथा शास्त्रंहि तद् भवेत् ॥
स्वानं च सर्ववर्णानां कार्यं शौचपुरस्सरम् ॥

எல்லா ஆச்ரமிகளும் உடம்பு அசௌகரியமாக இருந்தால் ஒரு தரம் ஸ்னனம் செய்யலாம். போதுமான ஜலம் இல்லாவிட்டாலும் ஒரு தரம் ஸ்னனம் செய்யலாம். உடம்பு சௌகரியமாக இருந்து ஜல சௌகரியமிருந்து சோம்பேறித்தனம்காரணமாக ஸ்னனம் செய்யாமல் இருக்கக்கூடாது. ஸ்னனம் ப்ராமணர்கள் அப்ராம்மணர்கள் எல்லோருக்கும் விஹிதமானது என்று அறியவும்.

शौनकः— जलमध्येस्थितो विप्रः शुद्धभावो हरिं स्मरेत् ।
स्नात्वाऽऽचान्तो वारिमग्नः त्रिःपठेदघमर्षणम् ॥

சௌனகர் :— ஜல மத்யத்தில் நின்றுகொண்டு ப்ராம்மணன் மனதில் வேறு எண்ணம் இல்லாமல் ஹரியை ஸ்மரித்து ஸ்னனம் செய்து ஆசமனம் செய்து ஜலத்தில் முழுகிக்கொண்டு மூன்று தரம் அகமர்ஷன ஸூக்தம் சொல்லவேண்டும்.

दक्षः— ध्यायेन्नारायणं देवं स्नानादिषु च कर्मसु ।
ब्रह्मलोकमवाप्नोति नचेहाजायते पुनः ॥

தக்ஷன் :— ஸ்னனம் முதலிய ஸகல காரியங்களிலும் நாராயணனை அவசியம் தியானம் செய்ய வேண்டும். அதனால் கர்ம பந்தம் விலகி ப்ரம்மலோகத்தை அடைகிறான். மறுபடியும் இந்த லோகத்தில் பிறக்கமாட்டான்.

संकल्पः सूक्तपठनं मार्जनं चाघमर्षणम् ।
देवता तर्पणं चेति स्नानं पंचाङ्गमुच्यते ॥

ஸங்கல்பம், வருணஸூக்தம் சொல்வது, மந்திரத்துடன், தீர்த்தத்தைப்ரோக்ஷித்துக் கொள்வது, அகமர்ஷன ஸூக்தம் சொல்வது, தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்வது என்று ஸ்னானமானது ஐந்து அங்கத்துடன் கூடியதாகும்.

अप्रवाहोदकस्नानं विप्रपादावनेजनम् ।
गायत्रीजपमर्घ्यं च आदित्याभिमुखश्चरेत् ॥

குளங்களில் ஸ்னானம், ப்ராம்மணனுடைய காலை அலம்புவது, காயத்ரீ ஜபம், அர்க்யம் இவைகள் ஸூரிய னுக்கு எதிர் முகமாகச் செய்ய வேண்டும்.

स्रोतसोऽभिमुखस्स्नायान्मार्जने चाघमर्षणे । अन्यत्रार्कमुखो रात्रौ प्रागुदङ्मुख एववा सध्यामुखस्तु सन्ध्यायां देवे देवोन्मुखस्तथा ॥

நதிகளில் ஸ்னானம் செய்யும்பொழுது ப்ரவாஹத்திற்கு எதிர் முகமாக ஸ்னானம், மார்ஜனம், அகமர்ஷணம், இவைகள் செய்யவேண்டும். மற்ற இடங்களில் ஸூர்ய னுக்கு எதிரில் ஸ்னனம செய்யவேண்டும். ராத்திரியில் கிழக்கு முகமாகவோ அல்லது வடக்கு முகமாகவோ ஸ்னா னம் செய்யவேண்டும். தேவதைகளுக்கு எதிரில் உள்ள குளங்களில் தீர்த்தங்களில் தேவதைக்கு எதிர்முகமாக ஸ்னானம் செய்யவேண்டும்.

शिखां बध्वाऽचम्य तटं प्रक्षाल्य दर्भान्निधाय दर्भपाणिः जलं नत्वा प्रयतांजलिः प्राङ्मुखोऽवगाह्य कक्षादि निमृज्य स्नात्वा द्विराचम्य दर्भपाणिरापो हिष्ठाद्यैः अब्दैवतैः मार्जनं कृत्वाऽऽघमर्षणं कुर्यात् । पुनः स्नात्वा द्विराचम्यतर्पणं कुर्यात् ॥

ஸ்ஞானம் செய்யும் முறை சொல்லப்படுகிறது. குடுமியை முடிந்துகொண்டு ஆசமனம் செய்து கரையை அலம்பி தர்ப்பத்தை வைத்துவிட்டு பவித்ரம் தரித்து ஸங்கல்பம் செய்து, அஞ்சலி செய்து வருணஸூக்தம் முதலியவையால் ஜல தேவதையை நமஸ்கரித்துப் பிறகு ஸஞானம் செய்யவேண்டும். பிறகு கக்ஷம் முதலியவைகளைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் ஸ்ஞானம் செய்து இரண்டு தரம் ஆசமனம் செய்து 'ஆபோஹிஷ்டா' என்ற மந்திரத்தினுல் மார்ஜனம் செய்துகொண்டு அகமர்ஷணம் ஜபித்து மறுபடியும் ஸ்ஞானம் செய்து இரண்டு தரம் ஆசமனம் செய்து தர்ப்பனம் செய்யவேண்டும். இவைகள் சிஷ்டர்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

உடம்பு சரியாக இல்லாதவன் வென்னீரில் ஸ்ஞானம் செய்யவும்.

स्कन्दः — उदयात्प्राक् चतस्रस्तु नाडिका अरुणोदयः ।
तत्र स्नानं प्रशंसन्ति सहि पुण्यतमः स्मृतः ॥

ஸ்கந்தர்:—உதயத்திற்கு முன்பு நான்கு நாழிகைகள் அருணோதய காலமாகும். அப்பொழுது ஸ்ஞானம் செய்வது ச்லாக்கியமானது. அதாவது 4½மணி அளவில் விடியற்காலையில் ஸ்ஞானம் செய்யவேண்டும் என்பது கருத்து.

नित्यं नैमित्तिकं काम्यं त्रिविधं स्नानमुच्यते ।
तर्पणंतु भवेत्तस्याङ्गत्वेन प्रकीर्तितम् ॥

ஸ்ஞானமானது நித்யஸ்ஞானம், நைமித்திகம் ஸ்ஞானம், காம்யம் ஸ்ஞானம், என்று மூன்றுவிதமானது. அவைகளிலும் தர்ப்பணம் முதலியவைகள் அவசியம் செய்யவேண்டும். க்ஷவரம் செய்துகொண்டு ஸ்ஞானம் செய்வது நைமித்திகம் ஸ்ஞானமாகும். அதேமாதிரி தீட்டு ஸம்பவித்தால் ஸ்ஞானம் நைமித்திகம் ஸ்ஞானமாகும். இந்த இடங்களில் இரண்டு ஸ்ஞானங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது முதல்

ஸ்ஞானம் சாதாரணமாகச் செய்து துடைத்துக்கொண்டு மறுபடியும் செய்யும் ஸ்ஞானத்தில் தர்பணம் முதலியவைகள் அவசியம் செய்யவேண்டும்.

विष्णुः— स्नातश्चार्द्रवासा देवर्षिपितृतर्पणं अंभस्थ एव कुर्वीत ॥

விஷ்ணு:—ஸ்ஞானங்க தர்ப்பணம் ஈரவேஷ்டியுடன் ஜலத்தில் நின்றுகொண்டு செய்யவேண்டும்.

भरद्वाजः— तर्पणं देवतादिभ्यः स्वस्वतीर्थेन तर्पयेत् ।
गोशृङ्गमात्रमुद्धृत्य तर्पणेजलमुत्सृजेत् ॥
येन तीर्थेन गृह्णीयात्तेन दद्याज्जलांजलिम् ।
अन्यतीर्थेन गृह्णीयात् तत्तोयं रुधिरं भवेत् ॥

பரத்வாஜர்:—தேவர்கள் முதலியவர்களுக்குத் தர்ப்பணத்தை அந்த அந்த தீர்த்தத்தினுல் செய்யவேண்டும். பசுவின் கொம்பு அளவு உயர்த்தி ஜலத்தால் தர்ப்பணம் செய்யவும். தேவர்கள், பித்ருக்கள் ரிக்ஷிகள் இவர்களுக்குச் சொல்லப் பட்ட தீர்த்தத்தால் தர்ப்பணம் செய்யவேண்டும். மாற்றிச் செய்தால் ஜலம் ரக்தமாக ஆகிவிடும். தேவர்கள் முதலிய வர்களுக்குத் திருப்தியை உண்டுபண்ணுது என்பது கருத்து.

पूर्वाशाभिमुखो देवानुत्तराभिमुखस्त्वृषीन् ।
दक्षिणास्यस्तु पितॄणां जलमध्ये तु तर्पयेत् ॥

கிழக்கு முகமாக உபவீதியாக இருந்துகொண்டு தேவர் களுக்கும், வடக்கு முகமாக நிவீதியாக ரிஷிகளுக்கும், தெற்கு முகமாக ப்ராசீனுவீதியாகப் பிதுர்களுக்கும் ஜல மத்யத்தில் நின்றுகொண்டு இரண்டு கையாலும் ஜலத்தி னுல் தர்ப்பணம் செய்யவேண்டும்.

देवर्षितर्पणंकृत्वा यक्ष्माणं तर्पयेत्तटे ।
यन्मयादूषितं तोयं शरीरमलसंचयात् ॥
तद्दोषपरिहारार्थं यक्ष्माणं तर्पयाम्यहम् ।

தேவரிஷிதர்ப்பணம் செய்த பிறகு யக்ஷ்மா என்ற தேவதையை உத்தேசித்து கரையில் தர்ப்பணம் செய்யவேண்டும். நான் ஜலத்தில் ஸ்னனம் செய்ததால் என் சரீரத்தின் அழுக்கு ஜலத்தை அசுத்தமாகச் செய்தது. அந்த தோஷத்தை விலக்குவதற்காக யக்ஷ்மா என்ற தேவதையை உத்தேசித்துத் தர்ப்பணம் செய்கிறேன் என்பது மந்திரத்தின் பொருள் என்று அறியவும்.

स्नात्वाऽदूराज्जले तिष्ठेत्प्राचीनावितवान् द्विजः ।
यावत् स्रवति देहाम्बु तूर्ष्णीं भूतादि तृप्तये ॥

ப்ராம்மணன் ஸ்னனம் செய்த பிறகு, கரையில் பூணூலை இடம்போட்டுக்கொண்டு, தேஹத்தில் உள்ள ஜலம் வடியும் வரையில் மௌனமாக பிராணிகள் திருப்தியடைவதின் பொருட்டு நிற்கவேண்டும்.

सुराबिन्दुसमं चाम्भः शिखायाः पृष्ठपातितम् ।
तदेव च पुरतोवर्ति गंगाबिन्दुसमं भवेत् ॥

குடுமியின் ஜலம் பின்புறமாக விழுந்தால் கள்ளுக்கு ஸமமாகும், அந்த ஜலம் முன்புறமாக விழுந்தால் கங்கா தீர்த்தத்திற்கு ஸமமாகும். ஆகையால் முன்புறமாக குனிந்து கொண்டு நின்று ஜலத்தை பூமியில் விழச்செய்ய வேண்டும்.

चतुस्संवेष्ट्य वासोन्तं स्नातो निष्पीडयेत्स्थले ।
येकेचास्मत्कुले जाता इतिमन्त्रेण मानवः ॥

மேல் வேஷ்டியை நான்காக மடித்து ஜலத்தை வஸ்த்திரத்தின் நுனிவழியாக விழும்படி பிழியவேண்டும். மூன்றாக மடித்துப் பிழியக்கூடாது. ஜல மத்யத்தில் பிழியக்கூடாது. கரையில்தான் பிழியவேண்டும். நிவீதியாக ஜலம் பிழியவேண்டும்.

वस्त्रं चतुर्गुणीकृत्य निष्पीड्य च जलाद्बहिः ।
वाम प्रकोष्ठे निक्षिप्य द्विराचम्य विशुध्यति ॥

நாலாக மடித்த மேல் உத்தரீயத்தை கரையில் பிழிந்து பிறகு பூணூலை சரியாக உபவீதியாகப் போட்டுக்கொண்டு இடது கை மணிகட்டு பாகத்தில் வஸ்த்திரத்தை வைத்து இரண்டு ஆசமனம் செய்ய வேண்டும்.

निमज्ज्य देवर्षिपितॄन् सन्तर्प्याचम्य वाससः ।
खण्डद्वयेन क्रमशः शिरोऽङ्गं परिमार्जयेत् ॥

ஸ்னானம் செய்து, தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் இவர்களுக்குக் தர்ப்பணம் செய்து, பிறகு ஆசமனம் செய்து இரண்டு துண்டு வஸ்த்திரங்களால் சிரஸ்ஸையும், உடம்பையும் துடைத்துக்கொள்ள வேண்டும். தலைமயிரைக் கையினால் தட்டக்கூடாது.

8. स्नानभेदाः— அநேகவிதமான ஸ்னானங்கள்.

शंखः— स्नानं तु द्विविधं प्रोक्तं गौणमुख्यप्रभेदतः ॥

ஸ்னானமானது கௌணம், முக்யம் என்று இரண்டு விதமாகச் சொல்லப் படுகிறது.

दक्षः— आग्नेयं वारुणं ब्राह्मं वायव्यं दिव्यमेवच ।
मानसं पार्थिवं चैव स्वष्टमं कापिलं स्मृतम् ॥
सारस्वतं तथा प्रोक्तं नवमं स्नानमुत्तमम् ॥

தக்ஷன் :—ஆக்னேயம், வாருணம், ப்ராம்மம், வாயவ்யம், திவ்யம், மானஸம், பார்த்திவம், காபிலம், ஸாரஸ்வதம் என்று ஒன்பது விதமான ஸ்னானங்கள் சாஸ்திர ப்ரஸித்தமானவைகளாகும்.

भारद्वाजः— प्राङ्मुखश्चरणौ हस्तौ प्रक्षाल्याचम्य पूर्ववत् ।
प्राणानायम्य संकल्प्य भस्म स्नानं समाचरेत् ॥

பாரத்வாஜர் :— கை கால்களை அலம்பிக்கொண்டு கிழக்குமுகமாக ஆசமனம் செய்து ப்ராணயாமம் செய்து, ஸங்கல்பம் செய்து பஸ்மஸ்னனத்தை ஆரம்பிக்க வேண்டும்.

आदाय भसितं श्वेतं अग्निहोत्र समुद्भवम् ।
ईशानेन तु मन्त्रेण स्वमूर्धनि विनिक्षिपेत् ॥

அக்னிஹோத்ரம் முதலியதிலிருந்து ஏற்பட்ட வெளுப்பான பஸ்மாவை எடுத்து ஈசான மந்திரத்தினல் சிரஸில் உத்தூளனம் செய்துகொள்ள வேண்டும்.

तत आदायतद्भस्म मुखे तत्पुरुषेणतु ।
अघोराख्येन हृदये गुह्ये वामाह्वयेन च ॥
सद्यो जाताभिधानेन भस्म पादद्वये क्षिपेत् ।
सर्वाङ्गं प्रणवेनैव मन्त्रेणोद्धूलयेत्ततः ॥
एतदाग्नेयकं स्नानं उदितं परमर्षिभिः ॥

தத் புருஷ மந்திரத்தினல் முகத்திலும், அகோர மந்திரத்தினல் ஹ்ருதயத்திலும், வாமதேவ மந்திரத்தினல் குஹ்யத்திலும், ஸத்யோஜாத மந்திரத்தினல் பாதங்களிலும், ப்ரணவத்தினல் எல்லா அங்கங்களிலும் பஸ்மத்தினல் உத்தூளனம் செய்துகொண்டு இருப்பது ஆக்னேய ஸ்னனம் என்று மஹரிஷிகள் சொல்லுகிருர்கள். இதற்கு அக்னிஹோத்ரபஸ்மா கிடைத்தால் ச்லாக்யம். ஆனல் எல்லா பஸ்மாவினலும் ஆக்னேயஸ்னனம் செய்யலாம்.

व्यासः— स्नानं अब्दैवतैर्मन्त्रैः जलेमज्जनगाहनैः ।
तर्पणं पितृदेवनां स्नानं वारुणमुच्यते ॥

வ்யாஸர் :— ஜல தேவ தாக மந்திரத்தினால் ஜலத்தில் முழுகி ஸ்னானம் செய்து, பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்து, தேவர்களுக்கும் செய்வது வாருணம் ஸ்னானம் என்று கூறப்படுகிறது.

कात्यायनः — आपोहिष्ठादिभिर्ब्राह्मं मन्त्रस्नानं हि तत्स्मृतम् ।
कुशाग्रैर्मार्जनं कुर्याद्देवतीर्थेन वा द्विजः ॥

காத்யாயனர் :— குசங்களுடைய நுனிபாகங்களால் ஆபோஹிஷ்டா முதலிய மந்திரங்களால் தேவ தீர்த்தத்தால் ப்ரோக்ஷணம் செய்து கொள்வது ப்ராம்ம ஸ்னானம் என்பதாகும். இதற்கு மந்திரஸ்னானம் என்றும் சொல்லுவார்கள்.

बृहस्पतिः— वायव्यं गोरजः प्रोक्तं अस्तंगच्छति गोपतौ ।

பிரஹஸ்பதி :— ஸூர்யன் அஸ்தமிக்கும் தருணத்தில், ஸாயங்காலத்தில் பசுமாட்டுக் குளம்பு அடிபட்டு அதிலிருந்து கிளம்பின புழுதி நம் சரீரத்தில் காற்றினால் விழுவது (அதனால் ஏற்பட்டது) வாயவ்ய ஸ்னானம் என்று சொல்லப்படுகிறது.

विद्वत्सरस्वतीप्राप्तं स्नानं सारस्वतं स्मृतम् ॥

மஹான்களுடைய வாக்கினால், உபதேசத்தால் ஏற்பட்ட ஸ்னானம் ஸாரஸ்வதம் என்று கூறப்படுகிறது.

उत्तरायणमध्येतु यदावर्षति वासवः ।
आतपेनसहस्नानं दिव्यं स्नानं तदुच्यते ॥

உத்தராயண காலத்தில் வெய்யிலோடு மழை ஏற்பட்டால் அதில் நனைந்ததினால் ஏற்படும் ஸ்னானத்திற்கு திவ்ய ஸ்னானம் என்று கூறப்படுகிறது.

चतुर्भुजं महादेवं शंखचक्रगदाधरम् ।
मनसा ध्यायते विष्णुं मानसं स्नानमुच्यते ॥

சங்குசக்ர கதாதரனையும், சதுர்புஜங்களோடு கூடினவனையும் இருக்கிற மஹா விஷ்ணுவை மனதினுல் தியானம் செய்வது மானஸ ஸ்னனம் என்று சொல்லப்படுகிறது.

शुचिदेशान्मृदं गृह्य कुर्याद् गात्रोपलेपनम् ।
मन्त्रैः पार्थिवसंयुक्तैः भौमं स्नानं तदुच्यते ॥

சுத்தமான பூமியிலிருந்து மண்ணை க்ரஹித்து மந்திரங்களினுல் சரீரத்தில் பூசிக்கொண்டு ஸ்னனம் செய்வது பார்த்திவ ஸ்னனம் என்று கூறப்படுகிறது.

9. स्नानार्हाणि जलानि - ஸ்னனத்திற்கு உகந்த ஜலங்கள்.

मनुः— नदीषु देवखातेषु तटाकेषु सरस्सु च ।
स्नानं समाचरेन्नित्यं गर्तप्रस्रवणेषु च ॥

மனு :— மனுஷ்யர்களால் வெட்டப்பட்டது தடாகம் குளம் என்பதாகும். மனுஷ்யர்களால் வெட்டப்படாதது தேவகாதம் என்பதாகும். ரிஷிகளால் ஸேவிக்கப்பட்டது ஸரஸ் என்பதாகும். ஆக நதீ, தேவகாதம், தடாகம், ஸரஸ், கர்த்தம், அறிவி இவைகளில் ஸ்னனம் செய்யலாம். கர்த்தம் என்பது வாய்க்கால் என்று பெயர். எண்ணுயிரம் வில் தண்ட தூரம் எது ஓடுகிறதோ அதற்கு நதீ என்று பெயர். அதற்குக் குறைவான தூரம் ஓடினுல் கர்த்தம் என்று பெயர்.

मार्कण्डेयः— पुराणानां नरेन्द्राणां ऋषीणां च महात्मनाम् ।
स्नानं कूपतटाकेषु देवतानां समाचरेत् ॥
भूमिष्ठमुद्धृतात्पुण्यं ततः प्रस्रवणोदकम् ।
ततोपि सारसं पुण्यं गांगं पुण्यं तु सर्वतः ॥

மார்கண்டேயர் :— முன்னோர்களான அரசர்களாலும், மஹாத்மாக்களான ரிஷிகளாலும், தேவர்களாலும் நிர்மானம் செய்யப்பட்ட கிணறு, குளங்களில் தினம்தோறும் ஸ்னானம் செய்யலாம். கிணற்றில் எடுத்துச் செய்வதைக் காட்டிலும் பூமியில் உள்ள ஜலத்தில் முழுகி ஸ்னானம் செய்வது உத்தமம். அதைக் காட்டிலும் மலை அருவி ஜலம் புண்ணியம். அதைக்காட்டிலும் ஸரஸ்ஸில் உள்ள ஜலம் புண்ணியம். அதைக்காட்டிலும் நதி ஜலம் புண்ணியம். அதைக்காட்டிலும் பெரியோர்களால் ஸேவிக்கப்பட்ட தீர்த்தம் புண்ணியமானது. எல்லாவற்றையும் காட்டிலும் கங்கா ஜலம் மஹா புண்ணியமானது.

योगयाज्ञवल्क्यः—परकीय निपानेषु यदिस्नायात्कदाचन ।
सप्तपिण्डांस्ततोद्धृत्य ततः स्नानंसमाचरेत् ॥

யோகயாக்ஞவல்க்யர் :—மற்றவர்களால் நிர்மானம் செய்யப்பட்ட குளம் முதலியவைகளில் ஸ்னானம் செய்யக் கூடாது, அப்படி செய்ய நேர்ந்தால் ஏழு மண் பிண்டங்களை குளங்களிலிருந்து கரையில் எடுத்துப்போட்டுவிட்டுப் பிறகு ஸ்னானம் செய்யவும். பிறர் கிணற்றில் ஸ்னானம் செய்ய நேர்ந்தால் மூன்று குடங்கள் ஜலத்தை கிணற்றிலிருந்து வெளியில் இறைத்துப் பிறகு ஸ்னானம் செய்யவும். தர்மத்திற்கு என்று கட்டிவிடப்பட்ட கிணறு, குளங்களில் மேற்கொண்டு சொன்ன நியமம் இல்லாமல் ஸ்னானம் செய்யலாம். பதிதர்களாலும் நாஸ்திகர்களாலும் நிர்மாணம் செய்யப்பட்ட ஜலாசயத்தில் ஸ்னானம் செய்தால் ப்ராஜாப்தயக்ருச்ரம் செய்துகொள்ளவேண்டும்.

नद्यां तु विद्यमानायां न स्नायादन्यवारिषु ॥
न स्नायादल्पतोयेतु विद्यमानेबहूदके ॥

நதி இருக்கும் பொழுது வேறு கிணறு முதலிய தீர்த்தத்தில் ஸ்னானம் செய்யக்கூடாது. பெரிய ஜலாசயம் இருக்கும்பொழுது சின்ன ஜலாசயத்தில் ஸ்னானம் செய்யக் கூடாது.

10. समुद्रस्नानम्— ஸமுத்ரஸ்னானம்.

अश्वत्थं मन्दवारे तु सागरं पर्वणिस्पृशेत् ।
अश्वत्थ सागरौ सेव्यौ न स्प्रष्टव्यौ कदाचन ॥

அச்வத்த வ்ருக்ஷத்தையும் ஸமுத்ரத்தையும் எப்பொழுதும் ஸேவிக்கவேண்டும். ஆனால் ஸமுத்ரத்தில் பர்வ காலங்களில் ஸ்னானம் செய்யலாம். சனிக்கிழமையில் அச்வத்தத்தைத் தொட்டு பூஜை செய்யலாம். மற்ற காலங்களில் இரண்டையும் தொடக்கூடாது என்பது கருத்து.

भरद्वाजः— कृष्णाङ्गारचतुर्दश्यां योऽब्धौस्नानं समाचरेत् ।
तस्य जन्म सहस्रेषु सर्वं पापं प्रणश्यति ॥

பரத்வாஜர் :—க்ருஷ்ண பக்ஷத்தில் செவ்வாய்கிழமையோடு கூடின சதுர்தசியில் ஸமுத்ர ஸ்னானம் செய்யலாம். சதுர்தசியோடு வித்தமான பர்வாவில் சதுர்தசியை விலக்கி பர்வத்தில் ஸ்னானம் செய்யலாம். அதே மாதிரி புச்ச அம்மாஸ்யையில் அமாவாஸ்யை உள்ள சமயத்தில்தான் ஸ்னானம் செய்யவேண்டும். கர்பினீபதி ஸமுத்ர ஸ்னானம் செய்யக்கூடாது.

सेतुर्नापेक्षते कालं नित्यं स्नानं प्रशस्यते ।
निषेधः कालभेदस्य सेतोरन्यत्र कर्हिचित् ॥

ராமஸேதுவில் தின்ம்தோறும் ஸமுத்திரத்தில் ஸ்னானம் செய்யலாம். பர்வாவில் ஸ்னானம் செய்யவேண்டும் என்ற சாஸ்திரம் ராமேச்வரத்தைச் தவிர மற்ற இடத்தில் ஸமுத்திர ஸ்னானம் விஷயம் என்று அறியவும்.

व्यासः— कुरुक्षेत्रं गयां गंगां प्रभासं नैमिशं तथा ।
तीर्थान्येतानि सर्वाणि स्नानकाले स्मरेद्बुधः ॥

வ்யாஸர் :—ஸ்நான காலங்களில் குருக்ஷேத்ரம், கயை, கங்கை, ப்ரபாஸம், நைமிசாரண்யம் இந்த புண்ணிய க்ஷேத்ரங்களை ஸ்மரிக்கவேண்டும். ஒரு நதியில் ஸ்நானம் செய்யும்பொழுது மற்றொரு நதியை ஸ்மரிக்கக்கூடாது. ஆனால் கங்கையை ஸ்மரிக்கவேண்டும்.

आप एव पूताः तासां वह्निर्विशोधकः ।
तस्मात्सर्वेषुकालेषु उष्णांभः पावनं स्मृतम् ॥

ஜலம் எப்பொழுதும் பவித்திரமானது. அதில் அக்னி ஸம்பந்தம் ரொம்ப விசேஷமானது. ஆகையால் வெந்நீரில் ஸ்நானம் எப்பொழுதும் செய்யத் தகுந்தது. இந்த ஸ்நானம் ஆதுரனுடைய விஷயமாகும். உடம்பு சௌகரியமாக உள்ளவன் எம்பொழுதும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதுதான் விசேஷமாகும். ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த ஜலத்தை வைத்து அதில் வெந்நீரை ஊற்றி கலந்து ஸ்நானம் செய்வது விசேஷமாகக் கருதப்படுகிறது

11. नैमित्तिकस्नानम्—நைமித்தகம் ஸ்நானம்

विष्णुः — ततोऽप्सु मग्नः त्रिरघमर्षणं तद्विष्णोः परमं पदं इति वा सावित्रीं वा युंजते मन इत्यनुवाकं वा पुरुष सूक्तं वा जपित्वा स्नात्वाऽऽर्द्रवासादेवर्षि पितृतर्पणं अंभस्थ एव कुर्यात्

விஷ்ணு :—ஸங்கல்ப்பம் முதலியதை செய்து பிறகு ஜலத்தில் ஸ்நானம் செய்து, ஜலத்தில் முழுகிக்கொண்டு மூன்று தடவை ஆகமர்ஷணம், தத்விஷ்ணோர் பரமம்பதம், காயத்ரி, யுஞ்சதேமன: புருஷ ஸூக்தம் இவைகளில்

ஏதாவது ஒன்றை ஜபித்து ஜலத்தில் இருந்துகொண்டே தேவரிஷி பித்ரு தர்ப்பணம் செய்யவும்.

मनुः— दिवाकीर्तिमुदक्यां च सूतिकां पतितं तथा ।
शवं तत्स्पृष्टिनं चैव स्पृष्ट्वा स्नानेन शुध्यति ॥

மனு :— ரஜஸ்வை, ப்ரஸவித்தவள், பதிதன் பகலில் சொல்ல தகுந்தவன், பிணம் பிணத்தைத் தொட்டவன், இவர்களைத் தொட்டவன், கட்டிக்கொண்ட வேஷ்டியுடன் உடனே ஸ்னானம் செய்ய வேண்டும்.

पराशरः— दुःस्वप्नं यदि पश्येत्तु वान्ते च क्षुरकर्मणि ।
मैथुने प्रेत धूमे च स्नानमेव विधीयते ॥

பராசரர் — துர்ஸ்ப்பனம் கண்டாலும், வாந்தி பண்ணினாலும், க்ஷவரம் செய்துகொண்டாலும், மைதுனம் செய்தாலும், தன் சரீரத்தில் ப்ரேதப் புகை பட்டாலும் உடனே ஸ்னானம் செய்யவேண்டும்.

संवर्तः— संकटे विषमे चैव दुर्गे चैव विशेषतः ।
हट्टपत्तनमार्गे च यथ संभवमिष्यते ॥
तृणकाष्ठादिघातेन कुड्येनान्तरिते तथा ।
गोवाल व्यजनेनापि स्नानं तत्र न विद्यते ॥

ஸம்வர்த்தர் :— நெருக்கமான இடத்திலும், மேடு பள்ளம் உள்ள இடத்திலும் அதிகமாகச் செல்ல முடியாத இடத்திலும் கடைத் தெருவிலும், பட்டணம் (நகரம்) இவைகளுடைய வழியிலும் முடிந்த வரையில் ஒதுங்கவும். ஏதாவது புல், கட்டை, சுவர் இந்த மறைவுள்ள இடத்தில் ஒதுங்கலாம். அல்லது மாடு வாலை வீசினால் எவ்வளவு தூரம் அகப்படுமோ அவ்வளவு ஒதுங்கினாலும் போதுமானது; ஸ்னானம் அவசியமில்லை.

आपस्तम्बः— शुनोपहतः सचेलोऽवगाहेत प्रक्षालयेद्वा तं देशं अग्निना संस्पृश्य पुनः प्रक्षाल्य पादौ चाचम्य प्रयतो भवति ॥

ஆபஸ்தம்பர் :— நாய் உடம்பில் பட்டால் ஸசேலம் ஸ்நானம் செய்யவேண்டும். அல்லது எந்த இடத்தில் பட்டதோ அந்த அங்கத்தை அக்னியில் காண்பித்து அலம்பி பிறகு கால்களை அலம்பி ஆசமனம் செய்தால் சுத்தனாகிறான். சிலர், நாய் நாபிக்கு கீழ் பிரதேசத்தில் பட்டால் அந்த இடத்தை அலம்பி ஆசமனம் செய்தால் போதும், நாபிக்கு மேல் உள்ள அங்கங்களில் நாய் பட்டால் உடனே ஸ்நானம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

न स्नायादुत्सवेऽतीते मंगल्यं विनिवर्त्य च ।
अनुव्रज्य सुहृद्बन्धून् अर्चयित्वेष्ट देवताः ।
न स्नानमाचरेद् भुक्त्वा नातुरो न महानिशि ॥

தேவதைகளுடைய உத்ஸவதர்சனம் முதலிய காரியம் செய்த பிறகும், மங்கள காரியம் செய்த பிறகும், பந்து ஸ்நேஹிதர் இவர்களை வழி அனுப்பிய பிறகும் ஸ்நானம் செய்யக்கூடாது. சாப்பிட்ட பிறகு ஸ்நானம் செய்யக் கூடாது. பாதி ராத்திரியில் ஸ்நானம் செய்யக்கூடாது.

मनुः— राहुदर्शन संक्रान्ति विवाहात्यय वृद्धिषु ।
स्नानदानादिकं कुर्यान्निशिकाम्य व्रतेषु च ॥

மனு :— க்ரஹணம், ஸங்கரமணம், விவாஹம், ஜனனம் இவைகளில் இரவிலும் ஸ்நானம், தானம் செய்யலாம். காம்ய வ்ரதங்களிலும் ராத்திரியில் ஸ்நானம், தானம் இவைகள் செய்யலாம். இவைகளைத்தவிர்த்து மற்ற சமயங்களில் ராத்ரியில் ஸ்நானம் செய்யக்கூடாது என்று அறியவும்.

मरीचिः— दिवाहृतं तु यत्तोयं गृहे यस्य न विद्यते ।
प्रज्वाल्याग्नि ततः स्नायान्नदीपुष्करणीषु च ॥

மரீசி :— ராத்திரியில் ஸ்னானம் செய்யவேண்டிய நிமித்தம் ஏற்பட்டால் பகலில் கொண்டுவந்த ஜலத்தைக் கொண்டு ஸ்னானம் செய்யலாம். அது இல்லாவிடில் அக்னி ஸாக்ஷியாக நதிகள், குளங்களில் ஸ்னானம் செய்யவும்.

महाभारते— गंगास्नानं प्रकुर्वीत ग्रहणे चन्द्रसूर्ययोः ।
महानदीषु चान्यासु स्नानं कुर्याद्यथाविधि ॥

சந்திர, ஸூரியர்களுடைய க்ரஹண புண்ய காலங்களில் கங்கைக்குச்சென்று ஸ்னானம் செய்வது ரொம்ப விசேஷம். மற்ற நதிகளிலும் ஸ்னானம் செய்யலாம்.

व्यासः— सर्वं गंगा समं तोयं सर्वे ब्रह्मसमा द्विजाः ।
सर्वं भूमिसमं दानं ग्रहणे चन्द्रसूर्ययोः ॥

வ்யாஸர் :— க்ரஹண புண்ய காலத்தில் எல்லா தீர்த்தமும் கங்கைக்குச் சமமானது. எல்லா ப்ராம்மணர்களும் பகவானுக்குச் சமமானவர்கள். எந்த தானமும் பூமி தானத்திற்குச் சமமானது என்று அறியவும்.

वृद्धवसिष्ठः— गवां कोटि प्रदानेन सम्यग्दत्तेन यत्फलम् ।
गंगास्नाने तत्फलं स्याद्राहुग्रस्ते निशाकरे ।

வஸிஷ்டர் :— கோடிக்கணக்கான பசுக்களை தானம் செய்த பலனானது ஸூரிய சந்திர க்ரஹண புண்ய காலத்தில் கங்கையில் ஸ்னான மாத்திரத்தினுல் கிடைக்கிறது.

चन्द्रसूर्यग्रहे चैव योवगाहेत जाह्नवीम् ।
सस्नातःसर्वतीर्थेषु किमर्थमटतेमहीम् ॥

சந்திர ஸூர்ய க்ரஹண புண்ய காலத்தில் கங்கா ஸ்னானம் செய்தால் சகல புண்ய தீர்த்தத்தில் ஸ்னானம் செய்த புண்யம் கிடைக்கிறது. ஆகையால் தனித்தனியாக புண்ய தீர்த்தங்களுக்கு ஸ்னானம் செய்ய பூமியைச் சுற்ற வேண்டிய தில்லை என்பது கருத்து.

शातातपः— स्नानं दानं तथा श्राद्धं अनन्तं राहुदर्शने ॥

சாதாதபர் :— க்ரஹண புண்ய காலத்தில் ஸ்னானம், தானம், பித்ருக்களை உத்தேசித்து ஹிரண்யச்ராத்தம் தர்ப்பணம், இவைகள் அவசியம் செய்யவேண்டும். செய்தவர்களுக்கு அளவு கடந்த புண்ணியம் கிடைக்கிறது. பானு வாரத்தில் ஸூர்ய க்ரஹணமும், ஸோம வாரத்தில், சந்திர க்ரஹணமும் சம்பவித்தால் இதற்கு சூடாமணி புண்ணிய காலம் என்பார்கள். ஜனன, மரணங்களுடைய ஆசௌசம் சம்பவித்தாலும் க்ரஹண காலங்களில் ஸ்னானம் செய்து தர்ப்பணம் செய்யலாம். அந்த சமயம் சுத்தி ஏற்படுகிறது என்று அறியவும்.

க்ரஹணம் என்பது தெரியும் பர்யந்தம்தான் புண்ணிய காலம். ஆகையால் முன்பும், பின்பும் புண்ணிய காலம் கிடையாது. சந்திர க்ரஹணம் ஏற்பட்டால் இரவிலும். சூரிய க்ரஹணம் ஏற்பட்டால் பகலிலும்தான், அனுஷ்டிக்க வேண்டும்.

12. संक्रमणम्—ஸங்கிராந்தி

संक्रान्त्यां यानिदत्तानि हव्यकव्यानि मानवैः ।
तानि तस्य ददात्यर्कः ससप्तजन्मसु निश्चितम् ॥

மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் ஸூரிய பகவான், ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கிற சமயம். ஸங்கர

மணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்த புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்னானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் ஸூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும் என்பது கருத்து.

देवलः— संक्रांतिसमयः सूक्ष्मः दुर्ज्ञेयः पिशितेक्षणैः ।
तद्योगादप्यधश्चोर्ध्वं त्रिंशन्नाडयः पवित्रिताः ॥

தேவலர் :— ஸங்கிராந்தி சமயம் ஸூக்ஷ்மமானது, நம்மால் அறியமுடியாதது. ஆகையால் ஸங்கரமணத்திற்கு முன்பு முப்பது, பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும் என்று அறியவும்.

अयने द्वे विषुवे द्वे चतस्रष्षडशीतयः ।
चतस्रोविष्णुपद्यश्च संक्रान्त्यो द्वादशस्मृताः ॥

இரண்டு அயனங்கள், நான்கு ஷடசீதிகள், நான்கு விஷ்ணுபதிகள், இரண்டு விஷுக்கள் ஆக பன்னிரெண்டு ஸங்கிராந்திகள் என்று அறியவும். உத்திராயணம், தக்ஷிணாயனம் என்பது மகர மாசத்திலும் கர்க்கடக மாசத்திலும் ஆக இரண்டு மாதத்திலும் வரும். மேஷ மாதத்திலும் துலா மாதத்திலும் ஆக இரண்டு மாதத்திலும் விஷு என்பது வரும். அயனத்திற்கு பிறகும், விஷுவுக்குப் பிறகும் விஷ்ணுபதி, ஷடசீதி என்பது க்ரமமாக வரும் என்று அறியவும்.

(மகரம்-உத்ராயணம், கும்பம்-விஷ்ணுபதீ, மீனம்-ஷடசீதி, மேஷம்-விஷு, ரிஷபம் விஷ்ணுபதீ, மிதுனம்-ஷடசீதி, கர்கடகம் - தக்ஷிணாயனம், சிம்மம் – விஷ்ணுபதீ, கன்னி - ஷடசீதி, துலா-விஷு, விருச்சிகம் - விஷ்ணுபதீ, தனுஸ் - ஷடசீதி). இவைகள் ஸங்கிரமணத்திற்கு நாமதேயம் என்று அறியவும்.

बृहस्पतिः— अयने विंशतिः पूर्वा मकरे विंशतिः पराः ।
वर्तमाने तुलामेषे नाड्यस्तूभयतोदश ॥

ப்ருஹஸ்பதி :— தக்ஷிணாயனத்தில் முன் இருபது நாழிகைகள் புண்ணிய காலமாகும். உத்தராயணத்தில் பின் இருபது நாழிகைகள் புண்ணிய காலமாகும் என்பது விசேஷமாகச் சொல்லப்படுகிறது. மற்ற விஷு முதலிய பத்து ஸங்கரமணங்களிலும் முன்பும், பின்பும் பத்து பத்து நாழிகைகள் புண்ணிய காலம் என்று அறியவும். விஷு முதலிய ஸங்கிரமணங்கள் இரவில் 45 நாழிகைக்கு முன்பு சம்பவித்தால் அன்று தர்ப்பணம் செய்ய வேண்டும். 45 நாழிகைக்குப் பின்பு ஸங்கிரமணம் சம்பவித்தால் மறு நாள் தர்ப்பணம் செய்யவேண்டும். ஆனால் கர்க்கட ஸங்கர மணம் தக்ஷிணாயணம் இரவில் 45 நாழிகைக்குப் பின்பு அபர ராத்திரியில் சம்பவித்தாலும் அன்றுதான் புண்ணியகாலம். அதே மாதிரி உத்தராயணம், மகரஸங்கரமணம் இரவில் முன் ராத்திரி 45 நாழிகைக்கு முன்பு சம்பவித்தாலும் மறு நாள்தான் புண்ணிய காலம், தர்ப்பணம் முதலியது செய்ய வேண்டும் என்று அறியவும்.

अयने कोटि पुण्यं च सहस्रं विषुवे फलम् ।
षडशीत्यां सहस्रंतु फलं विष्णुपदेपिच ॥

அயனம் கோடி புண்ணியம், விஷு ஆயிரம் புண்ணியம், ஷடசீதி, விஷ்ணுபதி இவ்விரண்டும் ஆயிரம் புண்ணியம் என்று ஸங்கிரமணங்களுக்குப் புகழாரம் செலுத்தப் படுகிறது.

13. रजस्वलास्नानम्—ரஜஸ்வலா ஸ்நானம்.

कात्यायनः— रजस्वला चतुर्थेह्नि स्नात्वा शुद्धिमवाप्नुयात्

காத்யாயனர் :— ரஜஸ்வலா ஸ்திரீயானவள் மூன்று நாள் ஒதுங்கியிருந்து நான்காவது தினத்தில் ஸ்நானம் செய்து பிறகு சுத்தையாகிறாள்.

संग्रहे— प्रथमेऽहनि चण्डाली द्वितीये सूतिकाभवेत् ।
तृतीयेह्नि स्वधर्मस्था चतुर्थे पतितो यथा ।
संगवान्ते चतुर्थेह्निस्नानाच्छुद्धिमवाप्नुयात् ॥
एकविंशतिधाऽऽलिप्य सर्वाङ्गं शुद्धयामृदा ।
कृत्वा स्नानशतं पश्चाच्छुचिर्भवति नान्यथा ॥
स्नानान्ते भास्करं दृष्ट्वा पुत्रं प्रार्थ्य सुमङ्गली ।
त्रिवारं प्राशयेदन्नं न चेद्दोषवती भवेत् ॥

ரஜஸ்வலா ஸ்திரீயானவள் முதல் நாளில் சண்டாளி யாகவும், இரண்டாவது தினத்தில் ப்ரஸவித்தவளுக்கு சமமானவளாயும், மூன்ருவது தினத்தில் ரஜஸ் உண்டான தற்கு என்ன அசுத்தமோ அந்த தர்மத்தை அனுசரித்தவளா யும், நான்காவது தினத்தில் ஸங்கவ காலத்தில் (8½மணிக்கு) ஸ்னனம் செய்கிறவளாயும் இருந்து சுத்தையாகிருள் என்று சொல்லப்படுகிறது. ஸ்னனம் செய்யும் பொழுது 21 தடவை மண்ணிஞல் உடம்பில் பூசிக்கொண்டு 100 தடவை ஸ்ன னம் செய்து பிறகு சுத்தையாகிருள். ஸ்னனம் செய்த பிறகு சூரியனைப் பார்த்து ஸத் புத்ரனைப் பிரார்தித்து மூன்று தடவை அன்னத்தை புஜிக்க வேண்டும். இதுதான் சாஸ்திரீயமான விதியாகும் சுமங்கலி ஸ்திரீகளுக்கு என்பது கருத்து.

अत्रिः— रजस्वलायां स्नातायां पुनरेव रजस्वला
अष्टादशदिनादर्वागशुचित्वं न विद्यते ।
ऊनविंशदिनादर्वागेकाहमशुचिर्भवेत् ॥

அத்ரி:—ரஜஸ்வலே ஸ்னனம் செய்தபிறகு மறுபடி யும் 18 நாட்களுக்குள் ரஜோதர்சனம் ஏற்பட்டால் அதற்கு அசுத்தி கிடையாது. 18 நாட்களுக்குப் பிறகு ஏற்பட்டால் ஒரு நாள் அசுத்தி ஏற்படுகிறது. 20 தினங்களுக்குப் பிறகு

ஏற்பட்டால் கிரமமாக மூன்று தினங்கள் விலகி இருந்து பிறகு நான்காவது தினத்தில் 8½ மணிக்குமேல் ஸ்னானம் செய்யவேண்டும். பஹிஷ்டையாக இருக்கும்பொழுது கண்ணுக்கு மையிட்டுக்கொள்வது, தலைவாரிக்கொள்வது, கயிறு திரிப்பது முதலிய காரியங்கள் செய்யக்கூடாது. பார்க்கக்கூடாதவர்கள் பார்த்துத் தான் சாப்பிடக்கூடாது. அப்படிச் செய்தால் பிராயச்சித்தம் செய்யவேண்டும். ரஜஸ்வலை வேறு ரஜஸ்வலையை அல்லது தீட்டு உள்ளவர்களைத் தொட்டால் ஸ்னானம் செய்யும்வரையில் உபவாஸம் இருந்து மறுபடியும் மூன்று தினம் தீட்டுக்காக்கவேண்டும். பஞ்சகவ்யம் சாப்பிடவேண்டும். ரஜஸ்வலையாக இருக்கும் பொழுது ஜனனமரணங்களுடைய அசௌசம் சம்பவித்தால் ஸ்னானம் செய்து போஜனாதிகள் செய்யவேண்டும். ஏகாதசி நடுவில் வந்தால் உபவாஸம் அவசியம் அனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலையாக இருக்கும்பொழுதுஜ்வராதிரோகங்கள் ஏற்பட்டு நான்காவது தினத்தில் ஸ்னானம் செய்ய முடியாமல் போனால் எப்படி சுத்தி ஏற்படுகிறதுஎன்று சொல்லப்படுகிறது. நான்காவது தினத்தில் 8½மணிக்குமேல் வேறு ஸ்திரீயானவள் ரஜஸ்வலையை தொட்டு பிறகு ஸ்னானம் செய்யவேண்டும். பிறகு வஸ்திரம் உடுத்திக் கொண்டு மறுபடியும் தொட்டு ஸ்னானம் செய்யவேண்டும். இந்த மாதிரிப் பத்து தடவை ஸ்னானம் செய்து ஆசமனம் செய்து ஏதாவது தானம் செய்துவிட்டு புண்யாஹவாசனம் செய்து தீர்த்தம் ப்ரோக்ஷித்துக்கொண்டு பிறகு சுத்தை யாகிறாள்.

14. काम्यस्नानानि—காம்ய ஸ்னானங்கள்

देवयात्रा विवाहेषु यज्ञेषु प्रकृतेषु च ।
उत्सवेषु च सर्वेषु स्पृष्टास्पृष्टिर्न दुष्यति ॥

தேவதைகளுடைய தரிசனங்களிலும் விவாஹத்திலும் யக்ஞங்களிலும் உத்ஸவ காலங்களிலும் ஏற்பட்ட அஸ்ப்

ருச்யர்களின் ஸ்பரிசம் தோஷமாகாது. ஆகையால் ஸ்நானம் செய்யவேண்டாம் என்பது கருத்து.

पुलस्त्यः— पुष्ये च जन्मनक्षत्रे व्यतीपाते च वैधृतौ ।
अमायां च नदीस्नानं पुनात्या सप्तमं कुलम् ॥

புலஸ்தியர் :—புஷ்ய நக்ஷத்திரத்திலும், தன் ஜன்ம நக்ஷத்திரத்திலும் வ்யதீபாதத்திலும், வைத்ருதியிலும் அமாவாஸ்யையிலும், நதியில் ஸ்நானம் செய்கிறவன் ஏழு குலங்களைப் பாபத்திலிருந்து காப்பாற்றுகிறான்.

रव्यंगारशनैश्चरे स्नानं कुर्वन्ति ये नराः ।
व्याधिभिस्ते नपीडयन्ते मृगैः केसरिणो यथा ॥

பானுவாரம், பௌமவாரம், சனி வாரம் இந்த கிழமைகளில் எவர்கள் நதி ஸ்நானம் செய்கிறார்களோ அவர்களுக்கு, மான்களால் சிங்கங்களைப் பிடிக்க முடியாததுபோல், வியாதி பீடிப்பது கிடையாது.

चैत्रकृष्ण चतुर्दश्यां यः स्नायाच्छिवसन्निधौ ।
न प्रेत्त्वमवाप्नोति गंगायां च विशेषतः ॥

சைத்ர கிருஷ்ண சதுர்தசியில் சிவ ஸந்நிதியில் உள்ள குளம் முதலியவைகளிலும், அல்லது கங்கையிலும் எவன் ஸ்நானம் செய்கிறானோ அவனுக்கு இறந்த பிறகு ப்ரேத பாவம் ஏற்படுவதில்லை.

शातातपः— अमावास्या भवेद्वारे यदा भूमिसुतस्यवै ।
जाह्नवी स्नानमात्रेण गोसहस्त्र फलं भवेत् ॥

சாதாதபர் :—செவ்வாய்க் கிழமையோடு கூடிய அமாவாஸ்யையில் எவன் கங்கையில் ஸ்நானம் செய்கிறானோ அவனுக்கு ஆயிரக்கணக்கான பசுக்களை தானம் செய்த பலன் கிடைக்கும்.

कार्तिकं सकलं मासं नित्यस्नायी जितेन्द्रियः ।
जपन् हविष्यभुक् स्नातः सर्वपापैः प्रमुच्यते ॥

கிருத்திகா மாதத்தில் எல்லா நாட்களிலும் நியமத்துடன் ஹவிஸ்ஸைச் சாப்பிட்டுக்கொண்டு மந்திரங்களை ஜபித்துக்கொண்டு தினந்தோறும் நதிகளில் எவன் ஸ்னானம் செய்கிறானோ அவன் ஸகல பாபத்திலிருந்தும் விடுபடுகிறான்.

तुलायां मकरे मेषे प्रातः स्नायी सदाभवेत् ।
हविष्यं ब्रह्मचर्यं च महापातक नाशनम् ॥

துலா மாதத்திலும் மகர மாதத்திலும் மேஷ மாதத்திலும் நியமத்துடன் ப்ராத: ஸ்னானம் செய்வது மஹா பாபங்களைப் போக்கக்கூடியதாகும்.

तुष्यत्यामलके विष्णुरेकादश्यां विशेषतः ।

நெல்லி பல சூர்ணங்களால் ஏகாதசீ அன்று ஸ்னானம் செய்வது விஷ்ணுவுக்கு சந்தோஷத்தைக்கொடுக்கும். ஆனால் பர்வ காலங்களிலும் ஸப்தமீ, நவமீ திதியிலும் ஸ்னானம் செய்யக்கூடாது என்பது கருத்து.

15. मलापकर्षणस्नानम् — மலாபகர்ஷண ஸ்னானம்

भरद्वाजः— अभ्यङ्गस्नपने योग्या वाराये तिथिभिस्सह ।
कथ्यन्ते तेऽधुना स्पष्टं पुष्टये बलवृद्धये ॥

பரத்வாஜர்:—எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்ய யோக்யமான திதி வாரங்கள் இப்பொழுது சொல்லப்படுகின்றன. சொன்ன திதி வாரங்களில் அப்யங்க ஸ்னானம் செய்தால் சரீர புஷ்டி, ஆரோக்யம், பல விருத்தி ஏற்படும் என்று அறியவும்.

इन्दो र्बुधस्य सोरेश्च वारेऽभ्यङ्गं प्रशस्यते कान्ति ।
श्रियं तथा दद्युः भोगान् वाराधिपाः क्रमात् ॥

சந்திரன், புதன், சனி, இவர்களின் வாரத்தில் அப்யங்கம் செய்து கொண்டால், அந்த வாராதிபதிகள் க்ரமமாக சாந்தியையும், ஸ்ரீயையும், விஷயபோகங்களையும் கொடுப்பார்கள். ஆகையால் திங்கள், புதன், சனி இந்த கிழமைகளில் அப்யங்க ஸ்னானம் பிரசஸ்தமானது என்று அறியவும்.

द्वितीयाद्याश्चतस्रश्च प्रशस्ताः सप्तमी तथा ।
नवमीदशमी चैव त्रयोदश्यपि च स्मृताः ॥

த்விதீயை முதல் நான்கு திதிகளும், ஸப்தமியும் நவமியும், தசமியும், த்ரயோதசியும், அப்யங்கம் செய்துகொள்ள உயர்ந்த திதிகளாகக் கருதப்படுகின்றன.

भानु भौमामराचार्यशुक्रवारेषु संक्रमे ।
व्यतीपाते च जन्मर्क्षे नाभ्यङ्ग स्नानमाचरेत् ॥

ஞாயிறு, செவ்வாய், வியாழன், வெள்ளி இந்த கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளக்கூடாது; ஸங்கரமணம், வ்யதீபாதம், ஜன்ம நக்ஷத்திரம், இவைகளிலும் அப்யங்க ஸ்னானம் செய்யக்கூடாது.

एकादश्यां चतुर्दश्यां अष्टम्यां प्रतिपद्यपि ।
षष्ट्यां पर्वणि चाभ्यङ्गस्नानं नैव समाचरेत् ॥
उत्तराफल्गुनी ज्येष्ठा श्रवणार्द्रातु रात्रिषु ।
अभ्यङ्गस्नपनं धीमान् सुखार्थी वर्जयेत्तथा ॥

ஏகாதசீ, சதுர்தசீ, அஷ்டமீ, ப்ரதமை, பர்வம் இவைகளில் அப்யங்க ஸ்னானத்தை வர்ஜிக்க வேண்டும். உத்திரம், கேட்டை திருவோணம், திருவாதிரை, ராத்ரி இவைகளிலும்

ஸுகத்தை விரும்புகிறவன் அப்யங்க ஸ்னானம் செய்யக் கூடாது.

शिशुरोगार्तवृद्धानां यथाकालं शरीरिणाम् ।
अभ्यंगोष्णोदकस्नानं नैवदोषावहं स्मृतम् ॥

குழந்தைகள், வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள், வயது ஆனவர்கள் இந்த ஜீவர்கள் விஷயத்தில் சமயத்திற்குத் தகுந்தவாறு அப்யங்க ஸ்னானமும், வெந்நீரில் ஸ்னானம் செய்வதும் தோஷத்தை உண்டுபண்ணாது என்று அறியவும்.

16. नरकचतुर्दशीस्नानं - *நரக சதுர்தசீ ஸ்னானம்.*

आश्वयुक्कृष्णपक्षेतु चतुर्दश्यामिनोदये ।
तैलाभ्यङ्गं च कर्तव्यं स्नानं उष्णेन वारिणा ॥

ஆச்வயுஜ க்ருஷ்ணபக்ஷத்தில் சதுர்தசியில் ஸூர்யோதயத்தில் தைலாப்யங்கம் செய்துகொண்டு வெந்நீரில் ஸ்னானம் செய்யவேண்டும்.

सारसंग्रहे — चतुर्दशी याऽऽश्वयुजस्य कृष्णा स्वात्यर्क युक्ता च भवेत्प्रभाते ॥ स्नानं समभ्यज्यनरैस्तु कार्यं सुगन्धि तैलेन विभूतिकामैः ॥ तैले लक्ष्मीर्जले गंगा दीपावलिदिनेवसेत् । अलक्ष्मीपरिहारार्थं अभ्यङ्गस्नानमाचरेद् । तत आभरणं वस्त्रं धारयेत् सर्वसंपदः ॥

ஸ்வாதி நக்ஷத்திரம், பானுவாஸரம் இவைகளுடன் கூடிய ஆச்வயுஜ கிருஷ்ண சதுர்தசியினுடைய விடியற் காலத்தில் ஸம்பத்தை விரும்புகிறவர்கள் வாசனையுடன் கூடிய தைலத்தினால் அப்யங்க ஸ்னானம் செய்யவேண்டும். ஸ்னானம் வெந்நீரில் செய்யவும். அன்றைய தினம் தீபாவளி ஆகையால்

தைலத்தில் மஹாலக்ஷ்மியும், வெந்நீரில் கங்கையும் வசிக்கிருர்கள். ஆகையால் அலக்ஷ்மீயை விலக்கிக் கொள்ள அவசியம் அப்யங்க ஸ்னனம் செய்யவும். பிறகு புது வஸ்திரம், ஆபரணங்கள் இவைகளைத் தரித்துக்கொள்ளவும். ஆச்வயுஜ க்ருஷ்ண சதுர்தசீ விடியற்காலத்தில் இருக்கும் தினம் தீபாவளி என்று சொல்லப்படுகிறது. ஸ்வாதி பானு வாரம் இவைகள் எப்பொழுதாவது அந்த சமயத்தில் சம்பவிக்கும். அந்த புண்ணியகாலம் விசேஷமானது என்று அறியவும்.

यस्यां हतश्चतुर्दश्यां नरको विष्णुना हतः ।
तस्यां अभ्यंजनं कार्यं नरैर्नरकभीरुभिः ॥

எந்த சதுர்தசியினுடைய பின்ராத்திரியில் நரகாசுரன் விஷ்ணுவினல் வதம் செய்யப்பட்டானே அந்த நரகசதுர்தசீ புண்ணியகாலத்தில் நரகத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள அப்யங்க ஸ்னனம் செய்யவேண்டும்.

यमः— घृतं च सार्षपं तैलं यत्तैलं पुष्पवासितम् ।
नदोषः पक्वतैलेषु स्नानाभ्यङ्गेषु नित्यशः ॥

எமன் :— நெய், கடுகு எண்ணெய், புஷ்ப வாசனையேற்றப்பட்ட தைலம், காய்ச்சப்பட்ட தைலம், இவைகள் அப்யங்க ஸ்னனத்திற்கு எப்பொழுதும் உபயோகப் படுத்தலாம். க்ஷவரம் செய்துகொண்டு எண்ணெய் தேய்த்து ஸ்னனம் செய்யக் கூடாது. நல்ல எண்ணெயில் சொட்டு ஆஜ்யம் கலந்துகொண்டு நிஷித்தமான தினத்திலும் அப்யங்க ஸ்னனம் செய்யலாம். துளசீதளம் எண்ணெயில் போட்டுக்கொண்டால் திதி, வார நக்ஷத்திரத்தினுடைய தோஷம் சம்பவிக்காது. ஆனல் த்வாதசியில் எக்காரணத்தைக் கொண்டும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளக்கூடாது.

नारदीये— तैलाभ्यङ्गं महाराज ब्राह्मणानां करोतियः ।
सस्नातोऽब्दशतं साग्रं गंगायां नात्र संशयः ॥

மஹாராஜனே எவன் ப்ராம்மணர்களுக்கு தைலாப்யங்கம் செய்விக்கிறானோ அவன் நூறு வருஷங்களில் கங்கா ஸ்னானம் செய்தவனாகக் கருதப்படுகிறான். ஸ்திரீகள் வெள்ளிக் கிழமையிலும், செவ்வாய்க்கிழமையிலும் அப்யங்க ஸ்னானம் செய்வது ச்லாக்கியமானது என்று அறியவும்.

17. नदीनां रजस्वलादोषः—நதிகளுக்கு ரஜஸ்வலா தோஷம்

ब्रह्माण्डपुराणे—गोदावरी भीमरथी तुङ्गभद्रा च वेणिका ।
तापी पयोष्णिका विंध्यदक्षिणेतु प्रकीर्तिताः ॥
भागीरथी नर्मदा च यमुना च सरस्वती ।
विशोका चवितस्ता च विंध्यस्योत्तरसंस्थिता ॥
द्वादशैता महानद्यो देवर्षि क्षेत्रसंभवाः ॥

கோதாவரீ, பீமரதி, துங்கபத்ரா, வேணிகா, தாபீ, பயோஷ்ணிகா, இவைகள் விந்திய பர்வதத்திற்கு தெற்கில் உள்ள மஹா நதிகள் என்றும், கங்கை, நர்மதா, யமுனா, ஸரஸ்வதீ, விசோகா, விதஸ்த்தா, இவைகள் விந்திய பர்வதத்திற்கு வடக்கு திக்கில் உள்ள மஹா நதிகள் என்றும் ஆக 12 மஹா நதிகள் என்று சொல்லப்படுகிறது.

नारासिंह्ये— गंगा च यमुना गोदावरी स्यात्तुंगभद्रका ।
कावेरी च महापुण्या महानद्यः प्रकीर्तिताः ॥

கங்கை, யமுனா, கோதவரீ, துங்கபத்ரா, காவேரி இந்த புண்ணிய நதிகள் மஹா நதிகள் என்று சொல்லப்படுகிறது.

आदौ कर्कटके सर्वा महानद्यो रजस्वलाः ।
त्रिदिनं तु चतुर्थेह्नि शुद्धास्स्युर्जाह्नवी यथा ॥

ஆடி மாதத்தில் ஆரம்பத்திலிருந்து மூன்று நாட்களில் மஹா நதிகளுக்கு ரஜஸ்வலா தோஷம் ஏற்படுகிறது. ஆகை யால் இந்த மூன்று நாட்களில் நதிகளைத் தொடக்கூடாது. நான்காவது தினத்திலிருந்து கங்கைபோல் சுத்தமாகிவிடு கிறது. அதிலிருந்து ஸ்னானம் முதலியது அனுஷ்டிக்கலாம். கங்கைக்கு ரஜஸ்வலா தோஷம் கிடையாது என்பது மஹ ரிஷிகளுடைய அபிப்ராயம்.

छत्रं च हरते पादं अर्धं हरति पादुका ।
यानंहरेत्त्रिपादं तु सर्वं हरतिडोलिका ।
ऐश्वर्याल्लोभमोहाद्वा गच्छेद्यानादिभिस्तु यः ।
निष्फलं तस्यतत्तीर्थं तस्माद्यानादि वर्जयेत् ॥

தீர்த்தங்களுக்கு ஸ்னானம் செய்யப்போகிறவர்களுக்கு நியமம் சொல்லப்படுகிறது. குடை பிடித்துக்கொண்டு சென்றால் தீர்த்த ஸேவா பலம் கால் பங்கும், செருப்பு தரித் துக் சென்றால் பாதி பங்கு பலமும். டோலியில் போனால் முழு பலமும் நசித்துவிடுகிறது. ஆகையால் வசதி செய்து கொள்ள பணம் இருக்கிறது என்று மேற்படி சௌகர்யங் களைச் செய்துகொண்டு தீர்த்தத்திற்குச் செல்லக்கூடாது. நடந்து செல்லவேண்டும். ஆதுரனாக இருந்தால் மாட்டு வண்டியில் போகாமல் குதிரை வண்டியில் செல்லலாம் என்று சொல்லுகிறார்கள்.

18. वस्त्रपरीधानम्—வஸ்திரம் தரித்துக்கொள்வது.

हारीतः— जलात्तीरं समासाद्य तत्र शुक्ले च वाससी ।
परीधायोत्तरीयं च कुर्यात् केशान्नधूनयेत् ।
ततः प्रक्षालयेत्पादौ मृत्तो येन विचक्षणः ॥

ஹாரீதர் :— ஜலத்திலிருந்து கரையையடைந்து அவ்விடதில் இரண்டு வெளுப்பான சுத்தமான வஸ்திரங்களைத் தரித்து உத்தரீயத்தையும் தரிக்கவேண்டும். பிறகு மண் கலந்த ஜலத்தால் கால்களை அலம்பவேண்டும். தலை மயிர்களை உதரக்கூடாது.

नद्यादि देवखातेषु स्नानवस्त्रं अधस्त्यजेत् ।
अन्यत्र तु त्यजेदूर्ध्वं स्नानवस्त्रं द्विजोत्तमः ॥

நதி, குளங்கள், இவைகளில் ஸ்னானம் செய்யும்பொழுது மேலே காய்ந்த வஸ்திரத்தைச் சுற்றிக்கொண்டு அடியில் ஈர வஸ்திரத்தை கீழே விஸர்ஜனம் செய்ய வேண்டும். மற்ற கிணறு முதலிய இடங்களில் ஸ்னானம் செய்யும் பொழுது மேலாக ஈர வஸ்திரத்தை எடுத்துப்போடவேண்டும். உத்தரீயத்தைத் தலையில் சுற்றிக்கொண்டு பூணூலை மாலையாகக் காதில் சுற்றிக்கொண்டு வஸ்திரம் தரித்துக் கொள்ளவும்.

भृगुः— न रक्तं उल्बणं वासो न नीलं च प्रशस्यते ।
दशाहीनं जलार्द्रं च वर्जयेदंबरं बुधः ॥

ப்ருகு :— சிகப்பு முதலிய அதிக சாய மேற்றிய வஸ்திரம், நீல வஸ்திரம், கருப்பு வஸ்திரம், தலைப்பு இல்லாத வஸ்திரம், ஈரமான வஸ்திரம் இவைகளை ஒரு பொழுதும் உடுத்திக்கொள்ளக்கூடாது. ஓரத்தில் நீலக் கரை கருப்புக் கரை போட்ட வஸ்திரமும் உடுத்திக்கொள்ளக் கூடாது.

अकच्छः पुच्छकच्छश्च तिर्यक्कच्छोर्ध्वकच्छकः ।
कटिसूत्रे बद्धकच्छो नग्नः पंचविधः स्मृतः ॥

கச்சமில்லாதவனும், வஸ்திரத்தின் நுணி பாகத்தினுடைய ஒரு பக்கத்தைச் சொருகிக்கொண்டு மற்ற பக்கத்தை விட்டு வைக்கிறவனும், தலைப்பைவிட்டு நடுவில் சொருகிக்

கொள்கிறவனும், மேல் தூக்கி கச்சம் தரித்தவனும், அரணுன் கயிற்றில் கட்டிய கச்சம் தரித்தவனும், இந்த ஐந்துபேரும் துணி உடுத்தாதவர்கள் என்ற சொல்லப்படுகிருர்கள். அதாவது வஸ்திரம் தரிக்காதவருக்குச் சமமானவர்கள் ஆவர் என்பது கருத்து.

कटिसूत्रं विना श्रौतं स्मार्तं कर्म करोति यः ।
सर्वं तन्निष्फलं विद्यात् सोपि नग्न इति स्मृतः ॥

கடிசூத்திரம் (இடுப்புக் கயிறு) இல்லாமல் எவன் ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் செய்கிருனே அவனுடைய காரியங்கள் நிஷ்பலமாகும். இவனும் வஸ்திரமில்லாதவனுக்குச் சமமானவன்.

विकच्छोऽनुत्तरीयश्च नग्नश्चावस्त्र एव ।
श्रौतं स्मार्तं तथा कर्म न नग्न श्चिन्तयेदपि ॥

கச்சமில்லாமல் தட்டுசித்துக் கட்டிக்கொண்டவனும், உத்தரீயமில்லாதவனும், வஸ்திரமில்லாதவனும் நக்னன் (துணி உடுத்தாதவர்கள்) என்று சொல்லப்படுகிறது. இப்படி உள்ளவன் ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை செய்யக் கூடாது. செய்தால் ஆஸுரமாகும் (அசுரர்களுக்குப் பிரியமானது) என்பது கருத்து.

सप्तवाताहतं वस्त्रं शुष्कवत् प्रतिपादितम् ।

ஏழு தடவை உதரிய ஈர வஸ்திரம் காய்ந்த வஸ்திரத்திற்கு சமமாகும். இது ஆபத்தர்மமாகும்.

शुचीवो हव्या मरुत इत्युक्त्वा शुद्धमम्बरम् ।
संप्रोक्ष्य देवस्यत्वेति गृहीत्वा चावधूनयेत् ॥
अवधूतं रक्ष इत्यादित्यस्य प्रदर्शयेत् ।
तरणिरुदुत्यमिति वाऽऽवहन्तीति छादयेत् ॥

சுசீவ: என்ற மந்திரத்தினல் வஸ்திரத்தைப்ப்ரோக்ஷித்து, தேவஸ்யத்வா என்ற மந்திரத்தினல் வஸ்திரத்தை எடுத்து;

அவதூதம் என்ற மந்திரத்தினல் உதறி, தரணி, அல்லது உதித்யம் என்ற மந்திரத்தினல் ஸூர்யனிடம் வஸ்திரத்தைக் காண்பித்து, ஆவஹந்தீ என்ற மந்திரத்தினல் தரித்துக்கொள்ள வேண்டும்.

योगयाज्ञवल्क्यः—स्नानं दानं जपं होमं स्वाध्यायमपि तर्पणम् ।
नैकवस्त्रो द्विजः कुर्या श्राद्धभोजन सत्क्रियाः ॥

யோகயாஞ்யவல்கியர்:— ஸ்னனம், தானம், ஜபம், ஹோமம், வேதம் சொல்வது, தர்ப்பணம், ச்ராத்தம், போஜனம் மற்ற ஸத் கர்மாக்கள் இவைகளை ஒரு வஸ்திரத்துடன் செய்யக்கூடாது.

19. पुंड्रधारणविधिः—நெற்றி இட்டுக்கொள்ளும் முறை.

पाद्मे— गृहे यस्य सदा तिष्ठेत् गोपीचन्दनमृत्तिका ।
द्वारकाविहिता तत्र कृष्णेन सहिता कलौ ॥

இந்த [illegible]பில் எவனுடைய க்ரஹத்தில் எப்பொழுதும் கோபி சந்தனம் ருத்திகை (மண்) இருக்கிறதோ அந்த க்ருஹம் க்ருஷ்ணன் வாசம் செய்யும் த்வாரகை என்று அறியவும்.

गोपीचन्दनलिप्ताङ्गो यं यं पश्यति चक्षुषा ।
तं तं पूतं विजानीयात् नात्रकार्या विचारणा ॥

கோபீ சந்தனம் தரித்த சரீரத்துடன் எவன் எவனைப் பார்க்கிருனே அவன் பரிசுத்தனுக ஆகிருன். கோபீ சந்தனத்தினல் ஊர்த்வ புண்ட்ரம் தரித்துக்கொள்ள வேண்டும்.

आथर्वणे— हरेः पादाकृति मात्मनो हिताय मध्ये
छिद्रमूर्ध्वपुंड्रं यो धारयति स परस्यप्रियो भवति
सपुण्यभग् भवति समुक्तिभाग् भवति ।

தன் க்ஷேமத்தை உத்தேசித்து கோபீ சந்தனத்தால் விஷ்ணுவினுடைய பாதக்ருதியாக நெற்றி முதலான ஸ்தலங்களில் ஊர்த்வபுண்டரம் தரிக்கவேண்டும். அவன் பரம புருஷனை நாராயணனுக்குப் பிரியமாகிறான், புண்ணியசாலியாகிறான், மோக்ஷத்தை அடையத் தகுதியுள்ளவனாகக் கருதப்படுகிறான்.

வாஸுதேவோபநிஷத்தில் கோபீ சந்தன தாரணவிதி சொல்லப் பட்டிருக்கிறது.

अथ गोपीचन्दनं नमस्कृत्य उद्धृत्य-

கோபீ சந்தனத்தை நமஸ்கரித்து எடுத்து

गोपीचन्दनपापघ्न विष्णुदेहसमुद्भव ।
चक्रांकित नमस्तुभ्यं धारणान्मुक्तिदो भव ॥

இந்த மந்திரத்தினால் பிரார்த்திக்கவும். பிறகு

इमंमे गङ्ग इति जलमादाय विष्णोर्नुकमितिमर्दयेत् ।
अतोदेवा अवन्तुनः इत्येताभिः विष्णुगायत्र्या च त्रिवारमभिमन्त्र्य ।

இமம்மே கங்கே என்ற மந்திரத்தினால் ஜலத்தை எடுத்து, விஷ்ணோர்நுகம் என்பதால் இடதுகையில் இருக்கும் தீர்த்தத்தில் வலதுகையினால் குழைக்க வேண்டும். பிறகு குழைத்த கோபீ சந்தனத்தை அதோ தேவா அவந்துந: என்ற ருக்குகளாலும் மூன்று தரம் விஷ்ணு காயத்ரீயினாலும் அபி மந்திரணம் செய்து,

शंखचक्रगदापाणे द्वारकानिलयाच्युत ।
गोविन्दपुण्डरीकाक्ष रक्षमां शरणागतम् ॥

इति मां ध्यात्वा—

என்ற மந்திரத்தால் பகவானை த்யானம் செய்து,

गृहस्थः ललाटादिषु द्वादशस्थानेषु अनामिकाङ्गुल्या विष्णु गायत्र्या केशवादिनामभिर्वा धारयेत् ॥

க்ருஹஸ்தன் தன் மோதிர விரலால் கோபீ சந்தனத்தை விஷ்ணு காயத்ரீயினால் அல்லது கேசவாதி 12 நாமாக்களால் நெற்றி, வயிறு, மார்பு, கழுத்து, வலது பார்ச்வம், வலது பாஹு மூலம், வலது கழுத்து பார்ச்வம், இடது பார்ச்வம் இடது பாஹு மூலம் இடது கழுத்து பார்ச்வம், பின்புறம் கடிப்ரதேசம், பின் கழுத்துப்ரதேசம் என்ற 12 இடங்களிலும் பிறகு வாஸுதேவ என்று சிரஸ்ஸி லும் தரிக்க வேண்டும்.

ब्रह्मचारी वानप्रस्थो वा ललाट कण्ठ हृदय बाहुमूलेषु वैष्णव गायत्र्या कृष्णादिनाम पंचभिर्वा धारयेत् ।

வானப்ரஸ்த்தன் ப்ரம்மச்சாரி இவர்கள், நெற்றி, கழுத்து, மார்பு, பாஹு மூலங்கள் இந்த ஐந்து இடங்களில் விஷ்ணு காயத்ரீயினால் அல்லது ஐந்து க்ருஷ்ணாதி நாமாக் களாலும் கோபீ சந்தனம் தரிக்கவேண்டும்.

यतिस्तर्जन्या शिरोललाट हृदयेषु प्रणवेन धारयेत् ।

குடீசகர், பஹூதகர், ஹம்ஸர் என்ற இந்த மூன்றுவித மான ஸன்யாஸிகள் ஆள் காட்டிவிரலால் சிரஸ், நெற்றி, மார்பு இவைகளில் ப்ரணவம் சொல்லி கோபீ சந்தனம் தரிக்கவேண்டும்.

परमहंसो ललाटे प्रणवेनैकमूर्ध्वपुंड्रं धारयेत् ।

பரமஹம்ஸ ஸன்யாஸி நெற்றியில் மாத்திரம் ஊர்த்வ புண்டரம் கோபீ சந்தனத்தால் தரிக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

विष्णुस्मृतौ— यागो दानं जपो होमः स्वाध्यायः पितृतर्पणम् ।
भस्मी भवति तत्सर्वं ऊर्ध्वपुंड्रं विनाकृतम् ॥

யக்ஞம், தானம், ஜபம், ஹோமம், வேதம் சொல்லுதல், பித்ரு தர்ப்பணம் இவைகள் ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமல் செய்தால் நிஷ்பலமாகும் என்று விஷ்ணுஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறது.

अथ त्रिपुंड्रविधिः—कालाग्निरुद्रोपनिषदि । आग्नेयंभस्म सद्यो जातमिति पंच ब्रह्ममन्त्रैः प्रतिगृह्य अग्निरित्यनेननाभिमन्त्र्य ।

இனி த்ரி புண்ட்ரவிதானம் சொல்லப்படுகிறது. காலாக்னி ருத்ரோபநிஷத்தில் விபூதிதாரணவிதி (முறை) ப்ரகாரம் உதாஹரிக்கப்படுகிறது. அக்னியிலிருந்து உண்டான பஸ்மாவை ஸத்யோஜாதம் என்ற ஐந்து மந்திரங்களால் எடுத்து அக்னிரிதி என்ற மந்திரத்தினுல் அபிமந்தரணம் செய்து,

मानस्तोके इति समुद्धृत्य जलेन संमृज्य शिरोललाटवक्षस्स्कन्धेषु त्र्यायुषैस्त्र्यंबकैस्तिर्यक् तिस्रो रेखाः प्रकुर्वीत व्रतमेतच्छांभवं सर्ववेदेषु वेदवादिभिरुक्तं भवति ।

மானஸ்தோகே என்பதால் எடுத்து, ஜலத்தோடு கலந்து சிரஸ், நெற்றி, மார்பு, தோள் இந்த ஸ்தானங்களில் த்ரியாயுஷம், த்ரியம்பதம், என்ற மந்திரங்களினுல் குறுக்காக மூன்று ரேகையாக தரிக்க வேண்டும். இந்த மாதிரி வீபூதி தரிக்கும் முறை சாம்பவ வ்ரதமாகும், பரமேச்வரருக்கு

ப்ரீதியை கொடுக்கும் என்று சகல வேதங்களிலும் மஹரிஷி களாலும் கூறப்படுகிறது.

तस्मात्तत् समाचरेन्मुमुक्षुः अपुनर्भवाय ।

ஆகையால் மோக்ஷத்தை விரும்புகிறவன் மோக்ஷத்தை அடைவதற்கு அவசியம் வீபூதி தாரணம் செய்துகொள்ள வேண்டும்.

त्रिपुंड्रं भस्मनाकरोति यो विद्वान् ब्रह्मचारी गृहस्थो वानप्रस्थो यतिर्वा स समस्त महापातकोपपातकेभ्यः पूतोभवति ।

स सर्वान्देवान् ध्यातो भवति स सर्वतीर्थेषुस्नातो भवति ॥

த்ரிபுண்ட்ரம் வீபூதியினுல் எவன் தரிக்கிருனே அந்த வித்வான், ப்ரம்மசாரீ, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸன்யாஸீ இவர்கள் ஸமஸ்தபாபத்திலிருந்து விடுபட்டவர் களாக ஆவார்கள். எல்லா தேவதைகளையும் தியானம் செய்தவர்களாக ஆவார்கள். எல்லா புண்ணிய தீர்த்தங் களிலும் ஸ்னனம் செய்தவர்களாக ஆவார்கள்.

सर्व संपत्समृद्धो भवति, सततं सर्वरुद्रमन्त्रजापी भवति, सकल भोगभुग्देहं त्यक्त्वा शिवसायुज्यमाप्नोति, न च पुनरावर्तते न च पुनरावर्तते इत्याह भगवान् कालाग्निरुद्रः ।

விபூதி தரிக்கிறவன் சகல சம்பத்துக்களையும் அடை வான். ஸமஸ்த விஷய சுகங்களையும் அனுபவிப்பான். சகல வேதங்கங்களில் உள்ள ருத்ர மந்திரங்களை ஜபித்தவனுக ஆவான். இந்த சரீரத்தை தியாகம் செய்த பிறகு சிவ ஸாயுஜ்யம் அடைந்து திரும்ப இந்த பூலோகத்தில் பிறக்க மாட்டான், மோக்ஷத்தை அடைவான். இவ்வளவு மஹிமை உள்ளது வீபூதி தாரணமென்பது என்று பகவான் காலாக்னி ருத்ரர் கூறுகிறுர்.

स्मृत्यन्तरे— त्रियायुषेण कुरुते ललाटे च भुजद्वये ।
नाभौ शिरसि हृत्पार्श्वे ब्राह्मणो वैदिकः सदा ॥

திரியாயுஷம் என்ற மந்திரத்தினுல் நெற்றியில், இரண்டு கைகளில், வயிற்றில், சிரஸில், மார்பில், பார்ச்வ பாகங்களில் வீபூதியை ஜலத்துடன் கலந்து தரிக்கவேண்டும். வேத மறிந்து கர்மாக்கள் செய்யும் ப்ராம்மணன் அவசியம் தரிக்க வேண்டும்.

कात्यायनः— श्राद्धे यज्ञे जपे होमे वैश्वदेवे सुरार्चने ।
धृतत्रिपुंड्रः पूतात्मा मृत्युंजयति मानवः ॥
त्रिपुंड्रं यद्य धृत्वा तु कुर्याद्यत्कर्मतद्वृथा ॥

காத்யாயனர் :— ச்ரார்தத்திலும், யக்ஞத்திலும், ஜபத்திலும், ஹோமத்திலும, வைச்வே தேவத்திலும், தேவ பூஜையிலும், வீபூதி தரிக்கவேண்டும். வீபூதி தரிக்காமல் செய்த கர்மாக்கள் நிஷ்பலமாகும் என்பது கருத்து.

महाभारते— आयुष्कामोऽथवाराजन् भूतिकामोऽथवा नरः ।
नित्यं वै धारयेद् भस्म मोक्षकामी च वै द्विजः ॥

ஆயுஸை விரும்புகிறவனும், ஐஸ்வரியத்தை விரும்புகிறவனும், மோக்ஷத்தை விரும்புகிறவனும், அவசியம் வீபூதியை தரிக்கவேண்டும். வீபூதிதாரணம் நான்கு வர்ணத்தார்களும் செய்யவேண்டும். வீபூதியைப் பற்றி வெகு புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. வீபூதி தாரணம், ஊர்த்வ புண்ட்ர தாரணம் இவ்விரண்டும் அவரவர்களுடைய குலத்தில் பெரியோர்களுடைய ஆசாரத்தை அனுசரித்து தரிக்க வேண்டும். அவைகளை நாம் இஷ்டப்படி மாற்றக்கூடாது என்பது சாஸ்த்திரசித்தாந்தமாகும்.

स्मृतिसंग्रहे—त्रिपुंड्रं भस्मना तिर्यगूर्ध्वपुंड्रं मृदान्यसेत् ।
उभयं दण्डनेनैव वर्तुलं न कदाचन ॥

த்ரிபுண்ட்ரம் வீபூதியினாலும், குறுக்காகவும் தரிக்க வேண்டும். ஊர்த்வ புண்ட்ரம் மண்ணினால் கோபீ சந்தனத்தால் ஊர்த்வமாக (மேல் நோக்கியதாக) தரிக்கவேண்டும், மாற்றி தரிக்கக்கூடாது. சந்தனத்தால் ஊர்த்வமாயும் குறுக்காகவும் தரித்துக்கொள்ளலாம். வட்டமாக (ரவுண்டாக) எந்த சமயத்திலும் தரிக்கக்கூடாது.

तुषादिभस्म पाषाणरजोऽधार्यं च न क्वचित् ॥

உமி சாம்பல், கல்பொடி முதலியவைகளைத் தரிக்கக் கூடாது. பிரசாதமாகக் கொடுத்த மஞ்சக் குங்குமம் தரிக்கலாம். கண்ட பொடிகளை நெற்றியில் தரிக்கக் கூடாது என்பது கருத்து.

व्यासः— ऊर्ध्वपुंड्रं त्रिपुंड्रं वा धारयेत्सर्वकर्मसु ।

வ்யாஸர் :— ஊர்த்வ புண்ட்ரமோ அல்லது த்ரிபுண்ட்ரமோ தரித்து சகல புண்ணிய கர்மாக்களையும் செய்ய வேண்டும். ஆகையால் லலாட சூன்யமாகக் கர்மாக்கள் செய்யக் கூடாது.

20. संध्यावन्दनविधिः—ஸந்தியாவந்தன விதி

पितामहः— नक्षत्रज्योतिरारभ्य सूर्यस्योदयदर्शनात् ।
प्रातस्सन्ध्येति तां प्राहुः श्रुतयो मुनिसत्तमाः ॥

நக்ஷத்திர ஜ்யோதி மறைவதிலிருந்து ஸூரியோதயம் ஏற்படும் வரையிலுள்ள காலம் ப்ராதஸ் ஸந்த்யை என்று மஹரிஷிகள் கூறுகின்றனர்.

दक्षः— रात्र्यन्त्ययाम नाडी द्वे सन्ध्यादिः काल उच्यते ।
दर्शनाद्रविरेखायाः तदन्तो मुनिभिः स्मृतः ॥

தக்ஷன் :— ராத்திரியினுடைய கடைசி யாமத்தில் கடைசி இரண்டு நாழிகைகள் ஸந்த்யையின் ஆரம்ப காலம்

என்று சொல்லப்படுகிறது. ஸூரியனுடைய மேல் நோக்கின கிரணங்கள் காண்பதாவது ஸந்த்யையின் முடிவு என்று மஹரிஷிகளால் கூறப்படுகிறது. இங்கு ஸந்த்யா என்பது காலவாசகமாக இருந்தாலும் அந்தக் காலத்தில் உபாஸிக்கும் தேவதை ஸந்த்யா சப்தத்தால் கூறப்படுகிறது என்று அறியவும்.

योगयाज्ञवल्क्यः— सन्धौ सन्ध्यामुपासीत नास्तगे नोद्गते रवौ ।
ब्रह्मणोपास्यते संध्या विष्णुना शंकरेण च ।
कस्मान्नोपासयेद्देवीं श्रेयस्कामो द्विजोत्तमः ॥

யோகயாஞ்யவல்கியர் :— ஸந்தியில் ஸந்த்யா தேவியை உபாஸிக்கவேண்டும். ஸாயங்காலத்தில் ஸூரியன் அஸ்தமனத்தை அடைந்த பிறகு ஸந்தியா வந்தனம் செய்யக் கூடாது. அதே மாதிரி ப்ராத ஸந்தியை ஸூரியன் உதயமான பிறகு உபாஸிக்கக்கூடாது. ப்ரம்மா, விஷ்ணு, சங்கரன், இவர்கள் ஸந்தியையை முக்கிய காலத்தில் உபாஸிக்கிறார்கள். இப்படி இருக்க ப்ராம்மணன் எப்படி ஸந்தியா வந்தனம் செய்யாமல் இருப்பான்? அவசியம் செய்ய வேண்டும் என்பது கருத்து.

संवर्तः— प्रातस्सन्ध्यां सनक्षत्रां उपासीत यथा विधि ।
सादित्यां पश्चिमां सन्ध्यां अर्धास्तमितभास्कराम् ॥

ஸம்வர்த்தர் :— ப்ராதஸ் ஸந்த்யையை நக்ஷத்திரங்களுடன் கூடியகாலத்திலும், ஸாயம் ஸந்த்யையை ஸூரியன் பாதி மறைந்திருக்கும்பொழுதும் உபாஸிக்கவேண்டும்.

अत्रिः— सन्ध्यात्रयं तु कर्तव्यं द्विजेनात्मविदा सदा ।

அத்ரி :— ப்ரம்ம ஞானிகள் மூன்று காலங்களிலும் ஸந்தியானுஷ்டானம் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். அதாவது, ப்ராதஸ் ஸந்த்யா, மாத்யான்ஹிகம்,

ஸாயம் ஸந்த்யா என்று மூன்று ஸந்த்யானுஷ்டானங்கள் என்று அறியவும்.

शंखः— प्रातस्सन्ध्यां सनक्षत्रां मध्यमां स्नानकर्मणि ।
सादित्यां पश्चिमां सन्ध्यां उपासीत यथा विधि ॥

சங்க:— ப்ராதஸ் ஸந்தியையை நக்ஷத்திரங்களுடனும், மத்யான்ஹ ஸந்தியை மத்யான்ஹ ஸ்னானத்திற்குப் பிறகும், ஸாயங்கால ஸந்தியையை ஸூரியன் இருக்கும் பொழுதும் சாஸ்திரத்தில் கூறியபடிச் செய்யவேண்டும்.

व्यासः— योन्यत्र कुरुते यत्नं धर्मकार्येपिवै द्विजः ।
विहाय सन्ध्याप्रणतिं स याति नरकायुतम् ॥

வ்யாஸர்:— எந்த ப்ராம்மணன் ஸந்தியானுஷ்டானம் செய்யாமல் வேறு தர்ம காரியங்களை செய்கிறனோ அவன் ஆயிரக்கணக்கான நரகங்களில் துக்கத்தை அனுபவிக்கிறன்.

अतिक्रामति यो मोहात् सन्ध्यामन्यपरायणः ।
स साधुभिर्बहिष्कार्यः सर्वस्माद्विजकर्मणः ॥

எவன் விவேகமின்மையினுல் வேறு காரியத்தில் ஈடுபட்டவனுக ஆகி ஸந்தியையை விடுகிறனோ அவனை ஸாதுக்கள் ப்ராம்மணன் செய்யவேண்டிய சகல வைதிக கர்மாக்களிலிருந்து விலக்கவேண்டும்.

यमः— सन्ध्यामुपासते ये तु सततं संशितव्रताः ।
विधूतपापास्ते यान्ति ब्रह्मलोकं सनातनम् ॥

எமன்:— எவர்கள் ஸந்தியையை த்ருடமான நியமத்துடன் உபாஸிக்கிறர்களோ அவர்கள் சகல பாபங்களிலிருந்தும் விலகி ப்ரும்ம லோகத்தை அடைகிறர்கள்.

यदह्ना कुरुते पापं कर्मणा मनसा गिरा ।
आसीनः पश्चिमां संध्यां प्राणायामैस्तु हन्तितत् ॥

எந்த ப்ராம்மணன் பகலில் சரீரத்தாலும், மனத்தாலும், வாக்கினாலும், பாபம் செய்கிருனோ அவன் ச்ரத்தையுடன் உட்கார்ந்து ஸாயம் கால ஸந்தியையை ப்ராணுயாமத்துடன் உபாஸித்து அந்த பாபங்களை விலக்கிக் கொள்ளுகிருன்.

यद्रात्र्या कुरुतेपापं कर्मणा मनसा गिरा ।
पूर्वां सन्ध्यामुपासीनः प्राणायामैर्व्यपोहति ॥

எந்த ப்ராம்மணன் ராத்திரியில் சரீரத்தாலும், மனதாலும், வாக்கினாலும் பாபம் செய்கிருனோ அவன் ப்ராதஸ் ஸந்தியையை நின்று ப்ராணுயாமத்துடன் உபாஸித்து அந்த பாபங்களிலிருந்து விடுபடுகிருன்.

अपरेतु अर्घ्यदानं सन्ध्याध्यानं गायत्रीजपः उपस्थानं च प्रधानमिति वदन्ति ॥

சில பெரியோர்கள் ஸந்தியா வந்தன கர்மாவில் அர்க்யம், ஸந்தியா தியானம், காயத்ரீ ஜபம், உபஸ்தானம், இந்த நான்கு காரியங்களும் ப்ரதானமானவை என்று சொல்லுகிருர்கள். இது ஸித்தமான விஷயம் என்று அறியவும். மற்ற ப்ரோக்ஷணம் முதலியவைகள் அங்கங்கள் என்று கூறப்படுகிறது.

द्विघटी तुदयादर्वाक् प्रहरार्धं तथोपरि ।
सन्ध्याकालस्सविज्ञेयो ह्यन्यथा लंघनं स्मृतम् ॥

உதயதிற்கு முன் இரண்டு நாழிகை ஸந்தியா வந்தனத்திற்கு முக்கிய காலமாகும். உதயத்திற்கு பின்பு அரையாமமும் (3½ நாழிகை) ஸந்தியா வந்தனத்திற்கு கௌண காலமாகும். அதற்கு பிறகு செய்தால் ஸந்தியையை அதிக்ரமித்ததாகும் என்று அறியவும்.

तत् राष्ट्र क्षोभजलाभावाशक्त्याद्यापत्सु अनुकल्पाभ्यनुज्ञापरम् ॥

உதயத்திற்கு பின்பு கூறப்படும் காலமானது தேச க்ஷோபம், ஜலத்தின் துர்லபம், உடம்பு அஸௌகரியம், ஆபத்து, இவைகளில் அனுஷ்டிக்கலாம். அனுவசியமாக சோம்பேறித்தனமாக காலத்தை அதிக்ரமித்து ஸந்தியா வந்தனம் செய்யக் கூடாது. அதே மாதிரி மாத்யான்ஹி கத்திலும், ஸாயங்கால ஸந்தியையிலும் கௌண காலத்தில் ஸந்தியானுஷ்டானம் செய்யலாம்.

अत्रिरपि— नोपतिष्ठन्ति ये सन्ध्यां स्वस्थावस्थासु ये द्विजाः ।
हिंसन्ति ते सदा पापा भगवन्तं दिवाकरम् ॥

அத்ரி :— வியாதி இல்லாமல் ஸ்வஸ்த்தனுக இருக்கும் ப்ராம்மணன் முக்ய காலத்தில் ஸந்தியாவந்தனம் செய்யா விட்டால் அவன் பரம பாபியாகிருன். ஸூரியனே ஹிம்சிக் கிருன்.

ब्रह्मा— धाराच्युतेन तोयेन सन्ध्योपास्तिर्विगर्हिता ।
न प्रशंसन्ति पितरो न प्रशंसन्ति च देवताः ॥

ப்ரும்மா :— தாரையாய் விழும் ஜலத்தினுல் செய்யப் படும் ஸந்தியாவந்தனம் நிந்திக்கத் தகுந்ததாகும். இதை பித்ருக்களும் தேவதைகளும் புகழமாட்டார்கள்.

व्यासः— उपवीती बद्धशिखः स्वाचान्तो द्विरनाकुलः ।
प्राङ्मुखस्सततं विप्रः सन्ध्योपासनमाचरेत् ॥

வ்யாஸர் :— யக்ஞோபவீதம் தரித்து சிகையை நன்ருக கட்டிக்கொண்டு இரண்டு தரம் ஆசமனம் செய்து வேறு இடத்தில் புத்தியை செலுத்தாமல் ஸந்த்யோபாஸனம் செய்யவேண்டும்.

करभ्यां तोयमादाय गायत्र्याचाभिमन्त्रितम् ।
आदित्याभिमुखस्तिष्ठन् त्रिरूर्ध्वमथ चोक्षिपेत् ॥

இரண்டு கரங்களாலும் ஜலத்தை எடுத்து காயத்ரீயி ஞல் அபி மந்த்ரணம் செய்து ஸூரியனுடைய எதிரில் நின்றுகொண்டு மூன்று தடவை அர்க்யத்தை உயரே தூக்கி விடவேண்டும்.

संग्रहे— द्वौ हस्तौ युग्मतः कृत्वा पूरयेदेकमंजलिम् ।
गोश्रृंगमात्रमुद्धृत्य जलमध्ये जलंक्षिपेत् ॥

இரு கைகளையும் சேர்த்து ஒரு அஞ்சலி ஜலத்தை பூர்ண மாகச் செய்து பசுமாட்டுக் கொம்பு அளவு உயரே எடுத்து ஜலத்தில் அர்க்யம் விடவும்.

जलेष्वर्घ्यं प्रदातव्यं जलाभावे शुचिस्थलं ।
संप्रोक्ष्य वारिणा सम्यक् ततोऽर्घ्याणि प्रदापयेत् ॥

பொதுவாக ஜலத்தில் அர்க்கியம் விடவேண்டும். ஜல மில்லாத இடத்தில் சுத்தமான தரையில் தீர்த்தத்தினுல் ப்ரோக்ஷித்து அர்க்யங்களைவிடவேண்டும்.

प्रातर्मध्याह्नयोस्तिष्ठन् सायमासीन एववा ।

காலையிலும், மத்யான்ஹத்திலும் நின்று கொண்டு அர்க்யம் கொடுக்கவேண்டும். ஸாயங்காலத்தில் உட் கார்ந்துகொண்டு அர்க்யம் கொடுக்கவேண்டும்.

भरद्वजाः— ततः प्रदक्षिणीकृत्य त्वद्भिस्संप्रोक्षिते शुचौ ।
देशे च दर्भसंक्लृप्ते वाग्यतः प्राङ्मुखः स्थितः ॥
दर्भान् धारयमाणस्सन्नात्मनो ध्यानमाचरेत् ॥
उपविश्य द्विराचम्य ग्रहादीं स्तर्पयेत्ततः ॥

பரத்வாஜர் :—அர்க்யம் கொடுத்தபிறகு, ப்ராயச்சித்தார்க்யம் கொடுத்துவிட்டு, ஆசமனம் செய்து, பிறகு ஜலத்தினுல் ஆத்ம ப்ரதக்ஷிணம் செய்து, சுத்தமான ப்ரதேசத்தில் தர்பத்தில் மௌனமாக நின்று கொண்டு, தர்பங்களைத் தரித்துக்கொண்டு, சில நிமிஷங்கள் ஆத்ம த்யானம் செய்யவேண்டும். பிறகு உட்கார்ந்துகொண்டு நவக்ரஹங்களுக்கும் கேசவாதி 12 தேவதைகளுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

शङ्खः— गृहेत्वेकगुणं प्रोक्तं नद्यादौ द्विगुणं स्मृतम् ।
गवां गोष्ठे दशगुणं अग्न्यागारे शताधिकम् ।
सिद्धक्षेत्रेषु तीर्थेषु देवतायाश्च सन्निधौ ॥
सहस्रं शतकोटीनां अनन्तं विष्णुसन्निधौ ॥

சங்க:—ஜபம் செய்யும் ஸ்தலத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறது. க்ருஹத்தில் ஜபம் செய்வது ஒரு பங்கு பலத்தை கொடுக்கும், நதி தீரத்தில் இரண்டு பங்கும், பசுமாட்டுக் கொட்டிலில் பத்து பங்கும், அக்னி சாலையில் நூறு பங்கும் ஸித்த க்ஷேத்ரங்களிலும், புண்ணிய தீர்த்தங்களிலும், தேவதா ஸந்நிதியிலும், நூறு கோடிகளுடைய ஆயிரம் பங்கும் பலம் கிடைக்கும். விஷ்ணு ஸந்நிதியில் ஜபம் செய்தவர்களுக்கு அளவு கடந்த பலம் கிடைக்கும் என்று அறியவும்.

बृहस्पतिः— बद्ध्वाऽऽसनं नियम्याक्षान् स्मृत्वा चर्ष्यादिकं तथा ।
सन्निमीलितदृङ् मौनी प्राणायामं समभ्यसेत् ॥

ப்ருஹஸ்பதி :—தனக்கு உகந்த சுகமான ஆஸன பந்தனம் செய்துகொண்டு, இந்திரியங்களை அடக்கி ரிஷி, சந்தஸ் தேவதைகளை ஸ்மரித்து, அர்த்த நிமீலனத்துடன் மௌனமாக இருந்து ப்ராணயாமம் செய்யவேண்டும்.

स्मृत्यन्तरे— सप्तव्याहृतिसंयुक्तां गायत्रीं शिरसा सह ।
दशवारं जपित्वैव गायत्रीं तु ततो जपेत् ॥

ஏழு வ்யாஹ்ருதிகளுடன் கூடிய காயத்ரியை சிரஸ்ஸுடன் பத்து முறை ஜபித்து, பிறகு காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். அதேமாதிரி மூன்று ப்ராணாயாமங்களில் பத்து தடவை ப்ராணாயாம மந்திரங்களை ஜபித்து பிறகு காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். ஒரு ப்ராணாயாமத்தில் மட்டும் நான்கு தடவை ஜபம் செய்தால் பத்து தரம் ஜபித்ததாக ஆகும் என்பது கருத்து.

यमः— गायत्रीं चैव वेदांश्च तुलयाऽतोलयत् प्रभुः ।
एकतश्चतुरो वेदान् सांगांश्च सपदक्रमान् ॥
एकतश्चैव गायत्रीं तुल्यरूपा तु सा स्मृता ॥

எமன் :—ப்ரம்மாவானவர் காயத்ரியையும் வேதங்களையும் திராசிலுல் நிறுத்தார். அங்கங்களுடன் கூடிய வேதங்களை ஒரு பக்கத்திலும், காயத்ரியை ஒரு பக்கத்திலும் வைத்தார். ஆனுல் இரண்டும் சமமாக இருந்தது. ஆகையால் காயத்ரீ நான்கு வேதங்களுக்கும் சமமானது என்பது கருத்து.

मनुः— पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठेत्सावित्रीमार्क दर्शनात् ।
पश्चिमां तु समासीनः सम्यगार्क्षविभावनात् ॥

மனு :—காலை ஸந்தியா வந்தனத்தில் காயத்ரீ ஜபம் நின்று கொண்டு ஸூரியோதய பர்யந்தம் செய்யவேண்டும். ஸாயங்கால ஸந்தியா வந்தனத்தில் நக்ஷத்ர உதய பர்யந்தம் காய்த்ரீ ஜபம் உட்கார்ந்து செய்யவேண்டும்.

संवर्तः— गृहस्थो ब्रह्मचारी च शतमष्टोत्तरं जपेत् ।
वानप्रस्थो यतिश्चैव जपेदष्ट सहस्रकम् ॥

ஸம்வர்த்தர் :—பிரதி தினம் க்ருஹஸ்தனும், ப்ரம்மச் சாரியும் 108 தடவை ஸந்தியா வந்தனத்தில் காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். வாநப்ரஸ்த்தனும், குடீசிக ஸந்நி யாஸியும் 1008 தடவை காயத்ரீ ஜபம் செய்யவேண்டும்.

उत्तमं मानसं जप्यं उपांशु मध्यमं स्मृतम् ।
अधमं वाचिकं प्राहुस्सर्वमन्त्रेषु वै द्विजाः ॥

காயத்ரீ ஜபம் மனசினுல் செய்வது உத்தமமாகும். உதடு, நாக்கு, இந்த அவயங்கள் அசைய சிறிய குரலில் பிறருக்குக் காதில் விழாமல் ஜபம் செய்வது உபாம்சு என்று சொல்லப்படுகிறது, அந்த மாதிரி ஜபம் செய்வது மத்யம மாகும். பிறர் காதில் விழும்படி ஜபம் செய்வது வாசிக மாகும், அந்த மாதிரி ஜபம் செய்வது அதம்மாகும்.

रत्नावल्यां— पर्वभिस्तु जपेद्देवीं अन्यत्रानियमः स्मृतः ॥
गायत्र्या वेदमूलत्वात् वेदः पर्वसु गीयते ॥

காயத்ரியை விரல் ரேகைகளினுல் எண்ணி ஜபிக்கவேண் டும். இந்த மாதிரி காயத்ரீ ஜபம் செய்வது உத்தமம். காயத்ரீ வேதமாதாவானபடியால், வேதத்தை விரல் ரேகைகளில் ஸ்வரத்தை காட்டி பாராயணம் செய்வதால், காயத்ரியையும் ரேகைகளில் எண்ணி ஜபிப்பதுதான் சிறந் தது. மற்ற மந்திர ஜபங்களுக்கு இந்த மாதிரி நியமம் கிடையாது என்று அறியவும்.

पितामहः— एवं जप्त्वा यथाशक्ति ह्युदितेतु दिवाकरे ।
उत्तमेत्यनुवाकेन उद्वास्यतु यथागतम् ॥

ஸூரியோதய பர்யந்தம் காயத்ரீ ஜபம் செய்து பிறகு "உத்தமே சிகரே" என்ற மந்திரத்தினுல் காயத்ரீயை உத்வாஸனம் செய்யவேண்டும்.

व्यासः— अथोपतिष्ठेदादित्यं उद्यन्तं समाहितः ।
मन्त्रैस्तु विविधैस्सौरैः ऋग्यजुस्साभसंभवैः ॥

வியாஸர்:— ஸூரியனை ஏகாக்ர சித்தத்துடன் அந்த அந்த (ருக், எஜுர், ஸாம) வேத மந்திரங்களினுல் உபஸ்தானம் செய்ய வேண்டும். உபஸ்தானம் என்பது நின்று கொண்டு ஸ்தோத்ரம் செய்வது என்பதாகும். இது மாத்ரி மாத்யான்ஹிகத்திலும், ஸாயம் ஸந்தியா வந்தனத்திலும் உபஸ்தானம் செய்யவேண்டும்.

भरद्वाजः— उपस्थाय नमस्कुर्यात् चतुस्सन्ध्यादिदेवताः ।
सन्ध्यापुरस्तात् सावित्री गायत्री च सरस्वती ॥
एतास्सन्ध्यादयः प्रोक्ताः चतस्रो देवताः क्रमात् ॥

பரத்வாஜர்:— உபஸ்தானம் செய்தபிறகு ஸந்தியா முதலிய நான்கு தேவதைகளை நமஸ்கரிக்க வேண்டும். முதலில் ஸந்தியா, பிறகு, ஸாவித்ரீ, காயத்ரீ, ஸரஸ்வதி இவர்கள் கிரமமாக நான்கு தேவதை ஆவார்கள்.

प्राची च दक्षिणाचैव प्रतीचीचोत्तरोर्ध्वका ।
अधराचान्तरिक्षं च भूमिश्चाष्टोदिता दिशः ॥
एताः प्रदक्षिणेनैव प्रणमेत्स्व स्वमन्त्रतः ।
यमविष्णुविरूपाक्षसवितॄणामुपस्थितिम् ।
कुर्यात्तल्लिंगकैर्मन्त्रैः द्विजो याम्यादिदिङ्मुखः ॥

பிறகு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல் திக்கு, கீழ் திக்கு, அந்தரிக்ஷம், பூமி, என எட்டு திக்குகளை அவரவர்கள் நாம மந்திரங்களைச் சொல்லி ப்ரதக்ஷிணமாய் நமஸ்கரிக்கவேண்டும். யமன், விஷ்ணு, விரூபாக்ஷன், ஸவிதா இந்த தேவதைகளையும் அவரவர்கள் மந்திரங்களால் அந்த அந்த திக்கைப் பார்த்து உபஸ்தானம் செய்யவேண்டும்.

ஸந்தியாவந்தனம் அவரவர்கள் குலாச்சாரப்பிரகாரம் நன்கு தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டும். பிறகு பகவானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.

21. काम्यजप्यानि—காம்ய ஜபங்கள்.

बोधायनः— पवित्रैर्मार्जनं कुर्वन् रुद्रैकादशिनीं जपन् ।
मुच्यते सर्वपापेभ्यो महतः पातकादृते ॥

போதாயனர்:—சுத்திகரமான மந்திரங்களால் ப்ரோக்ஷணம் செய்துகொண்டு, ஸ்ரீருத்ரத்தை 11 தடவை ஆவர்த்தி செய்வதால் சகல பாபங்களிலிருந்தும் விடுபடுவான் என்று அறியவும்.

अत्रिः— एकादशगुणान्वापि रुद्रानावर्त्य धर्मवित् ।
महापापैरपि स्पृष्टो मुच्यते नात्र संशयः ॥

அத்ரி:—பதினோரு தடவை ஸ்ரீருத்ரம் ஜபம் செய்தால் மஹா பாதகம் முதலிய சகல பாபங்களிலிருந்தும் விடுபடுவான். இது தீர்மானமான விஷயம் என்று அத்ரி சொல்லுகிறார்.

विष्णुः— स्नातः पवित्राणि यथाशक्ति जपेद्विशेषतः ।
सावित्रीं पुरुषसूक्तं च नैताभ्यां सदृशमस्ति ॥

விஷ்ணு:—ஸ்னானம் செய்து பவித்ராணி-பாபக்ஷயகரங்களான மந்திரங்களை முடிந்த அளவில் ஜபிக்கவும். விசேஷமாக தினமும் ஸாவித்ரீயையும், புருஷஸூக்தத்தையும் ஜபம் செய்யவும். இவைகளுக்குச் சமமான மந்திரங்கள் கிடையாது. அவ்வளவு புகழ் உள்ளவை என்பது கருத்து.

संवर्तः :— षण्मासं पंचमासं वा नियतो नियताशनः ।
जप्त्वा तु पौरुषं सूक्तं मुच्यते सर्व पातकैः ॥

ஸம்வர்த்தர் :—ஐந்து அல்லது ஆறு மாதம் ஆஹார நியமத்துடன் ப்ரம்மசர்யத்துடன் இருந்து எவன் புருஷ ஸூக்தத்தை ஜபிக்கிருனே அவன் சகல பாபங்களிலிருந்தும் விடுபடுகிருன்.

जाबालिः— हरे र्नाम परं जप्यं ध्येयं गेयं निरन्तरम् ।
कीर्तनीयं च सततं निर्वृतिं बहुधेच्छता ॥

ஜாபாலி :— ஹரியினுடைய நாம ஜபம் சிறந்தது. ஹரி நாமாக்களை தியானம் செய்வது, கானம் செய்வது, கீர்த்தனம் செய்வது இவைகள் எப்பொழுதும் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மனதுக்கு சந்தோஷம், நிம்மதி இவைகள் ஏற்படும்.

वसिष्ठः— हित्वा सकल पापानि लब्ध्वा सुकृत संचयम् ।
सुपूतो जायते धीमान् मुरजिन्नामकीर्तनात् ॥

வஸிஷ்டர் :-- புத்திமாஞன மனுஷ்யன் விஷ்ணு நாமாக்களை உச்சரிப்பதிஞல் சகல பாபங்களைப் போக்கிக் கொண்டு புண்ணியத்தை அடைந்து பரிசுத்தஞக ஆகிருன்.

कृष्ण कृष्णेति रामेति सजपन् हरितत्परः ।
राजसूयसहस्राणां फलमाप्नोति मानवः ॥
नित्यकर्माविरुद्धेषु कालेषु जप इष्यते ॥

ஹரிபக்தஞன மனிதன் க்ருஷ்ண, ராம என்று எப்பொழுதும் ஜபிக்கின்றவன் ராஜஸூய யாகங்களுடைய பலத்தை அடைகிருன். ஆஞல் நித்ய கர்மகாலங்களில் நித்ய கர்மாக்களைச் செய்த பிறகு மற்ற காலங்களில் ஹரி நாம ஜபம் செய்யவேண்டும்.

श्रीशब्दपूर्वं जयशब्दमध्यं जयद्वयादुत्तरतस्तथैव ।
त्रिसप्तकृत्वो रघुनाथनाम जप्तं विहन्याद्द्विजकोटिहत्याम् ॥

ஸ்ரீராம ஜயராம ஜய ஜய ராம என்று பதிமூன்று அக்ஷரங்களுள்ள மந்திரத்தை இருபத்தொரு முறை ஜபித்தால் அது கோடிக்கணக்கான ப்ரம்மஹத்யா தோஷத்தைப் நசிக்கச்செய்கிறது.

भृगुः— कोटिशो मनुजानां वै भीतिदं समुपस्थितम् ।
राम रामेति संकीर्त्य तन्नाशयति मानवः ॥

ப்ருகு :— மனிதனுக்குப் பயத்தைக் கொடுக்கக்கூடிய ஆபத்துக்கள் கோடிக்கணக்கில் வந்தாலும் ராம ராம என்று உச்சரித்தால் வந்த ஆபத்துக்கள் விலகி விடும்.

नारदीये— शिवशंकर रुद्रेश नीलकण्ठ त्रिलोचन ।
इतीरयन्ति ये नित्यं न कलिर्बाधते च तान् ॥

எந்த மனிதர்கள் சிவ, சங்கர, ருத்ர, ஈச, நீலகண்ட, திரிலோசன, என்ற ஆறு சிவ நாமாக்களை எப்பொழுதும் கீர்த்தனம் செய்கிறார்களோ அவர்களை கலி புருஷன் கெடுக்கமாட்டான்.

महादेव विरूपाक्ष गंगाधर मृडाव्यय ।
इतीरयन्ति ये नित्यं ते कृतार्था न संशयः ॥

எந்த மனிதர்கள் மஹாதேவ, விருபாக்ஷ, கங்காதர, ம்ருட, அவ்யய, என்று சிவ நாமாக்களை கீர்த்தனம் செய்கிறார்களோ அவர்கள் க்ருதார்த்தாக்கள்; அதாவது செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யதவர்களாகக் கருதப் படுகிறார்கள்.

22. दर्भप्रशंसा – தர்பங்களுடைய புகழ்.

गोभिलः— कुशमूले स्थितो ब्रह्मा कुशमध्ये तु केशवः ।
कुशाग्रे शंकरं विद्यात् सर्वे देवास्समन्ततः ॥

கோபிலர் :— தர்பம் என்பது பொதுவான பெயர், தர்பவிசேஷம் என்று சொல்லப்படுகிறது, இது கங்காதீரங்களில் அகப்படும். குசமூலத்தில் ப்ரம்மாவும், குச மத்யத்தில் கேசவனும், குசாக்ரத்தில் சங்கரனும், மற்ற பாகங்களில் எல்லா தேவதைகளும் இருக்கிறார்கள். ஆகையால் கர்மாக்களில் குசத்தை உபயோகப்படுத்துவது ச்லாக்கியம்.

हारीतः— कुशहस्तेन यज्जप्तं दानं चैव कुशैस्सह ।
कुशहस्तस्तु यो भुंक्ते तस्य संख्या न विद्यते ॥

ஹாரிதர் :— குசத்தை கையில் பவித்ரம் முதலியதாக தரித்து செய்த ஜபம், தானம், போஜனம் இவைகள் அளவு கடந்த புண்ணியங்களைக் கொடுக்கக்கூடியது.

कौशिकः— कुशासनं परं पूतं यतीनां तु विशेषतः ।
कुशासनोपविष्टस्य सिध्यते योग उत्तमः ॥

கௌசிகர் :— குசாஸனம் ரொம்ப பரிசுத்தமானது. இது ஸந்நியாஸிகளுக்கு ரொம்பச் சிறந்தது. குசாஸனத்தில் உட்கார்ந்து ஜபம் செய்தால் யோக ஸித்தி ஏற்படும்.

शंखः— कुशालाभे द्विजश्रेष्ठः काशैः कुर्वीत यत्नतः ।
तर्पणादीनिकर्माणि काशाः कुश समाः स्मृताः ॥

சங்க:— குசம் கிடைக்காவிடில் நாணல்களால் தர்ப்பணம் முதலிய வைதீக கர்மாக்களைச் செய்யவேண்டும். நாணல் குசங்களுக்குச் சமமானது.

वृद्धवसिष्ठः— विश्वामित्राः कुशाः काशाः दूर्वा व्रीहय एव च ।
बल्वजाश्च यवाश्चैव सप्तदर्भाः प्रकीर्तिताः ॥

விச்வாமித்ரம், குசம், நாணல், அருகம்புல், நெல்பயிர், பல்பஜம், யவைபுல், இந்த ஏழும் தர்ப்பங்கள் என்று கூறப்படுகிறது.

काशं तु रौद्रं विज्ञेयं कौशं ब्राह्मं तथा स्मृतम् ।
आर्षं तु दौर्वमाख्यातं वैश्वामित्रं तु वैष्णवम् ॥

குசம் ப்ரம்மாவுக்கும், நாணல் ருத்ரனுக்கும், அருகம்புல் ரிஷிகளுக்கும், விச்வாமித்ரம் விஷ்ணுவுக்கும் பிரியமானவை என்று அறியவும்.

श्रुति स्मृतिषु मित्रत्वात् विप्राणां विश्वकर्मणाम् ।
विश्वांहसाममित्रत्वात् विश्वामित्र उदाहृतः ॥

ப்ராம்மணர்களுக்கு ச்ருதி ஸ்ம்ருதி விஹிதமான கார்யங்களுக்கு மித்ரமாக இருப்பதாலும், ஸமஸ்த பாபங்களுக்கும் அமித்ரனாக, சத்ருவாக இருப்பதாலும், விச்வாமித்ரம் என்று பெயர் ஏற்பட்டது.

कुशकाशाद्यभावेतु अन्ये दर्भा यथोचितम् ।

குசம், நாணல் கிடைக்காவிடில் மற்ற தர்ப்பங்களை உசிதப்படி உபயோகப்படுத்தவும்.

कुशं पवित्रं ताम्रं वा रजतं हेम चैव वा ।
बिभृयाद्दक्षिणे पाणौ पवित्रं चोत्तरोत्तरम् ॥

குசம், தாமிரம், வெள்ளி, தங்கம் இவைகளால் செய்யப்பட்ட பவித்ரம் (மோதிரம்) வலதுகையில் தரித்துக்கொள்ளவும். இவைகள் பவித்ரமானவைகள்.

शंखः— काशहस्तस्तु नाचामेत् कदाचि द्विधिशंकया ।

சங்க:— பவித்ரபாணியாக ஆசமனம் செய்யவேண்டும் என்று முறை இருக்கிறது என்று நினைத்து, ஒருபொழுதும் நாணலைக் கையில் தரித்து ஆசமனம் செய்யக் கூடாது.

हारीतः— माघे न भस्यमा यातु तस्यां दर्भोंच्च यो मतः ।
अयातयामास्ते दर्भाः नियोज्यास्स्युः पुनः पुनः ॥

ஹாரீதர் :—மாக மாதத்திலும், ச்ராவண மாதத்திலும் உள்ள அமாவாஸ்யையில் தர்ப ஸ்ங்க்ரஹம் செய்யவேண்டும். அந்த சமயத்தில் கிரஹிக்கப்பட்ட தர்ப்பங்கள் எப்பொழுதும் புதியனவாகக் கருதப்படுகின்றன. எந்தக் காரியங்களுக்கும் உபயோகப்படுத்தலாம்.

मासि मास्युद्धृतादर्भाः मासि मास्येव चोदिताः ॥

அந்த அந்த மாதங்களில் கிரஹிக்கப்பட்ட தர்ப்பங்கள் அந்த மாதத்திற்குத்தான் உபயோகப்படும். அடுத்த மாதத்திற்கு சிலாக்கியமாகாது என்று அறியவும்.

समित्पुष्पकुशादीनि श्रोत्रियः स्वयमाहरेत् ।

ஸமித்துக்கள், புஷ்பங்கள், தர்ப்பங்கள் இவைகளை ப்ராம்மணன் தானுகவே சேகரித்துக்கொள்ளவேண்டும். மற்றவர் கிரஹித்தது சிலாக்கியமாகாது என்று அறியவும்.

23. होमविधानम्— ஹோமம் செய்யும் விதி.

पुलस्त्यः— तेनद्रव्याण्यशेषाणि प्रोक्ष्याचम्य पुनर्गृहे ।
ततः कर्माणि कुर्वीत सत्क्रियाश्च द्विजोत्तमः ॥

புலஸ்த்யர் :—ஸ்நானம் செய்து ஸந்தியா வந்தனம் செய்தபிறகு கிருஹத்தையும் ஸமஸ்த திரவியங்களையும் ப்ரோக்ஷணம் செய்ய தீர்த்தம் கிரஹித்துக்கொண்டு அந்த தீர்த்தத்தால் எல்லா திரவியங்களையும் கிருஹத்தையும் ப்ரோக்ஷணம் செய்து ஆசமனம் செய்து பிறகு வேத விஹித கர்மாக்களை ஆரம்பிக்கவேண்டும்.

हारीतः— उपास्य विधिव सन्ध्यां उपास्थाय दिवाकरम् ।
सायं प्रातरुपासीत विवाहाग्निं द्विजोत्तमः ॥

ஹாரீதர் :— ப்ராம்மணன் முறைப்படி ஸந்தியா வந்தனம் செய்து ஸூர்ய நமஸ்காரம் செய்து ஸாயங்காலத்திலும் ப்ராதக: காலத்திலும் விவாஹாக்னியில் ஹோமம் செய்யவேண்டும்.

आपस्तम्बः— सायं प्रातरत ऊर्ध्वं हस्तेनैव आहुती तण्डुलै र्यवै र्वा जुहुयात् । स्थालीपाकवद्देवतं सौरी पूर्वाहुतिः प्रातरित्येके उभयतः परिषेचनं यथा पुरस्तात् ॥

ஆபஸ்தம்பர் :— ஆக்னேயஸ் ஸ்தாலிபாகத்திற்குப் பிறகு இந்த இரண்டு ஆஹுதிகளை அரிசியாலும், யவத்தாலும், கையினால் ஹோமம் செய்யவேண்டும். ஸ்தாலீ பாகத்திற்கு போல் தேவதைகள், சிலர் காலையில் முதலாஹுதி ஸூரியனை உத்தேசித்துச் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆஹுதிகளுக்கு முன்பும் பின்பும் பரிஷேசனம் செய்யவும்.

यत्र क्वचनाग्निमुप समाधास्यन् तत्र प्राचीरुदीचीश्च तिस्रो रेखा लिखित्वाऽद्भिरवोक्ष्य अग्निमुपसमिन्ध्यादुत्सिच्यैतदुदकमुत्तरेण पूर्वेण वा ऽन्यदुपदध्यात् ।

எந்த இடத்தில் அக்னி ப்ரதிஷ்டை செய்யப்போகிருேே அந்த இடத்தில் கிழக்கில் முடிவதும் வடக்கில் முடிவது மான மூன்று மூன்றுகோடுகளைக்கீறி ஜலத்தால் ப்ரோக்ஷித்து அவ்விடத்தில் அக்னி ப்ரதிஷ்டை செய்து ஜ்வலிக்கச் செய்து, ப்ரோக்ஷித்த ஜலத்தில் மீதியை அக்னிக்கு வடக்கில் அல்லது கிழக்கில் கொட்டிவிட்டு அந்த இடத்தில் வேறு ஜலத்தை வைக்கவேண்டும். இது அக்னியை ப்ரதிஷ்டை செய்யும் முறையாகும்.

विष्णुः — स्मार्तमौपासने कुर्यात् श्रौतं वैतानिके गृही ।
लौकिके विधुराणां तु विधिरेष पुरातनः ॥
बहवो यत्र होतारः शान्तिके पौष्टिके तथा ।
लौकिकेऽग्नौ तदा कुर्यात् गृह्याग्नौ न कदाचन ॥

விஷ்ணு :— கிருஹஸ்தன் ஸ்மார்த்த காரியங்களான ஸ்தாலீபாகம், ச்ராத்தம் முதலிய கர்மாக்களை ஒளபாஸனாக்னியில் செய்யவேண்டும். ச்ரௌத காரியங்களை த்ரேதாக்னிகளில் செய்யவேண்டும். பத்தினி இல்லாதவர்கள் லௌகிகாக்னியில் கர்மாக்களை செய்யவேண்டும். அநேகர்கள் சேர்ந்து செய்யும் சாந்தி முதலிய காரியங்களில் லௌகிகாக்னியைத்தான் வைத்துக்கொள்ளவேண்டும். ஒளபாஸனாக்னியில் செய்யக்கூடாது.

श्रौतं कर्म न चेच्छक्तः कर्तुं स्मार्तं समाचरेत् ।
अत्राप्यशक्तः करणे सदाचारं लभेद् बुधः ॥

ச்ரௌத கர்மா அனுஷ்டிக்க முடியாவிடில் ஸ்மார்த்தாக்னியில் கர்மா செய்யவேண்டும். அதுவும் செய்ய சக்தி இல்லையேயானால், ஸ்நானம்-ஸந்தியா-பூஜை-ஜபம் இவைகளைச் செய்யவேண்டும். இவைகள் ஸதா சார சப்தத்தினால் சொல்லப்படுகிறது.

स्मृत्यर्थसारे— होमे मुख्यो यजमानः पत्नीपुत्रश्चकन्यका ।
ऋत्विक् शिष्यो गुरु र्भ्राता भागि नेयस्सुतापतिः ॥
एतैरेव हुतं यत्तु तद्धुतं स्वयमेव तु ।
पर्युक्षणं विना पत्नी जुहुयात् कन्यकाऽपि वा ॥

ஔபாஸன ஹோமத்தில் யஜமானன் முக்கிய அதிகாரியாவான். அவருக்கு வேறு காரணங்களினுல் செய்யமுடியா விட்டால், பத்தினி, புத்திரன், கன்யகா, ருத்வித், சிஷ்யன், குரு, சகோதரன், மருமகன், மாப்பிள்ளை, இவர்களும் ஔபாஸன ஹோமம் செய்யலாம். இவர்கள் செய்தால் யஜமானன் செய்தது மாதிரியாகும். பத்தினியும், பெண்ணும் ஹோமம் செய்யும்பொழுது பரிஷேசனம் செய்யாமல் ஹோமம் மாத்திரம் செய்யவேண்டும்.

गर्गः— कृतदारो न वै तिष्ठेत् क्षणमप्यग्निना विना ।
तिष्ठेत चेद्द्विजो व्रात्यः तथा च पतितो भवेत् ॥

கர்கர் :— கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தனுக இருக்கிறவன் ஒரு க்ஷணம்கூட அக்னியில்லாமல் இருக்கக் கூடாது. அப்படி அக்னி இல்லாமல் இருந்தால் அவனை பதிதன், வ்ராத்யன் என்று சொல்லப்படுகிறது.

व्यासः— यो हित्वा विवाहाग्निं गृहस्थ इति मन्यते ।
अन्नं तस्य न भोक्तव्यं वृथा पाको हि स स्मृतः ॥

வ்யாஸர் :— எவன் ஔபாஸன ஹோமம் செய்யாமல் தன்னை கிருஹஸ்தன் என்று நினைக்கிருனே அவனுடைய அன்னத்தை ஸாதுக்கள் புஜிக்கமாட்டார்கள். அவன் வீணுக சமைக்கிறவன் (விதாபாகன்) என்று அழைக்கப்படுகிருன்.

कात्यायनः— षष्टि प्रस्थमितं धान्यं त्रिप्रस्थविमितं घृतम् ।
औपासनाग्नौ नष्टे तु वत्सरस्य विधीयते ॥

காத்யாயனர் :— ஒரு * வருஷ காலம் ஔபாஸன ஹோமம் செய்யாமல் இருந்தால் 60 படி அரிசியும். 3 படி நெய்யும் தானம் செய்து புனஸ் ஸந்தானம் செய்து கொள்ள வேண்டும்.

शाटचायनिः— यावत्कालमहोमी स्यात् तावद्द्रव्यं त्वशेषतः ।
तद्दानं चैव विप्रेभ्यः यथा होमस्तथैवतत् ॥

எவ்வளவு காலம் ஹோமம் செய்யவில்லையோ அவ்வளவு ஹோம திரவியத்தை ப்ராம்மணனுக்குத் தானம் செய்து பிறகு அக்னி ஸந்தானம் செய்துகொள்ளவேண்டும்.

बृहस्पतिः— सूतके मृतके चैव अशक्तौ श्राद्धभोजने ।
प्रवासादि निमित्तेषु हावयेन्नतु हापयेत् ॥

ப்ருஹஸ்பதி:— ஜனனசௌசம், மரணசௌசம், சக்தியின்மை, ச்ரார்த்த போஜனம், வெளியூர் செல்வது முதலிய காரணங்களினால் ஹோமத்தை நிறுத்தக் கூடாது. வேறு மனுஷ்யர்களால் ஹோமம் செய்யச் சொல்லவேண்டும்.

24. होमकालः—ஹோமகாலம்

आपस्तम्बः — अधिवृक्षसूर्ये आविस्सूर्ये वा ।

ஆபஸ்தம்பர் ச்ரௌதாக்னியை ப்ரணயனம் செய்ய காலம் குறிப்பிடுகிறார். இந்த ஸூத்திரத்தில் வா என்பது ஸமுச்சயத்தைச் சொல்லுகிறது. இரண்டு ஸூர்ய சப்தமும் ஸூரிய கிரணங்களை தெரிவிக்கிறது. மாலையில் பூமியிலிருந்து மேலே கிளம்பிய ஸூரிய கிரணங்கள் மரங்களின்

மேல் இருக்கின்ற காலம் "அதிவ்ருக்ஷ ஸூரிய:" என்பதினால் ஸாயம் காலம் அக்னிஹோத்திரத்தின் பொருட்டு அக்னி ப்ரணயனம் செய்யும் காலமாகும். அதே மாதிரி காலையில் கிழக்கில் ஸூரிய கிரணங்கள் பிரகாசமாகும் காலம் "ஆவிஸ் ஸூர்ய:" என்பதாகும். அந்தக் காலத்தில் ப்ராதக: கால அக்னிஹோத்ர அக்னியை ப்ரணயனம் செய்ய வேண்டும்.

गृह्यपरिशिष्टे— अनस्तमित आदित्ये सायमग्नेः
प्रादुष्करणमनुदिते प्रातः ।

மாலையில் ஸூரியன் அஸ்தமிக்காத காலத்திலும் காலையில் ஸூரியன் உதிக்காத காலத்திலும் அக்னி ப்ரணயனம் செய்யவேண்டும்.

प्रातर्होमे संगवान्तः कालस्तूदितहोमिनः ।
सायमस्तमिते होमकालस्तु नवनाडिकाः ॥

உதித ஹோமிகளுக்குக் காலையில் ஸங்கவ காலம் முடிய அக்னிஹோத்ர ஹோம காலம் என்றும், மாலையில் ஸூரிய அஸ்மனத்திற்குப் பிறகு ஒன்பது நாழிகைகள் பர்யந்தம் அக்னிஹோத்ர காலம் என்றும் அறியவும். அதற்கு மேல் கௌண காலம். காலாதி பத்தி ப்ராயச்சித்தம் செய்து அக்னிஹோத்ரம் அனுஷ்டிக்கவேண்டும்.

गोभिलः— अथयदि गृह्येऽग्नौ सायं प्रातर्होमयोः दर्शपूर्णमासयो र्वा हव्यं होतारं नाधि गच्छेत् कथं कुर्यादिति । आसायमाहुतेः प्रातराहुतिर्नात्येति, आप्रातराहुते स्सायमाहुतिः । आ अमावास्यायाः पौर्णमासी नात्येति आपौर्णमास्या अमावास्याः ॥

கோபிலர் :— ஸந்தியாவந்தனம் செய்த பிறகு ஔபாஸனுக்னியை மூட்டி, கோமயசுஷ்கம் (விராட்டி) இந்தனம் இவைகளை போட்டுவிட்டு, நன்ருக அக்னி பிடித்துக் கனிந்த பிறகு ஔபாஸன ஹோமம் செய்ய வேண்டும். ஹோம த்ரவ்யம் யஜமானுக்குக் கிடைக்காவிட்டால் ப்ராத: கால ஆஹுதியை ஸாயங்கால ஔபாஸனம்வரையில் செய்யலாம். அதே மாதிரி ஸாயங்கால ஆஹுதியை ப்ராத: கால ஔபாஸனுக்னியில் பூர்வ கால ஆஹுதியைச் சேர்த்து செய்யலாம் என்றும் அறியவும். பூர்ணமாஸ ஸ்தாலீபாகம் விட்டுப்போனுல் அமாவாஸ்யை பர்யந்தம் செய்யலாம். அதே மாதிரி தர்ச ஸ்தாலீபாகத்தை பூர்ணிமை பர்யந்தம் செய்யலாம். அதிக்ராந்த தோஷம் ஏற்படாது. ஆனுல் அது கௌண காலமாகும். முக்ய காலம் ப்ரதமை என்று அறியவும்.

भारद्वाजः— आसायमाहुति कालात् प्रातराहुति नातीयादा
प्रातराहुतिकालात् सायमाहुतिकात् ।

பாரத்வாஜர் :— ஸாய மாஹுதி கால பர்யந்தம் விட்டுப்போன ப்ராத ரௌபாஸனமும் ப்ராத ராஹுதி கால பர்யந்தம், ஸாயமௌபாஸனமும் செய்யலாம். அதிக்ரமித்த தோஷமேற்படாது.

25. होमार्हास्समिधः—ஹோமார்ஹமான ஸமித்துக்கள்.

स्मृत्यर्थसारे— पलाशखदिराश्वत्थशम्युदुं बरजा समित् ।
अपामार्गार्क दूर्वाश्च कुशा श्चेत्यपरे विदुः ॥

புரசு, கருங்காலி, அரசு, வன்னி, அத்தி இந்த மரத்தின் ஸமித்துக்களும், நாயுருவி, எருக்கு, அருகம்புல், தர்ப்பம், இவைகளும் ஹோமயோக்யமாகச் சொல்லப்படுகிறது.

सत्वचस्समिधः कार्या ऋज्वयश्लक्ष्णास्समास्तथा ।
शस्ता दशाङ्गुलास्तास्तु द्वादशाङ्गुलिकास्तथा ॥
आर्द्राश्शुष्कास्समच्छेदास्तर्जन्यङ्गुलवर्तुलाः ।
अपाटिताश्चाद्विशिखाः कृमिदोषविवर्जिताः ॥

ஸமித்துக்கள் நல்ல தோலுள்ளவைகளாயும், கோண லில்லாதவைகளாயும், மழமழப்புள்ளவைகளாயும், ஒரே மாதிரியாயும் இருக்கவேண்டும். பத்து அல்லது பன்னி ரெண்டு அங்குலமுள்ளவை சிறந்தவைகளாகும். அவைகள் ஈரமுள்ளவைகளாயும், காய்ந்தவைகளாகவும், சரியாக வெட்டப்பட்டவைகளாகவும், ஆள்காட்டி விரல் அளவிற்கு உருண்டையாயும், பிளக்கப்படாதவைகளாயும், இருகிளை யில்லாதவைகளாயும் புழுவெட்டு இல்லாதவைகளாயும் இருக்கவேண்டும்.

समित् पवित्रं वेदश्च त्रयं प्रादेशसंमितम्
इध्मस्तु द्विगुणः कार्यः परिधिस्त्रिगुणः स्मृतः ॥
स्मार्ते प्रादेश इध्मो वा द्विगुणः परिधिः स्मृतः ॥

ஸமித்து, பவித்ரம், வேதம் இம்மூன்றும் ஒட்டை அள வுள்ளதாக இருக்கவேண்டும். இத்மம் இரண்டு மடங்கும், பரிதி மூன்று மடங்கும் நீளமுள்ளதாக இருக்கவேண்டும் (இது ச்ரௌத கர்மாக்களில்). ஸ்மார்த்தத்தில் இத்மம் ஒரு ஒட்டை யளவும், பரிதி இரண்டு ஒட்டையளவுள்ள தாயுமிருக்கலாம் என்று அறியவும்.

तत्रैतान्वर्जयेद्वृक्षान् कोविदारविभीतकौ ।
कपित्थामलकौ राजवृक्षं शाकद्रुमं तथा ॥

नीपं निम्बं करंजं च तिलकं शल्मलीमपि ।
श्लेष्मातकमपि त्यक्त्वा ग्राह्योऽन्यस्सकलोद्रुमः ॥
तुलसीकाष्ठयुक्तेऽग्नौ जुह्वतामक्षयं फलम् ॥

அக்னியில் இந்தனமாக உபயோகப்படுத்தக் கூடாத வ்ருக்ஷங்கள் சொல்லப்படுகின்றன. மலையகத்தி, தானி, விளா, நெல்லி, கொன்னை, பாலை, கடம்பு, வேம்பு, புன்கு, திலகம், முள்ளிலவு, நறுவிளி இந்த மரங்களின் ஸமித்துக்கள் விறகுகள் ஒருபொழுதும் அக்னியின் பொருட்டு உபயோகப்படுத்தக்கூடாது. காய்ந்த துளசி சுள்ளிகளால் ஜ்வலித்த அக்னியில் ஹோமம் செய்வது அக்ஷய பலத்தைக் கொடுக்கும் என்று அறியவும்.

आपस्तम्बः :— नाप्रोक्षितमिन्धनमग्नावादध्यात् ॥

ஆபஸ்தம்பர் :— அக்னியில் போடும் கட்டைகளைப் பிரோக்ஷிக்காமல் போடக்கூடாது.

26. होमद्रव्याणि — ஹோம த்ரவியங்கள்.

कात्यायनः — हविस्तु त्रिविधं ज्ञेयं कृतं चैव कृताकृतम् ।
अकृतं च क्रमादेषां लक्षणं सम्यगुच्यते ॥
कृतमोदनसक्त्वादि तण्डुलादि कृताकृतम् ।
व्रीह्यादि चाकृतं प्रोक्तं इति हव्यं त्रिधा बुधैः ॥

காத்யாயனர் :—க்ருதம், க்ருதாக்ருதம், அக்ருதம் என்று மூன்று விதமாயுள்ளது ஹவிஸ் என்று அறியவும். இவைகளுக்கு க்ரமமாக லக்ஷணம் சொல்லப்படுகிறது. அன்னம், மாவு முதலியவை க்ருதமெனப்படும். அரிசி முதலியது க்ருதாக்ருதம். நெல் முதலியது அக்ருதமெனச் சொல்லப்பட்டது. இவ்விதம் மூன்று விதமாய் ஹவிஸ்ஸானது வித்வான்களால் சொல்லப்பட்டது.

आपस्तम्बः— पयसा पशुकामस्य, जुहुयाद्दध्नेन्द्रियकामस्य, यवाग्वा ग्रामकामस्य, ओदनेन अन्नाद्यकामस्य, तण्डुलैरोजस्कामस्य, बलकामस्येके, मांसेन यशस्कामस्य, सोमेन ब्रह्मवर्चसकामस्य, आज्येन तेजस्कामस्य, पयसो नित्यस्यैव सति कामे फलवचनम् ।

ஆபஸ்தம்பர் :—பசுக்களை விரும்புகிறவன் பாலினாலும், இந்திரிய காமன் தயிரினாலும், பந்து ஸம்ருத்தியைவிரும்பு கிறவன் கஞ்சியினாலும், அன்னத்தை விரும்புகிறவன் அன்னத்தாலும், ஓஜஸ்ஸை விரும்புகிறவன் அரிசியினாலும், யசஸ்ஸை விரும்புகிறவன் மாமிசத்தினாலும், ப்ரம்ம வர்ச்சஸ்ஸை விரும்புகிறவன் ஸோம ரஸத்தினாலும், தேஜஸ்ஸை விரும்புகிறவன் ஆஜ்யத்தாலும், ஹோமம் செய்யவேண்டும். பயஸ் (பால்) ஹோமம் நித்யமும் ச்லாக்கியமானது. பலத்தை உத்தேசித்துத் தனியாகச் சொல்லப்பட்டது.

व्यासः— कपिलायास्तु पयसा येऽग्निहोत्राण्युपासते ।
आदित्यमण्डलंभित्वा यान्ति ब्रह्म सनातनम् ॥

வ்யாஸர் :—காராம் பசுவின் பாலினால் எவர்கள் அக்னி ஹோத்ர ஹோமம் செய்கிறார்களோ அவர்கள் ஸூரிய மண்டலத்தை பிளந்துகொண்டு சாச்வதமான ப்ரம்மத்தை அடைகிறார்கள்.

येन सायं जुहुयात् तेन प्रातः ।

எந்த திரவியத்தால் மாலையில் ஹோமம் செய்கிறானோ அதனாலேயே காலையில் ஹோமம் செய்யவேண்டும்.

स्मृत्यर्थसारे—शालिश्यामाक नीवारव्रीहिगोधूमयावकाः ।
एतेषां तण्डुला होम्याः यवनालाः प्रियङ्गवः ॥

नीवाराः शालयश्चैव गोधूमा व्रीहयो यवाः ।
स्वरूपेणैव होम्यास्युस्स्वरूपेणैव वै तिलाः ॥

செந்நெல், சாமை, நீவாரம், சம்பா நெல், கோதுமை, யாவகம், இவைகளின் அரிசிகள் ஹோமம் செய்யதகுந்தவைகள். யாவநாளம், ப்ரியங்கு, நீவாரம் நெல், கோதுமை சம்பா நெல், யவை இவைகள் உள்ளபடியே ஹோமம் செய்யலாம். எள்ளும் அதே மாதிரி ஹோமம் செய்யலாம்.

द्रवं स्रुवेण होतव्यं पाणिना कठिनं हविः ।

திரவமாயுள்ள திரவியத்தை ஸ்ருவத்தினால் அப்படியே ஹோமம் செய்யவேண்டும். கடினமான திரவியத்தைக் கையினால் எடுத்து ஹோமம் செய்யவேண்டும்.

पयो दधि यवागूश्च सर्पिरोदनतण्डुलाः ।
सोमो मांसं तैलमापो दशैतान्यग्निहोत्रके ॥

பால், தயிர், கஞ்சி, நெய், அன்னம், அரிசி, ஸோமம், மாமிஸம், எண்ணெய், ஜலம் இந்த பத்து பதார்த்தங்களும் அக்னிஹோத்திர ஹோமங்களுக்கு உகந்தவைகள்.

स्यादग्निहोत्रवद्धार्थे संस्कारो मन्त्रवर्जितः ।
यद्वा त्रिः प्रोक्षणं तेषां मांसमौपासने न च ॥

அக்னிஹோத்ர ஹோமத்தில்போல் ஒளபாஸனாக்னியில் மந்திரமில்லாமல் ஸமஸ்காரம் செய்து அல்லது மூன்று தரம் ப்ரோக்ஷணம் செய்து ஹோமம் செய்யலாம். ஆனால் மாமிசத்தை ஹோமம் செய்யக்கூடாது.

पद्यग्निहोत्रहोमार्थं पयो न स्यात् कदाचन ।
तदा व्रीहि यवौ ग्राह्यावोषध्यन्तरमेववा ॥
नग्राह्यं सर्वथा माषवरकोदारकोद्रवम् ॥

அக்னிஹோத்ர ஹோமத்திற்கு பால் முக்கிய திரவ்ய மாகும். அது கிடைக்காவிடில் நெல், யவை இவைகளை ஹோம திரவியமாக எடுத்துக் கொள்ளலாம். வேறு ஔஷதி திரவியங்களும் கிரஹித்துக்கொள்ளலாம். ஆனால் உளுந்து, காட்டு பயிறு, நாய் தினை, கேழ்வரகு இவைகளை கிரஹிக்கக்கூடாது.

प्रस्थधान्यं चतुष्षष्टेराहुतेः परिकीर्तितम् ।
तिलानां तु तदर्धं स्यात्तदर्धं स्याद्घृतस्यतु ॥

ஒரு படி தானியம் அறுபத்து நான்கு ஆஹுதிகளுக்குப் போதுமானதாகும். எள்ளு அரைப்படியும், நெய் கால்படியும், அறுபத்து நான்கு ஆஹுதிகளுக்குப் போதுமானது என்று அறியவும்.

बोधायनः— व्रीहीणां वा यवानां वा शतमाहुतिरिष्यते ।
ओदनो द्विगुणोग्राह्यो मयूराण्डाकृतिस्तथा ॥
कुक्कुटाण्ड प्रमाणस्तु पिण्ड इत्यभिधीयते ।
अंगुष्ठपर्वमात्रं स्यादवदानं ततोऽपि च ।
ज्यायःस्विष्टकृदाद्यंतु चतुरङ्गुलसंमितम् ॥

போதாயனர் :—நெல், யவை இவைகள் 100 கொண்டது ஒரு ஆஹுதி பரிமாணமாகும். அன்னமானால் இரண்டு மடங்கு அளவு, அதாவது மயில் முட்டை அளவு என்று அறியவும். கோழி முட்டையின் அளவு பிண்டமெனப்படும்

அவதானம் என்பது பெருவிரல் கணு அளவுள்ளது. ஸ்விஷ்டக்ருத் முதலியது அவதானத்தை விடப்பெரியதாய் நாலு கணு அளவுள்ளதாக இருக்கவேண்டும்.

अङ्गुल्यग्रैर्न होतव्यं न कृत्वाऽङ्गुलिभेदनम् ।
अङ्गुल्युत्तरपार्श्वेन होतव्यमिति हि स्मृतिः ॥

ஔபாஸன ஹோமம் நுனி விரல்களால் செய்யக் கூடியது. விரல்களின் வடபுறத்தால் ஹோமம் செய்ய வேண்டும் என்பது ஸ்ம்ருதி வசனமாகும்.

उत्तानेन तु हस्तेनाथाङ्गुष्ठाग्रनिपीडितम् ।
संहताङ्गुलिपाणिस्तु वाग्यतो जुहुयाद्धविः ॥

நிமிர்த்தப்பட்டகையினால், பெருவிரலின் நுனியால் பிடிக்கப்பட்டுள்ள ஹவிஸ்ஸை, எல்லாவிரல்களும் சேர்ந்துள்ள கையையுடையவனாய் மௌனியாக ஹோமம் செய்ய வேண்டும்.

वस्त्रेण वाऽथपर्णेन पाणिशूर्पस्फ्यदारुभिः ।
व्यजनेनाग्निधमनं न कुर्यादितिहि स्मृति ॥

வஸ்திரம், இலை, கை, முறம், வாய், கட்டை, விசிறி, இவைகளால் அக்னியை ஜ்வலிக்கச் செய்யக்கூடாது என்று ஸ்ம்ருதி கூறுகிறது.

धमनीमन्तरेकृत्वा तृणं वा काष्ठमेव वा ।
मुखादग्निं समिन्धीत मुखादग्निरजायत ॥

ஊதுகுழாய், புல், கட்டை இவைகளில் ஒன்றை மத்தியில் வைத்துக்கொண்டு முகத்தினால் அக்னியை ஜ்வலிக்கச் செய்யவேண்டும். "முகாதக்னி ரஜாயத", விராட் புருஷ

டைய முகத்திலிருந்து அக்னி உண்டானுர் என்று வேதம் கூறுகிறது. முன்பு முகத்தால் அக்னியை ஜ்வலிக்கச் செய்யக்கூடாது என்பது வெறும் வாயிஞல் நடுவில் தமனியை வைத்துக்கொள்ளாமல் அக்னியை ஊதக்கூடாது என்று அறியவும்.

बहुशुष्केन्धने चाग्नौ सुसमिद्धे हुताशने ।
विधूमे ले लिहाने च होतव्यं कर्मसिद्धये ॥

காய்ந்த கட்டைகளால் ஜ்வலிக்கிறதாயும், புகை யில்லாததாயும், சின்ன சின்ன ஜ்வாலேயுடன் சாந்தமான தாயும் இருக்கிற அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும்.

आपस्तम्बः— शरोङ्गरा अभ्युहन्ते ततो नीलप्रकाशोऽर्चिरुदेति
ब्रह्मणि हुतंभवति ॥

ஆபஸ்தம்பர் :— அக்னியிலுள்ள தணல்கள் மெல்லிய தான சாம்பலுடன் சேருகின்றன, அவைகளிலிருந்து நீல ப்ரகாசமும் ஜ்வாலேயும் உண்டாகிறது; அக்காலத்தில் ஹோமம் செய்வது ப்ரம்மத்தினிடத்தில் ஹோமம் செய்த தாக ஆகிறது என்று அறியவும்.

स्वगृह्योक्तेन विधिना होमं कुर्याद्यथाविधि ॥

அக்னி காரியமானது அவர் அவர்கள் கிருஹ்ய ஸூத்திரத்தை அனுசரித்துச் செய்துகொண்டு ஹோமம் முறைப்படி செய்யவேண்டும் என்று அறியவும்.

व्यासः— स्नास्यतो वरुणश्शोभां जुह्वतोऽग्निः श्रियंहरेत् ।
भोजने मृत्युमाप्नोति तस्मान्मौनंत्रिषु स्मृतम् ॥

வ்யாஸர் :— ஸ்னான காலத்தில் பேசினால் வருணன் அழகை அபகரிப்பான். ஹோமம் செய்யும்பொழுது பேசினால் அக்னி பணத்தை அபகரிப்பான். சாப்பிடும் பொழுது பேசினும் ம்ருத்யுவினால் பீடிக்கப்படுவான். ஆகையால் பேசாமல் மௌனமாக இந்த மூன்று காரியமும் செய்யவேண்டும்.

आपस्तम्बः— नित्यो धार्योऽनुगतो मन्थ्यः श्रोत्रियागाराद्वाऽऽहार्यः ।

ஆபஸ்தம்பர் :— ஔபாஸனாக்னி எப்பொழுதும் தரிக்கப்படவேண்டும், நித்தியமாக இருக்கவேண்டும். அதாவது உகையில் (குண்டான்) அக்னியை ரக்ஷிக்கவேண்டும் என்பது கருத்து. அக்னி ஏதாவது காரணத்தால் அணைந்தால் மதனம் செய்து அக்னியை கிரஹிக்கலாம்: அல்லது வேதாத்யயனம் செய்த கிருஹஸ்தனுடைய கிருஹத்திலிருந்து அக்னியை கிரஹிக்க வேண்டும்.

चतूरात्रमहुतोऽग्निः लौकिकः संपद्यते ।

அக்னி தார்யமாக இருந்தாலும் நான்கு நாள் முழுவதும் ஹோமம் செய்யாவிட்டால் லௌகிகமாகிவிடும்.

शौनकः— अग्नावनुगते यत्र होमकालद्वयं व्रजेत् ।
उभयोर्विप्रवासे च लौकिकोऽग्निर्विधीयते ॥

சௌனகர் :— அக்னி அனுகதாமாகி (அணைந்து) இரண்டு காலம் ஹோமம் செய்யா விட்டாலும், தம்பதிகள் வெளியூர் சென்றாலும் அக்னியானது லௌகிகமாகிவிடும். அதாவது ஹோமத்திற்கு உகந்த அக்னியில்லை என்று அறியவும்.

भारद्वाजः— एकोऽग्निर्द्वादशाहं विच्छिन्नः पुनराधेयः ।

பாரத்வாஜர் :— ஔபாஸனாக்கினியானது அனுகதமானால் பன்னிரெண்டு நாள் பர்யந்தம் ப்ராயச்சித்தாஹுதி செய்து ஹோமம் செய்யலாம். மேற்கொண்டு 12 நாளுக்குப் பிறகுதான் புனஸ் ஸந்தானம் செய்ய வேண்டும்.

बोधायनः— अर्वाक्त्रिरात्रादयसेऽग्नये स्यात्ततः परं तन्तुमती च कार्या ।
आसप्तरात्रान्मनसे च हुत्वा आद्वादशाहात्पुनराद्धीत ॥
द्वादशदिनपर्यन्तमग्न्यनुगति प्रायश्चित्तमेवोक्तम् ।
नाग्निसन्धानं अत्रयथा स्वगृह्यं व्यवस्था ॥

போதாயனர் :— அக்னி அனுகதமாகி மூன்று நாளைக்குள்ளானால் "அயஸே அக்னேயே:" என்ற ஹோமம் செய்ய வேண்டும். பிறகு ஆறு நாள் பர்யந்தம் "தந்துமதீ" என்ற ரிக்கினால் ஹோமம் செய்யவேண்டும். பிறகு ஏழாவது நாள் முதல் 12 நாள் பர்யந்தம் "மனோஜ்யோதி:" என்ற ரிகிக்னால் ஹோமம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் புனராதானம் செய்துகொள்ள வேண்டும். இந்த போதாயன வசனத்தில் அக்னி அனுகத ப்ராயச்சித்தம் 12 நாள் வரையில் சொல்லப் பட்டிருக்கிறது. ஸந்தானம் சொல்லப்படவில்லை இந்த விஷயத்தில் அவரவர் க்ருஹ்யத்தைக் கொண்டு தீர்மானம் செய்துகொள்ளவும்.

एकाग्नेस्त्रिविधं समारोपणं आत्मन्यरण्योर्वा समित्सुवा ॥

எவ்விதத்தாலும் ஔபாஸனாக்னியை தரிக்க முடியாமல்போனால் மூன்று இடத்தில் ஸமாரோபணம் செய்யலாம். அதாவது அரணி கட்டைகளில், தன்னிடத்தில், ஸமித்துக்களில், ஸமாரோபணம் செய்யலாம். அதில் ஆத்ம ஸமாரோபணம் யஜமானன் ஸ்வயம் செய்யவேண்டும், ஸமித்தில் ரித்விக்கள் செய்யலாம்.

अंगिराः— यो दद्यात्कांचनं मेरुं पृथिवीं वा ससागराम् ।
तत्सायं प्रातर्होमस्य तुल्यं भवति वा न वा ॥

அங்கிரர் :— எவன் ஸ்வர்ணமயமான மேருவை அல்லது சகல பூமியையும் தானம் செய்கிருனே அவன் ஸாயம் ப்ராதக: செய்யப்பட்ட ஔபாஸன ஹோமத்தை முறைப்படி செய்ததிற்கான புண்ணியம் சமமாகுமா ஆகாதா என்பது தெரியவில்லை. அவ்வளவு உயர்ந்தது ஔபாஸன ஹோமம் என்பது கருத்து. அக்னிஹோத்ரத்தையும் உதாஹரிக்கலாம்.

मनुः— अग्नौ प्रास्ताऽऽहुतिस्सम्यक् आदित्यमुपतिष्ठते ।
आदित्याज्जायते वृष्टिः वृष्टेरन्नं ततः प्रजाः ॥
दैवे कर्मणियुक्तो हि बिभर्तीदं चराचरम् ॥

மனு :—அக்னியில் விதிப்படி செய்யப்பட்ட ஹோமம் ஸூரியனை அடைகிறது, பிறகு ஸூரியனிடமிருந்து மழை பெய்கிறது. மழையிலிருந்து பூமியில் அன்னம் உண்டாகிறது. பிறகு ஜனங்களுக்கு சௌக்கியம் ஏற்படுகிறது. ஆகையால் தெய்வகாரியமான ஹோமம் முதலியவைகளை சிரத்தையுடன் செய்கிறவன் உலகத்தை ரக்ஷிக்கிறுன் என்று அறியவும்.

27. ब्रह्मयज्ञविधिः— ப்ரம்மயக்ஞத்தின் முறை.

भरद्वाजः— कण्डूय पृष्ठतो गां तु कृत्वा चाश्वत्थवन्दनम् ।
उपगम्य गुरून् सर्वान् विप्रांश्चैवाभिवादयेत् ॥

பரத்வாஜர் :—பசுவை முதுகில் சொறிந்து, அரச மரத்தை ப்ரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து, பெரியோர்களையும், குருக்களையும் அருகில் சென்று நமஸ்கரிக்கவேண்டும். பிறகு ப்ரம்ஹ யக்ஞம் செய்யவேண்டும்.

तत्र श्रुतिः— ब्रह्मयज्ञेन यक्ष्यमाणः प्राच्यां दिशि ग्रामादच्छदिर्दर्श उदीच्यां प्रागुदीच्यां वोदित आदित्ये ।

ப்ரம்ம யக்ஞத்தைச் செய்கிறவன் ஸூரியன் உதித்த பிறகு, கிழக்கு திக்கில் அல்லது வடக்கு அல்லது ஈசான்ய திக்கில், கிராமத்திற்கு வெளியில், அதாவது எந்த இடத்தில் இருக்கும்பொழுது கிராமத்தின் வீட்டுக் கூரை தெரியாதோ அந்த பரிசுத்தமான இடத்தில் இருந்து கொண்டு, ப்ரம்ம யக்ஞம் செய்யவேண்டும் என்று வேதம் கூறுகிறது.

कालादर्शे— प्रातर्मध्यन्दिने वापि ब्रह्मयज्ञो विधीयते ।
प्रातर्यदि तदाप्रातराहुत्याः परतो भवेत् ।
मध्याह्ने चेत्तर्पणात् प्राग्वैश्वदेवात् परत्र वा ॥

காலையில் அல்லது மத்யான்ஹத்தில் ப்ரம்ம யக்ஞம் விதிக்கப்படுகிறது. காலையில் ஸந்தியா வந்தனம், ஔபாஸனம், இவைகளை செய்தபிறகு ப்ரம்ம யக்ஞம் செய்ய வேண்டும். மத்யான்ஹத்தில் செய்வதானால் மாத்யாஹ்னிகம் செய்தபிறகு ப்ரம்ம யக்ஞம் செய்யவேண்டும்; பிறகு தேவரிஷி பித்ரு தர்ப்பணம் செய்யவும், அல்லது வைச்வதேவம் செய்த பிறகும் ப்ரம்ம யக்ஞம் அனுஷ்டிக்கலாம்.

आपस्तम्बः— अकृतप्रातराश उदकान्तं गत्वा प्रयतः शुचौ देशेऽधीयीत ॥

ஆபஸ்தம்பர் :—பகல் போஜனத்திற்குமுன் ஜல சமீபத்திற்குச் சென்று ஸ்வயம் சுத்தனாக இருந்துகொண்டு சுத்தமான பிரதேசத்தில் வேதம் சொல்லவேண்டும். இது ப்ரம்ம யக்ஞம் என்று சொல்லப்படுகிறது.

पैठीनसिः— स्वशाखाध्ययनं यत्तत् ब्रह्मयज्ञं प्रचक्षते ।
ब्रह्मयज्ञपरो विप्रो ब्रह्मलोके महीयते ॥

அவரவர்களுடைய வேதத்தைச் சொல்வது ப்ரம்ம யக்ஞம் என்று கூறப்படுகிறது. ப்ரம்ம யக்ஞத்தில் சிரத்தை உள்ளவன் ப்ரம்ம லோகத்தை அடைவான்.

हारीतः— दर्भासीनः दर्भपाणिर्ब्रह्मयज्ञविधानतः ।
ब्राह्मणो ब्रह्मयज्ञन्तु कुर्याच्छ्रद्धासमन्वितः ॥

ஹாரீதர் :—ப்ராம்மணன் தர்ப்பங்களில் உட்கார்ந்து கொண்டு தர்ப்பம் தரித்து ப்ரம்ம யக்ஞ விதிப்படி சிரத்தையுடன் ப்ரம்ம யக்ஞம் செய்யவேண்டும். ப்ரம்ம யக்ஞனே யக்ஷ்யே, என்று ஸங்கல்ப்பம் செய்து வித்யுதஸி என்ற மந்திரத்தால் உள்ளங்கை, புறங்கை இவைகளை ஜலத்தால் மார்ஜனம் செய்து, பிறகு இடது கை கால்களை அலம்பி மூன்று தரம் ஜலத்தை ஆசமனம் செய்து இரு தடவை மேல் கீழ் உதடுகளை ஜலத்தால் துடைத்துப் பிறகு ஒரு தடவை ஜலத்தைக் கொண்டு உதடுகளைச் சேர்த்துத் துடைத்து, சிரஸ், கண்கள், மூக்குகள், காதுகள், மார்பு இவைகளை ஸ்பர்சித்து, தர்ப்பங்களை ஆஸனமாக பரத்தி அதில் இடது காலில் வலது காலை மேலாக இருக்கும்படி உட்கார்ந்துகொண்டு பவித்ரம் தரித்து யோக வேஷ்டியுடன் கிழக்குமுகமாக இருந்து ப்ரணவத்துடனும் வ்யாஹ்ருதியுடனும் காயத்ரி, வேதாதிகள் இவைகளைச் சொல்லி பிறகு வேதத்தை வரிசையாகச் சொல்லவேண்டும். முதல் நாள் முடித்த பாகத்திற்குப் பிறகு மேற்கொண்டு மறுநாள் ஆரம்பிக்கவேண்டும். முடிந்த அளவு வேதம் சொல்லி பிறகு "நமோப்ரம்மணே" என்ற ரிக்கை மூன்று தரம் சொல்லி முடிக்கவேண்டும். பெரியோர்களிடம் நன்கு தெரிந்துகொண்டு செய்யவும்.

संग्रहे— ब्रह्मयज्ञे जपेत्सूक्तं पौरुषं चिन्तयन् हरिम् ।
स सर्वान् जपते वेदान् सांगोपांगान् विधानतः ॥

ப்ரம்ம யக்ஞத்தில் விஷ்ணு த்யானம் செய்துகொண்டு புருஷ ஸூக்தத்தை ஜபிக்கவும். அங்கங்களுடன் கூடிய வேதபாகங்களை ஜபித்தபுண்ணியம் கிடைக்கும்.

रात्रौ प्रहरपर्यन्तं दिवाकृत्यानि कारयेत् ।
ब्रह्मयज्ञं च सौरं च वर्जयित्वा विशेषतः ॥

பகலில் செய்யவேண்டிய கர்மாக்களை இரவில் முதல் யாமம் பர்யந்தம் செய்யலாம். ஆனால் ப்ரம்ம யக்ஞம், ஸூரிய நமஸ்காரம் இவ்விரண்டும் இரவில் செய்யக்கூடாது.

28. द्वितीयभागकृत्यानि

இரண்டாம் பாகத்தில் செய்ய வேண்டிய காரியங்கள்.

याज्ञवल्क्यः — हुत्वाग्नीन् सूर्यदैवत्यान् जपेन्मन्त्रान् समाहितः ।
वेदार्थानधिगच्छेच्च शास्त्राणि विविधानि च ॥

யாக்ஞவல்க்யர் :—இனி பகலில் முதல் 3¾ நாழிகைகளுக்குப் பிறகு செய்யவேண்டிய காரியங்கள் கூறப்படுகிறது: ஔபாஸன ஹோமம் செய்துவிட்டு ஸூரிய தேவதையினுடைய மந்திரங்களை ஜபிக்கவேண்டும். பிறகு வேத சாஸ்திரங்களை சிந்தனம் செய்யவேண்டும். சிஷ்யர்களுக்குப் பாடங்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். புஷ்பங்கள், ஸமித்துக்கள், தர்ப்பங்கள் இவைகளை கிரஹிக்கவேண்டும். இவைகளும் 3¾ நாழிகைகளுக்குப் பிறகு செய்யவேண்டிய காரியங்கள் என்று அறியவும்.

तुलस्यमृतसंभूते सदात्वं केशवप्रिये ।
केशवार्थं लुनामि त्वां वरदा भव शोभने ॥

मोक्षैकहेतो धरणि प्रसूते विष्णोः समस्तस्यगुरोः प्रियेते ।
आराधनार्थं पुरुषोत्तमस्य लुनामि पत्रं तुलसि क्षमस्व ॥
प्रसीद मम देवेशि प्रसीद हरिवल्लभे ।
क्षीरोदमथनोद्भूते तुलसि त्वं प्रसीदमे ॥

இந்த ஸ்லோக மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு துளஸியை கிரஹிக்க வேண்டும்.

आरवारे च शुक्रे च मन्वादिषु युगादिषु च ।
नाहरेत्तुलसीपत्रं मध्याह्नात्परतोऽहनि ॥
संक्रान्त्यां पक्षयोरन्ते द्वादश्यां निशि सन्ध्ययोः ।
तुलसीं ये विचिन्वन्ति ते कृन्तन्ति हरेः शिरः ॥

செவ்வாய், வெள்ளி, மன்வாதிகள், யுகாதிகள், மத்யாஹ்னத்திற்குப் பிறகு, இந்த காலங்களில் துளஸீ பத்ரம் கிரஹிக்கக்கூடாது. ஸங்கரமணம், அமாவாஸ்யை, பூர்ணிமா, த்வாதசீ, இரவு, ஸந்தியா காலம், இந்த காலங்களிலும் துளஸீ பத்ரத்தைக் கிரஹிக்கக்கூடாது. மீறிக் கிரஹித்தால் விஷ்ணுவின் சிரஸ்ஸை ஹிம்ஸித்த தோஷம் ஏற்படும் என்று அறியவும்.

29. तृतीयचतुर्थभागयोः कृत्यानि ॥

மூன்றும் நான்காம் பாகத்தில் செய்யவேண்டிய காரியங்கள்.

हारीतः— संचिन्त्य पोष्यवर्गस्य भरणार्थं विचक्षणः ।
ईश्वरं चैव कार्यार्थं अभिगच्छेद्द्विजोत्तमः ॥

ஹாரீதர் :—தன்னால் ரக்ஷிக்கத் தகுந்தவர்களை பரி பாலனம் செய்வதற்கு சாஸ்திரியமான வழியில் தனம் சம்பாதிக்கவேண்டும். தார்மீகர்களான ராஜாக்களை அடைந்து தனம் சாம்பாதிக்கவேண்டும்.

माता पिता गुरु र्भार्या प्रजा दासस्समाश्रितः ।
अभ्यागतोऽतिथिश्चाग्निः पोष्यवर्ग उदाहृतः ॥
ज्ञातिर्बन्धुजन क्षीणस्तथाऽनाथस्समाश्रितः ।
अन्योपि धनहीनस्तु पोष्यवर्ग उदाहृतः ॥
भरणं पोष्यवर्गस्य प्रशस्तं स्वर्गसाधनम् ॥

தாய், தந்தை, குரு, பத்னீ, குழந்தை, தாஸன், தன்னை அண்டியவன், அப்யாகதன், அதிதி, அக்னி, இவர்கள் போஷிக்கத் தகுந்தவர்கள். ஞாதி, பந்து, பணமில்லாதவன், பந்துக்களால் விடப்பட்டவன், தரித்திரன், இவர்களும் ரக்ஷிக்கத் தகுந்தவர்களாவார்கள். இவர்களை ரக்ஷிப்பது புண்ணியம். நல்ல லோகங்களை அடையலாம்.

स जीवति य एवैको बन्धुभिश्चोपभुज्यते ।
जीवन्तोपि मृतास्त्वन्ये पुरुषाः स्वोदरंभराः ॥

எவனை ஆச்ரயித்து பந்துக்கள் ஜீவனம் செய்கிறார்களோ அவன் ஒருவன் ஜீவித்து இருப்பவன்; அதாவது பரோபகாரி யாகையால் புண்ணியசாலி என்பது கருத்து. மற்றவன், சம்பாதித்து தன் வயிற்றை வளர்க்கிறவன், செத்தவன் மாதிரி என்று அறியவும்.

இந்த மூன்றுவது பாக காரியங்கள் 7½ நாழிகைக்கு மேல் 11½ நாழிகைக்குள் செய்யவேண்டியவைகள்.

शंखः— प्रातस्सन्ध्यां सनक्षत्रां मध्यमां स्नानकर्मणि ।
सादित्यां पश्चिमां सन्ध्यां उपासीत यथाविधि ॥

சங்க:—ப்ராத: காலத்தில் நக்ஷத்திரம் இருக்கும் பொழுது ஸந்தியா வந்தனம் செய்யவேண்டும். பிறகு 12 நாழிகைக்குமேல் மாத்யாஹ்னிக ஸ்னானம் செய்து பிறகு மாத்யாஹ்னிகம் அனுஷ்டிக்கவேண்டும். ஸாயங்காலத்தில் ஸூரியன் பாதி தெரியும் பொழுது ஸாயம் ஸந்தியா வந்தனம் செய்யவேண்டும். மாத்யாஹ்னிகத்தில் ஒரு அர்க்யம் கொடுக்கவேண்டும். பிறகு த்யானம் செய்து முடிந்த அளவில் காயத்ரீ ஜபம் செய்து பிறகு தேவ ரிஷி பித்ரு தர்ப்பணம் செய்ய வேண்டும்.

व्यासः— आचम्य च यथा शास्त्रं शक्त्या स्वाध्यायमाचरेत् ।
तवस्सन्तर्पयेद्देवान् पितॄन् ऋषिगणानपि ॥
आदावोङ्कारमुच्चार्य नामान्ते तर्पयामि च ॥

வ்யாஸர் :—ஆசமனம் செய்து காலையில் ப்ரம்ம யக்ஞம் செய்யாவிடில் மாத்யாஹ்னிகம் செய்து பிறகு ப்ரம்ம யக்ஞம் செய்யவேண்டும். பிறகு தேவர்கள், ரிக்ஷிகள், பித்ருக்கள், இவர்களை உத்தேசித்து ப்ரணவம் சொல்லி இவர்களின் நாமாக்களை உச்சரித்துத் தர்ப்பயாமி என்று தர்ப்பணம் செய்யவேண்டு.

देवान् ब्रह्मऋषींश्चैव तर्पयेदक्षतोदकैः ॥
तिलोदकैः पितॄन् भक्त्या स्वसूत्रोक्तविधानतः ॥

தேவர்களையும், ப்ரம்ம ரிக்ஷிகளையும், அக்ஷதை கூடிய ஜலத்தால் தர்ப்பணம் செய்யவேண்டும். எள் கலந்த ஜலத்தால் பித்ருக்களை உத்தேசித்துத் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

यज्ञोपवीती देवानां निवीती ऋषितर्पणे ।
प्राचीनावीती पित्र्येषु स्वेन तीर्थेन भावितः ॥

பூணூலை உபவீதமாகத் தரித்து தேவதைகளையும், மாலையாகத் தரித்து ரிஷிகளையும், இடமாகத் தரித்து பித்ருக்களையும், அவரவர் தீர்த்தங்களால் தர்ப்பணம் செய்யவேண்டும். தேவதைகளுக்கு ஒருதரமும், ரிஷிகளுக்கு இரண்டு தடவையும், பித்ருக்களுக்கு மூன்று தடவையும் தர்ப்பணம் செய்யவேண்டும்.

हारीतः— वसित्वा वसनं शुष्कं स्थले विस्तीर्णबर्हिषि ।
विधिज्ञस्तर्पणं कुर्यात् न पात्रेषु कदाचन ॥

ஹாரீதர் :—சாஸ்திர முறை அறிந்தவன் உலர்ந்த வஸ்த்திரம் தரித்து பூமியில் தர்ப்பத்தைப் பரப்பி, தர்ப்பணம் செய்யவும். பாத்திரத்தில் தர்ப்பணம் செய்யக் கூடாது. தில தர்ப்பணம் கிருஹத்திற்கு வெளியே செய்ய வேண்டும்.

यद्यशक्तो गृहे कुर्यात् तर्पणं सतिलं तदा ।
तिलान्प्रक्षिप्य पात्रस्थे जले व्यामिश्रितैस्तिलैः ।
पात्रान्तरे क्षिपेदत्र मृन्मयं तु विवर्जयेत् ॥

சக்தி அற்றவன் வீட்டில் தர்ப்பணம் செய்ய நேர்ந்தால் பாத்திரத்தில் உள்ள ஜலத்தில் எள்ளைப் போட்டு, அந்த ஜலத்தால் மற்ற பாத்திரத்தில் தர்ப்பணம் செய்யவேண்டும். மண் பாத்திரம் உபயோகப்படுத்தக் கூடாது.

निषिद्धेऽपि तथा कुर्यात् तण्डुलैस्सह तर्पणम् ॥

நிஷித்த காலத்தில்கூட அரிசி கலந்த ஜலத்தால் தர்ப்பணம் செய்யலாம்.

देवताः पितरश्चैव कांक्षन्ति सलिलांजलिम् ।
अदत्ते तु निराशास्ते प्रतियान्ति यथागतम् ॥

தேவர்களும், பித்ருக்களும் ஜலாஞ்சலியைவிரும்பு கிறார்கள். அதிகாரியாக உள்ள புத்திரர்கள் தர்ப்பணம் செய்யாவிட்டால் வந்தவர்கள் ஆசையற்றவர்களாக திரும்பு கிறார்கள். இவர்களுடைய சாபத்திற்கு பாத்திரனுவான் என்பது கருத்து.

30. देवपूजा— தேவ பூஜை.

चन्द्रिकायां— स्वशाखोक्तक्रियां कृत्वा हुत्वा चैवाग्निहोत्रकम् ।
कुर्यादाराधनं विष्णोर्देवदेवस्य चक्रिणः ॥

தேவ பூஜை செய்யும் காலம் சொல்லப்படுகிறது. அவரவர்கள் சாகையில் சொல்லப்பட்ட கர்மாக்களைச் செய்து அக்னிஹோத்ரம் செய்து பகவான் வாஸுதேவனுக்குப் பூஜை செய்யவேண்டும்.

हारीतः — कुर्वीत देवतापूजां जपयज्ञादनन्तरम् ॥

ஹாரீதர்:—ஸந்தியா வந்தனம், ஔபாஸனம், ப்ரம்ம யக்ஞம், ஸூர்ய நமஸ்காரம், இவைகளைச் செய்த பிறகு தேவ பூஜை செய்யவேண்டும்.

विज्ञानेश्वरः— मध्याह्ने तर्पणानन्तरं गन्धकुसुमाक्षतैः हरिहर हिरण्यगर्भ प्रभृतीनां अन्यतमं यथावासनं ऋग्यजु स्साममन्त्रैस्तत्प्रकाशैः स्वनामभिर्वा चतुर्थ्यन्तै र्नमस्कारयुक्तैराराधयेत् ॥

விக்ஞானேச்வரர்:—மத்யான்ஹத்தில் தர்ப்பணம் செய்த பிறகு சந்தனம், புஷ்பம், அக்ஷதை முதலிய பூஜாத் திரவியங்களைச் சேர்த்துக்கொண்டு, அவரவர்களுடை பக்திக்குத் தகுந்தவாறு ப்ரம்மா, விஷ்ணு, சங்கரன் இவர்களுக்குள் ஒருவரை வேத மந்திரங்களாலும், நாலாவது வேற்றுமை யுடன் நம: நம: என்ற சப்தம் சொல்லி ஆஸனுதி உபசாரங்கள் செய்து பூஜிக்கவேண்டும். ஆக பூஜை காலையிலோ மாத்யான்ஹத்திலோ செய்யலாம் என்பது கருத்து.

आरोग्यं भास्करादिच्छेत् श्रियमिच्छेद्धुताशनात् ।
ईश्वरात् ज्ञानमन्विच्छेत् मोक्षमिच्छेज्जनार्दनात् ॥

ஸூரியனிடமிருந்து ஆரோக்கியத்தையும், அக்னியிடமிருந்து சம்பத்தையும், மஹேஸ்வரனிடமிருந்து ஞானத்தையும், ஜனார்த்தனரிடமிருந்து மோக்ஷத்தையும், அடையப் பிரார்த்திக்கவேண்டும்.

मनुः — आदित्यमथवा विष्णुं ईशं ब्रह्माणमेवच ।
अर्चयेद्वैदिकैर्मन्त्रैः गृहस्थः प्रयतो भवेत् ॥

மனு :— கிருஹஸ்தன், ஸூரியனையும், அல்லது விஷ்ணுவையும், பரமேஸ்ரவனையும், ப்ரம்மாவையும் வேதம் மந்திரங்களால் பூஜை செய்யவும். இவ்விடத்தில் சொன்ன தேவதைகளில் இஷ்டப்படி ஒருவரையும், சகாரத்தினல் எல்லாரையும் பூஜை செய்யலாம் என்பது தெரிவிக்கப் படுகிறது.

संग्रहे — आदित्यमम्बिकां विष्णुं गणनाथं महेश्वरम् ।
पंच यज्ञपरो नित्यं गृहस्थः पंच पूजयेत् ॥

பஞ்ச மஹா யக்ஞங்களை அனுஷ்டிக்கும் கிருஹஸ்தன் ஸூரியன், அம்பிகை, விஷ்ணு, கணபதி, மஹேஸ்வரன் இந்த ஐந்து தேவதைகளையும் பூஜிப்பது ச்லாக்கியமானது.

31. विष्णुपूजा — விஷ்ணு பூஜை.

नारदः — अग्नौ क्रियावतां देवः दिवि देवो मनीषिणाम् ।
प्रतिमा स्वल्पबुद्धीनां योगिनां हृदये हरिः ॥

நாரதர் :—யாகம் முதலிய அக்னி காரியங்களைச் செய்யும் தீக்ஷிதர்களுக்கு அக்னியில் ஹரி பிரகாசிக்கிறார்.

ஸகுணோபாஸகர்களுக்கு ஸூர்ய மண்டலத்தில் வாஸு தேவன் பிரகாசிக்கிறார். லோக விவகாரங்களில் ஈடுபட்ட வனுக்கு ஸாலக்ராமாதி ப்ரதிமைகளில் பகவான் பிரகாசிக் கிறார். த்யானம் செய்யும் யோகிகளுக்கு ஹ்ருதய குகை யில் விஷ்ணு பிரகாசிக்கிறார். ஆகையால் பகவானை எங்கும் பூஜை செய்யலாம் என்பது கருத்து.

सालग्रामशिला पत्र यत्र द्वारवतीशिला ।
उभयोस्संगमो यत्र तत्र मुक्तिर्न संशयः ॥
सालग्रामशिला यत्र पूज्यते भगवन्मयैः ।
तद्देशे योजनादर्वाङ् मृतो निर्वाणमश्नुते ॥

ஸாலக்ராமசிலேயும் த்வாதவதீ சிலேயும் எந்த இடத்தில் சேர்ந்து பிரகாசிக்கிறதோ அவ்விடத்தில் மோக்ஷ புருஷார்த் தம் சுலபமாகக் கிடைக்கும். ஸாலக்ராமசிலேயிருக்கும் சமீபத்தில் இறந்தவர்கள் சகல பந்தங்களிலிருந்தும் விலகி மோக்ஷ சுகத்தை அடைவார்கள். ஸாலக்ராமசிலேயில் பகவான் வாஸுதேவர் மஹா லக்ஷ்மியுடன் நித்யவாஸம் செய்கிறார். ஆகையால் ப்ரதிஷ்டை, ஆவாஹனம், விஸர் ஜனம், செய்யக்கூடாது. பாக்கி உபசாரங்கள் செய்து பூஜிக்கலாம்.

वेदेतु पौरुषं सूक्तं अर्चितं गुह्यमुत्तमम् ।
आनुष्टुभस्य सूक्तस्य त्रिष्टुबन्तस्य देवता ॥
पुरुषो यो जगद्बीजं ऋषिर्नारायण स्स्मृतः ।
छन्दोऽनुष्टुप्च भवति तिसृणां त्रिष्टुबन्ततः ॥

புருஷ ஸூக்தத்தால் மஹா விஷ்ணுவை பூஜை செய்ய லாம். க்ருஷ்ணயஜுர் வேதத்தில் 18 ருக்குகள் இருக்கின் றன. இதற்கு நாராயண ரிஷி:, 15 ருக்குகளுக்கு அனுஷ்டுப்

சந்தஸ்ஸும், 3 ருக்குகளுக்கு த்ரிஷ்டுப் சந்தஸ்ஸும், தேவதா ஸ்ரீ நாராயணன் என்றும் அறியவும்.

देवा अष्टादश प्रोक्ताः पूजांवक्ष्ये यथाक्रमम् ।
आवाहनासनं पाद्यं अर्घ्यमाचमनीयकम् ॥
गन्धं पुष्पंच धूपंच तथा दीपं प्रकल्पयेत् ।
नैवेद्यं चैव ताम्बूलं प्रदक्षिणनमस्कृती ॥
उद्वासनं च क्रमशः कुर्यात् पूजापरायणः ।

யஜுர் வேத புருஷ ஸூக்தத்திற்கு 18 ருக்குகளுக்கு தனித்தனி ரிஷிகளும் தேவதைகளும் கூறப்படுகிறது. பிறகு பூஜை சொல்லப்படுகிறது. ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனம், மதுபர்க்கம், ஸ்னானம், வஸ்த்திரம், உபவீதம், சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், விஸர்ஜனம், என்று 18 உபசாரங்கள் ஒவ்வொரு வரிசையாக ருக்காலும் செய்யவேண்டும். தீபாராதனத்திற்கும் மந்திரபுஷ்பத்திற்கும் தனியாக மந்திரம் சொல்லி செய்யவேண்டும். அது 18 உபசாரங்களைக் காட்டிலும் தனிப்பட்டவைகளாகும். ரிக்வேத புருஷ ஸூக்தப்படி 16 உபசாரங்கள் செய்ய வேண்டும் என்று அறியவும்.

अपरार्के — अष्टाक्षरेण देवेशं नारायणमनामयम् ।
गन्धपुष्पादिभि र्नित्यं अर्चयेदच्युतं नरः ।
गन्धपुष्पादि सकलं अनेनैव निवेदयेत् ॥
अनेनैवार्चितो विष्णुः प्रीतो भवति तत्क्षणात् ।
किं तस्य बहुभिर्मन्त्रैः किं तस्य बहुभिर्मखैः ॥
नमो नारायणायेति मन्त्रः सर्वार्थसाधकः ॥

அபரார்க்கம் என்ற யாக்யவல்க்யஸ்ம்ருதிவ்யாக்யானத்தில் அஷ்டாக்ஷரத்தினுல் பகவானை கந்தம், புஷ்பம் முதலிய உபசாரங்களால் பூஜை செய்யவும். அது பகவானுக்குப் ப்ரீதிகரமானது. ப்ரணவத்துடன் கூடிய நமோ நாரயணுய என்ற மந்திரம் ச்ரேஷ்டமானது. அஷ்டாக்ஷர ஜபத்தினுல் தபஸ், யாகம் முதலியவைகளால் சாதிக்க முடியாத பலனை அடையலாம். ஆகையால் அஷ்டாக்ஷரம் ரொம்ப ச்ரேஷ்டமானது என்று கூறப்பட்டிருக்கிறது.

पुलस्त्यः—दध्यादीनां विकाराणां क्षीरतस्संभवोयथा ।
तथैवाशेषकामानां क्षीरस्नापनतो हरेः ॥

புலஸ்த்யர் :— பாலிலிருந்து தயிர், வெண்ணை, நெய் இவைகள் எப்படி உண்டாகின்றனவோ அப்படியே பகவானுக்கு பால் அபிஷேகம் செய்தால் சகல காம்யங்களும் சித்திக்கும். ஆகையால் பால் அபிஷேகம் சிரேஷ்டமானது என்று அறியவும்.

कुंकुमागरु श्रीकण्ठ कर्दमैरच्युताकृतिम् ।
आलिप्य भक्त्यादेवेशं कल्पकोटिं वसेद्दिवि ॥

குங்குமப்பூ, அகில், கஸ்தூரி, சந்தனம் இவைகளை அரைத்து பகவானுடை பிம்பத்தில் பக்தியுடன் பூசுகிறவனுக்கு கோடி கல்பகாலம் ஸ்வர்க்லோக வாஸம் ஏற்படும்.

आचारसारे— श्वेतरक्तसरोजानि नीलरक्ते तथोत्पले ।
सितोत्पलं च कृष्णस्य दयितानि सदा हरेः ॥
नीपार्जुन कदम्बैश्च वकुलैश्च सुगन्धिभिः ।
कल्हारैर्विष्णुमभ्यर्च्य विष्णुलोके महीयते ॥

வெளுப்பு, சிவப்பு நிறமுள்ள உத்பல புஷ்பங்களும் நீலம், சிகப்பு நிறமுள்ள உத்பல புஷ்பங்களும் (அல்லி

ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியமானவை. கதம்பம். மருதை. மகிழம்பூ, செங்கழநீர் புஷ்பம் இவைகளும் பகவானுக்குப் பிரியமானவை. இவைகளால் பூஜைசெய்தால் விஷ்ணு லோகமான வைகுண்டத்தில் பிரகாசிப்பான்.

मौद्गल्यः— सकृदभ्यर्च्य गोविन्दं बिल्व पत्रेण मानवः ।
मुक्तिगामी निरातङ्कः कृष्णस्यानुचरो भवेत् ॥

மௌத்கல்யர் :— ஒரு தடவை பில்வபத்திரங்களால் வாஸுதேவனை பூஜை செய்தவன் க்ருஷ்ணஸாமீப்யத்தை அடைந்து துக்கம் இல்லாமல் இருப்பான்.

सुगन्धतुलसीपत्रैः प्रतिमायास्समन्ततः ।
निश्छिद्रमाचरेद्यस्तु सोऽनन्तफलमाप्नुयात् ॥

எவன் நல்ல வாசனை உள்ள துளஸீ பத்ரங்களால் பகவான் வாஸுதேவனை அர்ச்சனை செய்து பிம்பத்தை மறைக்கிருனே அவன் அளவு கடந்த க்ஷேமலபாங்களை அடைவான்.

संवर्तः — देवागारे द्विजानां च दीपं दत्वा चतुष्पथे ।
मेधावी ज्ञानसंपन्नःचक्षुष्मान् जायते नरः ॥

ஸம்வர்த்தர் :— தேவாலயத்திலும், ப்ராமண கிருஹத்திலும், நாற்சந்தியிலும் தீபம் ஏற்றிவைத்தவன் மேதாவியாயும், ஞானமுள்ளவனுயும் நல்ல பார்வை உள்ளவனுயும் பிறப்பான்.

हविश्शाल्योदनं दिव्यं आज्ययुक्तं सशर्करम् ।
नैवेद्यं देवदेवाय यावकं पायसं तथा ॥

संस्कृतं चान्नमाज्याढ्यं दधिक्षीरमधूनिच ।
फलमूल व्यंजनानि मोदकं च निवेदयेत् ॥

அரிசி சாதம், நெய் கலந்த சர்க்கரை, யவையினுல் செய்யப்பட்ட பாயஸம், பால் நெய் கலந்து பாகம் செய்த அன்னம், தயிர், பால், தேன், பழம், கிழங்கு, காய்கறிகள், கொழுக்கட்டை இவைகளைப் பகவானுக்கு நிவேதனம் செய்ய வேண்டும்.

हविर्दानं त्रिकालंतु उत्तमोत्तममुच्यते ।
द्वयोश्चमध्यमं प्रोक्तं एककालेऽधमं हविः ॥

மூன்று காலங்களிலும் ஹவிஸ்ஸை நிவேதனம் செய்வது உத்தமம். இரண்டு காலம் செய்வது மத்யமம். ஒரு காலம் ஹவிஸ்ஸை நிவேதனம் செய்வது அதம பக்ஷமாகும். பிறகு தாம்பூலம், தீபாராதனம், மந்திர புஷ்பம், ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, பகவானை பிரார்த்தனை செய்து, பாதோதக தீர்த்தப் பிராசனம் செய்யவேண்டும்.

32. शिवपूजा — சிவ பூஜா.

कूर्मपुराणे—आरधयेन्महादेवं भावपूतो महेश्वरम् ।
मन्त्रेण रुद्रगायत्र्या प्रणवेनाथवापुनः ॥
ईशानेनाथवा रुद्रैः त्र्यंबकेन समाहितः ।
पुष्पैः पत्रैरथाद्भिर्वा चन्दनाद्यै र्महेश्वरम् ॥

இனி சிவ பூஜா நியமங்கள் செல்லப்படுகின்றன. சுத்த சித்தனாக இருந்துகொண்டு மஹாதேவனை பரமேஸ்வரனை ஆராதிக்கவேண்டும். ருத்ர காயத்ரீ அல்லது ப்ரணவம், ஈசான மந்திரம், ஸ்ரீருத்ரம், த்ரயம்பகம் இந்த மந்திரங்

களால் ஆஸனாதி உபசாரங்களைச் செய்து ஏகாக்கிர சித்தத்துடன் புஷ்பங்கள், பில்வபத்ரம், சந்தனம் இவைகளால் பரமேஸ்வரனை பூஜிக்கவும்.

तथोन्नमश्शिवायेति मन्त्रेणानेनवा यजेत् ।

சிவ மந்திர ராஜாவான பஞ்சாக்ஷர மந்திரத்தினாலும், பரமேஸ்வரனைப் பூஜிக்கலாம்.

नन्दिकेश्वरः—यःप्रयच्छेद्गवां लक्षं दोग्ध्रीणां वेदपारगे ।
एकाहमर्चयेल्लिंगं तस्य पुण्यं ततोऽधिकम् ॥

நந்திகேச்வரர்:— எவன் நிறைய பால் கறக்கும் லக்ஷக்கணக்கான பசுக்களை வேதம் முழுவதும் கற்ற ப்ராம்மணனுக்குத் தானம் செய்கிறானோ, அவனுடைய புண்ணியம் ஒருநாள் லிங்கார்ச்சனை செய்கிறவனுடைய புண்ய பலத்திற்கு சமமாகாது. அதிக பலன் ஏற்படுகிறது என்பது கருத்து.

चन्द्रिकायां — लिंगस्य दर्शनं पुण्यं दर्शनात् स्पर्शनं परम् ।
स्पर्शनादर्चनं श्रेष्ठं अर्चनाद्ध्यानवन्दने ॥
मासे मासेतु योऽश्नीयाद्यावज्जीवं द्विजोत्तमः ।
यस्त्वर्चयेत् सकृल्लिंगं सत्यमेतन्न संशयः ॥

சிவ லிங்க தரிசனம் புண்ணியத்தைக் கொடுக்கிறது. அதைக் காட்டிலும் லிங்கத்தைத் தொடுவது புண்ணியம். அதைக் காட்டிலும் பூஜை செய்வது புண்ணியம். அதைக் காட்டிலும் சிவ லிங்க தியானம், நமஸ்காரம் இவைகள் மஹா புண்ணிய பலமாகும் என்று அறியவும். மாதத்திற்கு ஒரு தரம் போஜனம் செய்துகொண்டு நியமத்துடன் யவாஜ் ஜீவம் இருக்கிறவனுக்கு எந்த புண்ணியம் ஏற்படு

கிறதோ அந்த பலன் ஒருதரம் சிவ லிங்க பூஜை செய்கிற வனுக்கும் எற்படுகிறது. இது நிச்சயம்.

स्मृतिरत्ने — अयुतं यो गवां दद्यात् दोग्ध्रीणां वेदपारगे ।
वस्त्रहेमादियुक्तानां क्षीरस्नानस्य तत्फलम् ॥

நிறைய பால் கறக்கும் பதினுயிரம் பசுக்களை வஸ்திரம் தங்கம் முதலிய தக்ஷிணையுடன் வேதத்தின் கரை கண்டவர் களிடம் தானம் செய்த பலன், சிவனுக்கு ஒரு தடவை பசும் பால் அபிஷேகம் செய்ததற்குச் சமமாகும். சிவலிங்கத் திற்கு க்ஷீராபிஷேகம் செய்வது சிலாக்கியமானது என்பது கருத்து.

दध्ना यः स्नापयेल्लिंग कृष्णाष्टम्यां उपोषितः ।
कुलसप्तकमुद्धृत्य शिवलोके महीयते ॥

எவன் கிருஷ்ணஷ்டமியில் உபவாஸத்துடன் பரமேஸ் வரனுக்குத் தயிர் அபிஷேகம் செய்கிருனே அவன் தன் முன்னேர்களுடைய ஏழு வம்சத்தை பாபத்தினிடமிருந்து விலகச் செய்து, தான் சிவலோகத்தில் பிரகாசிக்கிருன்.

कल्पकोटि सहस्त्रेण यत्पापं समुपार्जितम् ।
घृतस्नानेन तत्सर्वं दहत्यग्निरिवेन्धनम् ॥

பரமேஸ்வரனுக்கு நெய் அபிஷேகம் செய்கிறது ஆயி ரம்கோடி கல்பங்களில் சேகரித்த பாபங்களை அக்னி கட்டை களை எரிப்பதுபோல் நசிக்கச் செய்கிறது.

पयोदधिघृतक्षौद्रशर्कराद्यैरनुक्रमात् ।
ईशादिमन्त्रितैः स्नाप्य शिवं मुक्तिमवाप्नुयात् ॥

பால், தயிர், நெய், தேன். சக்கரை, இவைகளை ஈசாதி மந்திரங்களிஞல் கிரமமாகச் சிவனுக்கு அபிஷேகம் செய்தால் மோக்ஷத்தை அடைவான்.

गन्धचन्दनतोयेन यो लिंगं स्नापयेत्सकृत् ।
गन्धर्वलोकमाप्नोति स गन्धर्वैश्च पूज्यते ॥

வாஸனை சந்தனக் குழம்பினுல் ஒரு தட்டவை சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தவன் கந்தர்வ லோகத்தை அடைந்து கந்தர்வர்களால் பூஜிக்கப்படுவான். பரமேஸ்வரனுக்கு அபிஷேகத்தில் பிரியமதிகம். தைலாபிஷேகம் பரமேஸ்வரருக்கு மிக்க சிலாக்கியமாகக் கூறப்படுகிறது.

वासांसि सुविचित्राणि सारवन्ति मृदूनि च ।
धूपितानि शिवे दद्यात् विकेशानि नवानि च ॥

ஸ்னானத்திற்குப் பிறகு நல்ல ஜரிகைக் கரைபோட்ட வஸ்திரங்களை அகில் தூபத்தில் வாஸனை ஏற்றி பரமேஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்யவும். கேசம் முதலியவைகள் இல்லாததாயும், புதியதாயுமுள்ள வஸ்த்திரத்தை சிவார்ப்பணம் செய்யவேண்டும். உபவீதம், சந்தனம், ஆபரணம், புஷ்பம் இவைகளால் பரமேஸ்வரனை பூஜிக்கிறவன் சிவலோகத்தில் பிரகாசிக்கிருன்.

पुष्पैरारण्यसंभूतैः पत्रैर्वा गिरिसंभवैः ।
आत्मारामोद्भवैर्वापि पुष्पैस्संपूजयेच्छिवम् ॥

காட்டில் உண்டான புஷ்பங்களாலும், பில்வம் முதலிய பத்ரங்களினுலும், தன் தோட்டத்தில் உண்டான புஷ்பங்களாலும் பரமேஸ்வரனைப் பூஜை செய்ய வேண்டும். தாழம்பூ சிவ பூஜைக்கு உகந்தது அல்ல. பஞ்சாக்ஷரம் சொல்லி பில்வதளத்தை பரமேஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்தவனுக்கு சிவஸாயுஜ்யமேற்படும்.

यावन्तस्तण्डुलास्तस्मिन्नैवेद्ये परिसंख्यया ।
तावद्युगसहस्राणि स्वर्गलोकेमहीयते ॥

गुडखण्डघृतानां च भक्ष्याणां च निवेदने ।
घृतेन पाचितानां च दानाच्छतगुणं फलम् ॥

பிறகு பரமேஸ்வரனுக்குத் தூபம், தீபம், முதலிய உபசாரங்கள் செய்து நைவேத்யத்தை சமர்பிக்கவேண்டும். நைவேத்தியத்தில் உள்ள சாதம் எவ்வளவு அரிசிகளால் பாகம் செய்யப்பட்டதோ, அவ்வளவு யுக ஸஹஸ்ரங்கள் ஸ்வர்க்க லோகத்தில் வஸிப்பான் என்று பலன் கூறப்படுகிறது. வெல்லம், நெய், நெய்யில் பக்குவமான பக்ஷ்யங்கள் இவைகளை நிவேதனம் செய்கிறவன், உயர்ந்த பொருளை தானம் செய்ததைக் காட்டிலும் அதிக பலனை அடைவான். பிறகு பரமேஸ்வரனுக்கு தாம்பூலம், தீப ஆராதனம், மந்தரபுஷ்பம், முதலிய உபசாரங்கள் செய்யவேண்டும். பிறகு ப்ரதக்ஷிணம் நமஸ்காரம், ஸ்தோத்ரம், நர்த்தனம் இவைகளைச் செய்யவும்.

पराशरः— मर्त्यबुद्धिर्गुरौ यस्य शिवलिंगे शिलामतिः ।
शब्दबुद्धिस्तुमन्त्रेषु स खलु ब्रह्महा भवेत् ॥

பராசரர் :— குருவினடத்தில் மனுஷ்யன் என்ற எண்ணமும், சிவலிங்கத்தில் சிலை என்ற எண்ணமும், மந்திரங்களில் சப்தம் என்ற எண்ணமும் ஏற்படக்கூடாது. ஏற்பட்டால் மஹாபாபம் ஸம்பவிக்கும் என்பது கருத்து. சிவலிங்கத்தில் ப்ரத்யக்ஷ பரமேஸ்வரன் என்ற சித்த வ்ருத்தி எப்பொழுதும் இருக்கவேண்டும் என்பது கருத்து.

33. वैश्वदेवहोमः — வைச்வ தேவ ஹோமம்.

हारीतः— द्विजः पुरुषसूक्तस्य विधिना विष्णुमर्चयेत् ।
वैश्वदेवं ततः कुर्यात् बलि कर्म विधानतः ॥

ஹாரீதர் :— ப்ராம்மணன் புருஷ ஸூக்தத்தினால் முறைப்படி பகவானை பூஜித்துவிட்டு, வைச்வதேவஹோமம், பலிகர்மா இவைகளைச் செய்யவும்.

चन्द्रिकायां— यस्मिन्नग्नौ भवेत्पाकः वैश्वदेवस्तु तत्रैव ।
तत्राहुत्वा यो भुंक्ते स भुंक्ते किल्बिषं नरः ॥

எந்த அக்னியில் சமையல் செய்யப்பட்டதோ அந்த அக்னியில் வைச்வதேவம் செய்யவேண்டும். வைச்வதேவம் செய்யாமல் போஜனம் செய்கிறவன் பாபத்தைச் சாப்பிடுகிறவனாவான்.

तात्पर्यदर्शने— पंचमहायज्ञेभ्यः पृथग्वैश्वदेवम् । प्रकरणान्तरात् संज्ञाभेदाच्च कर्मभेदावगतेः । अत एव भाष्ये वैश्वदेवस्य तेषां च प्रयोगः पृथगेवोपपादितः ॥

பஞ்ச மஹா யக்ஞங்களைக் காட்டிலும் வைச்வதேவம் தனி கர்மாவாகும். ப்ரகரணபேதத்தாலும், வைச்வதேவம் என்ற ஸம்ஞா பேதத்தாலும், வேறு கர்மா என்று அறியவும். பாஷ்யத்தில் வைச்வதேவ ப்ரயோகமும், பஞ்ச மஹா யக்ஞங்களுடைய ப்ரயோகமும் தனித் தனியாகக் கூறப்பட்டிருக்கிறது.

यमः — पंचसूना गृहस्थस्य वर्तन्तेऽहरहस्सदा ।
खण्डिनी पेषिणी चुल्ली जलकुंभ उपस्करः ॥
एताभिर्वाहयन् विप्रो बध्यते वै मुहुर्मुहुः ।
एतासां पावनार्थाय पंचयज्ञाः प्रकल्पिताः ॥

எமன் :— கிருஹஸ்தனுக்கு ஒவ்வொரு நாளும் ஐந்து ஹிம்ஸாஸ்தானங்கள் இருக்கின்றன. அதாவது கண்டினீ, உரல், உலக்கை முதலியவைகள்; பேஷிணீ அம்மி, குழவி முதலியது; சுல்லீ, அடுப்பு முதலியது; ஜலகும்பம், ஜலம் வைத்துக்கொள்ளும் குடம் முதலியது, உபஸ்கரம், முறம், முதலியது; இவைகள் ஐந்து ஹிம்ஸாஸ்தானங்களாகும்.

இவைகளைக் கொண்டு பாகம் முதலியன தயார் செய்ய வேண்டும். குடும்ப நிர்வாகத்தின் பொருட்டு இந்த காரியம் தினமும் அவசியம் செய்யவேண்டிருப்பதால் பாபத்திற்கு வசமாகிறான். அதைப் போக்கிக்கொள்ள பஞ்ச மஹா யக்ஞங்கள் அவசியம் செய்ய வேண்டியிருக்கிறது.

प्रजापतिः — वैश्वदेवं बलिहृतिं प्रत्यहं गृह मेधिनः ।
सायं प्रातश्च कुर्वीरन् सूनादेषापनुत्तये ॥

ப்ரஜாபதி :— கிருஹஸ்தர்கள் தினம்தோறும் காலையிலும், மாலையிலும் ஹிம்ஸா ஸ்தானத்திலிருந்து தனக்கு ஏற்படும் தோஷத்தைப் போக்கிக்கொள்ளுவதற்கு வைச்வ தேவம், பலிஹரணம் இவைகளை அவசியம் செய்யவேண்டும்.

वैश्देवहोमात्पूर्वं शकलहोमं कुर्वन्ति शिष्टाः ॥

அக்னியைப் பிரதிஷ்டை செய்து அதில் வைச்வதேவ ஹோமம் செய்வதற்கு முன்பு "தேவக்ருதஸ்ய" என்ற எட்டு மந்திரங்களால் ஸமித் சகலங்களைப் பெரியோர்கள் ஹோமம் செய்கிறார்கள். இதனால் பாப நிவிருத்தி ஏற்படுகிறது.

आपस्तम्बः— औपासने पचने वा षड्भिराद्यैःप्रतिमन्त्रं हस्तेन जुहुयात् ।
उभयतः परिषेचनम् । यथा पुरस्तात् । षड्भिराद्यैः
अग्नये स्वाहा, सोमाय स्वाहा, विश्वेभ्यो देवोभ्यः
स्वाहा, ध्रुवाय भूमाय स्वाहा, ध्रुवक्षितये स्वाहा,
अच्युतक्षितये स्वाहा, इत्येतैः । अग्नयेस्विष्टकृते
स्वाहा इति सप्तमं जुहुति ॥

ஆபஸ்தம்பர் :— ஔபாஸனாக்னியில் அல்லது பாகம் செய்த அக்னியில் அன்னத்தைக் கையினால் எடுத்து மேல் சொன்ன மந்திரங்களினால் ஆறு ஹோமங்களும், ஏழா

வதாக ஸ்விஷ்டக்ருத ஹோமமும் செய்ய வேண்டும். ஔபாஸனுக்னியில் பாகம் (சமையல்) செய்யலாம் என்று சொல்லப்பட்டது. ஆகையால் பாகம் செய்த அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும் என்பது கருத்து.

गौतमः — अग्नावग्नि र्धन्वन्तरिर्विश्वेदेवाः ।
प्रजापतिः स्विष्टकृदिति होमाः ॥

கௌதமர் :— ஸாம வேதிகள் பாகாக்னியில் அக்னி தன்வந்திரி, விச்வேதேவர், ப்ரஜாபதி, ஸ்விஷ்டக்ருத் என்று ஐந்துஹோமங்களைச் செய்யவேண்டும்.

कात्यायनः — स्वाहाकारै र्जुहुयात् ब्रह्मणे प्रजापतये
गृह्येभ्यः, काश्यपाय अनुमतये ॥

காத்யாயனர் :— ப்ரம்மா, ப்ரஜாபதி, க்ருஹ்யர், காச்யபர், அனுமதி என்று ஐந்து ஹோமங்களை ஸ்வாஹா காரத்தினுல் ஹோமம் செய்யவேண்டும்.

अथ यथा स्वशाखं व्यवस्था ।
वैश्वदेवं प्रकुर्वीत स्वशाखाभिहितं तथा ।
यस्य यावत् स्वगृह्योक्तं स्वल्पं वा यदि वा बहु ।
तस्य तावति शास्त्रार्थे कृते सर्वं कृतं भवेत् ॥
इति व्यासस्मरणात् ॥

வைச்வதேவம் அவரவர் சாகையில் சொன்ன பிரகாரம் செய்யவேண்டும். ஹோமங்கள் அவரவர்கள் கிருஹஸ்யத்தில் ஸ்வல்பம், அல்லது நிறைய உள்ளது என்பது கிடையாது. சொன்னதைச் செய்யவேண்டியது. இதுதான் சாஸ்திரங்களுடைய தாத்பரியம் என்பது வேதவ்யாஸருடைய ஸ்மிருதியாகும்.

अप्रबुद्धेतु होमाग्नौ वैश्वदेवं न कारयेत् ।
यजमानो भवेदन्धः इत्येवं मनुरब्रवीत् ॥

ஹோமாக்னி ஜ்வலிக்காவிடில் வைச்வதேவ ஹோமம் செய்யக்கூடாது. செய்தால் யஜமானனுக்குக் கண் பார்வை குறையும் என்று மனு சொல்லுகிறார்.

व्यासः— जुहुयात्सर्पिषाभ्यक्तं तैलक्षारविवर्जितम् ।
दध्यक्तं पयसाभ्यक्तं तदभावेऽम्बुनापिवा ॥

வ்யாஸர் :— ஹவிஸ்ஸை நெய்யினால் அதிகாரம் செய்யவேண்டும். அல்லது தயிர், பால், இவைகளால் அதிகாரம் செய்யலாம். இவைகள் இல்லாவிடில் ஜலத்தாலும் செய்யலாம். எண்ணெய் உரப்பு இவைகளைக் கலந்து ஹவிஸ் ஹோமம் செய்யக்கூடாது. சுத்தமான ஹவிஸ்ஸைத்தான் ஹோமம் செய்யவேண்டும். சிலர் வ்யஞ்ஜனம் (காய்கறி) ஹோமம் செய்வதானால் சூடான சாம்பலைத்தள்ளி அதில் வடபாகத்தில் அஹவிஸ்ஷயத்தை ஹோமம் செய்கிறார்கள்.

चतुर्विंशतिमते — अलाभे येन केनापि फल शाकोदकादिभिः ।
पयोदधि घृतैः कुर्याद्वैश्वदेवं स्रुवेणतु ॥
हस्तेनान्नादिभिः कुर्यात् अद्भिरंजलिना जले ॥

அன்னரூபமான ஹவிஸ் கிடைக்காவிடில், பழம் கரிகாய், ஜலம், பால், தயிர், நெய் இவைகளால் வைச்வதேவம் செய்யலாம். அன்னங்களைக் கையினாலும், திரவ பதார்த்தமான நெய், பால் இவைகளை ஸ்ருவத்தாலும் அக்னியில் ஹோமம் செய்யவேண்டும். ஜலத்தால் வைச்வதேவம் செய்வதானால் ஜலத்தில்தான் செய்ய வேண்டும். அஞ்சலியினால் ஜலத்தை எடுத்து ஜலத்தில் வைச்வதேவம் செய்யவேண்டும்.

आपस्तम्बः — आर्याः प्रयताः वैश्वदेवेऽन्नसंस्कर्तारस्स्युः
आर्या त्रैवर्णिकाः ।

ஆபஸ்தம்பர்:— வைச்வதேவத்திற்கு அன்னத்தைப் பாகம் செய்கிறவர்கள் சுத்தர்களாயும், பூஜ்யர்களாயும் இருக்கவேண்டும். ஆகையால் அசுத்தர்கள் சமைத்தால் அந்த அன்னம் வைச்வதேவ ஹோமார்ஹமாகாது என்பது கருத்து. ஸ்திரீகள் செய்த பாகத்தினாலும் வைச்வதேவ ஹோமம் செய்யலாம்.

चन्द्रिकायां— स्वशाखोक्तविधिना बलिकर्मविधीयते ।
न जातु परशाखोक्तं बुधः कर्मसमाचरेत् ॥

அக்னிக்கு மேல் புறத்தில், சகல பூதத்ருப்தியை உத்தேசித்து, பலிஹரணம் செய்யவேண்டும். அவரவர்கள் சாகை பிரகாரம் பலிஹரணம் செய்யவும். பிறர் சாகையை அனுசரித்துப் பலிஹரணம் செய்யக்கூடாது.

याज्ञवल्क्यः— देवेभ्यस्तु हुतादन्नात् शेषाद्भूतबलिं हरेत् ।
अन्नं भूमौ श्वचण्डाल वायसेभ्यश्चनिक्षिपेत् ।
संक्षाळनमथवान्नेन निनयेत् प्रागुदग्दिशि ॥

யாக்ஞவல்க்யர்:— தேவர்களுக்கு ஹோமம் செய்த மீதி அன்னத்தால் பூத பலிதானம் செய்ய வேண்டும். பலி ஹரணத்தில் எல்லோருக்கும் சம்பந்தமுண்டு. நாய், சண்டாளன், காக்கை, இவர்களுக்கும் பூமியில் பலிவைக்க வேண்டும். கடைசியில் அன்னப் பாத்திரத்தை அலம்பி, அன்னத்துடன் வடகிழக்கில் பூமியில் விடவேண்டும்.

व्यासः — वैश्वदेवस्तु कर्तव्यो देवयज्ञस्सवैस्मृतः ।
देवेभ्यस्तु हुतादन्नाच्छेषाद्भूतबलिं हरेत् ॥

भूतयज्ञस्सविज्ञेयः भूतिदः सर्वदेहिनाम् ।
श्राद्धंवापितृयज्ञस्स्यात् पित्र्यो बलिरथापिवा ॥

வ்யாஸர் :— தினம் வைச்தேவம் செய்யவேண்டும். இது தேவ யக்ஞம். ஹோமம் செய்து பாக்கி அன்னத்தால் ப்லிஹரணம் செய்கிறோம். இது பூத யக்ஞமாகும். எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. பித்ருக்களை உத்தேசித்துப் பலிஹரணம் செய்வது அல்லது பித்ருக்களை உத்தேசித்து ஒரு பிராம்மணனுக்குப் போஜனம் செய் விப்பது பித்ரு யக்ஞம் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்த வைச்வதேவத்தில் மூன்று யக்ஞம் இருக்கிறது என்பது கருத்து. மனுஷ்ய யக்ஞமும், ப்ரம்ம யக்ஞமும் கூட பலிஹரண காலத்தில் இருப்பதால் பஞ்ச மஹா யக்ஞம் என்று கூடச் சொல்லலாம்.

गृहस्थो वैश्वदेवाख्यं कर्म प्रारभते दिवा ।
अन्नस्य चात्मनश्चैव संस्कारार्थं तदिष्यते ॥

க்ருஹஸ்தன் வைச்வதேவ கர்மாவை பகலில் ஆரம்பிக்கவேண்டும். அது தனக்கும், அன்னத்துக்கும் ஸமஸ்காரார்த்தமாகக் கருதப்படுகிறது.

एकपाकेन वसतां पितृदेव द्विजार्चनम् ।
एकं भवेद्विभक्तानां तदेवस्याद् गृहे गृहे ॥

ஒரு பாகத்தில் யோக க்ஷேமங்கள் செய்துகொண்டு சொத்துக்களைப் பிரித்துக்கொள்ளாமல் குடும்பம் நடத்தும் சகோதரர்களுடைய விஷயத்தில், சிரார்தம், தேவபூஜை பிராம்மணபூஜை, வைச்வதேவம், இவைகள் ஒன்று செய்தால் போதுமானது. சொத்து விபாகம் ஆகிவிட்டால் எல்லா கர்மாக்களும் தனித் தனியாகச் செய்யவேண்டும்.

कृत्वा श्राद्धं महाबाहो ब्रह्मणांश्चविसृज्यच ।
वैश्वदेवादिकं कर्म ततः कुर्यान्नराधिप ॥

ச்ராத்தம் செய்தபிறகு ப்ராம்மணர்களைப் பூஜித்து உத்வாஸனம் செய்த பிறகு வைச்வதேவம் செய்யவேண்டும். தனியாக பாகம் செய்த அன்னத்தில் வைச்வதேவம் செய்ய வேண்டும்.

34. आतिथ्यंयम् — ஆதித்யம்.

चन्द्रिकायां — गोदोहकालं कांक्षेत कृत्वाभूतबलिं द्विजः ।
अतिथिं तत्र संप्राप्तं पूजयेत्स्वागतादिना ॥

வைச்வதேவம், பலிஹரணம் இவைகளைச் செய்து ஆசமனம் செய்து பிறகு கிருஹத்தினுடைய வாசலில் பால் கறக்கும் காலம் (அதாவது ½ நாழிகை) அதிதியை எதிர் பார்க்கவேண்டும். அதிதி வந்தவுடன் அவரை பூஜித்துப் போஜனம் செய்விக்கவேண்டும்.

व्यासः — गवाह्निकं परगवे दद्यादपि तृणादिकम् ।
अकृत्वा स्वयमाहारं स्वर्गलोकं स गच्छति ॥

வ்யாஸர் :— தினமும் பிறருடைய பசுவுக்கு புல்களைக் கொடுத்துவிட்டுச் சாப்பிடவேண்டும். இதற்கு கவாஹ்னிகம் என்று பெயர். இதைச் செய்யாமல் சாப்பிட்டால் ஸ்வர்கத்தை அடையமுடியாது.

अज्ञातकुलगोत्रस्तु अध्वश्रान्तो बुभुक्षितः ।
संप्राप्तो वैश्वदेवान्ते सोऽतिथिः स्वर्गसंक्रमः ॥

குலகோத்திரங்கள் அறியப்படாதவனும், வழிநடந்த தால் களைப்படைந்தவனும், பசியோடு கூடியவனும், வைச்வ தேவத்தினுடைய முடிவில் வந்தவனும், இருக்கிற

வனுக்கு அதிதி என்று பெயர். இந்தமாதிரி அதிதி கிடைத்தால் யஜமானன் ஸ்வர்க்கத்தை தன் ஆயுஸ்ஸினுடைய முடிவில் அடைவான் என்பதற்கு சுபஸூசகமாகும் என்பது கருத்து.

अभ्यागतो ज्ञातपूर्वस्त्वज्ञातोऽतिथिरुच्यते ॥

முன்பு தெரிந்தவன் அப்யாகதன் என்று சொல்லப்படுகிறது. முன்பு தெரியாதவன் அதிதியாவான்.

आपस्तम्बः — अतिथीनेवाग्रे भोजयेद्बालान् वृद्धान्
रोगसंबद्धान् स्त्रीश्चान्तर्वत्नीः ॥

ஆபஸ்தம்பர் :— அதிதி, பாலர்கள், வயதானவர்கள், வ்யாதி உள்ளவர்கள், கர்பிணீ ஸ்திரீகள் இவர்களுக்கு முதலில் போஜனம் போட்டுவிட்டுப் பிறகுதான் போஜனம் செய்யவேண்டும்.

विष्णुपुराणे — ततस्सुवासिनी दुःखिगर्भिणी वृद्धबालकान् ।
भोजयेत् सत्कृतान्नेन प्रथमं तु परं गृही ॥

வைச்வ தேவத்திற்குப் பிறகு, சுமங்கலிகள், துக்கத்தை அடைந்தவன், கர்பிணீ, வயதானவன், பாலகர்கள் இவர்களை முன்பு சாப்பிடச் செய்யவேண்டும். பிறகு தான் சாப்பிடவேண்டும்.

पराशरः — यतिश्च ब्रह्मचारी च पक्वान्नस्वामिनावुभौ ।
तयोरन्नमदत्वातु भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥

பராசரர்:— ஸந்நியாஸீ, ப்ரம்மசாரி இவர்கள் சமைத்த அன்னத்திற்கு பங்குள்ளவர்கள், ஆகையால் அவர்களுக்கு அன்னம் போடாமல் சாப்பிட்டால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்கவேண்டும்.

दद्याच्चभिक्षा त्रितयं परिव्राड्ब्रह्मचारिणाम् ।
इच्छया च ततो दद्यात् विभवेसत्यवारितम् ॥

ப்ரம்மச்சாரிகளுக்கும், ஸன்யாஸிகளுக்கும் மூன்று தடவை பிக்ஷை போடவேண்டும். மேலும் பிக்ஷை போடலாம். தனக்கு சக்தி இருந்தால் அவர்களும் போதும் என்று சொல்லாமல் இருந்தால் என்பது கருத்து.

यतिहस्ते जलं दद्यात् भैक्षं दद्यात् पुनर्जलम् ।
तद्भैक्षं मेरुणातुल्यं तज्जलं सागरोपमम् ॥

முன்பு ஸன்யாஸி கையில் ஜலம் கொடுத்துப் பிறகு பிக்ஷை போடவேண்டும், பிக்ஷை போட்டபிறகு மறுபடியும் கையில் ஜலம் கொடுக்கவேண்டும். இது பிக்ஷை போடும் முறையாகும். இந்த பிக்ஷை மேருபர்வதத்திற்குச் சமமாகும். அந்த ஜலம் ஸமுத்திரத்திற்கு சமமாகும்.

हारीतः— भक्त्या च शक्तितो नित्यं विष्णुमभ्यर्च्य सादरम् ।
भिक्षां च भिक्षवे दद्यात् परिव्राड्ब्रह्मचारिणे ॥
विष्णुरेव यतिश्चायं इति निश्चित्य भावयेत् ।
यतिर्यस्य गृहे भुंक्ते तस्य भुंक्ते जगत्रयम् ॥

ஹாரீதர்:— தினமும் பக்தியுடன் விஷ்ணு பூஜை செய்துவிட்டு ஸன்யாஸிகளுக்குப் பிக்ஷை போடவேண்டும். ப்ரம்மசாரிக்கும் பிக்ஷை போடவேண்டும். ஸந்நியாஸியை விஷ்ணுவாக பாவிக்கவேண்டும். எவருடைய கிருஹத்தில் ஸந்யாஸி போஜனம் செய்கிருரோ, அந்த கிருஹத்தில் விஷ்ணுபோஜனம் செய்கிருர் என்று சாஸ்திரம் கூறுகிறது. விஷ்ணு போஜனம் செய்கிற கிருஹத்தில் மூன்று ஜகத்தும் போஜனம் செய்கிறது என்று அறியவும்.

व्यासः— यः पात्रपूरणीं भिक्षां यतिभ्यः संप्रयच्छति ।
विमुक्तः सर्वपापेभ्यो नासौ दुर्गतिमाप्नुयात् ॥

வ்யாஸர்:— எவன் யதிகளுக்குப் பாத்திரம் நிறைய பிக்ஷையைக் கொடுக்கிருனே, அவன் சகல பாபங்களி னின்றும் விடுபடுவான். ஏழ்மையை அடையமாட்டான்.

न दद्याद्यतये स्वर्णं तण्डुलं ब्रह्मचारिणे ।
पक्वान्नं तु गृहस्थाय दाता दुर्गाणि गच्छति ॥

ஸன்யாஸிக்கு தங்கத்தையும், ப்ரம்மசாரிக்கு அரிசி யையும், கிருஹஸ்தனுக்கு அன்னத்தையும் கொடுப்பவன், கஷ்டப்படுவான்.

पराशरः — अतिथिं तत्र संप्राप्तं पूजयेत् स्वागतादिना ।
तथाऽऽसनप्रदानेन पादप्रक्षाळनेन च ॥
श्रद्धयाचान्नदानेन प्रियप्रश्नोत्तरेण च ।
गच्छतश्चानु यानेन प्रीतिमुत्पादयेद् गृही ॥
नपृच्छेद्गोत्रचरणे न स्वाध्यायं श्रुतं तथा ।
हृदये कल्पयेद्देवं सर्वदेवमयोहि सः ॥

பராசரர்:— வைச்வ தேவத்திற்குப் பிறகு வந்த அதிதியை நல்வரவு கூறுவது முதலியதால் பூஜிக்கவேண்டும். பிறகு ஆஸனம் கொடுப்பது, கால்களை அலம்புவது, ச்ரத்தை யுடன் அன்னம் போடுவது, இனிய வார்த்தைகளாலும் பதில் சொல்வதாலும், அதிதியை சந்தோஷப்படுத்த வேண்டும். திரும்பி போகும் பொழுது பின்தொடர்ந்து கொஞ்சதூரம் செல்லவேண்டும். அதிதியை படிப்பு விஷய மாகவும், வம்சம், கோத்ரம் முதலியதும் கேட்கக்கூடாது அதிதியை தேவராக பாவிக்கவேண்டும். அதிதியை சாஸ் திரம் சகல தேவதாஸ்வரூபியாகக் கூறுகிறது என்று அறியவும்.

मनुः — तृणानि भूमिरुदकं वाक्चतुर्थीचसूनृता ।
एतान्यपि सतां गेहे नोच्छिद्यन्ते कदाचन ॥

மனு:— வசதி இல்லாதவன் வந்த அதிதியை அலக்ஷ்யம் செய்யக்கூடாது. ஆசனம் இல்லாவிடில் தர்ப்பத்ருணங்களை ஆசனமாகப் போடலாம். படுக்கை இல்லையேயானால் பூமியில் படுக்க இடம் அளிக்கலாம். எண்ணெய் இல்லாதிருந்தால் ஜலம் கொடுக்கலாம். அன்னம் இல்லாவிடில் ஹிதமான பிரியமான வார்த்தைகள் பேசலாம். இதெல்லாம் ஏழைக்கிருஹத்தில் இல்லாமலிருக்க முடியாது. ஆகையால் வந்த அதிதியை அலக்ஷ்யம் செய்யாதே என்பது கருத்து.

अतिथिर्यस्यभग्नाशो गृहात्प्रतिनिवर्तते ।
पितरस्तस्य नाश्नन्ति दशवर्षाणि पंच च ॥
काष्ठभारसहस्त्रेण घृतकुम्भशतेन च ।
अतिथिर्यस्य भग्नाशः तस्य होमो निरर्थकः ॥

எந்த கிருஹத்தில் அதிதி உபசாரமில்லாமல் இங்கு ஏன் வந்தோம் என்று வெறுப்பு அடைந்தவனாகச் செல்லுகிறானோ அந்த கிருஹத்தில் பித்ருக்கள் 15 வருஷகாலங்கள் யஜமானன் கொடுத்த திரவ்யத்தைப் புஜிப்பதில்லை. அதிதியை அலக்ஷ்யம் செய்தவன் ஆயிரம் கட்டு ஸமித்துக்களையும், நூறு குடம் ஆஜ்யத்தையும் அக்னியில் ஹோமம் செய்தாலும் அது ப்ரயோஜனமற்றதாகும் என்று அறியவும்.

व्यासः — अतिथिं पूजयेद्यस्तु श्रान्तं चादृष्टमागतम् ।
सवृषं गोशतं तेन दत्तं स्यादिति मे मतिः ॥

வ்யாஸர்:— வழி நடந்ததால் சிரமத்துடன் முன் பின் தெரியாது வந்தவனை அதிதியைச் சிரத்தையுடன் எவன் பூஜிக்கிறானோ அவன் யானை போன்ற காளை மாட்டுடன் கூடிய நூறு பசுக்களைத் தானம் செய்த புண்ணியத்தை அடைவான்.

35. भोजन नियमाः— சாப்பாட்டு நியமங்கள்.

मनुः— सायं प्रातर्द्विजातीनां अशनं श्रुतिचोदितम् ।
नान्तरा भोजनं कुर्यादग्निहोत्र समो विधिः ॥

மனு — ப்ராம்மணனுக்கு மாலையிலும், காலையிலும் போஜனமானது வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மற்ற வேளையில் போஜனம் செய்யக்கூடாது. இது அக்னிஹோத்ரத்திற்குச் சமமாகும்.

नाति प्रगे नाति सायं न सायं प्रातराशितः ।

அபராத்திரியிலும், அர்த்தராத்திரியிலும் சாப்பிடக் கூடாது. ராத்திரியிலும், பகலிலும் இரண்டு முறை புஜிக்கக் கூடாது.

वेदे— तस्माद्द्विरह्नो मनुष्येभ्य उपह्रियते ।

ஆகையால் ஒரு தினத்திற்கு இரண்டு முறை மனிதர்களால் அன்னம் சாப்பிடப் படுகிறது என்று வேதம் கூறுகிறது.

व्यास :— पंचार्द्रो भोजनं कुर्यात् प्राङ्मुखो मौनमास्थितः ।
हस्तौ पादौ तथा चास्यमेषु पंचार्द्रता मता ॥

வ்யாஸர் :— மௌனமாக இருந்துகொண்டு ஐந்து இடங்களில் ஜலத்தினால் நனைத்துக்கொண்டு ஈரத்துடன் கிழக்கு முகமாக சாப்பிடவேண்டும். இரண்டு கைகள், இரண்டு பாதங்கள் முகம் இவைகள் ஈரத்துடன் இருக்க வேண்டும்.

देवल :— पादौ प्रक्षाल्य हस्तौ च द्विराचम्य च वाग्यतः ।
प्राङ्मुखोऽन्नानि भुंजीत शुचिपीठमधिष्ठितः ॥

தேவலர் :— கைகால்களை அலம்பிக்கொண்டு இரண்டு தரம் ஆசமனம் செய்து மௌனத்துடன் கிழக்குமுகமாக ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு சாப்பிடவும்.

आचम्यैव च भुंजीत भुक्त्वा चोपस्पृशेदपः ।
अनाचान्तस्तु योऽश्नीयात् प्रायश्चित्तीयते हि सः ॥

ஆசமனம் செய்தபிறகுதான் சாப்பிடவேண்டும். சாப்பிட்டபிறகும் ஆசமனம் செய்யவேண்டும். ஆசமனம் செய்யாமல் சாப்பிட்டால் ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். தவறுதலாகச் சாப்பிட்டால் 1008 தடவை காயத்ரீ ஜபம் செய்யவேண்டும்.

आत्रेय :— उपलिप्ते शुचौदेशे निश्छिद्रं चतुश्रकम् ।
गोमयं मण्डलं कृत्वा भोक्तव्यमिति निश्चितम् ।
पात्रावस्थानतोन्यूनं अधिकं वा न कारयेत् ॥

ஆத்ரேயர் :— சுத்தமான தேசத்தில் நன்றாக கோமயத்தினால் இடைவெளியில்லாமல் நான்கு மூலை உள்ளதாக போஜனப் பாத்திரத்திற்கு சமமாக மெழுகி மண்டலம் செய்து கொண்டும் அதன் மேல் பாத்திரம் வைத்துக் கொண்டும் புஜிக்கவேண்டும்.

शंखः — आदित्या वसवो रुद्राः ब्रह्माचैवपितामहः ।
मण्डलान्यपजीवन्ति तस्मात्कुर्वीत मण्डलम् ॥

சங்கர் :— ஆதித்தியர்கள், வஸுக்கள், ருத்திரர்கள், ப்ரம்மா, பிதாமஹர், இந்த தேவதைகள் மண்டலத்தை ஆச்ரயித்து இருக்கிறார்கள். ஆகையால் மண்டலம் செய்து கொண்டு புஜிக்கவேண்டும்.

अत्रि :— भूम्यां पादौ प्रतिष्ठाप्य यो भुंक्ते वाग्यतः शुचिः ।
भोजने भोजने विप्रत्रिरात्रफलमश्नुते ॥

அத்ரி :— ப்ராம்மணன் பூமியில் பாதங்களை வைத்துக் கொண்டு ஆசனத்தில் உட்கார வேண்டும், அப்படி

செய்துகொண்டு மௌனமாக எவன் போஜனம் செய்கிருனே அவன் ஒவ்வொரு போஜனத்திலும் மூன்று நாள் உபவாஸம் இருந்த பலனை அடைகிருன்.

आसनारूढपादस्तु ब्राह्मणो यस्तु भुंजते ।
मुखेन धमते चान्नं तुल्यं गोमांसभक्षणे ॥

எந்த ப்ராம்மணன் ஆசனத்தில் பாதங்களை வைத்துக் கொண்டும், சூடான அன்னத்தை முகத்திஞல் ஊதிக் கொண்டும் அன்னத்தைச் சாப்பிடுகிருனே அவன் கோ மாமிசத்தைச் சாப்பிட்ட பாவத்தை அடைகிருன்.

मनु :— आयुष्यं प्राङ्मुखो भुंक्ते यशस्यं दक्षिणामुखे ।
श्रियं प्रत्यङ्मुखो भुंक्ते ऋतं भुंक्तेह्युदङ्मुखः ॥

மனு :— ஆயுஸ்ஸை கிழக்குமுகமாகச் சாப்பிடுகிறவன் அடைவான். யசஸ்ஸை விரும்புகிறவன் தெற்குமுகமாக வும், ஐஸ்வரியத்தை விரும்புகிவன் மேற்கு முகமாவும், சத்தியத்தை விரும்புகிறவன் வடக்கு முகமாகவும் சாப்பிட வேண்டும். ஜீவத் பித்ருகனவன் தெற்கு முகமாகச் சாப்பிடக்கூடாது என்று அறியவும். வடக்கு முகமாகச் சாப்பிடுவது பித்ருக்களுக்குப் பிரியமானது. காலில் செருப்புப் போட்டுக்கொண்டும் தலைப்பாகை வைத்துக் கொண்டும் சாப்பிடக்கூடாது. அந்த சாப்பாடு ஆசுரமாகும்.

आपस्तम्बः— यत्नेन धारयेद्विप्रः पवित्रं दक्षिणे करे ।
भुंजानस्तु विशेषेण चान्नदोषैर्न लिप्यते ॥

ஆபஸ்தம்பர் :— ப்ராம்மணன் பவித்ரத்தை வலது கையில் தரித்துக்கொண்டு சாப்பிடவேண்டும். பவித்ரம் தரித்துச் சாப்பிடுபவன் அன்ன தோஷங்களால் கெடுக்கப் படமாட்டான். பவித்ரம் தங்கத்திஞல் செய்யப்பட்டது ச்லாக்கியமானது. தர்ப்பத்திஞலும் செய்து கொள்ளலாம்.

36. भोजन पात्राणि —போஜன பாத்திரங்கள்.

योगयाज्ञवल्क्य :— अपत्रं वाथ कांस्यं वा राजतं वा हिरण्मयम् ।
तानि पात्राणि सर्वेषां यथा विभवमाचरेत् ॥

யோக யாஞ்யவல்க்யர் :— இலை, வெண்கலம், வெள்ளி, தங்கம் இவைகளாலாகிய பாத்திரங்களில் போஜனம் செய்யலாம். அவரவர்களுடைய சக்திக்கு உகந்தவாறு பாத்திரம் தயார் செய்து கொள்ளலாம்.

प्रचेता :— ताम्बूलाभ्यंजने चैव कांस्यपात्रे च भोजने ।
यतिश्च ब्रह्मचारी च विधवा च विवर्जयेत् ॥

வெண்கலப் பாத்திரம் கிருஹஸ்தனுக்கு மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸன்னியாஸி, ப்ரம்மச்சாரீ, விதவை, இவர்கள் வெண்கலப் பாத்திரத்தில் சாப்பிடக் கூடாது. தாம்பூலம், எண்ணெய் தேய்த்துக்கொள்வது இவைகளும் வர்ஜிக்கத் தகுந்தது.

पनसाम्र नालिकेर कदली विल्वपत्रके ।
भोजने कांस्यपात्रे च चान्द्रायणफलं लभेत् ॥

பலா, மாவிலை, தென்னை, வாழை, பில்வம், இவைகளுடைய இலையிலும், வெண்கலப் பாத்திரத்திலும் கிருஹஸ்தன் போஜனம் செய்தால் சாந்திராயண பலத்தை அடைவான். ஆகையால் இவைகள் ச்லாக்யமானவைகள்.

पलाशपद्मपत्रेषु गृहीभुक्त्वैन्दवं चरेत् ।

கிருஸ்தன் புரசு இலையிலும், தாமரை இலையிலும், புஜிக்கக்கூடாது. புஜித்தால் சாந்திராயணம் அனுஷ்டிக்க வேண்டும்.

ब्रह्मचारि यतीनां तु चान्द्रयणफलं भवेत् ।

ஸன்யாஸியும், ப்ரம்மச்சாரியும், தாமரை இலையிலும், புரசு இலையிலும் சாப்பிடலாம். சாந்திராயணம் அனுஷ்டித்த பலம் கிடைக்கிறது. ஆகையால் ச்லாக்கியமானது.

स्मृतिचिन्तामणौ :—एकएवतु भुंजीत विमले कांस्य भाजने ।
पलाद्विशतिकादर्वाक् अत उर्ध्वं यथेच्छया ॥

இருபது பலத்திற்கு குறைந்த நிறை உள்ள சுத்தமான வெண்கலப் பாத்திரத்தில் ஒரு கிருஹஸ்தன் தினமும் சாப்பிடலாம். இருபது பலத்திற்கு மேல் நிறை உள்ள வெங்கலப் பாத்திரத்தில் இஷ்டப்படி புஜிக்கலாம்.

व्यास :— करे कर्पटके चैव ह्यायसे ताम्रभाजने ।
वटाकश्चित्थपर्णेषु भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥

வ்யாஸர் :— கையிலும், வஸ்திரத்திலும், இரும்புப் பாத்திரத்திலும், தாமிரப் பாத்திரத்திலும், ஆல், அச்வத்தம், எருக்கு இவைகளுடைய இலைகளிலும் போஜனம் செய்தால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்கவேண்டும். ப்ரம்மச்சாரி தாமிரப் பாத்திரத்தில் சாப்பிடலாம்.

37. भोजनकरण विधानम्—போஜனம் செய்யும் முறை.

मनुः — पूजयेदशनं नित्यं अद्याचैतदकुत्सयन् ।
पूजितं ह्यशनं नित्यं बलमूर्जं प्रयच्छति ॥

மனு:— அன்னத்தை எப்பொழுதும் பூஜிக்கவேண்டும். அன்னத்தை நிந்திக்கக்கூடாது. பூஜிக்கப்பட்ட அன்னமானது சாப்பிடுகிறவனுக்கு பலத்தையும் வீரியத்தையும் கொடுக்கிறது.

सुमन्तुः — अन्नं निधाप्य दर्व्यातु न हस्तेन कदाचन ।
पूजयित्वा तदन्नं च आपोशनं तु समन्त्रकम् ॥

ஸுமந்து :— அன்னத்தைக் கரண்டியினுல் வைக்க வேண்டும்: கையினுல் போடக்கூடாது. போட்ட அன்னத்தை பூஜித்து ஆபோசனம் வாங்கிக்கொள்ளவும்.

व्यासः — अन्नं दृष्ट्वा प्रणम्यादौ प्रांजलिः कथयेत्ततः ।
अस्माकं नित्यमस्त्वेतदिति भक्त्याऽथ वन्दयेत् ॥

வ்யாஸர் :— முதலில் அன்னத்தை நமஸ்கரித்து அஞ்சலி பந்தனம் செய்துகொண்டு ''இந்தமாதிரி அன்னம் எப்பொழுதும் கிடைக்கட்டும்'' என்று பக்தியுடன் பிரார்த்தனை செய்து நமஸ்கரிக்கவேண்டும்.

गोभिलः — व्याहृतिभिर्गायत्र्याऽभिमन्त्र्य ऋतं त्वा
सत्येन परिषिंचामीति सायम्
सत्यंत्वर्तेन परिषिंचामीति प्रातः परिषिंचति ॥

கோபிலர் :— வ்யாஹ்ருதிகளாலும், காயத்ரியினுலும் அன்னத்தை அபிமந்தரணம் செய்து "ருதந்த்வா ஸத்யேந" என்ற மந்திரத்தினுல் ஸாயங்காலத்திலும், "ஸத்யம் த்வர்த்தேன" என்று ப்ராதః காலத்திலும் அன்னத்தைப் பரிஷேசனம் செய்யவேண்டும்.

पाणिना जलमुद्धृत्य कुर्यादन्नं प्रदक्षिणम् ।
अपेयंतद्विजानीयात् पीत्वा चान्द्रायणं चरेत् ।
परिषेकजलादन्यत्पेयमेतत्तु मन्त्रवत् ॥

கையினுல் ஜலத்தை எடுத்து அன்னத்தைப் பிரதக்ஷிணமாகப் பரிஷேசனம் செய்த பாக்கி ஜலத்தை ஆபோசனம் வாங்கக்கூடாது. தெரியாமல் ஆபோசனம் செய்தால்

சாந்த்ராயணம் செய்யவேண்டும். ஆகையால் பரிஷேசன ஜலத்தைக் காட்டிலும் வேறு ஜலத்தால் ஆபோசனம் செய்யவேண்டும்.

आपोशनमकृत्वातु यद्यन्नं विस्तृतं भवेत् ।
तदन्नं मांस तुल्यं स्यात् भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥

ஆபோசனம் செய்யாமல் அன்னத்தைத் தொட்டு பரத்தினுல் அந்த அன்னம் மாமிச சமமாகும்; அதைச் சாப்பிட்டால் சாந்திராயணம் செய்து கொள்ளவேண்டும்.

शौनक :— स्वाहान्ताः प्रणवाद्याश्च नाम्ना मन्त्रास्तु वायवः ।
जिह्वयैव ग्रसेदन्नं दशनैस्तु न संस्पृशेत् ॥

சௌனகர் :— ஸ்வாஹாகாரத்தை முடிவிலும், ப்ரணவத்தை ஆரம்பத்திலும் சொல்லி, ஐந்து வாயுக்களுடைய நாமாக்களை ஜபித்து அன்னத்தை விழுங்கவேண்டும். பல்லால் கடிக்கக்கூடாது. நாக்கினுல் அன்னத்தை விழுங்கத் தள்ளிக் கொள்ளலாம்.

स्मृतिसारे —मध्यमानामिकाङ्गुष्ठैः गृहीत्वान्नं मितं पुनः ।
प्राणाय चेत्यपानाय व्यानाय च यथा क्रमम् ।
उदानाय समानाय स्वाहेतिजुहुयात् क्रमात् ॥

நடுவிரல், பவித்ரவிரல், பெருவிரல் இவைகளால் ஸ்வல்ப்பமான அன்னத்தை எடுத்து ப்ராணுயஸ்வாஹா, அபாணுய, வ்யாணுய, உதாணுய, ஸமாணுய என்று ஸ்வாஹாரத்துடன் முகத்தில் ஹோமம் செய்யவேண்டும்.

पराशर :— ततः प्रक्षाल्य हस्तं च ध्यात्वा चान्नाधिदेवताम् ।
समन्त्राचमनं कृत्वा प्राणाद्याहुति पंचकम् ।
दशनस्पृष्टिरहितं कृत्वा भुंजीत वाग्यतः ॥

பராசரர் :— பரிஷேசனம் செய்தபிறகு உத்தரணியினுல் வலது கையை மட்டும் அலம்பிக்கொண்டு இடது கையினுல்

போஜனப் பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு மந்திரத்துடன் ஆபோசனம் செய்து ப்ராணன் முதலிய தேவதைகளை உத்தேசித்து ஐந்து ப்ராணாஹுதிகளைச் செய்யவேண்டும். ஆஹுதி செய்த அன்னத்தைப் பல்லினால் கடிக்காமல் விழுங்கவேண்டும். அந்த சமயத்தில் மௌனம் ரொம்ப முக்கியமானது.

कृष्णंभट्टलिखिते—आह्निकसारसंग्रहे —

रविस्सोमस्तथा चाग्निर्वायुः पर्जन्य एव च ।
परं ब्रह्मतथैताश्च देवताः परिकीर्तिताः ।
वामेनपात्रं स्पृष्ट्वातु प्राणाहुति यथा चरेत् ॥
प्राणेनिविष्ट इत्यादि स्वाहा चैवाहुतिर्भवेत् ।
एवं प्राणाहुतीर्हुत्वा तथा चात्माहुतिं तथा ॥

இடது கையினால் போஜனப் பாத்திரத்தை தொட்டுக் கொண்டு ப்ராணாஹுதி செய்யவேண்டும். ப்ராணாஹுதிகள் ஐந்து என்று சொல்லப்படுகிறது, ஆத்மாஹுதி ஒன்று, ஆக ஆறு ஆஹுதிகள். க்ரமமாக, ஸூரியன், ஸோமன், அக்னி, வாயு, பர்ஜன்யன், என்று தேவதைகள் ஐந்து ப்ராணாஹுதிகளுக்கும் ஆருவதான ஆஹுதிக்கு பரம் ப்ரம்மம் தேவதை என்றும் அறியவும். இந்த விஷயமானது ஜீர்ணமான தாள பத்திரத்தில் அகப்பட்டது.

अत्रि :— शब्देनापः पयः पीत्वा शब्देनं घृतपायसम् ।
शब्देनापोशनं कृत्वा सुरापान समं भवेत् ॥

அத்ரி :— சப்தத்துடன் ஜலத்தையும், பாயஸத்தையும், ஆபோசனத்தையும் சாப்பிட்டால் ஸுராபானம் செய்த தற்குச் சமமாகும்.

व्यास :— मौनं वाचो निवृत्तिस्स्यात् नात्मभाषा न संस्कृतम् ।
नान्यदेवेरणं विष्णुं सदा ध्यायेच्च कीर्तयेत् ॥

வ்யாஸர் :— மௌனம் என்பது பேசாமல் இருப்பது. இந்த விஷயத்தில் சமஸ்கிருதத்திலும் வேறு பாஷையில் கூட பேசக்கூடாது. விஷ்ணுவை த்யானம் கீர்த்தனம் இரண்டும் செய்யலாம். மற்றதேவதைகளைச் சொல்லக்கூடாது.

देवताभिधानं चा प्रयतः इत्यापस्तम्बवचनं
देवतान्तर विषयम् ॥

அசுத்தனாக இருந்துகொண்டு தேவதா நாமங்களை உச்சரிக்கக்கூடாது என்ற ஆபஸ்தம்பருடைய வசனமானது உச்சிஷ்ட சமயத்தில் இதர தேவதைகளை ஸ்மரிக்கக்கூடாது என்பதாகும் என்று அறியவும்.

कवले कवले चैव कुर्याद्गोविन्द कीर्तनम् ।
ना शौचं कीर्तने तस्य पवित्रं भगवान् हरिः ॥

ஒவ்வொரு கபளம் அன்னம் சாப்பிடும்பொழுதும் கோவிந்த கோவிந்த என்று சொல்லவேண்டும். உச்சிஷ்ட சமயத்தில் சொல்லலாமா என்று சம்சயம் வேண்டாம். பகவான்ஹரி: பரமபவித்ரமானவர். கிருஹஸ்தன் போஜன காலத்தில் மௌனம் இருக்கவேண்டியது இல்லை. ப்ராணாஹுதி பர்யந்தம் இருந்தால் போதுமானது. ஆனால் தர்மமாக போஜனத்திற்கு இடையூறு இல்லாமல் பேசவேண்டும் என்பது கருத்து.

शाण्डिल्य :— नावश्यं भोजने मौनं कुटुम्बाश्रमवासिनाम् ।
वाचोपचारः कर्तव्यो भुंजतां सहभोजने ॥

சாண்டில்யர் :— கிருஹஸ்தாச்ரமத்தில் வசிப்பவருக்கு போஜனத்தில் மௌனம் அவசியமில்லை. சேர்ந்து போஜனம் செய்கிறவர்களுக்கு வாக்கினால் உபசாரம் செய்யவேண்டும்.

मार्कण्डेय:—अश्नीयात्तन्मना भूत्वा पूर्वं तु मधुरं रसम्।
लवणाम्लौ तथा मध्ये कटुतिक्तादिकं ततः॥
प्राक्द्रवं पुरुषोऽश्नीयान्मध्ये तु कठिनाशनम्।
अन्ते पुनर्द्रवाशी तु बलारोग्ये न मुंचति॥

மார்கண்டேயர்:— ஏகாக்ர சித்தத்துடன் முதலில் மதுர ரஸத்தைச் சாப்பிடவேண்டும். உப்பு, புளிப்பு பதார்த்தங்களை நடுவிலும், கசப்பு, துவர்ப்பு பதார்த்தங்களைப் பிறகும் புஜிக்கவேண்டும். முதலில் த்ரவ பதார்த்தங்களையும், நடுவில் கடினமான வஸ்துவையும், முடிவில் த்ரவமான பதார்த்தங்களையும் புஜிக்கவேண்டும். இப்படிச் சாப்பிடுகிறவன் பலம், நல்ல ஆரோக்யம், இவைகளை அடைவான்.

आपस्तम्बः— अष्टौ ग्रासामुनेर्भक्ष्याः षोडशारण्य वासिनः।
द्वात्रिंशतं गृहस्थस्यापरिमितं ब्रह्मचारिणः॥

ஆபஸ்தம்பர்:— ஸன்யாஸிக்கு எட்டு கபளங்களும், வானப்ரஸ்தனுக்கு பதினாறு கபளங்களும், கிருஹஸ்தனுக்கு முப்பத்திரண்டு கபளங்களும், கணக்கில்லாமல் ப்ரம்மசாரிகளும் புஜிக்கவேண்டும்.

बोधायनः— ब्रह्मणि म आत्माऽमृतत्वायेत्यक्षरेणात्मानं
योजयेत् सर्वक्रतु याजिनामात्मयाजी विशिष्यते॥

போதாயனர்:— "ப்ரம்மணிமே ஆத்மா அம்ருதத்வாய" என்ற மந்திரம் சொல்லி சாப்பிட்டபிறகு உத்ராபோசனம் செய்யவேண்டும். இதற்கு தாத்பர்யம் ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் சேர்ப்பதாகும். இதைச் சிரத்தையாகச் செய்கிற ஆத்மயாஜி சகல கர்மாக்களைச் செய்கிறவனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று அறியவும்.

पराशर :— यो वेष्टितशिरा भुंक्ते दक्षिणामुखः ।
वामपादकरः स्थित्वा तद्वैरक्षांसि भुंजते ॥

பராசரர்:— எவன் வஸ்திரத்தால் முண்டாசு கட்டிக் கொண்டும், தெற்கு திக்கை நோக்கின முகத்துடனும், இடது பாகத்தில் கையை வைத்துக்கொண்டும், நின்றுகொண்டும் சாப்பிடுகிருனே அவனுடைய போஜனத்தை அசுரர்கள் சாப்பிடுகிருர்கள்.

व्यासः — यस्तु पाणितले भुंक्ते यस्तु पूत्कारसंयुतम् ।
प्रसृताङ्गुलिभिर्यश्च तस्य गोमांसवच्चरेत् ॥

வ்யாஸர்:— எவன் கையில் அன்னத்தை வைத்துக் கொண்டும், பூத்கார சப்தத்துடனும், பிரிந்த விரல்களுடனும் போஜனம் செய்கிருனே அந்த அன்னம் பசு மாமிசத்திற்கு சமானமாகும் என்று அறியவும்.

हस्त्यश्वरथयानोष्ट्रमास्थितो नैव भक्षयेत् ।
श्मशानाभ्यन्तरस्थो वा देवालयगतोऽपि वा ॥
शयनस्थो न भुंजीत न पाणिस्थं न चासने ।
नार्द्रवासा नार्द्रशिरा नचायज्ञोपवीतवान् ॥

யானை, குதிரை, தேர், வாஹனம், ஒட்டகம், இவைகளில் இருந்து கொண்டு அன்னம் சாப்பிடக்கூடாது. மயானத்தின் நடுவிலும், தேவாலயத்திலும், படுக்கையில் இருந்துகொண்டும் அன்னம் சாப்பிடக்கூடாது. கையில் வைத்திருப்பதையும், ஆசனத்தில் இருப்பதையும் சாப்பிடக் கூடாது. ஈர வஸ்திரத்துடனும், ஈரமான சிரஸ்ஸுடையவனாகவும், உபவீதியில்லாமலும் சாப்பிடக்கூடாது.

न प्रसारितपादस्तु पादारोपितपाणिमान् ।
नबाहुसक्थिसंस्थश्च न चपर्यङ्कमास्थितः ॥

காலை நீட்டிக்கொண்டும், துடையின் மேல் கையை வைத்துக்கொண்டும், காலின் மேல் கையை வைத்துக் கொண்டும், கட்டிலில் உட்கார்ந்துகொண்டும் அன்னம் புஜிக்கக்கூடாது.

नावेष्टितशिराश्चापि नोत्सङ्गकृतभाजनः ।
नैकवस्त्रो दुष्टमध्ये सोपानत्कस्सपादुकः ॥
न चर्मोपरिसंस्थश्च चर्मावेष्टितपार्श्ववान् ॥

தலையை வஸ்திரத்தினால் சுற்றிக்கொண்டும், மடியில் போஜனப் பாத்திரத்தை வைத்துக்கொண்டும், ஒரு வஸ்தி ரத்தை தரித்தவனாயும், பாதுகை, செருப்பு, இவைகளை தரித்தவனாயும், தோலின்மேல் உட்கார்ந்துகொண்டும், தோலினால் சுற்றப்பட்ட பக்கங்களை உடையவனாகவும் இருந்து போஜனம் செய்யக்கூடாது.

ग्रासशेषं न चाश्नीयात् पीतशेषं पिबेन्न च ।
शाकमूलफलेक्षूणां दन्तच्छेदैर्न भक्षयेत् ॥

ஒரு கபளம் அன்னத்தை எடுத்துப் பாதி சாப்பிட்டு பிறகு பாதியைச் சாப்பிடக்கூடாது. குடித்த ஜலத்தின் மீதியைக் குடிக்கக்கூடாது. கறிகாய், கிழங்கு, பழங்கள், கரும்பு இவைகளைப் பல்லினால் துண்டாக்கிச் சாப்பிடக் கூடாது.

बहूनां भुंजतां मध्ये न चाश्नीयात्त्वरान्वितः ।
वृथा न विकरेदन्नं नोच्छिष्टः कुत्रचिद् व्रजेत् ॥

எல்லோரும் சாப்பிடும்பொழுது சீக்கிரம் சாப்பிடக் கூடாது, அனுசரித்துச் சாப்பிடவேண்டும். அன்னத்தை

வீணுக இறைக்கக்கூடாது. எச்சிலுடையவனுய் எங்கும் செல்லக்கூடாது. பூமியில் தள்ளப்பட்ட அன்னத்தை எடுத்துச் சாப்பிட்டால் சாந்திராயணம் அனுஷ்டிக்க வேண்டும்.

मनु :— नाश्नीयाद्भार्यया सार्धं नैनामीक्षेत चाश्नतीम् ।
क्षुवतीं जृंभमाणां वा न चासीनां यथा सुखम् ॥

மனு :— பத்தினியுடன் சேர்ந்து சாப்பிடக்கூடாது. பத்தினி சாப்பிடும்பொழுது பார்க்கக்கூடாது. தும்பும் போதும், கொட்டாவிடும்பொழுதும், சோம்பல் முறிக்கும் பொழுதும், இஷ்டப்படி உட்கார்ந்துகொண்டு இருக்கும் பொழுதும் பத்தினியைப் பார்க்கக்கூடாது என்று அறியவும்.

अत्रि :— प्राणाहुतौ घृता भावे पश्चाद्भुंजीत नोघृतम् ।
प्राग्घुते घृतसद्भावे भुक्तिमध्ये न दुष्यति ॥

அத்ரி :— ப்ராணுஹுதியில் நெய் சேர்க்காவிடில் பிறகு நெய்யைப் புஜிக்கக்கூடாது. ப்ராணுஹுதியில் நெய் சேர்த்திருந்தால் போஜன மத்யத்தில் நெய் சேர்ப்பது துஷ்டமாகாது.

यमः — यस्त्वेकपंक्तौ विषमं ददाति स्नेहाद्भयाद्वा यदि वार्थ हेतोः ।
वेदेषुदृष्टामृषिभिश्च गीतां तां ब्रह्महत्यां मुनयो वदन्ति ॥

எமன் :— எவன் ஒருவன், பந்தியில் அநேகர்கள் சாப்பிடும்பொழுது சிலபேர்களுக்கு மட்டும், ஸ்நேகத்திலுலோ அல்லது பயத்திலுலோ, பணத்தின் காரணமாகவோ, வித்தியாசமாகப் பதார்த்தங்களைப் போடுகிறுனே, அவனுக்கு வேதங்களில் கூறப்பட்டதும், மஹரிஷிகளால் கூறப்பட்டதுமான ப்ரம்மஹத்தி தோஷம் ஏற்படும் என்று பெரியோர்கள் கூறுகிறுர்கள்.

गोभिल :— एकपंक्त्युपविष्टानां विप्राणां सहभोजने ।
यद्येकोपि त्यजेत् पात्रं नाश्नीयुरितरेऽप्यनु ॥

கோபிலர் :— ஒரு பந்தியில் உட்கார்ந்துகொண்டு புஜிக்கும் ப்ராமணர்களுள் ஒருவன் போஜனப் பாத்திரத்தை விட்டாலும் பிறகு மற்றவர்களும் அன்னத்தைப் புஜிக்கக் கூடாது.

पराशर :— एकपंक्त्युपविष्टानां दुष्कृतं यद्दुरात्मनाम् ।
सर्वेषां तत्समं तावद्यावत्पंक्तिर्नभिद्यते ॥

பராசரர் :— ஒருபந்தியில் உட்கார்ந்திருக்கும் துஷ்டர்களுடைய பாபமானது அவனுடன் சேர்ந்து சாப்பிடும் மற்றவர்களுக்கும் வரும். பந்தியைப் பிரித்தால் தோஷம் ஏற்படாது.

अग्निना भस्मना चैव स्तंभेन सलिलेन च ।
द्वारेण चैव मार्गेण पंक्तिभेदो बुधैः स्मृतः ॥

அக்னியினாலும், சாம்பலினாலும், தூணினாலும், ஜலத்தினாலும், வாயிலாலும், வழியினாலும், பந்தியைப் பேதிக்கலாம் (பிரிக்கலாம்) என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

स्मृतिरत्ने — शयनस्थो न भुंजीत न पाणिस्थं न चासने ।
न कुर्यात् स्कन्दनं शब्दं क्रोधमन्यत्र चिन्तनम् ॥
शिशूनां भर्त्सनं चापि श्वचण्डालादिदर्शनम् ।
अशुचीनां तथामध्ये प्रेक्षतामप्यनश्नताम् ।
नाकाले विषयुक्तं च नाश्नीयादहुतं तथा ॥

படுக்கையிலிருந்து புஜிக்கக்கூடாது. கையிலுள்ளதையும், ஆசனத்திலுள்ளதையும், புஜிக்கக்கூடாது. மூக்கைச் சிந்தக்கூடாது. சப்தம் போடுவது, கோபம், வேறு இடத்தில்

சிந்தனை செய்வது, குழந்தைகளை விரட்டுவது, நாய், சண்டாளன், முதலியவர்களைப் பார்ப்பது இவைகளையும் சாப்பிடும் பொழுது செய்யக்கூடாது. அசுத்தர்களுடைய நடுவிலும், சாப்பிடாதவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதும், அகாலத்திலும், விஷம் கலந்ததையும் சாப்பிடக்கூடாது. வைச்வ தேவமில்லாமல் சாப்பிடக்கூடாது.

उच्छिष्ट स्पर्शनं ज्ञात्वा तत्पात्रं परिहृत्य च ।
ततः पश्चाद्गोमयेन भूमिं समनुलिप्य च ॥
अन्यत्पात्रं निधायैव तदन्नं परिवेषयेत् ।
परिषिच्याथ भुंजीत भोजनेतु न दोषभाक् ॥

போஜன பாத்திரத்தில் பிறர் எச்சில் சம்பந்தப்பட்டால் அதை அறிந்து அந்தப் பாத்திரத்தை வெளியில் எறிந்து விட்டு, கோமயத்தால் பூமியை சுத்தம் செய்து, வேறு போஜனப் பாத்திரம் போட்டுக்கொண்டு அதில் அன்னம் முதலியவைகளை பரிமாறி பரிஷேசனம் செய்து சாபிட வேண்டும். இவ்விதம் புஜித்தால் தோஷமடையமாட்டான்.

एकपंक्तिषु भुंजानो ब्राह्मणो ब्राह्मणं स्पृशेत् ।
तदन्नमत्यजन् भुक्त्वा गायत्र्यष्टशतं जपेत् ।'

ஒரே பங்க்தியில் புஜிக்கும் ப்ராம்மணன் புஜிக்கும் மற்ற ப்ராம்மணனை ஸ்பரிசித்தால், அந்த அன்னத்தைத் தியாகம் செய்யவேண்டும். தியாகம் செய்யாமல் சாப்பிட்டால் 108 தடவை காயத்ரீயை ஜபிக்கவேண்டும்.

उद्धृत्य वाम हस्तेन तृषार्तस्सलिलं पिबेत् ।
वामेनैव पिबेत्तोयं भोजने पात्रमत्यजन् ॥
त्यजन् पिबेत्तु रुधिरं अत्यजन्नमृतं पिबेत् ॥

சாப்பிடும் சமயத்தில் தாகம் ஏற்பட்டால் இடது கையினுல் பாத்திரத்தில் ஜலம் எடுத்துக் குடிக்கலாம் ஆனல் வலது கையினுல் அந்த சமயத்தில் போஜனப் பாத்திரத்தை

ஸ்பரிசித்துக்கொள்ளவேண்டும். அவ்விதம் தீர்த்தம் சாப்பிட்டால், தீர்த்தம் அமிர்தத்திற்குச் சமானமாகும். போஜனப் பாத்திரத்தைத் தொடாமல் சாப்பிட்டால் அந்த ஜலம் ரத்தத்திற்குச் சமமாகும் என்று அறியவும்.

यम :— दर्व्या देयं घृतान्नं च समस्त व्यंजनानि च ।
तैलपक्वमपक्वं च नतु दर्व्या कदाचन ॥

எமன் :— பக்குவமான அன்னம், சமைத்த காய்கறிகள் இவைகளைக் கரண்டியினால் போடவேண்டும். எண்ணெயில் பக்குவமானது, பக்குவமில்லாத பழம் முதலியப் பதார்த்தங்களைக் கையினால் போடவும்.

व्यास :— श्लेष्मसृंङ्घवणिकोत्सर्गो नान्नकालेप्रशस्यते ।
बलिमांगल्य जप्यादौ न होमे न महाजने ॥

வ்யாஸர் :— போஜனம், பூஜை, மங்கள காரியம், ஜபம், ஹோமம், ஜனக்கூட்டம், இந்த இடங்களில் மூக்கைச் சிந்துவது, காரிஉமிழ்வது செய்யக்கூடாது.

पुलस्त्यः — भोजनं तु न निश्शेषं कुर्यात् प्राज्ञः कथंचन ।
अन्यत्र दधिसक्त्वाज्यं फलंक्षीरं च मध्वपः ॥

புலஸ்த்யர் :— அறிவுள்ளவன் போஜனத்தை பாக்கியில்லாமல் சாப்பிடக்கூடாது. சாப்பிட்ட பதார்த்தங்களை கொஞ்சம் வைத்துச் சாப்பிடவேண்டும். ஆனால் தயிர். மாவு, நெய், பழங்கள், பால் இவைகளை பாக்கி வைக்காமல் சாப்பிடவேண்டும்.

पराशर :— अन्नाद्ये कीटसंयुक्ते मक्षिकाकेशदूषिते ।
तदन्तरा स्पृशेच्चापः तदन्नं भस्मना स्पृशेत् ॥

பராசரர் :— போஜ்யமான அன்னமானது, புழு, ஈ, கேசம், இவைகளுடன் காணப்பட்டால் கேசம் முதலியவைகளைஎடுத்துவிட்டு, தீர்த்தத்தால் ப்ரோக்ஷணம் செய்து, பஸ்மாவைத் தெளித்து பிறகு சாப்பிடவும்.

38. भक्ष्याभक्ष्यविवेक :— பூஜிக்கத் தகுந்தது பூஜிக்கத் தகாதது என்ற விவேகம்

मनु :— अनभ्यासेन वेदानां आचारस्यवर्जनात् ।
आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति ॥

மனு :— வேதாத்யயனமின்மையாலும், ஆசாரத்தை விட்டதாலும், சோம்பேரித்தனத்தாலும், அன்னதோஷத்தாலும் ப்ராம்மணர்களை ம்ருத்யுவானவர் கொல்ல விரும்புகிறார்.

अपरार्के— जातिदुष्टं क्रियादुष्टं कलाश्रयविदूषितम् ।
संसर्गाश्रयदुष्टं वा सहृल्लेखं स्वभावतः ॥

ஜாதியினால் துஷ்டம்சிலது, காரியத்தால் துஷ்டம் சிலது, காலத்தினால் துஷ்டம்சிலது, சேர்க்கையினால் துஷ்டம் சிலது, ஸஹ்ருல்லேகம்சிலது, சுபாவத்தினால்சிலது துஷ்டம். இந்த பதார்த்தங்கள் சாப்பிடத் தகாதவைகள் என்று அறியவும்.

लशुनं गृंजनं चैव पलाण्डु कवकादि च ।
वार्ताक नालिका लाबु ह्यवेयाज्जाति दूषितम् ॥

வெங்காயம், சிகப்பு முருங்கை, பல்லாண்டு, நாய்க் குடை, கத்திரிக்காய், தாமரைத்தண்டு, சுரைக்காய் இவைகள் ஜாதி துஷ்டப் பதார்த்தங்கள், புஜிக்கத் தகாதவைகள்.

न भक्षयेत्क्रियादुष्टं यद्दृष्टं पतितादिभिः ॥

பதிதர்கள் முதலியவர்களால் பார்க்கப்பட்டது காரியத்தால் துஷ்டமானது.

कालदुष्टं तु विज्ञेयं अस्नाहार्क्कं चिरस्थितम् ।
दधिभक्ष्यविकारश्च मधुवर्ज तदिष्यते ॥

நெய், எண்ணெய், முதலியதினுல் சேர்க்கப்படாத பதார்த்தங்கள் வெகுகாலமிருந்தால் காலதுஷ்டமாகும். பழைய அன்னம்முதலியது காலதுஷ்டமென சொல்லலாம். அதை புஜிக்கக்கூடாது. தயிர், பக்ஷணங்கள், தேன் இவைகள் காலதுஷ்டமாகாதவை.

सुरालशुनसंसृष्टं पीयूषादि समन्वितम् ।
संसर्गाद्दूष्यते तद्धि शूद्रोच्छिष्टवदाचरेत् ॥

கள்ளு, வெங்காயம் இவைகள் சேர்ந்த பதார்த்தகங்களும், சீமப்பால் கலந்த பதார்த்தங்களும் (கன்று போட்ட மாட்டினுடைய, பத்துதினகளுக்குள் கறந்த பால் சீமப் பால் எனப்படும்) சேர்க்கையினுல் துஷ்டமான பதார்த்தங்கள், இவைகளும் புஜிக்கக் கூடாதவைகளாகும்.

विचिकित्सातु हृदये यस्मिन्नन्ने प्रजायते ।
सहृल्लेखंतु विज्ञेयं पीयूषादि स्वभावतः ॥

எந்த அன்னத்தை சாப்பிடலாமா, கூடாதா என்று சம்சயம் ஏற்படுகிறதோ, அந்த அன்னம் ஸஹ்ருல்லேகம் எனப்படும். அதை புஜிக்கக்கூடாது. சீமப்பால் சுபாவ துஷ்டம் எனப்படும். சுபாவத்தில் ரஸம் மாறினுல் ரஸ துஷ்டமெனப்படும். இவைகளை புஜிக்கக்கூடாது.

पराशर :— पियूषं श्वेतलशुनवृन्ताकफलगृंजनम् ।
पलाण्डु वृक्षनिर्यास देवस्वकवकानि च ॥
उष्ट्रीक्षीरमवि क्षीरमज्ञानाद्भुंजते द्विजः ।
त्रिरात्रमुपवासेन पंच गव्येन शुध्यति ॥

பராசரர் :— சீமப்பால், வெளுப்பு வெங்காயம், வெளுப்பு கத்தரிக்காய், க்ருஞ்சனம், பலாண்டு, விருக்ஷத்தின் பிசின், கோவில் சொத்து, நாய்க்குடை, ஒட்டகத்தின் பால்

ஆட்டின் பால் இவைகளைத் தெரியாமல் சாப்பிட்டால்கூட மூன்று நாள் உபவாஸமிருந்து நான்காவது நாள் பஞ்சகவ்யம் சாப்பிடவேண்டும்.

श्वेतशब्दः लशुनवृन्ताकाभ्यां संबध्यते तेन
कृष्णवार्ताकरक्तशुनादौ नेदं व्रतमित्युक्तम् ।

ச்வேத சப்தம் வெங்காயத்துடனும், கத்திரிக்காயிலும் சம்பந்தப்படுகிறது. ஆகையால் வெளுப்பு கத்தரி, வெளுப்பு வெங்காயம் சாப்பிட்டால் மூன்று நாள் உபவாஸம், நான்காவது நாள் பஞ்சகவ்யம் சாப்பிடவேண்டும். கருப்பு கத்தரி, சிகப்பு வெங்காயம் சாப்பிட்டால் உபவாஸம் மாத்திரம் என்று அறியவும்.

देवल :— निर्यासमपि वा हिंगुं धूपं न परिवर्जयेत् ।
बिम्बवार्ताक कालिंगम धूकबिसकान्यदन् ॥
अन्तकाले जगन्नाथं गोविन्दं न स्मरिष्यति ॥

தேவலர் :— மரப்பிசினுலும் பெருங்காயம், குங்குலியம் இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். வர்ஜிக்கவேண்டாம். கோவை கத்தரி, சிறு குமுட்டி, இலப்பைப்பூ, தாமரைத்தண்டு இவைகளை புஜிக்கிறவன் கடைசீ காலத்தில் ஜகன்னுதனை கோவிந்தனை ஸ்மரிக்கமாட்டான்.

सुमन्तु :— लशुन पलाण्डु गृंजनभक्षणे
सावित्र्यष्टसहस्रेण मूर्ध्नि संपातं नयेत् ॥

ஸுமந்து :— லசுனம், பலாண்டு, க்ருஞ்சனம், இந்த மூன்றும் வெங்காயத்தின் பேதங்கள். இதைச் சாப்பிட்டவனுக்கு பின்பு தாபமேற்பட்டால் 1008 காயத்ரீ ஜபித்து தலையில் ஜலத்தைக் கொட்டுவதுப் பிராயச்சித்தமாகும். இது முதல் தரம் சாப்பிடுவதற்கு என்றும், பிறகு சாப்பிட்டால் பிராயச்சித்தம் அதிகமாகும் என்றும் அறியவும்.

यत्किंचित् स्नेहसंयुक्तं भक्ष्यं भोज्यमगर्हितम् ।
तत्पर्युषितमप्याद्यं हविश्शेषं च यद्भवेत् ॥

எந்த பக்ஷ்யங்களும், அன்னம் முதலிய போஜ்யமும், நெய், எண்ணெய், முதலியவைகளால் சம்பந்தப்பட்டிருந்தால் பழையதாக இருந்தாலும் புஜிக்கலாம். அதே மாதிரி ஹவிஸ்ஸினுடைய பாக்கியையும் புஜிக்கலாம்.

चिरस्थितमपि त्वाद्यमस्नेहाक्तं द्विजातिभिः ।
यवगोधूमजं सर्वं पयसश्चैव विक्रिया ॥

யவம், கோதுமம் இவைகளால் செய்யப்பட்ட பதார்த்தங்கள், நெய் முதலிய ஸ்னேஹ சம்பந்தமில்லாமல் இருந்தாலும் புஜிக்கலாம். பாலினுல் செய்யப்பட்ட பதார்த்தங்களேயும் புஜிக்கலாம். பர்யுஷித தோஷம் கிடையாது என்று அறியவும்.

मनुः — शुक्तानिहि द्विजोऽन्नानि न भुंजीत कदाचन ।
प्रक्षालितानि निर्दोषाण्यापद्धर्मो यदा भवेत् ॥

மனு :— காலத்தினுல் புளித்துப்போன அன்னங்களே ப்ராமணன் ஒரு சமையத்திலும் புஜிக்கக்கூடாது. அதை ஜலத்தினுல் அலம்பி சுத்தம் செய்த பிறகு சாப்பிடலாம். இது வேறு அன்னம் கிடைக்காவிடில் ஆபத்தர்மமாக சொல்லப்பட்டிருக்கிறது. தயிருக்குப் புளித்த தோஷம் கிடையாது. புஜிக்கலாம்.

गोजामहिषीवर्जं सर्वपयांसि प्राश्योपवसेत् ॥

பசுமாடு, ஆடு, எருமைமாடு, இவைகளுடைய பால் சாப்பிடலாம். இதை தவிர மற்ற மிருகங்களுடைய பாலேப் பருகினுல் உபவாஸம் இருக்கவேண்டும்.

वीर्यहानिर्यशोहानिः प्रज्ञाहानिस्तथैव च ।
भवेत्तस्मात्ततो रात्रौ धात्रीं यत्नेन वर्जयेत् ॥

ராத்திரியில் நெல்லிசனியை புஜிப்பவனுக்கு வீர்யம், யசஸ், புத்தி இவைகள் குறையும். ஆகையால் ராத்திரியில் நெல்லிக்கனியை வர்ஜிக்கவேண்டும்.

धानाः स्वादेन्नच दिवा दधिसक्तूंस्तथा निशि ।
सर्वं च तिलसंबन्धं नाद्यादस्तमयं प्रति ॥

பகலில் வறுத்த தானியங்களையும், இரவில் தயிர், நெல் வறுத்த மாவு, திலத்தினுல் செய்யப்பட்ட பக்ஷணங்கள் இவைகளையும் புஜிக்கக்கூடாது.

तिक्तार्द्रक दधि श्राणा तिल शाकानि निश्यदन् ।
त्यज्यते रूपवाक्छ्रीभिः पुष्पितस्त्री रताद्यथा ॥

புளிப்பு, இஞ்சி, தயிர், கஞ்சி, எள்ளு, சாகம் இவைகளை இரவில் புஜிக்ககூடாது. புஜித்தால் ரஜஸ்வலாஸ்திரீ ஸங்கமத்தினுல்போல் ரூபம், வாக்கு, ஸ்ரீ, இவைகளால் விடுபடுவான்.

सकांस्यं नालिकेरांबु कांस्येन च रसमैक्षवम् ।
ताम्रपात्रयुतं गव्यं क्षीरं च लवणान्वितम् ॥
घृतं लवणसंयुक्तं सुराकल्पं विवर्जयेत् ।
प्रत्यक्षलवणं नाद्यात् पक्कं परगृहागतम् ॥

வெண்கலப் பாத்திரத்திலுள்ள இளநீர், கருப்பம் சாறு இவைகளைப் பருக்கக்கூடாது. தாமிரப் பாத்திரத்திலுள்ள தயிர், பால் இவைகளைப் புஜிக்கக் கூடாது. உப்பு கலந்த பாலையும், நெய்யையும் வர்ஜிக்கவேண்டும். இவைகள் கள்ளுக்குச் சமமானவைகள் என்று அறியவும். கண்ணுக்குத் தெரியும்படி உப்பைப் போடக்கூடாது, வேறு பதார்த்தங்களில் கலந்து போடலாம்.

व्यासः — अतसी तुलसी चैव धात्री फलमथाच्युतम् ।
यस्योदरे प्रवर्तन्ते तस्य सन्निहितो हरिः ॥

வ்யாஸர் :— அகத்திக்கீரை, துளஸி, நெல்லிக்கனி, சுண்டைக்காய் இவைகள் எவன் வயிற்றில் இருக்கின்றனவோ அவனுக்கு ஹரி சமீபத்தில் இருக்கிறார்.

भक्ष्यं भोज्यं च लेह्यं च नमो नारायणेति यः ।
अभिमन्त्र्य स्पृशन् भुंक्ते स याति परमां गतिम् ॥

எவன் பக்ஷணம், போஜ்யம், லேஹ்யம் இவைகளை நமோ நாராயண என்ற மந்திரத்தினால் தொட்டு அபிமந்திரணம் செய்து புஜிக்கிறானோ அவன் நல்ல லோகத்தை அடைவான்.

यत्यन्नं यतिपात्रस्थं यतिनाप्रेषितं च यत् ।
अन्नत्रयं न भोक्तव्यं भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥

ஸன்யாஸியினுடைய அன்னம், யதி பாத்திரத்தில் இருக்கும் அன்னம், யதியினால் அனுப்பட்ட அன்னம், இந்த மூன்று அன்னத்தையும் புஜித்தால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்கவேண்டும்.

अवलिप्तस्य मूर्खस्य दुष्टवृत्तस्य दुर्मतेः ।
अन्नमश्रद्दधानस्य यो भुंक्ते भ्रूणहा सवै ॥

கர்வமுள்ளவன், முட்டாள், நடத்தைகெட்டவன், கெட்ட புத்தியுள்ளவன், சிரத்தை இல்லாதவன், இவர்களுடைய அன்னத்தைச் சாப்பிட்டவனுக்கு ப்ரம்மஹத்தி தோஷம் ஏற்படும். ஆகையால் இவர்களுடைய அன்னத்தைப் புஜிக்கக்கூடாது.

त्यजेदनुपनीतान्नमन्धस्य पतितस्य च ।
वेदाध्ययन हीनस्य कन्याविक्रयिणस्तथा ॥

दरिद्रस्य च मूर्खस्य यतिनिन्दापरस्य च ।
अयाज्य याजकस्यान्नं निर्मर्यादस्य कर्षिणः ॥
देवद्रोहपरस्यान्नं तथाविज्ञानदूषिणः ।
दग्धाङ्गस्यायसैर्दिव्यैः सोमविक्रयिणस्तथा ॥

உபநயனமில்லாதவன், குருடன், பதிதன், வேதாத்யயனமில்லாதவன், கன்னிகையை விற்பவன், தரித்திரன், மூடன், ஸன்யாஸியை நிந்திப்பவன், அனர்ஹனுக்கு வைதிக கர்மாக்களைச் செய்துவைப்பவன், மரியாதையில்லாதவன், க்ருஷிசெய்கிறவன், தேவதைகளுக்கு த்ரோஹம் செய்பவன், சாஸ்த்திரங்களைத் தூஷிப்பவன், தேவ சம்பந்தமான இரும்பினுல் உடம்பை சூடிக்கொண்டவன், ஸோமலதையை விற்பவன், இவர்கள் பதிதர்கள். இவர்களுடைய அன்னத்தைப் புஜிக்கக்கூடாது; வர்ஜிக்கவேண்டும்.

भरद्वाजः : — निराचारस्य विप्रस्य निषिद्धाचरणस्य च ।
अन्नं भुक्त्वा द्विजः कुर्याद्दिनमेकमभोजनम् ॥

பரத்வாஜர் :— ஆசாரமில்லாதவன், நிஷித்தகர்மாவை செய்கிறவன், இவர்களுடைய அன்னம் சாப்பிட்டால் ஒரு நாள் உபவாஸம் இருக்கவேண்டும்.

पराशरः — सदाचारस्य विप्रस्य तथा वेदान्तवेदिनः ।
भुक्त्वान्नं मुच्यते पापादहोरात्रान्तरान्नरः ॥

பராசரர் :— நல்ல ஆசாரமுள்ளவன், வேதாந்தம் வாசித்தவன், இவர்களுடைய அன்னம் சாப்பிட்டால் ஒரு நாள் செய்த பாபங்கள் விலகும்.

शातातपः — यो हि हित्वा विवाहाग्निं गृहस्थ इति मन्यते ।
अन्नं तस्य न भोक्तव्यं वृथा पाको हि स स्मृतः ।

சாதாதபர் :— எவன் ஔபாஸனக்னியில் ஹோமம் செய்யாமல் தன்னை க்ருஹஸ்தன் என்று எண்ணுகிறானே

அவனுடைய அன்னத்தை புஜிக்கக்கூடாது. அவன் வீண் சமையல் செய்து சாப்பிடுகிறவன், ஆகையால் பாபமுள்ளவன் என்று கருத்து.

विष्णुः — भुक्तं चेत्पार्वणश्राद्धे प्राणायामान् षडा चरेत् ।

விஷ்ணு :— சிரார்த்த போஜனத்திற்கு ஆறு ப்ராணாயாமங்கள் பிராயச்சித்தமாகும் என்று அறியவும்.

दशकृत्वः पिबेदापो गायत्र्या श्राद्धभुग्द्विजः ।
ततस्सन्ध्यामुपासीत शुद्ध्येच्च तदनन्तरम् ॥

சிராத்தத்தில் போஜனம் செய்தவன் காயத்ரீ ஜபத்து பத்து தடவை தீர்த்தம் சாப்பிட்டுப் பிறகு ஸாயங்கால ஸந்தியா வந்தனம் செய்யவேண்டும்.

व्यास :— सूर्यग्रहे तु नाश्नीयात् पूर्वं यामचतुष्टयम् ।
चन्द्रग्रहे तु त्रियामां स्त्रीन् बालवृद्धातुरैर्विना ॥

வ்யாஸர் :— ஸூரிய கிரஹணத்தில் அந்த யாமத்திற்கு முன்பு நான்கு யாமங்களில் புஜிக்கக்கூடாது. சந்திர கிரஹணத்தில் அந்த யாமத்திற்கு முன்பு மூன்று யாமங்களில் புஜிக்கக்கூடாது. பாலர்கள், விருத்தர்கள், வியாதியுள்ளவர்கள் இவர்களைத் தவிர மற்றவர்களுக்குச் சொல்லப்பட்ட நியமம் இது என்று அறியவும்.

ग्रस्तोदये विधोः पूर्वं नाहर्भोजनमाचरेत् ।
ग्रस्तोदिते तथा सूर्ये न रात्रौ भोजनं चरेत् ॥

சந்திரனின் கிரஸ்தோதயத்தில் முன் பகலில் போஜனம் செய்யக்கூடாது. ஸூரியனின் க்ரஸ்தோதயத்தில் முன் ராத்திரியில் போஜனம் செய்யக்கூடாது.

संवत्सरस्यैकमपि चरेत् कृच्छ्रं द्विजोत्तमः ।
अज्ञात भुक्तशुद्ध्यर्थं ज्ञातस्य तु विशेषतः ॥

ப்ராம்மணன் அக்ஞானத்தில், சாப்பிடக்கூடாத இடத்தில் போஜனம் செய்தால் ஒரு வருஷத்திற்கு ஒரு க்ருச்ரத்தை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். தெரிந்து துர்போஜனம் செய்தால் அதிகப்படியான பிராயசித்தம் செய்து கொள்ளவேண்டும்.

39. भोजनोत्तरकार्याणि - போஜனத்திற்குப் பிறகு செய்யவேண்டிய காரியங்கள்.

अमृतापिधानमसीत्यवशिष्य जलं पिबेत् ।
तच्छेषं रौरवेत्युक्त्वा बलिप्रान्ते विसर्जयेत् ॥

அமிருதாபிதானமஸி என்று ஜலத்தைப் பாதி சாப்பிட்டு பாதி ஜலத்தை பலியின் சமீபத்தில் 'ரௌரவே' என்ற மத்திரத்தால் பூமியில் விடவேண்டும்.

रौरवेऽपुण्यनिलये पद्मार्बुदनिवासिनाम् ।
अर्थिनामुदकं दत्तं अक्षय्यमुपतिष्ठतु ॥

ரௌரவம் என்ற நகரத்தில் வெகு காலமாக வசிக்கும் பாபிகளுக்கு என்னால் விடப்பட்ட இந்த ஜலமானது குறைவு இல்லாததாக அடையட்டும் என்பது மந்திரத்தினுடைய பொருள்.

अपसृत्य ततः पश्चात् गण्डूषान् षोडशाचरेत् ।
विप्रस्यदक्षिणे भागे देवास्तिष्ठन्ति यत्नतः ॥
आसीन एव गण्डूषान् वामभागे विसर्जयेत् ॥

உத்ராபோசனத்திற்குப் பிறகு நகர்ந்து கொஞ்ச தூரம் சென்று 16 தடவை வாய்க் கொம்பளிக்கவேண்டும். எச்சில் ஜலத்தை உட்கார்ந்துகொண்டு தன் இடது பாக பூமியில்

துப்பவேண்டும். ப்ராம்மணனுடைய வலது பாகத்தில் தேவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் வலது பாகத்தில் பூமியில் வாய் கொப்பளித்து ஜலத்தைத் துப்பக்கூடாது.

गौतम :— आचान्तः पुनराचामेदायङ्गौरिति मन्त्रतः ।
द्रुपदां वा त्रिरावर्त्य सर्वपाप प्रणाशिनीम् ।
हस्तौ निघृष्याङ्गुष्ठाभ्यां अक्ष्णोरंबु विनिक्षिपेत् ॥

கௌதமர் :— ஆசமனம் செய்தபிறகு ஆசமனம் செய்யவேண்டும். "ஆயங்கௌ:" அல்லது "த்ருபதா" என்ற ஸகல பாபங்களையும் விலக்க வல்லமையுள்ள ருக்கை மூன்று தரம் ஜபித்து, பிறகு கைகளை தேய்த்து பெருவிரல் களால் ஜலத்தைக் கண்களில் சேர்க்க வேண்டும்.

शर्यातिं च सुकन्यां च च्यवनं शक्रमश्विनौ ।
भुक्तमात्रं स्मरेद्यस्तु चक्षुस्तस्य न हीयते ॥

சர்யாதி என்ற அரசனையும், ஸுகன்யை என்ற அவர் கன்னிகையையும், ச்யவனர் என்ற அவர் மாப்பிள்ளையையும், இந்திரன், அச்வினி தேவதைகளையும், எவன் போஜனம் செய்தவுடன் ஸ்மரிக்கிருனோ அவனுடைய கண்ணுக்கு ரோகம் ஏற்படாது என்று அறிவும்.

व्यासः — भुक्त्वा वै सुखमास्थाय तदन्नं परिणामयेत् ।
इतिहासपुराणाभ्यां वेदार्थानुपबृंहयेत् ॥

வ்யாஸர் :— புஜித்த பிறகு சுகமாக உட்கார்ந்து கொண்டு புஜித்த அன்னத்தை ஜபிக்கச் செய்யவேண்டும். இதிகாசம், புராணம் இவைகளுடன் வேதார்த்தங்களை விசாரிக்கவேண்டும்.

दक्ष :— इतिहासपुराणाभ्यां षष्ठसप्तमकौ नयेत् ।
अष्टमे लोकयात्रातु बहिस्सन्ध्यां ततः परम् ॥

தக்ஷன் :— பகலை எட்டு பாகமாகச் செய்தால் ஒரு பாகத்திற்கு 1½ மணி நேரமாகும். அதில் ஆருவது ஏழாவது பாகமானவை மத்யானம் 1½ மணிக்குப் பிறகு 4½ மணிவரையில் இருக்கும் சமயமாகும். அதில் வேதம், புராணம், சாஸ்திரம் இவைகளை அப்யஸிக்கவேண்டும். அதற்குப் பிறகு குடும்பயோக க்ஷேமங்களை கவனிக்கவேண்டும். அது எட்டாவது பாக காலம் என்று அறியவும். பிறகு ஸாயம் ஸந்தியா வந்தனத்தை உத்தேசித்து தீர்த்தகரைக்குச் செல்ல வேண்டும்.

शंख :— विचार्य च पुराणार्थान् वेदार्थान् भुक्तिमास्थितः ।
विष्णुं सदा हृदि ध्यायेत् सकलं निष्कलं तु वा ॥

சங்கர் :— புராணர்த்தங்களையும், வேதார்த்தங்களையும், விசாரித்து பக்தியுடன் விஷ்ணுவை ஸகுணமாகவும், நிர்குணமாகவும் தியானம் எப்பொழுதும் செய்ய வேண்டும்.

दिवा स्वापं न कुर्वीत गच्छेन्नैव दिवास्त्रियम् ।
आयुः क्षयकरी निद्रा दिवास्त्री पुण्य नाशिनी ॥
वृथा विविधवाक्यानि परिवादांश्च वर्जयेत् ॥

பகலில் நித்திரை செய்யக்கூடாது. பகலில் ஸ்திரீயுடன் சேரக்கூடாது. நித்திரையினால் ஆயுஸ் குறையும். ஸ்திரீ ஸங்கமம் புண்ணியத்தை நாசம் செய்யும். வீணை வார்த்தைகளையும், பிறரை நிந்தை செய்வதையும் எப்பொழுதும் வர்ஜிக்கவேண்டும்.

सुपूगं च सुपत्रं च चूर्णेन च समन्वितम् ।
प्रदद्याद्विजवर्येभ्यः ताम्बूलं चर्वयेद्बुधः ॥

நல்ல பாக்கு, நல்ல வெற்றிலை, நல்ல சுண்ணும்பு இவை
ளை ப்ராமணர்களுக்குக் கொடுத்து தானும் தாம்பூலத்தை
ஷிக்கவும். இந்த காரியம் சாப்பிட்ட பிறகு செய்ய
வண்டும்.

आयुः प्रज्ञा बलं बुद्धीरेतश्शक्तिर्विनश्यति ।
जिह्वारसं न गृह्णाति सदाताम्बूल चर्वणात् ॥

எப்பொழுதும் தாம்பூல பக்ஷணம் செய்வது கெடுதல்
ளை விளைவிக்கும்; ஆயுஸ், புத்தி, பலம், ப்ரக்ஞை, வீரியத்
ன் சக்தி, இவைகளை நசிக்கச் செய்யும்; நாக்கு பதார்த்
ங்களுடைய ரஸத்தைக் கிரஹிக்காது.

40. रात्रौ कर्तव्यानि - இரவில் செய்யவேண்டியவைகள்.

ासः — हुत्वाऽग्निं विधिवन्मन्त्रैः भुक्त्वा यज्ञावशिष्टकम् ।
सभृत्यबन्धवजनः स्वपेच्छुष्कपदोनिशि ॥

வ்யாஸர் :— முறைப்படி மந்திரங்களினுல் அக்னியில்
ஹோமம் செய்து பிறகு வைச்வதேவம் செய்துவிட்டு, யக்ஞ
ஷ்டமான அன்னத்தை பந்துக்களுடன் புஜித்து பிறகு
ால்களை நன்ருக ஈரத்தைத் துடைத்துக்கொண்டு நித்திரை
சய்யவும்.

ायनः — मेरुकांचन दानानि वाजपेयशतानि च ।
कन्याकोटिप्रदानं च समं स्यात्सायमाहुतेः ॥

மேரு பர்வத அளவு தங்கதானங்களையும், பலநூறு
ஜபேயங்களையும், கோடி கன்யாதானங்களையும் செய்த
ண்ணியம் ஸாயங்காலத்தில் ஔபாஸன அக்னியில் செய்த
ரு ஆஹுதிக்கு சமமாகும்.

शाण्डिल्यः — अन्नैः प्रभूतै र्देवेशं विविधैः पृथगर्चयेत् ।
सन्ध्ययोरुभयोः कुर्यात् पूजां सर्वोपचारकैः ॥

சாண்டில்யர் :— பலவிதமானவையும், நிறைய உள்ளவையுமான அன்னங்களினல் பகவானை இரண்டு ஸந்தியா காலங்களிலும் நைவேத்யம் முதலிய உபசாரங்களினல் பூஜை செய்யவேண்டும்.

शौनकः — निशायाः प्रथमे यामे जपयज्ञार्चनादिकम् ।
स्वाध्यायो भोजनं प्रोक्तं वर्जयित्वा महानिशाम् ॥

சௌனகர் : — இரவில் முதல் யாமத்தில், ஜபம், யக்ஞம், தேவபூஜை முதலியன அனுஷ்டிக்கலாம். வேதாப்யாஸம், போஜனம் இவைகளையும் செய்யலாம். ஆனல் மஹா நிசியில் வேதாப்யாஸம் போஜனம் இவைகளை செய்யக் கூடாது.

पश्चात्तने तथा यामे जापयज्ञार्चनादिकम् ।
ब्रह्माभ्यासोऽपि तत्रैव वर्जयित्वा तु भोजनम् ॥

அதே மாதிரி கடைசீ யாமத்தில், விடியற்கால வேளையில் ஜபம், யாகம், பூஜை முதலியது வேதாப்யாஸம் இவைகளைச் செய்யலாம். போஜனம் செய்யக்கூடாது.

दक्षः — प्रदोषपश्चिमौ यामौ वेदाभ्यासेन योजयेत् ।
यामद्वयं शयानस्तु ब्रह्मभूयाय कल्पते ॥

தக்ஷன் :— ப்ரதோஷ காலத்தையும், இரவினுடைய கடைசீ யாமத்தையும், வேதாப்யாஸம் செய்வதில் உபயோகிக்கவேண்டும். நடுவில் உள்ள இரண்டு யாமங்களில் நித்திரை செய்யவேண்டும். இப்படி அனுஷ்டிக்கிறவன் ப்ரம்மஸாயுஜ்யத்தை அடைய ஸமர்த்தனுகிருன்.

…र्यः — सुखानुकूले शयने वामपार्श्वेन संविशेत् ।
आयुर्वामकरे प्रोक्तं उत्तानं बलवर्धनम् ॥
स्वगृहे प्राक्शिराश्शेते श्वाशुरे दक्षिणाशिराः ।
प्रत्यक्शिराः प्रवासे तु न कदाचिदुदक्शिराः ॥

கார்க்யர் :— தனக்கு அனுகூலமான படுக்கையில் இடது புறத்தைக் கீழேவைத்துப் படுக்க வேண்டும். இடது கையை கீழாக வைத்துப் படுப்பது ஆயுஸ்ஸை கொடுக்கும். மேல் நோக்கி படுப்பது பலத்தை விருத்தி செய்யும். தன் வீட்டில் கிழக்கில் தலை வைத்துப் படுக்கவேண்டும். மாமனார் கிருஹத்தில் தெற்கில் தலை வைத்துப் படுக்கவேண்டும். வெளியூரில் மேற்கில் தலை வைத்துப் படுக்கவும். ஒரு பொழுதும் வடக்கில் தலை வைத்துப் படுக்கக்கூடாது.

…त्नावल्यां — मंगल्यं पूर्णकुंभं तु शिरःस्थाने निधायतु ।
वैदिकैर्गारुडैर्मन्त्रैः रक्षां कृत्वा स्वपेन्निशि ॥

ஜலத்தினால் பூர்ணமான, அழகான கலசத்தைத் தலை பாகத்தில் வைத்துக் கொண்டு வேத மந்திரங்களாலும், கருட மந்திரங்களாலும் ஆத்ம ரக்ஷை செய்து கொண்டு இரவில் தூங்க வேண்டும்.

रात्रि सूक्त जपेत् स्मृत्वा सर्वांश्च सुखशायिनः ।
नमस्कृत्याऽव्ययं विष्णुं समाधिस्थः स्वपेन्निशि ॥

இரவில் ராத்திரி ஸூக்தம் ஜபம் செய்து, சுகமாக தூங்கிற ரிஷிகளையும், தேவதைகளையும், ஸ்மரித்துக் கொண்டு பகவான் விஷ்ணுவை நமஸ்கரித்து அவரை ஸ்மரித்துக் கொண்டே தூங்கவேண்டும்.

मनुः — ऋतुकालाभिगामीस्यात् स्वदारनिरतस्सदा ॥
पर्व वर्जं व्रजेच्चैनां अनृतौ रतिकाम्यया ॥

மனு : — கிருஹஸ்தன் எப்பொழுதும் ருது காலத்திலேயே தன் பத்தினியை அடைய வேண்டும். ருது காலம் தவிர மற்ற காலத்தில் இச்சை இருந்தால் பர்வ காலத்தை விட்டு குறிப்பிட்ட காலத்தில் பத்தினியை அடையலாம்.

बोधायनः — जघन्ये रात्रिपर्याये सर्वर्तु गमनमुपदिशन्ति ॥

போதாயனர் : — இரவில் பின்பாகத்தில் பத்தினியுடன் ருதுகமனத்தைப் போதாயனர் அனுமதிக்கிருர்.

अगस्ति र्माधवश्चैव मुचुकुन्दो महाबलः ।
कपिलो मुनिरस्तीकः पंचैते सुखशायिनः ॥

படுக்கும்பொழுது, அகஸ்தியர், மாதவர், முசுகுந்தர், கபிலர், அஸ்தீகர், இந்த ஐந்து பெரியோர்களும் சுகமாகத் தூங்குகிறவர்கள். ஆகையால் இவர்களை ஸ்மரிக்க வேண்டும்.

पादौ प्रक्षाल्य संमृज्य द्विराचम्य शुचिस्मितः ।
शुष्यत्पादास्यपाणिस्तु संविशेन्माधवं स्मरन् ॥

கால்களை அலம்பித் துடைத்து, இரு தடவை ஆசமனம் செய்து, சுத்தனுய் உலர்ந்த கால்கள், கைகள், முகம் இவைகளையுடையவனுய் மாதவனை ஸ்மரித்துக்கொண்டு தூங்க வேண்டும்.

व्यासः — इत्येदखिलेनोक्तमहन्यहनि वै मया ।
ब्राह्मणानां कृत्यजातमपवर्गफलप्रदम् ॥

வ்யாஸர் :— இந்த மாதிரியான தர்மங்கள் ஒவ்வொரு நாளும் அனுஷ்டிக்கவேண்டியவைகள். உபதேசம் செய்யப்பட்டிருக்கிற இவை ஸமஸ்த புருஷார்த்தங்களையும் கொடுக்க வல்லமையுள்ளது.

नास्तिक्यादथवाऽऽलस्यात् ब्राह्मणो न करोति यः ।
स याति नरकान् घोरान् काकयोनिषु जायते ॥

எவன் இந்த தர்மங்களை நாஸ்திக்யத்தாலும், சோம்பேறித்தனத்தாலும், அனுஷ்டானம் செய்ய விரும்பவில்லையோ அவன் காக்கையாகப் பிறப்பான், அநேக நரகங்களை அடைவான்.

नान्यो विमुक्तये पन्थाः मुक्त्वाऽऽश्रयविधिं स्वकम् ।
तस्मात् कर्माणि कुर्वीत तुष्टये परमेष्ठिनः ॥

க்ஷேம லாபங்களை அடைய வர்ணாச்ரம தர்மங்களை விட்டுத் தனியாகத் தர்மங்கள் சொல்லப்படவில்லை. ஆகையால் அதிகாரியாக உள்ளவன் அவசியம் பகவானுடைய ப்ரீதிக்காக அவரவர்களுடைய ஆச்ரம தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். இது சாஸ்த்திரத்தின் கருத்து என்று அறியவும்.

इति संक्षेपधर्मशास्त्रे आह्निकप्रकरणम् ॥

ஸம்க்ஷேப தர்ம சாஸ்த்திரத்தில் ஆஹ்னிகப்ரகரணம் முற்றிற்று.

—*—

॥ श्रीहरिः ॥

संक्षेप धर्मशास्त्रे आशौच प्रकरणम्

ஸம்க்ஷேப தர்ம சாஸ்த்திரத்தில் ஆசௌச ப்ரகரணம்.

1. **आशौच शब्दार्थः** ஆசௌச சப்தத்தினுடைய பொருள்.

शंखः — दानं प्रतिग्रहोहोमः स्वाध्यायः पितृकर्म च ।
प्रेतपिण्डक्रिया वर्जमाशौचे विनिवर्तयेत् ॥

சங்க: :— ஆசௌச காலத்தில் தானம், ப்ரதிக்ரஹம், ஹோமம், அத்யயனம், பித்ரு காரியங்கள் இவைகளைச் செய்யக்கூடாது. ஆனால் ப்ரேதத்தை உத்தேசித்து செய்யும் பிண்ட தானம் என்ற காரியத்தை செய்யலாம்.

विज्ञानेश्वरः — आशौच शब्देन कालस्नानापनोद्यः, पिण्डोदक दान-विधेरध्ययनादिपर्युदासस्य च निमित्तभूतः पुरुषगतः कश्चनातिशयः प्रतिपाद्यते ॥

விஞானேச்வரர் :— காலத்தினாலும், ஸ்னானத்தினாலும், போக்கடிக்கக்கூடியதாயும், பிண்டம், உதக தானம், இவைகளைச் செய்யும்படி விதிக்கிறதாயும், வேதாத்யயனம் பூஜை ஹோமம், முதலிய கர்மாக்களை நிஷேதிக்கிறதாயும் உள்ள புருஷனிடத்தில் இருக்கின்ற ஒரு (அதிசய) விசேஷம் ஆசௌசம் என்று சொல்லப்படுகிறது.

संग्रहेपि — निमित्तं पिण्डदानादेः पुरुषस्थमशुद्धिकृत् ।
कालस्नानापनोद्यं यत्तदाशौच मितीर्यते ॥

புருஷனுக்கு அசுத்தியை உண்டு பண்ணுகிறதாயும், பிண்டம், உதகம், முதலிய தானத்திற்கு நிமித்த காரணமாயும், காலம் ஸ்னானம் இவைகளினால் விலகுகிறதாயும், இருக்கிற அதிசயத்திற்கு ஆசௌசமென்று கூறப்படுகிறது.

2. आशौचे सन्ध्योपासनविधिः ஆசௌச காலத்தில் ஸந்தியாவந்தனம் செய்யும் முறை.

उपासने च विप्राणां अंगशुद्धिस्तु जायते ।
ब्रह्मचारी गृहे येषां हूयते च हुताशनः ॥
संपर्कं चेन्नकुर्वन्ति न तेषां सूतकं भवेत् ॥

ப்ராம்மணர்களுக்கு ஸந்தியாவந்தன காலத்தில் ஆசௌசம் கிடையாது, பிறகு ஆசௌசம் வந்துவிடும். எவர்களுடைய க்ருஹத்தில் அக்னிஹோத்ரம் செய்யபடுகிறதோ, அந்த க்ருஹத்திலுள்ள அக்னிஹோத்ரிக்கு அக்னிஹோத்ரம் செய்யும் காலத்தில் சுத்தி ஏற்படுகிறது, பிறகு அசுத்தி வருகிறது. ப்ரம்மசாரி எப்பொழுதும் சுத்தன். ஆனால் அக்னிஹோத்ரியானவர் தீட்டு உள்ளவர்களைத் தொடுவது. சேர்ந்து சாப்பிடுவது இவைகளை வர்ஜிக்க வேண்டும்.

पुलस्त्यः -- सूतके मृतकेचैव सन्ध्याकर्म समाचरेत् ।
मनसो चारयेन्मन्त्रान् प्राणायामादृते द्विजः ॥

புலஸ்த்யர் :— ஜனனாசௌசத்திலும் மரணாசௌசத்திலும் ஸந்த்யோபாஸனத்தை விடக்கூடாது, அனுஷ்டிக்க வேண்டும். ஸந்தியா வந்தன மந்திரங்களை மனஸினால் ஸ்மரிக்க வேண்டும், வாக்கினால் உச்சரிக்கக்கூடாது. ப்ராணாயாம மந்திரங்களை மனஸினாலும் ஸ்மரிக்கக்கூடாது. ஆனால் ப்ராணாயாமம் மந்திரமில்லாமல் செய்யவேண்டும்.

व्यासः — प्रक्षिपेत्सूतके त्वर्घ्यं गायत्रीं तु समुच्चरन् ।
दत्वा प्रदक्षिणं कुर्यात् सूर्यं ध्यायेत् द्विजोत्तमः ॥
दशकृत्वस्तु गायत्रीं मनसैवा शुचिः स्मरेत् ॥

வ்யாஸர் :— ஆசௌசத்தில் செய்யும் ஸந்தியாவந்தனத்தில் அர்க்யம் கொடுக்கும்பொழுது வாக்கினுல் காயத்ரீயை உச்சரிக்கவேண்டும். பிறகு ஆத்ம ப்ரதக்ஷிணம் செய்து ஸூரியனைத் தியானம் செய்து கேசவாதிகளை உத்தேசித்துத் தர்ப்பணம் செய்யவும். ஜப காலத்தில் பத்து முறை காயத்ரீயை மனதினுல் ஜபிக்கவும்.

3. आशौचे त्याज्यकर्माणि ஆசௌசத்தில் விடவேண்டிய கர்மாக்கள்.

मनुः — उभयत्रदशाहानि कुलस्यान्नं न भुज्यते ।
दानं प्रतिग्रहो होमः स्वाध्यायश्च निवर्तते ॥

மனு :— ஜனனுசௌசம் மரணு சௌசம் இவ்விரண்டிலும் பத்து தினங்கள் ஆசௌசம் உள்ளவர்களுடைய க்ருஹத்தில் சாப்பிடக்கூடாது. ஆசௌசம் உள்ளவன் தானம், ப்ரதிக்ரஹம், ஹோமம், வேதம் சொல்வது இவைகளைச் செய்யக்கூடாது.

आशौचे तु दशाहान्तं न कुर्याद्देवताार्चनम् ।
न कुर्यात्पितृकार्याणि दानं होमं जपं तथा ॥

ஆசௌசத்தில் பத்துநாள் பர்யந்தம் தேவ பூஜை செய்யக்கூடாது; பித்ரு கார்யங்களையும், தானம் கொடுப்பதையும், ஹோமம் செய்வதையும், மந்திர ஜபங்களையும் செய்யக்கூடாது.

कण्वः — अग्निहोत्रहवं कुर्यादन्याभावे स्वयंद्विजः ।
कुर्यात्स्नात्वाऽऽर्द्रवासास्तु तस्मात्कालादृतेऽशुचिः ॥

கண்வர் :— அக்னிஹோத்ரம் செய்வதற்கு வேறு ப்ராம்மணர் கிடைக்காவிடில் தானுகவே ஸ்னும் செய்து ஈர வஸ்திரத்துடன் அக்னிஹோத்ரம் செய்யலாம். அது பர்யந்தம் சுத்தன், பிறகு ஆசௌசம் ஏற்படுகிறது என்று அறியவும்.

बृहस्पतिः — सूतके मृतके चैव अशक्तौ श्राद्धभोजने ।
प्रवासादि निमित्तेषु हावयेन्नतु हापयेत् ॥

பிருஹஸ்பதி :— ஜனனசௌசம், மரணசௌசம் இவைகளிலும், உடம்பு அசௌகரியமாக இருந்தாலும், ச்ராார்த்த போஜனம் செய்தாலும், வெளியூர் சென்றாலும், ஔபாஸனக்னியில் ஹோமத்தை நிறுத்தக்கூடாது. வேறு ஒருவரைக் கொண்டு ஹோமம் செய்யச் சொல்லவேண்டும்.

कण्वः — शौचमाचमनं स्नानं नियमं भोजनादिषु ।
अस्पृश्यस्पर्शनं स्नानं कुर्यादाशौचवान्द्विजः ॥

கண்வர் :— சரீரசுத்தி, ஆசமனம், ஸ்னனம், போஜனத்தில் உள்ள நியமங்கள், தொடக்கூடாதவைகளைத் தொட்டால் ஸ்னனம் செய்வது, இந்தமாதிரி உள்ள ஆசாரங்கள், இவைகளை அவசியம் ஆசௌச காலத்தில் அனுஷ்டிக்க வேண்டும்.

द्रव्याणि स्वामि संबन्धात्तदघे त्वशुचीनि वै ।
स्वामि शुद्ध्यैव शुध्यन्ति वारिणा प्रोक्षितान्यपि ॥

யஜமானனுக்கு ஆசௌசம் இருக்கும்பொழுது அவனுடைய த்ரவியங்களுக்கும் அசுத்தம் உண்டு. யஜமானனுக்கு ஆசௌசம் போகும்பொழுது அந்த த்ரவ்யங்களுக்கு சுத்தி

வரும். ஆகையால் அந்த த்ரவ்யங்களை ஆசௌச காலங்களில் க்ரஹிக்கக்கூடாது. தீர்த்தத்தை ப்ரோக்ஷித்தாலும் சுத்தி ஏற்படாது என்பது கருத்து.

दधि क्षीरं घृतं शाकं पटु पुष्पं तिलौषधम् ।
काष्ठं मूलं फलं मांसं मधु कूपाम्बु चाजिनम् ॥
पण्यान्यघेपि गृह्णीयात् स्वयं तु स्वाम्यनुज्ञया ॥

தயிர், பால், நெய், கறிகாய், உப்பு, புஷ்பம், எள்ளு, மருந்து, விறகு, கிழங்கு, பழம், மாம்ஸம், தேன், கிணற்று ஜலம், மான்தோல், திதிப்பு பக்ஷணங்கள் இவைகளை யஜமானனுக்கு ஆசௌசமிருந்தாலும் அவனைக் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். தோஷமேற்படாது என்பது கருத்து.

संग्रहे — नदेयं न प्रतिग्राह्यं अघे देयं सदापदि ॥

ஆசௌச காலத்தில் சொல்லப்பட்ட நியமங்கள் ஆபத் காலத்தில் கிடையாது. ஆகையால் ஆபத்து காலங்களில் பதார்த்தங்களை வாங்கலாம், கொடுக்கலாம், புஜிக்கலாம் என்பது கருத்து. ஆசௌச காலங்களில் ஏற்படும் வியாதி, ஜ்வரம், இவைகளுக்குப் பரிஹாரமான புண்ய காரியங்களையும் செய்யலாம். மருந்துகளுக்குக் கட்டுப்படாத வியாதிகளுக்கு ஆபத் காலம் சுத்தியைக் கொடுக்கும் என்று அறியவும்.

पराशरः :— खले यज्ञे विवाहे च संक्रान्तौ ग्रहणे मृतौ ।
पुत्रे जाते व्यतीपाते दत्तं भवति चाक्षयम् ॥
शर्वर्यां दानमस्तीति नान्यत्र तु विधीयते ॥

பராசரர் :— களத்திலும், யக்ஞத்திலும், விவாஹத்திலும், ஸங்க்ரமணத்திலும் க்ரஹண காலத்திலும், மரணத்திலும், புத்ர ஜனனத்திலும், வ்யதீ பாதத்திலும் கொடுக்கப்

பட்ட த்ரவியதானமானது குறைவில்லாத ஸ்வர்க பலத்தைக் கொடுக்கும். இவைகள் இரவில் ஸம்பவித்தாலும் தானம் செய்யலாம் என்று அறியவும். மற்ற சமயத்தில் இரவில் தானம் செய்யக்கூடாது என்று அறியவும்.

4. सद्यश्शौचम् ஸத்ய: சௌசம்.

दक्षः :— सद्यश्शौचं तथैकाहस्त्र्यहश्चतुरहस्तथा ।
षड्दश द्वादशाहाश्च पक्षाश्च दशसूतके ॥

தக்ஷன் :— ஸத்ய: சௌசம், ஒருநாள், மூன்றுநாள், நான்குநாள், ஆறுநாள், பத்துநாள், பன்னிரண்டுநாள், ஒருபக்ஷம், ஒருமாதம், மரணாந்தம் (மற்ற ஐந்து நாள்) ஆகப் பத்துவிதமாக ஆசௌசம் சொல்லப்படுகிறது.

याज्ञवल्क्यः :— ऋत्विजां दीक्षितानांच याज्ञिकं कर्म कुर्वताम् ।
सत्रि व्रतिब्रह्मचारि दातृब्रह्मविदां तथा ॥
दाने विवाहे यज्ञेच संग्रामे देशविप्लवे ।
आपद्यपि च कष्टायां सद्यश्शौचं विधीयते ॥

யாஞ்யவல்க்யர் :— தீட்டைக் கேட்டவுடன் கட்டின வேஷ்டியுடன் ஸ்னானம் செய்யவேண்டும். இந்த ஸ்னானம் செய்யும் வரையில் உள்ள ஆசௌசத்திற்கு ஸ்த்ய: சௌசம் என்பது என்று அறியவும். யக்ஞத்தில் சம்பந்தப்பட்ட ருத்விக்கள், தீக்ஷிதர்கள், ஸத்ரயாகம் செய்கிறவர்கள், ப்ரம்மசாரி, ஸங்கல்ப பூர்வகமாக வ்ரதனுஷ்டானம் செய்கிறவர்கள், தானம் செய்கிறவர்கள், ப்ரம்மத்தை ஸாக்ஷாத் கரித்தவர்கள் இவர்களுக்கும், தான காலத்திலும், விவாஹ காலத்திலும், யாக காலத்திலும், யுத்த காலத்திலும், தேச உபத்ரவ காலத்திலும் ஸத்ய: சௌசம் சொல்லப்பட்டிருக்கிறது என்று அறியவும்.

बृहस्पतिः — नैष्ठिकानां वनस्थानां यतीनां ब्रह्मचारिणाम् ।
नाशौचं सूतके प्रोक्तं शावे वापि तथैव च ॥

பிருஹஸ்பதி :— நைஷ்டிக ப்ரம்மசாரி, வானப்ரஸ்தன், ஸன்யாஸி, ப்ரம்மசாரி, இவர்களுக்கு ஜனன மரணங்களுடைய ஆசௌசம் ஏற்படாது.

संग्रहे — कृच्छ्र देवोत्सव श्राद्धदानहोमतपोध्वरे ।
प्रारब्धे तत्प्रवृत्तानां सद्यश्शौच मघागमे ॥

க்ருச்சரானுஷ்டானம், தேவோத்ஸவம், ச்ரார்த்தம், தானம், ஹோமம், தபஸ், யாகம், இவைகளை ஆரம்பித்த பிறகு ஆசௌசம் ஸம்பவித்தால் அந்த அந்த காரியங்களில் ஈடுபட்டவர்களுக்கு ஸத்ய: சௌசம் என்று அறியவும். இது சாவாசௌச விஷயம். ஜனன சௌச விஷயத்தில் ஸ்னானம் கிடையாது.

स्मृत्यर्थसारे — आरंभो वरणं यज्ञे संकल्पो व्रतसत्रयोः ।
नान्दीमुखं विवाहादौ श्राद्धे पाकक्रियास्तथा ॥
निमन्त्रितेषु विप्रेषु प्रारब्धे श्राद्ध कर्मणि ।
पाकारंभात् परंकर्तॄन् दातॄन् भोक्तॄंश्च नस्पृशेत् ॥

யாகத்தில் ஆரம்பம் என்பது ரித்விக்களை வரிப்பது. வ்ரதம், ஸ்த்ரயாகம் இவைகளில் ஸங்கல்பம் செய்வது ஆரம்பமாகும், விவாஹம் முதலியதில் நாந்தீ ச்ராத்தம் செய்வது ஆரம்பம். ச்ராத்தத்தில் சமையல் ஆரம்பித்தாலும், ப்ராம்மணர்களை வரித்தாலும் ச்ரார்த்தம் ஆரம்பிக்கப் பட்டதாகும். ஆகையால் இவைகளில் ஆரம்பித்த பிறகு ஆசௌசம் ஏற்படாது என்று அறியவும்.

बोधायनः — प्रणव व्याहृतिपूर्वकं वेदादिमारभ्य सततमधीयीत ।
नान्तरा विरमेत् व्याहरेद्वा नास्यन्तरा जननमरणाशौचम् ॥

போதாயனர் :— ப்ரணவம், வ்யாஹ்ருதிகள் இவைகளை உச்சரித்து ஸங்கல்பத்தை முன்னிட்டு வேத பாராயணத்தை ஆரம்பித்தால், முடியும் வரையில் நடுவில் நிறுத்தக்கூடாது, பேசக்கூடாது. இந்த மாதிரி வேத பாராயணம் நியமத்துடன் செய்தால் நடுவில் ஜனன மரண சௌசம் கிடையாது.

स्मृत्यन्तरे — उद्वाहाङ्कुर आरब्धे मातापित्रो मृतिर्यदि ।
तत्काले सकलं कृत्वा शेषहोमं समाचरेत् ॥

விவாஹாங்கமான அங்குரார்ப்பணம் ஆரம்பித்த பிறகு மாதா பிதாக்களுக்கு மரணம் ஸம்பவித்தால் அப்பொழுதே எல்லா விவாஹ காரியங்களையும் முடித்து, சேஷ ஹோமத்தை முடித்துக்கொண்டு, பித்ரு காரியங்களை ஆரம்பிக்கவும்.

विवाहशेषमध्येतु दंपत्योर्मरणं यदि ।
कर्मशेषं ततः कृत्वा पश्चाद्दहनमाचरेत् ॥

விவாஹம் ஆனபிறகு சேஷ ஹோமத்திற்குள் தம்பதிகளுடைய மரணம் ஸம்பவித்தால் சேஷ ஹோமம் முடித்து பிறகு மரணம் அடைந்தவர்களுக்கு தகனம் செய்யவும்.

षट्त्रिंशन्मते — भुंजानेषु तु विप्रेषु ह्यन्तरामृतसूतके ।
अन्यगेहोदकाचान्ता स्सर्वे ते शुचयः स्मृताः ॥

ப்ராம்மணர்கள் சாப்பிடும்பொழுது அன்னதானம் செய்யும் யஜமானனுக்கு ஆசௌசம் ஸம்பவித்தால் ஆசௌசமில்லாதவர்களை அன்னாதிகளை போடச்சொல்லி சாப்பிட்டு பிறகு வேறு க்ருஹத்திலிருந்து கொண்டு வந்த ஜலத்தினால் ஆசமனம் செய்தால் சுத்தர்கள் என்று சொல்லப்படுகிறது.

विष्णुपुराणे — उदक्या सूतिकाशुचि मृतहारैश्च वीक्षिते ।
श्राद्धे सुरा न पितरो भुंजते पुरुषर्षभ ॥

ரஜஸ்வலை, ப்ரஸவித்தவள், ஆசௌசமுள்ளவன், சவத்தை சுமந்தவன், இவர்களால் பார்க்கப்பட்ட ச்ராத்தத்தில் தேவர்கள், பித்ருக்கள் ஒருவரும் புஜிப்பது இல்லை என்று அறியவும்.

पराशरः — भृग्वग्निमरणे चैव देशान्तरमृते तथा ।
बाले प्रेते च सन्यस्ते सद्यश्शौचं विधीयते ॥

பராசரர் :— ப்ருகு (மலைச்சரிவில் விழுந்து), அக்னி, இவைகளால் இறந்தவன், வேறு தேசத்தில் மரித்தவன், பால மரணம், ஸன்யாஸி மரணம் இவைகளில் ஸத்ய: சௌசம் கூறப்பகிறது என்று அறியவும்.

वृद्धवसिष्ठः — मृते च सूतके चैव न दोषो राहुदर्शने ।
तावदेव भवेच्छुद्धिः यावन्मुक्तिर्न दृश्यते ॥

வ்ரத்த விசிஷ்டர் :— க்ரஹண காலத்தில் ஜனன மரண சௌசம் கிடையாது. க்ரஹணம் விட்ட பிறகு ஆசௌசம் ஏற்படும்.

संग्रहे — श्वश्रू श्वशुरतत्पुत्र याज्याचार्यसुतर्त्विजां ।
उपाध्यायस्य सद्यस्स्यान्मृतौ तत्प्रतियोगिनाम् ॥

மாப்பிள்ளை மரணத்தில் மாமனார், மாமியார் இவர்களுக்கும், பகினீபதி மரணத்தில் மைத்துனனுக்கும், யாஜகனுடைய மரணத்தில் யாஜ்யருக்கும், சிஷ்யன் மரணத்தில் ஆசார்யனுக்கும், கூட வாசிக்கும் ஸஹாத்யாயீ மரணத்தில் ஆசார்ய புத்ரனுக்கும், யஜமானுடைய மரணத்தில் ருத்விக்குக்கும் ஸத்ய: சௌசம் என்று அறியவும்.

पराशरः — दुर्भिक्षे राष्ट्रसंभ्रान्तावापदां च समुद्भवे ।
उपसर्ग मृतौ चैव सद्यः शौचं विधीयते ॥

பராசரர் :— துர்பிக்ஷத்திலும், தேசங்களில் ஏற்பட்ட கலவரங்களிலும், ஆபத்திலும், க்ஷாமம் க்ஷோபம் முதலிய உபத்ரவங்களினால் ஏற்பட்ட மரணங்களிலும், ஜாதிகளுக்கு ஸத்ய: சௌசம் சொல்லப்பட்டிருக்கிறது.

शिल्पिनः कारवो वैद्याः दासीदासाश्च नापिताः ।
राजानः श्रोत्रियाश्चैव सद्यश्शौचाः प्रकीर्तिताः ॥

சித்ரகாரன், தச்சன், கொல்லன் இவர்கள், வைத்யர்கள் வேலைக்காரி, வேலைக்காரன், க்ஷவரம் செய்கிறவன், ராஜாக்கள், வேதாத்யாயனம் செய்தவர்கள், இவர்களுக்கும் ஸத்ய: சௌசம் விதிக்கப்பட்டிருக்கிறது.

बृहस्पतिः — शस्त्रेणाभिमुखो यस्तु वध्यते क्षत्रकर्मणा ।
यज्ञस्सन्तिष्ठते तस्य सद्यश्शौचं विधीयते ॥

பிருஹஸ்பதி :— யுத்தத்தில் எதிர்த்து நின்று க்ஷத்ரிய தர்மத்தை அனுசரித்து ஆயுதத்தால் எவன் வதத்தை அடைகிறானோ அவனுடைய மரணம் யாகத்தின் முடிவு மாதிரியாகும். அவன் விஷயத்தில் ஸத்ய: சௌசம் கூறப்படுகிறது.

याज्ञवल्क्यः — महीपतीनां नाशौचं हतानां विद्युता तथा ।
गोब्राह्मणार्थे संग्रामे यस्य चेच्छतिभूमिपः ॥

யாஞ்யவல்க்யர் :— அரசர்களுக்கும், இடியினால் கொல்லப்பட்டவர்களுக்கும், பசுவை உத்தேசித்தும் ப்ராம்மணனை உத்தேசித்தும் காப்பாற்றுவதற்காக மரணத்தை அடைந்தவனுக்கும், யுத்தத்தில் மரித்தவனுக்கும், அரசனுக்கு விருப்பமான புரோஹிதனுக்கும், ஸத்ய: சௌசம் கூறப்படுகிறது.

5. दुर्मृतानां संस्कारः கெட்டவழிகளில் மரணம் அடைந்தவர்களுக்கு ஸம்ஸ்காரம்.

पराशरः — बाले देशान्तरस्थे च पतिते च यतौमृते ॥
सद्यश्शौचं तथेच्छातो जलाग्न्युद्बन्धनादिषु ॥

பராசரர் :— பாலன், தேசாந்தரத்தில் இருப்பவன், பதிதன், ஸன்யாஸி இவர்களுடைய மரணத்தில் ஸத்ய: சௌசம் சொல்லப்படுகிறது. அக்னி, தூக்குபோட்டுக் கொள்வது, ஜலம் இவைகளால் விரும்பி மரணத்தை ஏற்படுத்திக் கொண்டவனுக்கும் ஸத்ய: சௌசம் என்று அறியவும்.

संग्रहे — षण्ड पाषण्ड पतित प्रव्रज्या वासि मोघजाः ।
स्वैरिण्यनाश्रमि स्तेनगर्भभर्तात्मघातिनः ॥
ना शौचार्हास्तदातूष्णीं दाह्याः पश्चात्तु मन्त्रतः ।
दुर्मृतौ वत्सरान्ते वा षण्मासान्ते त्र्यहाः क्रियाः ॥
त्र्यहं चाघमिहावश्यं नारायणबलि र्भवेत् ॥

நபும்ஸகன், பாஷண்டன் பதிதன், ஸன்யாஸம் பெற்று ஸன்யாஸ தர்மத்தை விட்டவன், வீணாக பிறந்தவன், வ்யபிசாரிணீ, ஆச்ரமமில்லாதவன், திருடன், கர்ப்பத்தை கொன்றவன், பர்த்தாவை கொன்றவர்கள், தற்கொலை செய்து கொண்டவர்கள், இவர்கள் (விஷயத்தில்) மரணத்தில் ஆசௌசம் கிடையாது. மந்திரமில்லாமல் கொளுத்தவேண்டியவர்கள், பிறகு மந்திரத்தினால் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். ஞாதிகளுக்கு ஆசௌசம் கிடையாது. ஒரு வருஷம் அல்லது ஆறு மாதங்கள் சென்ற பிறகு நாராயணபலி செய்து மந்திரங்களால் தஹனக்ரியாதிகளை செய்ய வேண்டும்.

व्यासः — ये मृताः पापमार्गेण तेषां संवत्सरात् परम् ।
नारायणबलिं कृत्वा कुर्यादूर्ध्वक्रियां द्विजः ॥
तत्र त्रिरात्रमाशौचं द्वितीये त्वस्थि संचयः ।
तृतीये तूदकं दत्वा चतुर्थे श्राद्धमाचरेत् ॥

வ்யாஸர் :— பாபமான மார்க்கத்திஞல் மரணம் அடைந்தவர்களுக்கு ஒரு வருஷத்திற்குப் பிறகு நாராயண பலி செய்து ப்ரேதக்ரியையை ஆரம்பிக்கவும். இதற்கு மூன்றுநாள் ஆசௌசம். இரண்டாவது நாளில் அஸ்தி ஸஞ்சயனம், மூன்ருவது நாளில் உதக தானம் செய்து நான்காவது நாளில் ச்ராார்தம் செய்யவும்.

अंगिराः — नारायणबलिः कार्यो दुर्मृतौ दुर्मृतस्यतु ।
संवत्सरे व्यतीते वा तदर्धे पाद एव वा ॥

அங்கிரர் :— துர் மரணத்தை அடைந்தவனுக்கு ஒரு வருஷம் அல்லது ஆறு மாதம் அல்லது மூன்று மாதம் சென்ற பிறகு நாராயண பலி செய்து ஸமஸ்கார்ரம் செய்ய வேண்டும்.

प्राजापत्यातिकृच्छ्रं च तप्तकृच्छ्रत्रयं तथा ।
चान्द्रायणं ततः कुर्यान्नारायणबलिं तथा ॥
कृत्वैतद्वत्सरस्यान्ते विदधीतौर्ध्वं देहिकम् ।
षण्मासाद्द्विगुणं कार्यं त्रिमासात्त्रिगुणं भवेत् ।
चतुर्गुणं त्रिपक्षेस्यात् सद्यः पंचगुणं भवेत् ॥

துர் மரணத்தில் செய்யப்படும் அபர காரியத்தில் விசேஷம் கூறப்படுகிறது.— ஒரு வருஷம் சென்ற பிறகு ப்ராஜாபத்ய க்ருச்சரம், அதிக்ருச்ரம், மூன்று தப்த க்ருச்ரங்கள், சாந்த்ராயணம் இவைகளை செய்து நாராயண பலி செய்யவேண்டும். மனுஷ்யனுடைய ஆயுஸ்ஸு ஸ்திரமில்

லாததால் கர்த்தாவானவன் அபர காரியங்களை சீக்கிரத்தில் செய்ய விரும்பினால், ஆறு மாதங்கள் சென்ற பிறகு செய்வதற்கு சொன்ன க்ரச்ரங்களை இரண்டு மடங்காயும், மூன்று மாதங்களில் செய்வதற்கு மூன்று மடங்காயும் மூன்று பக்ஷங்களில் செய்வதற்கு நான்கு மடங்காயும் ~~உடனே கர்மாக்களை ஆரம்பிக்க ஐந்து மடங்காயும் செய்ய~~வும். பிறகு கர்மாக்களை செய்யவேண்டும் என்பது கருத்து.

6. गर्भस्रावादि निमित्ताशौचं கர்ப்பஸ்ராவம் முதலிய நிமித்தத்தால் ஆசௌசம்.

पराशरः — यदिगर्भो विपद्येत स्रवते चापि योषितः ।
यावन्मासं स्थितोगर्भो दिनं तावत्तु सूतकम् ॥

பராசரர் :— கர்ப்பம் ஸ்ரவித்தாலும், விழுந்தாலும், அந்த கர்ப்பம் எவ்வளவு மாதம் உதரத்தில் இருந்ததோ அவ்வளவு நாள் தாயாருக்கு ஜனன சௌசம் என்று அறியவும்.

आचतुर्थाद्भवेत् स्रावः पातः पंचम षष्ठयोः ।
अत उर्ध्वं प्रसूतिस्स्यात् दशाहं सूतकं भवेत् ॥

நான்காவது மாதம் முடிவதற்குள் உண்டான கர்ப்ப நாசத்திற்கு ஸ்ராவம் என்றும், ஐந்து ஆறு மாதங்களில் ஏற்பட்ட கர்ப்ப நாசத்திற்கு பாதம் என்றும், பிறகு ஏழாவது மாதத்திலிருந்து ஏற்பட்டதற்கு ப்ரஸவம் என்றும் பெயர். ஏழாவது மாதத்திற்கு பிறகு மாதாவுக்குப் பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

दशके — मातुर्गर्भविपत्स्वघं त्रिदिवसं मासत्रयेऽतो यथा ।
मासाहं त्रिषु सूतिका विविरतः स्नानं पितु स्सर्वदा ॥
ज्ञातीनां पतनादि जातमरणे पित्रोर्दशाहं सदा ॥

மூன்று மாதங்களுக்குள் ஏற்பட்ட கர்ப்ப ஸ்ராவத்திற்கு தாயாருக்கு மூன்று நாள் ஆசௌசம். நான்காவது மாதத்திலிருந்து ஆறு மாதம் வரையில் ஏற்பட்ட கர்ப்ப நாசத்திற்கு, மாதத்திற்குத் தகுந்த ஸங்க்கையை அனுசரித்து ஆசௌசம். ஏழாவது மாதம் முதற்கொண்டு பத்து நாள் ஆசௌசம். இது தாயாருக்கு மாத்திரம் சொல்லப்பட்டது. பிதாவுக்கு ஸ்ராவத்திலும், பாதத்திலும் ஸ்னானம் வரையில் ஆசௌசம். ஞாதிகளுக்கு பதனத்தில் ஸ்னானம் பர்யந்தம் ஆசௌசம். சிசு பிறந்து இறந்தால் மாதா பிதாக்களுக்குப் பத்து நாள் ஆசௌசம்.

नवममासमारभ्य प्रसवनिमित्त दशाहादिसूतकं ।
सर्वसपिण्डानामविशेषेण भवति । तत्रहि प्रसवो मुख्यः ॥

ஞாதிகளுக்கு ஒன்பதாவது மாதத்திலிருந்து ப்ரஸவ நிமித்தமான ஆசௌசம் பத்து நாள் பூர்ணமாக இருக்கிறது என்றும், மாதா பிதா ப்ராதா இவர்களுக்கு ஏழாவது எட்டாவது மாதத்தில் ஏற்பட்ட ப்ரஸவத்திற்கு ஆசௌசம் பத்துநாள் பூர்ணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்றும் பிரித்து அறியவும்.

संग्रहे — कन्यकाजनने भ्रातृपितृ तद्भ्रातृ तत्सुताः ।
पितामहश्च तद्भ्राता शुध्यन्ति दशरात्रतः ॥

பெண் பிறந்தால், கன்யையின் ப்ராதா, பிதா, பிதாவின் ப்ராதா, அவனுடைய புத்ரன், பிதா மஹன், பிதாமஹனுடைய ஸஹோதரன் இவர்களுக்கு பத்து நாள் ஜனனா சௌசம் உண்டு என்று அறியவும்.

पुंसि जाते सपिण्डानां स्त्रियां पित्रोः पितुः पितुः ।
सोदराणां पितृव्याणां तत्सुतानामघं भवेत् ॥

புருஷப்ரஜை பிறந்தால் எல்லா ஞாதிகளுக்கும் பத்து நாள் ஆசௌசம். ஸ்திரீ ப்ரஜைப் பிறந்தால் மாதா, பிதா இவர்களுக்கும் பிதாமஹன், பிதா மஹனுடைய ஸஹோதரன் இவர்களுக்கும் பிதாவினுடைய ஸஹோதரர்களுக்கும் அவர்களுடையப் புத்ரர்களுக்கும் பத்து நாள் ஆசௌசம் என்றும், மற்ற ஞாதிகளுக்கு ஆசௌசம் கிடையாது என்றும் அறியவும்.

जननाशौचं द्विविधं, अस्पृश्यत्वलक्षणं, धर्मानधिकारलक्षणं चेति । तत्र अस्पृश्यत्वलक्षणं मातुरेव पूर्णमाशौचम् । पितुरपि स्नानादूर्ध्वं पितुरप्यस्पृश्यत्वलक्षणं नास्ति । किं तु धर्मानधिकार लक्षणमेव ।

ஜனனாசௌசம் இரண்டுவிதமானது. தொடக்கூடாது என்றும், தர்மம் செய்வதற்கு அதிகாரம் இல்லை என்பது என்றும் அறியவும். மாதாவுக்குப் பூர்ணமாக ஆசௌசம், பிதாவுக்கு ஸ்னான பர்யந்தம் அஸ்ப்ருச்யம் (தொடக் கூடாது) என்ற தோஷம் உண்டு, பிறகு கிடையாது. ஆனாலும், ஸ்னானத்திற்குப் பிறகு சில நாள் தர்ம கார்யங்களுக்கு யோக்யனாகமாட்டான் என்பதாகும். தன் சொந்தக் காரியங்களுக்கு பூஜை வைச்வதேவத்திற்கு சுத்தன் என்று அறியவும். ஸபிண்டர்களுக்கு எப்பொழுதும் அஸ்ப்ருச்யத்வ தோஷம் இல்லை.

जनने सपिण्डाश्शुचयः मातापित्रोऽस्तु सूतकम् ।
सूतकं मातुरेवस्यादुपस्पृश्य पिता शुचिः ॥
निरस्यतु पुमान् शुक्लमुपस्पृश्यैव शुध्यति

புத்ர ஜனனத்தில் ஞாதிகளுக்கு அஸ்ப்ருச்ய தோஷம் கிடையாது, சுத்தர்கள் என்று அறியவும். ஆனால் தர்மாதிகாரம் இல்லை என்பது கருத்து. மாதாவுக்கும் பிதாவுக்கும் ஆசௌசம் உண்டு. ஆனால் மாதாவுக்கு பூர்ணமான ஆசௌசம். பிதாவுக்கு ஸ்னானத்திற்குப் பிறகு அசுசித்வம் இல்லை. (புத்ரஜனனம் கேட்டு ஸ்னானம் செய்கிற விஷயத்தைக் குறிப்பிடுகிறார்). ஸ்னானம் செய்த பிதாவுக்கு அஸ்ப்ருச்சய தோஷம் கிடையாது என்று அறியவும். பிதாவானவன் பத்னீயுடன் சேர்ந்து இருக்கும் பொழுது சுக்ல விஸர்ஜனத்திற்கு பிறகு உடனே ஸ்னானம் செய்ய வேண்டும். அந்த விஷயத்தில் புத்ர ஜனனம் கேட்டு ஸ்னானம் செய்தால் அஸ்ப்ருச்யத்தவம் பிதாவுக்குக் கிடையாது என்பதாகும். ஆகையால் லோகத்தில் உள்ளபடி ஸபிண்டர்கள், பிதா, மாதா எல்லோருக்கும் அஸ்ப்ருச்யத்வம் ஸமானம் என்பது, பத்து நாள் சென்ற பிறகு ஸ்னானம் செய்தால் சுத்தி ஏற்படுகிறது எல்லோருக்கும் என்று அறியவும். மாதாவுக்கு பாண்ட ஸ்பர்சம் பர்யந்தம் தீட்டு என்று அறியவும். பிதாவுக்கு தீட்டு போனாலும் தர்மத்தில் அதிகாரம் பத்னியினுடைய தீட்டு போகிற காலப் பர்யந்தம் என்று அறியவும்.

वृत्तस्वाध्यायसापेक्षमघसंकोचनं तथा ।

கலி நிஷித்த ப்ரகரணத்தில் ப்ராம்மணனுடைய நடத்தை அத்யயனம் முதலிய சிஷ்டாச்சாரத்தை உத்தேசித்துத் தீட்டைக் குறைப்பது செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

अस्पृश्यत्वादि हेतुभूतं दशाहपर्यन्तमेव ।
दानधर्मानधिकारलक्षणं तु पुत्रजनने
विंशतिरात्रपर्यन्तं स्त्रीजनने मासपर्यन्तमेव ॥

அஸ்ப்ருச்யத்வ தோஷம் பத்து நாள் வரையில் உண்டு. பிறகு புருஷ ப்ரஜை ஜனனத்தில் இருபது நாள் பர்யந்தமும், ஸ்திரீ ப்ரஜை ஜனனத்தில் முப்பது நாள் பர்யந்தமும், பிதாவுக்கு தர்ம காரியங்களில் அதிகாரம் கிடையாது என்று அறியவும். குல ஸம்ப்ரதாயத்தை அனுசரித்து அனுஷ்டிக்கவும்.

मार्कण्डेयः — रक्षणीया तथा षष्ठ्यां निशायां तु विशेषतः ।
रात्रौ जागरणं कार्यं जन्मदानां तथा बलिः ॥
पुरुषाः शस्त्रहस्ताश्च तत्र गीतैश्चयोषितः ।
रात्रौ जागरणं कुर्युर्दशम्यां चैव सूतके ॥

மார்கண்டேயர் :— சிசு ஜனனத்திலிருந்து ஆறுவது நாள் இரவில் பந்துக்கள் உத்ஸவம் கொண்டாட வேண்டும். இது ஜன்மதா என்ற தேவதைக்குப் ப்ரீதியைக் கொடுக்கும். ஸ்திரீகள் ஸங்கீதம் பாடவேண்டும். புருஷர்கள் ஆயுதத்துடன் இருந்து கண்விழிக்கவேண்டும். இதே மாதிரி பத்து நாளிலும் உத்ஸவம் கொண்டாடவேண்டும். இது சிசு ரக்ஷண காரியம் என்று அறியவும்.

7. **शिशुमरणे अघविचारः** சிசுவின் மரணத்தில் தீட்டு விசாரம்.

शावाशौचे समुत्पन्ने सूतके च द्विजातिभिः ।
अन्याशौचवतां स्पर्शो न कर्तव्यो द्विजन्मनाम् ॥

மரண செளசத்திலும், ஜனன செளசத்திலும் தீட்டு உள்ளவர்கள் பரஸ்பரம் தொட்டுக் கொள்ளக்கூடாது. தெரியாமல் தொட்டால் ஸாந்தபனக்ருச்சரம் அனுஷ்டிக்க வேண்டும், தெரிந்து செய்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும் என்று அறியவும்.

मनुः— दशाहाभ्यन्तरे बाले प्रमीते तस्यबान्धवैः ।
शावाशौचं न कर्तव्यं सूत्याशौचं विधीयते ॥

மனு :— பிறந்து பத்து நாட்களுக்குள் மரித்தால் ஞாதிகளுக்கு சாவா சௌசம் கிடையாது, ஸூதகா சௌசம் உண்டு என்று அறியவும்.

व्याघ्र :— अन्तर्दशाहे जातस्य शिशोर्निष्क्रमणं यदि ।
सूतके नैव शुद्धिस्स्यात् पित्रोश्शातातपोऽब्रवीत् ॥

வியாகரர் :— பிறந்து பத்து நாட்களுக்குள் சிசு மரித்தால் மாதா பிதாக்களுக்கு ஜனன சௌசம் தான் அனுஷ்டிக்க வேண்டும். பத்து நாளோடு தீட்டு விலகும். மரண சௌசம் கிடையாது என்று சாதாதபர் சொல்லுகிறார்.

याज्ञवल्क्यः— आदन्तजन्मनस्सद्यः आचौलान्नैशिकीस्मृता ।
त्रिरात्रमाव्रतादेशाद्दशरात्रमतः परम् ॥

யாஞ்யவல்கியர் :— பல் முளைப்பதற்குள் சிசு மரித்தால் ஞாதிகளுக்கு ஸத்ய: சௌசம். அதற்கு பிறகு சௌளம் வரையில் ஒரு நாள் ஆசௌசம். மூன்ருவது வருஷத்திலிருந்து ஏழாவது வருஷத்திற்குள் சிசு மரித்தால் மூன்று நாள் ஆசௌசம். உபநயனம் ஆன பிறகு மரித்தால் பத்து நாள் ஆசௌசம் என்றும் அறியவும். சிசு பிறந்து பத்தாவது நாளில் மரித்தால் மாதா பிதாக்களுக்கு அதிகமாக இரண்டு நாள் ஆசௌசம் ஏற்படும். பதினொருவது நாள் சிசு மரித்தால் மூன்று நாள் அதிகா சௌசம் என்று அறியவும். இது ஞாதிகளுக்குக் கிடையாது. மாதா, பிதா, ப்ராதா இவர்களுக்குப் பத்து நாளுக்குப் பிறகு ஏற்படும் சிசு மரணத்தில் பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

8. खननादिसंस्काराः புதைப்பது முதலிய ஸம்ஸ்காரங்கள்.

कर्मप्रदीपिकायां — कन्याबालकयोरूर्ध्वं त्रयोविंतिमात्रतः ।
उपोषणं तु कर्तव्यं तत्पूर्वं खननं तयोः ॥

கன்யை, பாலகன் இவர்களுடைய இருபத்தி மூன்று மாதத்திற்குள் ஏற்பட்ட மரணத்தில் சிசுவுக்கு பூமியில் புதைப்பது என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். இருபத்தி மூன்று மாதத்திற்குப் பிறகு அக்னி ஸம்ஸ்காரம், தகனம் செய்யவேண்டும்.

माधवीये — अनतीतद्विवर्षस्तु प्रेतो यत्रापिदह्यते ।
आशौचं ब्राह्मणानां तु त्रिरात्रं तत्र विद्यते ॥

இரண்டாவது வயது பூர்ணமாகாத சிசு இறந்து தகனம் செய்யப்பட்டால் ஞாதிகளுக்கு மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்.

अंगिराः — यद्यप्यकृतचूडो वै जातदन्तस्तु संस्थितः ।
दाहयित्वा तथाऽप्येनं आशौचं त्र्यहमाचरेत् ॥

அங்கிரர் :— பல் முளைத்து சௌளமாகாமல் இருந்து சிசு மரித்தால், அதை தஹித்தால் ஞாதிகளுக்கு மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்.

षडशीतौ — द्वितीये प्रथमेवाब्दे चौलं यदिकृतं तदा ।
चौलप्रभृति सर्वेषां गोत्रिणां त्रिदिनं मतम् ॥

இரண்டாவது வருஷத்தில் அல்லது முதல் வருஷத்தில் சௌளம் செய்யப்பட்டு இறந்தால், இறந்த சிசு விஷயத்தில் ஞாதிகளுக்கு மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்.

उदकं पिण्डदानं च त्र्यहं स्यात्तु त्रिवर्षतः ।
दशाहं पिण्डदानं स्यादष्टमाब्दात् परं स्मृतम् ॥

மூன்று வருஷத்திற்கு மேல் இறந்த பிராம்மண சிசு விஷயத்தில் சௌளம் செய்யப்பட்டாலும் சௌளம் செய்யப்படாவிட்டாலும் ஞாதிகள் மூன்று நாள் மந்திரமில்லாமல் உதக தானம் செய்யவேண்டும், பிண்ட தானங்களையும் செய்யவேண்டும். எட்டு வருஷத்திற்குப் பிறகு பத்து நாள் பிண்ட தானம் செய்யவும். ப்ரேதப் பிண்டத்தை வெளியில் தர்ப்பம் மந்திரமில்லாமல் கொடுக்கவும்.

दाहाद्येवोदकं पिण्डं पंचमादस्थिसंचयः ।

தஹனத்திலிருந்து உதக தானமும், பிண்ட தானமும் ஐந்தாவது வருஷத்திலிருந்து அஸ்தி ஸஞ்சயனமும் செய்ய வேண்டும். மந்திரமில்லாமல் செய்யவேண்டும் என்பது கருத்து.

षष्ठवर्षादारभ्य उपनयनपर्यन्तमेकर्चविधिना संस्कृत्य तिलोदक पिण्डदान नवश्राद्ध षोडश श्राद्धानि मन्त्रवर्जं तन्त्रत एव कुर्यात् ॥

ஆறுவது வருஷம் முதல் உபநயன பர்யந்தம் ஏகர்ச்ச விதியினல் ஸம்ஸ்காரம் செய்து திலோதகம், பிண்டதானம், நவச்ரார்தம், ஷோடச ச்ரார்தம் இவைகளை மந்திரமில்லாமல் செய்யவேண்டும்.

उपनयनात् पितृमेधविधिना संस्कृत्य मन्त्रवत् कुर्यात् ॥

உபநயனத்திற்குப் பிறகு பித்ரு மேத விதியினல் ஸம்ஸ்கரித்து மந்திரத்துடன் கர்மாக்களைச் செய்யவும்.

अष्टमात्परमेवास्य वृषत्स्थापनपूर्वकम् ।
उदकं पिंडदानं च कुर्यात्प्रेतस्य शान्तये ॥

எட்டு வயதிற்குள் பிறகு பாஷாணஸ்தாபனம் செய்து உதக பிண்ட தானம் செய்யவும்: ப்ரேத சாந்தியின் பொருட்டு என்று அறியவும். ஸபிண்டீகரணம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

सप्तमाद्द्वादशाद्ध्वं गृहस्थब्रह्मचारिणोः ।
सपिण्डीकरणं कुर्याद् न प्रागिति यमोदितम् ॥

ஏழாவது வயதுக்குமேல் இறந்த க்ருஹஸ்தனுக்கும், பன்னிரெண்டாவது வயதுக்கு மேல் இறந்த ப்ரம்மசாரிக்கும் ஸபிண்டீகரணம் அவசியம் செய்யவேண்டும் என்று அறியவும்.

कन्या बालकुमाराणां त्र्यहं पिण्डोदकक्रियाः ।
कुर्याद्दशाहमाशौचं वर्तते नात्र संशयः ॥

கன்யை, பாலன், குமாரன் இவர்களுக்கு மூன்று நாட்களில் பிண்டோதக க்ரியைகளைச் செய்யவும். ஆசௌசம் பத்து நாள் முழுவதும் உண்டு. எட்டாவது தினம் முதல் மூன்று தினங்களில் பிண்டோதக தானத்தை முடித்துக் கொண்டு பன்னிரெண்டாவது தினத்தில் நாராயணபலி செய்யவேண்டும்.

तथा बालस्य कन्यायाष्षण्डस्य पतितस्य च ।
नारायणबलिः कार्यो ह्यन्येषां मोक्षकांक्षिणाम् ॥

பாலன், கன்னிகை, நபும்ஸகன், பதிதன் இவர்களுக்கு நாராயணபலி செய்ய வேண்டும். ஸன்யாஸிகளுக்கும் நாராயண பலி செய்யவும்.

बोधायनः — त्रिवर्षाद्युदकं पिण्डं चतुर्थाद्युदकं बलिम् ॥

போதாயனர்:— மூன்ருவது வருஷம் முதல் உதக பிண்டதானத்தையும், நான்காவது வருஷம் முதல் நாராயண பலியையும் செய்யவும்.

9. कन्यामरणाशौचम् — கன்யா மரணத்தில் ஆசௌசம்.

आपस्तम्बः — अचूडायां तु कन्यायां सद्यः शौचं विधीयते ।
एकाहं चूडितायां तु दत्तायां त्र्यहमिष्यते ॥

ஆபஸ்தம்பர்:— சௌளமாகாத கன்னிகையின் மரணத்தில் ஸபிண்டர்களுக்கு ஸத்ய: சௌசம் சொல்லப்பட்டிருக்கிறது. சௌளத்திற்குப் பிறகு ஒரு நாள் ஆசௌசம், விவாஹமான பிறகு மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்.

संग्रहे — आचौलात् सद्य आदानाग्निशो'र्वेत्वाविवाहतः ।
त्र्यहं कन्यामृतौ ज्ञातिष्वघं पूर्णं मृतूद्भवे ॥

கன்னிகை சௌளம் செய்வதற்குள் மரித்தால் ஞாதிகளுக்கு ஸத்ய: சௌசம், பிறகு வாக் நிச்சயம் வரையில் ஒரு நாள் ஆசௌசம், பிறகு விவாஹம் ஆகும் வரையில் மூன்று நாள் ஆசௌசம். கல்யாணம் ஆகாமல் ரஜோ தர்சனம் ஏற்பட்டு மரித்தால் பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

त्रिरात्रं वरतद्ज्ञात्योर्दत्तानूढामृतावघम् ।
पूर्णं भ्रातुश्च पित्रोश्च कन्याबालमृतौ सदा ॥

வாக்தானமாகி விவாஹமாகாமல் மரித்தால் வரபக்ஷத்திலும் பித்ரு பக்ஷத்திலும், ஞாதிகளுக்கு மூன்று நாள் ஆசௌசம். கன்யை, பாலன் இவர்களின் மரணத்தில் ப்ராதாவுக்கும், மாதா பிதாக்களுக்கும் எப்பொழுதும் பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

व्यासः — दत्तानारी पितुर्गेहे सूयेताथ म्रियेत वा ।
तद्बन्धुवर्गस्त्वेकेन शुचिस्तज्जनकस्त्रिभिः ॥

வ்யாஸர் :— விவாஹமாகி பெண் பிதாவின் க்ருஹத்தில் ப்ரசவித்தாலும், இறந்தாலும், அவளுடைய பந்துவர்க்கங்களுக்கு ஒரு நாள் ஆசௌசம். பிதாவுக்கு மூன்று நாள் ஆசௌசம். மாதாவுக்கும், ஸஹோதரர்களுக்கும் மூன்று நாள் ஆசௌசம். மாதாவுக்கும், ஸஹோதரர்களுக்கும் மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்.

दीपिकायां— पितुर्गृहे मृतायां तु प्रत्तायां दुहितर्यपि ।
सूतायां च त्र्यहं पित्रोस्तत्सुतानां दिनं भवेत् ॥

விவாஹமாகிய பெண் பிதாவின் க்ருஹத்தில் இறந்தாலும், ப்ரஸவித்தாலும், மாதா பிதாக்களுக்கு மூன்று நாட்கள் ஆசௌசம், அவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு நாள் ஆசௌசம் என்று அறியவும், தற்சமயம் ஆசாரத்தில் விவாஹமான பெண்ணினுடைய ப்ரஸவத்திலும், மரணத்திலும் மாதா பிதரக்களுக்கு மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்; எங்கு ப்ரஸவித்தாள், எங்கு மரணமடைந்தாள் என்பது விசாரிக்க வேண்டியது கிடையாது.

10. उपनीताशौ உபநீதா சௌசம.

दीपिकायां— अनुपेत उपेते वा मृते गर्भाष्टमे समे ।
ब्राह्मणानां सपिण्डानां दशरात्रमघं भवेत् ॥

உபநயனம் செய்து கொண்டவனுக்கும், உபநயனம் செய்து கொள்ளாதவனுக்கும், எட்டு வயதுக்குமேல் மரணம் ஸம்பவித்தால் ஞாதிக்குப் பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

मनुरपि— दशाहं शावाशौचं सपिण्डेषु विधीयते ।

ஞாதிகளுக்குப் பத்துநாள் ஆசௌசம் எட்டுவயதுக்கு மேல் மரணம் ஸம்பவித்த விஷயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

दशाहेन सपिण्डास्तु शुध्यन्ति प्रेत सूतके ।
त्रिरात्रेण सकुल्याश्च स्नात्वा शुध्यन्ति गोत्रजाः ॥

சாவா சௌசத்தில் ஸபிண்டர்கள் பத்து நாட்களால் சுத்தர்கள் ஆகிறார்கள். ஸமானோதகர்கள் மூன்று நாட்களால் சுத்தர்கள் ஆகிறார்கள். ஸஹோதரர்கள் ஸ்னானத்தால் சுத்தர்கள் ஆகிறார்கள். ஏழாவது புருஷன் வரையில் ஸபிண்டர்கள். அதற்குமேல் ஏழாவது புருஷன் வரையில் ஸமானோதகர்கள் என்று அறியவும்.

पराशरः — एकाहाच्छुध्यते विप्रो योऽग्निवेद समन्वितः ।
त्र्यहात् केवलवेदस्तु निर्गुणो दशभिर्दिनैः ॥

பராசரர் :— அக்னிஹோத்ரம், வேதம், ஆசாரம் இவைகளுடன் இருக்கிற ப்ராம்மணனுக்கு ஒரு நாள் ஆசௌசம், வேதம் ஆசாரத்துடன் இருக்கிறவனுக்கு மூன்று நாள் ஆசௌசம். இவை ஒன்றுமில்லாத ப்ராம்மணன் என்பவனுக்கு பத்து நாட்கள் ஆசௌசம்.

जन्मकर्मपरिभ्रष्टस्सन्ध्योपासनवर्जितः ।
नामधारकविप्रस्तु दशाहं सूतकी भवेत्॥

பிறப்பினும், கர்மாக்களினாலும் தவறியவன், ஸந்தியாவந்தனம், ஔபாஸனம், ஆசாரம் இவைகளை விட்டவன், ப்ராம்மணன் என்று பெயரை தரிக்கிறவன் இவர்களுக்கு

பத்து நாள் ஆசௌசம் என்று பராசரர் சொல்லுகிறார். இது மனு முதலியவர்களுடைய அபிப்ராயத்தை அனுசரித்துச் சொல்லப்பட்டது என்று அறியவும். கலியுகத்தில் தீட்டு விஷயத்தில் ஸங்கோசம் கிடையாது. ஆகையால் ஆசௌசத்தை பூர்ணமாக அனுஷ்டிக்கவும்.

हारीतः — दशाहमेव विप्रस्य सपिण्डमरणेसति ।
कल्पान्तराणि कुर्वाणः कलौ व्यामोह किल्बिषी ।

ஹாரீதர் :— ஞாதிகளுடைய மரணத்தில் பத்து நாள் ப்ராம்மணனுக்கு ஆசௌசம் நிச்சயம். வேறு வசனங்களைக் கொண்டு ப்ரகாராந்தரங்களை அனுஷ்டிக்கக்கூடாது. கலியில் வர்ஜிக்கவேண்டும். அப்படி செய்தால் பாபம் ஸம்பவிக்கும்.

दहनादिसपिण्डयन्तं ब्रह्मचारी करोति चेत् ।
अन्यत्र मातापित्रोस्स्यादुपनीय पुनर्व्रती ॥

ப்ரம்மசாரீ, மாதா, பிதாக்களைத் தவிற மற்றவர்களுக்கு தஹனம் முதல் ஸபிண்டீகரணம் வரையில் உள்ள கர்மாக்களைச் செய்யக்கூடாது. செய்தால் ப்ராயச்சித்தம் செய்து புனருபனயனம் செய்து கொள்ளவேண்டும்.

11. दत्तपुत्राशौचम्—ஸ்வீக்ருத புத்ர விஷயத்தில் ஆசௌசம்.

मनु : — गोत्ररिक्थे जनयितुर्नहरेद्दत्तिमस्सुतः ।
गोत्ररिक्थानुगः पिण्डो व्यपैति ददतः स्वयम् ॥

மனு :— தத்த புத்ரன், ஜனகனுடைய கோத்ரம், தனம் இவைகளை அடைவதில்லை. கோத்ரம் தனம் இவைகளை அனுசரித்த பிண்ட தானமும் நிவ்ருத்தி அடைகிறது என்று அறியவும்.

मरीचिरपि— गोत्रान्तरप्रविष्टानां दायमाशौचमेव च ।
ज्ञातित्वं च निवर्तन्ते तत्कुले सर्वमिष्यते ॥

வேறு கோத்ரத்தை அடைந்த தத்த புத்ரனுக்கு ஜனக னுடைய தனம், ஆசௌசம், ஞாதித்தன்மை இவைகள் நிவர்த்தியாகிறது—சேர்ந்த இடத்தில் ஞாதித்வம், தனம், ஆசௌசம் இவைகள் பூர்ணமாக உண்டு என்று அறியவும்.

दत्तस्य परिवेषृत्वं आशौचं दाय एव च ।
गृहीतृ गोत्रात्संग्राह्यं श्रौतं स्मार्तं तथैव च ॥

தத்த புத்ரனுக்கு பரிமேத்ருத்வம், ஆசௌம், தனம், ச்ரௌத தர்மம், ஸ்மார்த்த தர்மம், இவைகளை ஸ்வீகரித்த வனின் குலத்தை அனுசரித்து க்ரஹிக்க வேண்டியது என்று அறியவும்.

स्मृत्यन्तरे —यद्यमाऽन्तर्दशाहे स्यादौरसो दत्तकृत्रिमौ ।
पिण्डोदकं दशाहेऽह्निदद्युरन्येत्वमातिथौ ॥

தத்தன், ஔரஸன், க்ருத்திமன் இவர்கள் மாத்ரு பித்ரு கர்மாக்கள் செய்யும்பொழுது மத்தியில் தர்சம் வந்தால் பிண்டம் உதக தானம் இவைகள் தொடர்ந்து நடக்கும். மற்றவர்கள் செய்தால் அமாவாஸ்யை நடுவில் வந்தால் அன்று முடிக்கவேண்டும் என்று அறியவும்.

मातापित्रोः क्रियाः कुर्यादौरसो यदिपुत्रकः ।
कुलान्तरप्रविष्टानां आशौचं त्र्यहमेवतु ॥

மாதா பிதாக்களுக்கு ஔரஸ புத்ரன் கர்மா செய்யும் பொழுது வேறு குலத்தில் பிரவேசித்த தத்தனுக்கும் மூன்று நாள் ஆசௌசம். அதேமாதிரி தத்தன் மரணத்திலும் ஜனகன் விஷயத்தில் மூன்று நாள் ஆசௌசம் என்று அறிய வும்.

जनयितुः पुत्रपौत्रप्रपौत्राभावे दत्त एव दाहादिकं ।
सर्वं कृत्वा प्रत्यब्दं तन्मृताहे पार्वणं च कुर्यात् ॥

ஜனக பிதாவுக்கு புத்ரன், பௌத்ரன், பிள்ளை இவர்கள் இல்லையேயானால் தத்த புத்ரன் ஜனகபிதாவுக்கு தஹனம் முதல் எல்லா கார்யங்களையும் செய்து ப்ரதி வருஷம் பார்வண ச்ராத்தமும் செய்யவேண்டும் என்று சொல்லப் படுகிறது. ஜனக பிதாவினுடைய தஹனமும் தத்தனைச் சேரும், என்பது கருத்து.

न ज्येष्ठं पुत्रं दद्यात् प्रतिगृह्णीयाद्वा ।

ஜ்யேஷ்ட புத்ரனை ஸ்வீகாரம் கொடுக்கக்கூடாது, ஸ்வீகாரம் செய்து கொள்ளவும் கூடாது:

दत्तस्य पुत्रजनने मरणे पूर्वगोत्रिणाम् ।
स्नानमात्रं सचेलं स्यात् नाशौचं विद्यते क्वचित् ॥

தத்தபுத்ரனுக்கு புத்ரனுடைய ஜனன மரணத்தில் முன் ஸபிண்டர்களுக்கு ஸசேல ஸ்னான மாத்ரம் ஸம்பவிக்கும். ஆசௌசம் கிடையாது.

12: त्रिरात्रमाशौचम् மூன்று நாள் ஆசௌசம்.

बृहस्पतिः — त्र्यहं मातामहाचार्य श्रोत्रियेष्वशुचिर्भवेत् ।

பிருஹஸ்பதி :— மாதா மஹன், ஆசார்யன், ச்ரோத்ரி யன் இவர்களின் மரணத்தில் மூன்று நாள் ஆசௌசம். ஞாதி இல்லாத உபநயனம் செய்வித்தவனும் ஆசார்யனு வான் என்பது கருத்து.

मातृष्वसामातुलयोः श्वश्रू श्वशुरयोर्गुरौ ।
मृते चर्त्विजि याज्ये च त्रिरात्रेण विशुध्यति ॥

மாதாவின் ஸஹோதரீ, மாதுலன், மாமியார், மாமனார், குருரித்விக், யாஜ்யன் இவர்களுடைய மரணத்தில் மூன்று நாள் ஆசௌம்.

अंगिराः — मातामह मातुल मातामही मातुलानीनां
त्रिरात्रेण चश्वशुरस्य च, इति ।

அங்கீரர் :— மாதாமஹன், மாதுலன், மாதாமஹீ, அம்மாமி, மாமனார், மாமியார் இவர்களின் மரணத்தில் மூன்று நாள் ஆசௌசம்.

मातामहौ मातुल मातुलान्यौ मातृष्वसा पुत्र्यपि तत्सुतश्च ।
पितृष्वसा च स्वसृतत्तनूजौपत्न्यां स्थितायामथवाप्रजायां ।
सत्याममुष्याः श्वशुराविति द्वादशैव तेषामुपनीतिभाजाम् ॥
मृतौ पुमांसः प्रतियोगिनश्चेत् शुद्धास्स्युरुद्वाहकृतस्त्रिरात्रम् ।

மாதாமஹன், மாதமஹீ, மாமா, அம்மாமி, தாயின் ஸஹோதரீ, பெண், பெண்ணின் பிள்ளை, அத்தை, தன் ஸஹோதரீ, ஸஹோதரீயின் பிள்ளை, மாமனார், மாமியார், இந்த பன்னிரெண்டு பேர்களுடைய மரணத்தில் இவர்களுடைய ப்ரதியோகிக்கு மூன்று நாள் ஆசௌசம். உபநயனம், விவாஹம், முதலிய ஸமஸ்காரத்துடன் கூடிய ஸமானோதகர்கள் ஜனன மரண விஷயத்திலும் ஞாதிகளின் குழந்தைகள் மூன்று வயதுக்குப் பிறகு உபநயனம் வரையிலும் மூன்று நாள் ஆசௌசம். தனது பெண் ப்ரஸவித்தால் தனக்கும் மனைவிக்கும், பிள்ளைக்கும் மூன்று நாள் ஆசௌசம் என்று அறியவும்.

மூன்று நாள் தீட்டை அனுஷ்டிக்கிறவன் தன்னைக் காட்டிலும் மரித்தவர்கள் வயது முதிர்ந்தவரானால் வபனம் செய்து கொள்ளவேண்டும்.

श्वश्रूश्वशुरनाशात्तु पूर्वं भार्यामृता यदि ।
तत्सन्ततिस्स्याद्वपनं त्र्यहमित्याह गौतमः ॥

மாமனார், மாமியார் இறப்பதற்கு முன்பு பத்னி இறந்து போனால் பிறகு மரித்த மாமனார், மாமியார் விஷயத்தில் தனக்கு ஸந்ததி இருக்குமேயானால் மூன்று நாள் தீட்டு, வபனம் இவைகள் உண்டு. ஸந்ததி இல்லாவிடில் ஒரு நாள் ஆசௌசம் மட்டும் உண்டு என்று அறியவும்.

सहोदरस्तनयस्सपत्नीमाता भगिन्यास्तनयश्चतुर्णाम् ।
एषां जनानां उपनीतिभाजां मृतौ स्त्रियश्चेत्प्रतियोगिभाजः ॥
शुद्ध्यन्ति रात्रित्रितयेन भर्तुराशौचमप्यभ्युपगम्यमाभिः ॥

ஸஹோதரன், அவனுடைய புத்ரன், ஸபத்னீ மாதா, ஸஹோதரியின் புத்ரன், இவர்களுக்கு உபநயனம் ஆகி பிறகு மரணம் ஏற்பட்டால் ஸ்திரீகளுக்கு மட்டும் மூன்று நாள் ஆசௌசம். பர்தாவினுடை ஆசௌசம் ஸ்திரீகளுக்கு ஸம்பவிக்கும் என்று முன்பு சொல்லப்பட்டிருக்கிறது.

13. पक्षिण्याशौचम् — பக்ஷிணீ ஆசௌசம்.

संग्रहे — मातृष्वसुस्सुतापुत्रौ पितृष्वसृसुतास्त्रियौ ॥
स्वसा पितृव्यपुत्री च स्वसृपुत्री पितृष्वसा ।
भ्रातृपुत्री च दौहित्री पौत्री तत्प्रतियोगिनौ ।
स्त्रीपुंसौ च क्वचित्प्रेते पक्षिण्याशौचिनो मिथः ॥

தாயாரின் பகினீ, பெண் பிள்ளைகள், தகப்பனாரின் ஸஹோதரனுடைய பெண், பகினியினுடைய பெண், அத்தை, ப்ராதாவின் புத்ரீ, பெண்ணின் புத்ரீ, புத்ரனுடைய புத்ரீ இவர்கள் இறந்தால் இவர்களுக்கு ப்ரதியோகியான ஸ்திரீ புருஷர்களுக்குப் பக்ஷிணீ ஆசௌம் என்று அறியவும். 90 நாழிகை தீட்டு என்பார்கள். ஒரு இரவு முன் பின் உள்ள பகலுடன் கூடியது, பக்ஷிணீ என்பதாகும் என்று அறியவும்

पक्षिणी योनि संबन्धे नातिकालेन सूतके ।

யோநி ஸம்பந்த விஷயத்தில் பக்ஷிணீ ஆசௌசம் என்று அறியவும். இதற்கு அதிக்ராந்தம் கிடையாது. ஜனனத்திலும் பக்ஷிணீ ஆசௌசம் கிடையாது.

योनिसंबन्ध एव गौतमादिभिः पक्षिण्याशौचस्य उक्तत्वात् मातृष्व स्रादि भर्तृमरणे पक्षिणी नास्त्येव । बन्धुत्वात् स्नानमस्ति । एवं मातृष्वस्रे यादि पत्नीमरणेऽपि नास्तिपक्षिणी ॥

யோநி ஸம்பந்த விஷயத்தில் கௌதமர் முதலிய மஹரிஷிகளால் பக்ஷிணீ ஆசௌசம் சொன்னபடியால் மாத்ரு பகினீ பர்தாவினுடைய மரணத்தில் பக்ஷிணீ ஆசௌசம் கிடையாது. ஸ்னானம் மட்டும் உண்டு. இதே மாதிரி மாத்ரு பகினீ புத்ரன் விஷயத்தில் அவனுடைய பத்னீ மரணத்தில் பக்ஷிணீ ஆசௌசம் கிடையாது என்று அறியவும்.

भर्तुर्यदघं तत्तत्पत्न्यास्स्यात् नास्यपत्न्यघमिति ।

பர்த்தாவுக்கு எந்த எந்த ஆசௌசம் வருமோ அது பத்னீக்கும் உண்டு. ஆனால் பத்தியினினுடைய ஆசௌசம் புருஷனுக்குக் கிடையாது.

पितृव्य मातृष्वसृमातुलाश्च पितृष्वसैषामपि पुत्र पुत्र्यः। मातामहौ भ्रातृसुता स्वसा तत्सुता च पौत्री च पितामहौ च ॥ पुत्र्यास्सुतैकाधिक विंशतेस्तु जनस्य मृत्यां विहितोपनीतेः ॥ यदिस्त्रियः तत्प्रतियोगि भाजः पक्षिण्यनुष्टेय तथाऽभ्युपेया ॥

பிதாவின் ஸஹோதரர், அவருடைய புத்ரன், பெண், அத்தை, அவளுடைய புத்ரன், பெண், மாமா அவனுடைய புத்ரன், பெண், சிறிய தாயார், பெரிய தாயார், அவர்களுடைய புத்ரன், பெண், மாதாமஹர், மாதாமஹீ, ஸஹோதரீ, அவளுடைய பெண், புத்ரன், ஸஹோதரனின் பெண், புத்ரனின் பெண், பிதாவின் தாயார், தகப்பனார், புத்ரியினுடைய பெண் ஆக 21 (இருபத்தியொன்று) பேர்கள் மரணத்தில் ப்ரதியோகியான ஸ்திரீகளுக்கு பக்ஷிணீ ஆசௌசம் என்று அறியவும். இது அவள் பர்தாவுக்குக் கிடையாது.

14. एकदिनाशौचम् ஒரு நாள் தீட்டு

भ्राता विमातुः स्वसृपुत्रिके द्वे तेषामपत्यं पितरौ विमातुः ॥ स्यालस्तथा भिन्नपितृव्य भिन्नभ्रात्रोस्तु पुत्र्यौ च पितृष्वसाऽस्याः ॥ प्रजा इमे सप्तदशैव तेषां मृतौ विशुद्धः पुरुषो दिनेन ॥

ஸபத்னீ மாதாவினுடைய ஸஹோதரன், ஸஹோதரீ பெண் இவர்களும் இவர்களுடைய பெண், பிள்ளைகள், மைத்துனன், ஸபத்னீ மாதாவின் தாய் தந்தை, தகப்பனுடைய ஸபத்னீ மாதாவின் பிள்ளை, அவளுடைய பிள்ளை இவர்களின் பெண்கள், பின்ன பித்ருவ்யனின் ஸஹோதரீ, அவளுடைய பெண், பிள்ளை ஆக 17 பேர்கள் மரணத்தில் ப்ரதியோகியான புருஷர்களுக்கு ஒரு நாள் ஆசௌசம் என்று அறியவும்.

भ्राता विमातुः स्वसृपुत्रपुत्र्यः तेषामपत्यं पितरौ विमातुः। भिन्नः पितृव्यश्च तथैव भिन्न पितृष्वसा किं च तयोः प्रजाश्च ॥ एषां मृतौ विंशति संमितानां दिनेन शुध्येत्प्रतियोगिनीस्त्री ॥

ஸபத்னீ மாதாவின் ஸஹோதரன், ஸஹோதரீ, அவளுடைய புத்ரன், பெண், இவர்களுடைய பெண், பிள்ளைகள், ஸபத்னீ மாதாவின் தாய், தந்தை, தகப்பனுரின் ஸபத்னீ மாதாவின் பிள்ளை, அவளுடைய புத்ரன், புத்ரீ இவ்விதம் 20 பேர்கள் மரணத்தில் ப்ரதியோகியான ஸ்த்ரீகளுக்கு ஒரு நாள் தீட்டு என்று அறியவும். இது அவ்வுடைய பர்தாவுக்குக் கிடையாது.

15. अनेकाशौच संनिपाते आशौच क्रमः

அனேக ஆசௌசங்கள் சேர்ந்தால் ஆசௌச க்ரமம்.

पराशरः — अन्तरा तु दशाहस्य पुनर्मरणजन्मनी।
तावत्स्यादशुचिर्विप्रो यावत्तत्स्यादनिर्दशम् ॥

பராசரர் :— ஒருவன் பத்து நாள் ஆசௌசத்தை அனுஷ்டித்துக்கொண்டிருக்கும்பொழுது வேறு ஆசௌசம் வந்தால் முன்பு ஆரம்பித்து அனுஷ்டிக்கும் ஆசௌசத்துடன் மத்தியில் ஆரம்பித்த ஆசௌசமும் முடிந்து போகும். அது ஜனன மரணு சௌசங்கள் என்ற விபாகம் இல்லாமல் முன் பத்து நாள் தீட்டுடன் சேர்ந்து நிவிர்த்தியாகும் என்று அறியவும்.

देवलः — पुनः प्राप्तं दशाहात्प्राक् पूर्वेण सह गच्छति।
दशमेऽह्न्यापतेद्यस्य द्व्यहात्सतु विशुध्यति ॥
प्रभातेतु त्रिरात्रेण दशरात्रेष्वयं विधिः ॥

தேவலர் :— பத்து தினங்களில் ஆசௌசம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கும்பொழுது நடுவில் வந்த ஆசௌசமும் முந்திய ஆசௌசத்தோடு நிவிருத்தி ஆகும். 10வது நாளில் வந்த ஆசௌசத்தை அனுஷ்டித்து நிவிருத்தி அடைகிறது. பத்தாவது தினத்தில் இரவில் கடைசீ யாமத்தில் வந்த இரண்டாவது ஆசௌசம் பிறகு மூன்று நாள் அனுஷ்டித்து நிவிருத்தி அடைகிறது. இந்த விதியானது தசராத்ர ஆசௌசத்தைப் பற்றியது என்று அறியவும்.

अंगिराः — सूतके मृतकं चेत्स्यात् मृतकेत्वथ सूतकम् ।
तत्राधिकृत्य मृतकं शौचं कुर्यान्न सूतकम् ॥

அங்கிரர் :— ஜனன சௌசத்தின் நடுவில் மரண சௌசம் வந்தாலும் மரண சௌசத்தின் நடுவில் ஜனன சௌசம் வந்தாலும் மரண சௌசத்தை அனுசரித்து சுத்தி ஏற்படுகிறது. ஜனன சௌசத்தில் வந்த மரணசௌசம் எந்த தினத்தில் ஆரம்பித்ததோ அதிலிருந்து பத்து நாள் ஸம்பூர்ண ஆசௌசத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்று கருத்து. ஜனன சௌசம் மரண சௌசத்தோடு நிவிருத்தியாகும் என்று அறியவும்.

उशनाः — स्वल्पाशौचस्य मध्येतु दीर्घाशौचं भवेद्यदि ।
तत्पूर्वेण विशुद्धिस्स्यात् स्वकाले नैव शुध्यति ॥

அல்பமான ஆசௌசத்தில் தீர்க்கமான ஆசௌசம் சேர்ந்தால் அல்பா சௌசத்தோடு தீர்க்கமான ஆசௌசத்தின் நிவிருத்தி ஏற்படாது. தீர்க்கமான ஆசௌசத்தை பூர்ணமாக அனுஷ்டிக்கவேண்டும். பிறகு சுத்தி என்று அறியவும்.

व्यासः — त्रिरात्रमृत मध्येतु दशाहं जातकं भवेत् ।
मृताशौचेन शुद्धिस्स्यादित्याह भगवान् यमः ॥

வ்யாஸர் :— மூன்று நாள் உள்ள மரண சௌசத்தில் பத்து நாள் அனுஷ்டிக்கவேண்டிய ஜனன சௌசம் வந்தால் மரண சௌசத்தாலேயே சுத்தி ஏற்படுகிறது என்று யமன் கூறுகிறார்.

शंखः — मातर्यग्रे प्रमीतायां अशुद्धौ म्रियते पिता ।
पितुश्शेषेण शुद्धिस्स्यान्मातुः कुर्यात्तु पक्षिणीम् ॥

சங்க: :— மாதாவானவள் முதலில் இறந்து அந்த ஆசௌசத்தின் நடுவில் பிதா இறந்தால் பித்ரா சௌசத்துடன் சுத்தி ஏற்படுகிறது. பிதாவின் ஆசௌசத்தின் மத்தியில் மாதாவின் ஆசௌசம் ஸம்பவித்தால் பிதாவினுடைய ஆசௌசத்திற்குப் பிறகு பக்ஷிணீ காலம் ஆசௌசம் அனுஷ்டிக்கவேண்டும் என்று அறியவும்.

षडशीतौ — पूर्वेण वा परेणापि पित्रोश्शावे न ह्रीतरत् ।
आशौचं शुद्धिमायाति न पित्रो श्शावमन्यतः ॥

முன்பு ஏற்பட்டாலும் பின்பு ஏற்பட்டாலும் மாதா பிதாக்களின் ஆசௌசம் வேறு ஆசௌசத்துடன் நிவிர்த்தியாகாது என்று அறியவும்.

अंगिराः — दाहकस्तु दशाहान्त श्शवदाहं चरेद्यदि ।
पूर्वेणैव विशुद्धिस्स्यात् पित्रोस्तद्दिवसाद् भवेत् ॥

அங்கிரர் :— ஒருவருக்கு தஹனம் முதற்கொண்டு ஸம்ஸ்காரம் செய்தவன் பத்து நாள் தீட்டுக் காத்துக் கொண்டிருக்கும்பொழுது மத்தியில் வேறு ஒருவருக்கு தஹன

ஸமஸ்காரம் செய்தால் முன் ஆசௌசத்துடன் இந்த ஆசௌசமும் நிவிருத்தியாகும். ஆனால் மாதா பிதாக்கள் விஷயத்தில் மரண திவஸத்திலிருந்து பத்து நாள் பூர்ணமாக அனுஷ்டிக்கவேண்டும்; மற்ற ஆசௌசத்தால் இது நிவிருத்தி யாகாது.

संग्रहे — स्वाशौच कालतस्त्वेव सूतिका जनकोऽग्निदः ।
शुध्येरन्नघयोगेपि न पूर्वाशौच शेषतः ॥

ஆசௌசத்தை அனுஷ்டிக்கும்பொழுது ப்ரஸவித்த சிசுவின் தகப்பன், தஹனம் செய்தவன், இவர்களுக்கு முன் ஆசௌசத்தினுல் பின் ஆசௌசம் நிவிருத்தியாகாது. பூர்ணமாக ஆசௌசத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்று அறியவும்.

प्रजापति :— आशौचेतु समुत्पन्ने पुत्रजन्म यदा भवेत् ।
कर्तुस्तात्कालिकी शुद्धिः पूर्वाशौचेन शुद्ध्यति ॥

ப்ரஜாபதி :— வேறு ஆசௌசத்தை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும்பொழுது தனக்கு புத்ர ஜனனம் ஏற்பட்டால் ஜாதகர்மா செய்யவேண்டியிருப்பதால் உடனே சுத்தி ஏற்படுகிறது. பிறகு முன் ஆசௌசத்துடன் ஜனனு சௌசம் நிவிருத்தியாகும்.

पित्रो मृतान्तराले तु स्वभार्या चेत्प्रसूयते ।
पित्रोश्शेषेण शुद्धिस्स्यात् पत्न्याश्शुद्धिः स्वकालतः ॥

மாதா பிதா மரணு சௌசத்தின் மத்தியில் பத்னீ ப்ரஸவித்தால், பித்ரு மரணு சௌசத்துடன் ஜனனு சௌசம் நிவிருத்தியாகும், பத்னிக்கு சொல்லப்பட்ட காலத்தினுல் சுத்தி ஏற்படுகிறது.

16. अतिक्रान्ताशौचम्—காலம் கடந்த ஆசௌசம்.

मनुः — अतिक्रान्ते दशाहेतु त्रिरात्र मशुचिर्भवेत् ।
संवत्सरे व्यतीते तु स्पृष्ट्वैवापो विशुध्यति ॥

மனு :— பத்து நாளுக்குப் பிறகு மரணத்தை கேட்டால் மூன்று நாள் ஆசௌசம். ஒரு வருஷமான பிறகு கேட்டால் ஸ்னானத்தினால் சுத்தி ஏற்படுகிறது.

शंखः — अतीते दशरात्रेतु त्रिरात्रमशुचिर्भवेत् ।
तथा संवत्सरेऽतीते स्नात्वैव विशुध्यति ॥

சங்க: :— தசராத்ரா சௌசத்தைப் பத்து நாள் ஆன பிறகு கேட்டால், மூன்று நாள் ஆசௌசம். ஒரு வருஷம் ஆன பிறகு கேட்டால், ஸ்னானம் செய்தால் சுத்தி ஏற்படும்.

वृद्धवसिष्ठः —मास त्रये त्रिरात्रं स्यात्षण्मासे पक्षिणी तथा ।
अहस्तु नवमादर्वागूर्ध्वं स्नानेन शुध्यति ॥

விருத்த வசிஷ்டர் :— பத்து நாள் ஆசௌசத்தை பத்து நாளுக்குப் பிறகு மூன்று மாதம் வரையில் கேட்டால் மூன்று நாள் ஆசௌசத்தை அனுஷ்டிக்கவேண்டும். பிறகு ஆறு மாதம் வரையில் கேட்டால் பக்ஷிணீ அனுஷ்டிக்கவும். பிறகு ஒன்பது மாதம் வரையில் ஒரு நாள் ஆசௌசம் அனுஷ்டிக்கவும். பிறகு கேட்டால் ஸ்னானம் செய்யவும்.

மூன்று நாள் ஆசௌசத்தை மூன்று நாளுக்கு மேல் பத்து நாளுக்குள் கேட்டால் ஒரு நாள் ஆசௌசம் என்று அறியவும். பக்ஷிணீ தீட்டை பக்ஷிணிக்கு மேல் பத்து நாட்களுக்குள் கேட்டால் ஒரு காலம், பகலில் கேட்டால் பகல் மட்டும், இரவில் கேட்டால் இரவு மட்டும் ஆசௌசம் என்று அறியவும். ஒரு நாள் ஆசௌசத்தை பிறகு கேட்டால் ஸ்னானம் மட்டும் என்று அறியவும்.

भर्तृमरणे पत्न्याः दशाहात्परमपि दशाहमेव ।
" दशाहं पुत्रभार्ययोः " इति वचनात् ॥

பர்த்தாவின் மரணத்தைப் பத்து நாளுக்குப் பிறகு எப்பொழுது கேட்டாலும், பத்னீ பத்து நாள் ஆசௌசத்தை அனுஷ்டிக்கவும். " புத்ரன், பார்யை இரண்டுபேரும் பத்து நாள் ஆசௌசம் அனுஷ்டிக்கவேண்டும் " என்ற வசனம் இதற்குப்ரமாணமாகும்.

संग्रहे — पित्रोर्भ्रातुर्भवेन्नान्येष्वनुपेतात्ययेत्वघम् ।
पितुः स्नानं तदन्येषां न च तत्सूतकात्यये ॥

அனுபநீத மரணத்தில் மாதா பிதாக்களுக்கு அதிக்ராந்தா சௌசம் உண்டு. மற்ற ஞாதிகளுக்கு அதிக்ராந்தா சௌசம் கிடையாது. ஜனன சௌசத்தில் அதிக்ராந்தம் கிடையாது. பிதாவுக்கு மட்டும் ஸ்நானம் உண்டு என்று அறியவும்.

पराशरः — देशान्तरे मृतः कश्चित्सगोत्रश्श्रूयतेयदि ।
न त्रिरात्रमहोरात्रं सद्यः स्नात्वा शुचिर्भवेत् ॥

பராசரர் :— வேறு தேசங்களில் உள்ள ஞாதிகளின் மரணத்தைக் கேட்டால் ஒரு நாள், மூன்று நாள், என்று ஆசௌசம் கிடையாது. ஸ்நானத்தால் மட்டும் சுத்தி ஏற்படுகிறது.

बृहस्पतिः — महानद्यन्तरं यत्र गिरिर्वा व्यवधायकः ।
वाचो यत्र विभिद्यन्ते तद्देशान्तरमुच्यते ॥

பிருஹஸ்பதி :— மஹா நதி நடுவில் இருந்தாலும், மலை மத்தியத்தில் இருந்தாலும், பாஷை வேறுபட்டாலும் தேசாந்தரம் என்று கூறப்படுகிறது.

मुख्यकर्ता विदेशस्थो मातापित्रोर्मृतौ यदि ।
संवत्सरे व्यतीतेऽपि कुर्याद् प्रेतक्रियां पुनः ॥

முக்ய கர்த்தாவான புத்ரன் வேறு தேசத்திலிருந்து மாதா பிதா மரணத்தை கேட்டால் ஒரு வருஷமானாலும் ப்ரேத க்ரியை அவசியம் செய்யவேண்டும். ஒரு வருஷத்திற்குள் ஸபத்னீ மாதா மரணத்தைக் கேட்டால் உதகதானம் முதலிய ப்ரேத க்ரியை செய்யவேண்டும். வருஷத்திற்கு மேல் கேட்டால் மூன்று நாள் ஆசௌசம் அனுஷ்டிக்கவும்.

17. जननमरणसंभवे दिननिर्णयः

ஜனன மரணங்களில் நாள் நிர்ணயம்.

विज्ञानेश्वरीये - अर्धरात्रावधिः काल स्सूतकादौ विधीयते ।
रात्रिं कुर्यात्त्रिभागंतु द्वौभागौ पूर्व एवतु ॥
उत्तरांशः प्रभातेन युज्यते मृतसूतके ।
ऋतौ च सूतके शावे तृतीयांशः परान्वितः ॥

ஸூதகம் முதலியதில் இரவை பாதியாக வகுத்துக் கொண்டு, முன் பாதியில் ஸூதகாதிகள் ஏற்பட்டால் முதல் நாளை சேர்ந்தது என்றும், பின் பாதியில் ஸூதகம் முதலியது ஏற்பட்டால் மறு நாளைச் சேர்ந்தது என்றும் கல்ப்பம் தெரிவிக்கப்படுகிறது. இரவை மூன்றாக வகுத்துக்கொண்டு, முன் இரண்டு அம்சங்களில் ஸூதகம் முதலியது ஏற்பட்டால் முதல் நாளைச் சேர்ந்தது என்றும், மூன்றாவது அம்சத்தில் பின் ராத்தியில் ஸூதகம், மரணம், ரஜஸ் இவைகள் ஏற்பட்டால் மறு நாளைச் சேர்ந்தது என்றும் கூறுப்படுகிறது. ஒரு அம்சத்திற்கு பத்து நாழிகை என்று அறியவும். அதில் முன் ஸந்த்யை மூன்றே முக்கால் நாழிகையும் பின் ஸந்த்யை மூன்றே முக்கால் நாழிகையையும் விட்டு

இரவுக்கு த்ரியாமா என்று சொல்லப்படுகிறது. அதில் முன் ஸந்த்யைச் சேர்த்து 18¾ நாழிகை முதல் நாளைச் சேர்ந்தது என்று அறியவும்.

उदिते तु यदा सूर्ये नारीणां दृश्यते रजः ।
जननं वा विपत्तिर्वा यस्याहस्तस्य शर्वरी ॥
रात्रावेव समुत्पन्ने मृते रजसि सूतके ।
पूर्वमेव दिनं ग्राह्यं यावन्नाभ्युदितो रविः ॥

ஸூர்யோதயமான பிறகு ரஜஸ், ஜனனம், மரணம் இவைகள் ஸம்பவித்தாலும், அன்று இரவு ஸம்பவித்தாலும் அன்றைய தினத்தைச் சேர்ந்தது. மறுநாள் ஸூர்யோதய பர்யந்தம் என்று அறியவும். இது ஒரு கல்பம். ஆக மூன்று கல்பங்களில் எதைக் குலாசார க்ரமமாக தெரிவிக்கிறார்களோ அதை க்ரஹித்துக் கொள்ளவும்.

संपर्कमशनं पानं दशरात्रं विवर्जयेत् ।
तत्संपर्काद्भवेदेनश्शुद्धस्यापि न संशयः ॥

ஆசௌசமுள்ளவனுடன் போஜனம், பானம், இது முதலியவைகளை வர்ஜிக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஆசௌசமில்லாதவனுக்கும் அசுத்தி ஏற்படும் என்று அறியவும்.

अन्तश्शावो यदाग्रामस्तस्मिन् ग्रामे तदालये ।
नित्यं नैमित्तिकं काम्यं न कुर्यादिति शासनम् ॥

சவம் க்ராமத்தில் இருந்தாலும், வீட்டில் இருந்தாலும் நித்யம், நைமித்திகம், காம்யம் என்ற கர்மாக்களைச் செய்யக் கூடாது.

चतुश्शताधिकै र्विप्रैस्संपूर्णग्राममध्यके ।
अन्तश्शवस्य दोषस्तु नास्ति तत्र समाचरेत् ॥
ग्रामे नाराचविच्छिन्ने कुर्याद्भिन्नेऽथवापथा ॥
वीथ्यन्तरे वा मृतके हरेरर्चांसमाचरेत् ॥

நானூறுக்குமேல் ப்ராம்மணர்கள் இருக்கும் கிராமத்தில், கிராமமத்தியில் சவமிருந்தால் தோஷமில்லை. கர்மாக்கள் செய்யலாம். சந்து நடுவில் இருந்தாலும், மார்க்கத்தினுல் பிளவுபட்டு இருந்தாலும், வேறு தெருவில் சவம் இருந்தாலும் ஹரி பூஜை செய்யலாம், கர்மாக்கள் செய்யலாம்.

मुनीनां च यतीनां च परकायप्रवेशिनाम् ।
मरणं यत्र संभूतं तत्र दोषो न लिप्यते ॥

முனிகள், ஸன்யாஸிகள், யோகத்தால் வேறு சரீரம் ப்ரவேசிக்கும் ஸித்தர்கள் இவர்கள் மரணத்தில் அந்தः சவ தோஷம் கிடையாது என்று அறியவும்.

18. ஆசௌச ஸங்க்ரஹம்

1. பத்துநாள் தீட்டு :—

1. தசராத்ரஞாதியின் ஜனன மரணத்தில் பத்து நாள் தீட்டுக் காக்கவேண்டும்.

2. பிறந்து பத்து நாளுக்குப் பிறகு புருஷப்ரஜை இறந்தாலும் விவாஹமாகும் வரையில் ஸ்திரீப்ரஜை இறந்தாலும், தாயார், தகப்பனுர், ஸகோதரன், பின்ன ஸகோதரன் இவர்களுக்குப் பத்துநாள் தீட்டு உண்டு.

3. ஏழு வயதுக்குள் உபநயனம் ஆகி இருந்தாலும், ஏழு வயதுக்குமேல் உபநயனம் ஆகாமல் இருந்தாலும் ஞாதிகளுக்குப் பத்துநாள் ஆசௌசம் என்று அறியவும்.

2. புருஷர்களுக்கு மூன்றுநாள் தீட்டு.

1. மாதாமஹர் 2. மாதாமஹீ 3. மாமா 4. அம்மாமி 5. மாமனார் 6. மாமியார் 7. தாயாரின்ஸகோதரி 8. தகப்பனாரின் ஸகோதரி 9. உபநீதனான மருமான் 10. உபநீதனான தௌஹித்ரன் 11. உபநீதனான ஸமானோதகன் 12. விவாஹமான பெண் 13. விவாஹமான ஸகோதரி 14. ஜனகபிதா 15. ஜனகமாதா 16. ஸ்வீகாரம் கொடுத்த புத்ரன் 17. 24வது மாதத்திற்கு மேல் ஏழு வயது ஆரம்பத்திற்குள் உபநயனமாகாத ஞாதியினுடைய குழந்தை 18. ஏழு வயது முதல் விவாஹம் வரையில் மூன்று தலை முறைக்குட்பட்ட ஞாதியின் பெண் 19. 25வது மாதத்திற்குள் சௌளமாகிய ஞாதியின் புத்ரன், இவர்கள் மரணத்தில் மூன்று நாள் ஆசௌசம்.

ஸமானோதகருக்கு, ஏழு வயதிற்குள் உபநயனமான ஸமானோதக பாலன், உபநயனமாகாவிடினும் ஏழாவது வயது முதல் ஸமானோதக பாலன் இவர்களின் மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசம், ஸமானோதக ஜனனத்திலும் மூன்றுநாள் ஆசௌசம்.

3. புருஷர்களுக்கு பக்ஷிண்யா சௌசம் :—

1. அத்தையின் பெண் 2. அம்மானுடைய பிள்ளை, பெண் 3. மாத்ரு பகினியின் பிள்ளை, பெண். 4. ஸஹோதரியின் பெண் 5. பித்ருவ்யனின் பெண் 6. புத்ரனின் பெண் 7. பெண்ணின் பெண் 8. தௌஹித்ரன் 9. ஏழுவயதுக்குள் உபநயனமாகாத மருமான், இவர்களின் மரணத்தில் ஒன்னரை நாள் தீட்டு என்று அறியவும்.

4. புருஷர்களுக்கு ஒருநாள் ஆசௌசம் :—

1. ஸபத்னீ மாதாவின் ஸஹோதரன், ஸஹோதரி, பெண், 2. ஷை மூவரின் பெண், பிள்ளை, 3. பத்னியின் ஸஹோதரன், 4. பின்னோதர பித்ருவ்யனின் பெண், 5. பின்னோதர ப்ராதவின் பெண், 6. பிதாவின் பின்னோதர பகினீ, 7. ஷை யாரின் பெண், பிள்ளை, 8. ஸபத்னீமாதாவின் மாதா, பிதா, 9. 25வது மாதம் முதல் 6வது வயது முடியும் வரையில் விவாஹமில்லாத மூன்று தலைமுறைக்குட்பட்ட ஞாதியின் பெண், 10. ஜனகப்ராதா, 11. ஜனகஸபிண்டன், 12. பத்னீ, ஸந்ததி இல்லாவிடில் மாமனார், மாமியார், 13. ஆறு மாதத்திற்கு மேல் 25வது மாதத்திற்குள்பட்ட சௌளமாகாத ஞாதியினுடைய பாலன், இவர்களுடைய மரணத்தில் ஒரு நாள் தீட்டு.

ஸ்திரீகளுக்கு மூன்றுநாள் ஆசௌசம் :—

1. உபநீதனான ஸஹோதரன், 2. உபநீதனான மருமான், உபநீதனான பகினீ புத்ரன், 4. ஸபத்னீ மாதா இவர்கள் ரணத்தில் மூன்றுநாள் ஆசௌசம்.

ஸ்த்ரீகளுக்குப் பக்ஷிணீ ஆசௌசம் :—

1. பிதாவின் ப்ராதா, 2. மாதாவின் பகினீ, 3. மாதுலன், பிதாவின் பகினீ, 5. ஷை நால்வரின் பெண், பிள்ளை, 6. பிதா ஹர், 7. பிதாமஹீ, 8. மாதாமஹன், மாதாமஹீ, 9. ஸஹோ ரீ, 10. ஷையாரின் பெண், 11. மருமான், இவர்கள் மரணத்தில் ½ நாள் ஆசௌசம்.

7. ஸ்திரீகளுக்கு ஒரு நாள் ஆசௌசம் :—

1. ஸபத்னீ மாதாவின் புத்ரன், புத்ரீ, ஸஹோதரன், ஸஹோதரரீ, 2. ஷை நால்வரின் பெண், பிள்ளை, 3. பின்னோதர பித்ருவ்யன், 4. பின்னோதர பித்ரு பகினீ, 5. ஷையார் இருவரின் பெண், பிள்ளை, 6. ஸபத்னீமாதாவின் பிதா, மாதா, இவர்கள் மரணத்தில் ஒருநாள் ஆசௌசம்.

ஸ்திரீகளுக்குச் சொல்லப்பட்ட தீட்டு பர்த்தாவுக்குக் கிடையாது. இவைகளில் சொல்லப்பட்ட ப்ரதியோகிகள் உபநயனமாகிய புருஷரும், விவாஹமாகிய பெண்களுமாகும்.

॥ इति संक्षेप धर्मशास्त्रे आशौच प्रकरणम समाप्तम् ॥

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரத்தில் ஆசௌச தர்ம ப்ரகரணம்
முற்றிற்று

— ० —

॥ श्री हरिः ॥

॥ संक्षेपधर्मशास्त्रे श्राद्धप्रकरणम् ॥

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரத்தில் ச்ராத்த ப்ரகரணம்.

1. मुमूर्षुप्रायश्चित्तविधिः

மரணத்தை அடையப்போகிறவன், ப்ராயச்சித்தம் செய்யும் முறை.

याज्ञवल्क्यः— असामर्थ्याच्छरीरस्य वैषम्याद्देशकालयोः ।
स्नानान्येतानि तुल्यानि मन्त्रादीनि यथाबलम् ॥

யாஞ்யவல்க்யர் :— ஸ்னானம் செய்தபிறகு வைதிகமான ஸகல கர்மாக்களுக்கும் அதிகாரம் ஏற்படுகிறது. இறக்கும் சமயத்தில் வியாதி முதலிய காரணத்தாலும் தேச காலம் இடமளிக்காததாலும், ஸ்னானத்திற்கு பிரதிநிதியான கௌண ஸ்னானங்களை (மாந்த்ரம் ஆக்னேயம்) தன் சக்திக்குத் தகுந்தவாறு அனுஷ்டிக்கவேண்டும். இவைகள் ஆஹ்னிக ப்ரகரணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ऊर्ध्वपुण्ड्रधरो मर्त्यः म्रियते यत्रकुत्रचित् ।
श्वपाकोऽपि विमानस्थः ममलोके महीयते ॥

ஸ்னானம் செய்த பிறகு தன் குலாச்சாரப்படி ஊர்த்தவ புண்ட்ரம் தரித்துக் கொண்டு பிராயச்சித்தம் ஆரம்பிக்க வேண்டும். ஊர்த்தவ புண்ட்ரம் தரித்தவன் எங்கு மரண மடைந்தாலும் பதிதனாக இருந்தாலும் விஷ்ணுலோகத்தில் ப்ரகாசிப்பான் என்று ஊர்த்வ புண்ட்ரத்தின் பெருமை கூறப்படுகிறது.

भस्मरुद्राक्षधारीतु यश्चापि म्रियते यदि ।
सोऽपि रुद्रत्वमाप्नोति किं पुनर्मानुषादयः ॥

விபூதி-ருத்ராக்ஷம் தரித்தவன் யாராக இருந்தாலும் இறந்தபிறகு பரமேச்வரனுடைய ஸாரூப்யம் ஏற்படுகிறது. ஆகையால் இறக்கும்பொழுது அவைகளை தரிக்கவேண்டும். இது சாதாரண ப்ராணிக்குச் சொல்லப்பட்டது. விவேக முள்ள மனிதர்கள் தரித்துக்கொண்டால் விசேஷ புண்யம் ஏற்படும் என்பது கருத்து.

तुलसीदलसंमिश्रं अपि सर्षपमात्रकम् ।
गंगाजलं पुनात्येव कुलानामेकविंशतिम् ॥

பிறகு பகவானுடைய பாதோதகத்தை ப்ராசனம் செய்யவேண்டும். துளஸீதளத்துடன் கூடிய கங்காஜலம் ஒரு கடுகு ப்ரமாணம் சாப்பிட்டால் குலத்தின் இரு பத்தி ஒன்று தலைமுறை ஜீவர்களை பாபத்திலிருந்து காப்பாற்றுகிறது.

पराशरः — व्याधिव्यसनिनिश्रान्ते दुर्भिक्षे डामरे तथा ।
उपवासो व्रतं होमः द्विजैस्संपादितानिव ॥

பராசரர் :— பிராயச்சித்தம் முதலிய காரியங்களை தன்னால் செய்யமுடியாவிட்டால் வேறு பிராமணர்களை செய்யச் சொல்லலாம். ரோகம் அசக்தி, துர்பிக்ஷம், ராஜாக் களுடைய சண்டை முதலியதான உபத்ரவம், இந்த மாதிரி சமயத்தில் உபவாஸம் இருப்பதே வ்ரதமாகும், ஹோம மாகும். பிராமணர்களால் செய்யப்பட்டகார்யங்களும் கர்த்தா செய்ததுபோல் ஆகும் என்று அறியவும்.

ब्राह्मणाजंगमं तीर्थं तीर्थभूता हि साधवः ।
तेषां वाक्योदकेनैव शुध्यन्ति मलिना जनाः ॥

பிராமணர்கள் நடமாடும் தீர்த்தமாவார்கள், ஸாதுக் கள் புண்ய தீர்த்தங்கள். அவர்களுடைய வாக்கியமாகிற ஜலமானது பாபிகளுடைய பாபத்தை போக்கடிக்கிறது.

ब्राह्मणा यानि भाषन्ते मन्यन्ते तानि देवताः ।
सर्ववेदमयो विप्रो नतद्वचनमन्यथा ॥

பிராமணர்கள் எதை பேசுகிறார்களோ அதை தேவதைகள் அங்கீகரிக்கிறார்கள். ஏனென்றால் பிராமணன் ஸர்வ வேத ஸ்வரூபியாவான். அவனுடைய சொல் வேத வசனமாகக்கருதப்படுகிறது.

முமூர்ஷுவானவன் பூமியில் தர்ப்பத்தைப்போட்டுக் கொண்டு அதில் படுக்கவேண்டும். அந்த சமயத்தில் அவனால் எந்த க்ருச்சரங்களையும் அனுஷ்டிக்கமுடியாது. ஆகையால் பிரதிநிதியான தானங்களைச் செய்யவேண்டும். கோ தானம் முக்கியமாகச் சொல்லப்படுகிறது.

यो मृत्युकाले संप्राप्ते गां ददाति पयस्विनीम् ।
गवादर्शितमार्गेण ब्रह्मलोके महीयते ॥

எவன் மரண காலத்தில் நிறைய பால் கறக்கும் பசுவை தானம் செய்கிறானோ அவன் பசுவினால் காண்பித்த வழியில் ப்ரம்ம லோகத்தை அடைகிறான்.

संज्ञाहानौ मरणेपि सन्निहितः पुत्रादिः दद्यादिति
व्यासः "आतुरोवाथ पुत्रो वा दद्युरासन्नबान्धवाः"

மரண சமயத்தில் தனக்கு ப்ரக்ஞை தவறிவிட்டாலும், மரணம் ஸம்பவித்தாலும், கர்தாவான புத்ரன், அல்லது பந்துக்கள் மரணத்தை அடைந்தவனுடைய க்ஷேமத்தை உத்தேசித்து தானங்கள் செய்யவேண்டும் என்று வ்யாஸர் கூறுகிறார்.

महापातकयुक्तो वा युक्तोवा सर्वपातकैः ।
परंपदं प्रयात्येव महद्भिरवलोकितः ॥

மஹா பாதகங்க ளைச் செய்தவனுக இருந்தாலும் நவ
மான பாபங் ளைச் செய்தவனுக இருந்தாலும்
றான்கள் அவனை ப் பார்த்தால் பாபம் விலகிவிடும்.
கையால் மரண சமயத்தில் ஸாதுக்களின் தரிசனம்
க்யம் என்று கருத் .

यथा कथंचिद् ोविन्दे कीर्तिते वा श्रुतेपिवा ।
पापिनोऽपि ि ुद्धास्स्युः शुद्धामोक्षमवाप्नुयुः ॥

எந்தவிதத்திலா து கோவிந்த என்று சொன்னுலும்,
கட்டாலும், பாபி ள் பாபத்திலிருந்து விடுபடுவார்கள்.
ாபமில்லாத மஹா ாகள் கோவிந்த சப்தத்தைச் சொன்ஞ
ும் கேட்டாலும் மே ாக்ஷத்தை அடைவார்கள்.

शिव शिव ्व चेति व्याहरन्वै त्रिवारं त्यजति निजतनुं
यस्त्वायुषोऽ यक्षणेऽस्मिन् । भवतिभवभयानां छेदकः
पूर्वशब्दो न ्वत इतरौ द्वौ कल्पितात्मोपकारौ ॥

எவன் மரண மயத்தில் சிவ சிவ சிவ என்று மூன்று
தடவை உச்சரித்து ரீரத்தை விடுகிருனோ அவனுக்கு முதல்
சிவ சப்தமே ஸகல ாபத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தை
அளிக்கிறது. பிற சொன்ன இரண்டு சிவ நாமாக்களுக்கு
செய்ய வேண்டிய க ர்யமில்லை. பக்தர்களுக்கு சொல்வதில்
ஏற்பட்ட ஆனந்தா னுபவம்தான் மிச்சம் என்று அறியவும்.

विष्णुः — श्रावयेत्पु सूक्तानि पुण्यमन्त्राक्षराणि च ।
द्विजस्य द ्षिणेकर्णे पुत्रादिः प्राणसंशये ॥

விஷ்ணு — மர ா சமயத்தில் புத்ரன் வலது காதில் புண்ய
ஸூக்தங்களையும், ந்திரங்களையும், பகவன் நாமாக்களையும்,
கர்ண மந்திரங்களை யும் சொல்லி கேட்கச் செய்யவேண்டும்.

वसिष्ठः — पितुर्मरण काले तु पुत्रस्तु ऋणमोचनात् ।
मस्तकन्तु समादाय दक्षिणस्य तु जानुनि ।
श्रावयेत्पुण्यसूक्तानि पुण्य मन्त्राक्षराणि च ।
ततस्तु निर्गते वायौ कुशाग्रेषु विनिक्षिपेत् ॥

வசிஷ்டர்—பிதாவினுடைய மரண சமயத்தில் புத்ரன் பிதாவின் தலையைத் தன் வலது துடையில் வைத்துக் கொண்டு வலது காதில் புண்ய மந்திரங்களையும், அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷரம், ராமஷடாக்ஷரம் முதலிய மந்திரங்களையும் உச்சரித்துக்கொண்டு இருக்கவேண்டும். இது பிதாவுக்குச் செய்யும் புத்ரனுடைய காரியமாகும். சரீரத்தை விட்டு பிராணன் போன பிறகு பூமியில் குசத்தைப் பரப்பி அதில் பிதா சரீரத்தைப் போடவேண்டும்.

2. मुमूर्षोः दानविधिः

மரண காலத்தில் தானம் செய்யும் முறை.

भारते — षडशीति सहस्राणि योजनानां युधिष्ठिर । मानुषस्य च लोकस्य यमलोकस्य चान्तरम् । न तत्र वृक्षच्छाया वा न वाप्यो न च दीर्घिकाः । न ग्रामो नाश्रमोवापि नोद्यानं काननानि च न किंचिद्विश्रमस्थानं पथि तस्मिन् युधिष्ठिर ॥ कंटकाकीर्णमार्गेण तप्तवालुकपांसुना । दह्यमानास्तु गच्छन्ति नरा दान विवर्जिताः । तस्माद्दानन्तु कर्तव्यं मृतिकाले कथंचन ॥

ஹே தர்மபுத்ர, மனுஷ்ய லோகத்திற்கும் யம லோகத்திற்கும் நடுவில் 86 ஆயிரம் யோஜனை செல்ல வேண்டிய மார்கம் இருக்கிறது. ஒரு யோஜனை என்பது எட்டு அல்லது பத்து மைல்கள் கொண்டது. இதில் செல்வது கடினமானது; வெய்யில் கடுமையாக இருக்கும். மர நிழல் கிடையாது.

குளம், ஓடைகள், கிணறுகள் கிடையாது. கிராமம் இல்லை. தங்குவதற்கு வீடு முதலியதும் இல்லை. வழிகள் முட்கள், கல்கள் நிறைந்திருக்கும். கொதிக்கும் மணல். இவ்வளவு சிரமமான மார்கத்தைக் கடந்து யம லோகம் செல்லவேண்டும். ஆகையால் அதற்கு முடிந்த அளவில் தானம் செய்ய வேண்டும். இவைகளை கர்த்தாக்களான புத்ரன் முதலியவர்கள் செய்யவேண்டும். அதனால் மரணமடைந்த ஜீவர்கள் சிரமமில்லாமல் யமலோகத்தை அடைவார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

प्रचेता :—गो भूतिल हिरण्याज्य वस्त्र धान्यगुडानि च ।
रौप्यं लवणमित्याहुर्दशदानानिपंडिताः ।
एतानि दश दानानि नराणां मृत्युजन्मनोः ।
कुर्यादभ्युदयार्थं च प्रेतेऽपि हि परत्र च ॥

ப்ரசேதர்—பசு, பூமி, எள், தங்கம், நெய், வஸ்திரம், தான்யம், வெல்லம், வெள்ளி, உப்பு, இவைகள் தச தானத்தின் பதார்த்தங்கள். இவைகளை மரண காலத்திலும் ஜனன காலத்திலும் அவசியம் தானம் செய்யவேண்டும். மரண காலத்தில் செய்வது பரலோகத்தில் க்ஷேமத்தைக் கொடுக்கும். ஜனன காலத்தில் செய்வது குழந்தைக்கு ஆயுஸ் முதலிய க்ஷேமங்களைக் கொடுக்கும் என்று அறியவும்.

विद्या प्रवसतो मित्रं भार्या मित्रं गृहे सतः ।
आतुरस्यभिषङ्मित्रं दानं मित्रं मरिष्यतः ॥

வெளியூர் செல்லுகிறவனுக்கு வித்யை சிநேஹிதன், க்ருஹத்தில் இருப்பவனுக்கு பத்னீ சிநேஹிதன், வியாதி உள்ளவனுக்கு வைத்யர் சிநேஹிதன், மரணம் அடைகிறவனுக்கு தானம் சிநேஹிதன். அதாவது சிநேஹிதன் மாதிரி விசேஷமான உபகாரத்தைச் செய்து சௌக்யத்தை உண்டு பண்ணும் என்று கருத்து.

3. पर्युषित प्रायश्चित्तम्—பர்யுஷித ப்ராயச்சித்தம்.

गार्ग्यः — पंचविंशघटेः पूर्वं दिवा प्रेतस्य संस्कृतिः । दिवा वा यदि वा रात्रौ शवस्तिष्ठति कर्हिचित् । तत्पर्युषितमित्याहुः दहने तस्य कागतिः ॥ ब्राह्मणेभ्यो विधिं लब्ध्वा कृच्छ्रत्रयमथा चरेत् । पंचगव्येन संस्नाप्य पावमान्याभिमन्त्य च । जलेन स्नापयित्वा च विधिवद्दहनं चरेत् ॥ अन्यथा दहने तस्य सर्वं तन्निष्फलं भवेत् ॥

கார்க்யர்—பகலில் இறந்தால் 25 நாழிகைக்குள் தஹனம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் பர்யுஷித (பழையது ஆன) தோஷம் ஏற்படாது. 25 நாழிகைக்கு மேல் பகலில் அல்லது இரவில் ஸம்ஸ்காரம் செய்யவில்லையோனுல் சவம் பர்யுஷிதம் ஆகிவிடும். அதை தஹனம் செய்வதற்கு கர்த்தா பிராம்மணர்களிடத்தில் அனுமதியைப் பெற்றுக்கொண்டு மூன்று க்ருச்ரம் அனுஷ்டித்து பஞ்சகவ்யத்தால் சவத்திற்கு ஸ்னனம் செய்வித்து ''பவமான'' மந்திரத்தினுல் ஜபித்த ஜலத்தை ப்ரோக்ஷித்து ஸ்னனம் செய்வித்து பிறகு தஹனம் செய்யவேண்டும். இந்த மாதிரி செய்யாவிடில் காரியம் பலனற்றதாக ஆகும் என்று அறியவும்.

बोधायनः — रात्रौ यदि मृतः कश्चित् प्रमादात्कालपर्ययात् ।
नव नाडीष्वधस्ताचेद्वह्नौ तु जुहुयाच्छवम् ।
ऊर्ध्वं श्वः प्रातरेव स्यान्नरात्रौ तु कदाचन ॥

போதாயனர்—பகலில் இறந்தால் பகலில் ஸம்ஸ்காரம் செய்யவும். இரவில் இறந்தால் 9 நாழிகைக்குள் (இரவு 9 மணிக்குள்) தஹனம் செய்யவும். இரவில் 9 நாழிகைக்கு மேல் தஹனம் செய்யக்கூடாது என்பது கருத்து.

स्मृत्यन्तरे— ब्राह्मान्मुहुर्ताद्यः पूर्वं मृत पर्युषितो भवेत् ।
वैखानसोदितं कार्यं प्रायश्चित्तं विशुद्धये ॥

விடியற் காலையில் ப்ரம்ம முகூர்த்தத்திற்கு முன்பு மரணம் ஏற்பட்டு காலையில் தஹனம் செய்தால் பர்யுஷித ப்ராச்சித்தம் செய்யவேண்டும். இதற்கு வைகானஸரால் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தம் செய்யவும். ஆகையால் பகலில் மரித்தால் பகலில் தஹனம், இரவில் மரித்தால் 9 நாழிகைக்குள் தஹனம் செய்யவேண்டும். பகலில் மரித்தவனுக்கு இரவிலும், இரவில் மரித்தவனுக்கு பகலிலும் தஹனம் செய்தால் பர்யுஷித ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என்று கருத்து.

कुंभमीनस्थिते चन्द्रे मरणं यदि जायते ।
मृतस्तु सद्गतिं गच्छेत् अन्येषां अशुभं भवेत् ।

கும்ப, மீன ராசியில் சந்திரன் இருக்கும்பொழுது மரணம் ஸம்பவித்தால் மரணத்தை அடைந்தவனுக்கு ஸத்கதி ஏற்படும். மற்றவர்களுக்கும் பந்துக்களுக்கும் சிரமம் ஏற்படும். ஆகையால் அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த நக்ஷத்திரங்களில் மரணம் ஏற்பட்டால் தனிஷ்டா சாந்தி செய்யவேண்டும்.

தக்ஷிணாயனம், க்ருஷ்ணபக்ஷம், ராத்ரி, ஊர்த்வோச்சிஷ்டம், (வாந்தி முதலிய காலத்தில் மரணம் ஏற்படுவது) அதோச்சிஷ்டம் (மல மூத்ராதி காலத்தில் மரணம் ஏற்படுவது), கட்வாதி மரணம் இவைகளில் ஒவ்வொன்றுக்கும் க்ருச்ரம் தத்தம் செய்து, தக்ஷிணை கொடுத்து, ப்ராயச்சித்தம் ஹோமம் செய்து தஹனம் செய்யவேண்டும்.

कृच्छ्रप्रतिनिधिः - प्राजापत्ये तु गामेकां दद्यात्सान्तपने द्वयम् ।
पराकतप्त कृच्छ्रातिकृच्छ्रे तिस्रस्तुगाः स्मृताः ॥
अष्टौ चान्द्रायणे देयास्तिस्रो वा शक्त्यपेक्षया ॥

ப்ராஜாபத்ய க்ருச்சரத்திற்கு ஒரு பசுவும், ஸாந்தபன க்ருச்சரத்திற்கு இரண்டு பசுக்களும், பராக க்ருச்ர, தப்த க்ருச்ர, அதிக்ருச்ரங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் மூன்று பசுக்களும், சாந்திராயணத்திற்கு எட்டு பசுக்களும் அல்லது மூன்று பசுக்களும் சக்தியை அனுசரித்து ப்ரதிநிதியாக (பதிலாக) சொல்லப்பட்டிருக்கிறது.

4. कर्तृक्रमः— கர்த்தாக்களுடைய வரிசை.

चन्द्रिकायां —उपरागसहस्राणि व्यतीपातायुतानि च ।
अमालक्षंतु द्वादश्याः कलां नार्हन्ति षोडशीम् ॥
एवं विधाया द्वादश्याः तिस्रः कोटयर्धकोटयः ।
मातापित्रोर्मृताहस्यकलां नार्हन्ति षोडशीम् ॥

ஆயிரம் க்ரஹண புண்ய காலங்களும், பதினாயிரம் வ்யதீ பாதங்களும், லக்ஷம் அமாவாஸ்யா புண்ய காலங்களும் ஒரு த்வாதசியின் 16ல் ஒரு பாகமாகாது. இவ்விதமான த்வாதசியின் 3½ கோடிகள் மாதா, பிதாக்களின் மரணதினத்தின் 16ல் ஒரு பாகமாவதற்கு சமானமாக ஆகாது. ஆகையால் மாதா, பிதாக்களின் மரண திதி சிறந்த புண்ய காலம். அதில் ச்ரத்தையுடன் கர்மாக்களை செய்யவேண்டும் என்பது கருத்து.

सुमन्तुः — मातुः पितुश्च कुर्वीत मृतयोरौरसस्सुतः ।
पैतृमेधिकसंस्कारं मन्त्रपूर्वकमादतः ॥

ஸுமந்து:— மரணமடைந்த மாதா பிதாக்களுக்கு ஔரஸ புத்ரன் ஆதரவுடன் பித்ருமேத ஸம்ஸ்காரத்தை மந்திரத்துடன் செய்யவேண்டும்.

जमदग्निः — पितुः पुत्रेण कर्तव्याः पिण्डदानोदकक्रियाः ।
अशक्तोऽप्यग्निदः पुत्रः शेषमन्यस्समापयेत् ॥

ஜமதக்னி— புத்ரன், பிதாவுக்கு பிண்டதானம், உதக தானம் இவைகளைச் செய்யவேண்டும். அவன் (புத்திரனு னவன்) அசக்தனுகில் அக்னி ப்ரதானம் மாத்திரம் செய்து மற்ற காரியங்களை வேறு ஒருவனுல் செய்யச் சொல்ல வேண்டும்.

स्मृत्यन्तरे— नवश्राद्धं सपिंडत्वं श्राद्धान्यपि च षोडश ॥
एकेनैव तु कार्याणि संविभक्तधनेष्वपि ॥

ஸஹோதரர்கள் அநேகர்கள் இருந்தாலும் ஜ்யேஷ்ட புத்ரன் மட்டும் நவச்ராத்தம், ஸபிண்டீகரணம், ஷோடச ச்ராத்தங்கள் இவைகளைச் செய்யவேண்டும். சொத்துக்களை பிரித்துக் கொண்டாலும் மூத்தவனுக்குத்தான் அதிகாரம் என்று அறியவும். மூத்த புத்திரன் சமீபத்தில் இல்லா விடில் இருக்கிற ஸஹோதரர்களுக்குள் எவன் பெரியவனோ அவன் தஹனம் முதலிய காரியங்களைச் செய்யவேண்டும்.

भिन्नमातृकाणां पुत्राणां समवाये यो जन्मतो ज्येष्ठस्स एव पितुः कुर्यात् । न मातृतो ज्येष्ठः सर्वत्र जन्मज्येष्ठस्यैव ग्रहणात् ।

அநேக பத்னிகள் உள்ள க்ருஹஸ்தன் விஷயத்தில் எல்லோருக்கும் புத்ரர்கள் இருந்தால் அவர்களுக்குள் எவன் ஜ்யேஷ்டனோ அவன் பிதாவுக்கு ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். இந்த இடத்தில் மூத்தவள் இளையவள் என்பது விஷயமாகாது. ஆனுல் ஸ்திரீகளுக்கு அவளுடைய புத்ரன்

தான் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும் என்று அறியவும். இரட்டையாக பிறந்த புத்ரர்கள் விஷயத்தில் பின்பு பிறந்தவன் ஜ்யேஷ்டன், முதலில் பிறந்தவன் கநிஷ்டன் ஆவான். தத்த புத்ரன் தன் ஜனக பிதாவுக்கு (கர்மா செய்ய) புத்ர, பௌத்ர, ப்ரபௌத்ரர்கள் இல்லையேயானால் (ஜனக பிதாவுக்கு) அவசியம் பித்ருமேத ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். புத்ர ஸ்வீகாரம் செய்துகொண்ட பிறகு தனக்கு ஔரஸ புத்ரன் பிறந்தால் அவன்தான் பிதாவுக்கு முக்கிய கர்த்தாவாகக் கருதப்படுகிறான்.

वृद्धमनुः —वपनं दहनं वापि प्रेतस्यान्यस्य गर्भवान् ।
न कुर्यादुभयं तत्र कुर्यादेव पितुस्सदा ॥

மனு:— கர்ப தீக்ஷை உள்ளவன் வபனம், தஹனம் இவைகளை மற்றவர்களுக்குச் செய்யக்கூடாது. மாதா, பிதாக்களுக்கோவென்றால் அவசியம் (கர்மா) செய்ய வேண்டும்.

ज्येष्ठस्य चानपत्यस्य मातुलस्यासुतस्य च ।

கர்ப தீக்ஷை உள்ளவன் புத்ரனில்லாத தன் தமையனுக்கும், மாமாவுக்கும் க்ருத்யம் செய்யலாம்.

भृगुः — मातामहं मातुलं च तत्पत्न्यौ चानपत्यके ।
व्रती संस्कुरुते यस्तु व्रतलोपो न तस्य हि ॥

ப்ருகு—மாதா மஹன், மாதுலன், புத்ரனில்லாத மாதாமஹீ, அம்மாமி இவர்களுக்கு ப்ரம்மசாரி கர்மா செய்யலாம். அது ப்ரம்மசர்ய வ்ரதத்தைக் கெடுக்காது. மற்றவர்களுக்கு கர்மா செய்யக்கூடாது என்று அறியவும். உப நயனம் ஆகாமல் இருந்தாலும், மந்திரம் சொல்லி மாதா, பிதாக்களுக்கு கர்மா செய்யவேண்டும்.

अशक्तस्तु दाहमात्रं मन्त्रवदेव कुर्यात् । अन्यत्सर्वं प्रत्यासन्नेन कर्त्रन्तरेण दर्भप्रदानानुज्ञया कारयेत् ॥

உபநயனமாகாதவன் மந்திரம் சொல்ல சக்தி இல்லாவிடில் தஹனம் மட்டும் மந்திரம் சொல்லி செய்து விட்டு, சமீபத்தில் உள்ள மற்றவர்களால், தர்பம் கொடுத்து அனுமதித்து கர்மாக்களை செய்யச் சொல்லவேண்டும்.

दीक्षितोऽप्येकपुत्रश्चेन्मातापित्रोर्मृतिर्यदि ।
संस्कृत्य शालामागत्य यज्ञशेषं समापयेत् ॥

யாகத்தில் தீக்ஷை பெற்றுக்கொண்ட யஜமானனுடைய மாதா, பிதாக்களுக்கு மரணம் ஸம்பவித்தால். அவன் ஒரே புத்ரனாக இருந்தால், மாதா பிதாக்களுக்கு ஸம்ஸ்காரம் செய்து பிறகு யாக சாலையை அடைந்து யாகத்தின் பாக்கியை ச்ரத்தையுடன் முடிக்கவேண்டும். விவாஹமத்தியில் பிதா, மாதாக்களுடைய மரணம் நேர்ந்தால் தில பிண்ட தானம் செய்யவும், தஹனத்தையும் செய்யவும்; மற்ற ச்ரார்தங்களை, நவ ச்ராத்தங்கள் முதலியவைகளைச் செய்யக்கூடாது.

मरीचिः — पुत्रः पौत्रश्च तज्जश्च पुत्रिका पुत्र एव च । पत्नीभ्राता च तज्जश्च पिता माता स्नुषा तथा । भगिनी भागिनेयश्च सपिण्डोधनहार्यपि । पूर्वे पूर्वे विनाशे स्युरुत्तरोत्तरपिण्डदाः ।

மரீசி—இறந்தவனுக்கு க்ருத்யம் செய்ய கர்த்ருக்ரமம் சொல்லப்படுகிறது. புத்ரன், பௌத்ரன், அவனுடைய புத்ரன் (ப்ரபௌத்ரன்), தௌஹித்ரன் (பெண்ணுடைய பிள்ளை) பத்னீ ஸஹோதரன், ஸஹோதரனின் புத்ரன், பிதா, மாதா, நாட்டுப் பெண், ஸஹோதரீ, ஸஹோதரீ புத்ரன் (மருமான்), தாயாதி, பணத்தைப் பெறுகிறவன், இவர்கள்

கர்த்தாக்கள். முந்தியவன் இல்லாவிடில் பிந்தியவன் அதிகாரியாவான் என்று அறியவும். புத்ரிகாபுத்ரன் என்பது த்வ்யாமுஷ்யாயணன் என்று கூடச் சொல்லப்படுகிறது. அதாவது, பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கும் பொழுது இவருக்குப் பிறக்கும் பிள்ளை எனக்கும் தர்ம காரியங்களுக்கு புத்ரன் மாதிரி ஸம்பந்தம் உண்டு என்று ஸங்கல்பம் செய்து கொடுப்பதாகும். இந்த விஷயம் கலியிம் ப்ரசாரம் இல்லை. ஆகையால் தௌஹித்ரனை புத்ரிகா புத்ரன் என்று க்ரஹிப்பது சிலாக்கியமாகும். "த்வ்யாமுஷ்யாணனுக்கு" இரண்டு கோத்ரமும் உண்டு என்று அறியவும்.

मनुः — पुत्रदौहित्रयोर्लोके विशेषो नास्ति धर्मतः । दौहित्रोह्यखिलं रिक्थं अपुत्रस्य पितुर्हरेत् । स एव दद्याद् द्वौपिण्डौ पित्रे मातामहाय च ॥

மனு—லோகத்திம் புத்ரனுக்கும் தௌஹித்ரனுக்கும் பேதமில்லை. ஆகையால் புத்ரன் இல்லாத மாதா மஹனுடைய சொத்துக்கு அதிகாரியாகிருன். ஆகையால் தௌஹித்ரன் பிதாவுக்கும் மாதா மஹனுக்கும் கர்மாக்களுக்கு முக்கிய அதிகாரியாகக் கருதவேண்டும் என்று மனு சொல்லுகிருர்.

धनग्रहणाभावेपि दौहित्रोऽधिकारी ।

மாதா மஹனுக்கு சொத்து இல்லாவிட்டாலும் தௌஹித்ரன் கர்மாக்களை அவசியம் செய்யவேண்டும்.

दौहित्रापेक्षया पत्न्याः प्राथम्यमाह संग्रहकारः
" पुत्रः कुर्यात् पितुः श्राद्धे पत्नीच तदसन्निधौ । "
धानहार्यथ दौहित्रस्ततो भ्राता च तत्सुतः ॥

தௌஹித்ரனைக் காட்டிலும் பத்னிக்கு ஸம்ஸ்காரம் செய்யும் விஷயத்தில் ப்ரதான்யம் சொல்லப்படுகிறது. பிதாவுக்கு புத்ரன் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். அவனில்லாத பக்ஷத்தில் பத்னி ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். பிறகு தௌஹித்ரன், பிறகு ஸஹோதரன், பிறகு ஸஹோதரனின் பிள்ளை என்று ஸங்கிரஹத்தில் கர்த்ருக்ரமம் சொல்லப்படுகிறது.

अप्रजायां अतीतायां भर्तुरेव तदिष्यते ।
पतिरेव क्रियां कुर्यादपुत्राया मृतस्त्रियाः ॥

புத்ரனில்லாத பத்னி இறந்தால் கணவன் பத்னிக்கு க்ருத்யம் செய்யவேண்டும். தௌத்ஹித்ரன் இருந்தால் அவனை செய்யச் சொல்லலாம். ஒருவனுக்கு அநேக பத்னிகள் இருந்தால் ஒரு பத்னிக்கு புத்ரன் இருந்தால் அவனே எல்லா பத்னிகளுக்கும் புத்ரனாக ஆகிறான். அவன் எல்லோருக்கும் ஸம்ஸ்காரம் செய்யலாம் என்று அறியவும்.

5. अग्निनिर्णयः — அக்னி நிர்ணயம்

वृद्धमनुः — आहिताग्निर्यथान्यायं दग्धव्यस्त्रिभिरग्निभिः ।
अनाहिताग्नि रेकेन लौकिकेनेतरेजनाः ॥

ஆஹிதாக்னியை மூன்று அக்னிகளாலும், அநாஹிதாக்னியை ஔபாஸனாக்னியாலும், லௌகிகாக்னியினால் மற்றவர்களையும் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும்.

वसिष्ठः — अनाहिताग्निर्यः पूर्वं पत्नीभ्यः प्रमितिं गतः ।
औपासनाग्निना तस्य संस्कारः पैतृमेधिकः ।

வஸிஷ்டர் :— பத்னீகளுக்கு முன்பு இறந்த அனாஹிதாக்னியான க்ருஹஸ்தனுக்கு ஔபாஸனாக்னியினால் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும்.

पश्चान्मृतस्य कुर्वन्ति केचिदुत्तपनाग्निना ।
पश्चान्मृतानां पत्नीनां पतिवद्धि संग्रहः ॥

பத்னி இறந்தபின் இறந்த க்ருஹஸ்தனுக்கு உத்தபனுக்னியினுல் ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். பதிக்குப் பிறகு இறந்த பத்தினிக்கும் பதியைப்போல் உத்தபனுக்னியில் ஸம்ஸ்காரம் செய்யவும். பர்த்தா இறந்து தஹனமாகிய பின் அஸ்தி ஸஞ்சயனத்திற்கு முன்பு பத்னி இறந்தால் பர்த்தாவினுடைய சிதையில் அக்னி அணையாமல் இருக்குமேயாகுல் அதில் பத்னியையும் தஹனம் செய்யவும். அக்னி அணைந்தால் தனி சிதை ஏற்பாடு செய்யவேண்டும்.

जमदग्निः — दर्भमुष्टिं प्रदीप्याग्नौ लौकिके तत्रचापरम् ।
तत्राप्यग्नि स्तृतीयस्थो वह्निरुत्तपनःस्मृतः ।
कपालमग्नौ निक्षिप्य तमादाय तुषेक्षिपेत् ।
तुषेण दर्भसंभूतः कपालज इति स्मृतः ॥

ஜமதக்னி :— லௌகிகாக்னியில் தர்ப்ப முஷ்டியைக் கொளுத்தி, அதில் மற்ருெரு தர்ப்ப முஷ்டியைக் கொளுத்தி, அதில் மற்ருெரு தர்ப்ப முஷ்டியைக் கொளுத்திஞல் மூன்ருவது அக்னி உத்தபனம் எனப்படுகிறது. கபாலத்தை அக்னியில் வைத்து காய்ச்சி அதை உமியின் மேல் வைத்து அந்த உமியினுல் தர்ப்பத்தில் உண்டான அக்னி கபாலக்னி எனக் கருதப்படுகிறது.

कपालोत्थः कपालाग्निस्तुषाग्निस्तु तुषोद्भवः ।
दर्भमुष्टि तृतीयोत्थः भवेदुत्तपनाह्वयः ।

கபாலத்தில் உண்டானது கபாலாக்னி என்றும், துஷத்தில் (உமியில்) உண்டானது துஷாக்னி என்றும், மூன்ருவது தர்ப முஷ்டியில் க்ரஹிக்கப்பட்ட அக்னியானது உத்தபனுக்னி என்றும் சொல்லப்படுகிறது. விதுரன், விதவை

இவர்களுக்கும், உத்தபனுக்னியினுல் ஸம்ஸ்காரம் செய்ய வும். ப்ரம்மசாரிக்குக் கபாலாக்னியினுல் ஸம்ஸ்காரம் செய்யவும். அனுபநீதன், கன்னிகை இவர்களுக்கு துஷாக்னி யினுல் ஸம்ஸ்காரம் செய்யவும். கணவன் ஸன்யாஸம் செய்துகொண்ட பிறகு, கணவனுக்கு முன் பத்னீ இறந்தால் புத்ரன் ஔபாஸனுக்னியினுல் தஹனம் செய்யவேண்டும்.

अंगिराः — स्वसूत्रेऽविद्यमाने तु परसूत्रेण वर्तते ।
बोधायनमतं कृत्वा स्वसूत्र फलभाग् भवेत् ॥

அங்கீரர் :— தன்னுடைய ஸூத்ரத்தில் கர்மா செய்ய முடியாவிடில், வேறு ஸூத்ரத்தால் கர்மாவை செய்யலாம். போதாயன ஸூத்ரத்தால் கர்மாவை அனுஷ்டித்தால் ஸ்வ ஸூத்ரத்தால் அனுஷ்டித்த பலன் கிடைக்கும்.

6. उपवीतादि नियमाः உபவீதமாக இருக்கவேண்டியது முதலிய நியமங்கள்

प्रणायामे नमस्कारे स्नाने चैव प्रदक्षिणे ।
पैतृके प्रेतकृत्येपि ह्युपवीतं विधीयते ॥

ஸ்னானம், ஆசமனம், ப்ராணுயாமம், நமஸ்காரம், ப்ரதக்ஷிணம் முதலியவைகளில், பித்ரு காரியங்களிலும்கூட உபவீதமாக பூணூலை தரித்துக்கொண்டு செய்யவேண்டும்.

भारद्वाजः — कर्मावसाने कर्मादौ मृतावाचमनं पुनः ।
कुर्यात् स्वकर्म सिध्यर्थं सर्वदा सर्वकर्मसु ।
ततोऽभ्यन्तरशुध्यर्थं प्रणायामान् समाचरेत् ॥

பாரத்வாஜர் :— ப்ரேத கர்மாவினுடைய ஆரம்பத்தி லும் முடிவிலும் ஆசமனம் செய்யவேண்டும். எல்லா

கர்மாக்களிலும்கூட கர்மா ஸபலமாவதற்கும் அவசியம் ஆசமனம் செய்ய வேண்டும். ஆந்த்ர சுத்யர்த்தம் ப்ராணா யாமங்கள் செய்யவேண்டும்.

प्राचीनावीतिनाकार्यं प्रेतकर्म च पैतृकम् ।
निवीतिनो वहेयुस्ते ज्ञातिनोऽन्येच वाहकाः ॥

ப்ரேத கர்மாவிலும், பித்ரு ச்ராத்தம் முதலிய காரியங்களிலும் பூணலை இடமாக (ப்ராசீனாவீதி) தரித்துக்கொள்ளவும். பிணங்களை வஹிக்கும்பொழுது பூணலை மாலையாக (நிவீதீ) தரித்துக்கொள்ளவேண்டும். இது சவத்தைத் தூக்கிறவர்களுக்கு சொல்லப்பட்ட நியமமாகும்.

आवाहनेऽर्घ्यं संकल्पे पिण्डदाने तिलोदके।
अक्षय्यासनयोः पाद्ये गोत्रं नामचकीर्तयेत् ॥

ஆவாஹனம், அர்க்யம், ஸங்கல்பம், பிண்டதானம், திலோதக தானம், அக்ஷயம், ஆஸனம், பாத்யம், இந்த காரியங்களில் அவசியம் நாம கோத்ரங்களைச் சொல்லவும்.

7. प्रेतनिर्हरण प्रकारः ப்ரேதத்தை எடுத்துச் செல்லும் முறை

मनुः— बह्वृचः खण्डवस्त्रेण शवं प्रच्छादयेन्नरः ।
अखण्डितेन वस्त्रेण यजुश्शाखी शवं तथा ॥

மனு:— ருக்வேதியானவன் துண்டித்த வஸ்த்திரத்தினுல் சவத்தை மூடவேண்டும். யஜுர் வேதியானவன் துண்டிக்காத வஸ்திரத்திஞல் சவத்தை மூட வேண்டும்.

प्रचेताः— स्नानं प्रेतस्य पुत्राद्यैः वस्त्राद्यैः पूजनं ततः ।
प्रेतं दहेच्छुभैर्गन्धैश्चर्चितं स्रग्विभूषितम् ॥

ப்ரசேதர்:— ப்ரேதத்தை புத்ரன் ஸ்னானம் செய்வித்து, வஸ்திரம் முதலியவைகளால் பூஜித்து, சந்தனம் பூசி, மாலைகளால் அலங்கரிக்கவும். ஆஹிதாக்னியாக இருந்தால் ப்ரேதத்திற்கு க்ஷௌரம் செய்ய வேண்டும். அநாஹிதாக்னியான சவத்திற்கு க்ஷௌரம் கிடையாது.

ஸிஷ்ட: — औदुंबर्यामथासन्द्यां वहेदूर्ध्वमुखं शवम् ।
नग्रामाभिमुखं नाधो नयेयुर्याम्यशीर्षकम् ॥

வஸிஷ்டர்—அத்திக் கட்டையாலாகிய ஆஸந்தியில் மேல்நோக்கிய முகமாக சவத்தை வஹிக்கவும், க்ராமாபிமுகமாயும், கீழ்நோக்கியதுமாய் வஹிக்கக்கூடாது. தெற்கில் ஶிரஸ்ஸுள்ளதாய் வஹிக்கவும்.

वृद्धाः प्रेतस्य पुरतः स्त्रियो बालाश्च पृष्ठतः ।
अधः कृतोत्तरीयास्स्युः प्रविमुक्त शिरोरुहाः ॥
गच्छेयुर्बान्धवाः पश्चान्नाग्नेः प्रेतस्य चान्तरा ॥

வயது முதிர்ந்தவர்கள் ப்ரேதத்தினுடைய முன்பு செல்லவேண்டும், ஸ்திரீகளும் சிறுவர்களும் பின் செல்லவேண்டும். எல்லோரும் உத்தரீயத்தை கீழே தரித்துக்கொண்டு தலைமயிரை விரித்துக்கொண்டவர்களாக பந்துக்கள் பின் செல்லவேண்டும். அக்னிக்கும் ப்ரேதத்திற்கும் நடுவில் போகக்கூடாது.

पितृमेधसारे - अग्रेऽग्निमथ संभारांस्तिलस्तण्डुलांश्चरुं पलाश शाखां (?)ण्यशकलानाज्यंपात्राणि दर्भाश्मसिकताश्च प्रस्थाप्याथ प्रेतं हरेयुर्न-ग्रामाभिमुखं प्रेतं निर्हरेयुः ॥

முதலில் அக்னி, பிறகு ஸம்பாரங்கள், எள், அரிசி, சரு பலாச சாகை, ஹிரண்ய சகலங்கள், நெய் பாத்ரங்கள், கல் மணல், இவைகளை அனுப்பி, பிறகு ப்ரேதத்தை எடுத்துச் செல்லவும். க்ராமத்தை நோக்கியதாக ப்ரேதத்தை எடுத்துச் செல்லக் கூடாது.

---

8. दहनप्रकारः தஹனம் செய்யும் முறை.

व्याघ्रपादः — नाधोमुखं ननग्नं च दहेरन्मलदूषितम् ।
अयज्ञीयसमिद्भिश्च चण्डाल पतिताहृतैः ॥
कृमि कीटादिदुष्टैश्च न दहेत्तु चिरन्तनैः ।
वस्त्रं परित्यजेदर्धं अर्धंतु परिधापयेत् ॥

வ்யாக்ரபாதர்—கீழ்நோக்கிய முகத்துடனும், வஸ்திரமில்லாமலும், அழுக்குடன் கூடியதாயும், சவத்தை தஹிக்கக்கூடாது. யாகத்திற்கு அர்ஹமில்லாதவையும், பதிதர்களால் கொண்டு வரப்பட்டதாயும், பூச்சி, புழு, முதலியதால் கெடுக்கப்பட்டதாயும், வெகு நாளாகி மக்கிப்போனதாயும் உள்ள கட்டைகளால் தஹனம் செய்யக்கூடாது. சவத்தின் பாதி வஸ்த்திரத்தை எரித்துவிட்டு பாதி வஸ்த்திரத்தை சவத்திற்குக் கட்டவேண்டும்.

आपस्तम्बः — अथैनं चितावुपर्युह्यत्यथास्य प्राणायतनेषु ।
हिरण्यशकलान् प्रत्यस्यत्याज्यबिन्दून् वा ॥

ஆபஸ்தம்பர்—பிறகு சவத்தை சிதையின் மேல்வைக்கவும். இந்திரியஸ்தானங்களில் ஸ்வர்ணத்துண்டுகளையாவது ஆஜ்ய சொட்டுக்களையாவது சேர்க்க வேண்டும்.

बोधायनः — दध्याज्यतिलतण्डुलान् प्रेतस्य आस्येतु निक्षिपेत् ॥

போதாயனர்—தயிர், நெய், எள், அரிசி இவைகளை ப்ரேதத்தின் வாயில் போடவேண்டும்.

वसिष्ठः — अग्निक्षेपोनाधिशवं श्रुतावाहुतिदर्शनात् ।
आहुत्युपरि विक्षेपात्तत्कर्मविफलं भवेत् ॥

வஸிஷ்டர்—சவத்தின்மேல் அக்னியைப் போடக் கூடாது. வேதத்தில் சவத்தை ஆஹுதி த்ரவ்யமாய் சொல்லியிருப்பதால் ஆஹுதி த்ரவ்யத்தின்மேல் அக்னியை போடுவதானால் அந்த கர்மா பலனற்றதாகும். ஆகையால் சிதையில் நேராக அக்னியைப் போடவேண்டும். உபஸ்தான மந்திரம் சொல்லி பிறகு பாக்கி உள்ள அக்னியை சிதையில் போடவும்.

सर्वत एव सहसा प्रज्वलयेत् ।
ब्रह्मलोकमजैषीदित्येनं जानीयादिति ॥

சிதையை எல்லாப் புறங்களிலும் கொளுத்தவும். ப்ரேதன் ப்ரம்ம லோகத்தை ஜயித்தான் என்று அறியவும்.

वस्त्रं संशोधयेदादौ ततः स्नानं समाचरेत् ।
सचेलस्तु पुनः स्नात्वा शुचिः प्रयतमानसः ॥

சவத்தை தஹனம் செய்தபிறகு வஸ்த்திரத்தை சோதனம் செய்து கொண்டு ஸ்னானம் செய்யவும், பிறகு ஸசேல ஸ்னானம் செய்து சுத்தனாகிறான். சுத்தமனதுள்ளவனாக ஆகிறான் என்பது கருத்து.

ச்மசானத்திற்குப் போகும்பொழுது கனிஷ்டன் முன்பு செல்லவேண்டும். க்ருஹத்திற்கு வரும்பொழுது மூத்தவன் முன்பு செல்லவேண்டும்.

उशनाः — अनुगम्यमृतं प्रेतं ज्ञातीनप्यनुसृत्यच ।
स्नात्वा घृतं च भक्षित्वा पुनः स्नानं समाचरेत् ॥

உசானர்—இறந்தவனை பின் தொடர்ந்து சென்றாலும் க்ஞாதிகளை அனுசரித்தாலும், ஸ்னானம் செய்து நெய் சாப்பிட்டு மறுபடியும் ஸ்னானம் செய்யவேண்டும். நெய் கிடைக்காவிடில் பத்து தடவை காயத்ரீ உச்சரித்து ஜலம் சாப்பிடவும். ஒரு நாள் ஜப ஹோமங்களைச் செய்யக்கூடாது.

9. वपनविधिः க்ஷௌரம் செய்து கொள்ளும் முறை

अकृत्वा वपनं मूढः प्रेतकर्म प्रवर्तते ।
उदकं पिंडदानं च श्राद्धं चैव हि निष्फलम् ॥

வபனம் செய்துகொள்ளாமல் ப்ரேத கர்மாவை செய்யக்கூடாது. உதக தானம், பிண்ட தானம், ச்ராத்தம் இவைகளையும் வபனம் செய்து கொள்ளாமல் செய்தால் நிஷ்பலமாகும் என்று அறியவும்.

वपनं दहनात्पूर्वं कुर्याच्चेत्पितृ घातुकः ।
तस्मात्सर्वप्रयत्नेन वपनं दहनात्परम् ॥

தஹனம் செய்வதற்கு முன்பு க்ஷௌரம் செய்துகொண்டால் பித்ருக்களை ஹிம்ஸித்தவனுவான். ஆகையால் சவத்தை தஹனம் செய்துவிட்டுப் பிறகு வபனம் செய்துகொள்ளவேண்டும். தஹனம் செய்த கர்த்தாவுக்கு உடனே

வபனம் விதிக்கப்பட்டிருக்கிறது. க்ஞாதிகளுக்குப் பத்தாவது நாளில் சுத்யர்த்தமான வபனம் உண்டு என்று அறியவும்.

संग्रहे — भ्राता वा भ्रातृपुत्रोवा सपिण्डश्शिष्यएववा ।
कनिष्ठो दहनं कुर्वन् केशश्मश्रूणिवापयेत् ॥
रात्रावपि च दग्धानां कार्या चैवोदकक्रिया ।
वपनं नेष्यते रात्रौ श्वस्तदा वपनक्रिया ॥

ப்ராதாவாயினும், ப்ராத்ரு புத்ரனாயினும், ஸபிண்டனாயினும், சிஷ்யனாயிலும், வயதில் சிறியவன் தஹனம் செய்தால் அவசியம் வபனம் செய்து கொள்ளவேண்டும். ராத்திரியில் தஹனம் ஸம்பவித்தால் உதக தானம் அப்பொழுதே செய்துவிட்டு மறுநாள் வபனம் செய்து கொள்ளவும். ராத்ரியில் வபனம் செய்துகொள்ளக்கூடாது என்று அறியவும்.

स्मृत्यन्तरे — शुक्रवारे च रात्रौ च शावे च दशमेदिने ॥
रात्रिदाहे तदा कुर्यात् क्षौरं पिण्डोदकक्रियाम् ।
मातापित्रोरथान्येषां श्वोभूते वपनं भवेत् ॥

மாதா, பிதா ம்ருதி விஷயத்தில் வெள்ளிக் கிழமையாக இருந்தாலும், பத்தாவது நாளிலும், ராத்ரியில் தஹனம் ஏற்பட்டாலும், அக்காலத்திலேயே வபனம், பிண்டோதக தானம் இவைகளைச் செய்யவேண்டும். மற்றவர்கள் விஷயத்தில் மறுநாள் வபனம் செய்து கொள்ளவும். நிஷேதங்கள் மாதா, பிதா, ஸம்ஸ்காரத்தில் தடையாக இராது என்று அறியவும். மாதா, பிதாக்களின் விஷயத்திலும் இரவில் இரண்டு யாமங்களுக்குப் பிறகு வபனம் கூடாது, என்பது சாஸ்திரம் கூறுகிறது. ஆகையால் ராத்ரியில் வபனம்

இரண்டு யாமங்களுச்குள் புத்ரனுக்கு உண்டு என்று கருத்து. இறந்தவன் சிறியவனுக இருந்தால் வயதில் பெரியவர்களான க்ஞாதிக்கு வபனம் கிடையாது.

मातामहपितृव्याणां मातुलाग्रजयो मृतौ ।
श्वशुराचार्ययोरेषां पत्नीनां च पितृष्वसुः ।
मातृष्वसुर्भगिन्याश्च गर्भवानपि वापयेत् ॥

மாதாமஹன், மாதாமஹீ, பித்ருவ்யன், மாதுலன், ஜ்யேஷ்டன். மாமனுர், ஆசார்யன் இவர்களின் பத்னீ, பித்ரு பகினீ, மாத்ரு பகினீ, பகினீ இவர்களுக்கு ஸம்ஸ்காரம் செய்தால் செய்கிற கர்த்தா கர்பினீ பதியானுலும், க்ஷௌரம் உண்டு. கர்த்தாவா இல்லாவிடில் இவர்கள் மரணத்தில் கர்பினீ பதிக்கு வபனம் கிடையாது என்று அறியவும். வயதான க்ஞாதிகள், மாமனுர், மாமியார், ஜ்யேஷ்ட பகினீ, அவளுடைய பர்த்தா, இவர்களின் மரணத்தில் வபனம் உண்டு. பத்னீ முன்பு இறந்தாலும், ஸந்ததி இல்லாவிட்டாலும் மாமனுர் மாமியாரின் விஷயத்தில் ஒரு நாள் ஆசௌசம், வபனம் கிடையாது.

தசம தினத்தில் சுக்ர வாரமாக இருந்தால் க்ஞாதிகள் ஒன்பதாவது தினத்தில் க்ஷௌரம் செய்துகொள்ள வேண்டும். புத்ரனுக்கு சுக்ர வாரம் தோஷமாகாது.

द्वादशाहे यदा पित्रोस्सपिण्डीकरणं भवेत् ।
तत्रक्षौरं न कर्तव्यं त्रिपक्षादिषु कारयेत् ॥

மாதா, பிதாக்களுக்கு 12வது நாளில் ஸபிண்டீகரணம் செய்தால் வபனம் செய்துகொள்ளவேண்டாம். த்ரிபக்ஷம் முதலிய காலங்களில் ஸபிண்டீகரணம் செய்ய நேர்ந்தால் வபனம் செய்துகொள்ளவேண்டும்.

षष्ठ्यष्टमी प्रतिपदस्तिथयश्च रिक्ता
वर्ज्याश्शशांक गुरुसोमजभार्गवाणाम् ।
वारांशकोदय विलोकनमिष्टमाहुः
क्षौरेतु कर्मणि न शुक्रमुशन्ति शावे ॥

க்ஷௌரத்தில் ஷஷ்டீ, அஷ்டமி, ப்ரதமை, ரிக்த திதிகள் (சதுர்த்தீ, நவமி, சதுர்தசீ) இவைகளை வர்ஜிக்க வேண்டும். சந்திரன், குரு, புதன், சுக்ரன், இவர்களின் வாரம், அம்சம், உதயம், த்ருஷ்டி, இவைகளும் க்ஷௌரத்திற்கு உகந்தன. சவதீட்டு க்ஷௌரம் வெள்ளிக்கிழமையில் செய்துகொள்ளக் கூடாது

10. दशमदिनपर्यन्तकर्तव्यानि பத்தாவது நாள் முடிய செய்ய வேண்டிய காரியங்கள்.

खण्डदर्शे — सोदकवाससो ग्रामंप्रविश्य नग्नप्रच्छादनार्थं कांस्यपात्रं वस्त्रं घृतं तण्डुलं पूर्णपात्रं ब्राह्मणाय देयम् ॥

ஈர வஸ்த்திரத்துடன் கிராமத்தை அடைந்து நக்ன ப்ரச்சாதன ச்ராத்தத்திற்கு வெண்கலப் பாத்திரம், வஸ்த்திரம், நெய், அரிசி நிரம்பிய பாத்திரம் இவைகளை ப்ராம்மணனுக்குக் கொடுக்கவும்.

नवंवासस्तिलान् दर्भान् कुंभमिति संभृत्य तीर्थं गत्वा स्नात्वा तीरकृते कुण्डे कर्ता संकल्प्य प्रेतमावाह्य "आयाहिप्रेत" इति शिलां स्थापयेत् ।

புது வஸ்த்திரம், எள், தர்ப்பம், குடம், இவைகளை எடுத்துக்கொண்டு சென்று தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து தீர குண்டத்தில் மந்திரம் சொல்லி பாஷாணங்களில் ப்ரே

தத்தை ஆவாஹணம் செய்து, பிறகு வாஸோதகம் மூன்று, திலோதகம் மூன்று செய்து, பிறகு வீட்டில் பாஷாண ஸ்தாபனம் செய்து வாஸோதகம் மூன்று செய்து பிறகு பிண்டம், பலி இவைகளைக் கொடுக்கவேண்டும்.

विष्णुः — यावदाशौचं तावत् प्रेतस्य उदकं पिंडं च दद्युः ॥

விஷ்ணு—ஆசௌசம் உள்ள வரையில் ப்ரேதத்திற்கு உதக தானம், பிண்ட தானம் இவைகளைச் செய்யவேண்டும். திலோதகத்தை தினமும் ஞாதிகளும் கர்த்தாவும், முதல் நாளில் மூன்று, இரண்டாவது நாளில் நான்கு, மூன்றாவது நாள் ஐந்து இந்த மாதிரி பத்து தினத்தில் ஏகோத்தர வ்ருத்தியாக 75 திலோதக தானம் செய்யவேண்டும். வாஸோதகத்தில் வ்ருத்தி கிடையாது. தினம் மூன்று தடவை கொடுக்கவேண்டும். வேஷ்டியை மூன்றாக மடித்துப் பிழியவேண்டும்.

प्रचेताः — दक्षिणाग्राश्च दर्भास्स्युस्सचवै दक्षिणामुखः ।
द्वारदेशे प्रदातव्यो न देवा यतने क्वचित् ।
वाग्यतः प्रयतश्चैव सन्तिष्ठेत्पिण्डसन्निधौ ॥
ततोऽवशिष्टं पिण्डस्य नद्यांतु प्रक्षिपेच्चतत् ॥

ப்ரசேதர்—தர்ப்பங்களை தெற்கு நுணியாகப் போட்டுக் கொண்டு தானும் தெற்கு முகமாக இருந்து வாயிற்படியின் ப்ரதேசத்தில் பிண்டத்தைக் கொடுக்கவும். பிண்ட ஸந்நிதியில் மௌனியாகவும், சுத்தனாகவும் இருக்கவும், பிண்டத்தின் மீதியான அன்னத்தை நதியில் போடவேண்டும்.

स्मृत्यन्तरे— कपित्थ बिल्ववच्चाद्धे पिंडदद्याच्च पार्वणे ।
धात्रीफल प्रमाणेन गयाश्राद्धे महालये ॥

नालिकेर प्रमाणेन एकोद्दिष्टे सपिण्डने ।
अन्यश्राद्धेषु सर्वेषु कुक्कुटाण्ड प्रमाणतः ॥

ஆப்திகத்திலும், பார்வணத்திலும், விளாங்கனி, பில்வப்பழம் அளவு உள்ளதாயும், கயா ச்ராத்தத்திலும், மஹாளயத்திலும், நெல்லிக்கனி அளவு உள்ளதாயும், ஏகோத்திஷ்டத்திலும், ஸபிண்டீகரணத்திலும், தேங்காய் அளவு உள்ளதாயும், மற்ற எல்லா ச்ராத்தங்களிலும் கோழி முட்டை அளவு உள்ளதாயும் பிண்டங்கள் இருக்க வேண்டும் என்று அறியவும்.

वस्त्रपाषाणकुंभानां स्थाल्याः कर्तुर्विपर्यये ।
पूर्वदत्तोदकं कुर्यात्पुनरित्याह देवलः ॥

வஸ்த்திரம், பாஷாணம், ஜலங்கொண்டு வரும் குடம். சமைக்கும் பாத்திரம். கர்த்தா இவைகளுள் ஒன்று மாறினும் முன்கொடுக்கப்பட்ட உதகாஞ்சலிகளை மறுபடி கொடுக்கவேண்டும் என்று தேவல மஹர்ஷியால் சொல்லப் படுகிறது.

स्थापितं प्रेतपाषाणं आदशाहान्नचालयेत् ॥

ஆவாஹணம் செய்து ஸ்தாபிக்கப்பட்ட பாஷாணத்தை பத்து நாள் பர்யந்தம் அசைக்கக்கூடாது. சிலை நஷ்டமாகி விட்டால் வேறு பாஷாணத்தை ஸ்தாபித்து முன் கொடுக்கப்பட்ட உதகாஞ்சலிகளை மறுபடியும் கொடுக்கவும். பாஷாணம் நகர்ந்தால் அதைத் தொட்டுகொண்டு மூன்று தடவை ப்ராணாயாமம் செய்யவேண்டும்.

अथैकोत्तरवृद्धि श्राद्धं पूर्वोक्तं दद्यात् ।
यस्मिन् दिने यावन्ति उदकांजलि दाननि ।
तावन्ति श्राद्धन्यामरूपेण प्रत्यहं देयानि ॥

ஏகோத்தர வ்ருத்தி ச்ராத்தம் என்பது எந்த தினத்தில் எவ்வளவு உதக தானங்கள் செய்யப்படுகிறதோ, அவ்வளவு ச்ராத்தம் ஆம ரூபத்தினுல் செய்ய வேண்டும்.

प्रथमेऽह्नि तृतीयेऽह्नि पंचमे सप्तमे तथा ।
नवमैकादशे चैव षण्णवश्राद्धमुच्यते ॥

நவச்ரார்தங்களை 1, 3, 5, 7, 9, 11 இந்த ஒற்றைப்படை நாட்களில் செய்யவேண்டும். ஆக ஆறு நவ ச்ராத்தங்கள் செய்யப்படுகிறது. இந்த நவ ச்ராத்தங்கள் சொன்ன தினத்தில் செய்யமுடியாவிட்டால் பதினேருவது நாளில் அவசியம் செய்யவேண்டும்.

आपस्तम्बः— अपरेद्युस्तृतीयस्यां पंचम्यां सप्तम्यां
वाऽस्थीनि संचिन्वन्ति ॥

ஆபஸ்தம்பர் — தஹனம் செய்து, பிறகு மறு நாளில் அல்லது மூன்ருவது நாள், ஐந்தாவது நாள், ஏழாவது நாள், இவைகளில் அஸ்தி ஸஞ்சயனம் செய்யவேண்டும். இவ்விடத்தில் அஸ்தி ஸஞ்சயனம் செய்ய குறிப்பிட்ட மறு நாளிலிருந்து மூன்ருவது நாள் என்று அறியவும். அஸ்தி ஸஞ்சயனம் பத்து நாழிகைகளுக்குள் காலையில் செய்வது சுபமாகும்.

योगयाज्ञवल्क्यः—गंगायां यमुनायां वा कावेर्यां वा शतद्रौ ।
सरस्वत्यां विशेषेण ह्यस्थीनि विसृजेत् सुतः ॥

யோகயாஞ்யவல்கியர் — கங்கை அல்லது யமுனை, காவேரி, சதத்ருது, ஸரஸ்வதி, இந்த நதிகளில் அஸ்திகளை கர்த்தாவான புத்ரன் முறைப்படிப் போடவேண்டும்.

மாதா, பிதாக்கள், விஷயத்தில் அஸ்தி ஸஞ்சயனத்திற்கு நாள் பார்க்கவேண்டியது கிடையாது. மற்றவர்கள் விஷயத்தில் நாள் பார்த்து ஸஞ்சயனம் செய்யவேண்டும்.

दशमेऽह्नि प्रेतस्य महतीक्षुद्भवति, तन्निवृत्तिः प्रभूतबलिना भवति, स च दशमदिन पिण्डोदकदानात्पूर्वं कार्यः । "तिलोदके च पिण्डे च, प्रदत्ते दशमेहनि, अश्मनो स्थापनं कृत्वा ततः प्रेतं विसर्जयेत् ॥"

பத்தாவது நாளில் ப்ரேதமானது பூர்ணமான அவயவங்களுடன் இருப்பதால் பெரும் பசி ஏற்படுகிறது. அதை சமனம் செய்ய பக்ஷண பணியாரங்களுடன் ப்ரபூதபலி (பெரிய பலி) போடவேண்டும். இவைகளை தசம தினத்தில் செய்யவேண்டிய உதகதான பிண்டதானங்களுக்கு முன் செய்யவேண்டும். பிண்டோதக தானமான பிறகு சிலையிலிருந்து ப்ரேதத்தை விஸர்ஜனம் செய்யவேண்டும். ஆகையால் முன்பு செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது.

स्मृतौ — अन्तर्दशाहे संप्राप्ते दर्शे पिण्डान् समापयेत् ।
अस्थि संचयनं तत्र दर्शात्पूर्वं विधीयते ॥

பத்து தினங்களுக்குள் தர்சம் வந்தால் அதற்குள் உதகதானங்கள், பிண்ட தானங்கள் எல்லாவற்றையும் முடிக்கவேண்டும். அஸ்தி ஸஞ்சயனத்தை அமாவாஸ்யைக்கு முன்பே செய்யவேண்டும். இது வேறு பந்துக்களுக்கு கர்மா செய்யும் கர்த்தாவுக்குச் சொல்லப்பட்ட நியமம் என்று அறியவும்.

दशाहाभ्यन्तरे पित्रोः सिनीवाली यदाभवेत् ।
अतीत्यैव च कर्तव्यं पुत्रेणान्येन नेष्यते ॥

புத்ரன் மாதா, பிதாக்களுக்குக் கர்மா செய்யும்பொழுது தர்சம் வந்தால் அதற்கு பிறகும் உதக தானங்கள் முதலிய வைகளைச் செய்யவும். பத்து நாட்களைக் குறைக்கக்கூடாது என்பது கருத்து. மற்றவர்கள் விஷயத்தில் இந்த நியமம் கிடையாது.

11. कर्तृविषये नियमाः கர்த்தாவின் விஷயத்தில் சில நியமங்கள்

अक्षारलवणान्नास्स्युर्नि मज्जेयुश्च तेन्वहम् ।
मां साशनं च नाश्नीयुश्शयीरंश्च पृथक्क्षितौ ॥

ஆசௌசிகள் உப்பு, உறைப்பு, தைலம், தாம்பூலம் ஸ்திரீ சங்கம், கட்டிலில் படுப்பது இவைகளை வர்ஜிக்க வேண்டும்.

नष्टे शवाग्नौ तद्भस्म संस्पृश्यारणिमन्थनम् ।
लौकिकाग्न्याहृतिः स्मार्तं सर्वचित्तं द्वयोस्समम् ॥

ஆஹிதாக்னி விஷயத்தில் சவாக்னி அனுகதமானால் லௌகிகாக்னியை க்ரஹித்து ப்ராயச்சித்தாஹுதி செய்து கொள்ளவும். ப்ராயச்சித்தம் இரண்டு பேர்களுக்கும் பொதுவானது.

1. கனிஷ்டனால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு உதக க்ரியையும் செய்யும்பொழுது ஸஞ்சயனத்திற்கு முன்பு அல்லது பின்பு வந்த ஜயேஷ்டன் முன்பு வந்தால் வபனம் செய்துகொண்டு ஸஞ்சயனம் செய்து அதீத உதக க்ரியையுடன் ஸ்வகால உதக க்ரியையையும் செய்து க்ரமமாக செய்யவேண்டியவைகளை ஸபிண்டீகரண பர்யந்தம் செய்யவும், ஸஞ்சயனம் ஆன பிறகு வந்தால் அதீத உதக பிண்டதானங்களுடன் ஸ்வகால பிண்டோதக தானங்களையும் ஏகோத்திஷ்டத்தையும் செய்து கேட்டதிலிருந்து பத்து நாள் தீட்டுக் காத்து பிறகு ஆவ்ருத்தாத்யம் செய்து த்ரிபக்ஷ காலத்தில் ஸபிண்டீகரணம் செய்யவும்.

2. மற்றவனால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டிருந்தால் புத்ரன் புனர் தஹனம் செய்து பாக்கி காரியங்களை செய்யவும். 10 நாளில் சுத்தனாகிறான்.

3. அன்னியனால் ஸஞ்சயனம் செய்யப்பட்டிருந்தால் புனர் தஹனம் செய்யவேண்டும்.

4. புத்ரனில்லாத முக்கிய கர்த்தா ஸஞ்சயனத்திற்கு முன் வந்தாலும் புனர் தஹனம் கிடையாது. மாதா, பிதாக்கள் தவிர மற்றவர் விஷயத்தில் புனர்தஹனமே கிடையாது என்று அறியவும்.

5. அஸபிண்டனானவன் தஹனம் செய்தால் ஸஞ்சயனத்திற்கு முன் முக்கிய கர்த்தா வந்தால் தஹனம் செய்தவனுக்கு ஆசௌசமும் உதக தானமும் கிடையாது. ஸஞ்சயனத்திற்கு பின்பு வந்தால் தஹனம் செய்தவன் ஆசௌசான்னத்தைச் சாப்பிட்டால் 10 நாள் தீட்டு, உதக தானம் இவைகள் அவனுக்கும் உண்டு.

6. ஸமானோதகன், மருமான் முதலிய, மூன்று நாள் ஆசௌசிகள் தஹனம் செய்தால் எப்பொழுது கர்த்தா வந்தாலும் 10 நாள் ஆசௌசம் உதக தானம் இவைகள் உண்டு என்று அறியவும்

7. முக்கிய கர்த்தா வராவிடில் ஸஞ்சயனம், உதக தானம் பிண்ட தானம் முதலியவைகளை ஆசௌசம் முடியும் வரையில் செய்து ஏகோத்திஷ்டமும் செய்யவேண்டும். செய்யாவிட்டால் தஹனம் செய்தவனுக்கு சுத்தி ஏற்படாது.

8. கனிஷ்டன் ஸம்ஸ்காரம் செய்யும்பொழுது ஜ்யேஷ்டன் 10வது நாள் வந்தால் வபனம், உதக, பிண்ட ப்ரபூதபலி ப்ரதானம் இவைகளை செய்து ஸர்வாங்க வபனம் செய்துகொண்டு சாந்தி ஹோமாதிகளைச் செய்து, 11வது நாளில் ஏகோத்திஷ்டம் செய்து கேட்டது முதல் 10 நாள் தீட்டு காத்து பிறகு ஆவ்ருதாத்யம், ஸபிண்டீகரணம்மும் செய்யவேண்டும். புத்ரனல்லாத வேறு முக்கிய கர்த்தாவானால் 11வது நாளில் சுத்தனாகிறான் என்று அறியவும்.

9. பத்து நாள் க்ருத்யம் ஆனபிறகு 11வது நாள் காலையில் புத்ரன் வந்தால் வபனமும், ஏகோத்திஷ்டமும் செய்து பத்து நாள் செய்யவேண்டிய திலோதக ப்ரதானம் செய்யவேண்டும். பத்து நாள் க்ரியை செய்யப்படாத விஷயத்தில் பத்து நாளுக்குள் வந்தால் ச்வரணத்திலிருந்து 10நாள் உதக தானம் முதலியவைகளை செய்து 11வது நாளில் ஏகோத்திஷ்டம் செய்யவும். பிறகு த்ரிபக்ஷத்தில் ஸபிண்டீகரணம் செய்யவும். பத்தாவது நாள் இரவில் வந்தால் மறுநாளில் பத்துநாள் செய்யவேண்டிய க்ருத்யங்களையும் 11 நாளில் ஆத்யம் செய்ய வேண்டும்.

10. அந்நியனால் தஹனம் முதலிய பத்து நாள் க்ருத்யமும் செய்யப்பட்டிருந்தால் 11வது நாளில் ஸஞ்சயனத்திற்கு முன் வந்த புத்ரன் புனர் தஹனம் முதல் எல்லாவற்றையும் ஏகோத்திஷ்டத்தையும் செய்து அன்று முதல் பத்து நாள் ஆசௌசம் உதக தானம் இவைகளை அனுஷ்டிக்கவேண்டும். ஸஞ்சயனத்திற்கு பின்பு வந்தால் வ்ருஷோத்ஸர்னமும், ஏகோத்திஷ்டமும் செய்து பத்து நாள் ஆசௌசம், உதக தானம் இவைகளை அனுஷ்டிக்கவும்.

11. விதேசத்தில் உள்ள புத்ரன் தன் மாதா, பிதாக்களுக்கு அந்நியனால் அல்லது வேறு புத்ரனால் ஏகோத்திஷ்டம் முடிய செய்திருந்தால், கேட்ட பிறகு வபனம் செய்து கொண்டு பத்து நாள் ஆசௌசத்துடன் உதக தானம், ஸபிண்டீகரணம் இவைகளைச் செய்யவேண்டும். மற்றவனால் ஸபிண்டீகரணமும் செய்யப்பட்டிருந்தால் மறுபடியும் ஜ்யேஷ்டன் ஸபிண்டீகரணம் பர்யந்தம் முறைப்படி செய்யவும். ஜ்யேஷ்டன் செய்திருந்தால் கனிஷ்டன் செய்ய வேண்டியது கிடையாது.

12. இதரனால் ஸபிண்டீகரணம் செய்யப்பட்டிருந்தால் ஜ்யேஷ்டன் சமீபத்தில் இல்லாவிடில் கனிஷ்டர்கள் சொத்து விபாகமுள்ளவர்களாக இருந்தால் தனித்தனியாக ஸபிண்டீகரணம் செய்யவேண்டும். சொத்து பொதுவாக இருந்தால் அவர்களுள் ஜ்யேஷ்டன் ஒருவன் செய்தால் போதுமானது என்று அறியவும்.

13. விதேசத்தில் உள்ள புத்ரன் ஒரு வருஷத்திற்குப் பிறகு மாதா, பிதாக்கள் மரணம் கேட்டால் பத்து நாள் ஆசௌசத்துடன் எல்லாம் செய்யவேண்டும். ஆனால் மாஸிகங்கள் ஸோதகும்பம் இவைகள் கிடையாது. ஆப்திகம் மட்டும் அனுஷ்டித்தால் போதுமானது. வருஷத்துக்குள் கேட்டால் முன்போல் செய்து மீதியுள்ள மாஸிகங்களை அந்த அந்த மாதத்தில் செய்து க்ரமமான திதியில் ஆப்திகம் செய்யவும். கனிஷ்ட புத்ரனுல் ஜ்யேஷ்ட புத்ரன் செய்த காரியங்களை மறுபடியும் அனுஷ்டிக்க வேண்டியது கிடையாது. மூன்று நாள் ஆசௌசம் அனுஷ்டித்து உதக தானம் செய்தால் போதுமானது.

14. ஸபத்னீ மாதாவின் ஔரஸ புத்ரன் சமீபத்தில் இல்லாவிடில் ஸபத்னீ புத்ரன் செய்யவும். நடுவில் வந்தால் பாக்கியை செய்யவும். ஸபிண்டீகரணம் செய்த பிறகு வந்தால் அதை ஔரஸ புத்ரன் மறுபடியும் செய்யவும். ஸபத்னீ மாதாவின் மரணத்தை வருஷத்திற்குள் கேட்டால் 10 நாள் ஆசௌசம், உதக தானமும் செய்யவும். பிறகு கேட்டால் ஒரு நாள் ஆசௌசம்.

15. க்ரியைகள் செய்யப்பட்ட ப்ரதாவின் மரணத்தை 6 மாதத்திற்குள் கேட்டால் மூன்று நாள் ஆசௌசம். பிறகு கேட்டால் பக்ஷிணீ.

16. தேசாந்தரம் சென்றவன் இருக்கிறன் இல்லை என்ற விஷயம் தெரியாவிடில் 12 வருஷம் சென்ற பிறகு உத்திரக்ரியை ப்ருத்க்ருதி தஹனத்துடன் மூன்று நாளில் (கர்மா) செய்ய வேண்டும். நாராயண பலி செய்து பிறகு செய்ய வேண்டும் மாதா, பிதாவானல் 15 வருஷங்கள் சென்ற பிறகு செய்ய வேண்டும். ஆஷாடம், மாகம், மார்க்கசீர்ஷம், பாத்ரபதம் இந்த மாதங்களிலும் க்ருஷ்ணபக்ஷத்தில், ஏகாதசி தர்சம் இவைகளை காலமாக க்ரஹிக்கலாம். வெளியில் சென்ற திதி மாஸங்கள் தெரிந்தாலும் அவைகளை க்ரஹிக்கலாம் என்று அறியவும்.

17. ஆஹிதாக்னிகளுக்கு தஹனத்திலிருந்து பத்து நாள் ஆசௌசம், அனுஹிதாக்னிகளுக்கு மரணத்திலிருது பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

18. தஹனம் செய்த கர்த்தா 10 நாட்களுக்குள் வேறு ஒருவரையும் தஹனம் செய்ய நேர்ந்தால் முந்திய ஆசௌசத்துடன் பிந்திய ஆசௌசம் போய்விடும். சுத்தி ஏற்படும் என்பதாகும். ஆனால் மாதா, பிதாக்களுக்கு தஹனம் செய்ய நேர்ந்தால் அதிலிருந்து பத்து நாள் ஆசௌசம் என்று அறியவும்.

19. மாதாவின் ஆசௌசத்தின் மத்தியில் பிதா இறந்தால் பிதாவின் மரணம் முதல் புத்ரர்களுக்குப் பத்து நாள் ஆசௌசம். பிதாவின் ஆசௌசத்தினுடைய மத்தியில் மாதா இறந்தால், பிதாவின் ஆசௌசத்திற்குப் பிறகு 90 நாழிகை (பக்ஷிணீ) ஆசௌசம் என்று அறியவும்.

20. மாதா முன்பு இறந்தால் க்ரமமாக 11வது நாளில் மாதாவுக்கு ஏகோத்திஷ்ட ச்ராத்தம் செய்யவேண்டியது. மாத்ரு ஆசௌசத்தின் மத்தியில் இறந்த பிதாவுக்கும் பத்துநாள் செய்து 11வது நாளில் ஏகோத்திஷ்டம் செய்ய வேண்டியது பிதா முன்பு இறந்து, பிறகு மாதா இறந்தால் பிதாவின் பத்தாவது நாளில் மாதாவுக்கு உதகதானம், பிண்டதானம் முதலியவைகளை முடித்துக்கொண்டு பிதாவின் 11வது நாளில் பிதாவுக்கு ஏகோத்திஷ்ட ச்ராத்தம் செய்து பிறகு மாதாவின் க்ரமாக வருகிற பதினோருவது நாளில் ஆத்ய ச்ராத்தம் செய்ய வேண்டும் என்று அறியவும்.

12. दम्पत्योस्सहमृतौक्रमः

தம்பதிகள் சேர்ந்து மரணமடைந்தால் அதன் க்ரமம்

हारीतः—दम्पत्योस्सहमृतौ तु सहदाहादिकाः क्रियाः ।
प्राग्दाहादन्य नाशे च तदूर्ध्वं तु पुनः क्रियाः ॥

ஹாரீதர்—தம்பதிகளுக்கு ஒரே சமயத்தில் மரணம் ஏற்பட்டாலும், தஹனத்திற்கு முன்பு மற்றவருக்கு மரணம் ஸம்பவித்தாலும், தஹனம் முதலிய க்ரியைகளை சேர்த்தே செய்யவும், தஹனத்தின் பிறகு ஸம்பவித்த மரணத்தில் தனித்தனியாக செய்யவேண்டும்.

पितृमेधसारे—हिरण्यशकल नग्नप्रच्छादन वासस्तिलोदक पिण्डैकोत्तर वृद्धि नवश्राद्ध सोदकुंभवृषोत्सर्ग षोडशश्राद्धानि पृथक् पृथग्भवान्ति चरुकार्यं चितिः कुंडमस्थिसंचयनं शन्ति होमश्च तन्त्रम्। एकोद्दिष्ट सपिण्डीकरणादिषु निमित्त वरणहोमौ पृथग्भवतः पाकहोम वैश्वदेवादिकं तन्त्रम् ॥

ஹிரண்ய சகலம், நக்னப்ரச்சாதனச்ராத்தம், வாஸோ தகம், திலோதகம், பிண்டம், ஏகோத்தரவ்ருத்தி ச்ராத்தம் நவச்ராத்தம் ஸோத கும்பம், வ்ருஷோத் ஸர்கம், ஷோடச ச்ராத்தம் இவைகளைத் தனித்தனியாகச் செய்யவேண்டும். சருகார்யம், சிதை, குண்டம், அஸ்தி ஸஞ்சயனம், சாந்தி ஹோமம் இவைகளைச் சேர்த்து ஒன்ருகச் செய்யவும் ஏகோத்திஷ்டம் ஸபிண்டீகரணம், நிமித்வரணம் இவை களைத் தனியாகச் செய்யவேண்டும். பாகஹோமம் விச்வே தேவர்கள் இவைகளை ஒன்ருகச் செய்யவும்.

भवेद्यदिसपिण्डानां युगपन्मरणं तदा।
संबन्धासत्तिमालोच्य तत्क्रमाच्छ्राद्धमाचरेत्॥

ஸபிண்டர்களுக்கு ஒரே காலத்தில்மரணம் ஏற்பட்டால், ஸம்பந்தத்தின் ஸாமீப்யத்தைப் பார்த்து அந்த க்ரமமாய் ச்ராத்தத்தை (க்ரியையை) செய்யவும். இது ஒரே கர்த்தா செய்யவேண்டிய விஷயத்தில் என்று அறியவும்.

हारीतः — संघातमरणे पित्रो द्वादशाहे सपिण्डनम्।
कुर्यात्पुत्रस्तदन्येषां त्रिपक्षे कारयेद्बुधः॥

ஹாரீதர்—ஸங்காத மரணத்தில் புத்ரன் மாதா, பிதாக் களுக்கு 12வது நாளில் ஸபிண்டீகரணம் செய்யவும். மற்ற வர்களுக்கு த்ரிபக்ஷத்தில் செய்யவும். இதுவும் ஒரே கர்த்தா என்ற விஷயத்தில் என்று அறியவும்.

13. गर्भिणीसंस्कारः கர்பிணீயின் ஸம்ஸ்காரம்

बोधायनः —अथ गार्भिण्याः अन्तर्वत्नी म्रियेत श्मशानं नीत्वा दहनदेशं जोषयेत् । सम्यक्चितामपरेण सव्येन प्रेतस्योदरं विलिखेत् । अनुलेखन दृष्टं कुमारं अनुमन्त्रयते "जीवतु मम पुत्रो दीर्घायुत्वाय वर्चसे" इति ॥

போதாயனர்—கர்பிணீ மரித்தால் அவளை ச்மசானத்திற்கு கொண்டு சேர்த்து, தஹனஸ்தலத்தை கல்பித்து, சிதைக்கு மேற்கில் ப்ரேதத்தின் வயிற்றை இடது பாகத்தில் கீறவும் "ஹிரண்ய கர்ப்ப:" என்ற மந்திரத்தால் கீறியதால் காணப்பட்ட சிசுவை " ஜீவது மம புத்ரோ தீர்க்காயுத்வாய" என்று மந்திரம் சொல்லி சிசு ஜீவித்திருந்தால் அதற்கு ஸ்னானம் செய்வித்து பால் கொடுத்து க்ராமத்திற்கு கொண்டு வரவும். பிறகு வயிற்றில் ஆஜ்யாஹுதி செய்து சில மந்திரங்கள் சொல்லி ஊசியினுல் தைத்து பிறகு ப்ரேதத்தை சிதையில் ஏற்றி முறைப்படி தஹனம் செய்யவும். பசுக்களைத் தானம் செய்யவும்.

14. एकादशाहे वृषोत्सर्गः

பதினொருவது நாளில் வ்ருஷப உத்ஸர்ஜனம்

व्यासः — एकादशेऽह्नि संप्राप्ते प्रेतस्य स्वर्गसाधनम् ।
वृषमेकं समुत्सृज्य श्राद्धे विप्रांस्तु भोजयेत् ॥

வ்யாஸர்—பதினொருவது நாளில் ஜீவனுக்கு ஸ்வர்க்க ப்ராப்தியைஉத்தேசித்து வ்ருஷபத்தை ருத்ர ப்ரீத்யர்த்தமாக த்யாகம் செய்து பிறகு ச்ராத்தத்தில் ப்ராம்மணர்களை போஜனம் செய்விக்கவேண்டும்.

विज्ञानेश्वरः —एकादशेऽह्नि संप्राप्ते यस्य नोत्सृज्यते वृषः ।
पिशाचत्वं स्थिरं तस्य दत्तैः श्राद्धशतैरपि ॥

விஞானேச்வரர்—11வது நாளில் எவனுக்கு வ்ருஷப உத்ஸர்ஜன கர்மா செய்யப்படவில்லையோ அவனுக்கு ஏற்பட்ட பிசாசத்வம் நீங்குவதில்லை. 100 ச்ராத்தங்கள் செய்தாலும் பிரயோஜனமில்லை. ஆகையால் வ்ருஷபோத்ஸர்ஜனம் முக்கியம் என்று கருத்து.

एकादशाहे यत् श्राद्धं एकोद्दिष्टं समाचरेत् ।
यदिकार्यं न कुर्वीत पुनस्संस्कारमर्हति ॥

பதினோருவது நாளில் ஏகோத்திஷ்ட ச்ரார்தம் அவசியம் செய்யவேண்டும். செய்யாவிடில் மறுபடியும் ஸம்ஸ்காரம் செய்ய நேரிடும்.

एकादशेऽह्नि संप्राप्ते विप्राभावे कथं भवेत् ।
पायसं घृतसंमिश्रं हस्तेन ग्रास संमितम् ।
यमाय सोममित्येव द्वात्रिंश ज्जुहुयाच्चरुम् ।
अध्वर्युर्वाग्यतो भूत्वा प्रसव्यं दक्षिणामुखः ।
श्राद्धसिद्धिमवाप्नोति नात्रकार्या विचारणा ॥

11வது நாளில் ப்ராம்மணன் கிடைக்காவிடில், நெய்யுடன்கூடிய பாயஸான்னத்தை கையால் கபள ப்ரமாணமாக எடுத்து "யமாயஸோமம்" என்ற மந்திரத்தைச் சொல்லி 32 ஆஹுதிகளைச் செய்யவேண்டும். கர்த்தா மௌனமாக இருந்துகொண்டு தெற்கு நோக்கிய முகத்துடன் ஹோமம் செய்யவும். இப்படி செய்தால் ச்ராத்தம் ஸ்பலமாக ஆகிவிட்டது, ஸந்தேஹம் வேண்டாம் என்பது கருத்து.

गौतमः — ब्राह्मणं भोजयेदाद्ये होतव्यमनलेऽपि वा ।
पुनश्च भोजयेत् विप्रं द्विरावृत्तिर्भवेदिह ॥

கௌதமர் —ஆத்ய ச்ராத்தத்தில் ப்ராம்மணனை போஜனம் செய்விக்கவேண்டும். அக்னியிலாவது ஹோமம் செய்யவும். மறுபடி ப்ராம்மணனை போஜனம் செய்விக்க வேண்டும். இதில் இரண்டு தடவை ஆவ்ருத்தி ஏற்படவேண்டும்.

कालादर्शे —आद्यश्राद्धं द्विजेऽग्नौ वा कुर्यात् पुनरपि द्विजे ।

ஆத்ய ச்ராத்தத்தை ப்ராம்மணனிடத்தில் அல்லது அக்னியில் செய்யவும். மறுபடி ப்ராம்மணனிடத்தில் செய்யவும்.

15. षोडश श्राद्धानि 16 ச்ராத்தங்கள்.

षोडशादीनि सर्वाणि कुर्यादेकादशेऽहनि ।
सपिण्डीकरणं चापि कुर्याद्वा द्वादशेऽहनि ।

ஷோடசம் முதலிய எல்லாவற்றையும் 11வது நாளில் செய்யலாம். 12வது நாளில் ஸபிண்டீகரணத்தையும் செய்யவேண்டும்.

गौतमः — देशकालादि वैषम्यान्मृत्युरोगादिशंकया ।
एकादशेऽह्निकार्याणि ह्यपकृष्यापि षोडश ॥

கௌதமர் :—தேச காலங்கள் அனுகூலமில்லாத காரணத்தாலும் மரணம் ரோகம் முதலிய ஸந்தேஹத்தாலும் 16 ச்ராத்தங்களையும் அபகர்ஷித்து 11வது நாளில் செய்யவும்.

एकादशो भवेदाद्यं मास्यूने ह्यूनमासिकम् ।
त्रैपक्षिकं त्रिपक्षे स्यादूनषाण्मासिकं तथा ॥
प्रतिमासं मृताहेषु ऊनाब्दं चेति षोडश ॥

ஷோடச ச்ராத்தங்கள் சொல்லப்படுகின்றன. 11வது நாளில் ஆத்யம், முதல் மாதம் ஊனமாக இருக்கும்பொழுது ஊன மாஸிகம், த்ரிபக்ஷத்தில் த்ரைபக்ஷிகம், பிறகு ஊன ஷான் மாஸிகம் (6வது மாதம் ஊனமாக இருக்கும்பொழுது) ஒவ்வொரு மாஸத்திலும் மரணமடைந்த திதியில் வரும் மாஸிகங்கள், வருஷ முடிவில் வருஷம் ஊனமாக இருக்கும் பொழுது ஊனுப்தம் ஆக 16 மாஸிகங்கள் என்று அறியவும்.

12வது நாளில் ஸபிண்டீகரணம் செய்தால் முதல் நாளில் (11வது நாளில்) 16 மாஸிகங்களையும் அபகர்ஷித்து ஏகோத்திஷ்டமாய்ச் செய்யவேண்டும். ஒரு பிண்டத்தைக் கொடுக்கவும். மாஸிகங்களை ஸபிண்டீகரணத்திற்கு முன் செய்யும்பொழுது பிண்டதானம் தனித்தனியாகச்செய்ய வேண்டும். அக்னியில் ப்ரேதாஹுதி ஒரே தடவை, 15 தடவை அவதானம் செய்து, ஒரே ப்ரேதாஹுதியைச் செய்ய வேண்டும். ஸபிண்டீகரணம் ஆன பிறகு அந்த அந்த காலங் களில் மாஸிகச்ராத்தங்களை அவசியம் செய்யவேண்டும். ஷோடச ச்ராத்தங்களை ப்ராம்மணர்கள் கிடைக்காவிடில் ஆமரூபமாகவும் செய்யலாம்.

गालवः — त्रिभिर्वा दिवसैरूने त्वेकेने द्वितयेन वा ।
आद्यादिषु च मासेषु कुर्यादूनानि वै द्विजः ॥

மூன்று அல்லது இரண்டு, ஒன்று ஊனமான (குறை வான) நாளில் மாஸிகங்கள் ஊன மாஸிகம் செய்ய வேண் டும். இதே மாதிரி ஊனுப்திகமும் என்று அறியவும். 27வது நாளுக்கு மேல் மூன்று நாட்களில் ஊனமாஸிகமும், 40 தினங்களுக்குமேல் ஐந்து தினங்களில் த்ரைபக்ஷிகமும்,

170 தினங்களுக்குமேல் 10 தினங்களில் ஊனஷான் மாஸிகமும், 340 தினங்களுக்குமேல் 15 தினங்களில் ஊனுப்திகமும், திதியில் ஆப்திகமும் செய்ய வேண்டும். ஊன மாஸிகங்களை ஒற்றப்படை திதியில் செய்யவேண்டும், நாள் பார்த்துச் செய்வது ச்லாக்யமானது என்று அறியவும். க்ருஹத்தில் சுப காரியங்கள் ஏற்பட்டால் மாஸிகங்களை ஆகர்ஷித்து செய்யலாம். ஆனால் சுபமான பிறகு புன:கரணம் செய்யக் கூடாது.

पैठीनसिः — सपिण्डीकरणादर्वाक् कुर्वन् श्राद्धानि षोडश ।
एकोद्दिष्ट विधानेन कुर्यात्सर्वाणि तानि तु ।
सपिण्डीकरणादूर्ध्वं यदा कुर्यात्तदापुनः ॥
प्रत्यब्दं यो यथा कुर्यात् तथा कुर्यात्सतान्यपि ।

ஸபிண்டீகரணத்திற்கு முன்பு 16 ச்ராத்தங்களை ஏகோத்திஷ்ட விதானத்தினால் செய்யவும். ஸபிண்டீகரணத்திற்கு பிறகு செய்யும் மாஸிகங்களை ப்ரத்யாபித்திக ச்ராத்தம் மாதிரி செய்யவேண்டும். பார்வண ச்ராத்தம் மாதிரி செய்ய வேண்டும். பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹ என்ற மூன்று புருஷர்களை உத்தேசித்து செய்வது பார்வணமாகும் என்று அறியவும்.

यमः — सपिण्डीकरणं नैवकुर्यादिवौरसस्सुतः ।
एकोद्दिष्टं न कुर्वीत यतीनां चैव सर्वदा ॥
अहन्येकादशे प्राप्ते पार्वण श्राद्धमाचरेत् ॥

எமன் :— தண்டத்தை க்ரஹித்த மாத்திரத்தினால் ஸன்யாஸிகளுக்கு ப்ரேதபாவம் ஏற்படுவது இல்லை. ஆகையால் அவர்களுக்கு புத்ரன் ஏகோத்திஷ்டம், ஸபிண்டீகரணம் இவைகளை செய்யக்கூடாது. 11வது நாளில் பார்வண ச்ரார்த்தம் செய்யவேண்டும். 12வது நாளில் நாராயணபலி செய்யவும்.

16. सपिण्डीकरणम् ஸபிண்டீகரணம்.

आश्वलायनः — अथ सपिण्डीकरणं वत्सरे पूर्णे द्वादशाहे वा ॥

ஆச்வலாயனர் :— ஸபிண்டீகரணத்திற்கு காலம் சொல்லப்படுகிறது. ஒரு வருஷம் முடிந்தவுடன் ஸபிண்டீகரணம் செய்யலாம். 12வது நாளிலும் செய்யலாம்.

बोधायनः — संवत्सरे सपिण्डीकरणं एकादशे मासि षष्ठेवा चतुर्थेवा द्वादशेऽह्नि वा ।

போதாயனர் :—வருஷம் முடிந்தவுடன் அல்லது 11வது மாதத்திலும், 6வது மாதத்திலும், நாலாவது மாதத்திலும் ஸபிண்டீகரணம் செய்யலாம். 12வது நாளிலும் செய்யலாம்.

एकपुत्रोऽग्निमांश्चैव कुर्वीत द्वादशेऽहनि ।
सपिण्डीकरण श्राद्धं तयोरेष इति स्थितिः ॥
सपिण्डीकरणं पित्रोः कुर्यादेको हि यस्सुतः ।
अस्थिरत्वाच्छरीरस्य द्वादशाहः प्रशस्यते ॥

ஏக புத்ரனுக இருப்பவனும், ஸ்வயம் அக்னிமானுக இருப்பவனும் மாதா, பிதாக்களுக்கு 12வது நாளில் ஸபிண்டீகரணம் செய்வதுதான் உசிதமானது. கொண்டாடத் தகுந்தது. சரீரம் ஸ்திரமில்லை என்ற காரணத்தால் நாள் கடத்தக்கூடாது என்று அறியவும்.

साग्निकस्तु यदाकर्ता प्रेतश्चाप्यग्निमान् भवेत् ।
द्वादशाहे तदाकार्यं सपिण्डीकरणं पितुः ॥

கர்த்தா அக்னிமானுயும், இறந்தவன் அக்னிமானுயும் இருந்தால் 12வது நாளில் மாதா, பிதா விஷயத்தில் ஸபிண்டீகரணம் செய்யவேண்டும்.

उभयोरनग्निकत्वे द्वादशाहादयः कालाः विकल्प्यन्ते ।

இரண்டு பேரும் அக்னிமானுக இல்லாவிட்டாலும் 12வது நாளில் செய்யலாம். வேறு காலங்களிலும் செய்ய லாம். ஆனல் ஆசாரத்தில் "कस्संवत्सरं जीविष्यतीति" என்ற ச்ருதியை அனுசரித்து 12வது நாள் செய்வது அதிகமான ப்ரசாரத்தில் காணப்படுகிறது என்று அறியவும்.

सपिण्डीकरणात्पूर्वं शोभनं न विधीयते ।
यदि चेत्तत् कृतं कर्म कर्तु नाशाय कल्पते ॥

கர்த்தாவானவன் ஸபிண்டீகரணம் செய்யாமல் சோபன காரியம் செய்யக்கூடாது; செய்தால் கர்த்தாவுக்கு ஆபத்து ஏற்படும் என்று அறியவும்.

श्रीधरीये — एकादशाहमारभ्य यावदाषोडशाद्दिनात् ।
सपिण्डीकरणं कुर्यात्तत स्सप्तदशेऽह्नि वा ॥

11வது நாள் முதல் 16வது நாள் வரையில் ஸபிண்டீ கரணம் செய்யலாம். பிறகு 17வது தினத்திலும் செய்யலாம்.

गर्गश्च — कृष्णपक्षेतु पंचम्यां अष्टम्यां दर्श एव वा ।
एकादश्यां तु कर्तव्यं स्वकालाकरणे सति ॥

சொல்லப்பட்ட காலத்தில் செய்யமுடியாவிடில் க்ருஷ்ணபக்ஷத்தில் பஞ்சமீ, அஷ்டமீ, அமாவாஸ்யை, ஏகா தசீ இவைகளில் ஸபிண்டீகரணம் செய்யலாம்.

स्मृतिरत्ने — अमायां च क्षयाहे च प्रेतपक्षे तथैवच ।
श्राद्धं सपिण्डनं कुर्यात्तिथिवारौ न शोधयेत् ॥

அமாவாஸ்யை அல்லது ம்ருத திதி, மஹாளயபக்ஷம் இவைகளில் ஸபிண்டனம் செய்யலாம். திதி, வார தோஷங்

களைப் பார்க்கவேண்டாம். வர்ஷம் முடிந்த பிறகு ஸபிண்டீ கரணம் செய்ய நேர்ந்தால் ஷோடச ச்ராத்தங்களை மறு படியும் செய்யவேண்டும்.

गोभिलः — साग्निकस्तु यदा कर्ता प्रेतश्चानग्निमान् भवेत् ।
द्वादशाहे तदा कार्यं सपिण्डीकरणं सुतैः ॥

கோபிலர் :—கர்த்தா ஆஹிதாக்னியாயும் இறந்தவன் அனாஹிதாக்னியாயும் இருந்தால் 12வது நாளில் ஸபிண்டீ கரணம் செய்யவேண்டும்.

17. सापिण्ड्ये अधिकारिणः

ஸபிண்டீகரணத்தில் அதிகாரிகள்

औरसो दत्तको वापि सपिण्डीकरणं चरेत् ।
परित्यज्यैव जीवन्तं पुत्रं नान्यस्तु कारयेत् ॥

ஔரஸ புத்ரன், அல்லது ஸ்வீகாரப் புத்ரன் ஸபிண்டீ கரணம் செய்யவெண்டும். அவன் இருக்கும்பொழுது மற்ற வர்கள் செய்வது தோஷமாகக் கருதப்படுகிறது.

शंखः — पितुः पुत्रेण कर्तव्यं पौत्रेणापि सपिण्डनम् ।
तदभावे तु पत्नी स्यात् पत्न्यभावे तु सोदरः ॥

சங்கர் :—பிதாவுக்குப் புத்ரன் ஸபிண்ட்யத்தை செய்ய வேண்டும். அவனில்லாவிடில் பௌத்ரன், பிறகு பத்னீ, பத்னீ இல்லாவிடில் ஸஹோதரன் என்று க்ரமம்.

अपुत्रायां मृतायां तु पतिः कुर्यात्सपिण्डनम् ।

புத்ரன் இல்லாத ஸ்திரீ விஷயத்தில் பர்த்தா ஸபிண்டீ கரணம் செய்யவேண்டும்.

वयोऽवस्था विशेषमनादृत्य सर्वत्र पुरुषाणां ।
स्त्रीणां च विवाहादूर्ध्वं सपिण्डीकरणं कार्यमेव ॥

வயதைக் கவனிக்காமல் ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் விவாஹமாகி இருந்தால் ஸபிண்டீகரணம் செய்ய வேண்டும்.

वृद्धवसिष्ठः — सपिण्डीकरणं नैव मृतानां ब्रह्मचारिणाम् ।
क्लीबानां पतितानां च दुष्टस्त्रीणां तथैव च ॥
नैष्ठिकानां यतीनां च श्राद्धं नारायणार्पणम् ।
उपकुर्वाणकस्यैव सपिण्डीकरणं विदुः ॥

வஸிஷ்டர் :—ப்ரம்மச்சாரிகள், நபும்ஸகர்கள், பதிதர்கள், துஷ்ட ஸ்திரீகள், நைஷ்டிகர்கள், ஸன்யாஸிகள் இவர்களுக்கு நாராயண பலி செய்யவும். உபகுர்வாண ப்ரம்மசாரிக்கு ஸபிண்டீகரணம் உண்டு என்று அறியவும். 12 வயதுக்குள் இறந்த ப்ரம்மசாரிகளுக்கு நாராயண பலி என்று அறியவும்.

18. सापिण्ड्य प्रकारः

ஸபிண்டியம் செய்யும் முறை

बृहद्विष्णुः — पितुर्मरणमारभ्य द्वादशे दिवसे चरेत् ।
प्रेतभावविनिर्मोकद्वारा प्रेतस्य वै पितुः ॥
पितामहादिभिस्सार्धं सापिण्ड्यस्य प्रसिद्धये ।
समानोदक भावस्य सिध्यर्थे च पितुस्सुतः ॥
एषां पितामहादीनां विधिनापार्वणेन तु ।
स्वपितुः प्रेतभूतस्य त्वेकोद्दिष्ट विधानतः ॥

ப்ருஹத்விஷ்ணு—பிதாவின் பரணதினத்திலிருந்து 12வது நாளில் ஸபிண்டீகரணம் செய்யவும். ப்ரேதனுன பிதாவுக்கு ப்ரேதத்வ நிவிருத்தி அடைந்து பிதா மஹாதிகளுடன் ஸபிண்டத்வம் ஸித்திப்பதற்கும் ஸமானோதகத்வம் ஸித்திப்பதற்கும், புத்ரன் பிதா மஹாதிகளுக்கு பார்வண விதியாலும் ப்ரேதனுன தனது பிதாவுக்கு ஏகோத்திஷ்ட விதியாலும் பார்வண ஏகோத்திஷ்டஸமுச்சய ஸ்வரூபமான ஸபிண்டீகரண ச்ராத்தம் செய்யவேண்டும்.

ब्रह्मे: — मृते पितरि यस्याथ विद्यते च पितामहः ।
तेन देयाः त्रयः पिण्डाः प्रपितामहपूर्वकाः ॥
तेभ्यश्च पैतृकः पिण्डः नियोक्तव्यश्च पूर्ववत् ॥

எவனுக்கு பிதா இறந்து பிதாமஹன் ஜீவித்து இருக்கிருனே அந்த கர்த்தா ப்ரபிதாமஹபூர்வகமான மூன்று பேர்களுக்கு பார்வண ச்ரார்த்தம் செய்து அந்த பிண்டங்களுடன் பித்ரு பிண்டத்தை சேர்க்கவும்.

अपुत्रायाः पत्न्याः पतिस्सापिण्ड्यं कुर्यात् ।

புத்ரனில்லாத பத்னிக்கு பர்த்தா ஸபிண்டீகரணம் செய்யவேண்டும்.

स्मृत्यन्तरे — श्राद्धद्वयमुपक्रम्य सपिण्डीकरणंभवेत् ।
पार्वणं तत्र पूर्वं स्यात् एकोद्दिष्टमथा चरेत् ॥

இரண்டு ச்ராத்தத்தை ஆரம்பித்து ஸபிண்டீகரணம் செய்யவேண்டும். அவைகளுள் பார்வணம் முதலில் செய்யவும். பிறகு ஏகோத்திஷ்ட ரீதியில் ப்ரேத வர்ண ச்ராத்தம் செய்யவும். இவ்விரண்டும் சேர்ந்து ஸபிண்டீகரண ச்ராத்தமாகும்.

सपिण्डीकरण श्राद्धे दैवं पूर्वं नियोजयेत् ।
पितॄन्नियोजयेत् पश्चात् ततः प्रेतं विनिर्दिशेत् ॥

ஸபிண்டீகரண ச்ராத்தத்தில் முதலில் காலகாமக விச்வேதேவரையும், பிறகு பித்ருக்களையும், கடைசியில் ப்ரேதத்தையும் வரணம் செய்யவேண்டும்.

इति वै देवलः प्राह शाण्डिल्यश्च महामुनिः ।
यत्किंचित्पार्वण श्राद्धं तत्र सर्वत्र वै द्विजे ॥
पूजये द्विष्णु मित्येवं श्राद्धं सिध्यति नान्यथा ॥

எந்த பார்வண ச்ராத்தத்திலும், விஷ்ணுவை உத்தேசித்து ப்ராம்மணனை வரிக்கவேண்டும். விஷ்ணுவை பூஜிக்காத ச்ராத்தம் ஸித்திக்காது என்று தேவலரும், சாண்டில்யரும் கூறுகிறார்கள்.

19. **पिंड संयोजन विधिः** *பிண்டத்தைச் சேர்ப்பதின் முறை.*

पितृमेधसारे—

हुतशेष मिश्रान्नैस्तिलयुक्तैस्सप्तपिण्डान् कृत्वा, उच्छिष्टसन्निधौ अग्नेर्दक्षिणतः त्रेधा दक्षिणाग्रान् दर्भान् संस्तीर्य दक्षिणामुखः सव्यं जान्वाच्य तेषु मध्यमदर्भेषु मार्जयन्तां मम पितुः पितरः इत्यादिभिः, पश्चिमदर्भेषु मार्जयन्तां मम मातरः, इति मार्जयित्वा, मार्जनक्रमेण एतत्ते पितुस्तत इत्यादिभिः षट्पिण्डान् दत्वा येचत्वामनु याश्चत्वामनु इति प्रतिपिण्डं दर्भमूलेषु लेपं निमृज्य, मार्जयतां मम पिता प्रेतः, मार्जयतां मम माता प्रेतेत्यपो दत्वा अमुकगोत्र अमुकशर्मन् प्रेत एतं पिण्डं उपतिष्ठेति प्रेतपिण्डं प्रदाय, अमुकगोत्रे अमुकनाम्नि प्रेते इति स्त्रि...

இனி பிண்ட ஸம்யோஜனத்தைப் பற்றித் தெரிவிக்கிறோம். ஹோமம் செய்து பாக்கி உள்ள அன்னத்தையும், திலத்தைக் கலந்து ஏழு பிண்டங்களைப் பிடித்துக் கொள்ள

வும். அனுமரணமானுல் எட்டு பிண்டங்கள், பலருக்கு ஸாபிண்டியமானுல் அவ்வளவு நிமித்த பிண்டங்கள், இவை களைச் செய்து கொண்டு, உச்சிஷ்ட ஸன்னதியில் அக்னிக்கு தென்புறத்தில், தெற்கு நுனியுள்ள தர்ப்பங்களை மூன்று விதமாக பரப்பிக் கொண்டு, தெற்கு நோக்கி இடது முழங் காலை கவிழ்த்து உட்கார்ந்துகொண்டு, பரப்பிய தர்ப்பங்கள் நடுவில் உள்ள தர்ப்பங்களில் மார்ஜயந்தாம் மம பிது: பிதர: என்பது முதலிய மந்திரங்களாலும், மேற்கு திக்கில் மார் ஜயந்தாம் மம மாதர: என்ற மந்திரங்களாலும், தெற்கில் முடிவாகும்படி மார்ஜனம் செய்து, மார்ஜனம் செய்த முறைப்படி ஏதத்தே மம பிதுః தத என்பது முதலிய மந்திரங் களால் ஆறு பிண்டங்களை வைத்து யேசத்வாமனு, யாச் சத்வாமனு என்பவைகளால் ஒவ்வொரு பிண்டத்திலும் தர்பங்களின் அடியில் லேபத்தை (கையிலுள்ளவற்றை) துடைத்து மார்ஜயதாம் மமபிதா ப்ரேதః அல்லது மார்ஜய தாம் மம மாதா ப்ரேதா என்று ஜலத்தைவிட்டு .... கோத்ர .... சர்மன், ப்ரேதஏதம் பிண்டம் உபநிஷ்ட என்று பிண்டத்தைக் கொடுத்து ...... கோத்ரே ...... நாம்னி ப்ரேதே என்று (ஸ்திரீக்கு) பிண்டத்தைக்கொடுக்க வேண்டும்.

ब्राह्मणाभ्यनुज्ञातः समानोमन्त्रः, समानीव, इति द्वाभ्यां प्रेतार्घ्यं पित्राद्यर्घ्यपात्रे निनीय तूष्णीं प्रेतपिण्डमादाय त्रेधा विभज्य, तद्भागत्रयं पित्रादिपिण्डानां पुरस्तान्निधाय वैतरणीगोदानं कृत्वाऽनुज्ञातो मधुमतीभिः, संगच्छध्वं समानो मन्त्रस्समानीव इति जतुभिस्तत्पिंडे स्सहत्रयं हस्ताभ्यां युगपत्संसृजेत् ।

ப்ராம்மணர்களால் அனுக்ஞை செய்யப்பட்டவனுய் "ஸமானே மந்த்ர:" ஸமாநீவః, என்ற இரண்டு மந்திரங்

களால் ப்ரேதார்க்யத்தை பித்ராதிகளின் ஆர்க்ய பாத்திரங்களில் சேர்த்து மௌனமாய் நீட்டமாக பிடித்தப் ப்ரேத பிண்டத்தை எடுத்து மூன்ருகச் செய்து மூன்று பாகங்களேயும் பிதா முதலியவரின் பிண்டங்களில் எதிரில் வைத்து, வைதரணீ கோதானத்தைச் செய்து, அனுக்ஞையைப் பெற்று (मधुवाताः) மதுமதீ முதலிய மந்திரங்களாலும், ஸங்கச்சத்வம், ஸமாஞே மந்திரம் ஸமாநீவ: என நான்கு மந்திரங்களால் மூன்ருகச் செய்த ப்ரேத பிண்டங்களே பித்ராதி பிண்டங்களுடன் கைகளால் ஒரே சமயத்தில் சேர்க்கவும்.

एवं प्रेतपिण्डं पित्रादिपिण्डे संसृज्य येसमाना, ये सजाता इति द्वाभ्यां पिण्डानुपस्थाय संसृष्टेनार्घ्योदकेन मन्त्रानूहेन पूर्वन्मार्जयेत् , इति ॥

இந்த மாதிரி ப்ரேத பிண்டத்தைச் சேர்த்து யேஸமாஞ: யேஸஜாதா: என்ற இரண்டு மந்திரங்களால் உபஸ்தானம் செய்து சேர்க்கப்பட்ட ஆர்க்ய ஜலத்தால் மந்திரங்களே ஊஹிக்காமல் முன்போல் மார்ஜனம் செய்யவும், என்று கூறப்படுகிறது. இந்த விஷயங்களில் த்ரி பிண்டிகளாக இருந்தால் நான்கு பிண்டங்கள் ஸம்பவிக்கும் என்று அறியவும்.

शंखः — मातुस्सपिण्डीकरणं कथं कार्यं भवेत्सुतैः ।
पितामह्यादिभिः साकं सपिण्डीकरणं स्मृतम् ॥

சங்க:— மாதாவின் ஸபிண்டீகரணத்தில் புத்திரர்கள் மாதாவின் பிண்டத்தை பிதாமஹீ முதலியவர்களுடைய பிண்டங்களுடன் சேர்க்கவேண்டும். இந்த மாதிரி மாதாமஹ மாதாமஹீ ஸபிண்டீகரணத்தில் ஊஹித்துக் கொள்ளவும்.

स्मृत्यन्तरे — गोत्रस्य त्वपरिज्ञाने काश्यपं गोत्रमिष्यते ।
यस्मादाह श्रुतिस्सर्वाः प्रजाः काश्यपसंभवाः ॥

கோத்ரம் தெரியாமல் இருந்தால் காச்யப கோத்ரம் என்று சொல்லிக் கொள்ளவும். வேதமானது எல்லா ப்ரஜைகளும் காச்யபரிடமிருந்து உண்டானார்கள் என்று கூறுகிறது.

पित्रादीनां नाम यदा पुत्रैर्नज्ञायते तदा ।
पिथिवीषत् पितावाच्यस्तत्पिता चान्तरिक्षसत् ।
अभिधानापरिज्ञाने दिविषत्प्रपितामहः ॥

தகப்பனாரின் சர்மா தெரியாவிடில் "ப்ருதிவிஷத்" என்று சொல்லவும். இதே மாதிரி பிதாமஹரின் சர்மா தெரியாவிடில் "அந்தரிக்ஷஸத்" என்றும், ப்ரபிதாமஹருக்கு "திவிஷத்" என்றும் சொல்விக்கொள்ளவும்.

जमदग्निः — नदी वैतरणी नाम दुर्गन्धरुधिरावहा ।
कृष्णतोया महावेगिन्यस्थिकेशतरङ्गिणी ॥
दत्तागौ र्येन सापिण्डये सतां तरति नेतरः ॥

ஜமதக்னி:— வைதரணீ என்னும் நதீ துர்நாற்றமுள்ள ரக்தத்துடன்கூடியதாய், கருத்த தண்ணீருள்ளதாயும், மஹா வேகமுள்ளதாயும், எலும்பு மயிர் இவைகளுடன் கூடிய அலைகளுடைதாயும் உள்ளது. இது யமலோகம் போகும் வழியில் உள்ளது. எவன் ஸாபிண்ட்யத்தில் பசு கொடுக்கிறானோ அவன் அந்த நதியைத் தாண்டுகிறான். ஆகையால் வைதரணீ கோதானம் முக்கியம் என்று அறியவும்.

सर्वैरनुमतिं कृत्वा ज्येष्ठेनैव तु यत्कृतम् ।
द्रव्येणवाऽविभक्तेन सर्वैरेव कृतं भवेत् ॥
सपिण्डीकरणं पित्रोर्नकार्यमखिलैस्सुतैः ॥

மாதா, பிதாக்களின் ஸபிண்டீகரணத்தை ஜ்யேஷ்டனே செய்யவேண்டும். எவ்லோருடைய அனுமதியினுல் பிரிக்கப்படாத தனத்தைக் கொண்டு ஜ்யேஷ்டனுல் செய்யப்பட்டது எதுவோ அது எல்லோராலும் செய்யப்பட்டதாகும். மாதா, பிதாக்களின் ஸபிண்டீகரணத்தை எல்லா புத்தரர்களும் செய்யக்கூடாது.

सायणीये — सपिण्डीकरणं कुर्यात् पित्रोरौपासनानले ।
तथा मातामहस्यापि मातामह्याश्च निर्णयः ॥
तथा सीमन्तजातस्य ज्येष्ठस्यापि सपिण्डनं ।
औपासनाग्नौ कर्तव्यं जनकस्य समोहिसः ॥
पितामहस्य तत्पत्न्याः कार्यमौपसनानले ॥

மாதா, பிதாக்களுக்கும், மாதாமஹன் மாதாமஹீ, ஸீமந்த ஜ்யேஷ்ட ப்ராத்தா இவர்களுக்கும் ஔபாஸனக்னியில் ஸபிண்டீகரணம் செய்யவேண்டும். ஸீமந்த ஜ்யேஷ்ட ப்ராதா பிதாவுக்கு ஸமனுவான், பிதாமஹன், பிதாமஹீ இவர்களுக்கு ஔபாஸனக்னியில் ஸபிண்டீகரணம் செய்யவேண்டும்.

ब्रह्मचारी विधुरश्च लौकिकाग्नौ कुर्यात् ॥

ப்ரம்மச்சாரி, பத்னி இல்லாதவன் (விதுரன்) இவர்கள் லௌகிகாக்னியில் ஸபிண்டீகரணம் செய்யவேண்டும். இது ஆபஸ்தம்பருடைய மதமாகும்.

औपासनाग्नौ दूरस्थे केचिदिच्छन्ति सत्तमाः ।
पाणावेवतु होतव्यं इति नैतत्समंजसम् ।
प्राचीनावीतिनाहोमः कार्योऽग्नौ द्विजसत्तमाः ॥

ஔபாஸனாக்னி தூரத்திலிருந்தால் பாணியிலேயே ஹோமம் செய்யவேண்டுமென்று சில ஸாதுக்கள் விரும்புகிறார்கள். இது ஸமஞ்சஸமாகாது. பூணலை இடமாக செய்துகொண்டு செய்யும் ஹோமமானது அக்கினிலேயே செய்யவேண்டும், பிராம்மணோத்தமர்களே.

तच्छेषं विप्रपात्रेषु विकिरेत् संस्मरन् हरिम् ॥

ஹோமசேஷத்தை ப்ராம்மணர்களின் போஜனப் பாத்திரங்களில் வைக்க வேண்டும், விஷ்ணுவை ஸ்மரித்துக் கொண்டு, என்பது சாஸ்திரமாகும்.

अभार्यो दूरभार्यश्च ब्रह्मचारी च पैतृके ।
अग्नौकरणमेतेषां वह्नावेव उचितं भवेत् ॥

பத்னி இல்லாதவன், தூரத்தில் உள்ள பார்யையை உடையவன், ப்ரம்மசாரீ இவர்கள் ச்ராத்தத்தில் அக்னி காரியத்தை அக்னியில் செய்வது உசிதமாகும்; ஆகையால், லௌகிகாக்னியில் செய்யவும்.

सावकाशंतु यत्कार्यं न तत्कुर्याद्विदूषिते ।

பத்னி ரஜஸ்வலையாக இருந்தால் ஸ்னானம் செய்த பிறகு அக்னி ஸந்தானம் செய்துகொண்டு ஸபிண்டீகரணம் செய்யவும், அக்னி இருந்தாலும் பத்னி ரஜஸ்வலையாக இருந்தால் ஸபிண்டீகரணத்திற்கு நிறைய காலம் சொல்லப் பட்டிருப்பதால் ஸ்னானம் செய்தபிறகு செய்வது உசிதமானது. அசுத்த காலத்தில் செய்யவேண்டாம் என்பது கருத்து.

அநேக ப்ராதாக்கள் இருக்கும்பொழுது மூத்தவன் அக்னிமானுக இல்லாமல் இருந்தால் அக்னிமானுக (ஒளபாஸனுக்னி) இருப்பவன் ஸபிண்டீகரணம் செய்யவும். ஒரே புத்ரனுக இருந்து அக்னிமானுக இல்லாமல் இருந்தால் லௌகிகாக்னியில் ஸபிண்டீகரணம் செய்யவும்.

கர்த்தாவுக்கு பத்னி அனுகூலையாக இல்லாவிடில் ஒரு வருஷம் வரையில் அவளுடைய வரவை எதிர்பார்த்து, வந்தபிறகு ஸபிண்டீகரணம் செய்யவும். அல்லது அடுத்த ப்ராதாவை அக்னிமானுக உள்ளவனை செய்யச் சொல்லவும். ஒரு புத்ரனுக இருந்து ஒரு வருஷத்திற்குள் வரவில்லையானுல் பத்னிக்குப் பிரதிநிதி செய்துகொண்டு ஸபிண்டீகரணம் செய்யவும்.

பத்னி அனுகூலையாக இருந்து ஸபிண்டீகரணத்திற்கு கூட இருந்து நடத்திக் கொடுக்க ஸித்தமாக இருக்கும்பொழுது அவளை திரஸ்கரித்து செய்யும் ஸபிண்டீகரணம் வீணுக ஆகும். இவன் மேற்படி காரியம் செய்ய அர்ஹனல்ல என்று அறியவும்.

20. सोदकुम्भश्राद्धविधिः

ஸோதகும்ப ச்ராத்தம் செய்யும் முறை.

अदैवं पार्वणश्राद्धं सोदकुंभमधर्मकम् ।
कुर्यात् प्रत्याह्निक श्राद्धात् संकल्पविधिनान्वहम् ॥

விச்வேதேவர், விஷ்ணு, வரணம் இல்லாமல் மூன்று புருஷர்களை உத்தேசித்து செய்யும் ச்ராத்தம், உதகும்பத்துடன் கூடியது, ஸோதகும்ப ச்ராத்தமெனப்படும். இது கர்த்தாவுக்கும் போக்தாவுக்கும் விசேஷ ச்ராத்த நியமம் கிடையாது. கர்த்தா ப்ரம்மயக்ஞம், பூஜை முதலிய தேவ கார்யங்களை செய்து பிறகு செய்யலாம். 12வது தினத்தில் ஸபிண்டீகரணம் செய்தபிறகு அன்றைய தினமே ஆரம்பித்து ஆப்திக பர்யந்தம் தினமும் செய்யவேண்டும்.

त्यायनः — प्रतिमासं दर्शादौ वा मासिकाहान्यदिने वा ।
अतीत सोदकुंभ श्राद्धान्याहृत्यदद्यात् ॥

காத்யாயனர் — ப்ரதி தினமும் செய்யமுடியாவிடில் ஒவ்வொரு மாதத்திலும் ஸோத கும்ப ச்ராத்தங்களைச் சேர்த்துச் செய்யவும். தர்சத்தில் செய்யலாம், மாஸிகத்திற்கு முன்பு செய்யலாம். சென்றதுகளை, விட்டுப் போனதுகளைச் சேர்த்துச் செய்யவும். 12வது நாளில் ஸபிண்டீகரணம் ஆனபிறகு ப்ரேதத்வம் நீங்கிவிடுகிறபடியால் தஹன ஜனித க்ஷுத்ருஷ்ணுவினுல் உண்டான தாபம் இல்லை. ஆகையால் ஸோத கும்ப ச்ராத்தம் எதற்கு என்று நினைக்கலாம். சாஸ்த்திரம் ஒரு வருஷம் வரையில் ஆப்திக பர்யந்தம் செய்யச் சொல்லியிருக்கிறது. ஆகையால் ப்ரேத தாபம் நீங்கினுலும் மனதில் ப்ரேத பாபம் இருப்பதுபோல் தோன்றும் என்று அறியவும்.

सपिण्डीकरणादूर्ध्वं वर्षं वर्षार्धमेववा ।
नकुर्यात्पार्वण श्राद्धं अष्टका न विहन्यते ॥

ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு ஆப்திகத்திற்கு முன்பு தர்சம், மஹாளயம், மன்வாதி ச்ராத்தங்களைச் செய்யக் கூடாது. தர்ப்பணம் செய்யலாம். ஆனல் அஷ்டகா ச்ராத்தம் மாத்திரம் செய்யலாம்.

आशौचं द्वादशाहान्तं नकुर्याद्देवतार्चनम् ।
न कुर्यात् पितृकार्याणि दानं होमं जपं तथा ॥

ஆசௌசம் 12 நாள் வரையில் உள்ளது. ஆகையால் ஸபிண்டீகரணத்திற்கு முன்பு தேவ பூஜை, பித்ரு கார்யம், ஹோமம், தானம், ஜபம் முதலியவைகளைச் செய்யக்கூடாது.

21· आब्दिक श्राद्धम् ஆப்திக ச்ராத்தம்

धर्मसुधानिधौ — यस्मिन् मासि मृतिः पक्षे यस्ययस्यां तिथौ भवेत् ।
तस्यामेव तिथौ कुर्यादाब्दिकं तु विचक्षणः ॥

எவனுக்கு எந்த மாஸத்தில் எந்த பக்ஷத்தில் எந்த திதியில் மரணம் ஏற்பட்டதோ அந்த திதியில் ஆப்திகம் செய்யவேண்டும், விஷயமறிந்தவன்.

नारदः — यस्यां तिथौ मृतिः प्राप्ता तस्यामेवाब्दिकं भवेत् ।
तिथिनक्षत्रवाराणां तिथिरेव बलीयसी ॥

நாரதர் — எந்த திதியில் மரணம் ஏற்பட்டதோ அந்த திதியில் ஆப்திகம் செய்யவேண்டும். திதி, வாரம், நக்ஷத்திரம் இவைகளுக்குள் திதி அதிக பலம் உள்ளது என்று அறியவும்,

चन्द्रिकायां —मासपक्षतिथिस्पृष्टे यो यस्मिन् म्रियतेऽहनि ।
प्रत्यब्दं तु तथाभूतं क्षयाहं तस्यतं विदुः ॥

எவன் எந்த மாத-பக்ஷ-திதிகளுடன் கூடிய தினத்தில் இறந்தானே அவனுக்கு ப்ரதி வருஷமும் அதே விதமான காலத்தை ம்ருதாஹச்ராத்த தினமாக பெரியோர்கள் சொல்லுகிருர்கள்.

दर्शाद्दर्शश्चान्द्रः त्रिंशाद्दिवसास्तुसावनो मासः ।
रवि संक्रमचिह्नोऽसौ सौरोमासो निगद्यते तज्ज्ञैः ॥

தர்சத்திற்குப் பிறகு தர்சம் வரையுள்ளது, சாந்த்ர மாஸம். 30 நாட்கள் கொண்டது ஸாவன மாஸம். ஸூர்யனின் ஸங்கரமணத்தை அடையாளமாயுள்ளது ஸௌர மாஸம் என்று ஜ்யோதிஷர்களால் கூறப்படுகிறது.

दर्शान्तः पूर्णिमान्तश्च चान्द्रो मासो द्विधायतः ।
जातिभेदाद्देशभेदात् तौ च मासौ व्यवस्थितौ ॥
नर्मदा दक्षिणे भागे दर्शान्तोमास इष्यते ।
नर्मदोत्तर भागेतु पूर्णिमान्त इति स्थितिः
व्रते चान्द्रमासं शस्तं न श्राद्धेषु प्रशस्यते ।
अस्थिरश्चान्द्रमासस्स्यात् स्थिरस्सौरोऽत्रकारणम् ॥

சாந்த்ர மாஸம் தர்சாந்தம் என்றும், பூர்ணி மாந்தம் என்றும் இரண்டு விதமாய் சொல்லப்படுகிறது. ஜாதி பேதங்களாலும், தேச பேதத்தாலும், அந்த இரண்டு மாஸங்களும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. நர்மதா நதியின் தெற்கில் உள்ள தேசத்தில் தர்சாந்த சாந்த்ர மாஸமும் நர்மதையின் வடக்கு பாகமுள்ள தேசத்தில் பூர்ணிமாந்தமான சாந்த்ர மாஸமும் என்று ஜ்யோதிஷத்தில் கூறப்படுகிறது. வ்ரதானுஷ்டானத்தில் சாந்தர மாஸம் உயர்ந்தது. ச்ராத்த காரியங்களில் அது ப்ரசஸ்தமாகாது, சாந்தர மாஸமானது அடிக்கடி அதி மாஸம் ஏற்படு மாகையால் ஸ்திரமில்லாதது. ஸௌர மாஸமானது ஸ்திரமானது. ஆகையால் ச்ராத்த காரியங்களுக்கு ஸௌர மாஸம் உயர்ந்தது என்று அறியவும்.

आदित्यगतिमुपजीव्य अयननिष्पत्तेस्सौरमेवैतत् ।

அயனம் ஸூர்ய கதியை அனுஸரித்து ஏற்படுவதால் அயனம் ஸௌரம் என்றே கூறப்படுகிறது, மகரஸங்க ராந்தியை உத்தராயணம் என்றும், கர்கடக ஸங்கராந் தியை தக்ஷிணாயனம் என்றும் அயனபுண்ய காலங்களை குறிப்பிடுகிறோம்.

ச்ராத்த விஷயத்தில் ஸெளர, சாந்தர மாஸங்களை சாஸ்த்திரங்களில் ப்ரமாணமாக க்ரஹிப்பதால் அனுஷ்டானத்தில் விகல்ப்பம், அதாவது ஒரு ப்ராமணத்தை ஆதாரமாகக் கொண்டு இரண்டு மாதங்களுக்குள் ஒரு மாதத்தில் ஆப்திக ப்ரத்யாப்திக ச்ரார்தங்களை அனுஷ்டிக்கவும், நம் வம்சங்களில் பெரியோர்கள் அனுஷ்டித்த பிரகாரம் அனுஷ்டிக்கவும். சாந்த்ர மாஸ ரீதியில் செய்கிறவர்கள் அதி மாஸம் வந்தால் அதி மாஸ திதியிலும், நிஜ மாஸ திதியிலும் ச்ராத்தத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

22. सौरमासेतिथिद्वयसंभवे अनुष्ठानक्रमः

ஸெளர மாஸத்தில் இரண்டு திதி ஸம்பவித்தால்
அனுஷ்டிக்க வேண்டிய முறை

संग्रहे — सौरमासे तिथिद्वैधे मासिकाब्दिकयोः परा ।
सा चोपरागसंक्रान्ति दुष्टा चेत् पूर्विकामता ॥

ஸெளர மாதத்தில் இரண்டு திதிகள் வந்தால் ஆப்திகம், மாஸிகம் ப்ரத்யாப்திகம், முதலிய ச்ராத்தங்களை பின் திதியில் அனுஷ்டிக்கவேண்டும். பின் திதியில் க்ரஹணம், ஸங்க்ரமணம் முதலியது வந்தால் துஷ்டமாகிவிடுகிறது. அப்பொழுது முன் திதியில் ச்ராத்தம் செய்ய வேண்டும்.

द्वयोर्दोषेऽर्क संक्रान्तिरर्वागावर्तनाद्यदि ।
पूर्वापराऽन्यथा ग्राह्या कर्मकाले द्वयोरपि ।
दुष्टे तन्मास संबन्ध भूयस्त्वं यत्र सा मता ॥

இரண்டு திதிகளிலும் தோஷமிருந்தால் ஸூரிய ஸங்க்ரமணம் மத்தியானத்திற்கு முன்பு இருந்தால் பூர்வ திதியை க்ரஹிக்கவும். இல்லாவிடில் பின் திதியை க்ரஹிக்கலாம்.

இரண்டு திதிகளிலும் அபராஹ்ணம் துஷ்டமானால் எந்த திதியில் மாஸ ஸம்பந்தம் அதிகமாயுள்ளதோ அந்த திதியை க்ரஹிக்கவும்.

मास्येऽकस्मिन् तिथौ पित्रोर्दिवा संक्रमणे सति ।
अपराह्णात् परो दोषो न भवेत् श्राद्धकर्मणि ॥

ஒரு மாஸத்தில் மாதா, பிதாக்களின் ம்ருத திதியில் பகலில் ஸங்கரமணம் அபராஹ்ணத்திற்கு பிறகு நேர்ந்தால் ச்ராத்தம் செய்யலாம். இது ஒரே திதி வரும் விஷயத்தில் என்று அறியவும். தோஷமில்லாமல் இரண்டு திதி ஸம்பவித்தால் பின் திதியில் ச்ராத்தம் செய்யவும்.

संवर्तः — सौरमासविधाने तु मृतमासे तिथिर्नचेत् ।
पूर्वमासे तदाकुर्यादुत्तरे मासि दुःखदम् ॥

ஸம்வர்த்தர் :—ஸௌர மாஸ விதிப்படி ம்ருத் மாஸத்தில் திதி கிடைக்காவிடில் அப்பொழுது முன் மாத திதியில் ச்ராத்தம் செய்யவும். பின் மாத திதியில் ச்ராத்தம் செய்யக் கூடாது. செய்தால் துக்கம் வரும் என்று அறியவும்.

मृताहं समतिक्रम्य चण्डालः कोटिजन्मसु ।
अतो विप्रै न तत्त्याज्यं प्राणैः कण्ठगतैरपि ॥

இறந்த தினத்தில் ப்ரதி வருஷம் ச்ராத்தம் செய்ய வேண்டும். தவறிவிட்டால் கோடி ஜன்மாக்களில் சண்டாளனுகப் பிறப்பான். ஆகையால் ப்ராணன் போகும் ஆபத்து நேர்ந்தாலும் ச்ராத்தத்தை விடக்கூடாது என்பது கருத்து.

23. श्राद्धे तिथिकालादि निरूपणम्

ச்ராத்தத்திற்கு தகுந்த திதி முதலியவைகளின் நிரூபணம்.

गौतमः — मध्याह्नव्यापिनी यास्यात् सैकोद्दिष्टे तिथिर्भवेत् ।
अपराह्णव்यापिनी स्यात् पार्वणे सा तिथिर्भवेत् ॥

கௌதமர் :—எந்த திதியில் மத்யாஹ்ன வ்யாப்தி இருக்கிறதோ அதில் ஏகோத்திஷ்டம் செய்யவேண்டும். எந்த திதி அபராஹ்ணத்தில் இருக்கிறதோ அதில் பார்வண ச்ராத்தம் செய்யவேண்டும்.

व्यासः — मुहूर्तत्रितयं प्रातः तावानेवतु संगवः ।
मध्याह्नस्त्रिमुहूर्तस्स्यादपराह्णोऽपि तादृशः ।
सायाह्नस्त्रिमुहूर्तस्तु सर्वकर्म बहिष्कृतः ॥

வ்யாஸர் :—மூன்று முகூர்த்தம் (6 நாழிகைகள்) ப்ராத: காலம் என்றும், பிறகு மூன்று முகூர்த்தம் ஸங்கவ காலமென்றும், பிறகு மூன்று முகூர்த்தம் மத்யாஹ்ண காலம் என்றும், பிறகு மூன்று முகூர்த்தம் அபராஹ்ணம் என்றும், பிறகு மூன்று முகூர்த்தம் ஸாயாஹ்ணம் என்றும் சொல்லப்படுகிறது. ஸாயாஹ்ணம் கர்மாக்களுக்கு உகந்த தல்ல என்று அறியவும்.

रौद्रश्चैत्रस्तथा मैत्रस्तथा सालकटः स्मृतः ।
सावित्रश्च जयन्तश्च गान्धर्वः कुतपस्तथा ॥
रौहिणश्च विरिंचश्च विजयो नैर्ऋतस्तथा ।
माहेन्द्रो वरुणश्चैव बोधः पंचदश स्मृतः ॥

பகலில் 15 முகூர்த்தங்கள் உள்ளது. முகூர்த்தம் இரண்டு நாழிகைகள் என்று அறியவும். ரௌத்ர : சைத்ர

ஸாலகட : ஸாவித்ர : ஜயந்த : காந்த்ரவ : குதப : ரௌஹிண : விரிஞ்ச : விஜய : நைர்ருத : மாஹேந்த்ர : வருண : போத : என்று பெயருள்ளவைகள் இந்த பதினைந்து முகூர்த்தங்கள் என்று அறியவும்.

कालनिर्णयकारः —तत्र पंचधाविभागपक्षस्य बहु श्रुतिस्मृतिसिद्धत्वात् प्रायेणैतमेव पक्षमाश्रित्य विधिनिषेधशास्त्राणि प्रवर्तन्ते ॥

வாஸரத்தை இரண்டுவிதமாயும், மூன்று விதமாயும், நான்கு விதமாயும், கூறப்படுகிறது. ஆனுல் ஐந்துவிதமாக கூறுகிற பக்ஷத்தைத்தான் வேதம் ஸ்மிருதிகள் அங்கீகரித்து விதி நிஷேதங்களை தெரிவிக்கின்றன. ஆகையால் ஐந்துவித விபாகபக்ஷமே ச்லாக்யமானது.

ऊर्ध्वं मुहूर्तात् कुतपाद्यन्मुहूर्त चतुष्टयम् ।
मुहूर्त पंचकं ह्येतत् स्वधाभवन मिष्यते ॥

பகலில் எட்டாவது முகூர்த்தம் குதபம் என்பதாகும். அதற்கு மேல் நான்கு முகூர்த்தங்களும், குதபத்தை சேர்த்து ஐந்து முகூர்த்தங்களும், ச்ராத்தத்திற்கு சரியான காலம் என்று அறியவும். ஆக 15வது நாழிகையிலிருந்து 24வது நாழிகை வரையில் ச்ராத்த காலமென்று குறிப்பிடப்படுகிறது. அபராஹ்ணம் 19வது நாழிகையிலிருந்து 24வது பர்யந்தம் சொல்லப்படுகிறது. அது ச்ராத்ததிற்கு முக்கிய காலம் என்பது.

कुतपे प्रक्रान्तस्य सायाह्नादर्वाचीनस्सर्वोऽपि मुख्यकालः ।

குதப காலத்தில் ஆரம்பித்து ஸாயாஹ்ணத்திற்கு முன் உள்ள காலமானது ச்ராத்தத்திற்கு முக்கிய காலம் என்று அறியவும்.

बोधायनः —अपराह्णद्वयव्यापिन्यतीतस्य च यातिथिः ।
क्षये पूर्वातु कर्तव्या वृद्धौ कार्या तथोत्तरा ।

போதாயனர் :—முன் பின் இரண்டு நாளும் அபராஹ்ண வ்யாபிநீதிதியாக இருந்தால், க்ஷயதிதியாக இருந்தால் முதல் அபராஹ்ண வ்யாபிநீ திதியில் ச்ராத்தம் செய்யவும். வ்ருத்தி திதியாக இருந்தால் மறுநாள் அபராஹ்ண வ்யாபிநீ திதியில் ச்ராத்தம் செய்யவும். இரண்டு நாளிலும் அபராஹ்ண வ்யாபித்வம் திதிக்கு இல்லையேயானால் முதல் நாள் அஸ்தமன வ்யாபியான திதியில் ச்ராத்தம் செய்யவும்.

वसिष्ठ :— पित्र्येऽस्तमयवेलायां स्पृष्टा पूर्णा निगद्यते ॥

வஸிஷ்டர் :—பித்ரு காரிய விஷயத்தில் அஸ்தமன காலத்தில் ஸம்பந்தப்பட்ட திதி பூர்ணமானது என்று அறியவும்.

24 आब्दिकादीनां विभक्तैः पृथगनुष्ठानम्

ஆப்திகம் முதலிய ச்ராத்தங்களை பிரிந்த ஸஹோதரர்கள் தனித்தனியாகச் செய்யவேண்டும்

विभक्ताः भ्रातरस्सर्वे स्वस्वार्जित धनाशनैः ।
दर्शाब्दिकादिकं पित्रोः श्राद्धं कुर्युः पृथक्पृथक् ॥

சொத்தைப் பிரித்துக்கொண்டு இருக்கும் ஸஹோதரர்கள், தன்னால் ஸம்பாதித்ததைக் கொண்டு ஜீவனம் நடத்துபவர்கள் தர்சம், ஆப்திகம், ப்ரத்யாப்திகம் முதலிய ச்ராத்தங்களைத் தனித்தனியாகச் செய்யவேண்டும்.

अपुत्रा तु यदा नारी संप्राप्ते भर्तुराब्दिके ।
रजस्वलाभवेत्सातु तत्कुर्यात्पंचमेऽहनि ॥

புத்ரனில்லாத ஸ்திரீ, தன் பர்த்தாவுக்கு ச்ராத்தம் வரும் திதி காலத்தில் ரஜஸ்வலையாக இருந்தால் அந்த ச்ராத்தத்தை ஐந்தாவது நாளில் செய்யவேண்டும்.

आपन्नोऽप्याह्निकं नैव कुर्यादामेन कर्हिचित् ।
अन्नेन तदमायां तु कृष्णे वा हरिवासरे ॥

ஆபத்தை அடைந்தாலும் ஆப்திக ச்ராத்தத்தை ஆம ரூபமாக ஒரு காலும் செய்யக்கூடாது. அந்த திதியில் செய்ய முடியாமல்போனால், அமாவாஸ்யை அல்லது க்ருஷ்ண ஏகாதசியில் செய்யவேண்டும். ஆசௌசத்துக்குள் ச்ராத்த திதி வந்தால் ஆசௌசம் போனவுடன் செய்ய வேண்டும்.

पितृमृताहे पितृपितामह प्रपितामहानां उद्देश्यत्वम् ।
मातृमृताहे मातृपितामही प्रपितामहीनां उद्देश्यत्वम् ॥

பித்ரும்ருதாஹ ச்ராத்தத்தில் பிதா-பிதாமஹ ப்ரபி தாமஹர்களுக்கு உத்தேச்யத்வம், அதே மாதிரி மாத் ரும்ருதாஹ ச்ராத்தத்தில் மாதா-பிதாமஹீ - ப்ரபிதாமஹீ இவர்களுக்கு உத்தேச்யத்வம் என்று அறியவும்.

विष्णुः — मातुर्मृताहे पित्रादीन् होमपिण्डैः प्रपूजयेत् ।

விஷ்ணு:—மாத்ரு ச்ராத்தத்தில் ஹோமம், பிண்டம், இவைகள் பிதாவுக்கும், பிதா மஹருக்கும் ப்ரபிதாமஹருக் கும் என்று. இது ஆபஸ்தம்பிகளுக்குச் சொல்லப்பட்டது. மாத்ரு வர்கத்திற்கு வரணம், அர்க்ய முதலிய உபசாரங்கள் உண்டு என்று அறியவும்.

एकोद्दिष्टेषु सर्वेषु सपिण्डीकरणे तथा ।
मासिकेष्वाह्निके चैव न कुर्यात्तिलतर्पणम् ॥

ஏகோத்திஷ்டங்களிலும், ஸபிண்டீ - கரணத்திலும் மாஸிகங்களிலும், ஆப்திகத்திலும் ச்ராத்தாங்க திலதர்ப் பணம் செய்யக்கூடாது. பாக்கி உள்ள ப்ரத்யாப்திக, மஹாலயாதி ச்ராத்தங்களில் ச்ராத்தாங்கதில தர்ப்பணம் அவசியம் செய்யவேண்டும்.

25. मलमास निरूपणम्—மலமாஸ நிருபணம்

चान्द्रो मासो ह्यसंक्रान्तो मलमासः प्रकीर्तितः ।

சுக்ல பக்ஷ ப்ரதமையிலிருந்து அமாவாஸ்யை பர்யந்தம் சாந்த்ர மாஸமாகும். அந்த மாஸத்தில் ஸூர்ய ஸங்க்ரமணம் இல்லையேயானால் அந்த சாந்த்ர மாஸம் மல மாஸம் என்று சொல்லப்படுகிறது.

यदा द्विसंक्रान्ति युक्तो मासो भवेत् तदा क्षयमासो वर्जनीयः ।

எப்பொழுது சாந்த்ர மாஸத்தில் இரண்டு ஸங்க்ரமணம் வருகிறதோ, அதற்கு க்ஷய மாஸம் என்று பெயர். இதுவும் மலமாஸம்போல் கர்மாக்களுக்கு உகந்தது இல்லை என்று அறியவும்.

अंहस्पतिर्यदैकस्मिन् चान्द्रे द्वौ संक्रमौ तथा ॥

சாந்த்ர மாஸத்தில் இரண்டு ஸங்க்ரமணம் வந்த க்ஷய மாஸத்தை அம்ஹஸ்பதி என்றும் சொல்லப்படுகிறது. இது அபூர்வமாகவரும். இது எந்த சாந்த்ரமாஸத்தில் வருகிறதோ அந்த மாதம் க்ஷயமாகி அடுத்த மாதம் வந்துவிடும் என்று அறியவும்; அடுத்த மாத புண்யகாலங்கள் வந்துவிடும் என்பது கருத்து.

दर्शद्वयं यदैकस्मिन् सौरे संसर्पको भवेत् ॥

ஒரு ஸௌர மாதத்தில் இரண்டு அமாவாஸ்யைவருமானால் இது ஸம்ஸர்ப்பக மாஸம் என்று சொல்லப்படுகிறது. இவைகளில் ஸம்ஸர்ப்ப ரூபமான அதி மாஸத்தில் முதல் மாதம் துஷ்டமானது. கர்மாவுக்கு அர்ஹமில்லை. அடுத்த மாதம் கர்மார்ஹமானது, சுத்தமானது. அம்ஹஸ்

பதி ரூபமான அதி மாஸமானது முதல் மாதம் சுத்தமானது, கர்மாவுக்கு உகந்தது. பின் மாதம் கர்மானர்ஹமானது, துஷ்டமானது என்று அறியவும்.

वृद्धवसिष्ठ :—वापीकूपतटाकानां प्रतिष्ठां यज्ञकर्म च
न कुर्यान्मलमासेतु महादानव्रतानि च ॥

வ்ருத்த வஸிஷ்டர் :—ஓடை, கிணறு, குளம் இவைகளின் ப்ரதிஷ்டை, ஸோமயாகம், மஹா தானங்கள் (துலா புருஷ தானங்கள்) இவைகளையும் மல மாதத்தில் செய்யக் கூடாது.

कालनिर्णये— जातकर्म च पुंसूतिस्सीमन्तोन्नयनं व्रतम् ।
मलिम्लुचेऽपि कुर्वीत निमित्तं यदि जायते ॥

ஜாத கர்மா, பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், வ்ரதம் இவைகளை மல மாதத்திலும் செய்யலாம், இந்த காரியங்களுக்கு அவசியமான நிமித்தம் நேர்ந்தால் என்று அறியவும். அபர காரியங்களும் செய்யலாம்.

26. दर्शश्राद्धम्—தர்ச ச்ராத்தம்

विष्णु पुराणे—श्राद्धं श्रद्धान्वितः कुर्वन् प्रीणयत्यखिलं जगत् ।
मासि मास्यसिते पक्षे पंचदश्यां नरेश्वर ॥

அரசனே, ஒவ்வொரு மாஸத்திலும் க்ருஷ்ண பக்ஷத்தில், அமாவாஸ்யையில் ச்ரத்தையுடன் தர்ச ச்ராத்தம் செய்கிறவன் உலகம் முழுவதையும் திருப்த்தி செய்விக்கிறான்.

न निर्वपति यः श्राद्धं प्रमीतपितृको द्विजः ।
इन्दु क्षये मासि मासि प्रायश्चित्तीयते हि सः ॥

இறந்த பிதாவை உடையவன், தர்ச ச்ராத்தம் அவசியம் செய்யவேண்டும். அமாவாஸ்யையில் ச்ராத்தம் செய்யாத ப்ராம்மணன் ப்ராயச்சித்தம் செய்து கொள்ளவும்.

पितृन् मातामहांश्चैव द्विजः श्राद्धेन तर्पयेत् ।

தர்சத்தில் பித்ரு - பிதாமஹ - ப்ரபிதாமஹர்களையும் மாதாமஹ, மாது : பிதாமஹ, மாது : ப்ரபிதாமஹர்களையும் வரணம் செய்யவும். தர்சத்தில் தனியாக மாத்ரு வர்கத்திற்கும், மாதாமஹீ வர்கத்திற்கும் உத்தேச்யத்வம் கிடையாது என்று அறியவும்.

अमाष्टकासु संक्रान्तौ पातादौ ग्रहणेषु च
स्नात्वा तिलोदकं दत्वा ततः श्राद्धं समाचरेत् ।

தர்சம், அஷ்டகை, ஸங்க்ரமணம், வ்யதீபாதம், க்ரஹணம் இவைகளில் ஸ்னானம் செய்து திலதர்ப்பணம் செய்து பிறகு ச்ராத்தம் செய்யவேண்டும் என்று அறியவும்.

अपराह्णः पितॄणां तु याऽपराह्णानुयायिनी ।
साग्राह्या पितृकार्येतु न पूर्वाऽस्तानुयायिनी ।

பித்ரு காரியங்களுக்கு அபராஹ்ணம்காலமாகும். ஆகையால் அபராஹ்ண வ்யாப்தியான அமாவாஸ்யை க்ரஹிக்கவும். ச்ராத்தத்திற்கு பூர்வத்தில் அஸ்தமன வ்யாப்தியாக இருந்தாலும் அந்த தர்சம் ச்ராத்தத்திற்கு உகந்தது அல்ல.

अल्पापराह्णा त्याज्याऽपा ग्राह्यास्यादधिका भवेत् ॥

அபராஹ்ணத்தில் அமாவாஸ்யை அல்ப வ்யாப்தியாக இருக்கும் தினத்தைத் தியாகம் செய்து நிறைய வ்யாப்தி உள்ளதை க்ரஹிக்கவும்.

नारदः — अपराह्णद्वय व्यापिन्यमावास्या यदा भवेत् ।
क्षये पूर्वातु कर्तव्या वृद्धौ साम्ये तथोत्तरा ॥

நாரதர்:—அமாவாஸ்யையானது இரண்டு நாள் அபராஹ்ணத்திலும் வ்யாபித்து இருக்குமேயானால் அப்பொழுது திதி க்ஷய விஷயத்தில் பூர்வ திதியை க்ரஹிக்கவும். திதி வ்ருத்தியிலும் ஸாம்யத்திலும் மறுநாளை க்ரஹிக்கவும்.

27. अर्धोदयमहोदयपुण्यकाल निरूपणम्

அர்தோதயமஹோதய புண்ணிய கால நிருபணம்

संग्रहे — पातस्यान्तः पूर्वपादस्त्वमायाः श्रोणामध्यं भास्करस्योदयश्च ।
भानोर्वारे त्वेषचार्धोदयस्स्यात् सौम्येवारे तं महापूर्वमाहुः ॥

வ்யதீ பாதத்தில் முடிவு அமாவாஸ்யையின் முதல் பாகம், ச்ரவணத்தின் மத்ய பாகம், ஸூரியோதயம், ஞாயிறு இவைகள் புஷ்யமாக மாஸங்களில் ஸம்பவித்தால் அர்தோதய புண்ணிய காலமாகும். இதில் முன் நான்கும், திங்கள் கிழமையும் சேர்ந்தால் மஹோதய புண்ணிய காலமாகும்.

अमावास्या तु सोमेन सप्तमी भानुनासह ।
चतुर्थीभूमिपुत्रेण सोमपुत्रेण चाष्टमी ॥
चतस्रस्तिथयस्त्वेतास्सूर्यग्रहण सन्निभाः ॥

அமாவாஸ்யை திங்களுடனும், ஸப்தமீ ஞாயிற்றுக் கிழமையுடனும், சதுர்த்தீ செவ்வாயுடனும், அஷ்டமீ புதனுடனும் ஆக நான்கு திதிகளும் ஸூரிய க்ரஹணப் புண்ணிய காலங்களுக்குச் சமமாகும் என்று அறியவும்.

28. अष्टकाश्राद्धनिरूपणं *அஷ்டகா ச்ராத்தத்தின் நிருபணம்.*

शौनकः— हेमन्तशिशिरयोश्चतुर्णामपरपक्षाणां अष्टमीषु अष्टकाः ।

ஸெளனகர் — ஹேமந்தசிசிரருதுக்களுடைய மாஸங்களில் க்ருஷ்ண பக்ஷங்களில் வரும் அஷ்டமீக்கள் அஷ்டகா புண்ய காலமாகும்; மார்க்கசீர்ஷம், பௌஷம், மாகம், பால்குணம் இந்த மாதங்களில் வரும் அஷ்டமீக்கள் என்று அறியவும். ஒவ்வொன்றிலும் பூர்வேத்யு: — அஷ்டகா — அன்வஷ்கா என்று ஸப்தமீ, அஷ்டமீ, நவமீ திதிகளில் மூன்று ச்ராத்தங்கள் செய்யவேண்டும்.

या माघ्याः पौर्णमास्या उपरिष्टाद्व्यष्टका तस्यां
अष्टमी ज्येष्टया संपद्यते तामेकाष्टके त्याचक्षते ।

மாக மாத பூர்ணிமைக்குப் பிறகு வரும் கிருஷ்ண பக்ஷத்தில் அஷ்டமீ, கேட்டை நக்ஷத்திரத்துடன் கூடுறது. அதற்கு ஏகாஷ்டகா என்று சொல்லுவார்கள். இது முக்கிய மான அஷ்டகையாகும் என்று ஆபஸ்தம்பர்கூறுகிருர்.

तिलोदकं प्रदातव्यं निर्धनेनाति भक्तितः ।
अष्टका श्राद्धसिद्धयर्थं प्रौष्ठपन्माघमासयोः ॥

பாத்ரபத மாஸம், மாகமாதம், இந்த மாதக் கிருஷ்ண பக்ஷ அஷ்டமியில் ச்ராத்தம் செய்ய தன வசதி குறைவு உள்ளவர்கள் பித்ருக்களை உத்தேசித்து தில தர்ப்மணமா வது செய்யவேண்டும்.

29. महालयश्राद्धनिरूपणं —*மஹாலய ச்ராத்த நிருபணம்.*

मार्कण्डेयः— कन्यागते सवितरि दिनानि दश पंच च ।
पार्वणेनैव विधिना तत्र श्राद्धं विधीयते ॥

மார்கண்டேயர் :— ஸூரியன் கன்யா ராசியை அடைந்திருக்கும் பொழுது பதினைந்து நாட்களிலும் பார்வணவிதானமாக ச்ராத்தம் செய்யவேண்டும்.

ஜாபாலி: — आगतेऽपि रवौ कन्यां श्राद्धं कुर्वीत सर्वदा ।
अषाढ्याः पंचमः पक्षः प्रशस्तः पितृकर्मसु ॥
पुत्रानायुस्तथाऽऽरोग्यं ऐश्वर्यमतुलं तथा ।
प्राप्नोति पंचमे दत्वा श्राद्धं कामांस्तथापरान् ॥

ஜாபாலி— ஸூர்யன் கன்யா ராசியிலிருக்கும்பொழுது க்ருஷ்ண பக்ஷத்தில் எப்பொழுதும் ச்ராத்தம் செய்யவேண்டும். ஆஷாட பூர்ணிமையிலிருந்து ஐந்தாவது பக்ஷம் ச்ராத்த காரியங்களில் ப்ரசஸ்தமாகும். ஐந்தாவது பக்ஷத்தில் ச்ராத்தம் செய்தால் புத்ரர்கள் ஆயுஸ், ஆரோக்கியம், ...ிக ஐஸ்வர்யம் இவைகளையும், எதை விரும்புகிறோமோ அவைகளையும் அடையலாம்.

रवेः कन्यागतत्वेन पक्षोऽयं पूज्य इष्यते ।
आदा वेवान्तरेऽन्तेवा शस्तः कन्यागते रवौ ॥

ஸூர்யன் கன்யா ராசியை அடைந்து இருப்பதால் இந்த பக்ஷம் புண்ணியமெனக் கருதப்படுகிறது. ஆதியில் அல்லது நடுவில், முடிவிலாவது ஸூர்யன் கன்யா ராசியில் இருந்தாலும் போதுமானது. அந்த பக்ஷம் ச்லாக்யமானது. சில மஹரிஷிகள் ப்ரதமையில் ஆரம்பித்து அடுத்த ப்ரதமை பர்யந்தம் 16 நாள் ச்ராத்தம் செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். இந்த இடங்களில் இரண்டு விதியும் சாஸ்திர ஸம்மதமாகும். ஆகையால் ஒரு சாஸ்த்திரத்தை அனுசரித்து அனுஷ்டிக்கவும். மாதவீயத்தில் 15 தினங்களும் செய்யலாம்; 16 தினங்களும் செய்யலாம் என்பது விகல்பமாகும். ஆனால் பக்ஷம் என்பது 15 தினங்களாகும். அது எல்லோராலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

कन्यागते सवितरि पितरो यान्ति वै सुतान् ।
शून्या प्रेतपुरी सर्वा यावद्वृश्चिक दर्शनम् ॥

ஸூர்யன் கன்யா ராசியில் இருக்கும்பொழுது பித்ருக்கள் அவரவர்களுடையப் புத்திரர்களை அடைகிருர்கள். ஆகையால் யமப்பட்டினம் காலியாகிவிடுகிறது. புத்ரர்களை அடைந்து ச்ராத்தம் செய்வான். ஆகையால் நம்முடைய பசி தாகம் போகுமென்று எண்ணத்துடன் பித்ருக்கள் வருகிருர்கள். ஆகையால் பித்ரு பக்ஷத்தில் ச்ராத்தம் செய்யவேண்டும். ஒரு நாளாவது செய்யவேண்டும். செய்யாவிடில் வ்ருச்கிக மாஸ பர்யந்தம் எதிர்பார்க்கிருர்கள். அப்பொழுதும் ச்ராத்தம் செய்யவில்லையேயானுல் சாபத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லுகிருர்கள். இந்த பக்ஷத்தில் பரணீ, அஷ்டமீ, வ்யதீபாதம், த்வாதசீ இவைகள் விசேஷ புண்ணிய காலமாகும் என்று அறியவும். இந்த பக்ஷத்தில் ஒரு நாளாவது ச்ராத்தம் செய்யவேண்டும். அதற்கு "ஸக்ருத் மஹாளய ச்ராத்தம்" என்று பெயர்.

दैवं पिता ततो माता सपत्नी जननी तथा ।
मातामहास्सपत्नीकाः पितृव्या भ्रातरस्सुताः ॥
पितृष्वसा मातुलाश्च तद्भगिन्यश्च जामयः ।
भगिनी दुहिता भार्या श्वशुरो भावुकस्स्नुषा ॥
स्यालको गुरुराचार्यस्वामि सख्यादयः क्रमात् ।
भोज्या महालय श्राद्धे एते कारुणिकाह्वयाः ॥

மஹாளய ச்ராத்தத்தில் உத்தேச்ய பித்ருக்களைக் குறிப்பிடப்படுகிறது. விச்வேதேவர், பிதா, மாதர், ஸபத்னீ மாதா, ஸபத்னீகர்களான மாதா மஹாதிகள், பித்ருவ்யர், அத்தை, மாமா, சிறிய தாயார், பெரிய தாயார், ஜாமிகள் (குல ஸ்திரீகள்) ஸஹோதரி, பெண், பார்யை, மாமனார்,

மாமியார், பகினீபதி, நாட்டுப்பெண், மைத்துனன், குரு, ஆசார்யன், ஸ்வாமி, ஸ்நேகிதன், இவர்கள் முதலியவர்கள் காருணிக பித்ருக்கள் ஆவார்கள். இவர்களும் தனியாக பூஜிக்கத்தக்கவர் மஹாளய ச்ராத்தத்தில், என்பது தனிச் சிறப்பாகும் என்று அறியவும்.

पित्रोर्मृतदिनात्पूर्वं न तन्मासि महालयम् ।
पित्रोः श्राद्धं तु निर्वर्त्य पश्चात् कुर्यान्महालयम् ॥

மாதா, பிதாக்களின் ச்ராத்தத்திற்கு முன்பு அந்த மாதத்தில் மஹாளயத்தை செய்யக்கூடாது. மாதா, பிதாக்களின் ச்ராத்தம் செய்த பிறகு மஹாளயம் செய்யவேண்டும். சிலர் பார்வணம் செய்ய முடியாத காரணத்தினால் ஹிரண்ய ரூபமாக மஹாளய ச்ராத்தம் செய்து தர்ப்பணம் செய்து ப்ராம்மண போஜனம் செய்விக்கிறார்கள், அதுவும் உசிதமென்று அறியவும்.

30. वृद्धिश्राद्धनिरूपणम्—வ்ருத்தி ச்ராத்த நிருபணம்.

विष्णुपुराणे — जातस्त जातकर्मादि क्रियाकाण्डमशेषतः ।
पुत्रस्य कुर्वीत पिताश्राद्धं चाभ्युदयात्मकम् ॥

தகப்பனார், தன் புத்திரர்களுக்கு ஜாதகர்மா, நாமகரணம் முதலிய காரியங்களை தானே செய்யவேண்டும். அந்த சமயத்தில் நாந்தீ ச்ராத்தமும் செய்யவேண்டும்.

नामान्न चौल गोदान सोमोपनयनपुंसवे ।
स्नाना धान विवाहेषु नान्दीश्राद्धं विधियते ॥

நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், ஸாமவர்த்தனம், ஸோமயாகம், உபநயனம், பும்ஸவனம், ஸ்னானகர்மா, அக்ன்யாதானம், விவாஹம், இவைகளில் நாந்தீ

ச்ராத்தம் செய்யவேண்டும். இவைகளில் ஜாத கர்மா முதல் விவாஹப்பர்யந்தம் உள்ள காரியங்களில் தகப்பனுர் புத்திரனை உத்தேசித்து நாந்தீ செய்யவேண்டும் என்று அறியவும்.

पूर्वाह्ण एव नान्दीस्यात् अपराह्णेतु पैतृकम् ॥

நாந்தீ ச்ராத்தம் பூர்வாஹ்ணத்தில் செய்யவேண்டும். அஹஸ்ஸை மூன்ருக விபாகம் செய்தால் பூர்வாஹ்ணம் பத்து நாழிகைகள் உள்ள காலமாகும் (பத்து மணிக்குள் செய்வது) அதில் நாந்தீ ச்ராத்தம் செய்யவேண்டும் என்பது கருத்து, நாந்தீ ச்ராத்ததில் தயிர், இலந்தைப் பழம், அக்ஷதை கலந்த பிண்டங்களினுல் பிண்ட ப்ரதானம் செய்யவேண்டும். எள், ஸ்வதாசப்தம், பூணுலை இடமிட்டுக் கொள்வது இவைகள் கூடாது. தக்ஷிணுக்ரமாக தர்ப்பங்கள் போடக்கூடாது. ப்ராம்மணர்கள் தனம் முதலிய வசதி இல்லையேயானுல் ஹிரண்ய ரூபமாக செய்யலாம். சில கர்மாக்களைச் சேர்த்து ஒரே ஸமயத்தில்செய்யும் பொழுது நாந்தீ ச்ராத்தம் ஒரு தடவை செய்தால் போதும் என்று அறியவும்.

31. श्राद्धे देशकालादि निरूपणम्

ச்ராதத்தில் தேச காலங்கள் நிருபணம்

पुराणे — देशे काले च पात्रे च श्रद्धया विधिना च यत् ।
पितृनुद्दिश्य विप्रेभ्यो दत्तं श्राद्धमुदाहृतम् ॥

நல்ல தேச காலங்களில் யோக்யனை ப்ராம்மணனிடத்தில் ச்ரத்தையுடன் முறைப்படி பித்ருக்களை உத்தேசித்து ஏது கொடுக்கப்படுகிறதோ அது ச்ராத்தமென்று கூறப்படு

கிறது. அது இரண்டுவிதமானது. ஒருவனை உத்தேசித்துச் செய்யப்படும் ச்ராத்தம் ஏகோத்திஷ்டம் என்றும், மூன்று பேர்களை உத்தேசித்துச் செய்யப்படும் ச்ராத்தம் பார்வணம் என்றும் சொல்லப்படுகிறது.

श्राद्धद्वयं तथोद्दिष्टमेकोद्दिष्टं च पार्वणम् ।
नित्यं नैमित्तिकं काम्यमिति तच्च पुनस्त्रिधा ॥

ஏகோத்திஷ்டம் என்றும், பார்வணம் என்றும் ச்ராத்தம் இரண்டுவிதம். இந்த ச்ராத்தங்கள் நித்யம், நைமித்தகம், காம்யம் என்று மூன்று விதமாகச் சொல்லப்படுகிறது. அதாவது, ம்ருதாஹச்ராத்தம் (ப்ரதி தினம் பித்ருக்களை உத்தேசித்து ஒரு ப்ராம்மணனுக்குப் போஜனம் செய்விக்கும் ச்ராத்தம்), தர்ச ச்ராத்தம் மஹாளய ச்ராத்தம் இவைகள் நித்யமென்றும்: ப்ரேத ச்ராத்தம் ஸபிண்டீகரண ச்ராத்தம் (ஸங்க்ரமண ச்ராத்தம்) க்ரஹண ச்ராத்தம் ஸோத கும்ப ச்ராத்தம் இவைகள் நைமித்தகமென்றும்: மன்வாதி ச்ராத்தம், யுகாதி ச்ராத்தம், மஹோதய ச்ராத்தம், வ்யதீபாத ச்ரார்த்தம் இவைகள் காம்யமென்றும் மூன்று விதங்களாகக் கூறப்படுகின்றன.

देशः कालस्तथा पात्रं द्रव्यं कर्ता पितामहाः ।
निष्पत्तिकारणान्याहुः कर्मणोऽस्य विपश्चितः ॥

தேசம், காலம், யோக்ய ப்ராம்மணன், த்ரவ்யம், கர்த்தா, பித்ருக்கள், இவைகள் ச்ரார்த்த பூர்த்திக்கு காரணங்கள் என்று அறியவும்.

देवलः — स्थालीषु गिरिपृष्ठेषु तीर्थेष्वायतनेषु च ।
विविक्तेषु च तुष्यन्ति श्राद्धेषु पितरस्तदा ॥

தேவலர் :—இயற்கையான ப்ரதேசங்களிலும், மலை களிலும், புண்ணிய தீர்த்தங்களிலும், புண்ணிய ஸ்தலங் களிலும், ஏகாந்தமானதும் சுத்தமாயும் இருக்கிற பிரதே சங்களில் செய்யும் ச்ராத்தங்கள் பித்ருக்களுக்கு ஸந்தோஷத் தைக் கொடுக்கின்றன என்று அறியவும். கோமயத்தினுல் மெழுகின சுத்தமான மண்தரையுள்ள தன் க்ருஹத்தில் ச்ராத்தம் செய்வது ச்லாக்கியமானது.

व्यासः — पुष्करेष्वक्षयं श्राद्धं जपहोमतपांसि च ।
महोदधौ प्रयागे च काश्यां च कुरुजाङ्गले ॥

வ்யாஸர் :—புஷ்கரம், மஹோததி, ப்ரயாகம், காசி, குருஜாங்கலம் இந்த க்ஷேத்ரங்களில் செய்யப்பட்ட ச்ராத் தம், ஜபஹோமதபஸ்ஸுக்கள், அக்ஷயமான பலத்தைக் கொடுக்கின்றன.

पितृगाथा— अपिजायेत सोऽस्माकं कुले कश्चिन्नरोत्तमः ।
गयाशीर्षेवटे श्राद्धं यो नोदद्यात् समाहितः ॥

எந்த புருஷன் கயாசீர்ஷத்திலும் அக்ஷயவடத்திலும் ச்ராத்தம் செய்வானே அந்த மஹா புருஷன் நம் வம்சத் தில் பிறப்பானு என்று பித்ருக்கள் நினைத்து சொல்லு கிருர்கள்.

पाद्मे — तीर्थेषु ब्राह्मणं नैव परीक्षेत कथंचन ।
अन्नार्थिनां अनुप्राप्तं भोजयेन्यनुशासनात् ॥

புண்ணிய தீர்த்தங்களில் ப்ராம்மணனை பரீக்ஷை செய்ய வேண்டாம். அன்னத்தை விரும்பி வந்தவனை போஜனம் செய்விக்கவும், ஒரு காலும் பரீக்ஷிக்கவேண்டாம் என்று மனு சொல்லுகிருர்.

त्यन्तरे — अमापातश्च संक्रान्तिस्तथा वैधृतिरेव च ।
अष्टकाश्चैव मन्वादि युगादिश्च महालयः ॥
चन्द्रसूर्योपरागश्च गजच्छाया तथैव च ।
द्रव्यब्राह्मणसंपत्तिः श्राद्धकालाः प्रकीर्तिताः ॥

அமாவாஸ்யை, வ்யதீபாதம், ஸங்க்ரமணம், வைத்ருதி, அஷ்டகைகள், மன்வாதிகள், யுகாதிகள், மஹாளயபக்ஷம், சந்த்ர ஸூர்ய க்ரஹணங்கள், கஜச்சாயை, த்ரவ்யம், நல்ல ப்ராம்மணர்கள் இவைகளின் லாபம், இவைகள் ச்ராத்த காலங்கள் என்று கூறப்படுகிறது.

न ब्राह्मणं परीक्षेत दैवेकर्मणि धर्मवित् ।
पित्र्ये कर्मणि तु प्राप्ते परीक्षेत प्रयत्नतः ॥

தைவ கர்மாக்களில் ப்ராம்மணர்களை பரீக்ஷிக்காமல் உபயோகப்படுத்தலாம். பைத்ருகமான கர்மாக்களில் ப்ராம்மணர்களை பரீக்ஷிக்கவேண்டும். குல சுத்தி இருக்கிறதா, ச்ரோத்ரியனு, ஆசாரமுள்ளவனு என்று பார்க்கவேண்டும் என்று அறியவும்.

मनुः — अश्रोत्रियः पिता यस्य पुत्रस्याद्वेदपारगः ।
अश्रोत्रियो वा पुत्रस्स्यात् पितास्याद्वेदपारगः ।
ज्यायांसमनयोर्विद्याद्यस्य स्यात् श्रोत्रियः पिता ॥

மனு — எவனுடைய பிதா வேதாத்யயனம் செய்யாமல் புத்ரன் பூர்ணமாக வேதாத்யாயனம் செய்தவனோ, எவனுடைய பிதா பூர்ணமாக வேதாத்யயனம் செய்து புத்ரன் வேதாத்யயனம் செய்யவில்லையோ இந்த இடங்களில் எவனுடைய புத்ரனை ச்ராத்தத்திற்கு வரிப்பது என்ற

விஷயத்தில், பூர்ணமாக வேதாத்யயனம் செய்தவரைத் தகப்பனாராக அடைந்த புத்ரன் ஸ்வயம் அத்யயனம் செய்ய விட்டாலும் ச்ராத்தத்திற்கு வரிக்கத் தகுந்தவன்.

श्रोत्रियायैव देयानि हव्यकव्यानि दातृभिः ।
अर्हत्तमाय विप्राय तस्मै दत्तं महाफलम् ॥

வேதாத்யயனம் செய்தவனும் ரொம்ப பூஜிக்கத் தகுந்தவனுயுமிருக்கிற ப்ராம்மணனுக்குக் கொடுத்த த்ரவ்ய மானது மஹாபலத்தைக் கொடுக்கும். ஆகையால் உயர்ந்த ப்ராம்மணர்களை தேவ பித்ரு காரியங்களில் வரித்துப் போஜனாதிகளால் பூஜிக்கவேண்டும்.

गायत्रीमात्रसारोपि वरं विप्रस्सुयन्त्रितः ।
नायन्त्रितश्चतुर्वेदी सर्वाशी सर्व विक्रयी ॥

காயத்ரீ ஜபத்தில் ச்ரத்தையுள்ளவன், நியமத்துடன் இருப்பன் உயர்ந்தவன். அந்த ப்ராம்மணனை பித்ருக் காரியங் களில் வரிக்கலாம். நான்கு வேதம் தெரிந்தும் கண்ட இடங் களில் புஜித்துக் கொண்டும், எல்லாவற்றையும் விற்றுப் பிழைப்பவனும், ஸ்நான ஸந்த்யை இல்லாதவனுமான ப்ராமணன் பித்ரு காரியங்களுக்கு உகந்தவனல்ல என்று அறியவும்.

अग्निहोत्रपरो विद्वान् न्यायविच्च षडंगवित् ।
मन्त्रब्राह्मणविच्चैव यश्च धर्मस्य पालकः ॥
गुरुदेवाग्निपूजासु प्रसक्तो ज्ञानतत्परः ।
महादेवार्चनरतो वैष्णवः पंक्तिपावनाः ॥

அக்னி ஹோத்ரம் செய்கிறவன், நியாய சாஸ்திரமறிந்தவன், ஆறு அங்கங்களையும் அறிந்தவன், மந்திர ப்ராம்மணமறிந்தவன், தர்மங்களை ரக்ஷிப்பவன், குரு, தேவதை, அக்னி இவர்களை பூஜிப்பவன், ஞானீ, சிவ பூஜாரதன், விஷ்ணு பக்தி உள்ளவன் இவர்கள் பங்க்தி பாவனர்கள். ஆகையால் பித்ரு காரியங்களுக்கு வரிக்கலாம் என்று கருத்து. ஸன்யாஸிகள் க்ராமத்தில் இருந்தால் அவர்களிடம் தெரிவித்துவிட்டு ச்ராத்தம் செய்யவேண்டும்.

अनध्यायेष्वधीयानाश्शौचाचारविवर्जिताः ।
शूद्रान्नरसपुष्टाङ्गा ब्राह्मणाः पंक्तिदूषकाः ॥

அனத்யாயகாலமான அமாவாஸ்யை ப்ரதமை முதலிய காலங்களில் வேதம் சொல்லுகிறவனும், ஸதாசாரம், சௌசம் இவைகள் இல்லாதவனும், சதுர்த்தனுடைய அன்ன ரஸத்தால் சரீரத்தை வளர்த்தவனும் பங்க்தியை தூஷிப்பவர்களாவார்கள் என்று அறியவும்.

यस्मिन् मासि मृताहस्स्यात्तन्मासं पक्षमेव वा ।
क्षुरकर्म न कुर्वीत परान्नं च रतिं त्यजेत् ॥

எந்த மாஸத்தில் ச்ராத்தம் வருகிறதோ அந்த மாதத்தில் அல்லது அந்த பக்ஷத்தில் க்ஷௌரம், பரான்னம், ஸ்திரீ ஸங்கம் இவைகளை த்யாகம் செய்ய வேண்டும்.

गोमयोदकैर्भूमिभाजनभाण्डशौचं कुर्यात् ।

கோமயம், ஜலம் இவைகளினால் ச்ராத்த பூமியையும், பாத்திரங்களையும் சுத்தி செய்யவேண்டும். பிறகு ச்ராத்த பூமியில் எள்ளை இறைக்க வேண்டும்.

यवव्रीहि सगोधूमास्तिलमुद्गास्ससर्षपाः ।
प्रियङ्गवः कोविदारानिष्पावाश्चात्र शोभनाः ॥

யவை, நெல், கோதுமை, எள், பயறு, கடுகு, பிரியங்கு, கோவிதாரம், அவரை இவைகள் ச்ராத்தத்திற்கு உரியவைகள்.

विनामाषेण यश्राद्धं कृतमप्यकृतं भवेत् ।

உளுந்து இல்லாமல் செய்த ச்ராத்தம் செய்ததாகக் கருதப்படவில்லை. ஆகையால் உளுந்து அவசியமானது என்று அறியவும்.

अन्नं तु सदधिक्षीरगोघृतं शर्करान्वितम् ।
मासं प्रीणाति सर्वान्वै पितृ नित्याह केशवः ॥

தயிர், பால் இவைகளுடன் அன்னமும், பசு நெய்யும், சர்க்கரையும் ச்ராத்தத்தில் கொடுக்கவும். அது ஒரு மாதம் பித்ருக்களை திருப்தி செய்கிறது என்று கேசவர் கூறுகிறார்.

मधुना परमप्रीतास्सर्वान् कामान् दिशन्ति च ।

தேனால் திருப்தி அடைந்த பித்ருக்கள் விரும்புகிற பொருளைக் கொடுக்கிறார்கள். ஆகையால் தேன் அவசியம் ச்ராத்தத்தில் போடவும். பலாப்பழம், வாழைப்பழம், மாதுலம்பழம், மாம்பழம், த்ராக்ஷை, இவைகளும், பாகல், வெள்ளரி, அவரை, புடல், வாழைக்காய், கருவேப்பிலை, கரணைக்கிழங்கு, இஞ்சி, எலுமிச்சை, இவைகளும் அவசியம் ச்ராத்தத்தில் உபயோகப்படுத்த வேண்டும்.

यथा विभवसारेण वस्त्रंदद्यात्तु पैतृके ।

ச்ராத்தத்தில் தனது சக்திக்குத் தகுந்தவாறு அவசியம் வஸ்த்திரம் கொடுப்பது ச்லாக்கியமானது.

1. 12 நாழிகைக்குமேல் வரித்த ப்ராம்மணர்களுக்கு ஸ்னானத்திற்கு தைலம், சூர்ணம் முதலியவைகளைக் கொடுத்து ஸ்னானம் செய்வித்துப் பிறகு கர்த்தா ஸ்னானம் செய்யவும். த்வாதசியில் நெல்லி சூர்ணம் கொடுக்கவும்.

2. ஆவாஹனம், அர்க்யம், ஸங்கல்ப்பம், பிண்ட தானம், திலோதகம், அக்ஷய்யம், ஆஸனம், பாத்யம், அன்ன தானம் இவைகளில் நாமகோத்ரங்களைச் சொல்லவும்.

3. தேவர்களின் ஆவாஹனத்தில் வலது பாதம், இடது பாதம், வலது முழங்கால், இடது முழங்கால், வலது தோள், இடது தோள், சிரஸ் இவைகளில் அக்ஷதைகள் போடவும். பித்ருக்களின் ஆவாஹனத்தில் சிரஸ், இடது தோள், வலது தோள், இடது முழங்கால், வலது முழங்கால், இடது பாதம், வலது பாதம், இவைகளில் திலங்களைப் போடவும்.

4. ப்ராம்மணர்கள் வீண் பேச்சுப் பேசக்கூடாது.

5. தேவர்களுக்குக் கட்டைவிரலை க்ரஹிக்காமலும், பித்ருக்களுக்கு கட்டைவிரலுடனும் ஆமந்த்ரணம் செய்ய வேண்டும்.

6. பாகத்தின் குணதோஷங்களைச் சொல்லக்கூடாது.

இவ்விதம் அநேக நியமங்கள் இருக்கின்றன. பெரியவர்களிடம் தெரிந்து கொள்ளவும்.

वसून्वदन्ति पितॄन् रुद्रानेव पितामहान् ।
प्रपितामहांस्तथाऽऽदित्यान् श्रुतिरेषा सनातनी ॥

பித்ருக்களை வஸுக்களாயும், பிதாமஹரை ருத்ரர்களாயும், ப்ரபிதாமஹரை ஆதித்யர்களாயும் வேதம் கூறுகிறது. ம்ருதாஹச்ராத்தத்தைத் தவிர மற்ற ச்ராத்தங்களை ஆமரூபமாயும், ஹிரண்ய ரூபமாயும் செய்யலாம்.

तृणानि वा गवे दद्यात् पिण्डान् वाऽथापि निर्वपेत् ।
तिलोदकैः पितॄन्वापि तर्पयेत स्नान पूर्वकम् ॥

மற்ற புண்ணிய கால ச்ராத்தினங்களில் சக்தியற்றவன், பசுக்களுக்கு ஒருநாள் போதுமான புல்களை போட வேண்டும். பிண்டங்கள் போடலாம். தில தர்ப்பணம் பித்ருக்களை உத்தேசித்துச் செய்யலாம். ஸ்னானம் செய்து உலர்ந்த வஸ்த்திரம் தரித்துத் தர்ப்பணம் செய்யவேண்டும்.

श्राद्धानुकल्पं यः कुर्यात् जात्यवस्थाद्यपेक्षया ।
श्राद्धाङ्गांशेऽप्यवाप्नोति मुख्यश्राद्ध फलं नरः ॥

ச்ராத்தம் செய்ய முடியாதவன் விதிக்கப்பட்ட அனுகல்பத்தை (ப்ரதிநிதி) ஜாதி, அவஸ்தை இவைகளை அபேக்ஷித்து ச்ரத்தையுடன் அனுஷ்டித்தால் முக்கிய கல்பத்தை அனுஷ்டித்த பலன் கிடைக்கிறது என்று அறியவும்.

32. श्राद्ध प्रशंसा ச்ராத்தத்தைப் புகழ்வது.

सुमन्तुः— श्राद्धात्परतरं नान्यत् श्रेयस्करमुदाहृतम् ।
तस्मात्सर्वप्रयत्नेन श्राद्धं कुर्याद्विचक्षणः ॥

ஸுமந்து — ச்ராத்தத்தைக் காட்டிலும் மனிதனுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது வேறு காரியம் கிடையாது. ஆகையால் க்ஷேமத்தை விரும்புகிறவன் ச்ராத்தத்தை சிரத்தையுடன் செய்யவேண்டும்.

यमः — ये यजन्ति पितॄन् देवान् ब्राह्मणान् सहुताशनान् ।
सर्वभूतान्तरात्मानं विष्णुमेव यजन्ति ते ॥
आयुः पुत्रान् यशः स्वर्गं कीर्तिं पुष्टिं बलं श्रियम् ।
पशून् सुखं धनं धान्यं प्राप्नुयात् पितृपूजनात् ॥

எமன் — எவர்கள் பித்ருக்களையும், தேவர்களையும், அக்னியையும் பூஜிக்கிறார்களோ அவர்கள் ஸர்வப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியான விஷ்ணுவைப் பூஜிக்கிறார்கள். ஆயுஸ், புத்ரர்கள், புகழ், ஸ்வர்க்கம், யசஸ், புஷ்டி, பலம், பாக்யம், பசுக்கள், சுகம், தனம், தான்யம் இவைகளைப் பித்ரு பூஜனத்தால் அடைகிறார்கள். ஆகையால் க்ருஹஸ்தர்கள் ச்ரத்தையுடன் ச்ராத்தத்தைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

॥ संक्षेप धर्मशास्त्रे श्राद्धधर्मप्रकरणं संपूर्णम् ॥

ஸம்க்ஷேப தர்ம சாஸ்த்திரத்தில் ச்ராத்த தர்மப்ரகரணம் ஸம்பூர்ணம்.

॥ श्रीहरिः ॥

संक्षेप धर्मशास्त्रे तिथिनिर्णय प्रकरणम्

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரத்தில் திதி நிர்ணய ப்ரகரணம்.

1. काल निरूपणम् கால நிருபணம்.

अथ कालो निरूप्यते । सचकर्मण्यङ्गभूतः ।

இனி காலத்தினுடைய ஸ்வரூபம் லக்ஷணங்கள் தெரிவிக்கிப்படுகிறது. காலமானது கர்மாவுக்கு அங்கமா அமைகிறது.

गार्ग्यः — तिथि नक्षत्र वारादिसाधनं पुण्यपापयोः ।
प्रधानगुणभावेन न स्वातन्त्र्येण ते क्षमाः ॥

ப்ரதானமான கர்மாவுக்கு அங்கமாக இருந்துதான் திதி வார நக்ஷத்திரங்கள் புண்ணிய பாபங்களுக்கு ஸாதனமாக ஆகிறது; ஸ்வதந்திரமாக திதி வாரம் முதலியவை புண்ணிய பாபங்களுக்கு காரணமாகாது.

2. निमेषादिलक्षणम् நிமிஷம் முதலியவைகளின் ஸ்வரூபம்

गार्ग्यः — अक्षिपक्ष्मपरिक्षेपः निमेषः परिकीर्तितः ।
द्वौ निमेषौ त्रुटिर्नाम द्वौ त्रटीतुलवः स्मृतः ॥
द्वौ लवौक्षण इत्युक्तः काष्ठाप्रोक्तादशक्षणाः ।

त्रिंशत्काष्ठाः कलाप्रोक्ताः कलास्त्रिंशन्मुहूर्तकाः ।
तेतु त्रिंशदहोरात्र इत्याहुर्भगवान् हरः ॥

கண் இமை கொட்டுவது ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷங்கள் ஒரு த்ருடி என்பது, இரண்டு த்ருடிகள் ஒரு லவம் என்பது, இரண்டு லவங்கள் ஒரு க்ஷணம் என்பது, பத்து க்ஷணங்கள் ஒரு காஷ்டா என்பது, முப்பது காஷ்டைகள் ஒரு கலா என்பது, முப்பது கலாக்கள் ஒரு முகூர்த்தம் என்பது, முப்பது முகூர்த்தம் ஒரு அஹோராத்தம் (ஒரு இரவு பகல்) இப்படி பகவான் ஹரர் கூறுகிருர்.

3. तिथिस्वरूपम् - திதி ஸ்வருபம்.

रवीन्द्वोर्योगविरहौ क्रमाद्दर्शश्च पूर्णिमा ।
कलाप्रवेशनिर्याणैस्तिथयोऽन्याश्चपक्षयोः ॥

சூர்யன் சந்திரன் இவர்களுடைய சேர்க்கை அமாவாஸ்யை எனப்படும், நன்ருக விலகியிருப்பது பூர்ணிமை எனப்படும். சந்திரனுடைய கலை ஸூர்யனிடத்தில் ஒவ்வொன்ருகப் பிரவேசிப்பது க்ருஷ்ண பக்ஷத்தினுடைய திதிகள். பிறகு ஸூர்யனிடமிருந்து ஒவ்வொரு கலையாக வெளிவருவது சுக்லபக்ஷ திதிகள் என்று சொல்லப்படுகிறது.

4. खण्डतिथिस्वरूपं கண்ட திதிகளுடைய ஸ்வருபம்.

सर्वाह्येताश्चतिथयः उदयादोदयस्थिताः ।
शुद्धा इति विनिश्चेयाषष्टि नाड्यो हि वै तिथिः ॥

எந்த திதிகள் ஸூர்யோதயத்திலிருந்து மறுநாள் ஸூர்யோதய பர்யந்தம் இருக்கின்றனவோ இவைகள் சுத்த திதிகள், சுத்தா என்ற ஸம்ஞை அடைகிறது, திதிக்கு ஏற்பட்ட அறுபது நாழிகள் இருக்கிறதல்லவா என்று கருத்து.

गार्ग्यः — खर्वा दर्पा तथा हिंस्राः त्रिविधं तिथिलक्षणम् ।
धर्माधर्मवशादेव तिथिस्त्रेधा विवर्तते ॥

தர்மங்கள் அதர்மங்கள் காரணமாக திதிகள், கர்வா, தர்ப்பா, ஹிம்ச்ரா என்று மூன்றுவகைப்படும். திதியானது ஸமமாக இருக்குமேயாகில் கர்வா என்றும் திதியானது விருத்தி அடைந்தால் தர்ப்பா என்றும், திதியானது குறைந்தால் ஹிம்ச்ரா என்றும் சொல்லப் படுகிறது.

वृद्धगार्ग्यः — निमित्तं कालमादाय वृत्तिर्विधिनिषेधयोः ।
विधिः पूज्यतिथौ तत्र निषेधः कालमात्रके ॥

நிமத்தமான காலத்தை அனுசரித்து சாஸ்த்திரங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை அனுஷ்டிப்பது, சாஸ்த்திரத்திரங்களில் நிஷேதிக்கப்பட்டதை செய்யாமல் இருப்பது என்று ஏற்படுகிறது. எந்த திதிகள் கர்மாக்களுக்கு உகந்ததோ அது பூஜ்யமானது. எந்த திதியில் வேண்டாம் என்று கார்யங்கள் நிஷேதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த காலம் மாத்திரம் தெரிந்தால் போதும். ஆகையால் அதில் பூஜ்யதா. விசாரம் கிடையாது என்பது கருத்து. சுத்தமான பூர்ண திதியில் விதிக்கப்பட்ட கார்யங்கள் செய்யலாம், வேண்டாம் என்ற விசாரத்திற்கு இடமில்லை. கண்ட திதிகள் விஷயத்தில் தான் விசாரிக்கவேண்டும், எது யோக்யமானது கர்மாவுக்கு என்று. ஆகையால் கண்ட திதிகளைப்பற்றி விஜாரிப்போமாக.

5. तिथीनां वेधविचारः திதிகளுடைய வேதை விசாரம்.

विद्धा द्विधा पूर्वदिने दर्शयुक्ता उत्तरदिने द्वितीया युक्ता च इति ।

வேதை என்பது ஒரு திதிக்கு மற்றொரு திதியினுடைய ஸம்பந்தம் எனப்படும். ப்ரதமைக்கு பூர்வத்திலுள்ள அமாவாஸ்யை ஸம்பந்தம் ஒன்று. பிறகு வரக்கூடிய த்விதியா ஸம்பந்தம் மற்றொன்று.

कालनिर्णये — शुद्धाविद्धा तिथिश्शुद्धा हीना तिथ्यान्ययाहनि ।
उदये पूर्वया तिथ्या विध्यते हितिमूर्तकैः ॥
सायंतूत्तरया तद्वन्न्यूनया तु न विध्यते ।
वेध्यापि त्रिमुहूर्तैव न न्यूना वेधमर्हति ॥

வேதை ஸ்வரூபம் இவ்விடம் சொல்லப்படுகிறது. திதியானது மற்ற திதியினுல் ஸம்பந்தப்படாமல் இருந்தால் அது சுத்த திதி என்று கூறப்படுகிறது. வேறு திதிகளுடைய ஸம்பந்தம் இருந்தால் இது வித்தா திதி என்று கூறப்படுகிறது. அது இரண்டு விதம். ஒன்று உதயகாலத்தில் ஆரம்பித்து மூன்று முகூர்த்தம் (6 நாழிகை) உள்ள திதியானது மற்ற திதியில் ஸம்பந்தப்பட்டால் வித்தா திதி என்று ஒருவகைப்படும், பின் திதியானது மறுநாள் அஸ்தமனத்திற்கு முன்பு மூன்று முகூர்தம் (6 நாழிகை) இருந்து முன் திதியோடு ஸம்பந்தப்படும்போது அந்த திதியானது வித்தா திதி என்று சொல்லப்படுகிறது. அதாவது - உதய காலத்தில் மூன்று முகூர்த்தம் உள்ள தர்ச திதியினுல் ஸம்பந்தப்பட்ட ப்ரதமை வித்தா என்றும், மறுநாள் அஸ்தமனத்திற்கு முன்பு முன்று முகூர்த்தம் உள்ள த்விதீயை ஸம்பந்தப்பட்ட ப்ரதமையும் வித்தா என்று கூறப்படுகிறது. உதயாஸ்தமய காலத்தில் 6 நாழிகைக்கு குறைவாக இருக்கும் திதி ஸம்பந்தம் வேதையாக கருதப்படவில்லை. அதிகமாக இருக்கலாம் என்பது கருத்து. இதைக் குறிப்பிடும்போது பூர்வ வித்தை திதி உத்தரவித்தை திதி என்று குறிப்பிடுவார்கள்.

6. प्रथमा तिथि निर्णयः ப்ரதமா திதி நிர்ணயம்.

शुक्लपक्षे दर्श विद्धा कृष्णे विद्धा द्वितीयया ।
उपोष्या प्रतिपच्छुक्ले मुख्यास्यादापराह्निकी ॥
तदभावेतु सायाह्नव्यापिनी परिगृह्यताम् ॥

சுக்லபக்ஷத்தில் அமாவாஸ்யை வித்தமான ப்ரதமையும் க்ருஷ்ணபக்ஷத்தில் த்வீதியை வித்தமான ப்ரதமையும் உபவாஸத்திற்கு உகந்த காலமாகும். சுக்ல ப்ரதமை பூர்வ வித்தம் ச்லாக்யம். ஆனால் அபராண்ணத்தில் ப்ரதமை ஸம்பந்தம் இருக்கவேண்டும். அது அகப்படாவிடில் ஸாயாண்ணத்திலாவது ப்ரதமை ஸம்பந்தம் இருக்க வேண்டும். அந்த சுக்ல ப்ரதமையில் உபவாசம் இருக்க தகுந்தது.

प्रातस्संगव मध्याह्नापराह्णास्सायमित्यसौ ।
अत्राह्नः पंचधाभागो मुख्यो द्वित्र्यादिभागतः ॥

பகல் வேளையை ஐந்து பாகமாக விபாகம் செய்கிறோம். ஒரு பாகத்திற்கு ஆறு நாழிகைகள், ஆக ஐந்து பாகத்திற்கு 30 நாழிகைகள். ப்ராத:, ஸங்கவ. மத்யான்ஹ, அபராண்ண, ஸாயாண்ஹ என்று ஐந்து பாகங்கள். இவைகள் சாஸ்திரங்களில் முக்கியமாகக் கருதப்படுறது.

पूर्वाह्णोऽच तु पराह्नः इति द्वेधा विभागः ।
पूर्वाह्णोमध्याह्नोऽपराह्ण इति त्रेधाविभागः ।
पूर्वाह्णोमध्याह्नोऽपराह्णस्सायाह्न इति चतुर्धाविभागः ।
प्रातस्संगवमध्याह्नोऽपराह्णस्सायाह्न इति पंचधा विभागः ॥

ஒரு பகல் வேளையை பூர்வாண்ஹம் அபராண்ஹம் என்று இரண்டாயும், பூர்வாண்ஹம் மத்யாந்ஹம் அபராண்ஹம் என்று மூன்றாயும், பூர்வாண்ஹம் மத்யாந்ஹம் அபராண்ஹம் ஸாயாந்ஹம் என்று நான்காயும், ப்ராத: ஸங்கவ: மத்யான்ஹ: அபராண்ஹம் ஸாயன்ஹ: என்று ஐந்தாயும் விபாகம் செய்கிறார்கள். இவைகளில் ஐந்தாக விபாகம் செய்தது சிலாக்யமானது.

ாலः — यां तिथिं समनुप्राप्यत्वस्तं याति दिवाकरः ।
सा तिथिः सकला ज्ञेया दानाध्ययन कर्मसु ॥

எந்த திதியில் ஸூர்யாஸ்தமனம் ஏற்படுகிறதோ, அந்த திதி தானம், பாராயணம், உபவாஸம் முதலிய ர்மாக்களுக்கு சிலாக்கியமானது. அந்த திதியும் மூன்று முகூர்த்தத்திற்குக் குறையக்கூடாது. அதிகமாக இருக்க லாம். அந்தமாதிரி உள்ள திதிதான் கர்மாவுக்கு யோக்ய மானது என்பது கருத்து.

गौरेऽपि — यां प्राप्यास्तमुपैत्यर्कस्स्याच्चेत् सात्रिमुहूर्तगा ।
धर्मकृत्येषु सर्वेषु संपूर्णान्तां विदुर्बुधाः ॥

ஸூர்யாஸ்தமன காலத்தில் திதி வ்யாப்தியாக இருக்க வேண்டியது என்றால் மூன்று முகூர்த்தமாவது இருக்க வேண்டும். அதுதான் தர்ம கார்யங்களுக்கு ஸம்பூர்ணமான திதியாக பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

सुमन्तुः — तिथि[illegible]ये तिथिभान्ते च पारणम् ।
अतोऽन्यथा पारणेतु व्रतभंगमवाप्नुयात् ॥

திதி, நக்ஷத்ரம், இவைகளை அனுசரித்து உபவாஸம் அனுஷ்டித்தால் திதி, நக்ஷத்ரங்கள் இவைகளுடைய முடிவில் பாரணம் செய்யவேண்டும். அப்படிச் செய்யா விட்டால் விரத பங்கம் ஏற்படும். இது வேதை உள்ள திதி நக்ஷத்ரங்களை அனுசரித்தது. சுத்த திதி நக்ஷத்ரங்களில் இவை ஸம்பவிக்காது. சிவராத்திரி விரதம் — சிரவண விரதம் இவைகளிலும் திதியினுடைய முடிவில் பாரணம், சிரவண நக்ஷத்ர முடிவில் பாரணம் என்பதும் கிடையாது.

तिथ्यन्ते च भान्ते च पारणं यत्र चोद्यते ।
यामत्रयोर्ध्ववर्तिन्यां प्रातरेवहि पारणम् ॥

திதி, நக்ஷத்ரம் இவைகளுடைய முடிவில் பாரணம் எங்கே விதிக்கப் பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் திதி நக்ஷத்திரம் மூன்று யாமத்திற்கு மேல் இருந்தால் ப்ராத: காலத்திலேயே பாரணம் செய்யலாம்.

मुख्यतिथ्यन्तरायेतु तिथिशेषोऽपिगृह्यताम् ।

பூர்வ வேதை உள்ள முக்ய திதி அனுஷ்டிக்க முடிய வில்லையேயானல் உத்ர வேதை உள்ள திதிகளை அனுசரித்து உபவாஸ திதிகளை அனுஷ்டிக்கலாம்.

यो यस्य विहितः कालः तत्काल व्यापिनी तिथिः ।

எந்த விரதத்திற்கு எந்த காலம் குறிப்பிட்டிருக் கிறதோ, அந்தக் காலத்தில் வ்யாபித்த திதியைப் பார்த்து விரதம் அனுஷ்டிக்கவேண்டு.

7. एकभक्त निर्णयः—ஏகபக்த நிர்ணயம்.

स्कान्दे— दिनार्धसमयेऽतीते भुज्यते नियमेन यत् ।
एकभक्तमिति प्रोक्तं अतस्तत्स्याद्दिवैवहि ॥

சுத்தமான உபவாஸம் இருக்க முடியாமல்போனல் ஏகபக்தம் (ஒரு வேளை சாப்பிடுவது) அனுஷ்டிக்கலாம். பகல் வேளை பாதிக்குமேல் ஏகபக்தம் அனுஷ்டிக்கலாம். அதற்கு 15 நாழிகைக்குமேல் 18 நாழிகைக்குள் முக்ய காலம். பிறகு அஸ்தமனத்திற்கு முன்பு உள்ள காலம் கௌண காலமாகும் என்பது கருத்து.

बोधायनः— मध्याह्न व्यापिनीग्राह्या एकभक्तव्रते तिथिः ।
पूजाव्रतेषु सर्वत्र मध्याह्नव्यापिनी तिथिः ॥

ஏகபக்தம், தேவபூஜை, விரதங்கள் எல்லாவற்றிற்கும் மந்யான்ஹ வ்யாபியான திதி காரணம் என்று கூறப்படுகிறது. இது பொதுவான சாஸனமாகும்.

अत्र निर्णेतव्यो विषयेष्षोढा भिद्यते।

இந்த மத்யான்ஹவ்யாப்தியான திதி விஷயத்தில் ஆறு ப்ரகாரமாக நிர்ணயம் செய்கிறோம்.

1. पूर्वेद्युरेवमध्याह्नव्यापित्वं 2. परेद्युरेवमध्याह्नव्यापित्वम् 3. उभयत्रतद्व्यापित्वं 4. उभयत्रतदव्यापित्वम् 5. उभयत्र साम्येन तदेकदेश व्यापित्वम् 6. वैषम्येण तदेकदेश व्यापित्वम् ।

1. முன்நாள் மட்டும் மத்தியான்ஹ ஸம்பந்தம் உள்ளது. 2. பின் நாள் மட்டும் மத்தியான்ஹ ஸம்பந்தம் உள்ளது. 3. இரண்டு நாளும் மத்தியான்ஹ ஸம்பந்தம் உள்ளது. 4. இரண்டு நாளும் மத்யான்ஹ ஸம்பந்தம் இல்லாதது. 5. இரண்டு நாளும் மத்யான்ஹ காலத்தில் ஸமமாக கொஞ்ச ஸம்பந்தமுள்ளது. 6. இரண்டுநாளும் மத்தியானஹ காலத்தில் ஜாஸ்தி குறைவாக ஸம்பந்தமுள்ளது, என்ற ரீதியில் திதிகள் காணப்படுகிறது.

இவைகளில் முதல் இரண்டாவது விஷயங்களில் மத்தியான வ்யாப்தி உள்ளதை கிரஹிக்க வேண்டும். மூன்ருவது விஷயத்தில் பூர்வ வித்தை திதியை சிலாக்யமாக சொல்லுவதாலும், கௌண கால வ்யாப்தி அதிகமாக இருப்பதாலும், முதல் நாள் மத்யான்ஹ திதிதான் கிராஹ்யமாகும். நான்காவது விஷயத்தில் இரண்டு நாளும் மாத்யான்ஹ வ்யாப்தி

இல்லை என்றாலும் பூர்வ வித்தை திதிதான் உயர்ந்தது என்பு தால் முதல் நாள்தான் கர்மார்ஹமானது. ஐந்தாவது விஷயத்தில் ஸமமாக இரண்டு நாள் கொஞ்சம் மத்தியான்ஹ வ்யாப்தி இருந்தாலும் பூர்வ வித்தை ச்லாக்யம் என்ற ரீதியில் முதல் நாள் திதிதான் கிராஹ்யமாகும். ஆறுவது விஷயத்தில் ஜாஸ்தி குறைவாக இரண்டு நாள் மத்யான்ஹ வ்யாப்தி இருந்தால் என்றைக்கு மத்தியான்ஹ வ்யாப்தி ஜாஸ்தியாக திதிக்கு இருக்கிறதோ அந்த திதி கிராஹ்யமாகும் என்பது கருத்து. இந்த மாதிரி ஏகபக்த விஷயம் அனுஷ்டிக்கவும். பூஜை, விரதம் இந்த விஷயங்களிலும் இந்த மாதிரி பார்த்து அனுஷ்டிக்கவும்.

8. नक्तव्रत निर्णयः நக்த விரத நிர்ணயம்.

अथनक्तं निरूप्यते இனி நக்த விரதம் நிருபிக்கப்படுகிறது.

वराहपुराणे —मार्गशीर्षे सितेपक्षे प्रतिपद्या तिथि र्भवेत् ।
तस्यां नक्तं प्रकुर्वी रात्रौ विष्णुं च पूजयेत ॥

மார்க்க சீர்ஷமாத சுக்லபக்ஷ பிரதமா திதியில் இரவில் நக்த விரதம் அனுஷ்டித்து விஷ்ணுவை பூஜிக்கவேண்டும். நக்த விரதம் என்றால் பகலில் சாப்பிடாமல் இரவில் சாப்பிடவேண்டும் என்பது தாத்பர்யம்.

कालादर्शे — त्रिमूहूर्तास्तमनात्प्राक् परतश्चतथाविधा ।
तस्यां नक्तव्रतं कुर्याद्धरिनक्तव्रतादृतः ॥

நக்த விரதத்தில் அஸ்மனத்திற்கு முன்பு மூன்று முகூர்த்தம் (6நாழிகைகள்) திதி இருக்கவேண்டும். அஸ்தமனத்திற்கு பின்பு மூன்று முகூர்த்தம் இருக்கவேண்டும். இந்த திதிதான் நக்த வ்ரதத்திற்கு சிலாக்கியமானது.

அஸ்தமனத்திற்கு முன்பு ஸாயங்கால வ்யாப்தி திதியானது கௌண காலமாகும். அஸ்தமனத்திற்குப் பின்பு வ்யாப்தி உள்ள திதி முக்ய காலமாகும். ப்ரதோஷ வ்யாப்தி உள்ள திதி நக்த விரதத்திற்கு சிலாக்கியமானது. அதில் விசேஷம் ஸன்யாஸிகள், விதவைகள், இரவில் சாப்பிடக்கூடாது. ஆகையால் கௌண கால வ்யாப்தி உள்ள திதி அவர்களுக்கு உயர்ந்தது. நக்த வ்ரதத்திற்கு க்ருஹஸ்தர்கள் இரவில் சாப்பிடலாம். ஆகையால் ப்ரதோஷ வ்யாப்தியான திதி க்ருஹஸ்தர்களுக்கு உகந்தது. (நக்தம்-இரவு, ப்ரதோஷம் இரவு ஆரம்பகாலம்).

व्यासः — त्रिमूहूर्तः प्रदोषस्स्यात् भानावस्तंगतेसति।
नक्तं तत्र तु कर्तव्यं इति शास्त्रविनिश्चयः ॥

ஸூர்யாஸ்தமனமான பிறகு மூன்று முகூர்த்த காலம் ப்ரதோஷம். அப்பொழுது நக்த வ்ரதம் அனுஷ்டிக்க வேண்டும். இந்த விஷயத்திலும் திதிவ்யாப்தி ஆறுவிதமாக விபாகம் செய்து முன்பு மாதிரி பார்த்து அனுஷ்டிக்க வேண்டும்.

स्कान्दे — प्रदोषव्यापिनी न स्याद्दिवानक्तं विधीयते।
आत्मनो द्विगुणच्छायां अतिक्रामति भास्करे।
तन्नक्तन्नक्तमित्याहुः न नक्तं निशि भोजनम् ॥

ப்ரதோஷ வ்யாப்தி இல்லாவிடில் ஸாயங்காலத்தில் நக்த வ்ரதம் அனுஷ்டிக்கலாம். அதாவது வெய்யிலுடைய நிழல் இரண்டு மடங்காக தெரிந்த காலம் பகல் நக்தத்திற்கு உகந்தது. இது க்ருஹஸ்த விஷயம். நக்த விரதத்தில் பானுவாரம் ஸம்பந்தப்பட்டால் க்ருஹஸ்தன்கூட இரவில் சாப்பிடக்கூடாது அன்றைய தினம் பகலில் நக்தவ்ரதம் அனுஷ்டிக்கவேண்டும்.

अर्कद्विपर्वरात्रौ च चतुर्दश्यष्टमी दिवा ॥

ஞாயிற்றுக்கிழமை - அமாவாஸ்யை - பூர்ணிமா இவைகளில் இரவு போஜனம் நிஷேதம்; சதுர்தசீ, அஷ்டமீ இவைகளில் பகலில் போஜனம் நிஷேதம் என்று அறிந்து கொள்ளவும்.

निषेधस्तु निवृत्यात्मा कालमात्रमपेक्षते ।

எவ்விடத்தில் சாஸ்திரம் போஜனம் செய்யக்கூடாது என்று நிஷேதிக்கிறதோ அந்த காலம் போனல் சாபிடலாம் என்று கருத்து. ராத்ரியில் பர்வ போஜனம் நிஷேதிக்கப் பட்டிருக்கிறது. க்ரஹண காலத்தில் விமோசனம் ஆன பிறகு சாப்பிடலாம் என்கிறுர். இதிலிருந்து அந்த காலத்தில் நிஷேதம் இருப்பதால் திதி முதலியதுகள் சென்ற பிறகு சாப்பிடலாம் என்பது கருத்து. மஹாநிசியில் க்ரஹணம் பிடித்தால் சாப்பிடக்கூடாது. அது வேறு நிஷேதமாகும்.

वृद्धयाज्ञवल्क्यः — पौर्वाह्णिकास्तु तिथयः दैवकार्ये फलप्रदाः ।

ஸ்னனம், தானம். இவைகளுக்கு உத்ரவித்தையான திதி க்ரஹிக்கவேண்டும். பூர்வான்ஹ காலம் ப்ராத: காலமாகும். அப்பொழுதுதான் ஸ்னனதானுதிகள் செய்யத் தகுந்தது என்று கருத்து.

9. द्वितीया तिथि निर्णयः—த்வீதியை திதி நிர்ணயம்.

भृगुः — एकादश्यष्टमी षष्ठी द्वितीया च चतुर्दशी ।
त्रयोदशीत्वमावास्या उपोष्यास्स्युः परान्विता ॥

த்வீதியை திதியானது பரவித்தையாக உபவாஸம் முதலியதுக்கு க்ரஹிக்க வேண்டும். இதேமாதிரி ஏகாதசீ, அஷ்டமீ, ஷஷ்டி, த்விதீயா, சதுர்தசீ த்ரயோதசீ, அமாவாஸ்யை இவைகள் பரவித்தையானதுதான் உபவாஸத்திற்கு ச்லாக்யமானது.

10. तृतीया निर्णयः த்ருதீயா நிர்ணயம்.

ब्रह्मकैवर्ते — रंभाख्यां वर्जयित्वा तु तृतीयां द्विजसत्तम ।
अन्येषु सर्वकार्येषु गणयुक्ता प्रशस्यते ॥

ரம்பா வ்ரதம் த்ருதீயை அன்று செய்யவேண்டும். அது பூர்வ வித்தையான த்ருதீயையில் அனுஷ்டிக்கவேண்டும். அதைத் தவிர வேறு பூஜை உபவாஸங்களில் த்ருதீயை பரவித்தையாக இருக்கவேண்டும் என்பது கருத்து.

11. चतुर्थी निर्णयः—சதுர்த்தீ நிர்ணயம்.

बृहस्पतिः — चतुर्थी गणनाथस्य मातृविद्धा प्रशस्यते ।
मध्यह्नव्यापिनी चेत्स्यात्परतश्चेत्परेहनि ॥

கணபதி வ்ரதமானது த்ருதீயையோடு கூடிய சதுர்த்தியில் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால் சதுர்த்தி மத்யான்ஹ காலத்தில் இருக்கவேண்டும். அது மாதிரி இல்லாவிட்டால் மறுநாள் மத்தியான்ஹத்தில் சதுர்த்தி இருந்தால் த்ருதீயையோடு கூடிய சதுர்த்தியை விட்டு மறுநாள் சதுர்த்தி வ்ரதம் அனுஷ்டிக்க வேண்டும். சதுர்த்தி வ்ரதம் தவிர வேறு உபவாஸாதிகளுக்கு பரவித்தை பஞ்சமீயோடு கூடிய சதுர்த்தீதான் ச்லாக்யமானது.

12. पंचमी निर्णयः—பஞ்சமீ நிர்ணயம்.

हारीतः — चतुर्थीसंयुताकार्या पंचमी परया नतु ।
दैवे कर्मणि पित्र्येच शुक्लपक्षेतथाऽसिते ॥

பஞ்சமீ பூர்வ வித்தையானதுதான், தேவ பித்ரு கார்யங்களுக்கு ச்லாக்கியமாக கருதப்படுகிறது. சதுர்த்தியோடு கூடின பஞ்சமீ என்பது கருத்து.

13. षष्ठी निर्णयः—ஷஷ்டி நிர்ணயம்.

ஷஷ்டி திதி பரவித்தையானது, உபவாஸத்திற்கு ச்லாக்யம். ஆனால் ஸ்கந்த ஷஷ்டி பூர்வ வித்தையானது ச்லாக்யமானது.

वसिष्ठः — कृष्णाष्टमीस्कन्द षष्ठी शिवरात्रिश्चतुर्दशी ।
एताः पूर्वयुताः कार्याः तिथ्यन्ते पारणं भवेत् ॥

க்ருஷ்ணாஷ்டமீ, ஸ்கந்த ஷஷ்டி, சிவராத்ரீ, சதுர்தசி இவைகள் பூர்வ வித்தையானதுதான் அனுஷ்டானத்திற்கு உகந்தது என்று வஸிஷ்டர் சொல்லுகிறார்.

14. सप्तमी निर्णयः ஸப்தமி நிர்ணயம்.

कालनिर्णये —सप्तमी पूर्वविद्धैव व्रतेषु निखिलेष्वपि ।
अलाभे पूर्वविद्धायाः परविद्धापि गृह्यताम् ॥

ஸப்தமி ஸம்பந்தமான ஸமஸ்தமான வ்ரதங்களிலும் ஸப்தமீ பூர்வ வித்தையானது க்ரஹிக்கவேண்டும். இது சரியாக கிடைக்காவிடில் பரவித்தையை க்ரஹிக்கலாம்.

15. अष्टमी निर्णयः—அஷ்டமி நிர்ணயம்.

शुक्लपक्षेऽष्टमी चैव शुक्लपक्षे चतुर्दशी ।
पूर्वविद्धा न कर्तव्या कर्तव्या पर संयुता ॥

சுக்லபக்ஷ அஷ்டமீ, சுக்ல சதுர்தசி இவைகள் பரவித்தையானது ச்லாக்யம் என்று கூறப்படுகிறது. க்ருஷ்ண பக்ஷத்தில் உள்ள அஷ்டமீ பூர்வ வித்தையானது ச்லாக்யமானது. என்று அறியவும்.

16. श्रीकृष्ण जन्माष्टमी निर्णयः ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமீ நிர்ணயம்.

க்ருஷ்ண ஜன்மாஷ்டமீ வ்ரதம் ஸ்ரீஜயந்தி வ்ரதத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்று அறியவும். ஜன்மாஷ்டமீ வ்ரதத்திற்கு திதி முக்யம். ஸ்ரீ ஜயந்தி வ்ரதத்திற்கு ரோஹிணி யோகம் முக்யம் என்று அறியவும்.

श्रावणे बहुलेपक्षे कृष्णजन्माष्टमीव्रतम् ।
न करोति नरो यस्तु भवति क्रूरराक्षसः ॥

ச்ராவண க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியில் க்ருஷ்ண ஜன்மாஷ்டமி வ்ரதம் அனுஷ்டிக்கவேண்டும். அதைச் செய்யாவிடில் ராக்ஷசனுகப் பிறப்பான்.

श्रावणस्य च मासस्य कृष्णाष्टम्यां नराधिप ।
रोहिणी यदिलभ्येत जयन्ती नाम सा तिथिः ॥

ச்ராவண மாஸ க்ருஷ்ணஷ்டமியில் ரோஹிணி யோகம் கிடைக்குமேயாகுல் அதற்கு ஜயந்தி திதி என்று பெயர், அது உயர்ந்தது.

वसिष्ठसंहितायां - श्रावणेवा नभस्येवा रोहिणी सहिताष्टमी ।
यदाकृष्णा नरैर्लब्धा सा जयन्तीति कीर्तिता ॥

ச்ராவண மாஸத்தில் அல்லது பாத்ரபத மாதத்தில் ரோஹிணி ஸஹித அஷ்டமீ ஸம்பவித்தால் அதற்கு ஜயந்தீ என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒரு விசேஷம் ச்ராவண மாதத்தில் ஸம்பவித்த ரோஹிணி யோகம் விசேஷமாகும். அது முக்யம் என்று கருத்து. பாத்ரபத மாதத்தில் ஸம்பவித்த அஷ்டமீ ரோஹிணி யோக அனுகல்பம் கௌணமாகும்.

ज्योतिषार्णवे– श्रावण्यां प्रौष्ठपद्यां वा यदासिंहं गतोविः ।
जयन्त्याराधनं कुर्यान्नतु कर्कटकन्ययोरिति ॥

இவ்விடம் ச்ராவணம் பாத்ரபதம் என்பது ஆவணி மாதத்தில் வரக்கூடிய ச்ராவண பாத்ரபத மாத்தைக் குறிப்பதாக அறியவேண்டும். புரட்டாசி மாதத்தில் பாத்ர பதத்தையும் ஆடியில் வந்த ச்ராவணத்தையும் கிரஹிக்கக் கூடாது. இது க்ருஷ்ணாஷ்டமீ ஜயந்தி வ்ரதத்தை உத்தே சித்து என்பது கருத்து.

यस्मिन्वर्षे श्रावणेवा नभस्ये वा जयन्ती न संभवति ।
तस्मिन् वर्षे श्रावणमास एव कृष्णाष्टमीव्रतमनुष्टेयम् ॥

அஷ்டமியில் ஜயந்தி யோகம் ச்ராவணத்தில் அல்லது பாத்ரபதத்தில் வரலாம். அது ஆவணி மாதத்தில் வர வேண்டும் என்பது நியமம். அது கிடைக்காவிட்டால் ச்ராவண அஷ்டமியில் ஜன்மாஷ்டமி வ்ரதம் அனுஷ்டிக் கவும். இது ஸ்மார்த்தர்களுக்குச் சொன்ன விஷயமாகும். ஸ்ரீ வைஷ்ணவர்கள் ரோஹிணி நக்ஷத்ரத்தை ப்ரதானமாக வைத்து க்ருஷ்ணாவதார புண்யகாலத்தை அறியவும்.

वराहे — सिंहराशिगते सूर्ये गगने जलदाकुले ।
मासि प्रोष्ठपदेऽष्टम्यां अर्धरात्रे विधूदये ।
बुधवारे वृषेलग्ने रोहिण्याश्वरमांशके ।
शुभे हर्षणयोगे च कौलवेन युते तथा ।
वसुदेवेन देवक्यां अहं जातोऽस्मि पद्मज ॥

இவ்விடம் கிருஷ்ணாவதார காலம் பூர்ணமாக சொல்லப் படுகிறது. ஸிம்ம ராசியில் ஸூர்யன் இருக்கும்பொழுது அதாவது ஆவணி மாதத்தில் ஆகாசம் மேகத்தால் சூழ்ந்து இருக்கும்பொழுது பாத்ரபதமாக கிருஷ்ணாஷ்டமியில்

பாதி ராத்ரியில் சந்திரனுடைய உதயகாலத்தில் ரோஹிணீ நக்ஷத்ர கடைசி பாதத்தில் புதன் கிழமையில் வ்ருஷப லக்னத்தில் ஹர்ஷண யோகத்தில் கௌலவகரணத்தில் வஸுதேவர் தேவகிக்கு புத்ரனுக அவதரித்தேன் என்று பகவான் ப்ரம்மாவிடம் சொல்லுகிருர்.

पाद्मे — यैः कृता श्रावणे मासि अष्टमीरोहिणीयुता ।
किं पुन र्बुधवारेण सोमेनापि विशेषतः ॥

பாத்ம புராணத்தில் சிராவணமாத அஷ்டமீ ரோஹிணி யோடு கூடியதாகவும் புதன் கிழமை அல்லது திங்கள் கிழமையோடு கூடியதாக இருந்தால் விரதானுஷ்டானத் திற்கு யோக்ய விசேஷ காலமாகும் என்பது கருத்து.

மாஸ பேதமானது கல்பபேதத்தை அனுசரித்து அவதா ரம் ஏற்படும் என்பதைக் குறிக்கிறது.

நடுநிசியில் அஷ்டமீ ரோகிணீ யோகம் இருக்க வேண்டும்.

अष्टमी रोहिणीयुक्ता निश्यर्धे यदिदृश्यते ।

நடுநிசியில் காலத்தில் இருக்கும் அஷ்டமீ ரோஹிணீயை தான் புண்ணிய காலமாக கிரஹிக்கவேண்டும். அதாவது 15வது நாழிகை 16வது நாழிகை காலம் நடுநிசியாகும். அதில் ரோஹிணி யோகம் ஏற்படவில்லையேயானுல் அஷ்டமி யை மட்டும் புண்ணிய காலமாகக் கிரஹிக்கவேண்டும் என்பதுகருத்து. ஜன்மாஷ்டமிக்கு நிசீதத்தை புண்ணிய காலமாகக்குறிக்கப்படுகிறது.

அஷ்டமீயை நிசிவியாப்தியை முன் கூறிய ப்ரகாரம் வித்தை விஷயத்தில் அறியவும். நடுநிசி உள்ள அஷ்டமீ புண்ணிய காலமாகும். இந்த இடத்தில் பூர்வ வித்தை பரவித்தை என்பது விஷயமில்லை.

पूर्वेद्यु र्निशीथादूर्ध्वं आरभ्य परेद्युः
निशीथादर्वाक् या समाप्यते अष्टमी ।
तत्र उभयत्र रात्रि संबन्धात् कुत्र उपवास इति चेत् ॥
परेद्युरेव उपवासः प्रातः संकल्पकालमारभ्य प्रवर्तमानत्वात् ॥

எந்த அஷ்டமியானது இரவு நடுநிசிக்கு பிறகு ஆரம்பித்து மறுநாள் நடுநிசிக்குள் முடிவடைகிறதோ, அந்த இடத்தில் இரண்டு ராத்ரி ஸம்பந்தம் அஷ்டமிக்கு இருந்தாலும் மறுநாள்தான் அனுஷ்டிக்கவேண்டும். காரணம் ஸங்கல்ப காலத்தி அஷ்டமி இருப்பது உயர்ந்தது. இப்படியாக தெரிந்து கொள்ளவும். இந்த ஜன்மாஷ்டமீ விரதம் அவச்யம் அனுஷ்டிக்கவேண்டும். இது ஸந்தியாவந்தனாதிகள் மாதிரி நித்யமாகக் கருதப்படுகிறது.

ஜன்மாஷ்டமியில் உபவாஸம் முக்யம். மறுநாள் பாரணம் (போஜனம்) அஷ்டமி பாக்கியிருந்தால் அதில் செய்யக்கூடாது. அஷ்டமீ திதி முடிந்த பிறகு பாரணம் செய்யவேண்டும் என்று கூறப்படுகிறது.

17. श्रीराम नवमी निर्णयः ஸ்ரீ ராம நவமி நிர்ணயம்.

अगस्त्यः — चैत्रशुद्धातु नवमी पुनर्वसुयुता यदि ।
सैव मध्याह्नयोगेन महापुण्यतमा भवेत् ॥

சைத்ர மாஸ சுக்லபக்ஷ நவமி திதி புனர்வஸு நக்ஷத்ரத்துடன் கூடியதாக மத்யான்ன வியாப்தியுடன் இருந்தால் சிலாக்ய புண்ணிய காலமாகும். புனர்வஸு யோகமில்லாவிட்டால் சுத்த நவமியில் மத்தியான்ன கால வியாப்தியுடன் கூடிய திதியில் ராமநவமீ வ்ரதம் அனுஷ்டிக்கவேண்டும். இதற்கும் உபவாஸம் முக்யமாகும்.

श्रीरामनवमीप्रोक्ता कोटिसूर्यग्रहाधिका ।
तस्मिन्दिने महापुण्ये राममुद्दिश्य भक्तितः ।

यत्किंचित् क्रियते कर्म तद्भवक्षयकारणम् ।
उपोषणं जागरणं पितॄनुद्दिश्य तर्पणम् ।
तस्मिन् दिने तु कर्तव्यं ब्रह्मवाप्तिमभीप्सुभिः ॥

ஸ்ரீ ராம நவமீ புண்ணிய காலம் கோடி ஸூர்ய க்ரஹணத்தைக் காட்டிலும் அதிக புண்ணியமானது. ஆகையால் ராமனை உத்தேசித்து எந்த புண்ணிய காரியம் செய்தாலும் பக்தியுடன் செய்தால் மஹாபலத்தைக் கொடுக்கும். ஸ்ரீ ராம பூஜை, அவதார கட்ட பாராயணம், உபவாஸம், ஜாகரணம், பித்ருக்களை உத்தேசித்து தர்ப்பணம் எதுவும் செய்யலாம். மோக்ஷ பர்யந்ததமான ஸகல க்ஷேமமும் ஏற்படும். இதுவும் நித்யமான வ்ரதமாகும். அனுஷ்டிக்காமல் இருந்தால் பாபம் ஸம்பவிக்கும் என்பது கருத்து.

18. दशावतार कालाः— தசாவதார கால நிர்ணயம்.

1. சைத்ர கிருஷ்ண த்ரயோதசில் —மத்ஸ்யாவதாரம்.
2. ஜயேஷ்ட கிருஷ்ண த்வாதசியில் —கூர்மாவதாரம்.
3. சைத்ர கிருஷ்ண பஞ்சமில் —வராஹாவதாரம்.
4. வைசாக சுத்த சதுர்தசியில் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் ஸாயம் ஸந்தியா காலத்தில் —நரஸிம்மாவதாரம்.
5. பாத்ரபத சுக்ல த்வாதசியில் ச்ரவண நக்ஷத்ரத்தில் —வாமனாவதாரம்.
6. மார்க்கசீர்ஷ கிருஷ்ண த்வீதீயையில் —பரசுராமாவதாரம்.
7. சைத்ர சுத்த நவமி புனர்வஸு நக்ஷத்ரத்தில் —ஸ்ரீ ராமாவதாரம்.
8. வைசாக சுத்த த்ருதீயையில் —பலராமாவதரம்.
9. ச்ராவண க்ருஷ்ணாஷ்டமியில் ரோஹிணியில் —ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம்
10. பாத்ரபத சுக்ல த்விதீயையில் —கல்கி அவதாரம்.

अवतारदिने पुण्ये हरिमुद्दिश्य भक्तितः ।
उपवासादि यत्किंचित् तदानन्त्याय कल्पते ॥

இந்த மாதிரி தசாவதார காலங்களை தெரிந்து, முடிந்த அளவில் புண்ணிய கார்யங்களை அந்த தினத்தில் செய்வது மஹாபலத்தைக் கொடுக்கும்; கொஞ்ச புண்ணியம் கோடி மடங்காகும் என்பது கருத்து.

19. दशमी निर्णयः—*தசமீ நிர்ணயம்.*

शंखः — शुक्लपक्षे तिथिर्ग्राह्या यस्यामभ्युदितो रविः ।
कृष्णपक्षे तिथिर्ग्राह्या यस्यामस्तमितो रविः ॥

சங்க: — ஸூர்யோதய கால வ்யாப்தியுள்ள தசமீ திதி சுக்லபக்ஷத்தில் ச்லாக்யமானது. ஸூர்யாஸ்தமன கால வ்யாப்தி உள்ளது க்ருஷ்ணபக்ஷத்தில் ச்லாக்யமாகும் என்பது கருத்து. பார்த்து உபவாஸாதிகளை அனுஷ்டிக்கவும்.

20. एकादशी निर्णयः—*ஏகாதசீ நிர்ணயம்.*

सनत्कुमारसंहितायां— एकादशी सदोपोष्या पक्षयोः शुक्लकृष्णयोः ।

சுக்ல - க்ருஷ்ணபக்ஷங்களில் வரும் இரண்டு ஏகாதசி களிலும் எப்பொழுதும் உபவாஸம் இருக்கவேண்டும்.

गरुडपुराणे — उपोष्यैकादशी नित्यं पक्षयोरुभयोरपि ।

சுக்ல - க்ருஷ்ணபக்ஷங்களில் வரும் ஏகாதசிகளில் உபவாஸம் அவசியம் இருக்கவேண்டும். இது நித்யம் என்று கூறப்படுகிறது. அதாவது ஜீவித்திருக்கும் பொழுது ஏகாதசியை தியாகம் செய்யக்கூடாது. அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

विष्णुरहस्ये— यदीच्छेद्विष्णुसायुज्यं सुखं संपदमात्मनः ।
एकादश्यां न भुंजीत पक्षयोरुभयोरपि ॥

தனக்கு விஷ்ணுஸாயுஜ்யம், இஹலோகத்தில் ஸௌக்யம் ஸம்பத்துக்கள் இவ்வகள் அடைய விருப்பமிருக்குமேயானால் இரண்டு ஏகாதசிகளிலும் உபவாஸமிருக்கவும்.

सनत्कुमारः— एकादश्यां उपवसेन्नकदाचिदतिक्रमेत् ।
निष्कृतिर्मद्यपस्योक्ता धर्मशास्त्रे मनीषिभिः ॥
एकादश्यन्नकामस्य निष्कृति क्वापि नोदिता ॥

ஸனந்தகுமாரர்— ஏகாதசி உபவாஸத்தை உல்லங்கனம் செய்யவேண்டாம். ஸுராபாணம் செய்தவனுக்கு ப்ராயச்சித்தம் உண்டு. ஆனல் ஏகாதசியை விட்டவனுக்கு ப்ராயச்சித்தம் சொல்லப்படவில்லை. ஆகையால் ஏகாதசியை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். விட்டால் பாபம் ஸம்பவிக்கும். அதை பரிஹரிக்கமுடியாது.

இந்த வசனங்களிலிருந்து ஏகாதசி வ்ரதம் காம்யம், அதாவது தனக்கு க்ஷேம லாபங்களை உத்தேசித்து அனுஷ்டிக்கலாம். தனக்கு ஸௌகர்யமிருக்கிறது என்று நினைத்து அனுஷ்டிக்காமல் இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் பாபம் ஸம்பவிக்கும் என்பதால் நித்யம், ஆக நித்யகாம்யம் ஏகாதசி வ்ரதம் என்று கருத்து.

ஸ்மார்த்தர்கள் ஏகாதசீ அனுஷ்டானம் எப்படி என்பது பற்றி ஏகாதசிதிதியை நிர்ணயம் செய்கிறோம்.

अतिवेधा महावेधा ये वेधास्तिथिषु स्मृताः ।
सर्वेऽप्यवेधा विज्ञेया वेधस्सूर्योदये मतः ॥

தசமீ வேதமுள்ள ஏகாதசீ திதி உபவாஸத்திற்கு உகந்தது இல்லை என்று சொல்லப்படுகிறது. அந்த விஷயத்தில் வைஷ்ணவர்களுக்கும் ஸ்மார்த்தர்களுக்கும் மதபேதம்

காணப்படுகிறது. வைஷ்ணவர்கள் அவர்களுடைய பாஞ்ச ராத்ர ஆகம ரீதியில் தீக்ஷை உள்ளவர்கள் என்று சொல்லப் படுகிறார்கள். திதிகளில் அதிவேதை மஹா வேதை என்று சொல்லுகிறோம். அவைகள் வேதைகள் ஆகாது. ஸூர் யோதய கால வேதைதான் வேதை என்று சொல்லப்படு கிறது. இது ஸ்மார்த்தாளுக்கு ப்ரமாணமான வசனம்.

ब्रह्मवैवर्ते — चतस्रो घटिकाः प्रातः अरुणोदयसंज्ञकाः ।
चतुष्टयविभागोत्र वेधादीनां किलोदितः ॥
अरुणोदयवेधस्स्यात् सार्धन्तु घटिकात्रयम् ।
अतिवेधोऽपि घटिका प्रभा संदर्शनाद्रवेः ॥
महावेधोऽपि तत्रैव दृश्यतेऽर्को न दृश्यते ।
तूरीयस्तत्र विहितः योगस्सूर्योदये बुधैः ॥

இந்த ச்லோகத்திற்கு வைத்தியநாத தீக்ஷிதர் அர்த்தம் சொல்லுகிறார்: அருணோதய காலமென்பது ஸூர்யோ தயத்திற்கு முன்பு நாலு நாழிகைகள், அதில் ஆரம்பத்தில் அரை நாழிகை தசமீ ஸம்பந்தம் வேதை என்பது; ஒரு நாழிகை ஸம்பந்தம் அதிவேதை என்பது; ஸூர்யோதய பர்யந்தம் அதாவது ஸூர்யோதய பூர்வ க்ஷணத்தில் ஸம் பந்தம்உள்ளது அருணோதயகால பூர்ணமாக வ்யாபித் திருப்பது மஹாவேதை என்பது, ஸூர்ய உதய காலத்தில் தசமீ இருப்பது சில விநாடிகள் இருந்தாலும்போதுமானது. உதயவேதை என்பது வேதைகளுடைய லக்ஷணம்.

दशमीशेषसंयुक्तो यदिस्यादरुणोदयः ।
नैवोपोष्यं वैष्णवेन तद्दिनैकादशीव्रतम् ॥

தசமீ திதி ஸம்பந்தத்துடன் அருணோதய காலத்தில் ஏகாதசீ இருந்தால் அது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உப வாஸம், பூஜை இவைகளுக்கு உகந்தது அல்ல என்பது

கருத்து. ஆகையால் உதய காலத்தில் தசமீ இருந்தால் அந்த தசமீ வித்தமான ஏகாதசீ ஸ்மார்த்தர்களுக்கு உபவாஸத்திற்கு உகந்தது இல்லை என்று அறியவும்.

नारदः — नोपोष्या दशमी विद्धा सदैव एकाशीतिथिः ।
तामुष्य नरो जुह्यात् पुण्यं वर्षशतोद्भवम् ॥

ஸூர்யோதய காலத்தில் தசமீ ஸம்பந்தத்துடன் ஏகாதசீ காணப்பட்டால் அதை ஸ்மார்த்தர்கள் வர்ஜிக்க வேண்டும். அந்த ஏகாதசீயை அனுஷ்டித்தால் நூற்றுக் கணக்கான வருஷத்தில் ஸம்பாதித்த புண்யம் நசித்துவிடும் என்பது கருத்து.

विष्णुरहस्ये— द्वादशी तिथिरल्पापि यदि न स्यात्परेऽहनि ।
दशमी मिश्रिता कार्या न दोषोऽस्तीति वेधसः ॥

த்வாதசீ திதியானது பாரண தினத்தில் சில விநாடிகளாவது இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் தசமீ வேதையுடன் இருந்தாலும் ஏகாதசீ உபவாஸத்திற்கு க்ரஹித்துக் கொள்ளவேண்டியது அவசியமாக சொல்லப்படுகிறது. இது ஸ்மார்த்த விஷயம் என்று அறியவும்.

एकादशी तु संपूर्णा द्वादशी वृद्धि गामिनी ।
वंजुली नाम सा प्रोक्ता कोटि यज्ञ फलप्रदा ॥

ஏகாதசீ பூர்ணமாக இருந்து த்வாதசீ திதி மட்டும் விருத்தி அடைந்து மறுநாளும் சில நாழிகை காணப்பட்டால் வஞ்சுளீ த்வாதசீ என்று பெயர். ஆகையால் ஏகாதசீயை அந்த விஷயத்தில் விட்டு த்வாதசீ அன்று உபவாஸமிருந்து மறுநாள் பாரணை செய்யவேண்டும். விதவைகள், ஸந்யாஸிகள் இவர்கள் வித்தமான ஏகாதசீயை அனுஷ்டிக்கக்கூடாது. பாரணைக்கு த்வாதசீ இல்லாவிட்டாலும் பாதகமில்லை என்று சொல்லப்படுகிறது.

आदित्येऽहनि संक्रान्त्यां असितैकादशीषु च ।
व्यतीपाते कृते श्राद्धे पुत्री नोपवसेद् गृही ॥

க்ருஹஸ்தன் சுக்ல பக்ஷ ஏகாதசியில் சுத்தமான உபவாஸமிருப்பது ச்லாக்கியமானது. க்ருஷ்ண பக்ஷ ஏகாதசியில் க்ருஹஸ்தன் ஸம்ஸாரியாக உள்ளவன் உபவாஸம் சுத்தமாக இல்லாமல் ஏதாவது ஒருவேளை பலஹாரம் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. பானுவாரம், ஸங்க்ரமணம், க்ருஷ்ண ஏகாதசீ, வ்யதீபாதம், ச்ராத்த தினம் இவைகளில் உபவாஸம் இருக்கவேண்டாம். ஒருவேளை அன்னத்திற்கு ப்ரதிநிதயான பலஹாரம் சாப்பிடலாம் என்று கருத்து.

शयनी बोधनी मध्ये कृष्णैकादशी भवेत् ।
सैवोपोष्या गृहस्थेन नान्या कृष्णा कदाचन ॥

ஆஷாட சுக்ல ஏகாதசீ சயன ஏகாதசீ என்றும், க்ருத்திகா சுக்ல ஏகாதசீ ப்ரபோதினீ ஏகாதசீ என்றும் கூறப்படுகிறது. அதற்கு மத்தியில் வரும் க்ருஷ்ண ஏகாதசீகளில் க்ருஹஸ்தன் அவசியம் உபவாஸம் இருக்கவேண்டும். ஆகையால் இதை தவிர மற்ற க்ருஷ்ண ஏகாதசிகளில் சுத்தமான உபவாஸம் இருக்கவேண்டாம் என்று கருத்து.

21. द्वादशी निर्णयः— த்வாதசீ நிர்ணயம்,

नारदः — शुक्ला वा यदि वा कृष्णा द्वादशी श्रवणान्विता ।
तयोरेवोपवासश्च त्रयोदश्यां तु पारणम् ॥

க்ருஷ்ண த்வாதசீ அல்லது சுக்ல த்வாதசீ இந்த இரண்டும் ச்ரவண நக்ஷத்ரத்துடன் ஸம்பந்தப்பட்டால் அந்த த்வாதசீ உபவாஸமிருந்து த்ரயோதசியில் பாரணம் செய்யவேண்டும். ஏகாதசீ த்வாதசீ இரண்டு நாளும் உப

வாஸம் இருக்க சக்தி இல்லேயேயானுல் ஏகாதசியில் சுத்தமான உபவாஸத்தை குறைத்துக்கொண்டு, ச்ரவண த்வாதசியில் சுத்தமான உபவாஸம் இருக்கவேண்டும்.

चतुर्मुहूर्तं द्वादश्यां आद्यमेकादशीतिथौ ।
अन्तेचतुर्मुहूर्तं यत्तत्कालं हरिवासरम् ।
नकार्यं पारणं तत्र विष्णुप्रीणनतत्परैः ॥

ஏகாதசீ கடைசி நான்கு முகூர்த்தமும் த்வாதசீயினுடைய முன்பு நான்கு முகூர்த்தமும் ஆக 16 நாழிகள் ஹரிவாஸரம் என்று கூறப்படுகிறது. ஆகையால் த்வாதசீ முன்பாகத்தில் பாரணம் செய்யக்கூடாது.

गारुडे — यदात्वल्पाद्वादशी स्यादपकर्षोभुजेर्भवेत् ।
प्रातर्माध्याह्निकस्यापि तत्र स्यादपकर्षणम् ॥

அல்ப த்வாதசீ விஷயத்தில் த்வாதசீ முடிவுக்குள் போஜனம் செய்வது முக்யமாகையால் காலே ஸந்தியா வந்தனம்-மாத்யான்ஹிகம்-ப்ரம்மயக்ஞம், மற்ற ஒளபாஸனம், பூஜை, வைச்வதேவம், ஆக எல்லா கர்மாக்களேயும் விடியற் காலத்தில் ஆரம்பித்து செய்யலாம் என்று கூறப்படுகிறது.

देवलः — संघटे विषमे प्राप्ते द्वादश्यां पारणं कथम् ।
अद्भिस्तु पारणं कुर्यात् पुनर्भुक्तं नदोषकृत् ॥

ஸங்கடமான விஷயத்தில் த்வாதசிக்குள் பாரணம் செய்யமுடியாவிட்டால் ஜலத்தினுல் பகவானே ஸ்மரித்து பாரணம் செய்துவிட்டு பிறகு போஜனம் செய்யலாம். தோஷமில்லே என்பது கருத்து. ஆகையால் எக்காரணத்தைக்கொண்டும் த்வாதசியை உல்லங்கனம் செய்யக்கூடாது.

22. त्रयोदशी निर्णयः—த்ரயோதசீ நிர்ணயம்.

त्रयोदशी प्रकर्तव्या द्वादशी सहिता मुने ॥

சுக்ல த்ரயோதசீ வ்ரதங்கள் பூர்வ வித்தமானது ச்லாக்யம் என்று கருத்து. க்ருஷ்ண த்ரயோதசீ பரவித்தமானது ச்லாக்யம் என்று அறியவும்.

23. चतुर्दशी निर्णयः— சதுர்தசீ நிர்ணயம்.

मधुश्रवणमासस्य शुक्लायाच चतुर्दशी ।
सा रात्रिव्यापिनी ग्राह्या परापूर्वाह्णगामिनी ॥

ஸ்ரீ நரஸிம்ம மூர்த்தி ஸந்தியாகாலத்தில் அவதரித்தார். ஆகையால் வைசாக சுக்ல சதுர்தசீ திதி இரவு வ்யாப்தி உள்ளது ச்லாக்யமானது. ச்ராவணமாஸ சுக்ல சதுர்தசியில் அனந்த வ்ரதம் அனுஷ்டிக்கப்படுகிறது, அதற்கு சதுர்தசீ உதய வ்யாப்தியுடன் இருக்கவேண்டும். ஆகையால் அனந்த சதுர்தசீ பூர்ணிமையோடு ஸம்பந்தப் பட்டது ச்லாக்யம் என்று கருத்து.

24. शिवरात्रि निर्णयः சிவராத்திரி நிர்ணயம்.

स्कान्दे — माघस्य कृष्णपक्षे या तिथिश्चैव चतुर्दशी ।
तस्या रात्रिस्समाख्याता शिवरात्रि शिवप्रिया ॥

மாசி மாஸ க்ருஷ்ணபக்ஷ சதுர்தசியினுடைய இரவு சிவராத்திரி என்று கூறப்படுகிறது. இது சிவப்ரியமானது. ஆகையால் சிவராத்ரி என்று பெயர்.

तस्यां सर्वेषु लिंगेषु तदा संक्रमते हरः ।
यानिकान्यत्र लिंगानि चराणि स्थावराणि च ॥
तेषु संक्रमते देवि तस्यां रात्रौ यतो हरः ।
शिवरात्रिस्ततः प्रोक्ता तेन सा हरवल्लभा ॥

அந்த இரவில் எல்லா லிங்கங்களிலும் பரமசிவன் ஸாந்நித்யத்தை அடைகிருர். ஸ்திரமாக இருக்கும் லிங்கத்திலும் எடுத்துச் செல்லும் சரலிங்கத்திலும் ஸாம்ப பரமேச்வரன் ஆவாஹனம் செய்யாமலேயே ஸாந்நித்யம் அடைகிருர். ஆகையால் மாக க்ருஷ்ண சதுர்தசி இரவுக்கு சிவராத்திரி, சிவப்ரியா ராத்திரி என்று சொல்லப்படுகிறது.

कामिके — माघमास्यसितेपक्षे विद्यते या चतुर्दशी ।
तद्रात्रिश्शिवरात्रिस्स्यात् सर्वपुण्यशुभावहा ॥

காமிகா சாஸ்த்ரத்தில் சிவராத்திரி கூறப்படுகிறது. மாக க்ருஷ்ண சதுர்தசீ இரவு சிவராத்திரி என்று பெயர். ஸமஸ்த புண்யங்களுடைய பலன் சுலபமாக அடையக்கூடிய தினமாகும்.

आदित्यास्तमये कालेत्वस्तिचेद्याचतुर्दशी ।
तद्रात्रि शिवरात्रि स्स्यात् सा भवेदुत्तमोत्तमा ॥

மாக க்ருஷ்ண பக்ஷத்தில் சதுர்தசீ பூர்ணமாக இருந்தால் அதில் ஸம்சயம் இல்லாமல் சிவராத்திரி வ்ரதம் அனுஷ்டானம் செய்யவேண்டியது. கண்ட திதி விஷயத்தில் த்ரயோதசீ வித்தமானது, சதுர்தசீ ச்லாக்யமானது. அதாவது ஸூர்யனுடைய அஸ்தமனகாலத்திலிருந்து சதுர்தசீ இருந்தால் உயர்ந்த புண்யகாலமாகும் என்பது கருத்து.

ईशानसंहितायां — पूर्वेद्युरपरेद्युर्वा महानिशि चतुर्दशी ।
व्याप्ता सा दृश्यते यस्यां तस्यां कुर्याद् व्रतन्नरः ॥
मम प्रियकरी ह्येषा माघकृष्ण चतुर्दशी ।
महानिश्यन्विता यत्र तत्र कुर्यादिदं व्रतम् ॥

ஈஸானசம்ஹிதையில்:— சிவராத்திரி காலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. சதுர்தசியானது நிசியில் இருக்க வேண்டும். அதாவது 15வது 16வது நாழிகைகள் நிசி என்பபடும். அந்த காலத்தில் சதுர்தசீ இருக்கவேண்டும். அந்த விஷயத்தில் முதல் நாள், அடுத்த நாள் இரண்டு தினங்களிலும் மஹா நிசியில் சதுர்தசீ இருக்குமேயானால் அப்பொழுது ப்ரதோஷ வ்யாப்தியுடன் இருக்கும் சதுர்தசியை சிவராத்திரியாக எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டு நாளும் ப்ரதோஷ வ்யாப்தி, நிசி வ்யாப்தி ஸம்பவிக்காது. ஆகையால் மறுநாள் ப்ரதோஷ வ்யாப்தியுடன் கூடிய நிசிவ்யாப்தியுள்ள சதுர்தசியை சிவராத்திரியாக க்ரஹிக்கவேண்டும்.

नागरखण्डे —उपवासप्रभावेन बलादपि च जागरात् ।
शिवरात्रेस्तथा तत्र लिंगस्यापि प्रपूजनात् ।
अक्षयान् लभते भोगान् शिवसायुज्यमाप्नुयात् ॥

சிவராத்திரி புண்ய காலத்தில் உபவாஸம், இரவில் கண்விழிப்பு, லிங்கத்தில் நான்கு யாமங்களிலும் விசேஷ பூஜை இவைகள் அவசியம் செய்யவேண்டும். இவ்வாறு சிவராத்திரி வ்ரதம் அனுஷ்டித்தவர்கள் அக்ஷயமான, குறைவு இல்லாத ஸௌக்யங்களை அனுபவித்து, பிறகு சிவ ஸாயுஜ்யத்தை அடைவார்கள். ஆகையால் சிவராத்திரி வ்ரதம் நித்ய காம்யம் எனப்படும்.

25. पंचदशी निर्णयः பஞ்சதசீ நிர்ணயம்.

भूतविद्धा न कर्तव्या अमावास्या च पूर्णिमा ।
वर्जयित्वा मुनिश्रेष्ठ सावित्री व्रतमुत्तमम् ॥

பூர்ணிமை, அமாவாஸ்யை இவ்விரண்டும் பரவித்தானது ச்லாக்யமானது; ப்ரதமை ஸம்பந்தப்பட்டது என்பது கருத்து. ஆனால் ஸாவித்ரீ வ்ரதம் சதுர்தசீ வித்தமான பூர்ணி மையிலும், அமாவாஸ்யையிலும் அனுஷ்டிக்க வேண்டும். நக்ஷத்திரத்தை அனுசரித்து அனுஷ்டிக்க வேண்டிய விஷயத்தில் - உதய வ்யாப்தி உள்ள நக்ஷத்ரத்தில் ஸ்னானம், தானம் இவைகள் செய்யவும். அஸ்தமன வ்யாப்தி, நிசி வ்யாப்தி உள்ள நக்ஷத்ரத்தில் உபவாஸ வ்ரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்று கருத்து.

इति संक्षेप धर्मशास्त्रे तिथिनिर्णय प्रकरणं संपूर्णम् ॥

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரத்தில் திதி நிர்ணய
ப்ரகரணம் ஸம்பூர்ணம்.

॥ श्रीहरिः ॥

संक्षेप धर्मशास्त्रे प्रायश्चित्त प्रकरणम्

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரத்தில் ப்ராயச்சித்த ப்ரகரணம்.

1. प्रायश्चित्त शब्दार्थः—ப்ராயச்சித்த சப்தார்த்தம்.

अंगिराः — प्रायो नाम तपः प्रोक्तं चित्तंनिश्चय उच्यते ।
तपोनिश्चय संयुक्तं प्रायश्चित्तमिहोच्यते ॥

அங்கிரர் :— ப்ராய : என்றால் தபஸ் என்பது, சித்தம்-நிச்சயம் என்பது. அதாவது செய்த குற்றத்திற்கு சாஸ்திர விஹிதமான இந்த க்ருச்ரா சரணாதி நியமானுஷ்டானம் செய்தால் நம்முடைய பாபம் விலகும் என்ற நிச்சயம் விச்வாஸம், நம்பிக்கை. இதற்கு ப்ராயச்சித்தம் என்று சொல்லப்படுகிறது.

विज्ञानेश्वरीये — प्रापश्चित्तशब्दः पापक्षयार्थे नैमित्तिके कर्मविशेषेरूढः॥

ப்ராயச்சித்த சப்தம் பாபக்ஷயகரமான கர்மாவுக்குப் பெயர். ஆகையால் ரூடி சப்தம் ப்ராயச்சித்தம் என்று மஹர்ஷிகள் அர்த்தம் சொல்லியிருக்கிறார்கள். அதை அனுசரித்து லௌகிக சப்தம் ப்ராயச்சித்தம், ஆக யோக ரூடி ப்ராயச்சித்த சப்தம் என்று விக்ஞானேச்வரர் சொல்லுகிறார்.

मनुः — अकुर्वन् विहितं कर्म निन्दितं च समाचरन् ।
प्रसक्तश्चेन्द्रियार्थेषु प्रायश्चित्तीयते नरः ॥

மனு :— சாஸ்திரத்தினுல் விதிக்கப்பட்ட கார்யங்களை செய்யாததாலும், சாஸ்த்ரத்தினுல் நிஷேதிக்கப்பட்டதைச் செய்ததாலும், சப்த ஸ்பர்ச ரூப ரஸகந்த என்ற இந்திரியங்களுக்கு கோசாரமான விஷயங்களில் நியமம் இல்லாமல் கட்டுப்பாடு அற்ற நிலையிலும் பாபம் ஸம்பவிக்கிறது. ஆகையால் மூன்று விதமாக பாபம் ஏற்படுகிறது. அதை செய்தவன் அவசியம் ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்.

2. प्रायश्चित्ताकरणे दोषाः

ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாவிட்டால் தோஷம்.

याज्ञवल्क्यः — प्रायश्चित्तमकुर्वाणाः पापेषु निरतानराः ।
अपश्चात्तापिनः कष्टान् नरकान्यान्ति दारुणान् ॥

யாஞுவல்க்யர் :— பாப கார்யத்தில் ஈடுபட்டவர்கள் ப்ராயச்சித்தம் செய்யாமல், தப்புப்பண்ணினேமே என்று தாபம்கூட இல்லாமல் இருந்தால் ரொம்ப கொடூரமான, கஷ்டமான நரகங்களை அடைவார்கள்.

तामिस्रं लोहशंकुं च महानिरयशाल्मली ।
रौरवं कुंभलं पूतिमृत्तिकं कालसूत्रकम् ॥

संघातं लोहितोदं च सविषं संप्रतापनम् ।
महानरक काकोल सञ्जीवन महापथम् ॥

अवीचिमन्धतामिस्रं कुंभीपाकं तथैव च ।
असिपत्रवनं चैव तपनं चैकविंशतिम् ॥

महापातकजैर्घोरैरुपपातकजैस्तथा ।
अन्विता यान्त्यचरितप्रायश्चित्तानराधमाः ॥

தாமிஸ்ரம் - லோஹசங்கு - மஹாநிரயம் - சால்மலி - ரௌரவம் - கும்பலம் - பூதிம்ருத்திகம் - காலஸூத்ரதாபனம் - மஹாநரகம் - காகோலம் - ஸம்ஜீவனம் - மஹாபதம் - அவீசிம் - அந்ததாமிஸ்ரம் - கும்பீபாகம் - அஸிபத்ரவனம் - தபனம் என்று இருபத்தொன்று நரகங்கள் இருக்கின்றன. இவைகளை மஹாபாதகம் - உபபாதகம் முதலியது பாபம் செய்தவர்கள் ப்ராயச்சித்தம் செய்யாமல்போனால் அடைவார்கள்.

याज्ञवल्क्यः — महापातकजान् घोरान्नरकान्प्राप्य दारुणान् ।
कर्मक्षयात् प्रजायन्ते महापातकिनस्त्विह ॥

யாஞவால்யர் :— பஞ்ச மஹாபாதகம் செய்தவர்கள் குரூரமான நரகங்களை வெகுநாள் அனுபவித்து பிறகு இந்த கர்ம பூமியில் பாபத்திற்கு தகுந்த அனேக ஜன்மாக்களை அடைகிறார்கள்.

मृगश्वसूकरोष्ट्राणां ब्रह्महा योनिमृच्छति ।
खर पुल्कस वेनानां सुरापो ब्राह्मणो व्रजेत् ॥
क्रिमिकीटपतङ्गत्वं स्वर्णहारी समाप्नुयात् ।
तृणगुल्म लतात्वं च क्रमशो गुरुतल्पगः ॥

மான்-நாய்-பன்றி-ஒட்டகம்-இந்த பிறப்பை க்ரமமாக ப்ரம்மஹத்தி பாபம் செய்தவன் அடைகிறான். கழுதை-புல்கஸன் வேனன் இவைகள் இரண்டும் மனுஷ்ய ஜாதிகள். இந்தப் பிறப்பை ஸுராபானம் (கள் குடித்தவன்) செய்த ப்ராம்மணன் அடைவான். புழு-பூச்சிகள்-விட்டில்பூச்சி இந்தப் பிறப்பை தங்கம் திருடிய ப்ராம்மணன் அடைவான். புல்கள் - புதர் - கொடி இந்தப் பிறப்பை குரு பத்தினியைக் கெடுத்தவன் அடைவான்.

ब्रह्महा क्षयरोगी स्यात् सुरापश्श्यावदन्तकः ।
हेमहारी तु कुनखी दुर्चर्मा गुरुतल्पगः ॥
यो येन संवसत्येषां सतल्लिंगोऽभिजायते ॥

ப்ரம்மஹத்தி செய்தவன் க்ஷயரோகமுள்ளவனுகவும், ஸுராபானம் கள் குடித்தவன் கருப்புப் பல்லை உடைய வனுகவும், தங்கம் திருடியவன் சொத்தை நகம் உள்ளவனுக வும் பிறப்பான். இவர்களுடன் சேருகிறவன் மஹாபாபி யாவான். அவன் யாருடன் சேர்க்கை வைத்துக் கொண்டி ருக்கிருனே அவனுக்குள்ள நரகங்கள் இஹலோகத்தில் அவனுக்குக் கூறப்பட்ட ஜன்மாக்கள் இவனுக்கும் கிடைக் கும்.

अत्युत्कटैः पुण्यपापैरिहैव फलमश्नुते ।
त्रिभिर्वर्षैः त्रिभिर्मासैः त्रिभिः पक्षैः त्रिभिर्दिनैः ॥

புண்ணிய பாபங்கள் ரொம்ப தீவிரமாகச்செய்தால் அதனுடைய பலன் இங்கேயே முதலில் அனுபவித்துப் பிறகு ஸ்வர்கம் புண்ணியத்திற்கு, பாபம் நரகத்திற்கு என்ற முறையில் பரலோகங்களில் அனுபவிக்கவேண்டும். தீவிரமாக செய்தது 3 வருஷம், 3 மாதம், மூன்று தினங்கள் இவைகளில் பலன் ஏற்படும். ஆகையால் பாபத்தில் தீவிரம் உதவாது. செய்யவேகூடாது.

मनुः — संयोगं पतितै र्गत्वा परस्यैव च योषितम् ।
ब्रह्मस्वं अपहृत्यापि भवन्ति ब्रह्मराक्षसाः ॥

மனு:— இனி பாபங்களைச் செய்தவர்கள் நரகத்தை அனுபவித்து இந்த லோகத்தில் எந்த எந்த ஜன்மாவை அடைகிருர்கள் என்பதை மனு தெரிவிக்கிருர். அதாவது: பதிதனுடன் ஸ்னேகம் செய்து பழகுகிறவனும், பிற

ருடைய மனைவியை அபகரிக்கிறவனும், ப்ராம்மணனுடைய சொத்தை அபகரிக்கிறவனும் ப்ரம்ம ராக்ஷஸர்களாகப் பிறப்பார்கள்.

पिशुनः पूतनासत्वं सूचकः पूतिवक्त्रताम् ।
धान्यचोरोऽङ्गहीनत्वमातिरेक्यंतुमिश्रकः ॥

பிறரைப் பற்றி மற்றவரிடம் கோள் சொல்லுகிறவன், துர்நாற்றம் உள்ள மூக்குடையவனாக இருப்பான். பிறர் தோஷத்தைச் சொல்லுகிறவன் துர்நாற்றமுள்ள வாயுடன் இருப்பான். தானியத்தை அபகரிப்பவன் அங்கஹீனனாக இருப்பான். உயர்ந்த தானியத்தை அபகரித்து அதில் அளவை பூர்த்தி செய்வதற்கு மட்ட தானியத்தை கலந்து விடுபவன் எவனோ அவன் மிச்ரகன்; அவனுக்கு அங்கம் அதிகமாகக்காணப்படும்.

अन्नहर्ताऽऽमयावित्वं मौक्यं वागपहारकः ।
वस्त्रापहारकश्श्वैत्यं पंगुतामश्वहारकः ॥

அன்னத்தை அபகரிப்பவன் வ்யாதி உள்ளவனாகவும், பிறர் வாயைக் கட்டுகிறவன் ஊமையாகவும், வஸ்திரத்தை திருடுகிறவன் வெண்குஷ்டமுள்ளவனாகவும், குதிரை திருடுபவன் நொண்டியாகவும் பிறப்பான்.

एवं कर्म विशेषेण जायन्ते सद्विगर्हिताः ।
जडमूकान्धबधिरा विकृता कृतयस्तथा ॥

இந்த மாதிரியான பாப விசேஷங்களைச் செய்தவர்கள் ஸாதுக்களுக்குப் பிடிக்காதவர்களாயும், ஜடர்களாயும், ஊமையர்களாயும், குருடர்களாயும், செவிடர்களாயும், விகாரமுள்ள அவயம் உள்ளவர்களாயும் பிறக்கிறார்கள்.

मणिमुक्ताप्रवालानि हृत्वा लोभेन मानवाः ।
विविधानि च रत्नानि जायन्ते लोहकर्तृषु ॥

மணிகள், முத்துக்கள், பவழங்கள், ரத்தினங்கள் இவைகளைப் பேராசையால் அபகரிப்பவர்கள் பார்க்கும்பொழுதே திருடுகிற ஜாதியில் பிறப்பார்கள்.

धान्यंहृत्वा भवत्याखुः कांस्यं हंसो जलं प्लवः ।
मधुदंशः पयः काकः रसं श्वा नकुलो घृतम् ॥

தானியத்தை அபகரிப்பவன் மூஞ்சோருகவும், வெண்கலம் திருடுகிறவன் ஹம்ஸமாகவும், ஜலம் திருடுகிறவன், நீர்க் காக்கையாகவும், தேன் திருடுகிறவன் பெரிய ஈயாகவும், பால் திருடுகிறவன் காக்கையாகவும், ரஸவர்க்கத்தைத்திருடுகிறவன் நாயாகவும், நெய் திருடுகிறவன் கீரியாகவும் பிறப்பான்.

मांसं गृध्रो वपां मद्गुः तैलं तैलपकः खगः ।
चिरवाकस्तु लवणं बलाका शकुनिर्दधि ॥

மாம்ஸம் திருடுகிறவன் கழுகாவும், வபையை திருடினவன் ஜல சரபக்ஷியாகவும், எண்ணை திருடுகிறவன் கறப்பாகவும், உப்பு திருடுகிறவன் சுவற்றுக்கோழியாகவும், தயிர் திருகிறவன் கொக்காயும் பிறப்பான்.

कौशेयं तित्तिरिर्हृत्वा क्षौमं हृत्वातु दर्दुरः ।
कार्पासं तान्तवं क्रौंचो गोधा गां वाग्गुदो गुडम् ॥

வெண்பட்டைத் திருடினவன் தித்திரியாகவும், உயர்ந்த வெண்பட்டைத் திருடினவன் தவளையாகவும், பஞ்சு நூலினுல் செய்கிற பொருளை திருடினவன் க்ரௌஞ்ச பக்ஷியாகவும், பசுவை திருடினவன் உடும்பாகவும், வெல்லத்தை திருடினவன் வௌவாலாகவும் பிறப்பான்.

चुचुन्दरी शुभान् गन्धान् पत्रशाकन्तु बर्हिणः ।
श्वावित्कृतान्नं विविधं अकृतान्नं तु शल्यकः ॥

நல்ல தந்த முள்ள வஸ்த்துக்களை திருடினவன் மூஞ்சூறாகவும், கீரைவகைகளைத் திருடினவன் மயிலாகவும், சமைத்த அன்னத்தை திருடினவன் ச்வாவித் என்ற பிராணியாகவும், சமைக்காத அன்னத்தை திருடினவன் முள்ளம் பன்றியாகவும் பிறப்பான்.

बको भवति हृत्वाग्निं गृहकारी ह्युपस्करम् ।
रक्तानि हृत्वा वासांसि जायन्ते जीवजीवकः ॥

அக்னியைத் திருடுகிறவன் கொக்காகவும், வீட்டு சாமான்களைத் திருடுகிறவன் க்ருஹகாரீ என்ற புழுவாயும், சிகப்புப் புடவை முதலிய வஸ்திரங்களைத் திருடுகிறவன் ஜீவஜீவகனுகவும் (திருடவக னுகவும்) பிறப்பான்.

वृको मृगेभं व्याघ्रोऽश्वं फलपुष्पन्तु मर्कटः ।
स्त्रीमृक्षस्तोककोवारि यानान्युष्ट्रः पशूनजः ॥

மான், யானை திருடினவன் சென்னயாகவும், குதிரையைத் திருடினவன் புலியாகவும், பழங்கள் புஷ்பங்களைத் திருடினவன் குரங்காயும், ஸ்திரீகளைத் திருடியவன் கரடியாகவும், சாப்பிடும் ஜலத்தை திருடினவன் சாதக பக்ஷியாகவும், வாகனங்களைத் திருடுகிறவன் ஒட்டகமாயும், பசுக்களை திருடுகிறவன் வெள்ளாடகவும் பிறப்பான்.

यद्वातद्वा परद्रव्यमपहृत्य बलान्नरः ।
अवश्यं याति तिर्यक्त्वं जग्ध्वाचैवाहुतं हविः ॥

எதாக இருந்தாலும் பிறருடைய பொருளைத் திருடினவன் தீர்மானமாக பசுபக்ஷியாக பிறப்பது நிச்சயம்.

ஹோம த்ரவ்யங்களை ஹோமம் செய்யாமல் சாப்பிட்டாலும், மேல் சொன்ன கதியை அனுபவிக்கவேண்டியது தான். ஆகையால் நிஷித்த கார்யங்களைச் செய்யக்கூடாது என்பது கருத்து.

பாப பலங்களைச் சொல்கிற விஷயத்தில் மஹர்ஷிகளுடைய மதபேதம் காணப்படலாம். அந்த இடங்களில் விகல்ப்பம் இரண்டில் ஒன்று நிச்சயம் என்பது அர்த்தமாகும்.

3. नवविधानि पापानि—ஒன்பதுவிதமான பாபங்கள்.

विष्णुः — पुरुषस्य कामक्रोधलोभाख्यं रिपुत्रयं घोरं भवति। तेनायं आक्रान्तो महापातक अतिपातक समपातको पपातकेषु प्रवर्तते। संकीर्णकरणेषु मलिनीकरणेषु अपात्रीकरणेषु जातिभ्रंशकरणेषु प्रकीर्णकेषु च ॥

விஷ்ணு :— மனுஷ்யனுக்கு காமம், கோபம், பேராசை என்ற மூன்று சத்ருக்கள்: அதற்கு வசமானவன் மஹாபாதகம், அதிபாதகம், ஸமபாதகம், உபபாதகம், ஸங்கீரணகரணம், மலினீகரணம், அபாத்ரீகரணம், ஜாதிப்ரம்சகரணம், ப்ரகீர்ணகம் என்ற ஒன்பது விதமான பாபகார்யங்களை செய்கிருன்.

4. महापातकानि—மஹா பாதகங்கள்.

मनुः — ब्रह्महत्या सुरापानं स्तेयं गुर्वङ्गनागमः।
महान्ति पातकान्याहुः संसर्गश्चापितैस्सह ॥

மனு:— ப்ராம்மணர்களைக் கொன்றது, கள்குடித்தது, ப்ராம்மண ஸ்வர்ணத்தைத் திருடினது, குருபத்தினியைக் கெடுத்தது, இவர்களுடன் ஸ்னேகம் வைத்துக்கொண்டிருப்பது ஆக ஐந்து மஹாபாதகங்கள். இந்த பாபங்களைச் செய்தவர்கள் மஹாபாதகர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

5. अतिपातकानि—அதிபாதகங்கள்.

यमः — मातृष्वसा मातृसखी दुहिता च पितृष्वसा ।
मातुलानी स्वसा श्वश्रूर्गत्वा सद्यः पते द्विजः ॥

யமன்:— தாயின்சஹோதரி, தாயின் தோழி, பெண், அப்பாவின் ஸஹோதரி, மாமாவின் பத்னீ, ஸகோதரி, மாமியார் இவர்களைக் கெடுத்தவன் அதிபாதகம் செய்தவன் ஆவான்.

याज्ञवल्क्यः — नीचाभिगमनं गर्भपातनं भर्तृनाशनम् ।
विशेषपतनीयानि स्त्रीणामेतान्यपि ध्रुवम् ॥

யாஞுவல்க்யர்:— நீசனைப் புணர்வது, கர்பத்தை நசிப்பது, பர்த்தாவை கொல்வது இவைகள் ஸ்திரீகளுடைய அதிபாதகங்களாகும்.

6. समपातकानि—ஸமபாதகங்கள்.

याज्ञवल्क्य :— गुरूणामभ्यधिक्षेपः वेदनिन्दा सुहृद्वधः ।
ब्रह्महत्या समं ज्ञेयं अधीतस्य च नाशनम् ॥

யாஞுவல்க்யர்:— பெரியோர்களை நிந்திப்பது, வேதத்தை நிந்திப்பது, ஸ்னேகிதர்களை ஹிம்ஸிப்பது, படித்த வேதத்தை மறப்பது, இவைகள் ப்ரம்மஹத்திக்கு ஸமமான பாபங்கள்.

नालिकेरोदकं कांस्ये गोक्षीरं लवणान्वितम् ।
स्नानं रजकतीर्थेषु ताम्रेगव्यं सुरासमम् ॥

வெண்கலத்தில் இளநீரை க்ரஹித்துப் பருகுவது, பசும்பாலே உப்பு கலந்து குடிப்பது, வண்ணான் தோய்க்கின்ற ஜலத்தில் ஸ்னானம் செய்வது, தாமர பாத்திரத்தில் பால், தயிர் முதலியவை க்ரஹித்துப் பருகுவது ஸுராபான ஸமமாகும்.

मनुः — निक्षेपस्यापहरणं नराश्वरजतस्य च ।
भूमिवज्रमणीनां च रुक्मस्तेयसमं स्मृतम् ॥

மனு :— பிற்காலத்தில் திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என்று கொடுக்கப்பட்ட பொருளை அபகரிப்பதும், பூமி, வைரம், ரத்னம், இவைகளை அபகரிப்பதும் ஸ்வர்ண ஸ்தேய ஸமமாகும்.

मनुः — रेतस्सेकस्स्वयोनीषु कुमारीष्वन्त्यजासु च ।
सख्युः पुत्रस्य च स्त्रीषु गुरुतल्पसमं स्मृतम् ॥

மனு :— தன் பெண்களிடத்திலும், சண்டாள ஸ்திரீயிடத்திலும், ஸ்னேகிதன், புத்ரன், இவர்களுடைய பத்னியிடத்திலும் எவன் கெட்ட கார்யங்களை செய்கிறானோ அவன் செய்யும் இந்த பாபம் குருதல்பகமன ஸமபாதகமாகும். அதிபாதகங்களில் சொல்லப்பட்டது குருதல்பகமன ஸமபாதகங்களிலும் வருகிறது. இது தவறுதலாக செய்வது ஸமபாதகமாகும் என்று கருத்து. புத்தி பூர்வமாக செய்வது அதிபாதகமாகும் என்று கருத்து.

7. उपपातकानि — உபபாதகங்கள்

मनुः — गोवधोऽयाज्य संयाज्य पारदार्यात्मविक्रयाः ।
गुरुमातृ पितृत्यागः स्वाध्यायाग्न्योस्सुतस्य च ॥
तयोर्दानं च कन्याया स्तयोर्याजनमेव च ।
कन्या या दूषणं चैव वार्धुष्यं व्रतलोपनम् ॥

तटाकारामदाराणां अपत्यस्य च विक्रयः ।
व्रात्यताबान्धवत्यागो भृत्याध्यापनमेव च ॥
भृत्या चाध्ययनादानमपण्यानां च विक्रयः ।
सर्वाकरेष्वधीकारो महायन्त्र प्रवर्तनम् ॥
हिंसौषधीनां स्त्र्याजीवोऽभिचारो मूलकर्म च ।
इन्धनार्थमशुष्याणां द्रुमाणां अवपातनम् ॥
आत्मार्थं च क्रियारंभो निन्दितान्नादनं तथा ।
अनाहिताग्निता स्तेयमृणानामनपक्रिया ॥
असच्छास्त्राधिगमनं कौशीलव्यस्यच क्रिया ।
धान्यकुप्यपशु स्तेयं मद्यपस्त्री निषेवणम् ॥
स्त्रीशूद्रविट् क्षत्रवधो नास्तिक्यं चोपपातकम् ॥

ம்னு:— பசுவதம், வேதம் தெரியாதவனுக்கு யாகம் செய்து வைப்பது, ஆசார்யன், பிதா, மாதா இவர்களை தியாகம் செய்வது, வேதம் அக்னி இவைகளை தியாகம் செய்வது, பிள்ளையை தியாகம் செய்வது, தம்பி கல்யாணம் செய்து கொண்டு இருக்கும்பொழுது அண்ணன் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பது - அண்ணுவுக்கு பரிவித்தி என்ற தோஷம், தம்பிக்கு பரிவேதனம் என்பது தோஷம், இவ்விருவர்களுக்கு கன்னியா தானம் செய்வது, அவர்களுக்கு கல்யாணம் செய்து வைப்பது, கன்னிகையைக் கெடுப்பது, வட்டியினுல் ஜீவிப்பது, பிரம்மசாரியினுடைய விஷய ஸேவனம், குளம், புஷ்ப தோட்டம், பத்னி, புத்ரன் இவர்களை விற்பது, உசிதமான காலத்தில் உபநயனம் முதலியதை செய்யாமல் இருப்பது, சிற்றப்பா - மாமா இவர்களை அனுசரிக்காமல் இருப்பது, சம்பளம் பேசிக்கொண்டு வேத வேதாந்தம் சொல்லிவைப்பது, சம்பளம் வாங்கிக்கொண்டு வேதவேதாந்தங்களைப் படிப்பது; விற்கக்கூடாத எள்ளு

முதலியவைகளை விற்பது, கஜானுவுக்கு ராஜாதிகாரத்தைப் பெற்ற அதிகாரியாக இருப்பது, மிஷின்களை ஓட்டுவது ஔஷதிகளை கிள்ளுவது முதலிய வ்யாபாரங்களால் ஹிம்ஸிப்பது, ஸ்திரீகளை வைத்து ஜீவனம் செய்வது, பிறரை கெடுக்க பூஜை செய்வது, மந்திரங்களிஞல் வசீகரணம் செய்வது, மூல கர்மா என்பது, விறகை உத்தேசித்து பச்சை மரத்தை வெட்டுவது, தனக்காக சமைப்பது, சாஸ்திரத்திஞல் நிந்திக்கப்பட்டவன் க்ருஹத்தில் அன்னம் சாப்பிடுவது, அதிகாரியாக இருந்து அக்னிஹோத்ரம் பண்ணுமல் இருப்பது, தங்கத்தைத் தவிர உயர்ந்த பதார்த்தங்களை திருடுவது, வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்ாமல் இருப்பது, ம்லேச்ச சாஸ்திரத்தை வாசிப்பது, பாட்டு, கூத்துகளில் ஈடுபடுவது, தான்யம், தாமிரம் முதலிய உலோஹங்கள், பசுக்கள் இவைகளை திருடுவது, குடிப்பழம், பரஸ்திரீ கமனம், க்ஷத்ரியன், வைச்யன் இதரன், இவர்களை ஹிம்ஸிப்பது, இவைகள் தனித்தனியாக உபபாதகங்கள் எனப்படும்.

8. संकरीकरणानि—ஸங்கரீகரணங்கள்.

मनुः — खराश्वोष्ट्र मृगेभानां अजाविकवधस्तथा ।
संकरीकरणं ज्ञेयं मीनाहि महिषस्य च ॥

மனு:— கழுதை, நாய், ஒட்டகம், மான், யானை, ஆடு, செம்மரிஆடு, மீன், பாம்பு, எருமை, இந்த மிருகங்களை வதம் செய்வது ஸங்கரீகரண பாதகமாகும்.

9. मलिनीकरणानि—மலினீகரணங்கள்

क्रिमिकीटवयो हत्या मद्यानुगत भोजनम् ।
फलैधः कुसुमस्तेयं अधैर्यं च मलावहम् ॥

க்ருமிகள், புழுக்கள், பக்ஷி, இவைகளை ஹிம்ஸிப்பது, கள் கலந்த உணவைச் சாப்பிடுவது, பழம், விறகு, புஷ்பம் இவைகளைத் திருடுவது, தைர்யமில்லாமல் இருப்பது இவைகள் மலினீகரண பாதகங்கள் ஆகும்.

10. अपात्रीकरणानि— அபாத்ரீகரணங்கள்

निन्दितेभ्यो धनादानं वाणिज्यं शूद्रसेवनम् ।
अपात्रीकरणं ज्ञेयं असत्यस्य च भाषणम् ॥

அனுஷ்டானம் இல்லாதவர்களிடமிருந்து பணம் காசு வாங்குவது, பண்டங்களை விற்பது, இதரர்களை சேவிப்பது, தொட்டதுக்கெல்லாம் பொய் பேசுவது, இவை அபாத்ரீகரண பாதகங்களாகும்.

11. जातिभ्रंशकरणानि—ஜாதிப்ரம்சகரணங்கள்

ब्राह्मणस्यरुजः कृत्या घ्रातिरघ्रेयमद्ययोः ।
जैह्म्यं च मैथुनं पुंसि जातिभ्रंशकरं स्मृतम् ॥

ப்ராம்மணர்களை காயப்படுத்தி துக்கமடையச்செய்வது, நுகரக்கூடாத வெங்காயம்-உள்ளிப்பூண்டு கள்ளு இவைகளை நுகருவது, புருஷனிடத்தில் தப்பாக நடப்பது, இவைகள் ஜாதிப்ரம்சகரண பாதகங்கள் ஆகும்.

12. ज्ञानाज्ञानकृत पापविचारः

தெரிந்தும் தெரியாமலும் செய்த பாபம் பற்றி விசாரம்.

छागलेयः — प्रायश्चित्तमकामानां कामावाप्तौ नविद्यते ।

சாகலேயர்: — ப்ராயச்சித்தம்; தெரியாமல் செய்த பாபங்களுக்குத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. தெரிந்து செய்த பாபங்களுக்கு ப்ராயச்சித்தம் கிடையாது.

मनुः — अकामतः कृतेपापे प्रायश्चित्तं विदुर्बुधाः ।
कामकारकृतेऽप्याहुरेके श्रुति निदर्शनात्

மனு:—தெரியாமல் செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தம் உண்டு என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். சிலர் தெரிந்து செய்த பாபத்திற்கும் ப்ராயசித்தம் உண்டு என்று சொல்லுகிறார்கள். இதற்கு ச்ருதிவசனம் ப்ரமாணமாகும்.

स्मृत्यन्तरे — विहितं यदकामानां कामात्तु द्विगुणं भवेत् ।

தெரியாமல் செய்த பாபத்திற்கு சொல்லப்பட்ட ப்ராயச்சித்தம் தெரிந்து செய்தால் இரட்டைப் பங்கு ப்ராயச்சித்தமாகும்.

अत्रमाधवीये — तन्निवर्तक प्रायश्चित्तस्यापि शक्तिर्द्विविधा ।
नरकनिवारिका व्यवहारजननीच ॥

ப்ராயச்சித்தத்திற்கு இரண்டுவிதமான சக்தி உண்டு. ஒன்று ப்ராயச்சித்தம் செய்துகொண்டவனுக்கு பரலோகத்தில் நரகானுபவம் கிடையாது. இரண்டாவது இந்த லோகத்தில் எல்லோரிடமும் வ்யவஹாரம் செய்யலாம் என்ற தன்மையையும் உண்டு பண்ணுகிறது என்பது. ஆனால் சில பெரிய பாபத்திற்கு, அதாவது பதனீயமான பஞ்சமஹா பாதகங்களுக்கு பிராயச்சித்தம் செய்து கொண்டாலும், இந்த லோகத்தில் அவனை வர்ஜிக்கவேண்டும். அவனுடன் எந்தவிதமான பழக்க வழக்கங்களும் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆகையால் மஹாபாதகங்களைத் தவிர மற்ற உபபாதங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்துகொண்டால் மேல் லோகத்தில் நரகம் வராது; இந்த லோகத்திலும்

எல்லோரிடமும் பழகலாம். தெரியாமல் செய்த பாபத்திற்கு சொன்ன ப்ராயச்சித்தம், தெரிந்து பாபம் செய்தால் இரண்டு தடவை ப்ராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும். அவர்களுக்கும் மேல் லோகத்தில் நரகம் ஸம்பவிக்காது. இஹலோக வியவஹாரமும் உண்டு என்று கருத்து.

यः कामतो महापापं नरः कुर्यात्कथंचन ।
न तस्य निष्कृति र्दृष्टा भृग्वग्निपतनादृते ॥

எவனொருவன் மஹாபாதகத்தை புத்தி பூர்வமாக செய்கிறானோ அவனுக்கு ப்ராயச்சித்தம் கிடையாது. மலையில் ஏறி விழுவது அல்லது அக்னியில் விழுவதுதான் ப்ராயச்சித்தம். ஆகையால் பிராயச்சித்தம் தெரியாமல் செய்த மஹாபாதகங்களுக்குத்தான் என்பது கருத்து.

மரணாந்த பிராயச்சித்தம் கலியில் நிஷேதிக்கப்பட்டிருப்பதால், காமத்தால் புத்தி பூர்வமாக செய்த மஹாபாதங்களுக்கு நரகானுபவம் உண்டு. ஆனால் சொன்ன 12 வருஷ ஸாத்யமான பிராயசித்தம் செய்துகொண்டால், இஹலோகத்தில் வியவஹாரம் செய்ய அதிகாரியாகிறான் என்பது சாஸ்திர ஸித்தாந்தம்.

अकामतः कृतं पापं वेदाभ्यासेन शुध्यति ।
कामतस्तु कृतं पापं प्रायश्चित्तैः पृथग्विधैः ॥

உபபாதகங்களை தெரியாமல் செய்தால் வேதாப்யாஸத்தால் போக்கிக்கொள்ளலாம். புத்தி பூர்வமாக செய்தால் பிராயச்சித்தங்கள் செய்துகொள்ள வேண்டும் என்று மனு சொல்கிறார்.

स्मृत्यन्तरे — हन्ता मन्तोपदेष्टा च तथा संप्रतिपादकः ।
प्रोत्साहकस्सहायश्च तथामार्गोपदेशकः ॥

आश्रयशशस्त्रदाता च भक्तदाता च कर्मणाम् ।
उपेक्षकः शक्तिमांस्तु दोषवक्ताऽनुमोदकः ॥
अकार्यकारिणां तेषां प्रायश्चित्तं प्रकल्पयेत् ॥

வதத்திற்கு துணையாக இருந்தவனுக்கு ப்ராயச்சித்தம் சொல்லப்படுகிறது. கொன்றவன், அங்கீகரித்தவன், அதற்காக தூண்டுதல் செய்தவன், உபாயத்தைத் தெரிவித்தவன், உத்ஸாகப்படுத்தினவன், ஸ்காயமாக இருந்தவன், வழி சொன்னவன், இடம் கொடுத்தவன், ஆயுதம் கொடுத்தவன், ஹிம்சை செய்ய அன்னம் போட்டவன், தடுக்க சக்தியிருந்தும் தடுக்காதவன், தோஷம் சொன்னவன், செய்த கார்யம் சரிதான் என்று அனுமோதனம் செய்தவன் இவர்களும் குற்றவாளிகள் ஆவார்கள். இவர்களுக்கும் ப்ராயச்சித்தம் உண்டு என்பது கருத்து.

13. पातकं द्विविधम्—பாபங்கள் இரண்டுவிதம்.

पराशरः— वेदवेदांगविदुषां धर्मशास्त्रं विजानताम् ।
स्वकर्मरतविप्राणां स्वकं पापं निवेदयेत् ॥
यत्पापं कर्तृव्यतिरिक्तेन केनचिदपि न ज्ञातं
तद्रहस्यं तस्य प्रायश्चित्तमपि रहस्येव कर्तव्यम् ॥

பராசரர்:— பாபங்கள் இரண்டு விதங்கள். எல்லோருக்கும் தெரிந்து பாபம் செய்வது ஒன்று. தன்னைத் தவிர வேறு யாருக்கும் தான் செய்த பாபம் தெரியாது; அது இரண்டாவது ரஹஸ்ய பாபம். ப்ரகாசமான பாபத்தை வேத வேதாங்க வித்வானும் தர்ம சாஸ்திரம் தெரிந்தவர்களும், அனுஷ்டானம் செய்கிறவர்களுமான பெரியோர்களிடம் தெரிவித்து ப்ராயசித்தம் விதிக்கச் சொல்லி செய்ய வேண்டும். அது ப்ரகாசமாக செய்த ப்ராயச்சித்தமாகும். ரஹஸ்ய பாபத்திற்கு ரஹஸ்யமாக ப்ராயச்சித்தம் செய்யவும். யாரிடமும் சொல்லவேண்டியது கிடையாது.

14. प्राजापत्य कृच्छ्र लक्षणम्

ப்ரஜாபத்ய க்ருச்ர லக்ஷணம்.

मनुः — त्र्यहं प्रातः त्र्यहं सायं त्र्यहमद्यादयाचितम् ।
त्र्यहं परन्तु नाश्नीयात् प्राजापत्यंचरन् द्विजः ॥

மனு :- மூன்று நாள் காலையில் போஜனம், மூன்று நாள் இரவில் போஜனம், மூன்று நாள் யாசிக்காமல் கிடைத்தால் ஒருவேளை சாப்பிடுவது, மூன்று நாள் உபவாஸம் இருப்பது ஆக 12 தினங்கள் அனுஷ்டிக்கவேண்டியது ப்ராஜபத்ய க்ருச்ரம் என்பதாகும்.

15. पादकृच्छ्रः—பாதக்ருச்ரம்

याज्ञवल्क्यः — एकभक्तेन नक्तेन तथैवायाचितेन च ।
उपवासेन चैकेन पादकृच्छ्रः प्रकीर्तितः ॥

யாஞ்யவல்க்யர்:— ஒரு நாள் பகல் போஜனம், ஒரு நாள் இரவு போஜனம், ஒரு நாள் யாசிக்காமல் கிடைத்தால் சாப்பிடுவது, ஒரு நாள் உபவாஸம் ஆக நான்கு தினங்கள் உபவாஸம் அனுஷ்டிப்பது பாதக்ருச்ரம் என்பதாகும்.

16. अर्धकृच्छ्रः—பாதிக்ருச்ரம்

सायंप्रातः तथैवोक्तं दिनद्वयमयाचितम् ।
दिनद्वयंतु नाश्नीयात्कृच्छ्रार्धं तद्विधीयते ॥

ஒரு பகல் போஜனம், ஒரு இரவு போஜனம், இரண்டு நாள் யாசிக்காமல் கிடைத்தால் சாப்பிடுவது, இரண்டு தினம் உபவாஸம் ஆக 6 நாள் ஸாத்யமானது அர்த்த க்ருச்ரமாகும்.

17. अतिकृच्छ्रः—அதிக்ருச்ரம்.

पराशरः — नवाहमतिकृच्छ्रस्स्यात् पाणिपूरान्नभोजनः ।
त्रिरात्रमुपवासीस्यादतिकृच्छ्रस्स उच्यते ॥

பராசரர்:— மூன்று நாள் பகலிலும், மூன்று நாள் இரவிலும், மூன்று நாள் யாசிக்காமலும் ஒரு கை பூர்ணமாக அன்னம் சாப்பிடுவது, மூன்று நாள் உபவாஸம் இருப்பது ஆக 12 நாள் அதிக்ருச்ரம் ஆகும். சில மஹர்ஷிகள் ஒரு கபளம் சாப்பிடச் சொல்லுகிறார்கள். பராசரர் கருணையால் கைநிறைய அன்னம் ஒருதடவை சாப்பிடலாம் என்று சொல்லுகிறார்.

18. कृच्छ्रातिकृच्छ्रः—க்ருச்ராதி க்ருச்ரம்.

बोधायनः — अब्भक्षस्त्रियहानेतान्वायुभक्षस्ततः परम् ।
एषकृच्छ्रातिकृच्छ्रस्तु विज्ञेयस्सोतिपावनः ॥

போதாயனர்:— மூன்று பகல், மூன்று இரவு, மூன்று நாள் அயாசிதம் இந்த தினங்களில் போஜன காலத்தில் தீர்த்தத்தை மட்டும் சாப்பிடுவது பிறகு மூன்று நாள் சுத்த உபவாஸம் அனுஷ்டிப்பது க்ருச்ராதிக்ருச்ரம் என்று சொல்லப்படுகிறது. யாஞ்யவல்க்யர் இருபத்தியோரு நாள் பாலை மட்டும் சாப்பிட்டிருப்பது க்ருச்ராதி க்ருச்ரம் என்று சொல்கிறார். இது கொஞ்சம் ஸுலபமானது. இது அசக்த விஷயம், தப்தக்ருச்சரம் என்பது சூடாக செய்த ஜலக்ஷீர ஆஜ்யங்களை கிரமமாக மூன்று மூன்று தினங்களாக 9 நாள் சாப்பிட்டு பிறகு 3 நாள் உபவாஸமிருப்பது என்று சொல்லப்படுகிறது, ஸாந்தபனக்ருச்சரம் - கோமூத்ரம், கோமயம், பால், தயிர், ஆஜ்யம், குசோதம் இவைகளை தினம் ஒவ்வொன்றாக சாப்பிட்டு கடைசியாக ஒருநாள் உபவாஸம், இப்படியாக ஏழு நாளில் அனுஷ்டிக்கவேண்டியது ஸாந்தபன க்ருச்ரமாகும்.

12 நாள் சுத்த உபவாஸமிருந்தால் பராக க்ருச்ரமாகும். ஒரு மாதம் பழக்கங்கள் மாத்திரம் சாப்பிட்டு உபவாஸ மிருந்தால் பல க்ருச்ரமாகும்.

யவதான்யத்தால் பாயஸம் வைத்து ஒரு மாதம் சாப்பிட்டு உபவாஸமிருந்தால் யாவக க்ருச்ரம் எனப்படும்.

மூன்று நாள் அகமர்ஷண ஸூக்தம் சொல்லி த்ரிஷவஸ ஸ்னானம் செய்துகொண்டு உபவாஸமிருந்தால் அகமர்ண க்ருச்ரம் என்பதாகும். இந்த மாதிரி அனேக க்ருச்ரம் சொல்லப்பட்டிக்கிறது.

19. चान्द्रायणम् — சாந்த்ராயணம்.

चान्द्रायणद्विविधं पिपीलिकामध्यं यवमध्यंचेति ।

சாந்திராயணவிரதம் இரண்டுவிதமாகும்: பிபீலிகா மத்யம், யவமத்யம் என்று. எரும்பு மத்யம் என்ற சாந்திராயணம் முன்பும் பின்பும் எரும்பு போல ஸ்தூலமாக இருக்கும். யவமத்ய சாந்திராயணம் என்பது யவதான்யம் போல முன்பும் பின்பும் குருகி இருந்து நடுவில் ஸ்தூலமாக இருக்கும்.

वसिष्ठः — मासस्यकृष्णपक्षादौ ग्रासानद्याच्चतुर्दश ।
ग्रासापचयभोजीसन् पक्षशेषं समापयेत् ॥

வஸிஷ்டர்: — க்ருஷ்ணபக்ஷ ப்ரதமை அன்று ஸங்கல்பம் செய்து 14 கபளம் சாப்பிட்டு, பிறகு மறுநாளிலிருந்து தினம் ஒரு கபளம் வீதம் குறைவாக புஜித்து, அமாவாஸ்யை அன்று உபவாஸமிருந்து பிறகு சுக்ல பக்ஷ பிரதமை அன்று ஒரு கபளம் மறுநாள் இரண்டு கபளங்கள் என்ற பிரகாரம் பூர்ணிமா அன்று 15 கபளங்கள் சாப்பிட்டு முடிக்கவேண்டும். இது பிபீலிகாமத்ய சாந்திராயணம் எனப்படும்.

அடுத்து யவமத்ய சாந்திராயணம் சொல்லப்படுகிறது.

तथैव शुक्लपक्षादौग्रासं भुंजीत चापरम् ।
ग्रासोपचय भोजीसन् पक्षशेषं समापयेत् ॥

शुक्लप्रतिपदिग्रासमेकमुपक्रम्य प्रतिदिनमेकैकग्रासवृद्धया पूर्णिमायां पंचदशग्रासाः संपद्यन्ते । कृष्णप्रतिपदि चतुर्दशग्रसाः । एवं प्रतिदिनं एकैकग्रासह्रासे सति अमावास्यायां उपवासः इति मध्यस्थौल्याद्यव मध्यचान्द्रायणं भवति ।

சுக்லபக்ஷ பிரதமை அன்று ஒரு கபளம் த்வீதியையில் இரண்டு கபளம் வீதம் தினம் ஒரு கபளம் ஜாஸ்தியாக சாப்பிட்டு பூர்ணிமை அன்று 15 கபளங்கள் சாப்பிட்டு பிறகு, கிருஷ்ணபக்ஷ ப்ரதமையில் 14 கபளங்கள் என்ற ப்ரகாரம் ஒருகபளம் குறைவாக புஜித்து அமாவாஸ்யை அன்று உபவாஸம் இருக்க வேண்டும். இது மத்யபாகம் ஸ்தூலமாக இருப்பதால் யவமத்ய சாந்திராயணம் என்று கூறப்படுகிறது.

இதற்கு ஆரம்பத்தில் வப்னம் செய்து சில ஹோமங் கள் செய்து முடிவிலும் தக்ஷிணை தானங்கள் முதலியதும் சொல்லப்பட்டிருக்கிறது. பார்த்து தெரிந்துகொள்ளவும்.

ஒருமாதம் தினம் மூன்றுகபளங்கள் சாப்பிட்டு நியமத் துடன் இருந்தால் இதற்கு ரிஷி சாந்திராயணம் என்று கூறப்படுகிறது.

ஒருமாதம் தினம் பகலில் நான்கு கபளங்கள், இரவில் நான்கு கபளங்கள் சாப்பிட்டு நியமத்துடன் இருந்தால் இதற்கு சிசு சாந்திராயணம் என்று கூறப்படு கிறது. ஒரு மாதம் தினம் ஒரு வேளை எட்டு கபளங்கள் சாப்பிட்டு நியமத்துடன் இருந்தால் இதற்கு யதி சாந்தி ராயணம் என்று கூறப்படுகிறது.

20. केषांचित्पापानां प्रायश्चित्तम्

சில பாபங்களுக்கு ப்ராயச்சித்தம்.

पराशरः — दशयोजन विस्तीर्णं शतयोजनमायतम् ।
रामचन्द्रसमादिष्टं नलसंचय संचितम् ॥
सेतुं दृष्ट्वा समुद्रस्य ब्रह्महत्यां व्यपोहति ।
सेतुं दृष्ट्वा विशुद्धात्मा त्ववगाहेत सागरम् ॥

பராசரர்:— கலியுகத்தில் ப்ரம்மஹத்தி தோஷத்திற்கு ராமஸேதுவில், ராமேச்வரத்தில் முறைப்படி ஸ்னானம் செய்வது ப்ராயச்சித்தம் என்று பராசரர் சொல்லுகிறார். ஆனால் அவர் சொல்லியபடி செய்யவேண்டும். ஸங்கல்பம் செய்து கொண்டு குடை, பாதரக்ஷை இல்லாமல் நடந்து ராமேச்வரம் செல்லவேண்டும். தினம் பிக்ஷை எடுத்து சாப்பிட வேண்டும். அந்த சமயத்தில் நான் ப்ரம்மஹத்தி செய்தேன், நான் பாபீ, எனக்கு பிக்ஷை போடுங்கள் என்று சொல்லி கேட்கவேண்டும். வீட்டுக்குள்ளே செல்லக் கூடாது. நதிக்கரையில், மாட்டுக்கொட்டிலில் இவைகளில் தங்கலாம். ஆங்காங்கு தான் செய்த பாபத்தை எல்லோரிடமும் தெரிவிக்கவேண்டும். ராமேச்வரம் சென்று தனுஷ்கோடியில் ஸ்னானம் செய்து அக்னிதீர்த்தம் முதலிய தீர்த்தங்களிலும் முறைப்படி ஸ்னானம் செய்து பிறகு சேர்ந்த கிராமத்திற்குச் சென்று நூற்றுக்கணக்கான கோதானம் ப்ராம்மண போஜனம் செய்து முடிக்கவேண்டும்.

मनुः — ब्रह्महा द्वादशसमाः कुटीं कृत्वा वनेवसेत् ।
भैक्षाश्यात्मविशुद्ध्यर्थं कृत्वा शवशिरोध्वजम् ॥

மனு:— ப்ரம்மஹத்தி செய்தவன் 12 வருஷகாலம் கிராமத்திற்கு வெளியில் ஒரு குடிசை கட்டிக் கொண்டு பிக்ஷை எடுத்து ஜீவனம் செய்து தண்டத்தில் மனுஷ்ய சிரஸ்

கபாலத்தை சொறுகி கையில் வைத்துக்கொண்டு இருக்க வேண்டும். எப்பொழுதும் संस्मरेद्हरिम् என்ற வசனத்தை அனுசரித்து ஹரிஸ்மரணம் செய்து கொண்டு இருக்க வேண்டும்.

पराशरः — सशिखं वपनं कृत्वा त्रिसन्ध्यमवगाहनम् ।
गवां मध्ये वसेद्रात्रौ दिवा गा अप्यनुव्रजेत ॥
उष्णे वर्षति शीते वा मारुते वाति वा भृशम् ।
न कुर्वीतात्मनस्त्राणं गोरकृत्वातु शक्तितः ॥
पतितां पंकलग्नां वा सर्वप्राणैस्समुद्धरेत् ।
प्राजापत्यं ततः कृच्छ्रं विभजेत चतुर्विधम् ॥

பராசரர் :— இனி பசுவை வதம் செய்தவனுக்கு பிராயச்சித்தம் சொல்லப்படுகிறது. தலையை மொட்டை அடித்துக் கொண்டு தினம் மூன்று வேளையும் ஸ்னனம் செய்து கோ விரதம் அனுஷ்டிக்கவேண்டும். பசு மந்தை மத்தியில் ராத்திரியில் வசிக்கவேண்டும். பகலில் பசுக்கள் நடந்து போகும்பொழுது தானும் பசுக்களை பின்தொடர்ந்து செல்லவேண்டும். வெய்யில் காற்று மழை இவைகளை லக்ஷ்யம் செய்யக்கூடாது. பசுக்களை ரக்ஷிப்பதில் சிரத்தையுடன் இருக்கவேண்டும். வழியிலோ சேற்றிலோ பசு வீழ்ந்து மாட்டிக்கொண்டால் அதை தானே தூக்கி காப்பாற்றவேண்டும். இவ்வளவு செய்துகொண்டு பிராஜாபத்ய க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டும். அந்த க்ருச்சரம் கொன்ற பசுவினுடைய வயதை அனுசரித்து நான்காக பிரித்து அனுஷ்டிக்கவேண்டும். பிறகு கோதானம் பிராம்மண போஜனம் செய்விக்க வேண்டும். இவ்வாறு செய்தால் கோ வத பிராயச்சித்தமாகும்.

काष्ठलोष्टकपाषाणैः शस्त्रेणैवोद्धतोबलात् ।
व्यापादयति यो गांतु तस्य शुद्धिं विनिर्दिशेत् ॥
चरेत्सान्तपनं काष्ठे प्राजापत्यन्तु लोष्टके ।
तप्तकृच्छ्रन्तु पाषाणे शस्त्रपातेऽतिकृच्छ्रकम् ॥

எவன் பசுவை கழியினுலோ, பெரிய மண்ணுங்கட்டியி ஞலோ, கருங் கல்லினுலோ, கத்தி முதலிய ஆயுதங்களா லோ கொல்லுகிருனே அவனுக்கு ப்ராயசித்தம் சொல்லுகி ருர். கழியினுல் வதம் செய்தவனுக்கு ஸாந்தபன க்ருச்ரம், மண்ணுங்கட்டியினுல் வதம் செய்தவனுக்கு ப்ராஜா பத்ய க்ருச்ரம், கல்லினுல் வதம் செய்தவனுக்கு தப்த க்ருச்ரம், கத்தி முதலியவைகளால் வதம் செய்தவனுக்கு அதிக்ருச்ரம், பிராயச்சித்தமாக சொல்லபடுகிறது.

इह यो गोवधं कृत्वा प्रच्छादयितुमिच्छति ।
स याति नरकं घोरं कालसूत्रमसंशयम् ॥
विमुक्तो नरकात्तस्मान्मर्त्यलोकेषु जायते ।
क्लीबो दुःखोच क्रुष्ठी च सप्तजन्मानि वै नरः ॥

இந்த லோகத்தில் கோ வதம் செய்து அதை எவன் மறைக்கிருனே (அதாவது பிராயச்சித்தம் செய்து கொள்ள வில்லை என்று கருத்து) அவன் காலஸூத்ரம் என்ற நரகத்தை அடைந்து வெகு நாள் கஷ்டத்தை அனுபவித்து பிறகு மனுஷ்ய லோகத்தில் ஏழு ஜன்மாக்களில் பெருவியாதி உள்ளவனுயும், நபும்ஸகனுயும் துக்கத்தை அனுபவிக்கிறவனு யும் பிறந்து கஷ்டப்படுவான். கோ என்றுல் காளே மாடும் சேர்த்துதான் சொல்லபடுகிறது.

मनुः — सुरां पीत्वा द्विजो मोहात् अग्निवर्णां सुरां पिबेत् ।
तया स काये निर्दग्धे मुच्यते किल्बिषात्ततः ॥

மனு :— கள் குடித்தால், பிராம்மணன் கள்ளை சிகப்பாக காய்ச்சிக் குடிக்கவேண்டும்; அதனுல் சரீரம் பொசுங்கி மறித்தால் ஸுராபான பாபத்திலிருந்து விடுபடுகிருன்.

यमः— ताम्रपात्रस्थितं गव्यं नालिकेरोदकं तथा ।
लवणाक्तं पयश्चैव मद्यगन्धं तथैव च ।
पीत्वा द्विजश्चरेच्चान्द्रं प्राजापत्यमकामतः ॥

எமன் :— தாம்ர பாத்திரத்தில் இருக்கும் பால் இளநீர், உப்பு போட்ட பால், ஸுராகந்தம், இவைகளை சாப்பிட்டால் சாந்திராயணம் அனுஷ்டிக்க வேண்டும். தெரியாமல் சாப்பிட்டால் பிராஜாபத்ய க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும்.

याज्ञवल्क्यः — ब्राह्मणस्स्वर्णहारीतु राज्ञे मुसलमर्पयेत् ।
स्वकर्मख्यापयंस्तेन हतो मुक्तोऽपि वा शुचिः ॥
अनिवेद्य नृपे शुध्येत्सुरापव्रतमाचरन् ।
आत्मतुल्यं सुवर्णं वा दद्यात् विप्राय तुष्टिकृत् ॥

யாக்ஞவல்க்யர் :— பிராம்மணன் ஸ்வர்ணத்தை திருடினுல் ராஜாவிடத்தில் உலக்கையைக் கொடுத்து தன் தோஷத்தை தெரிவித்து உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்டால் இந்த பாபத்திற்கு பரிஹாரம். இல்லாவிடில் ஸுராபானத்திற்கு சொன்ன பிராயச்சித்தம் செய்து

கொண்டு மரணமடைந்தால் பாப பரிஹாரமாகும். தன் எடைக்கு தங்கத்தை பிராம்மணனிடம் தானம் கொடுத்தாலும் பிராயச்சித்தம் செய்ததாகும்.

मार्कण्डेयः — दासी मानं धनं हन्ति वेश्या हन्ति तपोयशः ।
विधवाऽऽयुः श्रियं हन्ति सर्वं हन्ति परांगना ॥

மார்கண்டேயர் :— தாஸீகமனம் மானத்தையும் தனத்தையும் கெடுக்கும். வேசிகமனம் தபஸ், புகழ் இவைகளை கெடுக்கும். விதவாகமனம் ஆயுஸ், சோபை இவைகளை கெடுக்கும். எல்லாவற்றையும் கெடுத்துவிடும் பரபுருஷ ஸ்திரீகமனம். இதற்கு ப்ராயச்சித்தம் கடுமையாக சொல்லப் பட்டிருக்கிறது.

देवलः — पिशुनश्च खलश्चैव मद्यपः कितवस्तथा ।
स्तेयी च दुर्जना एते सेवामेषां करोति यः ॥
पराकस्त्वेकदिवसे पक्षे तप्तमुदीरितम् ।
प्राजापत्यं तथा मासे वर्षे चान्द्रस्य भक्षणम् ॥
कृत्वा शुद्धिमवाप्नोति वर्षादूर्ध्वं पतत्यसौ ॥

தேவலர் :— பிறரைப்பற்றி பிறரிடம் தப்பாக பேசுகிறவன், போக்கிரி, கள்குடிக்கிறவன், சூதாட்டகாரன், திருடுகிறவன் இவர்கள் துர்ஜனங்கள் என்று சொல்லப் படுகிறார்கள். இவர்களுடன் ஒரு நாள் வசித்தால் பராகம் என்ற க்ருச்ரமும், 15 நாள் வசித்தால் தப்த க்ருச்ரமும், ஒரு மாதம் வசித்தால் ப்ராஜாபத்யக்ருச்ரமும், ஒரு வருஷம் வஸித்தால்

சாந்திராயணமும் அனுஷ்டிக்கவேண்டும். பிறகு சுத்தி ஏற்படும். அதற்கு மேல் போனால் இவன் பதிதன் ஆகி விடுகிறான்.

जाबालिः — कूपोदकेन सप्ताहं स्नानमुष्णेन वारिणा ।
मृत्तिकाभिर्विना शौचं कृत्वा सप्ताहमेव च ॥
प्राजापत्यं विशुद्ध्यर्थं चरेत्पूतो भवेद्द्विजः ।
पंचगव्यं ततः पीत्वा पूतो भवति नान्यथा ॥

ஜாபாலி :— எவன் ஏழு நாள் கிணற்றில் ஸ்நானம் செய்கிறானோ, உஷ்ணோதகத்தில் ஏழு நாள் ஸ்நானம் செய்கிறானோ, ஏழு நாள் ம்ருத் சுத்தி இல்லாமல் சௌசம் செய்து கொள்ளுகிறானோ இவன் ப்ராஜாபத்ய க்ருச்ரம் செய்து கொண்டு பிறகு பஞ்சகவ்யம் சாப்பிட வேண்டும்.

याज्ञवल्क्यः — उपपातक शुद्धिस्स्यादेवं चान्द्रायणेन वा ।
पयसावापि मासेन पराकेणाथवा पुनः ॥

யாக்ஞவல்க்யர்: — உப பாதகம் என்று சில பாபங்களை குறிப்பிட்டுருக்கிறோம். அதற்கு பரிஹாரம் சாந்திராயண ப்ராயச்சித்தமாகும். பால் மாத்திரம் சாப்பிட்டு ஒருமாதம் நியமத்துடன் இருந்தாலும் பரிஹாரம்; அல்லது பராக க்ருச்சரம் அனுஷ்டிக்கலாம்.

21. रहस्यपापप्रायश्चित्तम् — ரஹஸ்ய பாப பரிஹாரம்.

मनुः — वेदाभ्यासोऽन्वहं शक्त्या महायज्ञक्रिया क्षमा ।
नाशयन्त्याशु पापानि महापातकजान्यपि ॥

यथैधस्तेजसा वह्निः पापं निर्दहति क्षणात् ।
तथा ज्ञानाग्निना पापं सर्वं दहति वेदवित् ॥
सव्याहृतिप्रणवकाः प्राणयामास्तु षोडश ।
अपि भ्रूणहनं मासात्पुनन्त्यहरहः कृताः ॥

மனு :— ப்ரதி தினம் செய்யும் வேத ஆவர்த்தி, பஞ்ச மஹா யக்ஞங்கள் அனுஷ்டிப்பது, பொறுமையாக இருப்பது இவைகள் ரஹஸ்ய பாபங்களை நாசம் செய்கின்றன. அக்னி தன் தேஜஸ்ஸால் காஷ்டங்களை சாம்பலாகச் செய்வது போல், ப்ராம்மணன் வேத மறிந்தவன் தன் ஞானக்னியினால் எல்லாவற்றையும் போக்கடித்துக் கொள்ளுகிறான். ப்ரதி தினம் பதினாறு ப்ராணயாமங்கள் மந்திரத்துடன் செய்தாலும் பாப பரிஹாரம் ஏற்படும்.

पराशरः — चान्द्रायणं यावकं च तुलापुरुष एव च ।
गवां चैवानुगमनं सर्वपाप प्रणाशनम् ॥

பராசரர்: — சாந்திராயணம், யாவக க்ருச்ரம், துலா புருஷன் தானம், கோ வ்ரதம், பசுக்களை பின்தொடர்ந்து சுச்ருஷை செய்வது எல்லா பாபங்களுக்கும் பொதுவாக ப்ராச்சித்தம்.

पैठीनसिः — सर्वपापप्रसक्तोपि ध्यायन्निमिषमच्युतम् ।
पुनस्तपस्वी भवति पंक्तिपावनपावनः ॥

பைடீனஸி :— எல்லா பாபங்களும் ஸம்பந்தப்பட்டிருந்தாலும், ஒருநிமிட நேரம் உலகை மறந்து அச்யுதன்

வாஸுதேவனை த்யானம் செய்வானேயாகில் மறுபடியும் தபஸ்வீயாக ஆகி பங்க்தி பாவனுளுக்கும் பரிசுத்தி செய்கிற வனாக ஆகிறான்.

भृगु : — कोटिशो मनुजानां वै भीतिदं समुपस्थितम् ।
रामरामेति संकीर्त्य तन्नाशयति मानवः ॥
सर्वेषामेव पापानां प्रायश्चित्तमिदं स्मृतम् ।
नातः परतरं पुण्यं त्रिषुलोकेषु विद्यते ॥

ப்ருகு :— கோடி ப்ரகாரமாக பயத்தைக் கொடுக்கும் பாபம் ஸம்பவித்தாலும், ராம ராம என்று ஸங்கீர்த்தனம் செய்தால் ராம நாம மஹிமையின் காரணமாக ஸகல பாபமும் நசித்துவிடும். எல்லா பாபங்களுக்கும் இது ப்ராயச்சித்தமாகும். இதைக் காட்டிலும் வேறு உபாயம் சாஸ்திரங்களில் அகப்படவில்லை.

ब्रह्मकैवर्ते — सर्वपापयुतो वापि कीर्तयन्नर्शिं हरम् ।
शुद्धान्तः करणो भूत्वा जायते पंक्तिपावनः ॥

ஸகல பாபத்துடன் கூடியவனாக இருந்தபொழுதிலும் எப்பொழுதும் ஸாம்ப பரமேச்வரரை ஹரனை கீர்த்தனம் செய்கிறவன் பாபமற்ற மனதுடன் கூடினவனாக ஆகி பங்க்தி பாவனனாக ஆகிறான் என்று ப்ரம்மகைவர்த்த புராணம் கூறுகிறது.

अत्रिः — एकादशगुणान्वापि रुद्रानावर्त्य धर्मवित् ।
महापापैरपिस्पृष्टो मुच्यते नात्र संशयः ॥

அத்ரி: — ஸ்ரீருத்ர மந்திரத்தை பதினொன்று தடவை ஆவர்த்தி செய்தவன் மஹாபாபங்களுடன் கூடினவனாக

இருந்த பொழுதிலும் உடனே ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாக ஆகிறான். ஆகையால் அவசியம் ருத்ரப்ரச்ன ஜபம் செய்யவேண்டியது என்பது கருத்து.

22. कृच्छ्रप्रतिनिधयः— க்ருச்ரத்திற்கு பிரதிநிதிகள்.

हेमाद्रौ— कृच्छ्रोऽयुतन्तु गायत्र्याः विप्रद्वादश भोजनम् ।
तिलहोमसहस्रं वा सममेतच्चतुष्टयम् ॥

பிராஜாபத்ய க்ருச்ரம் தேச காலத்தை அனுசரித்து இந்த காலங்களில் அனுஷ்டிக்க முடியாத காரணத்தால் மஹர்ஷிகள் க்ருச்ரத்திற்கு பிரதிநிதியான அனுஷ்டானம் தெரிவிக்கிறார். அதாவது கிருச்ரம், பத்தாயிரம் காயத்ரீ ஜபம், 12 பிராம்மண போஜனம், திலஹோமஸஹஸ்ரம் இந்த நான்கு காரியங்களும் ஸமமாக கருதப்படுகிறது.

पराशरः — कृच्छ्रो देव्ययुतं चैव प्राणायाम शतद्वयम् ।
पुण्यतीर्थेऽनार्द्रशिरस्नानं द्वादश संख्यया ॥
द्वियोजनं तीर्थयात्रा कृच्छ्रमेकं प्रकल्पितम् ॥

பராசரர் :— பிரஜாபத்ய க்ருச்ரம், 200 பிராணாயாமங்கள், கங்காதி புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்து தலைமயிரை துடைத்து உலர்த்திக்கொண்டு மறுபடியும் ஸ்னானம் செய்வது இந்த மாதிரி 12 ஸ்னானங்கள், 20 மயில்கள் தூரம் நடந்து முறைப்படி தீர்த்தங்களை ஸேவித்து யாத்திரை செய்வது, பதினாயிரம் தடவை காயத்ரீ ஜபம், இந்த ஐந்து கார்யங்களும் ஸமமாகக் கருதப்படுகிறது. அதாவது க்ருச்சா சரணம் செய்யமுடியாவிடில் இவைகளில் ஏதாவது ஒன்று அனுஷ்டித்தால் போதுமானது என்று தாத்பர்யம்.

माधवीये— प्राजापत्यक्रियाशक्तौ धेनुदद्याद्विजोत्तमः ।
धेनोरभावे दातव्यं तन्मूल्यं वा न संशयः ॥

ப்ராஜாபத்ய க்ருச்ரம் அனுஷ்டிக்க முடியவில்லையானல் ஒரு பசுவை தானம் செய்யவேண்டும். அதுவும் முடியாவிடில் பசு விலைக்கு வாங்க எவ்வளவு செலவு ஆகுமோ அந்த தனத்தை தானம் செய்யவும். தார்மிதாளான சிஷ்டர்களான பெரியோர்களுக்கு எதிர்பாராமல் பாபம் ஸம்பவித்தால் ஜபஹோமாதிகள் ப்ராயச்சித்தமாக சொல்லவேண்டும். ஆசாரமில்லாமல் இருப்பவர்களுக்கு பாபம் ஸம்பவித்தால் க்ருச்ராசரணம் ப்ராயச்சித்தம் சொல்லவேண்டும். தனிகர்களுக்குப் பாபம் ஸம்பவித்தால் அதிகமான த்ரவ்ய தானங்களினுல் ப்ராயச்சித்தம் சொல்லவேண்டும் என்பது கருத்தாகும்.

इति संक्षेप धर्म शास्त्रे प्रायश्चित्त प्रकरणं संपूर्णम् ॥

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரத்தில் ப்ராயச்சித்த ப்ரகரணம் முற்றிற்று

इति संक्षेप धर्म शास्त्रम् समाप्तं

ஸம்க்ஷேப தர்ம சாஸ்திரம் முற்றிற்று

—o—